T. 2072

VENKATESVARA ORIENTAL SERIES—No. 46

EDITOR:—Prof. P. V. RAMANUJASWAMI, M.A.

பாலபாரதி இயற்றிய
இராமாயணத் திருப்புகழ் என்னும்

# இராமசெயத் திருப்புகழ்

(முற்பகுதி பொழிப்புரையுடன்)

பதிப்பாளர்:
திருப்பதி - திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத்
தமிழ்த்துறைத் தலைவர்
கோ பாலசுந்தர நாயகர் எம். ஏ. அவர்கள்

SRI VENKATESVARA ORIENTAL INSTITUTE
आनन्दनिलयम्
TIRUPATI

திருமலை - திருப்பதி தேவஸ்தான அறநிலையக்கழகத்தின் சார்பாக
அதன் செயல்துறைத் தலைவர்
ஸ்ரீ. செ. அன்னராவ் பி. ஏ. அவர்கள்
ஆணைப்படி
திருமலை - திருப்பதி தேவஸ்தான அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1954

*All Rights Reserved*
*By*
*Tirumalai-Tirupati Devasthanams*
*Tirupati*

FIRST EDITION

PRINTED AT
TIRUMALAI-TIRUPATI DEVASTHANAMS PRESS,
TIRUPATI.

# முன்னுரை.

தமிழ் நாட்டில் சங்க காலம் முதற் கொண்டே இராமாயணம் பெருமையோடு போற்றப்பட்டு வந்தது. எட்டுத் தொகை நூல்களுள் சில இராமாயண நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. திருக்குறளையும் அதன் ஆசிரியரையும் சிறப்பித்துக்கூறும் திருவள்ளுவமாலையில் திருக்குறளுக்கு இராமகாதை முதலிய நூல்கள் ஒப்பாகுமெனக் கூறியிருப்பதினாலும் தமிழ் நாட்டார் இராமாயணத்தை எத்துணைப் பெருமையோடு போற்றினர் என்பது தெளிவாகின்றது.

ஆழ்வார்கள் காலத்தில் இராமபிரான் திருவுரு, கோயில்களில் அமைக்கப் பெற்று வழிபாடு செய்யப்பட்டு வந்தது. "கற்பார் இராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ" என்று கூறுகின்ற அளவுக்கு இராமபிரான் திருமாலாகவே கருதப்பட்டனர். அவர் தம் சிறப்பினைக் கருதியே குலசேகராழ்வார் பத்துப் பாசுரங்களில் இராமாயணத்தைச் சுருங்க ஓதியருளினர். கம்பர் காலத்தில் இராமாயணம் மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட்டது. கம்பர் புலமையும், தமிழகத்துக் கேற்ற முறையில் இராமாயண நிகழ்ச்சிகளை அவர் மாற்றி யமைத்த திறமும் அதன் உயர்வுக்குப் பெருங் காரணமாயின என்னலாம்.

கம்பருக்குப் பின் புலவர் பலர், இராம காதையைப் பல வகைப் பாட்டுகளில் பாடி மக்களை மகிழ்வித்தனர். அவற்றுள் பாலபாரதி இயற்றிய இராம செயம் என்னும் வண்ணப் பாட்டும் ஒன்றாகும். வண்ணம் என்பது சந்தப்பாட்டு. இதன் இலக்கணம்,

"வண்ணந் தானே நாலைந் தென்ப" (செய். 212) என்று தொல்காப்பியத்திற் கூறப்பட்டுளது. இச் சூத்திரத்திற்குப் பேராசிரியர், "வண்ணம் என்பது சந்த வேறுபாடு. நூறும் பலவுமாகி வேறுபடினும் அவை ஈண்டடங்கு மென்பதூஉம், அவ் வேறுபாடெல்லாம் சந்த வேற்றுமை செய்யா என்பதூஉம் கூறியவாறு. அது, நுண்ணுணர் வுடையார்க்குப் புலனா மென்பதாம்" என்று எழுதியுள்ள உரையால் சந்தங்கள் பலவென்பதும், அவை இருபதினுள் அடங்கு மென்பதும், நுண்ணுணர் வுடையோர் பல விகற்ப

மாகவரும் வண்ணங்கள் அனைத்தையும் அவ் விருபதில் அடக்குவர் என்பதும், தொல்காப்பியர் காலத்திலேயே இவ் வண்ணங்கள் வழக்கிலிருந்தன என்பதும் பெறப்படுகின்றன. ஆனால், இப் போது பாடப்படும் வண்ணப் பாக்கள், பழைய முறையைத் தழுவிப் புதுவகையாக இயற்றப் படுகின்றன. இப் புதுமுறையில் முதற்கண் பட்டினத்தடிகள் 'ஒருமடமாதும் ஒருவனுமாகி' என்று தொடங்கும் செய்யுளை எழுதினர். தொல்காப்பிய உரையில் மேற்கோளாகக் காட்டப்படும் வண்ணங்கட்கும், இப் புதுமுறை வண்ணங்கட்கும் உள்ள வேறுபாடுகள் எல்லார்க்கும் எளிதில் விளங்கும். இவ் இராமசேய நூலின் உரையாசிரியர் இவ்வண்ணப் பாட்டினைச் சிந்து என்று எழுதியுள்ளனர். இம் முறையில் வண்ணங்களை எளிய முறையில் இறைவனருளாற் பாடியருளியவர் அருணகிரிநாதரே யாவர். அவர் எழுதிய முருகன் திருப்புகழ் வண்ணங்கள் முப்பதினாயிரம் என்ப. அருணகிரியாரைப் பின்பற்றியே இந் நூலைப் பால பாரதியார் இயற்றினர்.

இந் நூலுக்கு, ஆசிரியர் இட்டபெயர் இராமசேயம் என்பதே.

"யாதுநினைந் தானு மந்த வாழ்வுதருந் த்யாக சிந்தி
ராமசெயம் பாட வந்து துணையாவாய் (2)

வால பாரதி ராமசெயத்தமிழ் (373)

என இவர் கூறியிருத்தல் காண்க. எனினும், இந்நூல் இராமாயணத் திருப்புகழ் என்றும் வழங்கி வருகின்றது. கம்பர், தம் இராம காதைக்கு இராமாவதாரம் என்று பெயர் கூறி யிருப்பவும், அது கம்ப ராமாயணமென வழங்கி வருதல் போலவே இந் நூலும் இராமாயணத் திருப்புகழ் என்று ஒரு சிலரால் வழங்கப்பட்டு வருகின்றது.

இராமசேயம் என்பது இராமபிரானது வெற்றி. அவ் வெற்றியைச் சிறப்பிக்கும் நூல் இதுவாதலின் ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகையாக இத் தொடர்க்கு இலக்கணம் கூறிக் கொள்க. திருப்புகழ் என்பது சிறந்த புகழ். இத் திருப்புகழ் என்னும் சொற்றொடர் பிற்காலத்து, வண்ணப் பாடலைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. அருணகிரியார் முருகன் திருப்புகழை வண்ணப் பாட்டுக்களில் பாடியிருத்தலால் அவ் வண்ணங்கள் திருப்புகழ் என்னும் பெயராலேயே

கூறப்பட்டு வருகின்றன. எனினும், திருப்புகழ் என்பது ஒரு வகைப் பாட்டின் பெயரன்று. வண்ணப் பாக்களால் முருகன் திருப்புகழைப் பாடிய காலந் தொட்டு, அப் பாக்களுக்கும் திருப் புகழுக்கும் வேற்றுமை கருதாமல் எத்தகையோரும் முருகன் திருப்புகழையும் அப் பாட்டுக்களையும் திருப்புகழ் எனவே வழங்க லாயினர். அத்துணைப் பெருமை அந் நூலுக்கு அமைந்து விட்டது. இன்று எவரேனும் 'திருப்புகழைப் பாடுக' என ஒருவரைக் கேட் டால், அவர் முருகனுடைய சிறந்த புகழைக் கூறும் வண்ணப் பாட்டையே பாடுக எனத் தம்மைக் கேட்பதாகக் கருதி அதனைப் பாடுவது வழக்கமாகி விட்டது. எனவே, வண்ணப் பாட்டினைத் திருப்புகழ் என்று கருதுகின்ற நிலைக்கு அருணகிரியார் சந்தப் பாட்டுக்கள் சிறந்து நிற்கின்றன. பாட்டுவேறு; புகழ்வேறு; புகழைச் சந்தப்பா கூறுகின்றது என்று உணர்தல் கற்றறிந்த புலவர்க்கே யன்றிப் பிறர்க்கு அரிதாய்விட்டது.

இராமசெயத் திருப்புகழ் என்னும் பெயரால், இராமபிரானது வெற்றியைக் கூறும் சந்தப் பாட்டுக்கள் அமைந்த இந்நூல் பால பாரதி என்பவரால் எழுதப்பட்டது என்பது மேற் கூறப்பட்டது. இத் தொடருக்கு இராமனது வெற்றியாகிய சிறந்த புகழ் என்று பொருள் கூறலும் ஆம். இராமபிரானது வெற்றி என்னும் பொரு ளில் வழங்கும் இராமசெயம் என்னும் தொடரை ஒரு சிலர் மந்திர மாகக் கருதி ஓதுவர்; ஒரு சிலர் பல நூறாயிரம் எண்கள்வரை ஏட்டில் எழுதி அதற்கு விழாச் செய்து தாம் விரும்பிய பயனைப் பெறுவர். வேறு சிலர், தாம் எதனை எழுதத் தொடங்கினும், ஏட்டின் தலைப்பில் இத் திருப்பெயரை எழுதுவர். சிலர் எப் போதும், எல்லா நிலைகளினும் இப் பெயரைக் கூறிக் கொண்டே யிருப்பர். கம்பரும்,

"நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே."

என்று கூறினர். இராமனது வெற்றிக்குக் காரணம் தோள்வலி. அதனைக் கூறுதல் அப் பெருமான் வெற்றியைக் கூறியதாகும். எனவே, இராம செயத்தைக் கூறுவோர் பல நலன்களையும் வீடு பேற்றையும் பெறுவர் என்பது உறுதி. ஆதலின், இராமாயணத்தை

இராம செயம் என்னும் பெயரால் இவ் வாசிரியர் பாடுவாராயினர். இந் நூலின்கண் வரும் பாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் முற்பகுதி குறைகூறி நலன் வேண்டுவதாகவும், பிற்பகுதி இராமகாதையைத் தொடர்ந்து கூறுவதாகவும் அமைந்துள்ளன. பலவகைச் சந்தங்கள் அமைந்திருப்பதால் இப் பாட்டுக்கள் பண்ணோடு தாள அறுதி அமைத்துப் பாடப்படும் சிறப்புள்ளவை.

இராமாயணத்தை எவ்வெவ் வகைளிற்பாடி மன்பதைகட்கு உண்மை யறிவினைப் பெருக்கலாமோ அவ்வவ் வகைகளில் எல்லாம் வேறு பிறரும் பாடியுள்ளனர். அவை, இராம நாடகம், இராயணவோடம், இராமாயண ஓரடிக் கீர்த்தனை, இராமாயண வெண்பா, இராமாயண வெண்பா அந்தாதி என்பனவாகப் பல. இவற்றுள், இராமாயண வெண்பா அந்தாதி என்னும் நூல் எட்டுச் சுவடியாக எங்கள் கழக நூல் நிலையத்திலுள்ளது. ஏடுகள் பெரும்பாலும் சிதைந்துள்ளன. ஒவ்வொரு படலமும் ஒவ்வொருவகை வெண்பாவால் அந்தாதித் தொடையாக எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அவை சிறந்த வெண்பாக்கள். வேறு எட்டுச் சுவடி கிடைக்குமாயின் அதனை வெளியிடலாம். அறிஞர்கள் துணை செய்வார்களாக.

## நூலாசிரியர்.

இவர், கோதை பிறந்த ஊராகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில் அந்தணர் மரபிற் பிறந்தவர். இவர் வைணவர். இராம ஐயங்கார் என்னும் இயற் பெயரும், செய்யுள் இயற்றும் வன்மையாற் பால பாரதி என்னும் சிறப்புப் பெயரும் பெற்றவர். இவர், இராம நாடகம் எழுதிய அருணாசலக் கவிராயருக்குக் காலத்தால் முற்பட்டவர். அருணாசலக் கவிராயர் பாடிய இராம நாடகத்தின் முன்னுரையில், 'இராமாயணத்தைக் கம்பர் விருத்தத்திலும், பாலபாரதி சந்தப்பாக்களிலும், பிறர் பிறபாக்களிலும் பாடி யிருத்தலால், இவர் நாடகமாகப் பாடினார்' என்று எழுதியிருத்தலால், இராம நாடகத்துக்கு முன் இவ் விராமசெயம் எழுதப்பட்டதென்பது உறுதி. அருணாசலக் கவிராயர் காலம் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி. ஆதலின், பாலபாரதி கி. பி. 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்திருத்தல் வேண்டும். இவரைப்பற்றிய பிற செய்திகள் நன்கு தெரியவில்லை. தெரிந்த பின் இந் நூலின் பிற்பகுதி என்னும் அடுத்த வெளியீட்டில் எழுதலாம் எனக் கருதுகின்றேன்.

இவர், வைணவராயினும் சமரச சமய நோக்குடையவர். இவர் அயோத்தியா காண்டத்தில் "விடை வேம்புட்கொடி" எனத் தொடங்கிக் கூறும் செய்யுளாலும், உயுத்தகாண்டத்தில் 'சிவபெருமான் வேறு, திருமால் வேறு எனக் கருதேன்' என்னும் கருத்துடன் கூறும் செய்யுளாலும் இக் கருத்து வலியுறும். இவர், ஸ்ரீவில்லிபுத்தூரினரே யாயினும் திருவரங்கப் பெருமானிடத்தில் மிக்க ஈடுபாடுடையவர் என்பது,

> நாமநன் னீர ரங்க நீடுவி மான மென்று
> நான்வல மாக வந்து தொழுவேனே(பக். 98)

என்றும்,

> திங்கள் வாவிக் கரையரு கினிற்றுயில்
> பங்க சாதத் திருவழ கினைத்தெளி
> சிந்தை மீதிற் கொடுபர வுநிட்டையொ டுருகாதே
> (பக். 142.)

என்றும்,

> கடிமலர்க ளுஞ்சொ ரிந்து செயசெயவ ரங்க ரங்க
> கருணைசெய்மு குந்த வென்று புகழ்பாடி (பக். 174)

என்றும் பல படியாக இவர் கூறி யிருத்தலால் அறியப்படும்.

இவர் எப்போதும்,

> ராமசெய மென்பதன்றி யானறிவ திங்கோர் கிஞ்சில்
> ஏதுமிலை அஞ்ச லென்று வருவாயே

என்று கூறுவதால் இராம செயம் என்றே கூறிக் கொண்டிருக்கும் இயல்பினர் என்றும் தெரிகின்றது.

இவர் பாக்கள், சந்தத்தின் பொருட்டு அமைக்கப்படும் திரிதல், கெடுதல் முதலிய விகாரங்கள் பெரும்பாலும் இன்றி இயற்கை நடை தழுவப் பெற்றுச் செம்பாகமாக அமைந்துள்ளன. "தொந்தி சரிய மயிரே" என்றும், "கருவடைந்து" என்றும் அருணகிரியார் பாடியுள்ள பாக்களில் சில திருத்தங்கள் செய்து தம் கதைக்குப் பொருத்தமாக அமைத்துக் கொண்டதால், இவர் அருணகிரியார் பாக்களைப் பொன்னே போற் போற்றித் 'தானெடுத்து மொழிதல்' என்னும் உத்தியைப் பின்பற்றி நிற்கும் தன்மையர் என்று தெரிகின்றது.

செய்யுள் இலக்கணம், அகப் பொருட்டுறைகள், பண்கள், வேதாந்தக் கருத்துக்கள், விசிட்டாதுவிதக் கொள்கைகள், தமிழ் மொழியின் சிறப்புக்கள், வேத உபநிடதப் பொருள்கள் ஆகியவை தழுவுமாறு இவர் பாடியுள்ள பாக்கள் பல. அவற்றின் சிறப்புக் களையும் நயங்களையும் பிற்பகுதி நூன்முகத்தின்கண் காண்க. "வாணி நாவினன் நீள்புது வைப்பதி வருராமன்" என்று (செய். 373) இவர் கூறியிருத்தலின், கலைமகள் இவர் நாவின்கண் வந்து தங்கியதால், எவ்விதமான இடர்ப் பாடுமின்றி எளிய முறையிற் பேசுதல் போல இச் சந்தப்பாக்களை இவர் எழுதியுள்ளார் என்பதை இந் நூலைப் படிப்போர் நன்கறிவர். இந்நூல் முந்நூற்று எழுபத்து மூன்று பாக்களையுடையது.

இந்நூலின் இறுதிக்கண் இதன் சிறப்பினை உணர்த்தும் ஒரு செய்தி காணப்படுகின்றது. அது,

"வால பாரதியாகிய இராமய்யங்காரை நிந்தித்த போது 'இந்தக் கோயிலார் முன்னே அரங்கேற்றுகிற தில்லை; இந்திரன் சபையிலே அரங்கேற்றுகிறேன்' என்று கோயிலாருக்குச் சொல்லி, இந்திரனுக்குச் சீட்டுக் கவி யெழுதி அவ் வேட்டை விண்ணவருலகுக் கனுப்பி, அங்கிருந்து உடனே வந்த விமானத்தின் மேலேறிக் கொண்டு போய் இந்திரன் சபையில் அரங்கேற்றி யிருக்க, இந்திரன் நில உலகிற்கனுப்ப வந்தது இவ் விராமசெயம்" என்பது. தேவ லோகத்திற் கனுப்பிய சீட்டுக் கவி,

கட்டளைக் கலித்துறை

"உந்திய செந்தமி ழான்வால பாரதி யோலையுண்மை
இந்திர ரானவ ரெல்லாங் காண்க யானுமங்கே
செந்தமிழ் பாடவும் பொன்னடு பார்க்கவும் சீர்பெறவும்
வந்திட வேணும் விடுதியும் சோடித்து வைத்திடுமே"

என்பது.

இந் நிகழ்ச்சியின் உண்மை எதுவாயினும் ஆகுக. இந்நூல் உயர்ந்தோர்களாலும் பேற்றத்தக்கது என்பது இச் செய்தியால் வெளிப்படும் உண்மை. சிறந்த நூல்களுக்கு இது போன்ற வேறு சில உயர்வுகள் கூறப்படுகின்றன. அவை போன்று இதுவும் ஓர் உயர் நூல் என்பது எவரும் உடன்படத் தக்கதேயாம்.

இந் நூலுக்கு ஒரு பழைய பொழிப்புரை யுளது. அதன் கருத்துக்கள் பெரிதும் போற்றத்தக்கவை. எனினும், உரைநடை தகுதியுடைய முறையில் அமைந்திருக்கவில்லை. அவ் வுரையாசிரியர் யார் என்பதும் புலப்படவில்லை. அவ் வுரையின்றேல், பல செய்யுட்களின் உண்மைக் கருத்துக்கள் புலப்பட வழியுமில்லை. முப்பத்தைந்து பாட்டுக்கள் வரையில் அவ்வுரையின் பிழைகளைத் திருத்தி அப்படியே இந்நூலில் எழுதியுள்ளேன்· இதனால், அவ்வுரை நடையின் தன்மையை யாரும் அறிதல் கூடும். முப்பத்தாறும் பாட்டிலிருந்து இறுதிவரை அவ்வுரைக் கருத்தினை அப்படியே எடுத்துக்கொண்டு, நடையில் சிறிது திருத்தம் செய்து இந்நூலுட் சேர்த்துள்ளேன். இவ்வுரைச் சிறப்பைப் பற்றிய குறிப்புகளை இந் நூலின், பிற்பகுதியின் நூன்முகத்தில் எழுதுவேன்.

சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைத் தமிழ் விரிவுரையாளராய் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற பெரும் புலவராகிய வித்துவான் வே. வெங்கடராசலு ரெட்டியார் அவர்கள் இந் நூலை வெளியிடுமாறு எனக்குக் கூறினார்கள். அதன்படியே இந் நூலை வெளியிடத்தக்க பணிகளைச் செய்யலானேன். இந்நூலின் ஏட்டுப் பிரதியொன்று எங்கள் கழகத்திலுள்ள நூல் நிலையத்திலும் இருந்தது. அதனைப் பிழை போக்கிப் படி எடுத்துக் கொண்டேன். ஏறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர், கோவையிலிருந்த வேணுகோபால நாயுடு என்பார் இந்நூலின் ஐந்து காண்டங்களை மட்டும் அச்சிட்டார். அந்நூலும் எங்கள் நூல் நிலையத்திலிருந்தது. அதில் சந்தக் குழிப்பும் உரையும் இல்லை. எனினும் ஒப்பு நோக்குதற்குமட்டும் அதனைப் பயன் படுத்திச் சிறந்த பாடபேதங்களை மட்டும் குறித்துக் கொண்டு இந்நூலின் அடிக்குறிப்பில் சேர்த்துள்ளேன்.

இந் நூலுக்குச் சந்தக் குழிப்பு இல்லையாயின் பாக்களைத் தவறின்றி எழுதுதலும், படித்தலும் பண்ணோடு தாள அறுதி கூட்டிப் பாடுதலும் இயலா ஆதலின், மிக முயன்று சந்தக் குழிப்பினை யமைத்துளேன். சிலவற்றிற்கு வேறு வகையான சந்தம் அமைத்துக் கொள்ளினும் இழுக்காது. வைணவ சமய நூல்களுள் இவ் விராமசெயம் என்னும் நூல் பலவகையில் பயன்படும் என்பது என் எண்ணம். இசைச் சொற்பொழிவு செய்வோர்க்கு இது மிக இன்றியமையாதது. இராம நாடகத்துக்குமுன் எழுதப்பட்ட இந்

ஸ்ரீ:

இராமாயணத் திருப்புகழ் என்னும்

# இராமசெயத் திருப்புகழ்.

காப்பு

## நம்மாழ்வார் துதி.

தனதாஞ தனத்தனனத்
தனதாஞ தனத்தனனத்
தனதாஞ தனத்தனனத் தனதான

1. பணிமேலே படுத்தவனைத்
தனுவேதா னெடுத்தவனைப்
பகைசேர்தா டகைக்குமுதற் கணையேவிப்

பதையாதே துணித்தவனைத்
திருவோடே மணத்தவனைப்
பரதாழ்வா னிருக்கவனத் திடையேபோய்க்

கணையாலே குரக்கரசைப்
பொருசீரா யணைக்கடலைக்
கடவாநீள் அரக்கர்குலக் கிளைமாளக்

களமீதே யறுத்தவனைப்
பரிவோடே துதிக்கமுழுக்
கவிஞானே தயத்தெளிவைத் தரவேணும்

துணைவாகா சினிப்புல்வர்க்
கரசேசீ தளப்பொருநைத்
துணையாளா எதிர்ச்சமயக் குலகாலா

தொழுவார்தீ வினைச்சிகரிக்
கிடியேறே மணக்குமகிழ்த்
தொடைமாறு வடுத்திடுமுட் பகையாறும்

தணிவோனே யருட்கடலுட்
டுளைவோனே சகத்துணர்வைத்
தருவோனே செழித்தமறைப் பொருள்சேரத்

தமிழோரா யிரத்திலமைத்
திடுவோனே எடுத்தபுகழ்ச்
சடகோபா திருக்குருகைப் பெருமாளே.

**பொழிப்புரை** :—ஞானம் பெற விரும்புவோர்க்குத் துணைவனே, உலகத்திலுள்ள புலவர்கட்கு அரசானவனே, குளிர்ந்த பொருநை யாற்றின் நீர்த்துறைக் குரியவனே, எதிர்க்கும் பிறசமயத்தவர்க்கு எமன் போன்றவனே, நின்னை வணங்குவார்தம் தீவினையாகிய மலைக்கு இடிபோன்றவனே, மணம்வீசும் மகிழம் பூமாலையைத் தரித்த மாறனே, கடவுள் நெறிக்குச் செல்லவொட்டாது தடுக்கும் காமம், கோபம் முதலிய உட்பகைகள் ஆறும் தாக்காமல் தணியப் பெற்றவனே, திருமாலின் அருட்கடலுள் மூழ்கித் திளைத்து விளையாடுபவனே, உலகத்தவர்க்குக் கடவுள் உணர்வையும் உலகத்தின் நிலையாமையையும் காட்டி அருள் செய்பவனே, பொருளாற் சிறந்து வளரும் நான்மறைப் பொருள்களை ஆயிரம் தமிழ்க் கவிகளில் அமைத்துப் பாடியவனே, எல்லோர்க்கும் மேலாகிய, புகழ் பெற்றுள்ள சடகோப னென்னும் பெரியோனே, திருக்குருகை யென்னும் பதியில் தோன்றிய பெருமை யுடையவனே, ஆதிசேடனென்னும் பாம்பின்மேல் பள்ளி கொண்டவனும், சங்காழி கை விட்டு இராமனாகி வில்லை எடுத்தவனும், பகை கொண்டவளாகிய தாடகைக்குக் கன்னிப் பேரில் முதல் அம்பைச் செலுத்தி, உள்ளத்தில் இரக்கமும் அச்சமுமின்றி அவளைத் துண்டாக்கியவனும், திருமகளாகிய சீதாபிராட்டியாரை மணம் செய்து கொண்டவனும், பரதன் நாட்டை யாண்டிருக்க விட்டுக் காட்டுக்குப் போய்க் குரங்கரசான வாலியைப் பொருது அம்பாற் கொன்றும், சிறப்போடு கடலை அணைகட்டிக் கடந்து சென்றும், மிகப் பெரிய அரக்கர் கூட்டம் சுற்றத்தோடும் குலத்தோடும் மாளுமாறு போர்க்களத்தில் இராவணன் முதலியோரை அறுத்தும் வீரச்செயல் புரிந்தவனும், ஆகிய இராமபிரானை அன்போடு பரவிப் போற்றுதற்கு நிறைந்த கவிபாடும் தெளிந்த மெய்யறிவினை அடியேனுக்குத் தந்தருள வேண்டும்.

## அநுமான் வணக்கம்.

தானனதந் தான தந்த
தானனதந் தான தந்த
தானனதந் தான தந்த          தனதான

2. பாரதிநெஞ் சாலு ணர்ந்து
மேல்வருமென் றேதெ ளிந்து
பாடிய[1]நன் காதை பண்டை          மொழிவேதம்

பாவவரந் தூய மந்த்ரம்
நோய்முழுதுந் தீர்ம ருந்து
பாலமிர்தந் தேனெ திர்ந்து          வினையீர்வாள்

ஈரமில்வெம் பாரை நெஞ்சும்
நேருருகும் பாட லண்டர்
ஈசனயன் பேணு மின்பம்          மறவாதோர்

யாதுநினைந் தாலு மந்த
வாழ்வுதருந் த்யாக சிந்தி
ராமசெயம் பாட வந்து          துணையாவாய்

வாரிகடந் தேகி வஞ்சி
ஆருயிர்பொன் றுது[2]கண்டு
மாநகரஞ் சூறை கொண்டு          களமீதே

வானின்மருந் தேகொ ணர்ந்து
வீரர்மயங் காவி தந்து
மாவிருதிண் டோள்வி ளங்க          அமராடிச்

சோரர்மடிந் தேகு மன்று
தேவிபதஞ் சூடி நின்று
சோபனமுங் கூறி வந்து          சுடுதீமுன்

(பி - ம்) 1. நங்காதை. 2. கொன்று; உழன்று.

சூழ்பரதன் காண முந்தி
ஆவிபுரந் தேயு கந்த
தூதனெனும் பேர்பு னைந்த பெருமாளே.

[1]உரை :—ஆக்கியோன் பெயரும், நூற் பெயரும், பயனுஞ் சொல்லி அனுமத்துதி பண்ணினது.

கடலைக் கடந்துபோய்ச் சீதாபிராட்டியாருடைய சீவன் போகாமல் தரிசனம் பண்ணிப் பெரிய இலங்கைப் பட்டணத்தைச் சுழலப்பண்ணிச் சுட்டு, யுத்தகளத்திலே ஆகாச மார்க்கமாகச் சஞ்சீவிமலை கொண்டுவந்து, மயங்கி மூர்ச்சித்துக் கிடக்கிற வானர வீரர்களுடைய சீவன்களைக் கொடுத்து, பெருமையும் அழுத்தமு முடைய இரண்டு கைகளும் பிரகாசிக்க யுத்தம்பண்ணி, திருடராகிய ராட்சதர் எல்லாரும் செத்த அன்றைக்குச் சீதாதேவியின் சீர்பாதங்கள் சிரசிலேபடத் தெண்டனிட்டு எழுந்து நின்று, சோபன வார்த்தையுஞ் சொல்லி, நந்திக் கிராமத்துக்கு வந்து முன்னே தானே சுடப்பட்ட நெருப்பை வளர்த்துச் சுற்றிக்கொண்டு வரப்பட்ட பரதர் பார்க்கத் தாம் முன்னே நெருப்பிலே குதித்து அவித்து, பரதருடைய சீவனைக் காத்து, முக்கியமான தூதனென்று பேர் தரித்த, அனுமார் சொரூபமான பெருமாளே, ஒரு விண்ணப்பங் கேளும், பாரதியென்று பேருள்ள புலவர் மனசினாலே ஆராய்ந்து மேலாகிய பரமபதம் வருமென்று தெளிந்து, நிர்ச்செயமாய்ப் பாடிய நல்ல சரித்திரமானது அநாதியிலே சொல்லப்பட்ட வேதம் ; பாவமான இரும்பைப் பொடியாக்குகின்ற அரம் ; சுத்தமான மந்திரம் ; வியாதியெல்லாம் போக்கப்பட்ட மருந்து ; பாலும், வெண்ணெயும், தேனுங்கலந்து ஒன்றாக்கின மதுரம்போல் மதுர முள்ளது : அநுபவத்துக்கு வந்த பாவமான மரத்தையறுக்கும் வாள் ; ஈரமில்லாத, சுடப்பட்ட பாரை போன்ற அன்பில்லாத (கொடுமையுடைய வலிய) நெஞ்சை யுருக்கப்பட்ட பாடல் ; தேவர்களும், ருத்திரனும், பிரம்மாவும் பூசிக்கப்பட்ட சுகம் ; மறவாத அன்புள்ள அடியார்கள் என்ன வேண்டுமென்று நினைத்தாலும் அந்த வரத்தை அடியார்களுக்குக் கொடுக்கும் தியாக சிந்து ; (வண்ணம்போல் சந்தமாகப் பாடுவது சிந்து) இந்த இராமசெய மென்று பெயரிடப்பட்ட நூலைப்பாட அதற்கு விக்கின மில்லாமல் நிறைவேற்றத்தக்கதாக நீவந்து துணையாக வேண்டும்.

மேல்—எல்லாவற்றிற்கும் மேலான பரமபதம்
(' நிலமிசை '—திருக்குறள் 3 காண்க)

1. இதுமுதல் 35 பாக்களின் பொழிப்புரை பழைய ஏட்டுப் பிரதியிற் கண்டவாறே எழுதப்பட்டுள்ளது.

தானதான தனதத்த
தானதான தனதத்த
தானதான தன தத்த தனதான

3. கோழையான வர்மிகுத்த
வீரமேபு கலுகிற்பர்
கோதுசேரி மிகுலத்தர் குலமேன்மை

கூறியேக டுவிருப்பர்
சோறிடார்த ருமபுத்ர
கோனுநானெ னவுரைப்பர் மிடியூடே

ஆழுவார்கி யிடைக்கு
பேரனுனெ னவுரைப்பர்
ஆசுசேர்க லியுகத்து நெறியீதே

ஆயுநூல டைவுகெட்ட
நானும்வேற லவவர்க்குள்
ஆகையால வையடக்கம் உரையேனே

ஏழைவான வர்பிழைக்க
யானைவாச வனடத்த
ஈழமேல்வெ யிலெறிக்க மதிவேணி

ஈசனார்த மதிடுக்கண்
மாறியேக யிலைவெற்பில்
ஏறியேயி னிதிருக்க இருநாலு

வேழமான வையினெட்டு
நாலுகோடு கள்முளைக்க
வேதவீட ணனொருத்தன் முடிசூட

வீரராவ ணனுடற்குள்
மூழ்கியேக மூகுகொத்த
வீறுகோசி லையெடுத்த பெருமாளே.

உரை :—இஃது அவையடக்கம் சொன்னது : இளைத்த தேவர்கள் பிழைக்கவும், இந்திரன் அயிராவதத்தில் ஏறி நடத்திப் பவனிவரவும்,

இலங்கையிலே வெயிலெறிக்கவும், சந்திரனைச் சடையிலே தரித்த சிவன் தன்னுடைய நடுக்கந் தீர்ந்து கயிலை மலையிலேறி நிச்சுகமாய் இருக்கவும், எட்டுத் திக்குகளிலு மிருக்கிற எட்டு யானைகளினுடைய முப்பத்திரண்டு கொம்புகளும் முளைக்கவும், வேதமார்க்க முள்ள ஒப்பற்ற விபீடணன் கிரீடந் தரிக்கவும், வீரமுள்ள இராவணனுடைய சரீரத்திலே மூக்கு நுழையத் தக்கதாகக் கழுகு கொத்தித் தின்னவும், செயம் பொருந்திய வில்லைத் திருக்கையிலெடுத்த பெருமாளே, ஒரு விண்ணப்பங் கேளும்; தைரியமில்லாத கோழையானபேர்கள் மிகுந்த சேவகஞ் சொல்லுவார்கள்; குற்றமுள்ள ஈனசாதியான பேர்கள் மேலான சாதி யென்று சொல்லி உயர்ந்த சாதியார் நடுவே யிருப்பர்; சோறுகொடாத லோபிகள் நாங்கள் தருமபுத்திர ராசாவென்று சொல்லுவார்கள்; இது குற்றமுள்ள கலியுகத்தின் வழி; பெரியோர்களால் ஆராயப்பட்ட சாஸ்திரத்தினுடைய கிரமந் தெரியாமல் கெட்ட நானும் இப்படிப்பட்ட பேர்களில் சேர்ந்தவனே யல்லாமல் நல்லவ னல்லன்; ஆகையினாலே, அவை யடக்கமாகப் பெரியோர்களையும் சாஸ்திரத்தையும் அறிந்து சொல்ல வறியேன்.

பாயிரம் முற்றும்.

# 1. பால காண்டம்.

தனனதன தாந்த தந்தத்த தத்தனன
தனனதன தாந்த தந்தத்த தத்தனன
தனனதன தாந்த தந்தத்த தத்தனன தனதான

1. உலகமொரு மூன்றும் ஒண்பெற்ற தத்துவமும்
அகரமுதல் சான்ற ஐம்பத்தொ ரக்கரமும்
உரியமறை நான்கு மந்தத்தி னிற்பொருளும்
உயிர்யாவும்

[1]உருவினிடை வாய்ந்து மன்பெற்று நிற்பனவும்
அகமுமக மேய்ந்த வண்டத்தி னிற்புறமும்
ஒளியிலொளி போன்ற இன்பத்தி னிற்சுடரும்
அறிவாகி

இலகுமொரு பூன்ற மென்றுற்ற மெய்ச்சுருப
நிலையைவெளி [2]காண்ட லும்பெற்றி ருட்பகலும்
இலதொர்நெறி பூண்டு நின்பற்ப பொற்சரணம்
அகலாதோர்

இறுதியற வாழ்ந்து [3]னன்பர்க்கு ளொத்துருகி
அடிமைமல பாண்ட தொந்தத்தை விட்டொழிய
இதயவிருள் நீங்கி யென்றைக்கு பைக்கணருள்
[4]புரிவாயே

மலருமல ரேந்தி யண்டத்து நக்கனயன்
அமரர்கிளை சூழ்ந்து வந்திக்க [5]நற்கமலை
மருமமிசை யோங்க அந்தக்க டற்றிடரின்
முகில்போல

வடிவினெழி ரேன்ற வுந்திக்க வுத்துவமும்
இனியப்ரபை கான்று விஞ்சத்தி ருத்துளவ
மருவவொரு காந்தை நண்புற்றி டப்பெரிய
கரமீதே

(பி - ம்) 1. உருவு நடை வாய்ந்து மண்பற்றி. 2. தோன்ற.
3. நண்பர்க்கு. 4. தருவாயோ. 5. நக்கமலை.

நிலவுதரு காந்தி சங்கத்தி னிற்பிறழ
வெயிலையுழ கேய்ந்த செஞ்சக்ர முற்றுமிழ
நெடியகதை சார்ங்க [1]மூங்கட்க மெப்படையும்
உடன்வாழ

நிரைகொளுல கீன்ற உந்தித்தி ருக்கமலம்
மலரவடி சேர்ந்து கங்கைத்தி ருப்பொலிய
நெடியதொரு பாம்பி னின்பத்தி ருக்கண்வளர்
பெருமாளே.

உரை : தேவலோகத்திலே யிருக்கும் சிவன், பிரமன், தேவர் கூட்டம் ஆகிய இவர்கள், மலரப்பட்ட பூக்களைக் கையிலே எடுத்துக்கொண்டு சுற்றி நின்று அர்ச்சனை செய்ய, நல்ல தாமரைப் பூவிலிருக்கும் பெரிய பிராட்டியாரான ஸ்ரீ மகாலக்ஷ்மிதேவி திருமார்பிலே யிருந்து வளர, அந்தத் திருப்பாற் கடலினுடைய மேட்டிலே மேகம்போல் கறுத்த திருமேனியின் அழகுபிறக்க, திருமார்பிலே கவுத்துவப் பதக்கமும் இனிதாக எழும்பிய பிரகாசத்தைக் கக்க, அதிகமான அழகுள்ள திருத்துளசி மாலை இருக்க, பூமிதேவி யாகிய சிறிய பிராட்டியார் சிநேகத்துடனே இருக்க, பெரிய ஒரு திருக்கையிலே தரித்த சங்கத்திலே யிருந்து சந்திரகாந்தி பிரகாசிக்க, ஒரு திருக்கையிலே சூரியனைப்போலே அழகுபெற்ற சிவந்த சக்கரம் எங்கும் பிரகாசிக்க, நீண்ட தண்டாயுதமும், சார்ங்க மென்னும் பெயருடைய வில்லும், உண்மையான வாளாயுதமும், ஒவ்வொரு திருக்கையில் ஒன்றாக வாழ்ந்திருக்க, விதித்த நிரையைக் கொண்ட உலகங்களைப் பெற்ற திருவுந்தித் தாமரைப்பூ மலர, திருவடியிலே கங்கையாகிய லட்சுமி சேர்ந்து பிரகாசிக்க, நீண்டு ஒப்பில்லாத ஆதிசேடன்மேலே இன்பமாகத் திருக்கண் வளர்தலான யோக நித்திரை செய்தருளிய ஸ்ரீமந் நாராயணசுவாமி யாகிய பெருமாளே, ஒரு விண்ணப்பங் கேளும் ; மூன்று லோகமும், அழகுபெற்ற தத்துவங்களும், அகர முதலாக விருந்த ஐம்பத்தோ ரெழுத்தும், உரியவான் நாலு வேதமும், அந்த வேத முடிவிலே யிருக்கிற வஸ்துவும், சகல சீவனும் சரீரத்தி னிடத்திலே வாய்ப்பாக நிலைபெற்று நிற்கிறதும், உள்ளும், உள்ளே யிசைந்த அண்டத்தினுட்புறமும், சோதிக்குள்ளே உண்டான சோதிபோலே, ஒத்த ஆநந்த சுகத்திலே பிரகாசிக்கின்ற ஞானமாகிப் பிரகாசிக்கப்பட்ட ஒப்பில்லாத பூரணமென்று பெயர் பெற்ற சத்திய சொரூப நிலையை வெளியாகப் பார்ப்பதும் பெற்று, இருளும் ஒளியும் இல்லாத ஒருமார்க்கத்தைத் தரித்து உன்னுடைய பொற்றாமரைப் பூவை யொத்த சீர்பாதங்களை நீங்காமல், அழியாமல் வாழ்ந்து, உன் அடியார்களுள் ஒருவனென்று ஒத்துக்கொள்ள

(பி - ம்) 1. மொண்கட்க மெய்ப் படையும்.

தனந்தனன தத்தனன தந்த
தனந்தனன தத்தனன தந்த
தனந்தனன தத்தனன தந்த த

ழுந்தசைநி ணத்துடனெ லும்பு
நரம்புகுடர் சுக்கிலம லங்கள்
குறும்புனலி ரத்தமொட மைந்து முடை
ரம்பையைய மக்குநிலை யென்று
தனம்பலகு வித்துநிறை பெண்கள்
கொடுங்கையில்அ ணைக்கமகிழ் சிந்தை ஒ

துருள்க ணப்பொழுது நின்று
தரங்கமற வுட்பகைக ளைந்துன்
உடன்படுமெ னிற்புவிய டங்க அர
டுங்கலில்சி றப்பினிது தந்து
பெரும்பதம ளித்திடுவை யென்பா
துணர்ந்துமுணர் வற்றுநர கின்கண் விழு

ழந்தரள பத்மபதி நஞ்சம்
[2] அருந்தியத னிக்கடவுள் அண்டர்
திருந்துகுலி சத்தனொட டங்க அனை
சறிந்திடும ரக்கர்பொர நொந்து
பெருங்கனக வெற்பின்மிசை வந்து
செளிந்துகம லப்பதநி னைந்து க்ருஷ

அடைந்திடுதி ருத்துயிலொ ழிந்து
நெடுங்கடலி டைப்பிரபை சிந்த
அனந்தசய னத்திநுமெ ழுந்த பெருமாளே.

உரை :—செறித்த வெள்ளைத்தாமரையி லிருக்கிற சரஸ்வதிக்கு நாயகனை பிரமனும், காளகூட விஷத்தைப் புசித்த நிகரில்லாத தெய்வமாகிய சிவனும், தேவர்களும், திருத்தமான வச்ராயுதந் தரித்த இந்திரனோடே (ஓடி) எல்லாரும், நெருங்கின ராட்சதர் யுத்தம் பண்ணினதினாலே நொந்து, பெரிய மகாமேரு மலையின்மேலே வந்து, இந்தத் துன்பம் உன்னாலே தீருமென்று தெளிந்து, உன்னுடைய தாமரைப் பூவையொத்த சீர்பாதங்களை நினைத்துத் தியானித்து, "தயா மூர்த்தியே, எங்களுடைய வலிமை யழிந்தோம் ; இளைத்து வந்தோம் ; இதைச் சித்தத்திலே ஒப்புக்கொண்டு எங்கள்மேலே இரங்க வேண்டும் ; முகுந்தனே, உன்னுடைய அடைக்கல மருளி நித்திரையை விட வேண்டும்", என்று தெண்டம் பண்ணுகிற வேளையிலே, நீர் அமர்ந்த நித்திரையை விட்டு, நீண்ட திருப்பாற் கடலிடத்திலே, சிறந்த ஆதிசேஷன்மேலே பண்ணின சயனம் விட்டெழுந்தீர் நாராயணப் பெருமாளே ; கொழுத்த மாமிசமும், நிணமும், அதனுடனே எலும்பும், நரம்பும், குடலும், சுக்கிலமும், மலங்களும், மூத்திரமும், இரத்தமும் ஆகிய இவைகளுடனே கூடிப் பொருந்தி, துர்க்கந்தமாய் நாறப்பட்ட கூடாகிய இந்தத் தோற்பையை நமக்கு அழியாத நிலை என்று நம்பிப் பலவிதமான திரவியங்களைக் குவித்து வைத்துக்கொண்டு நிறையுடைய பெண்கள் தம் வளைந்த கையாலே அணைக்கச் சந்தோஷப்பட்ட மனத்தை, ஒரு காலத்திலே கண்ணாடியில் உழுந் துருள்கின்ற கணப்பொழுதாயினும், ஒருமையாக நிறுத்தி அலைச்சல் போக உட்பகையான காமக், குரோத, லோப, மோக, மத, மாற்சரிய மென்னும் ஆறையும் வேர் பிடுங்கி உன்னோடு கூட்டுவே னென்றால், எல்லாப் பூமியையும் அரசாளப்பட்ட—ஒடுக்கமில்லாத பெரிய சிறப்பை இனிதாக ஈந்து, பெருமை பொருந்திய பரமபதத்தை அருளிச்செய்வாய் என்பதை அறிந்திருந்தும், அந்த அறிவுகெட்டு நரகிடத்து வீழுவேனோ? விழாதபடி பரமபதத்தைத் தரவேண்டும்.

தனதனன தத்த தந்த தந்த
தனதனன தத்த தந்த தந்த
தனதனன தத்த தந்த தந்த தனதான

3. மடுவிலேக ரிக்கு முந்தி வந்து
நெடியதூணி லப்பி ளந்து நின்று
மருது[illegible] னைத்து மண்ட ரண்ட வகையாவும்

மதுரவாய்ம டுத்த டங்க வுண்டு
பெரியநாபி யிற்[1]ப ரிந்து தந்து
வருசராச ரத்து ளும்பு றம்பும் [2]அகலாய்நீ

அடியனேனி னைக்க வுங்கு ணங்கள்
பரவியேது திக்க வுந்தெ ளிந்துன்
அடிதொழாவ ழைக்க வும்ப ரந்து திரியாம்த

அறிவிலேசெ லுத்த வுங்க லங்கென்
அளவுபோல வொத்து நின்ற தஞ்ச
மதனைநானு ரைத்தி டுந்த ரங்கள் எனலாமோ

நெடியவேலை விட்டெ ழுந்து சங்கு
திகிரிபாணி யிற்று லங்க வெங்கும்
நிகரிலாத பத்ம மங்கை துங்க மணிமார்பில்

நிறையவேநி றத்த கொண்டல் மண்டி
வருவபோலெ மூச்சி கண்டு நுங்கள்
நினைவைநான்மு டிப்ப னென்றெ ழுந்த எழில்காணக்

கடவுளேக்ரு பைத்த டங்க ணெங்கள்
இறைவனேயி ரட்சி யென்று வந்து
கனகமேரு வுச்சி நின்றெ ழுந்து சிவனாடக்

கமலயோனி பொற்க ணம்பு சிந்த
அமரர்பூவி றைத்தி றைஞ்ச வன்று
கருடவாக னத்தின் வந்தி ழிந்த பெருமாளே.

உரை :—நீண்ட திருப்பாற் கடலை விட்டெழுந்து சங்கும் சக்ரமும் திருக் கைகளிலே பிரகாசிக்க, எந்த லோகத்திலும் ஒப்பில்லாத தாமரைப் பூவிலிருக்கிற பெரிய பிராட்டியார் உயர்ந்த கவுத்துவ மாணிக்கப் பதக்கந் தரித்த திருமார்பிலே நிறைந்திருக்க, 'உங்களுடைய நினைப்பை நான் முடிப்பேன்' என்று எழுந்து கறுத்த நிறமுள்ள மேக மானது அதி சீக்கிரமாக வருவதுபோலே ஒத்த காட்சியழகைக் கண்டு, மகா மேருவினுடைய முடியிலே யெழுந்து, "தெய்வமே, தயை பொருந்திய விஸ்தாரமான கண்களுள்ள எங்கள் கர்த்தனே, ரட்சிக்க வேண்டு" மென்று சந்தோஷமாகச் சிவன் கூத்தாட, தாமரைப் பூவிற் பிறந்த பிரமன், அழகிய கண்ணிலே ஆநந்தக் கண்ணீர் துளிக்க, தேவர்கள் புஷ்பமாரி பொழிந்து தெண்டனிட, அப்போது கருடவாகனத்தின் வந்திறங்கின

(பி - ம்) 1. பிரிந்து. 2. அகலாநீ.

பெருமாளே ; முன்னாளிலே மடுவில் முதலை வாயில் அகப்பட்டு ஆதி மூலமே யென்று கூப்பிட்ட யானைக்கு வந்தும், பிரகலாதனுக்காக நீண்ட தூணைப் பிளந்து நரசிங்க ரூபமாக நின்றும், தங்கின சகல பூமிகளையும், தேவர்க ளிருக்கிற தேவ லோகத்தையும் மதுரமுள்ள திருவாயில் அடக்கி யுண்டு, திரும்பப் பெரிய நாபியிலே பெற்றும், இப்படி வருகிற அசையப் பட்டது, அசைவில்லாதது என்ற இரண்டு விதமான சகலத்திலும் உள்ளும் புறம்பும் கலந்து பிரியாமல் இருக்கிறாய் ; இப்படி யிருக்கிற உன்னை அடியேனால் தியானம் பண்ணவும் உன்னுடைய குணாதிசயங்களை விஸ்தாரமாக நிதம் தோத்திரம் பண்ணவும், நீயே தெய்வமென்று நிச்சய மாகத் தெளிந்து உன் சீர்பாதங்களை வணங்கவும், கைங்கரியங்களைச் செய்யவும், எந்தெந்தத் தெய்வத்தாலே மோட்சம் வருமோ? என்று அலைந்து திரியாமல், அறிவினாலே உன்னையே தெய்வமென்று நடத்தவும், என்னுள்ளே கலந்து அளவில்லாது என்னளவுபோல ஒத்து நிற்கிற அடைக்கலப் பொருளாகிய உன்னை நான், வாக்கினால் சொல்லுந்தரமாமோ? சொல்ல முடியாது ; ஆகையால் என்னாலே ஒன்றும் ஆகாது ; நீயே ரட்சிக்க வேண்டும்.

தனத்தன தாத்தன தந்த
தனத்தன தாத்தன தந்த
தனத்தன தாத்தன தந்த தனதான

4. அகப்பொருள் மார்க்கமு ணர்ந்து
புறப்பொருள் யோக்கிய மதங்கேர்
டடுத்ததொல் காப்பிய பஞ்ச வதிகாரம்

அணைத்திறி நாக்கள மூந்தி
வடித்திடு நாற்கவி யின்சொல்
அழுக்கறு பாட்டுட னின்று புலவோருன்

மகத்துவ மேத்தின ரந்த
நெறித்தமிழ் கேட்டுமி யன்ற
வழக்கமி லாக்கவி கொண்டு தமியேனும்

வழுத்துகை தோத்திர மென்று
பொறுத்தருள் நீக்குத லின்றி
மிகப்பெறு வார்க்கவிர் புன்சொல் இதமாமே

(பி - ம்) 1. மதங்களடுத்த.

மிகுத்தவி ராக்கதர் தங்கள்
விளைத்தப ராக்ரம மின்று
விரித்திட வார்க்குவ சந்தண் மதிபானு
வெளிப்படு காட்சியொ ழிந்து
மகத்திறை யாற்றல ழிந்து
மிடித்தது நூற்றுறை யெங்கும் நெறிகோடிச்
செகத்திறை மாட்சிகு லைந்த
தெமக்கினி மூச்சிலை யெங்கள்
சிறைத்தலை மீட்டரு ளென்று முடிதாழாச்
சிறப்புறு நாற்றலை மைந்தன்
உரைத்திடு வார்த்தைக ளென்று
திருச்செவி சாத்தியி ருந்த பெருமாளே.

உரை :—" வலிமையாலும் கொடுமையாலும் மேன்மை யுடைய அரக்கர்களுடைய பேராற்றலை இப்போது விரித்துரைப்பதற்கு யாரால் இயலும்? குளிர்ந்த சந்திரனோடு சூரியனும் வெளிவரும் தோற்ற மில்லாமல் போயினர்; வேள்வித் தலைவனை இந்திரன் ஆற்றல் கெட்டு வறியனாயினன்; அற நூலிற் கூறப்பட்டுள்ள நன்னெறிகள் மாறிக் கெட்டுப் போயினமையால் உலகத்தில் அரசனது நற்குண நற்செயல்களாகிய பெருமைகள் அழிந்து போயின; எங்களுக்கு இனி மூச்சும்விட முடியாது. (உயிருமில்லை யென்றபடி, மூச்சு—உயிர்) எங்களைச் சிறையினிடத்தி லிருந்து மீட்டு அருள் செய்க" என்று தலைகளால் வணங்கி, சிறப்புள்ள நான்கு தலைகளை யுடைய பிரமனாகிய மைந்தன் சொல்லிய சொற்களை அப்போது அழகிய நின்செவியிற் கேட்டுக்கொண்டிருந்த பெருமாளே; அகப்பொருள் இலக்கண நெறிகளை அறிந்தும், புறப்பொருள் இலக்கணத்தில் அறிவினைப் போகச்செய் துணர்ந்தும், நூலுக்குரிய மதங்களைக் கொண்டுள்ள தொல்காப்பியத்தில் உள்ள ஐந்ததிகாரம் முழுதிலும் நாவினை அழுந்தும் வகைசெய்து ஆழ்ந்து கற்றும், குற்றமற ஆராய்ந்த ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னும் நால்வகைக் கவிகளுள் இனிய சொற்களால் ஆக்கப்பெற்றுக் குற்றந் தீர்ந்துள்ள பாக்களால், புலவர்கள், இன்று நின்பெருமையைப் புகழ்ந்து கூறினர்; அம்முறையாகிய தமிழ் இலக்கணநெறிகளைக் காதாற்கேட்டுச் சென்ற வழக்கம் சிறிதுமில்லாத நான், செய்யுளைக்கொண்டு நின்னைப்போற்றுங் குற்றத்தைப் பொறுத்தருள்வாயாக; பிள்ளையைப் பெற்றவர்கட்கு அக்குழவிகளின் குற்றமுள்ள சொற்களும் இனிமையாக விருத்தல்போல், மைந்தனாகிய என் சொல்லையும் இன்பமாக ஏற்றருளல் வேண்டும்.

தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் என மூவதிகாரங்களை யுடையதா யிருப்பவும், ஐந்திலக்கணங்களை அவ்வதிகாரங்கள், நுவல்வ தாகக் கூறும்!பிற்காலத்தார் ஒருசாரார் வழக்குப்பற்றித் 'தொல்காப்பிய பஞ்ச வதிகாரம்' என்றூர் போலும் என்க.

தனன தந்தன தாத்தன தந்தன
தனன தந்தன தாத்தன தந்தன
தனன தந்தன தாத்தன தந்தன தனதான

5. முனைய யழிந்தது [1] ப்ராத்திகு லைந்தது
வயது சென்றது வாய்ப்பல்வி ழுந்தது
முதுகு வெஞ்சிலை காட்டிவ ளைந்தது ப்ரபைதானும்
முகமி ழுந்தது நோக்கமி ருண்டதுள்
இருமல் வந்தது தூக்கமி குந்தது
மொழித ளர்ந்தது நாக்குள ழுந்தொறும் அறிவேபோய்
நினைவி றந்தது நீட்டல்மு டங்கலும்
அவச மும்பல வேக்கமு முந்தின
நெறிம யங்கின மூப்புமு திர்ந்தது பலநோயும்
நிரவி நின்றது பாய்க்கிடை கொண்டது
சலம லங்களு நாற்றமெ ழுந்தது
நிமிட மிங்கினி யாச்செனு மன்றுமுன் வருவாயே
இனியெ ழுந்திரு மாத்திர ளண்டர்கள்!
கவியு மெண்கும்மெ ளச்சுரு பங்கொடு
இனிய குன்ெறாடு காட்டில் டைந்திடும் நிரையார்தோள்
இருப தும்ப்ரபை காட்டுநெ டுந்தலை
ஒருப துந்துக ளாக்கிவ ணங்கலர்
எவுரை யுந்தனி யாக்ஞையி டும்படி இனிமேல்யாம்
மனுவ ரம்பது கூரத்துநி றம்பெறு
திகிரி சங்கமு மாற்றல னந்தனும்
மருவு தம்பிய ராய்த்தொழ நந்தய ரதனுர்தம்
மதலை யென்று[2]ந மேற்றம றந்துள
மனித னென்றும யோத்தியி டந்தனில்
வருவ மென்றொரு வார்த்தைவ ழங்கிய பெருமாளே.

(பி - ம்) 1. பூர்த்தி. 2. லேற்ற மிகுந்துள.

உரை :—இப்படிச்சொன்ன பிரம, ருத்திரர் முதலான தேவர்களைப் பார்த்து நீ சொல்லுகிறது :

"பெருங் கூட்டமாகிய தேவர்களே, இனி எழுந்திருங்கள் ; நீங்கள் குரங்குகள், கரடி என்று சொல்லப்பட்ட சொரூபங்கொண்டு இனிதான மலையுடனே காட்டிலே வாசமாய் இருங்கோள் ; இராவணனுடைய ஒழுங்காய் இருக்கிற இருபது கைகளையும், பிரகாசத்தைக் காட்டப்பட்ட பொன்னாலும் ரத்தினங்களாலும் பண்ணப்பட்ட கிரீடங்களைத் தரித்த நெடிய பத்துத் தலைகளையும் தூளாக்கி, வணக்கமில்லாத சத்துருவானவர்களை யெல்லாம் தனித்தனி ஆக்கினையிடத் தக்கதாக இனிமேல் நாம் மனுவம்சத்தின் முறைமை தப்பாமல் காத்து, சந்திரனைப் போலே பிரகாசிக்கிற சங்கும், சூரியனைப்போலே பிரகாசிக்கிற சக்கரமும், வலிமையுள்ள ஆதிசேடனும் கலந்த தம்பியராக வணங்க நம்முடைய தசரதமகாராசாவின் குமாரனென்றும், நம்முடைய தெய்வமகிமையை மறந்துள்ள மனிதனென்றும் திருவயோத்தியில் வருவோமென்று ஒரு வார்த்தை அருளிச்செய்த பெருமாளே ; கூரிதான புத்தி யழிந்தது ; கௌமாரமான எவ்வனம் குலைந்தது ; உள்ள வயதெல்லாம் சென்றது ; வாயிலிருந்த பல்லும் விழுந்தது ; கொடிய வில்லைப்போல முதுகு வளைந்து காட்டிக் கூனித்தது ; முகமானது ஒளி யிழந்தது ; கண் இருண்டது ; உள்ளே இருமல் வந்தது ; நித்திரை மிகுந்தது ; பேச்சுத் தளர்ந்தது ; நா, குளறுகிற போதெல்லாம் அறிவு கெட்டது ; நினைப்பு மறந்தது ; நீட்டினகால் கைகளெல்லாம் முடங்கின ; சரீர மறப்பும், திகிலான பயமும் கிளம்பி யெழுந்தன ; நல்லமார்க்கம் மயங்கிற்று ; கிழமானது முற்றி வளர்ந்தது ; பல வியாதிகளும் கலந்து நின்றன ; பாயிலே கிடையாகக் கொண்டது ; மூத்திரமும் மலமும் நாற்றமெழுந்தன ; இங்கே நிமிடம் இனியாச்சுதென்று இந்தப்படியாக எல்லாருஞ் சொல்லுகிற அப்போது என் முன்னே வரவேண்டும்.

முனை - கூறிய அறிவு. பிராத்தி - இளமை. கிடை - படுக்கை.

மாதிரள் அண்டர்கள் இனி எழுந்திரும் எனக் கூட்டுக. அண்டர்கள் என்பது அண்மை விளி.

தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன தனன தத்தன தனதான

6. கமல முற்றவ ளுலகு பெற்றவள்
திருவு ரத்திடை குடியி ருப்பவள்
குமைப டைத்தவள் அழகுப டைத்தவள் நெடுவேலை

கடையு மப்பொழு தினிலு தித்தவள்
புனித லட்சுமி யொருதி னத்திடை
[1] கழல்த ரித்திடு திருவ டித்தொழு திறையோனே

நிமல நின்கள் ப்ரியமு னக்குள்
தெவரி யத்தினி லெனவு ரைத்தலும்
நிறைவி ருப்புட னிசைபு லப்படு கவியாடும்

நிபுணர் சொற்களி லெனவு ரைத்தனை
அதனை யுட்கொடு கவியு ரைக்கினு
நினது பொற்ற்ரு வடிது திப்பது தவிரேனே

சமிதை பத்திர மிகுத ருப்பைகள்
பசுமி ருத்தொடு விபுதர் மெய்த்தவர்
சரும நற்றுகி லுர லு லக்கைகள் நடுயூபம்

சருக ருரைத்திடு சிலையு ருக்குநெய்
அரணி நத்தொடு [2] கயிறு நெற்பொரி
[3] சகட மற்றுள கலம னத்தொடு முறையாலே

அமரர் பெற்றிட வவிகொ டுத்தொரு
வருட மிப்படி கலைமு கத்தவன்
அணிம கத்திடை தயர தப்பெயர் மகராசன்

அரிய முத்தழல் வளர வுத்தம
நெறிந டத்தலும் அவனி டத்தினில்
அவத ரித்திட வெனநி னைத்தருள் பெருமாளே.

உரை :—இப்பால் பூமியிலே தயரதமகாராசர் புத்திர நிமித்தமாகக் கலைக்கோட்டு மகாரிஷியை யழைப்பித்து யாகத்துக்கு வேண்டிய சமித்து, பத்திரங்கள் மிகுதியான தர்ப்பை, பசுவின் சாணம், பெரியவர்கள், மெய்யான தபசுசெய்யப் பட்டவர்கள், மான்தோல், நல்ல பட்டு வஸ்திரம், உரல், உலக்கைகள், யாகசாலையிலே நடப்பட்ட கம்பம், கோமயம், மடக்கு, அம்மி, குழவி, சந்தனமரைக்கிறது முதலான கல், வெண்ணெயை யுருக்கின நெய், நெருப்புக்கடைகிற கோலான அரணி, வலம்புரிச் சங்கு, கயிறு, நெல்லுப் பொரி, உருளைபூட்டிய சகடங்கள், பின்னும் வேண்டிய பாத்திரங்கள், பதார்த்தங்கள் எல்லாவற்றுடனும் வேதசாஸ்

(பி - ம்) 1. கழல்செ றித்திடு.
2. பயறு நெற்பொரி, கயிறு நற்பரி.
3. சகடை மற்றுள கலம னைத்தொடு.

திர விதிப்படிக்குத் தேவர்கள் பெறத்தக்கதாக அவிசு கொடுத்து, இப்படி ஒருவருஷம் தசரதனென்று பெயருடைய மகாராசர் கலைக்கோட்டு முக முள்ள மகரிஷியினாலே, செய்விக்கப்பட்ட அழகிய யாகத்திலே, அரிதான ஆகவநீயம், தட்சணாக்கினி, காருகபத்தியம் என்ற மூன்றுவித அக்கினியை யும் வளர்க்கத்தக்கதாக உத்தம மார்க்கமாக நடப்பிக்கச்செய்த தசரத மகா ராசாவினிடத்தில் போய் அவதாரம்பண்ண நினைத்தருளிய பெருமானே; தாமரைப்பூவிலே வாசமா யிருக்கிறவள்; உலகங்களைப் பெற்றவள்; திருமார்பிலே குடியிருப்பவள்; பொறுமையை யுடையவள்; அழகு மிகுந் தவள்; நீண்ட திருப்பாற்கடலைக் கடைகிறபொழுது பிறந்தவள்: இப்ப டிப்பட்ட ஸ்ரீ மகாலட்சுமிதேவியாகிய பெரிய பிராட்டியார், ஒருநாள் வீர மணித்தாவடம் நெருங்கச் சுற்றிக்கட்டிய உன்னுடைய சீர்பாதங்களிலே தெண்டனிட்டுக் சொல்லுகிறாள்; "என்னுடைய கர்த்தரே, சுத்தரே, சுரூபமாகியவரே, உமக்கு எவர்களிடத்தில் அன்புண்டா யிருக்கிற" தென்று கேட்க, அதற்கு நீர்சொன்னது; "நிறைந்த ஆசையுடனே—பண் ணுடனே பாடி யறியப்பட்ட பாட்டுகளைப் பாடப்பட்ட திறமையுள்ள புலவர்களின் சொற்களிலே எனக்கன்பிருக்கு"மென்று சொன்னாய்; அந்த வசனத்தை நானுண்மையென்றுகொண்டு பாட்டுக்களைச் சொன்னாலும் அக்கவிகளில் உன்னுடைய பொலிவும் அழகுமுள்ள சீர்பாதங்களைப் பாடித் தோத்திரம் பண்ணுகிறதை விடேன்.

" திருமகள் எம்பெருமானை வினவிய வினாவிற்கு அவர் மிகுந்த அன் புடன் என்னைப் பாடுபவர் செய்யுட்களில் எனக்கு அன்பிருக்கும் எனப் புலவரை மிகுத்துரைத்தவாறு காண்க".

தானன தந்தன தந்த
தானன தந்தன தந்த
தானன தந்தன தந்த — தனதான

7. பாதித்ரி யம்பக னுந்தி
நான்முக னம்புய மங்கை
பாகமி ருந்தவு ரங்கண் — மதிபானு
பாதநெ டும்புவி நங்கை
வேதமி யம்புவை நின்சு
[1]பாவமு ணர்ந்திடில் இந்த — வகையேயோ
யாதுமுன் வஞ்ச வுடம்பு
வேறிலை யிங்கொரு சிந்தை
யாரை விளம்பினு மன்பு — தவறாதே

(பு- ம்) 1. பாவமுணர்ந்திடல்.

யாரை வணங்கினு நண்பின்
யாரையி ணங்கினு நெஞ்சில்
யாரைவி ளம்பினு மங்கு — நினதாமே

ஓதுமி ரண்டாறு திங்கள்
வேள்விந டந்தபி னங்கோர்
ஊனமில் பிண்டம் வழங்கி — ஒருபூதம்

ஓடிம றைந்திட மைந்தர்ப்
பேறினி யுண்டென நெஞ்சம்
ஓகையு றுந்தவ னம்பொன் — அடிசூடிக்

கோதறு பிண்டம் வகிர்ந்து
தேவிய ரொன்றொடி ரண்டு
கோதைய ருண்டிடு மென்று — முறையாலே

கோமக னின்று வழங்க
மாதவ முன்புபு ரிந்த
கோசலை பங்கொடு நின்ற — பெருமாளே.

உரை :—முறையாலே சொல்லப்பட்ட பனிரண்டு மாதமும் யாகம் நடந்தபின்பு அந்த அக்கினியிலிருந்து ஒரு பூதம்வந்து குற்றமில்லாத பிண்டத்தைக் கொடுத்துத் திரும்ப ஓடி மறைந்து போக, இனிப் பிள்ளைப் பேறு உண்டென்று மனதில் சந்தோஷப்பட்ட கலைக்கோட்டு மகாரிஷியினுடைய அழகும் பொலிவுமுள்ள பாதங்களைச் சிரசிலேதரித்துத் தெண்டனிட்டு, அந்தப் பிண்டத்தை யவர்கொடுக்க வாங்கிக் குற்றமற்ற அதனைப் பங்கிட்டுக் 'கோசலை கைகேயி சுமித்திரை என்னும் எம்முடைய தேவிமாரான பெண்களே புசியுங்க'ளென்று மூத்த முறைமைப்படி தசரத மகாராசா நின்று கொடுக்கப் பெருமைபெற்ற தவஞ்செய்த கோசலை பங்காக நின்ற பெருமாளே ; மூன்று கண்களையுடைய சிவன் உன்னுடைய திருமேனியிலே பாதி ; நாலு முகமுள்ள பிரம்மா, உனக்குத் திருவுந்தி ; தாமரைப் பூவிலிருக்கிற பெரிய பிராட்டியார் பங்குமிகுந்த திருமார்பு ; சந்திர சூரியருங் கண்கள் ; நீண்ட பூமிதேவி சீர்பாதம் ; சொல்லப்பட்ட வசனம் வேதம் ; உன்னுடைய சுபாவத்தை விசாரிக்கையில் ஆகுமோ ? ஆகாது. ஆகையினால் எல்லாம் உன்னுடைய வஞ்சகமான உடம்பல்லாமல் வேறொன்று மில்லை ; இப்படி உன்னுடைய சொரூபமா(னதாகையினால், இங்கே நான் ஒருமையான மனதினால் யாரைத் தோத்திரம் பண்ணினாலும், அன்புதவறாமல் ஆரைவணங்கினாலும், சினேகத்திற் கூடி)னாலும், மனதிலே யாரை நினைத்தாலும், அவையெல்லாம் அங்கங்கே உன்

னுடையதாமே யாகையால், நான் செய்ததோ முன்.........செய்த கைங்கரியம் ?

தானன தனத்த தனந்த
தானன தனத்த தனந்த
தானன தனத்த தனந்த தனதான

8. மாலையை முடித்து விளங்கு
சேலையை யுடுத்தி நிறைந்த
வாண்முக மினுக்கி நெருங்கு முலைமீதே
மாமணி நிறைத்து முயங்கு
தோள்களை யசைத்து நடந்து
வாள்பொரு கடைக்க ணெறிந்து தெருவூடே
சாலுமி ளைஞர்க்கு மிகுந்த
வாதைவ ருவித்தி டுபெண்கள்
தாமிடு துவக்கி லழுந்தி யயர்வேனைத்
தாமத குணத்தி லுமந்த
ராசத குணத்தி லுழுந்து
சாதுகு ணநிட்டை யிலென்று விடுவாயே
ஆலிலை கிடக்கை தணந்து
வேலையி னிருக்கை திறம்பி
ஆதவ னிடத்தி லுமின்றி அமரேசன்
ஆமர சிருப்பு முனைந்து
மாகயி லைவெற்பொ டுகஞ்சம்
ஆதியி டமுற்று மகன்று கரைகாணக்
கோலம றையுச்சி துறந்து
மாதவர் மனத்தை நெகிழ்ந்து
கோகன கைசொர்க்க மிகந்து வளர்பாயற்
கோளர வைவிட்டு விகங்க
பூபதி கழுத்தை மறிந்து
கோசலை வயிற்றி லிருந்த பெருமாளே.

பொ - ரை :—ஆலிலைமேலே பள்ளிகொண்டதை விட்டு, திருப்பாற் கடலிலே யிருக்கிறதை விட்டு, சூரியனிடத்திலும் இருக்கிறதல்லாமல், தேவராசாவான இந்திரனுடைய அரசிருப்பும் விடுத்து, பெரிய கயிலாய

மலையுடனே தாமரைப்பூ முதலான இடமுமெல்லாம் விலக்கி, அழகான வேதத்தினுடைய முடிவை வெறுத்து, பெருமையுள்ள தவசு செய்கின்ற ரிஷிகளுடைய இருதயத்தை மெள்ளக்கடந்து, பெரிய பிராட்டியாருடைய இன்பத்தை நீக்கி, யோகநித்திரை செய்யும் பாயலான வெற்றியையுடைய ஆதிசேடனை விட்டு, பட்சிராசாவான கருடபகவானுடைய கழுத்தையும் மறந்து, இப்படி நீ, இருந்தருளிய இடங்களெல்லாம் விட்டுக் கோசலா தேவி திருவயிற்றிலிருந்தருளினாய் ; பெருமாளே ; கொண்டையிலே பூமாலையை முடித்து, விளங்கப்பட்ட சேலையை இடையிலே உடுத்தி, ஒளி நிறைந்த முகத்தை மஞ்சளாலே மினுக்கி, ஒன்றோடொன்று நெருங்கிய முலைகளின்மேலே பெரிய ஒழுங்காய் இருக்கிற முத்துமாலையைத் தொங்க விட்டு, ஆலிங்கனம்பண்ணுகிற கைகளை யசைத்து, தெருவிலே, வாளைப் போலே யொத்த கடைக்கண்கள் சுழல வீசி நடந்து, இயல்பான இளமையுள்ள புருஷர்களுக்கு மிகுந்த காமமாகிய வாதனையை வரப்பண்ணுகிற பெண்கள், (தங்கள்) லீலா, கரண விநோதங்களைச் செய்கிற தொழிலிலே யகப்பட்டழுந்தி யுன்னைமறந்த என்னைத் தாமதகுணத்திலும் அந்த ராசத குணத்திலும் அதிகமாகத் தலைமைபெற்ற சாத்துவிக குணத்துடனே உன்னுடைய தியான நிஷ்டையில் என்றைக்குச் சேர்த்துவிடுவாய்? சொல்ல வேண்டும்.

தனன தந்த தத்தத் தனந்த
தனன தந்த தத்தத் தனந்த
தனன தந்த தத்தத் தனந்த தனதான

9. கருவ டைந்து பத்துற் றதிங்கள்
வயிறி ருந்து முற்றிப் பெயர்ந்து
கடையில் வந்து தித்துக் குழந்தை வடிவாகிக்
கழுவி யங்கெ டுத்துச் சுரந்த
முலையு ருந்தி விக்கிக் கிடந்து
கதறி யங்கை கொட்டித் தவழ்ந்து [2] நடமாடி
அரைவ டங்கள் கட்டிச் சதங்கை
யிடுகு தம்பை பொற்சுட் டிதண்டை
யவைய யணிந்து [2] மத்துக் கிடந்த வயதேறி
அரிய பெண்க ளைப்பற் றிநொந்து
பிணியு முந்து சுற்றித் திரிந்த
தமையு முன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ

(பி - ம்) 1. நடையாடி. 2. முற்றிக்.

இரவி யிந்த்ரன் வெற்றிக் குரங்கி
னரச னென்று மெய்ப்பத்ம வுந்தி
யிறைவ னெண்கி [1] னுக்கத்த னென்று நெடுநீலன்

எரிய னென்று மைப்பற் றுகண்ட
னநும னென்று மொப்பற் றவண்டர்
எவரு மிந்த [2] வர்க்கத் துவந்து வனமேவத்

தரையி டம்பி டிக்கச் சுமந்த
திருவ னந்த னுக்ரப் ரசண்ட
தவள சங்கு [3] சக்ரத் தொடொன்று

தனியு டம்பெ டுத்துத் [4] தயங்கு
மிளைஞ ரென்று சுற்றத் துலங்கு
தயர தன்ற வத்திற் பிறந்த பெருமாளே.

உரை :—வெற்றி பொருந்திய வானரங்களுக்கு ராசாவாகிய இந்திரன் வாலியும் அங்கதனும் என்றும், சூரியன், சுக்ரீபனென்றும், உண்மையான தாமரைப்பூவை யொத்த திருவுந்தியிற் பிறந்த பிரம்மா கரடிக்குக் காவலனான சாம்புவந்த னென்றும், அக்னிதேவன் நெடிய நீலனென்றும், ஆலகால விஷத்தைக் கண்டத்திலே வைத்த சிவன் அனுமான் என்றும், ஒப்பிலாத தேவர்களெல்லாரும், இந்தக் குரங்கு கரடி வர்க்கத்திலே பிறந்து காட்டிலே சேர்ந்திருக்க, இடமுள்ள உலகைப் பிடித்துச் சுமந்த ஆதி சேடனும் உக்கிரமும் வெண்மையுமுள்ள சங்கும் சக்கரமும் இந்த மூன்றும் ஒன்றேடொன்று பிரியாமல் தனித்தனி உருவெடுத்துப் பிரகாசிக்கப் பட்ட தம்பிமாராகச் சூழக், கீர்த்தியாலே பிரகாசித்த தசரத மகாராசாவினுடைய தபசு மகிமையினலே, பிறந்த பெருமாளே ; நான் அநேகமான கர்ப்பங்களிலே அடைபட்டு, பத்துமாதம் வயிற்றிலேயிருந்து, வயிற்றை விட்டுத் திரும்பிக் கடைசியிலே பூமியிலேவந்து பிறந்து குழந்தை வடிவமாகிக் கழுவி யெடுத்தபின், அப்போது பால் சுரந்த முலேகுடித்து விக்கிக் கொண்டு தரையிலே கிடந்து அழுது, உள்ளங்கையைப் பிடித்துக் கொட்டித் தவழ்ந்து எழுந்து நடமாடி அரைஞாண் கட்டி, சதங்கை, தண்டைகள் காலிலிட்டு காதிலே உடுக்கைபோலே பண்ணின குதம்பையை இட்டு வளர்த்து, பொன்னலே செய்த சுட்டியை நெற்றியிலே கட்டி, இப்படிப் பட்ட குழந்தைப் பணிகள் பூண்டு வளர்ந்து, கர்வித்து எழுந்து வயதேறி எவ்வனம் வந்தவுடனே, சேர்வரிதான பெண்களை யாசைப்பட்டுக் கூடி

(பி - ம்) 1. னர்க்கத் தனென்று. 2. வர்க்கத்தில். 3. சக்ரத்தொ டன்று. 4. துலங்கு.

மனது நொந்து வியாதியினாலே அலைந்து சுற்றித் திரிந்தது போதும். இனி இந்தத் துன்பப் படமாட்டேன். உன்னுடைய தயையுள்ள திருவுள்ளம் எப்போது பெறுவேன்?

தனதன தானன தத்த தத்தன
தனதன தானன தத்த தத்தன
தனதன தானன தத்த தத்தன தனதான

10. நளிர்கடல் பூத மெடுத்த திக்கொடு
வரைகள்சு ராசுரர் பத்ம முக்கணர்
நடவுச ராசர முற்று மற்றுன திருரூபம்

நணுகிவி சாரமு ரைத்து நித்தமும்
[1] அணுகிய கேள்விப டைத்து மிப்படி
நவில்வது தூரமெ னக்கு நித்துனை மதுசூதன்

துளவணி மாலரி கிட்ண னச்சுதன்
மறைமுதல் கேசவன் நத்ரி விக்ரம
சொரூபன்மு ராரிப்ர சித்தன் விட்டுமண் மகள்கேள்வன்

சுரிவளை [2] யாழிய மச்ச கற்சப
மரகத மாயவெ னத்தி ருத்திய
துதிபெறு பேர்பல விட்ட ழைத்திடு மெனையாள்வாய்

இளையகை கேயிவ யிற்றி லுத்தம
பரதகு மாரனு திக்க நட்புடன்
இணைபிரி யாதசு மித்தி ரைப்பெயர் மடமாதின்

இருவிழி போலவி லக்கு மப்பெயர்
அறிவுடை யானொரு சத்து ருக்கினன்
இருவர்க ளாகிய திக்க வித்திறம் ஒருமூவர்

கிளரிணை யார்கள்சி றப்பு றத்தச
ரதநர பாலனு மிக்க புத்திரர்
கெழுமிய நால்வரெ னக்க னத்தபொன் மழைவீசத்

கிரகநிலை நாள்கண்மு குர்த்த மொப்புற
வருபுனர் பூசதி னத்தின் முற்படு
கிளிமொழி கோசலை பெற்றெ டுத்தருள் பெருமாளே.

(பி - ம்) 1. நணுகிய. 2. யாழியன் பக்த ரட்சகன்.

உரை :—தசரத மகாராசாவுக்கு இளைய தேவியான கைகேயி வயிற்றில் பரதனென்னும் பேர்பெறும் புத்திரன் பிறக்க, சிநேகத்துடனே பிரியாத சுமித்திரை யென்று பெயர்பெற்ற அறியாமையாகிய நல்ல குணமுடைய பெண்ணின் வயிற்றிலே அவள் இரு கண்மணியையும் போல், லட்சுமண னென்னும் பெயர்பெற்ற அறிவுடையவனுடனே, சத்துருக்கனென்ற பெயர்பெற்றவனும் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறக்க, இந்தப்படியே பிறந்த மூன்றுபேர் தம்பிமார்களாகச் சிறப்புப்பெறத் தசரத மகாராசாவு மிகுந்து பழகிய நாலு பிள்ளைகளென்று, மேகம் மழைசொரிவது போல் பொன்மாரிசொரிய, நவக்கிரக நிலைகளில் அஞ்சு கிரகம் உச்சமாய் இருக்க, சுக்கிலபட்சத்து நவமி திதியாய் இருக்க, நல்ல முகூர்த்தத்திலே ஒப்பில்லாமல் வரப்பட்ட புனர்ப்பூச நட்சத்திரத்திலே நாலாம் பாதத்திலே கடக லக்கினத்திலே தலைமைபெற்ற கிளியைப்போலக் கொஞ்சிப் பேசுகிற கோசலாதேவி பெற்றெடுத் தருளிய பெருமாளே ; குளிர்ந்த கடலும், பஞ்சபூதமான மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயமும், எல்லாரும் எடுத்துச் சொல்லப்பட்ட எட்டுத் திக்குகளும், மலைகளும், தேவர்களும் அசுரர்களும், பிரம்மாவும், மூன்று கண்ணினையுடைய ருத்திரரும், நடக்கிறதும், ஊருகிறதும், பறக்கிறதும், ஓடுகிறது முதலான சரமென்ற ஜீவராசிகளும், மரம் முதலான அசையாத அசரம் என்பவைகளும் எல்லாம் உன்னுடைய அதிசய மானரூபம். ஆகையாலே இவைகளைச் சேர்ந்து விசாரித்துத் தோத்திரம் பண்ணித் தினந்தினமுங் கிட்டின கேள்வியாகிய வேத சாஸ்திர புராணங்களைக் கேட்டு அறிவுண்டாகியதால் அப்படி உன்னைத் தோத்திரம்பண்ணுவது வெகு தூரமென்று ஆராய்ந்து, இத்தனை விஸ்தாரங்களுக்கும் இது சரியென்று நிச்சயமாகக் குறித்து, உன்னை மதுசூதனா, திருத்துழாய் அணிந்த திருமாலே, அரிகிருஷ்ணா, அச்சுதா, நரசிங்கா, கேசவா, நல்ல திரிவிக்ரம சொரூபா, முராரி, பிரசிந்தா, விஷ்ணுவே, சிறிய பிராட்டியாராகிய பூமிதேவி நாயகா, சுரித்த சங்குசக்ரதரா, மச்சாவதாரா, கூர்மாவதாரா, பச்சைநிறமான மாயவா என்று முன்சொன்ன விஸ்தாரங்களை யடக்கி, திருந்திய தோத்திரம்பெற்ற அநேகந் திருநாமங்களை யுனக்கிட்டு அழைக்கிற என்னை அடிமைகொண்டு ஆளவேண்டும்.

தனத்த தானன தந்தன தானன
தனத்த தானன தந்தன தானன
தனத்த தானன தந்தன தானன தனதான

11. படாப்ர வாளவ லங்கிருத பூடண
கரார்த்ரி ரூபசு கந்தம ஞேகர
புரார்க்ர மாதுல துங்கப யோதர மடவார்தம்

பராக்கி லேதிரி யுங்குண வீனன்மெய்
யுருத்து ரோகியி ரும்பன வ்யாகுலி
படாத்து ராக்ருத பந்தமெ லாமுறு கொடியோன்யான்

ச.ாக்க டாவிவ ருஞ்சம ஞர்பொரு
பிராத்தி யாயுயிர் நின்றுவெ ரீவரு
கஞப்ர காரமெ னும்படி போவதன் முனமேநீ

கராத்தன் வாயற வந்தது போலவென்
விடாய்க்கு மேவெளி நின்றுக்ரு பக்ர
கடாட்ச மானது தந்துப ரோகதி யருள்வாயே

நடாத்து நேமிய சஞ்சல னேசெக
வியாத்தி யானப ரஞ்சுட ரேகமழ்
நருத்து ழாயணி யெம்பெரு மானெமை யுடையோனே

நமோத்து நாரண வென்றிமை யோர்தொழ
உலாத்து மாகரு டன்புய மேறிமுன்
நராப்ர வாகவி டுஞ்சிவ னுன்முகன் முதலோரென்(று)

அடாப்ர வாகவி லங்கையின் மீதுள
இராக்க தாதியர் கொண்டுள நீள்வரம்
அயோக்ய வாழ்வொட டங்கலு நீறெழ நரனுகி

அராக்கு லாவிய பொங்கணை பாழ்பட
விடாப்ப யோததி யும்பொலி வேயற
அயோத்தி மாநக ரந்தனில் மேவிய பெருமாளே.

உரை :—சக்கரஞ்செலுத்தி ரட்சிக்கப்பட்ட அசைவற்றவனே, செக வியாபகமான மேலான சோதியே, மணக்கப்பட்ட தேனெழுகிய திருத்துழாய் மாலையைத் தரித்தவனே, எங்களுடைய கர்த்தனே, எங்களை யடிமையாக வுடையவனே, ஸ்ரீமந் நாராயணசுவாமியே, நமஸ்காரமென்று தோத்திரம்பண்ணித் தேவர்கள் வணங்க முன்னே உலவுகின்ற பெருமையுள்ள கருடனுடைய தோளிலேறி, "உலத்துசரத்தை விட்டு மனிதப் பிறவியாக்கி விடுமெ"ன்று சிவன் பிரமா முதலானபேர் கூப்பிட, ஆருக்குமாகாத பிறவியாக இலங்கையினிடத்தி லிருக்கும் இராட்சதர் முதலானபேர் கொண்டிருக்கிற பெரிய வரங்களும், யோக்கியமில்லாத செல்வங்களுடனே சகலமும் புழுதியாகி யெழும்ப, மனித ரூபமாகி ஆதிசேடன் மேலே இன்பமாக மகிழ்ந்த சயனம் பாழாக, ஒருகாலமும் விட்டுப் பிரியாத திருப்பாற்கடலும் பொலிவுகெடத் திருவயோத்தி யென்று சொல்லப்பட்ட பெருமையுள்ள பட்டணத்திலே வந்து பிறந்த பெருமாளே; கெடாத

பவளத்தினாலே அலங்காரமான ஆபரணந்தரித்த கையுள்ள கரியமலைக்கு ஒப்பான யானையின் கொம்புபோல் ஏந்தின ரூபமுள்ளதும், சந்தனங் கற்பூர பரிமள மாலை முதலானதினாலே மணக்கப்பட்டதும், மனோகரமாயிருக்கிறதும், பராக்ரமித்து எழும்பினதும், அடங்காத பெரியதும், உயர்ந்ததும், ஆகிய இந்த லட்சணங்கள் பொருந்திய முலைகளையுடைய பெண்கள் உடையிலே, பராக்கிலே, சுற்றப்பட்ட குணங்கெட்டவன் ; சத்தியமில்லாமல் பொய் பேசுகிற துரோகி ; இடும்பை செய்கிறவன் ; எந்நேரமுந் துக்கமானவன் ; அழியாத துராக்கிருதத்தைத் தொடர்ந்து செய்கிற குற்றமெல்லாம் குடியாய் இருக்கிற கொடுமையுள்ளவன் ; இப்படிப்பட்ட வென்னை எருமைக்கடாவின் மேல் ஏறிச் சீக்கிரமாக வரப்பட்ட எமனாலே பிடிக்கத் தண்டிக்க அதற்கு உரிய உயிர் அஞ்சுகின்றபோது எல்லாம் கனவுபோன்ற தன்மையாயுள்ளதென்று நினைக்குமாறு என்வாணாள் அழிந்துபோவதற்கு முன், முதலை தன் வாயாற் கூப்பிட அதன் துயர் போக்க நீ வந்ததுபோல என் துன்பத்திற்காகவும் என்முன் வெளிப்பட நின்று காட்சியளித்து நின்கடல் போன்ற அருளைத் தந்து சிறந்த பரம பதத்தினை யருள்வாயாக.

பிரவாகம்—பிறவி.

தான தந்த தான தத்த தந்த
தான தந்த தான தத்த தந்த
தான தந்த தான தத்த தந்த தனதான

12. வீழு டம்பு தானெ டுத்து நின்ற
மானு டங்க ளாமி றைச்சி யெங்கும்
மேலெ ழுந்த வாசை யிச்சை யொன்றி வருகோலின்

மீத டைந்து கோவை யுற்ற பின்பு
[1] கோப வங்கி மீதி லிட்டு வெந்த
மேனிகண்டு வாய்ம டுத்த ருந்து மொருகாலன்

பாழி லிந்த நீள்பி றப்பில் வந்து
லாப மொன்று மேயி லைத்தி ரிந்து
பாத கங்க ளேப டைத்து வெம்பி யுழல்வேனோ

பார தொந்த மாய்கை யைக்க டந்து
ஞான சிந்தை யால னைத்தும் வென்று
பாத செஞ்ச ரோரு கத்தி லென்று புகுவேனோ

(பி - ம்) 1. கோவை யுங்கி.

வாழு முண்ட காச னத்தன் மைந்தன்
ஆறி ரண்டு நாளி னிற்பு கன்ற
வாய்மை கொண்டு நீர்வி டுத்து மஞ்ச — னமதாடி

மாலை தண்டை யாழி பொற்ச தங்கை
காறை சங்கு நாணெ டுத்த ணிந்து
மார்பு கண்கை கால்மி னுக்கி யண்ட — மொடுபூமி

ஏழு முண்ட வாய்வி ளக்கி யெங்கள்
கோச லன்கு மாரி முற்ப யந்த
ராணி யன்பொ டேகொ டுக்க நெஞ்சு — களிகூர

ராச வஞ்ச மேரு வொத்த தந்தை
யாக மொன்ற வேய ணைத்தி ருந்து
ராம னென்று பேரி டக்கி டந்த — பெருமாளே.

உரை :—...............................................பெருமாளே, கொஞ்சநாளிலே யழிந்துபோகிற உடம்பை யெடுத்து நிற்கப்பட்ட மனித சென்மங்களாகிய மாமிசத்தையுடைய உலகத்திலுள்ள விடமெங்கும் தின மேலும் அடங்காமல் எழுந்த ஆசையென்று சொல்லப்பட்ட கோலிலே சேர்ந்து கோவைப்பட்டுப் பிறகு, கோபமென்கிற நெருப்புமேலே போட்டுச் சுட்டு வெந்து பக்குவப்பட்ட மனித சரீரத்தைக்கண்டு, வாயிலே போட்டுக்கொண்டு மென்று விழுங்குவான் ஒரு யமன்; இப்படிப்பட்ட பாழான இந்த நீண்ட பிறவியில் வந்து பிறந்ததனாலே ஆதாயமொன்று மில்லை; வீணாகத் திரிந்து அலைந்து பாதகங்களையே செல்வமாக அடைந்து அதனாலே துன்பப்பட்டுச் சுழலுவேனோ? அப்படிக் கெடாமல் சுமக்கப் போகிற பாரமாய் எத்தனை சென்மமெடுத்தாலும், என்னை விடாமல் தொடர்ந்த மாயையைக் கடந்து ஞான சிந்தனையினாலே எல்லாவற்றையும் செயித்து உன்னுடைய சீர்பாதங்களாகிய செந்தாமரைப் பூவிலே என்றைக்குப் புகுந்து ஆனந்தத்தை யடைவேனோ?

தானதன தாத்தன தனந்தன தத்தனன
தானதன தாத்தன தனந்தன தத்தனன
தானதன தாத்தன தனந்தன தத்தனன — தனதான

13. வேலியடை யாப்பயிர் நெடுங்கரை யற்றபுனல்
தாய்முலைபெ ருச்சிறு குழந்தைத ருக்குமிள
வேனிலடை யாக்குயில் கரும்புய லற்றமயில்

அரசாளும்

வீரனெயி லாப்புவி மதங்கய மற்றபடை
கால்விசை பெருக்கல மரும்பொறை கெட்டதவம்
வேதமறு பூச்சுர ரருங்கவி யற்றவவை
பலநூலின்

சீலமுண ராக்கவி மடந்தையை யற்றமனே
நாணமறு கோற்றெடி விருந்துவி லக்குகுடி
சேர்பொருளி லாக்குறை பிரிந்தந லத்திளமை
கதிராளி

தேசுமரு வாக்கம லமிங்கிவை யொத்துமுழு
ஞானமறு யாக்கையொ டுழந்தவெ னக்குமறை
தேடுமிரு தாட்டுணே வழங்கநி னேப்பதுவு
மொருநாளோ

பாலொடுநெய் கூட்டியொ ருசங்குநி றைத்துமணி
வாயினிடை காட்டிவி ரல்கொண்டுதெ றித்தழுது
பாகுபடு தேக்கொடு குடைந்துகு டித்தவுடன்
முறையாலே

பால்வளை நீட்டிமு டிநின்றுசு ழற்றியது
பூமிமிசை மூக்குற மருங்குக விழ்த்துவிரி
பாணிகொடு மீட்டுமு டலங்கமு ழுக்கியிரு
தொடைமேற்கொண்

டேலமுது நீர்க்கொடு குடைந்துது டைத்துமண
மேவுபொடி போட்டுமெய் திமிர்ந்துநி லப்பொடியி
னேறுமொரு காப்பினி தணிந்துயர் தொட்டிலினுள்
வளர்வாயென்

றேடுசெறி சேக்கையி லுகந்துகி டத்திநனி
கோசலைப ராக்கற விருந்துவ ளர்க்குமபி
ராமகம லாட்சர குநந்தன நற்பெரிய
பெருமாளே.

உரை :—பாலொடு நெய்கட்டி, ஒரு பாலடையிலே நிறையவிட்டுப் பவளம் போன்ற சிவந்த வாய்க்குள்ளே வைத்துக்காட்டக் குடியாததனாலே விரலாலே தெறிக்க நொந்து அழுது, கருப்பஞ்சாற்றுக் குழம்பு போன்ற மதுரத்துடனே நாவினாலே கடைந்து குடித்தவுடனே, முன்னே பிள்ளையைப் பெற்றபேர்கள் செய்கிற முறைப்படி பால்போல வெளுத்த

பாலடையைச் சிரசின்மேல் சுற்றி அந்தப் பாலடையினுடைய மூக்குப் பூமியிலேபடக் கவிழ்ந்து நீண்ட கையிலே ஏந்திக்கொண்டு திரும்பவுந் திருமேனி யெங்குந் துடைத்துக் கொண்டு, இரண்டு தொடையின்மேலே வளர்த்தி, தெளிந்த நீரைக்கொண்டு திருவாயில் விட்டுக் குடைந்து, இசை யத் துடைத்து, மணமிகுந்த பொடியினாலே திருமேனியிலே திமிர்த்து, நெற்றியிலே நிலப்பொடிக் காப்பிட்டுச் சுகமாகக் கண்வளரப்பண்ணி உயர்ந்த தொட்டிலுக்குள்ளே படுத்துக் கொள்ளென்று பூவிதழாலே நெருங்கப் பரப்பின பூமெத்தைமேலே சந்தோஷமாக வளர்த்திக், கோசலாதேவி மிகுந்த பராக்கில்லாதிருந்து கண்வளரப் பண்ணின அழ குள்ளவனே, செந்தாமரைப் பூவையொத்த கண்களையுடையவனே, ரகு மகா ராசகுலத்தில் பிறந்த ராசகுமாரனே, நல்ல மெய்யான பெரிய பெரு மாளே; வேலியடையாத பயிர்; நீண்ட கரையில்லாத சலம்; தாயின் முலை குடியாத சிறுகுழந்தை; சொல்லப்பட்ட வேனிற்காலம் அடையாத குயில்; கறுத்த மேகங்காணாத மயில்; அரசாளப்பட்ட சேவகனான ராசாவில்லாத பூமி; யானையில்லாத சேனை; காற்று வேகமில்லாத கப்பல்; அரிய பொறுமையில்லாத தவம்; வேதமோதாத பிராமணன்; அரிய புலவர்க ளில்லாத சபை; பல நூல்களின் குணத்தை யறியாது பாடின பாடல்; மனைவியில்லாத வீடு; வெட்கமில்லாத பெண்; வந்த விருந்தினை விசாரி யாமல் விலக்கிவிடுகிற குடி; சேரப்பட்ட திரவியமில்லாத குறை; சுக மில்லாத பெண்; இளமைபிரிந்த சரீரம்; சூரியன் ஒளிபொருந்தாத தாமரை; இவைபோல மெய்யறிவில்லாத உடலோடு அலைந்து திரிந்த எனக்கு, வேதங்கள் இன்னமும் தேடப்பட்ட உன் சீர்பாதங்கள் இரண் டுங் கொடுக்க நினைக்கும் நினைவு எந்த நாள்? இன்றைக்கே அருள்புரிய வேண்டும்.

தன்தன தானன தானன
தனதன தானன தானன
தனதன தானன தானன — தனதான

14. மகபதி யேதானு வேநிதி
தருமணி யேமேக மேயென
மகிமைக ளேகூறி நீடிர — வலராேனார்

வருபொழு தேனேனெ னாநகை
முகமுட னேயோடி வாருமின்
மனமது நாணாது கேளுமி — னெனவோதித்

தகைபெற வேவீசி மேலவர்
ப்ரியமது காணுது வாழ்விறு
சதிரிலி யாய்லோபி யாய்மிடி யனுமாகித்

தளர்வுறு மாபாவி யாகிய
வெனையடி யாரோடு மேதகு
தலைமையி லுலாளு நாளினி யொருநாளே

முகிலிணை நேரான மேனியும்
[1] அகிலமு ணுகார க்ரீவமும்
முறுவலு [2] மாபூரி தானுவும் மணிவாயும்

முகமுமி ராசீவ லோசன
யுகளமு நீணும ரேகையும்
முடிபுனை யாலோல மாலையும் இருகாதும்

அகலிய பூணார மார்பமும்
இகலிய வாசாணு வாகுவும்
அபிநவ வாரீச நாபியும் அரைஞாணும்

அதிவித பாதாதி கேசமும்
இளமையும் லீலாவி நோதமும்
அழகிய ராமாசு ராதிபர் பெருமாளே.

உரை :—கறுத்த மேக, தையொத்த திருமேனியும், சகலத்தையும் புசிக்கப்பட்ட சங்கையொத்த கழுத்தும், பல்வரிசைகளும், பெருமை பெற்ற பொன்னைப்போல் சிவந்த நாவும், பவளம்போல் சிவந்த வாயும் திருமுகமும், தாமரைப்பூவை யொத்த கண் இரண்டும், நீண்டுயர்ந்த திரு மண்ணிட்ட ரேகையும், சிரசிலே முடித்த வண்டுகள் சப்திக்கப்பெற்ற பூமாலையும், இரண்டு காதும், பொன்னுபரணங்களும் முத்துத் தாழ்வட முந்தரித்து அகலமான திருமார்பும், ஒன்றோ டொன்று எதிரிட்டுப் பகைத்து வளர்ந்ததுபோல நீண்ட கைகளும், தாமரைப் பூவை யொத்த இங்கிதமான திருவுந்தியும், அரைஞாணும் இப்படி அதிசயமான அழகு பெற்ற திருப்பாதங்கள்முதல் சிரசில் மயிர்வரைக்கும் அழகும் இளமையும் திருவிளையாட்டி னுடைய விநோதமும் அழகாக இருக்கப்பட்ட ஸ்ரீராமா; தேவர்கள் முதலாகியபேர்களுக்கும் பெருமாளே; "கர்த்தனை இந்திரனே, ஆதாரனே, திரவியத்தைத் தரும் சங்க நிதியே, பத்ம நிதியே, கொடையிலே மழைபெய்யும் மேகம்போலப் பொழிகிறவரே" என்று மகிமைகளைச்

(பி - ம்) 1. வலைகிக ரோான். 2. மாவேத.

சொல்லி, நெடிய தரித்திரரான பேர், வருகிறபோது சிரித்த முகத் துடனே என் என் என்று சொல்லிக்கொண்டு அவர்களுக்கு எதிரே யோடி, "வாருங்கள், மனதில் லச்சைப்படாமல் கேளுங்கள்" என்று சொல்லி, அவர்கள் வறுமை நீங்கி வாழ்வு வரத்தக்கதாக வேண்டியவெல் லாங் கொடுத்து, அவர்கள் சந்தோஷத்தைக் காணுமல், செல்வம்போன திறமில்லாதவனுகிக் கொடாத லோபியாகித் தரித்திரனுமாகித் தளர்ந்து இளைத்த மகாபாவியான என்னை யுன்னுடைய அடியவர்களுடனே கூடு கிறபடிக்கு என் மனதுக்குத் தகுமான முதன்மையினுலே அடிமை கொண்டு ஆளப்பட்ட நாள் இனி ஒருநாளிருக்கிறதோ? இப்போதே தயவு செய்ய வேண்டும்.

மாபூரி—பெருமைபெற்ற பொன் ; அதுபோன்ற நா என்க.

தானன தனந்த தத்த தனன
தானன தனந்த தத்த தனன
தானன தனந்த தத்த தனன தனதான

15- தாதையெ னுமுந்தி வித்தி னையொரு
தாய்வயி றெனுந்த னிப்பு லமிசை
தாழ்வற முயன்று வித்தி யுமது பயிராகச்
சார்வினை களென்று முற்பெ ருகிய
நீரினை யறிந்து கட்டி யுநெடி
தாய்மிக வளர்ந்து முற்றி யவழி விளைவு-னோர்
தூதரோ டுவந்தி றுத்தி றுகிய
பாசம துகொண்டி ழுத்தொ ழிவறு
தூரம னைசென்று புக்கெ ரிவிழி முதுகாலன்
சோபன முடன்பு சித்தி டும்வகை
யாகிய பெரும்பி றப்ப றவொளிர்
தூயப தபங்க யத்தொ ருதினம் அடைவேனே
பாதமி சைதண் டையொப்ப னைசெய்து
மேதகு சதங்கை கட்டி யுமறை
பாடுமொ ருகிண்கி ணித்தி ருவரை [1]ய துசேரப்
பாணிகி ரிசங்கு றப்பு லியுகிர்
தாழ்வட முரம்பொ ருத்தி யுமிரு
பாரகு ழைகுண்ட லப்ர பையெழு முடிமீது

(பி - ம்) 1. வடமவிரப்.

கோதைமலர்கொண்டை சுற்றி யநுதல்
நாமமொ டுசுந்த ரப்பொ டியது
கோலியு மிலங்கு சுட்டி யுமதன் நடுநாலக்

கூரெழில் முகந்தி ருத்தி யுமுடை
ஆடையை விசிந்து டுத்தி யுமுயர்
கோசலை யலங்க ரித்தி டவளர் பெருமாளே.

உரை:—சீர்பாதங்களின் மேலே தண்டையை யலங்காரமாகத் தரித்து மனம்பொருந்திய சதங்கையைக்கூடக் கட்டியும் வேதங்களைப் பாடப்பட்ட ஒப்பில்லாத கிண்கிணித் தாவடமானது திருவரையிலே கட்டிப் பிரகாசம் விஞ்ச, திருக்கைகளிலே வளையாகிய ரத்தினம் பதித்த காப்பு இருக்க, புலிநகந் தங்கிய தாவடத்தைத் திருமார்பிலே பொருந்தத் தரித்தும், இரண்டு காதிலும் பாரமான குண்டலமிருந்து ஒளிவீசச் சிரசின் மேல் பூமாலையைக் கொண்டையிலே சுற்றியும், நெற்றியிலே திருமண் இட்டு அத்துடனே சிவந்த குங்குமப் பொடியை வளையமாகப் பூசியும், பிராகாசிக்கப்பட்ட சுட்டியைத் திருமண்ணுக்கும் திலகத்துக்கும் நடுவே தொங்கவிட்டுக்கட்டியும் மிகுந்த அழகுள்ள திருமுகத்தை இந்த அலங்காரஞ்செய்து திருத்தியும், உடுக்கப்பட்ட வஸ்திரம் இறுக்கி யுடுத்தியும் இந்த விதமாகக் கீர்த்தியினாலே, உயர்ந்த கோசலாதேவி அலங்கரிக்கத் தத்தடியிட்டு வளரப்பெற்ற பெருமாளே; தகப்பனுடைய உந்தியிலிருந்த சுக்கிலமாகிய விதையைத் தாயின் வயிறென்னும் ஒரு புலத்தினிடத்தே தாழ்ச்சியில்லாமல், உழவு முதலான பியாசைப்பட்டு விதைத்தும் அது பயிராக முந்திய பிறப்பிலே அநுபவித்து அதிகமாக நிலுவை நின்ற இந்தப் பிறப்புக்கு அநுபவப்படுத்தவந்த பாப புண்ணியமான காரியங்களென்று செல்லப்பட்ட, முன்னே பெருக்கிக் கட்டிவைத்திருக்கிற ஜலத்தை யளவறிந்து பயிருக்கு விட்டுக் கட்டியும், அந்தப்பயிர் நீளமாய் மெத்த வளர்ந்து முற்றிப் பழுத்து விளைவாகிப்போனால், பயிரிட்டவன் வந்து அறுத்துக்கொண்டு போய்க் குற்றிச் சமைத்துப் புசிக்குமாறு போல, பெரிய தூதரோடே வந்திறங்கி இறுக்கப்பட்ட பாசத்தைக் கொண்டு இழுத்து நடந்து தொலையாத வெகுதூரமான தன் வீடான மேல் லோகத்திலே, சேர்ந்து புகுந்து நெருப்புப்போன்ற கண்களையுடைய பெரிய யமன் சோபனமான கலியாணச் சந்தோஷத்துடனே புசிக்கிற கையாகிய நரக உபாதிப்படுத்துகிற பெரிய பிறப்பு இனியில்லாமல் அற்றுப்போகப் பிரகாசமும் சுத்தமுமுள்ள தாமரைப் பூவையொத்த உன்னுடைய சீர்பாதத்திலே ஒருநாள் சேருவேனோ? சொல்லவேண்டும் சுவாமி.

தானன தத்தந் தனதன
தானன தத்தந் தனதன
தானன தத்தந் தனதன தனதான

16. வேதனை முற்றும் பெருகிய
மாயவு டற்பைங் குளமிசை
வீசுவ லைத்திண் கயிறுகொ டுயிராகும்
மீனடை யப்புண் படவொரு
காலனி ழுக்கும் படிபடி
மீதினு ழைக்கும் பிறவியி தமையாதோ
போதொடி ருக்கும் பரிமள
வாசமெ னப்பொன் கிளரொளி
போலுமெ னச்செஞ் சொலினுறு பொருள்போலப்
போதம ணக்குந் திருவடி
மீதுக ருத்தொன் றிடவநு
பூதிப டைக்கும் பரகதி யருள்வாயே
நாதமு றத்தண் டைகள்பல
கீதமெ ழுக்கிண் கிணிமணி
நாவசை யத்தண் டுளவள வியமாலை
நாலவு டுக்குஞ் சிறுதுகில்
சோரமி ழற்றுங் குதலைகள்
நாவுத ரத்தும் பிகளுடன் மலர்சூடும்
கோதைநெ கச்சிந் துரநுதல்
வேர்வைத ரக்குண் டலவொளி
கூரமு கத்தின் ப்ரபையெழ மறைநாலுங்
கூடிவ ரச்செந் தளிர்நடை
கால்பத றத்தம் பியரொடு
கோசலை முத்தங் கொளவரு பெருமாளே.

உரை :—தத்தடியிற்பற்றி நடக்கிறதனாலே தண்டைகள் சப்திக்க, அரைக் கிண்கிணிகள் பலராகம் எழுப்ப, மணிகள் நாவசைந்து ஒலிக்க, குளிர்ந்த திருத்துழாயை வளமாகக் கட்டின மாலைதொங்க, உடுக்கப்பட்ட சிறிய வஸ்திரம் நழுவ, நாவிலேயிருந்து புறப்படுகிற சொல் கொஞ்சிக் குளறிப் பிறக்க, வண்டுகளுடனே பூவைச் சுற்றிக் கட்டினமாலை தளரச்

சிவந்த திலதமிட்ட நெற்றியிலே வேர்வை பிறக்க, காதிலுள்ள குண்டலம் ஒளிவீச, திருமுகத்தினுடைய பிரகாசம் எழும்ப, நாலுவேதமுங் கூடிவர, மாமரத்தினுடைய சிவந்த தளிர்போன்ற பாதங்கள் நடை பதற, பரத, லட்சுமண, சத்துருக்கின ராகிய மூன்று தம்பிகளுடனே கோசலாதேவி முத்தங்கொள்ளத் தக்கவாறு வரும் பெருமாளே; சகலவிதமான உபாதியுமாகிய நீர்பெருகிய மாயமாகிய சரீரமென்னும் ஈரமுள்ள குளத்தினிடத்தில் வீசப்பட்ட வலையாகிய கெட்டியான பாசத்தைக் கொண்டு சீவனை மீன் சேர்ந்து கூடத்தக்கதாகப் புண்ணை ஒரு யமன் இழுக்கும் பூமியினிடத்தே யுழைக்கும் இந்தப் பிறவி போதாதோ? பூவோடு கூடிய பரிமளம் போலவும், பொன்னி லெழும்பிய சோதிபோலவும், செம்மையான சொல்லிலிருக்கும் பொருள்போலவும், ஞானத்தினாலே மணக்கப் பட்ட அழகிய சீர்பாதங்களின் மேலே என்னுடைய எண்ணம் ஒருமைப் பட, அநுசரித்த செல்வத்தைப் படைத்த பரமபதத்தை அருள் செய வேண்டும்.

தானதன தானன தனதனனா
தானதன தானன தனதனனா
தானதன தானன தனதனனா தனதான

17. ஓடுநதி சேர்மித வைபின்வருமோ
நீரைவிட வேகுமு தமுமெழுமோ
ஓடைவடி வாய்வர வரவதன்மீன் மறைபோமோ

ஊணினொடு போவது பசியலவோ
தீபவொளி தானறு நெயினளவே
ஆகையுறு மோவிலை மகண்மனநேர் பொருள்பேணல்

நாடிவிடு மேநிழ லவர்பிறகே
[1] நாயகனொ டேகுப மழிவிலையோ
நாயிருடு போய்வெயில் விழிவிலையோ இவைபோலே

நாளினுட னேயுயிர் செலுமினிநீ
நாளையெனி லோவச மலவுடனே
ஞானநிலை சேர்பர கதியுறுமா றருள்வாயே

நீடுமுகி லேயென துகண்மணியே
ஞானவடி வேரகு குலபதியே
நீலமலை யேதய ரதன்மகனே வெயர்வார

(பி - ம்) 1. தீபநுனி நேயதிரி தொடர்விலையோ.

நீர்கள்சொரி கோநுகர் வனதரவோ
நாமமிட வோதுயில் கொளவிடவோ
நீதியிணை யோருழை கொடுசெலவோ மடிகோலி

ஆடைபுனை கோவரை வடமணிகோ
கோதைசொரு கோகுறை யிலையிடவோ
ஆழிவிரல் மோதிர நிரைசெருகோ நினைவேதென்(று)

ஆரவணை யாமுலை யமுதருளா
நேயமுறு கோசலை மடிமிசைசீ
ராடுமர சேயயன் முதலிமையோர் பெருமாளே.

உரை :—கோசலாதேவி ஸ்ரீராமனுடன் சொல்லுவது ; நீளமான கறுத்த மேகம்போலத் திருமேனி யுள்ளவனே, என் கண்மணியே, ஞான சொரூபனே, ரகுமரபுக்குத் தலைவனே, நீலமலைபோலும் மேனியுடைய வனே, தசரதன் மைந்தனே ; உனக்கு வேர்வை யடங்க நீர்சொரியவோ? உண்ணும் இனிய பொருள்கள் தரவோ? திருமண் இடவோ? தூங்குவ தற்குப் பூமெத்தையில் இடவோ? நீதியுள்ள தம்பிமாரிடம் எடுத்துச் செல்லவோ? மடிகோலிவிட்டு அரையிலே துணிகட்டவோ? முத்து வடங்களை யணியவோ? மாலையைத் தலை மயிரில் செருகவோ? உனக்கு இடுவதற்கு ஒன்றும் குறைவில்லை ; விரல்களில் மோதிரங்களை அணிய வேணுமோ? உன் நினைவு என்ன? என்று சொல்லி, மார்போடழுத்தி யணைத்து முலைப்பால் குடிக்கக் கொடுக்கும் அன்புள்ள கோசலையின் மடி மேல் சீராட்டப்பட்ட தலைவனே, பிரமன் முதலிய தேவர்கட்குப் பெரு மாளே ;

ஓடும் ஆற்றிலே சேர்ந்த மிதப்பானது நீர் ஓடும் நேரே ஓடுமல்லது எதிரேறி வருமோ? நீரில் அல்லி, ஆம்பல், தாமரை முதலியவை ஓங்கி யெழுமே யல்லாது, நீரற்ற மண் கல் முதலான இடங்களிலே யெழுமோ? நிறையக் கட்டப்பட்ட நீரோடை, நீர்வற்றி வரவர, அதிலுள்ள மீன் ஒளித்துப் போமோ? தெரிய நிற்குமோ? உணவு உண்டவுடன் பசி போகு மல்லாமல் இருக்குமோ? விளக்கொளி, மணமுள்ள நெய் யிருக்குமட்டு மல்லாது நெய்யில்லாவிடில் எரியுமோ? செல்வம் போய்விட்டால், அந்த வறிஞனை உடலை விற்கிற கணிகையின் மனம் மகிழுமோ? விளக்கின் மூக்கின் நுனியிலே யிருக்கும் நெய்யைத் திரிதொடர்ந்து எரியுமே யன்றி நெய்யை யிழுத்து வாங்காமல் எரியுமோ? ஞாயிறு மறைந்தால் வெயிலும் கூடப் போமேயன்றி வெயில்மட்டும் இருக்குமோ? இவைபோல வாணாள் ஆகிய ஆயுள்போனால் அதனுடன் உயிரும் போமேயன்றித் தனித்திருக் குமோ? இப்படி நிலைமையில்லாத எனக்குப் பரமபதம் நாளை தருகிறோ

மென்றால், உயிர் என் வசமன்று ; இப்பொழுதே நிலையான ஞான நூல்களாற் சொல்லப்படும் பரமபதத்தை அடையத்தக்க வழி செய்யவேண்டும்.

தந்த தனன தனனு தனனதன
தந்த தனன தனனு தனனதன
தந்த தனன தனனு தனனதன தனதான

18. தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய வுடல்போய் வளையவுடை
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்

தொண்டு கிழவ னிவனு ரெனவிருமல்
கிண்கி ணெனமு னுரையே குளறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி

வந்த பிணியு மதிலே மிடியுமொரு
பண்டி தனுமெய் யுறவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகி துயர்தானும்

மங்கை யழுது விழுமோ சையுநமனு
நின்று சருவ [1] மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே கருடன்மிசை வரவேணும்

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகவே வருகவினி
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராமா

இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல [2]வருபோதில்

சிந்தை யுருக வரைஞா ணெகிழவளர்
குஞ்சி யலைய நுதல்வேர் வசையவிரு
செங்கை மருவு கிரிதாழ் வடமசைய மணிவாய்நீர்ச்

சிந்தி யொழுக நகையே பெருகவொரு
தம்பி தொடர முதிரா நடையொடவள்
செம்பொன் மடியி னினிதே றியகரிய பெருமாளே.

---

(ப்ர - ம்) 1. மனமே சிதற. 2. விளிபோதில்.

உரை :—கோசலா தேவியானவள் ஸ்ரீராம சுவாமியைக் கூப்பிடு கிறது. எங்கள் தகப்பனே வா, ரகுவம்சநாயகா வா, மகனே வா, பிள் ளேயே வா. இனி என் கண்ணே வா, நிறைந்த என் சீவனே வா, அழகா கிய ரகுராமா இங்கே வா, அரசே வா, முலேகுடிக்க வா, பூமாலேசூட வா, என்று சொல்லி அன்போடே கோசலாதேவி நடந்து நடந்து கூப்பிடுகிற பொழுதிலே நீ உன் சித்தமிளக அரையிலேகட்டிய கயிறு தளர, வளரும் தலேமயிர் அலேய, நெற்றியிலே வியர்வை யடைய, சிவந்த இரண்டு கைக ளிலும் சேர்ந்திருக்கும் இரத்தினம் பதித்த கொலுசு அசையப் பவளம் போலச் சிவந்த திருவாயிலிருந்த நீரொழுகிச் சிந்த, ஒருதம்பியாகிய லட்சு மணன் தொடர்ந்துவர, சீக்கிரமான நடையுடனே அவளுடைய சிவந்த பொன்மடியாகிய பீதாம்பரப் புடைவைகட்டிய மடியிலே இன்பமாக ஏறப் பட்ட நீல நிறமான பெருமாளே ; வயிறு சரிந்து தொங்க, மயிர் வெளுக்க, ஒழுங்கா யிருக்கிற பல்லசைய, நிமிர்ந்திருந்த சரீரம் நெறிப்புப் போய்க் கூனுக வளேய, அரையிலுடுத்த புடவைநெகிழ, ஒருகை தடிமேலே பிடித்து நடந்து வரக்கண்ட பெண்கள் சிரித்துப் பழையகிழவன் இவ னுரென்று ஒருவருக்கொருவர் பேச, கிணின் கிணினென்று சப்தித்து இருமி (ப்பேச) முன் யௌவனத்திலே நன்ருய்ப் பேசினபேச்சு இப் பொழுது குளற, கண்ணுனது தூங்கினுற்போல மூடிக்கொண்டு குருடு பட, செவிடுபட்டுக் கேளாத காதுகளாக, வந்த வியாதியும் அதிலே தரித் திரமும் ஒருவயித்தியனும், சரீரத்தை வருத்தப்பட்ட வேதனேயும் இளமை யுடைய பிள்ளேகள் இருக்கிற உடைமை யென்ன ? பட்ட கடனென்ன ? என்று முடுகி அவசரப்படுகிற துக்கமும், பெண்சாதி யழுது விழப்பட்ட சப்தமும்கூட, சமயமாச்சுதென்று யமனும் நின்று சமயம் பார்த்துத் திரிய மலமும் ஓடி ஒழுக, சீவன் குறுகுகிற வேளேயிலே சீக்கிரமாகக் கருடன் மேல் வந்து பரமபதம் தரவேண்டும்.

தனத்தன தாத்தா தத்தன தந்தன
தனத்தன தாத்தா தத்தன தந்தன
தனத்தன தாத்தா தத்தன தந்தன தனதான

19. கதிர்த்தகு டைக்கீழ் முற்படு தண்டிகை
எடுத்தத லேப்பா ரக்கரி யின்[1] செறி
கழுத்திலி ருப்பார் [2] பித்திகை யின்புற மசைவார்தம்
கனத்தபொ ருட்போய் மெத்தமு றிந்துதம்
உடைத்துகி லற்றே வட்டக ருந்துணி
கடுக்கியு டுத்தே வெட்குதல் [3] கிஞ்சிலும் இலராகிப்

(பி - ம்) 1. சிறு. 2. எத்திகை. 3. கொஞ்சமும்.

பதைத்துந டுக்கா மற்றொர்பு றங்கடை
மிதித்திடர் பட்டே [1] பொக்கண முங்கொடு
பசித்தன மப்பா பிச்சையி டென்றுயிர் தடுமாறிப்

[2] பரிப்ரவ முற்றே நிற்பது கண்டுமொர்
[3] கடைப்பிடி யற்றே கெட்டம னங்கன
பணத்தைம கத்தா கக்கரு துந்துயர் ஒழியாதோ

இதத்தொடு சுற்று [4] நற்றறி தம்பியர்
நிழற்சுவ டொத்தே நட்பின ணைந்திட
எடுத்து வளர்த்தே நற் [5] சவு ளங்கொடு உபவீதம்

எனைத்துமி யற்று வற்பகல் சந்ததம்
நிலைப்பிரி வுற்றே கைக்கொடு முந்திய [ளின்
இயற்கைம னுப்போல் கொற்றவ னின்புற வளர்நா

மதிக்குவி ளக்காய் மிக்ககு ணங்களொ
டுயிர்க்குயி ரொத்தே யுட்புற மெங்கணும்
மயக்கற வுற்றே முற்றுமு ணர்ந்தும துணராய்போன்

மறைபொருள் விக்ஞா னத்தடை வென்பது
[6] படித்திடு சொற்கீ தத்தொட டங்கனும்
வசிட்டனி டத்தே கற்றுவி ளங்கிய பெருமானே.

உரை :—ஸ்ரீராமா ; இதத்தோடே உன்னைச் சுற்றிக்கொண்டு நல்ல மூன்று தம்பிமாரும், உன்னுடைய நிழலே மூன்று சரீரமெடுத்த அடையாளம்போல அன்பினாலே கூடியிருக்க உங்கள் நாலுபேரையும் எடுத்து வளர்த்து ஏழுவயதான பிறகு நல்ல சவுளங்களுடனே, உபநயனம் பூண் நூல் முதலான சகல ராசதர்மங்களும் செய்து, இரவு பகல் இடைவிடாமல், நிலையாய்ப் பிரியாமல் கையிலே கொண்டு இராசவம்சத்துக்கு முதலான சுபாவ குணமுள்ள மனுவை யொப்பான தசரதமகாராசர் இன்பமடைய வளருகிற நாளிலே, புத்திக்கு விளக்குப்போலக் கொழுந்து விட்டெழும்பிய சோதியாக, மிகுந்த சாத்துவிக குணங்களுடனே சகல சீவனுக்கும் சீவனைப்போல உள்ளும் புறமும் எவ்விடங்களிலும் மயக்கம்போக விருந்து, சகலமுந் தெரிந்தும் அவைகளொன்றையும் அறியாதவர்போல் வேதப் பொருளையும் விஞ்ஞான சுருபத்தையும் அடிமுதல் முடியுறப் படிக்கப்

(பி - ம்) 1. யச்சமுளங். 2. பதைப்பர்த வித்தே. 3. நிலைப்பரி வுற்றே கெட்ட மனம் பெறு. 4. வத்திரி. 5. சவு ளங்களொ 6. படைத்திடு.

பட்ட சத்த சாத்திரம், கீதம் இவைகள் முதலானவைகளை யெல்லாம், குலகுருவான வசிஷ்டமகரிஷியி னிடத்தில் பனிரெண்டு வயதுக்குள்ளே கற்று விளங்கும் பெருமாளே ; சந்திரகிரணம்போல வெள்ளையான குடையின்கீழ் முதன்மைபெற்ற தண்டிகையிலே இருப்பார்; உயர்ந்து எடுப்பாய் இருக்கிற பாரமான தலையையுடைய ஆனையின் நெருங்கிய கழுத்திலே யிருப்பார் ; உப்பரிகையிலே உலாவுவார் ; இப்படி அரசாளும் மேலான செல்வத்தையுடைய அரசர்கள், கனமான, அளவில்லாத சகல திரவியங்களும் போய், மெத்தவும் முறிந்து, தங்கள் அரையில் உடுப்பதற்குப் புடைவையில்லாமல் இழையுறுந்து கிழிந்த கரித்துணியைச் சீக்கிரமாக அரையிலே யுடுத்து, கொஞ்சமும் லஜ்ஜைப்படுகிறது இல்லாத பேராகி, யாரென்ன சொல்வார்களோ? என்று சரீரம் பதைத்துப் பசி, தாகம், குளிரினாலே நடுக்கெடுத்து, வேறொருத்தனுடைய வாசலிலே மிதித்துத் துன்பப் பட்டுப் பொக்கணத்தைத் தோளிலும் கையிலும் போட்டுக்கொண்டு, பசித்தோ மப்பா, பிட்சையிடு என்று சொல்லிச் சீவன் தடுமாறி எளிமையாய் நிற்கிறதை நான் கண்டும், மறவாத கெட்டியான பிடியற்றுக் கெட்டுப்போன என் மனமானது, கனமுள்ள பணத்தை மகத்தாக எண்ணும் துக்கம் ஒழிந்து போகாதே ? ஒழித்து ரட்சிக்க வேணும்.

பொக்கணம் - பிச்சைவாங்கும் பை.

தான தந்தன தந்தன தந்தன
தான தந்தன தந்தன தந்தன
தான தந்தன தந்தன தந்தன

20. மாலை கொந்தள பந்திபு னைந்துபொன்
ஓலை [1] புங்கு ணிங்கெதிர் கொண்டிட
வாடு கின்றம ருங்கின ருங்கலை யதுசோர

வாண்மு கம்ப்ரபை கொண்டொளி சிந்துர
ரேகை மூந்துவு ரைந்துத னங்களின்
வாச குங்கும சந்தகி லிங்கித மொடுபூச

மேவி லங்குக ரும்புரு றுங்கொடி
தோள மூந்தந லஞ்செய்து மென்பத
மீது தண்டைசி லம்புசெ றிந்தினி உமதாயம்

மேவு ; நம்பதி யிங்கினி தென்றிறை
சோலை யிண்கண கன்றிட லென்றுவ்ரு
தாவில் வுஞ்சகர் முன்சொலி யென்றமிழ் கெடலாமோ

(பி - ம்) 1. ஓலை யிண்கண ணிந்து.

நீல மஞ்சுவி ளங்கிய பங்கய
மான கண்கைமு கஞ்சர ணங்கொடு
நீணி லந்தனில் வந்துபு குந்தன அழகாகி
நேச மும்பரி வும்பெறு தம்பியர்
மூவ ரும்புடை நின்றும கிழ்ந்திட
நேரின் மங்கையர் சிந்தைநெ டுங்கனன் மெழுகாகக்
கோல வெஞ்சிலை கொண்டுபு றங்கடை
மீதி னின்றுநி ரந்தர முங்களி
கூரு மைந்தரு டன்சர சஞ்செ லி விளையாடிக்
கூனி நெஞ்சினில் வஞ்சம்வி ளைந்திட
மேனி கன்றிய லைந்திட வங்கவள்
கூனி மிர்ந்திட வுண்டைது ரந்தருள் பெருமாளே.

உரை :—கறுத்த மேகமானது, விளங்கப்பட்ட தாமரை பூத்த பூவான கை, கண், முகங் காலென்று ரூபங்கொண்டு நீண்ட பூமியில்வந்து புகுந்ததுபோல அழகாகி, ஆசையும் அன்பும்பெற்ற மூன்று தம்பிமாரும் பக்கத்திலே நின்று மகிழ்ச்சியடையப் பட்டணத்திலே யிருக்கிற ஒப்பில்லாத பெண்களின் மனம் செழிப்பாய் எரியும் நெருப்பிலே விழுந்த மெழுகு போல் உருக, அழகுங் கொடுமையுமுள்ள வில்லைக் கையிலே பிடித்துக் கொண்டு, புறம்பான வாசலிலே நின்று தினந்தினமுங் களிப்பு மிகுந்த சிநேகமான பிள்ளைகளுடனே, சரசம்பேசி விளையாடிக் கூனியினுடைய மனதில் வஞ்சம்விளைய, அவள் சரீரம் நொந்து தள்ளாட, அங்கே அவள் கூன்நிமிர உண்டையை ஓடவிட்டருளிய பெருமாளே ; கொண்டையிலே சாத்தி ஒழுங்காகப் பூமாலையைத் தரித்து, காதினுடைய துளையிலே பொன்னோலையும் காதாபரணங்களுந் தரித்துத் துவளும் அரையிலே விலை பேச அரிதான புடவை எதிரே சோர்ந்து நழுவ, ஒளிதயங்கிய முகத்திலே திலகம் முதலியவை யிட்டு, முலைகளிலே மணமுள்ள குங்குமம், சந்தனம், அகில் இவைகளைக் கலந்த கலவைக் குழம்பை இங்கிதத்தோடே பூசி மணத்த பூங்கொடிபோல அழகுள்ள பெண்ணி னிடத்திலே, பிரகாசிக்கும் கரும்பை யொத்துக் கைகளிலழுந்த நல்ல ஆபரணங்களைத் தரித்து மெல்லிதான காலின்மேலே தண்டை சிலம்பு நெருங்கக் கட்டி, "இனி யும்முடைய தோழிப்பெண்கள் கூட்டம் சேர்ந்திருக்கிற இடத்தை அடைக ; நம்முடைய பட்டணம் இன்பமாய் அண்மையில் இருக்கு"மென்று, நாயகன் சோலையிடத்தை விட்டுப் போகாதேயென்று நாயகியைப் பார்த்துச் சொல்வதுபோல, விருதாவிலே வஞ்சகர் முன்னே, அகப்பொருளென்கிற நூலின் வழியே பாடுகிற கோவையைச் சொல்லி என்னுடைய தமிழ்

கெட்டுப் போகலாமோ? அப்படிக் கெடாமல் உன்னைப் பாடத்தக்கதாக அனுக்கிரகம் பண்ண வேணும்.

(ஏற்புறவணிதல், இடமணித்து என்றல், ஆயத்துய்த்தல் என்னும் துறைகள் மூன்றும் ஒரு சேர இப்பாட்டில் அமையப் பாடியிருத்தல் காண்க.)

சிலம்பு செறித்து என்பது சந்த இன்பம் நோக்கிச் செழிந்து என மெலிந்து நின்றது.

தானன தான தந்த
தானன தான தந்த
தானன தான தந்த தனதான

21. வேதமெ லாமி றந்து
பூதமெ லாமொ டுங்கி
வேலையெ லாமெ ழுந்து பிரமாவும்

வேறுள தேவ ரும்பொய்
[1] போலவெ லாம ழிந்து
வீடுறு கால மந்தண் வடமீதே

சீதள மார்கொ ழுந்தின்
ஓரிலை யூட மர்ந்து
[2] ச்யாமள பால னென்றோர் வடிவாகிச்

[3] சீரிய பாணி கொண்டு
வாயிதழ் கோலி மென்ற
சேவடி காண வென்று பெறுவேனோ

மாதவ மாமு குந்த
சீதர தேவ ரங்க
வாமன நார சிங்க மணிவாழும்

மார்பவ ராக முந்து
[4] கூருமெ நீள்வை குந்த
வாழியெ னுவி றைஞ்சி மலர்தூவிக்

கோதறு தேவர் கண்டு
வாழ்வுற வீதி நின்று
கூனியொர் கூனி லுண்டை விடுவோனே

(பி - ம்) 1. லோகமெலா. 2. சீரிய. 3. சிறிய. 4. கூர்மவ தார துங்க மாயவெ,

கோமள மான [1] துங்க
ராகவ ராம சந்த்ர
கோசல நாட வெங்கள் பெருமாளே.

உரை :—உன்னுடைய திருவிளையாடலைத் தேவர்கள் கண்டு மாதவா, பெரிய முகுந்தா, சீதரா, தேவா, அரங்கநாயகா, வாமனா, நாரசிங்கா, கவுத்துவ மாணிக்கந்தங்கின திருமார்பா, வராகாவதாரா, தலைமையுள்ள கூர்மாவதாரா, நீண்ட வைகுந்தா, செயம்செயம் என்று தோத்திரம் பண்ணி, வணங்கிப் புஷ்பவருஷம் பொழிந்து, வாழ்வுபெறத் தக்கதாக வீதியிலே நின்று, கூனி சரீரத்திலிருக்கும் கூனில் ஒரு உண்டையைத் தெரிந்து விடப்பட்டவனே, இளமையும் அழகுமுள்ள கோமள ரூபமான உயர்ந்த ராகவா, ஸ்ரீராம சந்திரா, கோசலதேசத்துக்கு ராசாவே, எங்கள் பெருமாளே ; எல்லா வேதங்களு மிறந்து, ஐந்து பூதங்களும் அழிந்து, ஏழு சமுத்திரங்களும் ஒன்றாய்க் கலந்து, பிரமாவும் வேறே யுண்டான தேவர்களும் மெய்போலிருந்து, இவையெல்லாம் பொய்போலே யழிந்து, நாசமான பிரளய காலத்திலே அழகுங் குளிர்ச்சியுமுடைய ஆலமரத்தின் மேலே குளிர்ச்சி நிறைந்த கொழுந்துகளிலே ஒரு கொழுந்தினுடைய நடுவே யின்பமாகப் பள்ளிகொண்டு பச்சைக்குழந்தையென்று சொல்லப் பட்ட ஒரு ரூபமாகிச் சிறப்பாய் இருக்கிற கையை வாயிலே வைத்துக் கொண்டு, வாயின் உதட்டிலே விரலை வளைத்து மென்றுகொண்டு கிடக் கிற உன்னுடைய சிவந்த சீர்பாதங்களைத் தரிசிக்க எப்போது பெறு வேனோ? நீ எப்போது அநுக்கிரகம் பண்ணுவாயோ ? சொல்லவேண்டும்.

தானன தனதன தந்த
தானன தனதன தந்த
தானன தனதன தந்த தனதான

22. கோயிலெ ணவுரைய ரங்க
நீரக மழிசை குடந்தை
[2] கோயிலி னிடைகழி யன்பில் உறையூர்பேர்

கூடல்விண் ணகர்குண மங்கை
காரகம் வடமலை பொன்செய்
கோயில்க ணபுரம ழுந்தை புலியூர்நீர்

வாய்வட மதுரைகு ளந்தை
நீர்மலை கடிமலை தஞ்சை
மாமணி தொலைவிலி மங்கை நறையூர்கார்

(பி - ம்) 1. கங்கை வேணிச தாவு கந்து கூறுமி ராம மந்த்ர. 2. கோவ. 6.

வானம்வெள் ளறைதிரு விந்த
ளூர்கடி நகரெனு மிந்த
மாநகர் தொறுமுனை வந்து தொழுவேனோ

ஆயுத வகைகள் பயின்று
நீள்கலை யடையவி ளங்கி
ஆரண மெனவளர் கின்ற திருநாளில்

ஆடிய சடையுமெ லிந்த
மேனியு மருவிய தண்டும்
ஆசறு கரகமு மென்று முளனாகிச்

சேயொளி கிளரந டந்து
கோசிகன் வருவது கண்டு
தேறுத லறமன மஞ்ச வெதிரேபோய்த்

தீதறு முனியைவ ணங்க
பூபதி தசரதன் முன்செய்
சீரிய தவமென நின்ற பெருமாளே.

உரை :—பன்னிரண்டு வயதுக்குள்ளே ஆயுதவகைகளி லெல்லாம் பழகி, நீண்ட வேதசாஸ்திரங்கள் எல்லாம் விளங்கத்தெளிந்து, நாலுபேரும் நாலு வேதமென்று சொல்ல வளருகிற நாளில், ஒருநாள் அசைந்தாடு கிற சடையும், மெலிந்த சரீரமும், கையில் சேரப்பிடித்த தடியான தண் டும், குற்றமற்ற கமண்டலமும் அன்புமுள்ளவனாகி, சரீர காந்தி யெழும்பி வெகுதூரம் பிரகாசிக்க நடந்து, கோசிகனென்று பெயரையுடைய விஸ்வா மித்திர மகாரிஷி வருகிறதைக்கண்டு இன்ன காரியமாய் வருகிறாரென்று தெளிந்து கொள்ளாமல் மனதிலே பயந்து, எழுந்துபோய்ப் பொல்லாங் கொன்று மில்லாத அந்த ரிஷியை வணங்கப்பட்ட தசரத மகாராசா முன் செய்த சிறப்புப்பெற்ற தவப்பல னென்ன நின்ற பெருமாளே ; திருக் கோயி லென்று பெரியோர்கள் சொல்லப்பட்ட ஸ்ரீரங்கம், நீரகம், திரு மழிசை, திருக்குடந்தையாகிய கும்பகோணம், திருக்கோயி லிடைகழி, திரு அன்பில், உறையூர், பெரிய திருக்கூடல், திருவிண்ணகரம், சீகாழி, திருக்கண்ணமங்கை, திருக்காரகம், திருவேங்கடம், அழகுசெய்யப்பட்ட கோயிலையுடைய திருக்கண்ணபுரம், திருஅழுந்தூர், சிறுபுலியூர், சலத்தி னாலே செழித்த வடமதுரை, திருக்குளந்தை, திருநீர்மலை, திருக்கடிமலை, தஞ்சாவூர், பெருமையுள்ள ரத்தினந்தொலையாத திருமங்கை, திருநறை யூர், திருக்கராவணம், திருவெள்ளறை, திருவிந்தளூர், திருக்கடிநகர், இப் படிப் பேரிட்டுச் சொல்லப்பட்ட இந்தப்பெரிய திருப்பதி யெல்லாம் இருக்கிற உன்னைவந்து வணங்குவேனோ ? மாட்டேனோ ? சொல்லும்.

தனதன தாந தனந தானந்
தனதன தாந தனந தானந்
தனதன தாந தனந தானந் தனதான

23. உரையறி யாதே சிலநாள் போயும்
சிறுமக வாயே திரியா மேலங்
குறுகலை தேரா நெடுநாள் போயும் பொருள்மீதே

உளமது நாடா வகையயே தேடுங்
கவலைவி டாதே தனவா னுய்நின்
றுயர்குடி வீடாய் மடவார் போகம் தலையாயும்

பொருளது போயே வறியே னுயும்
பிணியத னாலே மெலிவே யாயும்
பொறியனல் போலே பசியே மூளுந் துயராயும்

புதுநரை காணு வுடல்கூ னுவெங்
கிழவனு மாயே யவமே போமென்
பொழுதுபி ரானே பிறவா வாழ்விங் கருள்வாயே

அரசர்பி ரானே வரவே கேளுன்
புதல்வனை நீதா வவனு லேயங்
கனலவி யாதே மகமீ டேறுந் தவமேயா

மதிசய வாழ்வே யுளதாம் வேறும்
பலபுகழ் பேறும் விடுவே னேநொந்
தசடுப டாதே யறிவா யேயென் குணம்யாவும்

தருதியெ னுநீ டுலகீ ரேழும்
பிறிதருள் மேலோ னுரையா டாவஞ்
சகமற நேரே கொடுபோ வான்வந் திடலோடுந்

தரணியில் வீழா நிலைசோ ராநொந்
துடலது வேரா முனிதாள் சூடுந்
தயரதன் வாழ்வே ரகுநா தாநம் பெருமாளே.

உரை :—விசுவாமித்திரர் சொல்லுகிறார் ; "ராசாக்களுக் கெல்லாம் ராசாவே, என்வரவு கேள் ; உன்னுடைய மூத்தபிள்ளையை எனக்கு நீ கொடு ; அவனாலே தவம்செய்யும் அந்த விடத்திலே ஓமாக்கினி யவியாமல் யாகம் நிறைவேறும் ; என்தவம் நிறைவேறும் ; உன் பிள்ளைக்கு அதிசயமான செல்வம் உண்டாம் ; வேறு அதிகமான கீர்த்திகளும் பெறலாம்;

உன் மனதுநொந்து அசடுபண்ணிக் கொள்ளாதே; நான் நினைத்த காரியத்தை விடுவேனே? என்குணத்தை யெல்லாம் நீ அறிவாயே; ஆகையால், உன்பிள்ளையைத் தா" வென்று நீண்ட பதினாலு லோகமும் வேறே சிருஷ்டிக்கப்பட்ட பெரியோனான விசுவாமித்திரன் சொல்லி வஞ்சகந் தீரச் செவ்வையாய்க் கொண்டுபோக வேண்டிய நிமித்தமாய் வந்து கேட்டவுடனே, பூமியிலே விழுந்து தைரியம் போய், மனது நொந்து சரீரம் வேர்க்க, விசுவாமித்திரருடைய பாதங்களைச் சிரசிலே தரித்தது போலே தண்டனிட்ட தசரத மகாராசாவின் செல்வமே, ரகுவம்சத்திற்குக் கர்த்தனே, நம்முடைய பெருமாளே; பிறந்த பிறகு பேச அறியாமல் சிறிதுநாள் போயும், பிள்ளையாகித் திரிந்து சிலநாள் போயும், இதற்கு மேலே அங்கேயுண்டான வித்தை கற்றுக்கொள்ள வெகுநாள் போயும், திரவியத்தின்மேலே மனது ஆசைப்பட்டு எண்ணி அதுதேடுகிற வகையில் வரும் கவலைவிடாமல் திரிந்து தேடித் திரவியவானாகி நிலைத்து உயர்ந்த குடியாய்ப் பெரிய வீடாய்ப் பெண்களுடனே அநுபோகமே பிரதானமாய்ப் பிறகு பொருளெல்லாம் போய்த் தரித்திரனாயும், வியாதியினாலே மெலிவாகியும், பொறியையுடைய நெருப்பைப்போலே பசி மீண்டு வந்து சுடுகிற துன்பமாயும், முதுமையான நரை கண்டு, சரீரம் கூனி வளைந்து, பொல்லாத கிழவனுமாகி இந்த விதங்களினாலே என்னுடைய ஆயுள் வீணே போகிறது. அப்படிப் போகவொட்டாமல் என்னுடைய கர்த்தனே எனக்குப் பிறவாத பரமபதச் செல்வத்தை இப்போதே யருளிச் செய்ய வேண்டும்.

தனதன தனத்தன தந்த
தனதன தனத்தன தந்த
தனதன தனத்தன தந்த தனதான

24. பனிமல ரெடுக்கில வந்த
புதுமலர் தொடுக்கில முந்து
பழமலர் கழிக்கில மஞ்ச னமதாகும்

படிபுனல் விடுக்கில நின்ற
திருவடி விளக்கில தொங்கல்
பழுதற நிரைக்கில சந்து புகைதீபம்

இனிமையொ டமைக்கில விஞ்சு
கவரிகள் இரட்டில பண்பின்
இனியவ கையெட்டினி ரண்டு பணிதானும்

இயைபுற நடத்தில வன்பொ
டமுதுகள் படைக்கில வென்ற
னிருகையு மவத்திலி ருந்த பிழைபாராய்

மனமிசை கறுத்துவெ குண்ட
கவுசிகர் பதத்தைவ ணங்கி
மகனொரு சிறுபிளை வந்து தமியேனின்

மகமது முடிப்பனெ திர்ந்த
நிருதரை யறுப்பனெ ழுந்து
வருகென மறுப்பது கண்டு வினைநாடித்

தனிமக னிலக்குவ னிந்த
இருவரை யுமொக்கவ ழங்கு
தரமல மறுத்திட வென்று பரிவோடே

தவமுனி வசிட்டன்வி ளம்ப
முனியுன தடைக்கல மென்று
தயரதன் விடுக்கந டந்த பெருமாளே.

உரை :—மனதிலுள்ளே கறுத்துக் கோபம் பண்ணின விசுவாமித்திருடைய பாதத்தை வணங்கித் தசரதமகாராசா சொல்லுகிறார், "என்மகன் சிறுபிள்ளை ; பெரியவனல்லன் ; ஆனபடியினாலே நான் ஒருவன்வந்து உம்முடைய யாகத்தை முடிக்கிறேன் ; எதிர்த்த ராட்சதருட சரீரத்தைத் துண்டந் துண்டமாக அறுக்கிறேன் ; நீர் எழுந்துவாரு"மென்று சொல்ல, அது, ஆகாதென்று தள்ளியதை வசிஷ்டர் பார்த்து, மேல்வருங் காரியத்தை நினைத்துச் சொல்லுகிறார் ; " ஓய் ராசாவே, ஒப்பில்லாத உன்னுடைய மூத்தபிள்ளையான இராமன், லட்சுமணன் இந்த இரண்டுபேரையும் கூட அவருக்குக் கொடு ; மறுத்துச்சொல்ல ஒருவர் வசமுமல்ல " என்று அன்போடே தவசு செய்யப்பட்ட வசிஷ்டமகாரிஷி சொல்ல, ராசா சம்மதித்து, " மகாரிஷியே உம்முடைய அடைக்கலமெ "ன்று சொல்லித் தசரத மகாராசா விசுவாமித்திரர் முன்னே ஒப்பித்தனுப்பிவிக்க நடந்த பெருமாளே ; என்கை யிரண்டுங் குளிர்ந்த பூவை எடுக்கவில்லை ; ஆராகிலுங் கொண்டுவந்த பூவை மாலை கட்டவில்லை ; முன்னே சாத்தின பழம் பூவைக் கழிக்கவில்லை ; திருமஞ்சனமாட ஜலத்தை எடுத்துவிட வில்லை ; நின்று அழகிய சீர்பாதங்களைக் கழுவ வில்லை ; மாலைகளைப் பழுதுபோக ஒழுங்காகக் கட்டவில்லை ; சந்தனக் குழம்பு, சாம்பிராணி தூபம், திருவிளக்கு இவைகளை இனிதாய்க் கொடுக்கவில்லை ; நீண்ட வெண் சாமரைகளை இருபுறமும் அசைக்க வில்லை ; நல்ல குணத்தினாலே இப்படிப்பட்ட வகையாகிய பதினாறு பணிவிடையும் உமக்கு இசைய நடத்தவில்லை ;

அன்போடே அன்னங்களைப் படைக்கவில்லை; இந்தப்படி என்னிட இரண்டு கையும் அவமான துன்மார்க்கத்தில் இருந்த குற்றத்தைப் பார்த்துப் போகப்பண்ணி ரட்சிக்க வேண்டும்.

தனதன தான தந்த தந்த
தனதன தான தந்த தந்த
தனதன தான தந்த தந்த தனதான

25. அடியவ ரோதி ருந்து மண்டர்
மலரய னேபொ ருந்து மைந்தன்
அணையது வோபெ ரும்பு யங்கர் பெருமானுர்

அலர்மக ளோபு ணர்ந்த மங்கை
நிலமக ளோவி ரும்பு நங்கை
அருமறை யோவி ளம்பு செஞ்சொல் இருதாளின்

விடுபுன லோக றங்கு கங்கை
அசனம தோப ரந்த வண்டம்
வெயின்மதி யோவி ரண்டு கண்கள் அடன்மாவோ

[1] வினதைகு மார னின்ப்ர பஞ்ச
மகிமையை யாவர் கண்டு கொண்டு
வெளியிடு வார்த ரங்க ரங்க அருள்கூராய்

உடலுயிர் போக வெம்பி நின்ற
தெனவொரு தாதை யங்க ழுங்க
ஒருதவன் வேணு மென்றி யம்ப வவனோடே

உறைநகர் வீதி யுங்க டந்து
சரயுவை யேறி முந்தி யிந்த்ர
னுலவிய சோலை தங்கி யந்த வழியேபோய்

முடுகிய பாண முந்தெ ரிந்து
வரிசிலை கோலி நம்பி தம்பி
முறைதவ ருது பின்[2]ரு டர்ந்து வரவேநீ

முடிபுனை காமன் வெந்த ழிந்து
பொடிபடு கான கங்க ளெங்கும்
முனிபிற கேந டந்து சென்ற பெருமாளே.

(பி - ம்) 1. விதிமறை ரூப. 2. பொருந்தி.

உரை :—உயிர்போகச் சரீரம் பிணமாக நின்றுள்ளது போல, ஒப்பில்லாத தந்தை பட்டணத்திலே துக்கப்பட நிகரில்லாத தவம்செய்த விஸ்வாமித்திர ரிஷி, வேண்டுமென்று சொல்ல, அவரோடே, நீயிருக்கும் பட்டணத்துத் தெருவைக் கடந்து, சரயு தீர்த்தத்துக்கு அக்கரை ஏறி, முன்னுளிலே இந்திரன் சஞ்சரித்த சோலேயிலே அன்றிரவு தங்கி விடிந்தபிறகு, அந்த வழியே நடந்துபோய் வேகமுள்ள பாணங்களுந் தெரிந்தெடுத்துக் கணுவுடைய வில்லே வளைத்து நாணேறிட்டுக்கொண்டு, சிறப்பான பெருமையுள்ள தம்பியான லட்சுமணர், தமையன் தம்பியென்னும் முறைமை தவருமல் உன் பின்தொடர்ந்து வர, நீண்ட கிரீடம்தரித்த மன்மதன் சிவனுடைய நெற்றிக் கண்ணிஞலே வெந்து அழிந்து சாம்பலாகி விழுந்த காடுகள் எங்கும் விசுவாமித்திரரின் பிறகே நடந்துபோன பெருமாளே; உனக்கு அடியார்களோ, சிறந்த தேவர்கள்; பொருந்திய பிள்ளேயோ தாமரைப் பூவிலேயிருக்கிற பிரமா; பள்ளிகொள்ளும் மெத்தையோ, பெருமை பொருந்திய பாம்புகளின் அரசஞன ஆதிசேடன்; அநுபவிக்கும் பெண்ணே, தாமரைப் பூவிலிருக்கும் பெரிய பிராட்டியார்; ஆசையுடைய தேவியாகச் சிறப்புபெற்ற பெண்ணே, பூமிதேவியாராகிய பிராட்டியார்; சொல்லப்பட்ட செவ்வையான வாகனமோ, ஓதரிய வேதம்; இரண்டு சீர்பாதங்களில் விடப்பட்ட ஜலமோ, சப்திக்கும் கங்காநதி; போசனமோ, விசாலமான அண்டம்; இரண்டு கண்களோ, சூரியனும் சந்திரனும்; பராக்கிரமமுள்ள குதிரையோ வினதைபெற்ற மகனுகிய கருடன்; இப்படிச் சகல பிரபஞ்சமும் உனக்கு உள்ளும் புறமும் நீயாயுமிருக்கிற உன்னுடைய மகிமையைக் கண்டு ஒப்புக்கொண்டு வெளியிடத்தக்கபேர் ஆர்? ஒருவருமில்லே. ஆகையிஞலே நான் அறிந்து பிழைக்க மாட்டுவேனே? ஆகாததிஞலே சீரங்கத்திலே வாசமாய் இருக்கிற அரங்கநாதரே, நீரே அருளிச்செய்ய வேணும்.

தானன தனன தந்த
தானன தனன தந்த
தானன தனன தந்த தனதான

26. ஆசன மெனவ டங்கி
நீள்குடை யெனவி ளங்கி
ஆடைய தெனவ ணங்கி வளர்பாயல்

ஆமென வுடன்வி ரிந்து
பாதுகை யெனவொ டுங்கி
ஆரிருள் கடிய முந்து சுடராகித்

தேசணி திருவ னந்தன்
மீளவு மிளவ லென்று
தீவன முடன லைந்து தொழுபாதம்

தீமைகள் புரியு மெங்கள்
ஈரமில் கொடிய நெஞ்சு
சேர்வுற மெனவி ரும்பில் எளிதாமோ

வாசவன் வெருவ வண்டர்
கோவென யமனெ துங்க
மாதிர கரிக ளஞ்ச எழுகோளும்

மாறிட வெகுளி கொண்ட
தாடகை வருதல் கண்டு
மாதிவள் சரித மென்கொல் எனநாடி

ராசத முடன்ம கிழ்ந்து
கோசிக முனியை முந்தி
ஈரடி தொழுது நின்ற பெரியோனே

ஏழுல கதிர நந்த
மேல்வரு கொடிய நங்கை
யாரென விளம்பி நின்ற பெருமாளே.

உரை :—இப்படிநடந்து போகும்போது, இந்திரன் பயப்படத் தேவர்கள் கோவென்றலற, எமனொளிக்க, எட்டுத் திக்கிலுமிருக்கிற யானைகள் பயப்பட, ஏழுகிரகங்களும் கதிவிட்டு விலகியோட, கோபித்துக்கொண்ட தாடகை வருகிறதைக் கண்டு பெண்ணை இவளுடைய சரித்திரம் என்னமோ வென்று நினைத்து, ராசத குணத்துடன் சந்தோஷப்பட்டு, விசுவாமித்திரர் எதிரே சென்று இரண்டுபாதங்களையும் தொழுது, "ஏழுலகத்தவரும் அதிரத்தக்கதாக நம்மிடம் வருகிறபெண் யார்?" என்று கேட்டு நின்ற பெருமாளே; உமக்கு ஆசனமாக அடங்கியும், நீண்ட குடையாக விளங்கியும், புடைவையாக வணங்கியும், படுக்கும் பாயாக ஒக்கவிருந்தும் பாதுகையாக ஒடுங்கியும், நிறைந்த இருளைப் போகப்பண்ண முன்னே சோதியாகியும், ஒளியுள்ள சேஷன் இப்படியெல்லா மாகியும், திரும்பவும் தம்பியாகிப் பரிவுடனே அலைந்து வணங்கப்பட்ட உன்னுடைய பாதங்களைப் பாவங்கள் செய்யப்பட்ட எங்கள் அன்பில்லாத கொடிய மனது சேரலாமென்று ஆசைப்பட்டால் எளிதில் கிடைக்குமோ? கிடையாதே. ஆகையால் நீயே ரட்சிக்கவேணும்.

தானன தனத்த தந்த
தானன தனத்த தந்த
தானன தனத்த தந்த தனதான

27. மீனென வுதித்து வஞ்ச
வாமையெ னமற்று வந்து
மேருவை யடக்கு பன்றி வடிவாகி
மேல்வரு பிறப்பு வெங்க
ணளரி யெனப்பி றந்து
மேதினி யளக்க வன்று குறளாகி
ஈனம றவெற்றி கொண்ட
மூவர்க ளெனச்சி றந்த
ராமரொ டுகிட்ணர் பின்பு வருமாவொன்
[1] றேபிற விபத்தொ ழிந்து
வேறிலை யுனக்க னந்தம்
யானுறு பிறப்பு விஞ்சு மவர்யாரோ
தானொரு மறத்தி யெங்கண்
மாதவ மழிக்கும் வம்பி
சாதனை யரக்கி யென்று பலவாகத்
தாடகை சரித்தி ரங்கள்
யாவையு நிகழ்த்தி யுன்பா
தாபமி தனிற்றெ ரிந்து விடவேணும்
வானுல களித்தி யென்று
நீதியொ டெடுத்தி யம்ப
மாதென நினைத்து நெஞ்சின் மிகநாணி
வார்சிலை குனிப்ப தின்றி
யோர்கணை தொடுப்ப தின்றி
மாமுடி யசைத்து நின்ற பெருமாளே.

உரை :—விசுவாமித்திரர் சொல்லுகிறார்; இவளொருபாவி, எங்களுடைய தவசுகளை அழிக்கும் வம்பி; வயிரமான கொடுமையையுடைய ராட்சசி; இவள் பெயர் தாடகை, என்று தாடகை சரித்திரங்கள் எல்லா

(பி - ம்) 1. றேயவ தரித்து முந்து
பாகவ தருக்கு கந்த
தேமுற கொடுக்கு மெந்தை யருள்வாயே.

வற்றையும் சொல்லி உன் வில்லாகிய தயவு மிதிலே தெரிந்தது; இனிமேல் தெரிய வேண்டுவதில்லை யென்று விடவேணும்; இவளுக்கு வீரசுவர்க்கங் கொடுமென்று நீதிவசனத்தொடு எடுத்துச் சொல்லப், பெண்ணென்று நினைத்து, மனதிலே மிக வெட்கித் தோலாலே கட்டப்பட்ட வில்லை வளைக்காமல் ஓரம்பும் தொடுக்காமல், பெரிய சிரசை அசைத்து நின்ற பெருமாளே; மீனென்று பிறந்து, வஞ்சகமாக ஆமையென்று ரூபமெடுத்து வந்து, மகாமேருவைக் கொஞ்சமாக வடக்கி, பெரிய பன்றி ரூபமாகி, முன்னே கொடிய கண்ணையுடைய நரசிங்கமென்றொரு பிறப்புப் பிறந்து, பூர்வத்திலே பூமியை அளக்கிற உருவாகி, குற்றந்தீரச் செயங்கொண்ட பரசுராமர், சீதாராமர், பலராமர் என்று சொல்லப்பட்ட மூன்றுபே ரென்று சிறப்புப்பெற்றவர்களுடனே கிருஷ்ணரென்று பிறந்து, இனி மேல், பின்னே வரப்பட்ட குதிரைரூபம் ஒன்றே யாக, உனக்குப் பத்துப் பிறவி யொழிந்து அதிகமில்லை; நான் பிறந்த பிறப்பு அளவில்லை; ஆகை யாலே, அளவில்லாத பிறவி பிறந்தவன் அதிகமோ? பத்துப்பிறவி பிறந் தவன் அதிகமோ? அதிகமானவன் யாரோ சொல்லவேண்டும்.

இப்பாட்டில் திருமாலுடைய அவதாரங்கள் பத்தும் முறையே கூறப் பட்டுள்ளன. "ஈனமற வெற்றி கொண்ட மூவராவார்" மூன்று இராமர் கள். அவர்கள், பரசுராமர், சீதாராமர், பலராமர் என அடைமொழியால் வேறுபடுத்தப்படுமாறு சுருங்கக் கூறப்பட்டுள்ளனர்.

தன்னத் தாந தனதனன
தன்னத் தாந தனதனன
தன்னத் தாந தனதனன தனதான

28- மின்னைப் போலே யிடைதுவள
வன்னப் போர்வேல் விழிபுரள
வெண்முத் தேயா கியமுறுவல் நிலவீன
வெம்மைக் கோலா கலமுலைகள்
கொம்மைக் கோடே னமுடுகி
விற்முற் றேவா ரொடுகதுவ வறுகால்கள்
தன்னத் தாந தனதனன
வென்னத் தான்வார் குழல்மருவு
தண்மைப் பூமா லைகள்சரிய விரிதோகை
தன்னைப் போலே மலர்மருவு
பொன்னைப் போலே வருமகளிர்
தம்மைக் காண மனமெலிவு தொழியாதே

மன்னுற் றேதா டகைமுடுகு
வெம்மைச் சூலா யுதமுறிய
வன்மத் தேவீ சியமரமும் மலையாவும்

மண்ணிற் றாளாய் விழவிரகு
பண்ணித் தானே வுகன்மழையும்
வண்ணக் கோலா கலவலியும் நிலைசாயக்

கன்னத் தேகோல் பலசெருகு
புண்ணிற் கேநீ டெரிகதுவு
கண்ணிற் கேபேய் நரிகழுகு விளையாடக்

கன்மத் தாலா னவண்மடிய
மன்மத் தேவா ளிகொடுமுது
கன்னிப் போரா டியகரிய பெருமாளே.

உரை :—இவள் ஆணிலும் கொடியவ ளென்று விசுவாமித்திரர் சொன்ன பிறகு, சம்மதித்து நிலைத்து நின்று தாடகையாலே விடப்பட்டு வேகமாய் வரப்பட்ட கொடிய சூலாயுதத்தை முறியச் சுட்டு, அவள் விதம் விதமாக எறியப்பட்ட மரம், மலையெல்லாம் பூமியில் விழத்தக்க உபாயம் பண்ணி, அவள் ஏவிய கல் மழையும், விதம் விதமாகச் செய்யப்பட்ட கோலாகலமான பலமும் நிலையாய் இருந்தது ஓடிப்போக அவளுடைய காதிலே பல பாணங்களை நுழையவிட்டுத் தொளைத்து, துளைப்பட்ட புண்ணிலும், நீளமான நெருப்பைக் கவ்விக் கொண்டிருக்கிற கண்ணிலும் பேயும் கழுகும் நரியும் பிடுங்கித்தின்று விளையாடப் பாவத்தினலே சரீர முண்டான தாடகை சாவ அவளுடைய மார்பிலே ஒரு பாணத்தைக் கொண்டு துளைத்து முதற் பெண் போராடிய நீல நிறமான பெருமாளே; மின்னுகிற மின் துவளுகிறதுபோல இடை துவண்டசைய, நீல நிறமாய், இயற்றிய வேல்போல உருவமுள்ள கண்பார்வை சுழல, வெண்முத்தைப் போன்ற பற்கள் நிலவுபோல் ஒளி வீச, கண்டவர்க்கு ஆசையை உண்டாக்கும் கோலகலமான முலைகள், திரட்சியான ஆனைக் கொம்பைப்போல் வேகமாய் எழும்பிப் பூரித்து இறுமாந்து அழுந்தக் கட்டின ரவிக்கையைக் கிழிக்கிறேனென்று கறுவ, ஆறு காலையுடைய வண்டுகள், தன்னத் தான தன தன்ன வென்று ராகம்பாட, சீப்பாலே வார்ந்து முடித்த கொண்டையிலே சுற்றின் குளிர்ந்த பூமாலை சரிந்து, தளர்ந்து வரப்பட்ட மயில் போலும், திருமாமகள் போலும் வரும்பெண்களைக் கண்டு மனம் சஞ்சலப் பட்டு, எப்போது கூடுவோமென்று, மெலிந்து வருகிற தொழிந்து என்று உன்னையே வணங்குவேன் ? அதைச் சொல்ல வேண்டும்.

தானதன தந்தனன தந்த
தானதன தந்தனன தந்த
தானதன தந்தனன தந்த தனதான

29. ஓடுமுரு குந்துயர் கொண்டு
வாடுமிள குந்தன தென்று
லோபமுட னின்றும யங்கு மிருளாகும்

ஊடுதெளி யுந்தனி கண்ட
தேதுமரு வும்பல தொந்த
ரூபமும டைந்திடு மிந்த மனநேரே

கோடுறுகு ரங்கென விஞ்சு
நீடுசெயல் கண்டது வஞ்சர்
கோலமிது தந்திடு பண்பு மமையாதோ

கோயிலுமரங்கமு முந்த
மேவியுன தன்பரை வந்து
கூடியிட வென்றினி யன்பு புரிவாயே

மாடுறு சிலம்பு தொடர்ந்து
கூடிவர வண்டர்நடுங்க
மாநிலம திர்ந்திட முந்த வருவாளை

மாதெனநி னைந்தது வம்பு
கோறிபழி யின்றென நின்று
மாமுனிவி ளம்பவொ ரம்பை விடலோடும்

காடுதிர மண்டவ லைந்து
தாடகைபு லம்பியி ருண்ட
காரென முழங்கிவி ழுந்த பொழுதேமுன்

காதிவரு கண்டகர் தங்கள்
ஆனவுயி ரின்சுவை யன்று
காலனறி யும்படி கண்ட பெருமாளே.

உரை :—தாடகை வருகிற வேகத்திலே பிறந்த காற்றினாலே பக்கத்திலிருந்த மலைகள் வேர்பிடுங்கப்பட்டு அவளைத் தொடர்ந்து கூடவர, அவளைக்கண்டு தேவர்கள் நடுங்க, பெரிய பூமியதிர, " எதிரே வருகின்ற இவளைப் பெண்ணென்று நினைத்தது புதுமையாய் இருக்கிறது ; இவளுடைய வலிமை எந்தப் புருஷனுக்கிருக்கிறது ; ஆகையாலே ரூபம் மாத்

திரம் பெண்ணல்லாமல், ஆணே ; சரி, கொல்லு, பழியன்று" என்று நிற்கிற விசுவாமித்திர மகாரிஷி சொல்ல, அப்படியே ஒரு அம்பை விட்டவுடனே, அந்த அம்பு அவளுடைய மார்பைப் பிளக்க, மார்பினின்று பெருகி வழிகிற ரத்தம், அந்தக் காடெங்கும் பெருகியோடத் தள்ளாடித் தாடகை யலறிக்கொண்டு இருண்ட மேகம்போலக் கூப்பிட்டு விழுந்த போது, முன்னே கொலைத்தொழில் செய்து வருகிற கொடிய ராட்சதர்களுடைய சீவனை எப்போ வாங்குவோ மென்று சமயம் பார்த்துக்கொண்டிருந்த எமன், ராட்சதருடைய சீவ ருசியை அன்றைக்கு அறியும்படி செய்து கண்ட பெருமாளே; என்மனம் ஓடும், கரையும், துன்பங்கொண்டு வாடும்; இளகும்; எல்லாந் தன்னுடைமை யென்னும்; எல்லாக் காரியமும் தான் செய்ததென்னும்; எல்லாம் என்னது என்னும்; உனக்குக் கொடாத லோபத்துடனே மயங்கும்; இருண்டுபோம்; இருண்ட நடுவிலே தெளியும்; கண்ணால் கண்டதில் எல்லாம் தனியே தனியே சேர்ந்திருக்கும்; பலவிதத் தொடர்ச்சியான உருவங்களும் அடையும்; இந்த நட்புகள் உள்ள மனது, செவ்வையாகக் கொம்பிலே யிருக்கிற குரங்கு கொம்பசைந்தால் தானும் அசைவதுபோல, எல்லாருக்கும் மேலான உன்னுடைய திருவுளம் அசைய அப்படி அலையப்பட்டது; வஞ்சகருடைய நட்பை இந்தமனம் கொடுக்கிற லட்சணமும், போதாதோ? இனி யுன்னுடைய திருக்கோயிலுஞ் சீரங்கமுஞ் சேர்ந்து உன்னடியாரை வந்து கூடிப் பணிவிடை செய்ய என்றைக்கு அருள் செய்வாயோ?

தனதத்த தனதத்த தனதத்த
தனதத்த தனதத்த தனதத்த தனதான

30. பசையற்ற வுடல்வற்ற வினைவுற்று
நடைநெட்டி பரியக்கை சொரியப்பல் விழலாகிப்
பகலைக்கு விழிகெட்ட குருடொத்து
மிகநெக்கு பழமொத்த நரைகொக்கின் நிறமேவி

விசைபெற்று வருபித்த மதுசுற்றி
விழுவிக்க மெலிவுற்று விரல்பற்று தடியோடே
விளிவற்ப முறவிர்த்த செனனவெட்கு
செனனத்தை விடுவித்து னருள்வைப்ப தொருநாளோ

அசைவற்ற நிருதப்பெண் மடிவித்த
பிரியத்தி னடல்வச்ர கரன்மற்று முளவானோர்
அளவற்ற மலர்விட்டு நிலமுற்று
மளவிட்ட வடிபற்றி விடைபெற்று நெடிதேக

வசையற்று முடிவற்று வினையற்று
மதமற்று வடுவற்று நிகரற்ற முனிராசன்
மதுரத்த மொழிசெப்பி யருளுற்ற
பொழுதத்து மனமொத்த படைபெற்ற பெருமாளே.

உரை :—சலியாத ராட்சதப் பெண்ணை தாடகை செத்த சந்தோஷத்தினலே, பலமுள்ள வச்சிராயுதத்தைக் கையிலே தரித்த இந்திரன் முதலாக மற்றுமுண்டான தேவர்களும், அளவில்லாத புஷ்பம் பொழிந்து பூமியெல்லாம் அளந்த திருவடிகளிலே தெண்டனிட்டுத் தனியே அனுப்புவித்துக் கொண்டு, ஒழுங்காய்த் தேவலோகத்துக்குப் போக, பழியும், சாவும், பாவமும், கர்வமும், குற்றமும் ஒப்புமில்லாது திரிந்த ரிஷிகளுக்கெல்லாம் ராசாவான விசுவாமித்திரர் மதுரமுள்ள வசனங்கள் சொல்லிக் கொடுத்த பொழுது மனதுக்கு ஒத்திருக்கும் ஆயுதங்களை அடைந்த பெருமாளே: பசையில்லாத சரீரம் வற்றிப்போய்க் கூனுக வளைந்து நடக்க, நீட்டிப் பற்றிய கைகள் சொரிய, பல் அசைந்து விழ, பகலிலேயும் கண்பார்வை கெட்டுக் குருடாகி, மெத்தக் கனியப் பழுத்த பழம் போலத் தளர்ந்து கொக்குப்போல வெளுத்த நிறமாக நரைத்து, கிறு கிறுவென்று வரும் பித்தம் தலையைச் சுற்றிக் கீழே தள்ளச் சரீரம் மெலிந்து, விரலால் பிடித்த தடியுடன் நடந்து ஆரையாகிலும் அழைக்கிற சப்தம் குலைந்துபோக, இந்தவிதமாகச் செத்தானென்று சொல்லவும் வெட்கமுண்டாக்குகிற இந்தப் பிறப்பை எடாமல் விடுவித்து உன்னுடைய கிருபையிலே என்னை வைக்கிறது ஒருநாளோவென்று நியமிக்க வேண்டும்.

தானன தந்த தந்த
தானன தந்த தந்த
தானன தந்த தந்த தனதான

31. வீதியில் நின்று நின்று
காமனை வென்று வென்று
மேல்விழ வந்து வந்து விழியாகும்
வேலையெ றிந்தெ றிந்து
காதல நிந்த நிந்து
வேதனை தந்து தந்து குழல்கோதிக்
கோதைய ணிந்த ணிந்து
சாலவ சைந்த சைந்து
கூசுத லன்றி யன்றி அருகாகக்

கூடியி ருந்தி ருந்து
வேசியர் கொண்ட கொண்ட
கோரணி கண்டு கண்டு தளர்வேனோ

போதவ ளைந்து கொண்ட
தாடகை யங்க ழிந்து
போயின பின்பு முன்பு நெடிதேகிப்

பூபதி யென்றி ருந்த
மாவலி யன்பு கொண்டு
போதம கங்கண் முன்செய் தலமேவிக்

[1]காதிப யந்த மைந்தன்
வேள்விதொ டங்க வன்று
காதுதல் விஞ்சு தம்பி யவனோடுங்

கார்முக முந்தெ ரிந்த
வார்கணை யுங்கை கொண்டு
காவல்பு ரிந்து நின்ற பெருமாளே.

உரை :—எல்லாரையும் சுற்றி வளைத்துக்கொண்ட தாடகை அங்கே செத்துப்போனபிறகு சீக்கிரமாக நடந்து, முன்னாலே ராசாவென்று அரசாண்டிருந்த மாவலிச் சக்கரவர்த்தி அன்பும் அறிவும் உள்ள யாகங்களை முன்னாளிலே செய்த பூமியிலே சேர்ந்து காதிபெற்ற குமாரனான விசுவாமித்திரன் யாகம்செய்யத் தொடங்க, அப்போது கொல்லுகிற தொழிலிலே மீறிய இலட்சுமணனான தம்பியுடன், வில்லும் ராட்சதர்களைக் கொல்லுகிறது இன்ன அம்பென்று தெரிந்தெடுத்து நீண்ட பாணமும், இரண்டு திருக் கைகளிலும் பிடித்து விக்கினம் வாராமல் காவல்செய்து நின்ற பெருமாளே; வேசிகள், வீட்டிலே யிராமல் வீதியில் நின்று, புருஷர்களைத் தினமுங் கூடுகையினாலே, மன்மதனைத் தினந் தினமுஞ் செயித்து, மேலே விழத்தக்கதாக வந்து வந்து, கண்ணாகியவேலை ஆண்மக்கள் மேல் வீசி இதனாலே தங்கள்மேலே வைத்த ஆசை யிடைவிடாமல் அறிந்து இணங்குவதுபோல இங்கிதங்காட்டிப் புருஷர்களுக்குத் துன்பம் விளைவிக்கும்படி கொண்டையைக் கோதிக்கொண்டு பூமாலையை அடிக்கடி முடித்து மிக அசைந்தசைந்து, வெட்கமின்றிப் பக்கத்திலே கூடியிருந்து கொள்ளும் சரசமான கோரணி சேஷ்டையைப் பார்த்து மனம்தளர்ந்து கெட்டுப் போவேனோ ? அப்படிக் கெடாமல் அருள்செய்ய வேண்டும்.

கோரணி—கேலிக் கூத்து.

(பி - ம்) 1. காதியை யீந்த.

தனன தானன தாரு.தந்தன
தனன தானன தாரு தந்தன
தனன தானன தாரு தந்தன தனதான

33. மிடியர் வாலிபம் வாய்பா டம்[1]பல
[2] கருவி யேதுமி லாரோ துங்கலை
விழுமி யோர்சின நாணார் தங்குல மநுராகம்
விளைவி லாதவர் பாலா மைங்கணை
கொடையி லார்பொருள் நால்வாய் தன்பலம்
விரவு பேடிகை வாள்வேல் வெம்பசி யிலையானோர்
இடையின் மேவிய வூண மின்சுவை
குருவின் வாய்மொழி பேணார் மந்திரம் [போல
இறைவன் மார்புபெ ருதாள் கொங்கைகள் இவை
எனது ஞானமும் வீணே மங்கின
இதனை வேறுவி டாதே யிங்குன
திருச ரோருக சீர்பா தந்தனில் அடைவேனோ
அடைவு சேர்முனி மாயா கஞ்செய
நெடிய சாலையி னூடே சென்றிடும்
அளவி லேவினை மாரு வஞ்சகர் படைமாரி
அனல மாமென மேலே யுந்தியும்
முனியை நாடியும் நீள்போர் கண்டிட
அரிய தோர்சர கூடா லங்க்ருதம் அதுகோலி
கடுகி யேதம மாதா வின்பழி
தருதி யாலென மேலே வந்தடர்
கபட தாடகை பேரு மைந்தரின் மலைவீசும்
கரசு வாகுவு நேரே விண்புக
விரகி னலொரு மாரீ சன்பொரு
கடலி லேவிழ வோர்பா ணந்தொடு பெருமாளே.

உரை :—நல்லியல்பு சேர்ந்த விசுவாமித்திர முனிவர் பெரிய யாகஞ் செய்யவேண்டி நீண்ட யாகசாலைக்குள்ளே போகும் வேளையிலே, குலத் தொழிலை விடாத வஞ்சகமுடைய ராட்சதர் வந்து ஆயுதங்களை நெருப்பு மழைபோல யாகசாலைமேலே வீசியும், விசுவாமித்திரரைத் தேடியும்,

(பி - ம்) 1. பர. 2. மகிரி.

நீண்ட யுத்தம் செய்து கைகண்டபோது, நீ, யாகசாலைமேலே அலங்கார மாக அம்புக் கூடுகட்டி வளைத்து ஒரு ஆயுதமேனும் யாகசாலையில் படா மல் காக்க, அப்போது, "எங்கள் தாயின் பழியைத் தா"வென்று வேக மாய் வந்து மேலே பாணங்களை விட்டுப் போர்செய்யும் தாடகை பெற்ற பிள்ளைகளுள் மலையைப்பிடுங்கி வீசும் கையையுடைய சுவாகுவின் உடல் விழுந்து உயிர் தேவலோகத்துக்குச் செவ்வையாய்ப் போகவும், சூழ்ச்சி யில் ஒப்பில்லாத மாரீசன், கரையில்மோதும் அலைகளையுடைய கடலிலே விழவும், இப்படிச் சுபாகுவைப் பிளந்தும் மாரீசனைக் கடலிலே தூக்கிப் போட்டும் வர இருவருக்கும் ஒருபாணந் தொடுத்த பெருமாளே; வறுமை யாளர் இளமை, வாயால் படிக்கும் பள்ளி, எழுத்தாணி, கத்தி, திருவூசி முதலியவையின்றி ஓதும் வித்தை, எல்லாராலும் வியக்கப்பட்ட பெரி யோர்களின் கோபம், லஜ்ஜையில்லாதவர் பெரிய குடிப்பிறப்பு, இயைந்த ஆசையற்றவர்மேல் எறியும் மதன்கணை, அறஞ்செய்யாதோர் செல்வம், யானையின் வலிமை, ஆணுமன்றிப் பெண்ணுமன்றி இரண்டிலக்கணமுங் கலந்து நின்ற பேடிகையிலுள்ள வாள் வேல்கள், கொடிய பசியில்லாதவ ரிடம் சேர்ந்த அறுசுவை உண்டி, குரு உபதேசித்ததை மதியாதார் மந்தி ரம், தன்கணவன் மார்பில் அணைக்கப் பெறாதவள் கொங்கைகள், இவைக ளைப்போல் என் நல்லறிவான ஞானமும், வீணில் மங்கிப்போயிற்று; அந்த ஞானத்தை உலக மயக்கிலே விடாமல், இனி, செந்தாமரைபோன்ற உன் இரண்டு திருவடிகளில் சேர்த்திருப்பேனோ? அது சொல்லவேண்டும்.

தனதனன தாத்த தாத்தன
தனதனன தாத்த தாத்தன
தனதனன தாத்த தாத்தன தனதான

33. மடமகளிர் மாட்டின் மாட்டினை
விரகிலெனை நாட்டி லோட்டினை
வறுமைமுது நீர்க்குள் வீழ்த்தினை பொருள்மீதே
மனமுறுப ராக்கி லாக்கினை
தனமுடைய பேர்க்கி யார்க்குமென்
வரவுசொலி யேற்க நூக்கினை பிணியாகும்
கொடியகன வூட்டி யாக்கினை
அசடனெனும் வார்த்தை நாட்டினை
குறுகின பிராத்தி நாட்களும் இனிநீயென்
குறைமுழுது மாற்றி யேற்றதொர்
அடியரோடு கூட்டி வாட்டமில்
குரைகழல்கள் காட்டி வீட்டினை அருள்வாயே

நெடுமுனிவர் கூட்ட மேத்திய
மறையினொலி சாற்ற வேற்றதொர்
நெறியின்முறை வாய்த்த சாத்திரம் வழுவாதே
நிலைமைபெறு சூத்ர வாக்கிய
கரணவகை யாற்பி ரார்த்தியின்
நிலமுழுது கோட்ட மார்த்தெழு தவராசன்
அடுகனலை மூட்டி மாட்டுறு
சமிதவகை போட்டு மூர்த்திகள்
அமரர்தச நூற்று நேத்திரர் களிகூர
அவியுணவை யூட்டி யீட்டிய
மகமினிது காத்து மேற்படும்
[1] அபவிரத தீர்த்த மாட்டிய பெருமாளே.

உரை :—நெடிய கூட்டமாக முனிவர்கள், பரவுகின்ற வேதத்தின் சப்தத்தைச் சொல்ல, மிக வொப்பான நெறியிலுள்ள முறைப்படியே வாய்ப்பான சாஸ்திரப்படியே நிலையான பேறுபெற்ற சூத்திரத்திலே சொல்லப்பட்ட வாக்கியத்தி லெடுத்த உபகரணமாகிய யாகத்துக்கு வேண்டிய பண்ட பாத்திர விதங்களாலே எல்லாரும் பிரார்தித்துச் செய்கிறபடி, பூமியை யுழுது நாற்கோணமாகவும் முக்கோணமாகவும் பிறையாகவும், ஓம குண்டம் செய்து, ரிஷி ராசனாகிய விசுவாமித்திரமுனி நெய்யைவிட்டவுடனே, ஒலித்து எழும் நெருப்பை மூட்டிப் போடப்பட்ட சமித்துவகைகளை மந்திரப்படி அக்கினியிலே வெகுவாய்ப் போட்டுப் படுத்தின தெய்வப் புசிப்பைப் பிரமா, விஷ்ணு, ருத்திரன் என்று சொல்லப்பட்ட மும்மூர்த்திகள், தேவர்கள், ஆயிரங் கண்களையுடைய இந்திரன் இவர்கள் சந்தோஷப்பட அவியாகிய தெய்வ வுணவை உண்பித்துச் செய்யும் யாகத்தை இனிதாகக் காத்து மேன்மையுண்டாகிய அபவிரத ஸ்நானம் பண்ணுவித்த பெருமாளே ; என்னை நீ செயித்து அறியாமையாகிய குணத்தையுடைய பெண்களிடத்திலே மாட்டினாய் ; அவர்கள்மேல் காமத்தினால் என்னை நாட்டிலே யோட்டினாய் ; வறுமைக்கடலில் தள்ளினாய் ; பொருளின்மேல் மனம்செல்லும் பராக்கிலே அலையச்செய்தாய் ; செல்வர் எல்லோருக்கும் என் வரவைச்சொல்லி இரக்கும் சிறுமைப்படுத்தினாய் ; நோயாகிய கொடிய நெருப்புக்கு என்னை இரையாக்கினாய்; அசடனென்று எல்லாருஞ் சொல்லச்செய்து அதனை நிலை நிறுத்தினாய் ; இப்படி என் ஆயுளுங் குறுகிற்று. இனி, நீ, என்னுடைய குறையெல்லாம் போக்கி, மேலாகி ஒப்பில்லாத உன் அடியவர்களுடனே என்னைக் கூட்டி, வாட்ட

(பி - ம்) 1. அவபிரத.

மில்லாது ஒலிக்கும் வீரக்கழலணிந்த திருவடிகளை வணங்கச்செய்து பரம பதத்தை யருளிச்செய்ய வேண்டும்.

தனதத்தன தானன தத்தன
தனதத்தன தானன தத்தன
தனதத்தன தானன தத்தன தனதான

34. படிகட்டிய வேதன்வி திப்படி
நெறிநிற்பவ ரேதரி சித்திடு
பதுமப்பத நாடுறு சித்தமும் அநுபூதிப்

பரதத்துவ ஞானவி ளக்கமும்
அருளித்தொலை யாதக்ரு பைக்கடல்
படியப்படை யாமலெ னைத்தினம் மடவார்தம்

இடையிற்சுழி சேர்கல விக்கடல்
நடுவிற்படி யாமன நிற்கவும்
இசையப்பொருள் தேடிய [1] ழிக்கவும் அதுபேணி

இடருற்றுவி டாதுத விக்கவும்
அயலிற்கொடி யாரது கைக்கொள
யமனுக்கிரை யாகியி றக்கவும் விடலாமோ

முடுகிப்பொரு பூசல ரக்கரை
மகரக்கட லூடுது ரக்கவும்
முடிதிட்டென வீழவ றுக்கவும் நதிபோல

முழுகப்படு சோரிநி றைக்கவும்
நெடுகப்பிண ராசிகு விக்கவும்
முதிரக்கினி யோமமு நிட்டையும் அழியாதே

கடுகிச்சர கூடம்வ ளைக்கவும்
மகமிப்படி பேணவு மொப்பரு
கலைகற்றவ ரென நற்றவன் மகிழ்வாகிச்

கன[2]முற்றெறி சானவி பிற்பட
மிதிலைப்படை வீடுத னிற்புகு
கருணைக்கட லே[3]யென்ம னத்துறை பெருமாளே.

உரை :—முடுகிவந்து போர்செய்யும் அரக்கரை மகரமீன் இருக்கும் கடலுக்குள்ளே முழுகுமாறு தள்ளிக்கொண்டு போகவும், அவர்கள் தலை

(பி - ம்) 1. புழை. 2. முத்தணி சானகி. 3. விப வத்துறை.

விண்ணினின்றும் திட்டென்று ஒலித்து விழவும், ஆறுகள்போல் குருதி வெள்ளம் நிலேயின்றி நிறைந்திருக்கவும், நீளமாய்ப் பிணங்களைக் கும்பலாய்க் குவிக்கவும், முதிர்ந்த பெரிய அக்கினியும், ஓமமும், பெரிய காரியமான நிஷ்டையும், அழியாமல், சீக்கிரமாகச் சரகூடம் வளைக்கவும், யாகத்தை யிப்படிமதித்துக் காக்கவும், ஒப்பில்லாத வித்தை கற்றவர்கள் யார்? ஒருவருமில்லை யென்று நல்ல தவம்செய்யும் விசுவாமித்திர முனிவர் சந்தோஷமாகிச் "சனகமகாராசா செய்யும் யாகம் பார்ப்போம், வா" வென்று நடந்து உலகமெல்லாம் பூசைசெய்யும் கனமுள்ள அலை வீசிய கங்காநதியைக் கடந்து பின்னிட்டு விதர்ப்ப தேசத்திலே மிதிலை என்னும் பேருடைய பட்டணம், 'சேனைகளெல்லாம் இருக்கும் வீடு' என்னும் அப்பட்டணத்தைக் கிட்டிய தயாசமுத்திரமே, என்மனதிலிருக்கும் பெருமாளே; தராசிலே படிகட்டிச் சரியாக நிறுத்ததுபோல, பிரமன் விதித்தபடி அந்த வேதமார்க்கத்திலே நிற்கிறவர்கள் வணங்கும் செந்தாமரைப் பூவை யொத்த உன்திருவடிகளை நினைக்கும் மனதும், பொருந்திய செல்வமான உன் அநுபூதியைக் காண, மேலான வியாபகத்தை யறிய விளங்கும் ஞான வொளியும், அருளிச்செய்து, எத்தனை உயிர்களுக்கு எத்தனை காலங் கொடுத்தாலும் தொலையாத தயாசமுத்திரத்திலே முழுகப் பிறப்பியாமல் என்னைத் தினந்தினமும் பெண்களுடைய ஆசையிலே, சுழித்த அல்குலிலே சேர்ந்து, செய்யும் சம்போக சமுத்திரத்திலே நடுவிலே முழுகி, மனம் அதுவே மயக்கமாகி நிற்கவும், அதற்கியைய் பொருளைத் தேடிச் செலவழிக்கவும், அந்தச் செல்வம் எல்லாவற்றிலும் பெரிதென்று மதித்துத் துக்கப்பட்டு விட்டுவிடாமல் தவிக்கவும், அந்தச் செல்வத்தை அயலாரில் கொடுமைசெய்யும் பாவிகள் கைக்கொள்ளத் திகைப்பட்டு, எமனுக்கு உணவாகிச் சாவவும் விடுப்பது ஆகுமோ? ஆகாது. ஆகையால் ரட்சிக்க வேண்டும்.

தனதன தானன தத்தந் தனதத்
தனதன தானன தத்தந் தனதத்
தனதன தானன தத்தந் தனதத் தனதான

35. பரணியு லாவொரு சத்தம் பொழுதிற்
சொலவொரு கோவைய டுக்குங் கிளவிப்
பயனுமொ ரோர்நிமி டத்தின் புகலப் பலநூலும்

பகரவி வாதவ கைக்கும் புகுதப்
பெரியபு ராணக தைப்பண் பறியப்
பதறிய வாசொடு சித்ரங் கள்வரக் கவிபாடப்

பெருவிரு தேநிறு விக்கொண் டருளற்
புததரு வேமழை கைக்கொண் டகொடைப்
பிரளய மேயினி நிற்குங் கவிதைத் துறையேகேள்

பிடிபண மாழிப தக்கம் பருமுத்
தணிமணி யாடைமி கத்தந் திசையப்
பெறுகென லோபகு ணக்குண் டகரைப் புகழ்வேனே

பொருமொரு தாடகை யைக்கொன் றயலிற்
றவமுனி வேள்வி முடிக்கும் பொழுதப் [யோனைப்
புகைவிழி யாள்பெ றுமைக்கண் டகரிற் கொடி

புணரியில் வீழவி டுத்துஞ் சமரத்
தொருவனை வானிடை வைத்துந் தழலைப்
பொறிய வியாதுபு ரக்குங் கருணைத் திருமாலே

அணைமிகு கோதம னுட்ணங் களுமற்
றுயர்வல மீதுது டிப்புங் கொளமற்
றடல்மக வான்மன முட்கும் படிமுற் றவனுர்நின்

அடிவர லாறுகள் முற்றும் புகலத்
திருமறை நாலும ணக்கும் பொடியிட்
டகலிகை சாபம கற்றுஞ் சரணப் பெருமாளே.

உரை :—போர்செய்து, ஒப்பில்லாத தாடகையைக் கொன்று அப்பால் ஓரிடத்திலே, தவஞ்செய்யும் விசுவாமித்திரர் வேள்வியை நிறைறும் பொழுது, புகைந்த கண்களையுடைய அத்தாடகைபெற்ற மைபோற் கறுத்த மேனியையுடைய பாவிகளில் ஒருவனாகிய கொடிய மாரீசனைக் கடலில் வீழ்த்தியும், போரில் சுவாகுவைச் சுவர்க்கத்தில் வைத்தும், வேள்விக்கனலைப் பொறி முதலியன அவியாமற் காத்த அருளுடைய பெருமாளே ; கருணைமிக்க கவுதம முனிவரது கோபமும், மனைவியில்லாமையும் தீர்ந்து உயர்ந்த வலப்புறத்தில் துடிப்பும், ஏனைய நன்னிமித்தங்களுங் கண்டுகொள்ளவும், மற்றைய வலிமையுடைய இந்திரன் வெட்கி மனமொடுங்கி நிற்கவும், முதன்மைபெற்ற தவஞ்செய்த விஸ்வாமித்திரர் உமது திருவடியின் வரலாறுகள் முழுதையும் சொல்லவும், நான்கு வேதங்களும் மணக்குந் துகளை யிட்டு அகலிகையின் சாபத்தைப் போக்கிய திருவடிகளையுடைய பெருமாளே ; "பரணியும் உலாவும் ஓர் ஓசை பிறக்கும் பொழுதிற் பாடவும், ஒப்பில்லாத கோவையை ஒரு நிமிடத்திலும், அடுக்கடுக்காகச் சொல்லும் பொருளுமாய்ச் சொல்லும் அலங்கார நூலை ஒரு நிமிடத்திலும் சொல்லவும், பல கலைகளைச் சொல்லவும், பெரிய தர்க்க

வாதம் செய்யவும், பெரிய புராணங்களிற் சொல்லும் கதையை யறியும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் கவிகள் பாடவும், வல்லவ னென்று பெரிய விருதை நிறுத்திக் கொண்டேன் ; வியக்கத்தக்க கற்ப தருவையும் மேகத்தையும்போல் கொடுக்குங் கொடை வெள்ளமே, இனி, நிற்கும் பாட்டிலுள்ள துறையைக் கேள் ; பிடி பணத்தை விலையாகப் பெற்ற மோதிரம், பதக்கம், பருத்த முத்து மாலை, மணிகள், உடை இவை களை மிகுதியாய்க் கொடுத்துப் புகழ்பெறுவாய்" என்று உலோபிகளை, கணவனை விட்டுப் பிறர்க்குப் பெற்ற குணடகர்களைப் புகழ்ந்து திரி வேனோ ? அதைவிட்டு உன்னைப் புகழ்வேனோ ? சொல்லுவாய்.

தனதன தந்தன தாத்த தானன
தனதன தந்தன தாத்த தானன
தனதன தந்தன தாத்த தானன தனதான

36. மதியுநெ டும்பரவை யேற்ற பானுவும்
மிளிர்பக லும்கன ராத்ரி யானதும்
மருவிய சந்தியும் வாய்த்த பூமியும் நெடுநீரும்
வளர்கின ரங்கியும் மார்த்த வாயுவும்
வெளியும டர்ந்திடு கூற்ற மானதும்
மகிழுற முந்தனி யாத்து மாவுமிவ் வகையாவுஞ்

சிதைவற நின்றிடு சாட்சி யாய்நடு
வொருகண மும்பிரி யாத்து ராகத
சிறையிலி ருந்திடு வேற்கி யாதொரு வினைதானும்
திலமள வுந்தவ றுக்கொ ணுதுநன்
னெறியி னடந்திட மாப்ர யாசமொர்
தினையள வின்கழல் காட்டி னுமென் இடர்போமே

மிதிலைநெ டும்படை வீட்டை மேயபின்
அகலிகை தன்குறை தீர்த்து நாரிதன்
விளைவைவி ளம்புதி யாற்ற போதன எனவோடும்
விரகுட னிந்திரன் காக்கை கூவினர்
கவுதம ரங்கொரு யாற்றை மேவினர்
விரைவின்மு யங்கினர் பார்த்த கோதமர் மகவான்மேல்

முதிர்பல லிங்கம தேத்தி னரவள்
வடிவுக லென்றிட வீழ்த்தி னரவள்
முறையிடல் கண்டுக னக்கி னரிவள் நினதாளால்

முதனுரு வம்பெற நாட்டி னூர்கதை
அடியில்வி ளைந்தகி மாத்ர மேயென
முனிசொல வங்கது கேட்ட வானவர் பெருமாளே.

உரை:—மிதிலையாகிய நீண்ட படை வீட்டைச் சேர்ந்தபின் அகலிகை யின் குறையைத் தீர்த்து, "இப்பெண் கல்லான விளைவைச் சொல்ல வேண்டும் தவத்தைச் செல்வமாகப் பெறறவரே" என்றவுடன் அவர் சொல்வாரானார்; "நள்ளிரவில், இந்திரன் கவுதமர் ஆசிரமத்தை அடைந்து அவர் விடியற்காலமென்று மயங்கக் காக்கைபோல் கூவினார். அது கேட்ட வுடன் கௌதமர் அங்கோர் ஆற்றைச் சேர்ந்தார். தண்ணீர் தூங்குவது கண்டு, இது இந்திரன் சூழ்ச்சியென்று வேகமாய் வந்தார். கவுதமர் வரு முன்னே விரைவாக இந்திரனும் அகலியும் கூடிக் கலந்தார்கள். இந்தி ரன், கவுதமர் வருவதுகண்டு, பூனையாய்ப் போகக்கண்டு அவன் உடம்பில் ஆயிரம் பெண்குறிகள் உண்டாக வேண்டுமென்று கவுதமர் சபித்தார். அகலிகையும் கல்லாய் விழுமாறு சபித்தார். இந்திரன் வேண்ட, அவன் உடம்பெல்லாம் ஆயிரம் கண்ணாகவும், உன் திருவடித் துகளால் அகலிகை முன்னை யுருப்பெறவும் சாபத்தை மாற்றிவிட்டனர். முன் விளைந்த நிகழ்ச்சி இம்மட்டுமே யெனக் கவுசிக முனிவர் கூறக் கேட்ட இமையவர் பெருமாளே; சந்திரனும் நெடிய ஒளிபெற்ற பரிதியும், மிக விருண்ட இர வும், நாடோறும் வரும் காலை, நண்பகல், மாலை என்னும் சந்தியும் எல்லாப் பொருள்கட்கும் இடமாக வுள்ள நிலமும், நீண்ட செல்வமும், கொழுந்து விட்டெரியும் நெருப்பும், ஒலிக்குங் காற்றும், ஆகாயமும், போராடிக் கொல் பவனும், மகிழ்ச்சியுள்ள அறக்கடவுளும், ஒப்பிலாத உயிரும், ஆகியவெல் லாம் அழியாமல் நின்று நிலைபெறக் காணும் கரியாகியும் உள்ள நீ, நடுவே ஒரு கணப்போதேனும் பிரியாத துராகிருதமான நீதியற்ற சிறையிலிருக் கும் என்னை மறந்தும் ஒரு தீவினையும் செய்வித்தல் கூடாது. உன் அன்பு நெறியில் நடத்தல் மிகக் கடுமையானது; ஒருதினை யளவேனும் உன் திரு வடிகளை வணங்கச் செய்தால், என் துன்பமனைத்தும் போம். என்று உன் திருவடிகளை வணங்கிப் பரமபதம் பெறுவேன்?

தனதச் தனனன தான தந்தன
தனதத் தனனன தான தந்தன
தனதத் தனனன தான தந்தன தனதான

37. கயலைக் கறுவுக பாட வஞ்சக
சரிதப் ரபலவி சால சம்ரம
கலகக் கபடவி கார வஞ்சன விழிமாஞர்

களபப் பரிமள வாச பங்கய
முகிளத் துபயச மான மங்கள
கடினப் புளகித பார கொங்கைகள் பிரியாதே

சயனக் கலவிவி நோத ரஞ்சித
வசனப் ரியவனு ராக விங்கித
சரசச் சுரதச மேள சிங்கியில் வசமாகிச்

சருவத் திருவு ளமோவு'னன்பரை
மருவத் திருவு ளமோவு கந்தது
தனையிப் பொழுதடி யேனு ணர்ந்திட உரையாயே

அயனுற் றிடவிமை யோர்ப ணிந்தெழ
விடைபெற் றகலிகை தான கன்றிட
அருமைத் தவமுனி ராசன் முன்செல உயிர்போலே

அடியிற் பிறகிளை யோனும் வந்திட
ஒருவிற் கரமிசை யேபொ லிந்திட
அருகிற் றெரிவையர் மோக னங்கொள இதனூடே

வெயிலைத் தருமணி மேடை யின்புற
மயிலொப் பெனவிளை யாடு மிந்திரை
விழிதைத் திருபுயம் வாட அங்கவள் முலைமீதே

விமலக் கமலவி லோச னம்புக
ஒருவற் கொருவர வாவு றும்படி
மிதிலைத் தெருநடு வேந டந்தருள் பெருமாளே

உரை :—அகலிகை சாபந்தீர்த்தவுடன் பிரமன் வந்து கண்டு பேசிப் போகவும், தேவர்கள் கண்டு வணங்கிப் போகவும், அகலிகையை அனுப்பிய பின், அரிய தவஞ்செய்த விசுவாமித்திரர் முன்னே செல்ல, உன் திருவடிகளின் பின், இலக்குவன் உயிர்போல் பின்தொடர, ஒப்பில்லாத வில் இடக்கையில் பொலிய, பக்கலில் நின்று பார்க்கும் பெண்கள் காதல் கொள்ள, அவர்கள் நடுவே, வெயில் வீசும் மணிகள் அழுத்திய மாளிகையின் மேல், மயில்போல் விளையாடும் சீதாபிராட்டியின் திருக்கண்களின் பார்வை யெழுந்தபோது, உன் இரண்டு தோள்களும் வாட, அவள் திருமுலைகள்மேல் தூய தாமரைபோன்ற உன் கண்கள் பட, ஒருவர்க்கொருவர் காதல்கொள்ள மிதிலைநகர்த் தெருவழியே சென்ற பெருமாளே ; பெண்களின் கண்கள், எமக்கு நீயோ ஒப்பென்று சேற்கண்டையைக் கோபித்ததுபோல விழித்து மூடும் வஞ்சக நட்புள்ளவை ; பரவி விசால

மாய் மிக்க அழகுள்ளவை ; சமர்விளைப்பவை ; கபடமுள்ளவை ; காதல் உண்டாக்குபவை ; மை யிடப்பட்டவை ; இத்தகு கண்களையுடைய பெண் களின் தனங்கள் மணங்கலந்த சந்தனம் பூசப்பெற்று இரண்டு தாமரை யரும்புக்கு ஒப்பாகி மங்கலமுடையவை ; இறுகிப் பருத்துள்ளவை ; அவற்றை விட்டுப்பிரியாமல் படுக்கை யறையில் கலவியில் திளைத்து அழ காய் இன்சொற் கூறி ஒத்த காதலோடு குறிப்பறிந்து கூடும் கூட்டத்தில் பலவகைக் குறிகள் செய்து மெய்மறந்து இன்பம் நுகரும் வகைகளில் நான் அகப்பட்டுத் திரிவது உனக்குத் திருவுளமோ? உன் அடியாரைச் சேர்ந்திருக்கத் திருவுளமோ? அடியேற் கருளவேண்டும்.

தனன தனன தனன தனன
தனன தனன தனன தனன
தனன தனன தனன தனன — தனதான

38- வனிதை மருவு புதுவை குருகை
பிருதி குலிசை சிறுபு லிசைவெள்
வரைக ணபுரம் வடம துரைவிண் — நகரேநீர்

மலைக டிநக ரபிகை துவரை
நறைசை பதரி கரிகி ரிதிரு
மழிசை யறிவி ணகரி திருணே — மிசைமாலி

இனைய பதிக ணினையு மவர்கள்
வினைகள் மிடிகள் பிணிகள் பழிகள்
எவையு மவல முழுது மகல — அருள்செய்

தினிய திருவும் இனிய வறிவும்
உதவு முனது சரண கமல
மெனது மனது பயில முயலு — மதிதாராய்

புனையு மிதிலை மகளிர் மறுகின்
மறுகு பிறகு கழிய வரசு
பொலியு மனைமு னணுகி யவையில் — அழகாகப்

புகுது மளவில் முனிவ னடிகள்
பரவி மருவி யுடல மினிது
புளக மெறிய வயனை யனைய — பெரியோனே

தனுவு மினிய கணையு மெவரு
மெழுத வரிய வடிவு மிளைய
சதுர னளவி லருளு முடைய — தனியாண்மைச்

சமர குமரன் வரவை யுரைசெய்
எனவு ளுருகி யிருகை தொழுது
சனகன் வினவு கரிய பெரிய பெருமாளே.

உரை :—அழகுசெய்யப்பட்ட மிதிலையில், பெண்கள் விரும்பி மயக் கங்கொள்ளும் தெருக்கள் பிற்படநடந்து சனகமன்னன் இருக்கும் விளக்க முள்ள அரண்மனையின் முன்னர்ச்சேர்ந்து அழகாகப் புகுந்த வளவில் அவ்வரசன் எதிர்கொண் டழைத்துக் கவுசிகமுனிவருடைய திருவடிகளை வணங்கிப் போற்றி ஆசனத்தி லமர்த்தி, மகிழ்ச்சியால் உடல் பூரிக்கப் பெற்று மயிரரும்பச் சொல்வானுன் ; "பிரமனை யொத்த பெரியோரே, வில்லும் அதற்கினிய அம்பும், எவராலும் ஓவியத்தெழுத வொண்ணுத வடிவும், தம்பியின் மாட்டுவைத்த அருளும் உடைய ஒப்பில்லாத ஆண் மையு முள்ள இவ்வரச மைந்தன் வந்த வரலாற்றைச் சொல்லுக " வென மனமுருகி இரு கைகளாலும் வணங்கிக் கேட்கப்பட்ட கரிய நிறமும் மிக்க அன்பும் உடைய பெருமாளே ; சூடிக்கொடுத்த நாய்ச்சியார் திருவவதாரம் செய்தருளிய திருவில்லிபுத்தூர், திருக்குருகூர், திருப்பிரிதி, திருக் குலிசை, திருச்சிறுபுலியூர், திருவெள்வரை, திருக்கண்ணபுரம், வட மதுரை, திருவிண்ணகரம், திருநீர்மலை, திருக்கடிநகர், திருக்கடிகை, துவா ரகை, திருநறையூர், பதரிகாச்சிரமம், அத்திகிரியான காஞ்சிபுரம், திரு மழிசை, சீராம விண்ணகரமான சீகாழி, திருவணையான தருப்பசயனம், திருமிசைமாலி, முதலிய திருப்பதிகளை மனதால் தொழுதவர்களுடைய பாவங்கள், வறுமைகள், நோய்கள், குற்றங்கள், நலமல்லாத பொல்லாங்கு ஆகியவெல்லாம் போக வருளி, இனிய செல்வமும், இன்பமான அறிவும், தரும் உன் திருவடிகளை என்மனம் கூடிப் பழக முயலும் மெய்யறிவைத் தருவாயாக.

தனதன தான தந்த தந்த
தனதன தான தந்த தந்த
தனதன தான தந்த தந்த தனதான

39. மனையொடு வாசல் கண்டி ருந்தும்
வினைமட வாரு டன்ப யின்றும்
மருவிய பாலர் தந்தை முன்பின் வருபாலர்

மரபினு ளோர்க ளென்று துன்று
நெடுவலை யூடு சென்ற ழுந்தி
வழிவழி பாத கம்பு ரிந்து திரிவோனைத்

தினையள வேனு மன்பு தந்துன்
அடியவ ரோடு தொண்டு கொண்டு
சிறுகுகள் யாவை யுங்க ளைந்து — சடகோபர்

திருமறை யாயி ரந்தெ ளிந்து
வளமுள கோயி லின்கண் வந்து
செயசெய வாழி யென்றி யம்ப — அருள்வாயே

வினவிய போது கங்கை தந்த
நரபதி பேரன் மண்ட லஞ்செய்
வெயில்விடு பாநு வம்ச துங்கன் — மனுநீதி

விரவிய கோச லம்பு லைந்த
சரயுவை நாட னிங்கு நின்ற
விறலினை யானெ டங்கி ருந்த — இருவோர்முன்

தனிமக னாகி வந்த கொண்டல்
பெயருமி ராம னிங்கு முங்கள்
தனுவலி காண வந்த பண்பன் — உலகாளும்

தயரத பூபன் மைந்த னென்று
கவுசிகர் கோன்வி ளம்ப வன்று
சனகன்மு னேவி ளங்கி நின்ற — பெருமாளே.

உரை :—சனகமன்னன் கேள்விக்குக் கவுசிகர் விடையிறுக்கிறார் : "தேவலோகத்துக் கங்கையை விண்ணினின்றும் மண்ணுக்குக் கொணர்ந்த பகீரதமன்னன் பெயரன் ; உலகெங்கும் வெயில் பரப்பும் சூரியன் மரபிற் சிறந்தவன் ; மனு நீதிகலந்து கோசலமென்று பெயர்பெற்று, சரயு நதி பாய்ந்து வளஞ்செய்யும் நாட்டை யுடையவன் ; இங்கு நிற்கும் வீரமுள்ள தம்பி இலட்சுமணன், அயோத்தியிலிருக்கும் பரத சத்துருக்கினர் ஆகியோருக்கு முன்னே பிறந்து, ஒப்பிலாத மேகம்போல் வடிவுடைய இவன் பேர் இராமன் ; இங்கேயிருக்கும் உங்கள் வில்லின் வலிமையைக் காண வந்த நற்பண்பினன்; உலகையாளும் தசரதமன்னன் புதல்வன்;" என்று சொல்லச் சனகன்முன் உன் அவதாரத்தின் பெருமை யெல்லாம் விளங்க நின்றனை பெருமாளே; வீடும், வாசலும், பார்த்திருந்தும் பாவ வடிவமான பெண்களுடன் கலந்திருந்தும், பிறந்த குழந்தைகள், தகப்பனைப்போலே குழந்தைகளைப் பெற்று, அந்தப் பிள்ளைகளுக்குத் தந்தையாகித் தாம் பின் பெற்ற பிள்ளைகள் என்று இப்படி மரபுமுறை சொல்லிக்கொள்ளும் தன்மைவாய்ந்துள்ள நெருங்கக்கட்டிய நெடிய மரபு வலைக்குள் நடந்தும் அழுந்திட உடலெடுக்கும் போதெல்லாம், பாவமே செய்தும் செத்தும்

பிறந்தும் திரிகிற தொழிலுடைய எனக்குத் தினையளவேனும் உன் அன்பைத் தந்து, உன் அடியாரொடு சேர்த்து, உன் அடிமைத்தொழில் செய்வித்துக்கொண்டு பொல்லாங் கனைத்தையும் வேரொடு பிடுங்கிச் சடகோபரருளிய திருமறை ஆயிரத்தையும் ஓதித்தெளிந்து வளமுடைய கோயிலுக்குள் வந்து, செய செய வாழ்கவென்று பரவ அருள்வாயாக.

தானதன தானன தத்த
தானதன தானன தத்த
தானதன தானன தத்த தனதான

40. ஆனையது மூலமெ னத்த
ஞவிவிடு போதில ழைக்க
ஆதரவி ஞேடுவ னப்புள் மிசையேறி

யாணர்மலர் வாவியி றுத்து
மாமுதலை வீடுபெ றப்பொன்
ஆழிதனை யேவுவி சித்ர மதுபோலே

மேனியிருள் போலநி றத்த
காலனெனை மோதுக யிற்றின்
வீசியெதி ராடிய லைக்க வருபோதில்

வீரவடி வாளியும் வெற்றி
வார்சிலையு நீயுமெ னக்கு
மேவுதுணை யாய்வெளி நிற்க நினைவாயே

தானைமிதி லேசனு ரைக்க
ஓரறுப தாயிர மிக்க
தாவில்வய வீரர்நெ ருக்கி நிரைதோளிற்

சாதுரிய மானகை யிற்றி
ஞூடுதறி பேணிம டுத்த
சார்பினிட மார்பின ணைத்து நனிபோதா

மாநிலமொ ரேழும திக்க
ராசசபை மீதினி லிட்ட
வானிடுவின் மேருநி கர்த்த சிலைசாபம்

வாழ்வுபெறு சீதையொ ருத்தி
சூடியிட நாடியெ டுக்கும்
மாலையென வோடியெ டுத்த பெருமானே.

உரை :—கோசிகன் மொழிகேட்ட, சேனையையுடைய சனகமன்னன், வில்லை யெடுத்துவரச் சொல்ல ஒப்பற்ற அறுபதினாயிரம் பேர்கள், மிக்க புகழும், வருத்தமில்லாத ஆற்றலுமுள்ள வீரர்கள், நெருக்கமாக நின்று ஒழுங்காகத் தூக்கி வரத்தக்க கனமுள்ள கயிற்றில் சேர்த்த ஆடு தண்டு களின் அந்தச் சார்பினிடங்களை மார்பினோடே சேர்த்து அணைத்து மிக வருந்திக் கொண்டுபோய் ஏழு உலகத்தவரும் மதித்து வியக்குமாறு அரச வையிலே வைக்கப்பெற்ற, வான வில்லையும் மாமேருவையும் ஒத்த அவ் வில்லை, வாழ்வுபெறும் ஒப்பில்லாத சீதாபிராட்டியார், திருமார்பில் சூட் டுதற்கு ஆராய்ந்தெடுத்த மாலைபோல், ஒடிக் கையிலே எடுத்த பெரு மானே; யானை, தன் உயிரை விடுகிறபோது ஆதிமூல மென்றழைக்க, அழ கிய கருடன்மேலேறி அழகிய பூக்களையுடைய பொய்கையிலே அன்பொடு சேர்ந்து, பெரிய முதலை வீடுபெறத் திருச் சக்கரத்தை ஏவிய வேடிக்கை போல, கறுத்த நிறமுள்ள எமன் என்னை, மோதும் பாசக்கயிற்றை வீசி, எதிரே ஆடி அலையப்பண்ண வரும்போது, வீரம் பொருந்தியதும், அரத் தாற் கூர்மை செய்யப் பெற்றதுமான அம்பும், வெற்றி பொருந்திய வில் லும் கொண்டு, நீயும், எனக்குத் துணையாகிவர நினைத்தருள வேண்டும். இராமன் பெரிய வில்லை, சீதைக்குச் சூட்டும் மாலை போல் எடுத்தான் என் பது, அவனது போற்றலையும், சீதைபால் கொண்டுள்ள பெருங் காதலை யும் விளக்குகின்றது.

தனத்தன தனத்த தனத்தன தனத்த
தனத்தன தனத்த தனதான

41. அகத்தினு மிருப்பை புறத்தினு நடப்பை
அளித்துட னழிப்பை யழியாதே
அடக்குவை தெரித்து விடுப்பைவெ ளிநிற்பை
அருட்செய நினைப்பை ஒழியாயுன்
மகத்துவ மொருத்த ருரைக்கவு மெடுத்து
வழுத்தவு நினைக்கில் எளிதோவென்
வசத்திலொ ரியற்கை செயற்கையி லைமற்றுன்
வழிபடு மெனக்கு நிகர்யாரோ
நகத்திரள் வெடிக்க மதக்கரி பதைக்க
நீடுப்பணி நெளிக்க மதிபானு
நடுக்குற வுடுக்கள் பொடுப்பெட னவுட்க
நமற்குயிர் திடுக்க முறவேநீள்

சகத்ரய மனைத்து நடுக்குற நிருத்தர்
தனிச்சிலை [1] சிவிட்கி — அவையூடே
சடக்கென வெடுத்து முறித்துநி கர்த்த
சமர்த்தைநி லையிட்ட — பெருமாளே.

உரை :—எடுத்த வில்லை நாணி ஏறிடுகின்றபொழுது மலைக் கூட்டங்கள் வெடிக்கவும், மதமுள்ள திசையானைகள் பதைக்கவும், பூமியைச் சுமக்கும் ஆதிசேடன் தலைகளை நெறிக்கவும், சூரிய சந்திரர்கள் திசைகெட்டுத் தடுமாறவும், உடுக்கணங்கள் பொலபொலென வீழவும், நமனுக்கு உயிர் திடுக்கிடவும், மூவுலகங்களும் நடுங்கவும், கூத்தாடும் ஒப்பில்லாத சிவபிரானுடைய வில்லை மேலெழுந்தோங்கிய அரச சபையில் சடக்கென்றெடுத்து முறித்து ஒப்பற்ற திறமையை நிலை நிறுத்திய பெருமாளே; நீ, உள்ளும் இருப்பாய், புறத்திலும் நடப்பாய்; காத்து உடனே கொல்வாய்; அவற்றை அழியாமல் உன்னுள்ளே யடக்குவாய் ; அவை இன்னவென்று தெரிவித்துப் புறம்பே விடுப்பாய் ; மறைந்து நிற்பாய் ; வெளிப்பட்டு நிற்பாய் ; அருள்செய நினைப்பாய்; இவற்றை யொழியாமற் செய்வாய் ; உன் பெருமையை ஒருவர் சொல்லவும் புகழவும், ஆராய்ந்து பார்த்தால் எளிதோ ? யாராலுமாகாது ; ஆதலின், என் உரிமையில் ஒரு தன்மையும் செயலும் இல்லை ; எல்லாம் உன்னுடையனவே யாதலின், உன்னைத் தொழுது பரவும் எனக்கு ஒப்பாவார் யார் ? யாரையுங் காண்கிலேன்.

தானதன தான தத்த
தானதன தான தத்த
தானதன தான தத்த — தனதான

42. மேகநிறம் வாழி பத்ம
நாபிமலர் வாழி சக்ர
மேவுகரம் வாழி நித்தம் — வினைமூடும்

வேதனைகள் சேர்பி றப்பை
மாறியினி ஞான முத்தி
வீடுதர வேணு மற்ற — தருள்வாயே

த்யாகபர ளுகை மிக்க
வாழ்வுடைய ளுகை வுற்ற
சீலகுண ளுகை நிற்க — இசைபூணுஞ்

(பி - ம்) 1. வளைத்து

சீரியவ னாக வெற்றி
மாகவினு னாக ரட்சை
சேரடிமை யாக முற்று மருள்வாயே
நீகருணை யால ளித்த
ராகவனென் வேள்வி யுற்று
நீடுசிலை தான்மு றித்த படியாலே
நேயமகள் பாணி பற்ற
வேணுமினி மாதர் மக்கள்
நேரில்படை யோர மைச்சர் கிளைசூழ
வாகடிதெ னுநி றத்த
கோசலம கீப னுக்கு
மாசில்கலி யாண பத்ரி யதனோடும்
வாய்மைபெறு தூது விட்ட
நீள்சனகர் கோனை மிக்க
மாமனென வேப டைத்த பெருமாளே.

உரை :—இஃது, அயோத்திக்குத் தூதனுப்புவதைக் கூறுகிறது: "நீ, தயவினாலே பெற்ற இராமன், என் வேள்விக்கு வந்து நீண்ட வில்லை முறித்ததனால், என் அன்புள்ள மகளைக் கைப்பிடித்தலாகிய மணவினை நிகழ்த்தல் வேண்டும்; இனி, உனது மனைவியர், மக்கள், நிகரில்லாத கிளைஞர், அமைச்சர், சேனைகள் சூழ விரைவில் இங்கு வருக", என்று புகழமைந்த கோசலநாட்டரசனான தயரதனுக்கு மணவோலையைக் கவுசிகர் சொல்லிய சொல்லோடு தூதர்மூலம் அனுப்பிய நீண்ட புகழ்பெற்ற சனக மன்னனை மாமன்முறையாகப் பெற்ற பெருமாளே; நின் கரிய மேகம் போன்ற திருமேனிவாழ்க; தாமரையாகிய திருவுந்தி வாழ்க; சக்கரந்தரித்த திருக்கை வாழ்க; என்று நான் பரவவும், அழிவில்லாத பாவத்தினால் மூடப் பெற்றதும் துன்பம் நிறைந்ததுமான பிறப்பை (விட்டு) நீக்கி, வீடுபெறவும் செய்தல் வேண்டும். அன்றியும், வண்மை மிக்கவனாகவும், சிறந்த வாழ்வுடையவனாகவும், நற்குணம் நிறைந்தவனாகவும், இவை என்றும் அழியாது நிலைத்து நின்ற புகழ்மிக்கவனாகவும், வெற்றிபெற்ற பெரும் புலவனாகவும், உன் காவலைப் பெறும் அடியவனாகவும், இருக்க எனக்கு அருள் செய்வாயாக.

அடிமைத் தன்மையிலும் இறைவனது காவல் இன்றி யமையாததென்று கருதி 'ரட்சை சேரடிமையாக' என்கிறார். நிறத்த—புகழுடைய. 'வாய்மை பெறு' என்றது கவுசிகர் சொல்லப்பெற்றதைப் பெற்று என்பது கருதியென்க.

தனன தானன தானன தந்தன
தனன தானன தானன தந்தன
தனன தானன தானன தந்தன தனதான

43. நினைவி லேயெவ ரோடுமொ ழிந்திடு
மொழியி லேதவ ரூதுந டந்திடு
நெறியி லேவினை யாவையும் வென்றிடும் வுணர்வூடே

நிலையி லேயழ காகிநி ரம்பிய
வடிவி லேயிரு போதுநி ரந்தர
நினது பாவனை யேகொடு [1]நின்றிடும் அடியார்தம்

மனையி லேயவர் கூடியி ருந்துள
சபையி லேயவர் கால்கண டந்துள
வழியி லேயெழு தூளியெ னும்படி திரியாதே

மடந லார்வச மாகிய யர்ந்திடு
கொடிய னேனொரு காலம டங்கியுன்
வனச ரோருக பாதயு கந்தனில் அடைவேனோ

சனகர் கோன்விடு தூதன் வழங்கிய
இனிய வோலையை யோதியு ணர்ந்துள
தனமெ லாமெதிர் வீசிம கிழ்ந்துதன் உயிர்போலும்

தனயர் தாமிரு வோர்கள்ம டந்தையர்
அறுப தாயிர மூவர்கள் மந்த்ரிகள்
சகல சேனையும் யாவரு மன்பொடு புடைசூழ

வினைய மாகிய வோசைநெ டுங்கடல்
வருவ போன்முர சானத திர்ந்திட
விரைவி னுலழ காகிய சந்திர வரைமேவி

விசைகொள் தேர்மிசை யேவரு தந்தையை
எதிர்கொ ளாவனை வோர்களொ டுந்திரு
மிதிலை [2]மேவிய ராகவ வண்டர்கள் பெருமாளே.

உரை:—சனகன் விடுத்ததூதர் கொடுத்த இனிய ஓலையைப் படித்தறிந்து, தன்செல்வம் எல்லாவற்றையும் அத்தூதருக்களித்து, மகிழ்ந்து, தன் உயிர்போன்ற மக்களாகிய பரத சத்துருக்கினரும் அறுபதினாயிரம் தேவிமாரும் பட்டமகிஷிகளாகியவர் மூவரும், அறுபதினாயிரம் அமைச்ச

(பி - ம்) 1. வென்றிடும் உனதாசர். 2. மேவுவி யோமசிறங்கிளர்.

ரும், அறுபதினாயிரம் அக்குரோணி சேனைகளும், அன்புடன் தன்புடை சூழ, காற்றால் முழங்கும் கடல் வருதல் போன்று, குணிலா லெறியப் படும் முரசு முழங்க விரைந்து நடந்து, அழகாகிய சந்திர சயிலத்தில் வந் திறங்கி, அன்றிரவைக் கழித்து, மறுநாள் புறப்பட்டு விரைந்துசெல்லுந் தேரின்மேல் வரும் தந்தையை எதிர்கொண்டு எல்லாருடனும் மிதிலை சேர்ந்த இராமா, தேவர்தம் பெருமானே, நினைவிலும், எவருடனும் பேசும் பேச்சிலும், வேத நெறிதவறாது நடக்கும் வழியிலும், எல்லாப் பாவங்களை யும் வெல்லும் அறிவிலும், நிலையான ஒழுக்கத்திலும், அழகுமிக்க வடிவத் திலும், இரவிலும் பகலிலும் எப்போதும் விடாமல் உன் நினைவை யுளங் கொண்டு நிற்கும் உன் அடியார் வீட்டிலும், அவர்கள் கூடியிருக்கும் அவை யிலும், அவர் தம் திருவடிகள் நடக்கும் வழியிலும் எழும் தூளாகத் திரி யாமல் அறியாமையை யுடைய பெண்கள் வயத்தில் அகப்பட்டு, உடலை யும் மறந்து கொடுமைகளை யிழைத்தேன். இவையெல்லாம் அடங்க உன் தாமரைப் பூவையொத்த திருவடிகளை யடைவேனோ?

தனதந் தனத்த தந்த
தனதந் தனத்த தந்த
தனதந் தனத்த தந்த தனதான

44. விதியென் றுருக்கொ டிந்த
உலகம் படைப்பை யிந்த்ரன்
மிகுநண் புபற்று தம்பி உருவாகி

விரகின் புரப்பை கங்கை
முடிகொண் டபித்த னென்று
மிடல்கொண் டழிப்பை யுன்றன் விளையாடற்

கதிகண் டுரைப்ப தன்று
சுருபந் தெரிப்ப தன்று
ககனஞ் சிறப்ப மைந்த திருமேனி

கருதுங் கணக்கி றந்த
உளநெஞ் சுறத் தெளிந்து
கரைகண் டுநிற்கு மின்பம் அடைவேனோ

எதிர்கொண் டழைத்து வந்த
சனகன் பதிக்குள் வந்த
ரவிதன் குலத்து யர்ந்த நரபாலன்

எழில்மண் டபத்தி ருந்த
பினர்பண் பிலக்க ணங்கள்
எவையுந் தெரிக்க வென்ன மகிழ்சீதை

மதிமண் டலத்தை வென்ற
முகமும் பருத்த கொங்கை
மலையுஞ் சிறுத்த னுங்கும் இடைநூலும்

வடிவுஞ் சிறக்க வந்து
சபையின் கணிற்றல் கண்டு
மயல்கொண் டநற்றெய் வங்கள் பெருமாளே.

உரை: — எதிர்கொண் டழைத்த சனகன் நகருக்குள் வந்த சூரியகுலத்துப் பிறந்த தசரதமன்னன், அழகிய அரசவையிலே யிருந்து, உம் மகளின் குணங்குறி முதலிய இலக்கணங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்க, அப்படியே சனகன் அழைக்க (வந்த) மகிழ்ச்சி மிக்க சீதாபிராட்டி, தன் சந்திரமண்டலத்தை வென்ற (நெற்றியும்,) முகமும், பருத்த மலைபோன்ற திருமுலைகளும் சிறுத்துத் துவளும் நூல்போல் மெல்லிய திருவிடையும், திருமேனியுஞ் சிறக்க வந்து அரசவையில் நிற்கக்கண்டு மயல்கொண்டிருந்த தேவர்கள் பெருமாளே; பிரமன் வடிவுகொண்டு, நீ இந்த உலகைப் படைப்பாய்; இந்திரனுக்கு மிக்க நட்பான தம்பியாகிய உபேந்திர வடிவெடுத்துச் சூழ்ச்சியொடு காப்பாய்; கங்கையைச் சடையில் தரித்த சிவனென்னும் உருக்கொண்டு அழிப்பாய்; உன் திருவிளையாட்டின் வழி தெரிந்து தொழுதற்கு அடங்காது; உன் வடிவம், கண்ணுக்குக் காண அடங்குவதன்று; ஆகாயத்தின் உருவம்போல அடங்காத சிறப்புடையது உன் திருமேனி; இத்தகைய உன்னை நெஞ்சிலிருத்தித் தெளிந்து, கரை காண வியலாத மகிழ்ச்சிக் கடலைக் கரைகண்டு நிற்கும் பேரின்பம் பெற மாட்டுவேனோ?

தனதத் தனண தனன
தனதத் தனண தனன
தனதத் தனண தனன தனதான

45. பவளத் துவர்வாய் மகளிர்
வசனத் தினிலே வதன
பதுமத் தினிலே மருவி விளையாடும்

பரிசத் தினிலே கலக
நயனத் தினிலே வினைசெய்
[1] பகவத் தினிலே யொழுகி வசமாகி

அவலத் தினிலே பொழுது
கழியப் பொருள்பேய் வறுமை
அடையப் பழியே பெருக அவரோடும்

அளவற் றிடுமோ கனமொ
டொருமித் திடுபா வியையும்
அடிமைக் கொளவே நினைதல் புரிவாயே

இவனுக் கிவளே மனைவி
இவளுக் கிவனே பதியும்
எனவுட் கருதா வரசர் மறைவாணர்

இவரிப் படியே மொழிய
அவையிற் கொடிபோன் மதுரம்
எழுசொற் கிளிபோல் விரவும் ஒருசீதை

கவளக் கரியோ வலதென்
உயிருக் குயிரோ கரிய
கடவுட் சுடரோ வெனவுள் நிறைசோரக்

கவலைப் படுமா மனதின்
மயலிட் டஙனே யுருகு
கருணைக் கடலே பெரிய பெருமாளே.

உரை :—சீதாபிராட்டியாரைக் கண்ட அரசர்கள், மறையோர் ஆகிய வெல்லோரும், இவனுக்கு இவளே பொருந்திய மனைவி ; இவளுக்கு இவனே கணவன் என்று நினைத்துச் சொல்லுமாறு, அரசவையில் பூங் கொடிபோற் றிருமேனியும், இனிமைமிக்க கிளிமொழிபோற் சொல்லும் உடைய ஒப்பற்ற சீதை, உன்னைப்பார்த்து, "என் உயிரை உணவாகக் கொள்ளும் யானையோ? என் உயிருக்கு உயிரோ? கறுத்த சூரியனோ?" என்று காதல் மயக்கத்தினால் நினைத்துத் தன் நிறையழிந்து மனந்தடுமாற அவள் உள்ளத்தில் மையலை நிறைத்து, அவள்மேல் காதல்கொண்டு உருகும் அருட்கடலே, பெரிய பெருமாளே; பவளம்போற் சிவந்த வாயை யுடைய பெண்கள் சொற்களிலும், தாமரையொத்த முகத்திலும், அவர்கள் தழுவுவதிலும், கலகம் செய்யும் கண்களிலும், குறியிலும், மனம் சென்

(பி - ம்) 1. பகரத்.

றகப்பட்டு, அவலத்தில் பொழுதுபோகச் செல்வம் அழிந்து, வறுமையடைய, உலகம் இகழப் பழியை வளர்த்து, அப்பெண்களோடு, அளவற்ற காதலால் ஒருமைப்பட்டுக் கெடும் பாவியாகிய என்னையும் அடிமை கொள்ள உன் திருவுள்ளத்தில் நினைத்தருள வேண்டும்.

தான தன தான தந்த தந்த
தானதன தான தந்த தந்த
தானதன தான தந்த தந்த தனதான

46. வாணிமல ரோனை யன்பு கொண்ட
தேவியபி ராமி யந்தி சந்தி
மாமறைவ லோர்வ ணங்கி நின்ற முதலாளி

மாயையதி ரூபி திங்க டங்கு
வேணியுடை யாள்ப்ர பஞ்ச மெங்கும்
வாய்மைபல வாறு கொண்டி யம்ப அருள்மாது

பாணியொரு நாலு டன்பொ லிந்து
தாவளிய மாய்வி ளங்கு மங்கை
பாரதியென் னுவில் வந்தி ருந்து விளையாடப்

பார்முழுது நீய ளந்தெ ழுந்த
தாள்[1]முடியின் மேவி யின்சொல் விஞ்சு
பாடல்கொடு பாடி யன்பர் பந்தி அடைவேனோ

காணவிடி யாது கங்குல் கங்குல்
பேணமுடி யாது சங்கு சங்கு
காதலறி யார்கள் பெண்கள் பெண்கள் அனலாகக்

காயுமெனை வீறு திங்க டிங்கள்
சாலவதி பாவி தென்றல் தென்றல்
காமன்வரு வீதி யெங்கும் யெங்கும் நிலைகாணேன்

நாணிசிலை தூணி கொண்டு கொண்டு
தூரவொரு மேக நின்று நின்றென்
நாணமுட னுவி யுண்ட துண்ட தெனமாழ்கி

நாடுமொரு சீதை யங்கி ரங்க
நேரவளின் மோகம் விஞ்ச விஞ்ச
நாளைமண மாகு மென்றி ருந்த பெருமாளே.

---

(பி - ம்) 1. மிசையி லேவி ளங்கு கின்ற.

உரை :—இஃது, அரண்மனையில் காதல் மீதூர்ந்த பிராட்டியார் சொல்வதை அறிவிக்கிறது: "இரவு நான் பார்க்க விடியாது; இவ் வளைகள் நீங்காது நழுவுவதனை நழுவாமற் செய்திருக்க முடியாது; ஆசையறியார்கள் பெண்கள் ; குளிர்ச்சியுள்ள சந்திரன் என்னை நெருப்பாகச் சுடுகிறது : தென்றல் காற்றுப் பெரும் பாவியாய் உள்ளது ; மன்மதன் வரும் தெரு வெங்கும் நிலை காணேன் ; நாண்பூட்டிய வில்லும் அம்புக் கூடும், கையி லும் தோளிலும் பொருந்தக்கொண்டு சேய்மையில் ஒரு கருமுகில் நின்று என் நாணத்தையும் உயிரையும் உண்டது" என்று வருந்தி, என்று மணம் நடக்குமென்று துன்பப்பட்டுச் சீதை அங்கிருக்க, அவளைப்போலும் காதல் உனக்கும் மிக, நாளை மணம் நடக்குமென்று நினைத்திருந்த பெருமாளே; வாணி; தாமரையிலுள்ள பிரமனிடம் அன்புகொண்ட மனைவி; அபிராமி; அந்தி, காலை, உச்சி ஆகிய முக்காலமும், மறைவல்லோர் வணங்கி நிற்கும், மந்திரங்களுக்கு முதன்மையான காயத்திரி ; மாயை; வியக்கத்தக்க வடிவ முள்ளவள் ; சந்திரன் பொருந்திய சடையை யுடையவள்; உலகமெங்கும் பல மொழிகளைப் பேசுமாறு அருளியவள் ; ஒப்பற்ற நான்கு கைகளும் வெண்ணிறமும் பொருந்திய மங்கை ; பாரதி ; எனத்தகும் கலைமகள் என் நாவில் வந்திருந்து விளையாட, அதனால் உலகத்தை அளந்துள்ள உன் திருவடிகளை என் தலைமேல் வைத்து, இன்சொற்களால் மீறிய பாக்களைப் பாடி, உன் அடியார் ஒழுங்கிலே சேர்ந்திருப்பேனோ ? சொல்லுக.

தானதன தான தந்த தந்த
தானதன தான தந்த தந்த
தானதன தான தந்த தந்த தனதான

47. வாரமதி யீர நண்பு பண்பு
தீரநிலை யாண்மை வென்றி நன்றி
வாய்மைசதிர் மேன்மை தஞ்ச மின்சொல் வலிநேயம்
வாசிகொடை பார மன்பொ ழுங்கு
பேரறிவு தேசு நன்கு ணங்கள்
வாழ்வுபல நூல்வி ளங்கன் மந்த்ரம் நெறிநீதி
காரியம்வி சார நம்பு சிந்தை
வாவுகிளை யோத னந்த வங்கள்
காமவதி ரூப வம்ச மிந்த நலன்யாவும்
காசினியின் நீயொ ழிந்து பின்பு
வேறுடையர் யாவ ரென்றி ருந்து(ப்)
காவலரை யேபு கழ்ந்து வம்பில் உழல்வேனோ

மேருகிரி பார கொங்கை கொங்கை
காலன்விடு தூது கண்கள் கண்கள்
மேகமவர் பார கொண்டை கொண்டை அவர்தாமோ

வேரிமலர் மேவு மங்கை மங்கை
ஆரநகை மார சிங்கி சிங்கி
மீளநினை யாது சென்ற சென்ற நடைதானென்

ஆருயிரை யீரு கின்ற தின்று
யாதுமவர் கோல வஞ்ச வஞ்சம்
ஆரழலை வீசு தென்றல் கொன்று விடுமானல்

ஆசையென தாசை யென்று நின்று
சீதைதிரு மேனி கண்ட வன்றுள்
ஆதரவி னேர றிந்து கொண்ட பெருமாளே.

உரை :—இராமபிரான் சீதையினிடம் மயக்கங்கொண்டு சொல்வதை இது விளக்குகின்றது. "மகாமேருவை யொத்த முலைகளும், எமன் விட்ட தூதரைப்போன்ற கண்களும், மேகம்போன்ற கொண்டையும் பெற்ற அவள் தாமரைப்பூவில் வாழும் பெண்; அவள் பற்கள் முத்தினைப் போன்றவை ; அவள் மன்மதன் உடைமையான பதுமைப் பூட்டு ; (பதுமைப் பூட்டாவது, ஒருபதுமையை ஒட்டுக்களெல்லாம் நெருங்கச் சொருகிப் பூட்டி யாட்டிப் பார்த்த பேரெல்லாம் மயங்கப்பண்ணும் சித்திரமான சூத்திரப் பதுமை.) அவளிடம் சென்ற மனம்திரும்ப நினையாமல் போயிற்று; அவள் நடை என் உயிரை யறுக்கின்றது ; இப்போதெல்லாப் பொருள்களும் அவளுடைய அழகிய வஞ்சகம் ; என்னுடம்பெங்கும் நெருப்பை வீசும் தென்றல் என்னைக் கொன்றுவிடும்; பாரிலுள்ள பெண்களைக் கண்டு மால் கொள்ளாத என் நெஞ்சு இவளைக்கண்டு மயக்கங் கொண்டதனால், அவள் ஆசை என் ஆசை" என்று நினைத்து நின்று, பிராட்டியின் திருமேனியைக் கண்ட அப்போதே அவள் உடம்பின் செம்மையை யறிந்துகொண்ட பெருமாளே; நம்பியவரிடம் கொள்ளும் பற்றும், பெரிது சிறிதென்று மதிக்கும் மதிப்பும், அன்புள்ள நட்பும், அழகும், தைரியமும், ஆண்மையும், நிலையும், நன்மையும், வெற்றியும், உண்மையான சொல்லும், ஆற்றலும், திறமையும், சிறப்பும், அடைக்கலமாக வந்தோரைக் காத்தலும், இன்சொல்லும், வன்மையும், அருளும், கொடையும், மேன்மையும், அன்பும், ஒளியும், மெய்யறிவும், நற்பண்புகளும், செல்வமும், பல கலைகளையும் விளங்க அறியும் அறிவும், மந்திரமும், நன்னெறியாகிய அறமும், நீதியும், செயல்களை யாராயும் சூழ்ச்சியும், நம்பும் உளமும், பற்றுள்ள உறவும், உண்ணும் உணவும், தவமும், எல்லாரும் விரும்பும் அழகிய வடிவும், மேன்மை

யான குலமும், ஆகிய நலங்களெல்லாம், உலகத்தில் உன்னை யொழிய, வேறு உடையவர்கள் யார்? என நினைத்திருந்தும், இவற்றுள் ஒருநலனு மில்லாத அரசர்களை, இவற்றை யுடையர் எனப் புகழ்ந்து கொண்டாடும் பொய்யொழுக்கத்தில் எந்நாளுஞ் சுழன்று திரிவேனோ? இப்படிக் கெடா மல் என்னைக் காத்தருள்க.

இவ்விரு பாட்டுக்களிலும் ஒரு சொல்லையே மீண்டும் சொல்லியது, காதல் மிகுதியால் முன்சொன்ன சொல்லை அப்போதே மறந்து, முன் சொல்லவில்லை யென்று நினைத்துச் சொல்லிய நிலைமை புலப்படுத்தற் கென்க.

தனதத்த தான தத்த
தனதத்த தான தத்த
தனதத்த தான தத்த தனதான

48. நகுமுத்து மாலை கட்டு
முலைவெற்பு மாகி மற்றை
நடுவற்ப மாயி ளைத்து வளர்தோளும்

நலமுற்று நாண மச்ச
மடமுட்கொ ளாவி ருப்பு
நயனத்தி னுனு ரைக்கும் இதுகாலம்

அகிலத்தி லாரி வர்க்கு
மணமுற்று வாரெ னத்தம்
அகமுற்ற பேரு ரைப்பர் இறைவாநீ

அதுபற்றெ னுவொ ருத்தி
வரவைக் கடாவன் முற்றும்
அசடர்க்கு நானு ரைத்து மெலிவேனோ

மகிமைப்ர தாப முற்ற
மிதிலைப்பி ராணு னக்கென்
மகள்பத்னி யாமெ னத்தண் அளியோலே

மறையிற்ப்ர காரம் விட்ட
புனல்கைக்கொ ளாம கிழ்ச்சி
மனமொத்த தோர்மு குர்த்தம் வழுவாதே

(பி - ம்) 1. நிறைவாகி.

தகைபெற்ற வேள்வி முற்றி
முனிவர்க்கெ லாமி குத்த
தனமுற்று மேயி றைத்து முறையாலே

சரியுற்ற பாணி பற்றி
அனல்சுற்றி யாத ரித்து
சனகிக்கு மாலை யிட்ட பெருமாளே.

உரை :—மணஞ்செய்யும் மண்டபத்தில் உன்னையும் சீதாபிராட்டியாரையும் இருத்தி ஓமம் செய்யும்போது, சிறப்பினால் புகழ்மிக்க மிதிலை மன்னனான சனகன், "உனக்கு என்மகள் மனைவியாவாள்" என்று தண்ணளியோடு, மறைவிதிப்படிவிட்ட தாரைநீரை, நீ கையிலேற்றுக்கொண்டு, மகிழ்ச்சியோடு, மனதிற்குப் பொருந்திய ஒரு நல்லோரையில், மணவினைக்குரியதென்று சொல்லப்படும் ஓமத்தீயை நிறைவேற்றி, முனிவர், நான்மறையோர் முதலியோர்க்குப் பெருஞ்செல்வ மளித்து, அரச முறைப்படி கைவளை தரித்த சீதாபிராட்டியின் திருக்கரத்தைப்பற்றி, ஓமக்கனலை வலம் வந்து, உன்பால் அன்புகொண்ட சானகிக்கு மணமாலை சூட்டினை பெருமாளே; "ஒளிவீசும் முத்துமாலையைத் தரித்த முலை மலைபோல் பருத்துளது; அஃதல்லாத இடை மிகமெல்லியதாகி முலையின் கனத்தைத் தாங்காமல் இளைத்துள்ளது; வளர்ந்துள்ள தோள்கள், நன்மைநிறைந்துள; நாணம், அச்சம், அறியாமை என்னும் முக்குணங்களும் தோன்றாமல் உள்ளே யடங்கியுள்ளன; இத்தகைய பெண்கள் தங்கள் ஆசையைக் கண்ணால் அறிவிக்கிறார்கள்; இக்காலத்தில் இவர்களை மணம்முடிப்பார் யாரோ? என்று தம் உள்ளத்திலுள்ள பேரைச் சிலர் சொல்வார்கள்; இந்தக் கண்குறிப்பையும் சொற்குறிப்பையும் அரசனே, நீ பிடி" யென்று ஒருத்தி வருவதும் சொல்வதுமாகிய அகப்பொருள் துறைகளை யெல்லாம் அசடர்க்குச் சொல்லிப் பாடி நான் மெலிந்து போவேனோ? அப்படிப் போகாமல் காப்பாற்றுவாயாக.

தத்தன தத்தத் தனதன தாத்தன
தத்தன தத்தத் தனதன தாத்தன
தத்தன தத்தத் தனதன தாத்தன தனதான

49. வள்ளியி டைப்பொற் றுகிலிடை நீக்குவர்
உள்ளிலொ துக்கித் தனகிரி காட்டுவர்
மவ்வன்மு டித்துத் தெருவிலு லாத்துவர் விழியாலே

மையல்வி ளைத்துப் பரிபவ மாக்குவர்
கையில கப்பட் டவர்களை மேற்கொடு
வல்லவி சித்ரக் கலவியின் மூட்டுவர் ஒழியாதே

உள்ளபொ ருட்பற் றுவர்பிளை யோட்டுவர்
தள்ளிய பிற்றைப் பொழுதினி லேய்ப்பவர்
உள்ளமொ ருத்தர்க் கறமுழு தோட்டுவர்) இவரோடே

ஒல்லும னத்துப் ப்ரமையுடை யேற்கினி
அல்லல றுத்துக் கொடிய பராக்கற
உய்யவ ழைத்துத் திருவடி காட்டுவ தொருநாளே

எள்ளலில் கொற்றத் தயரத ஞர்க்கினி
உள்ளமு வப்பக் [1]கிளையிறு மாப்புற
எல்வளை மைக்கட் கவுசலை வாழ்த்திட மறையோர்கின்(று)

எல்லையில் வர்க்கச் சுருதிகள் கூப்பிட
நல்லம ரர்க்குத் துயரது கீழ்ப்பட
இல்லிடை வைத்துச் சனகனு நோக்குற முனிகாண

வெள்ளைம ருப்புக் கரியுரி போர்த்தவன்
வல்லசு ரர்க்குப் புகலெனு மாப்புர
மெள்ளவொ துக்கிப் பிரியமுன் மூட்டுறு தழன்மூள

வெவ்வர வைச்சிக் கெனவதின் மாட் டியொர்
ஒள்ளெரி நெட்டைக் கணையது பூட்டிய
வில்லைமு றித்துச் சனகியை வேட்டருள் பெருமாளே.

உரை:—குற்றமற்ற வெற்றியையுடைய தசரதமன்னனுடைய இனிய உள்ளம் களிக்கவும், உறவின்முறையார் இறுமாந்திருக்கவும், ஒளிமிக்க கடகத்தைக் கையில் அணிந்து, மையினைக் கண்ணில் தீட்டியுள்ள கவுசலை வாழ்த்தவும், மறையவர் அளவற்ற வேறுபாடுடைய மறைகளை மிக்க ஒலி யுண்டாகுமாறு ஓதவும், நல்ல இமையவர்க்கு அரக்கரால் வரும் துன்பம் மேன்மைகெட்டுக் கீழ்ப்படவும், உங்கள் இருவரையும் தன் வீட்டில்வைத் துச் சனகமன்னனும் அவன் உறவினரும் பார்க்கவும் (இப்படி மகிழத் தக்கதாக) வெண்மருப்புள்ள யானைத்தோலை யுரித்துப் போர்த்த சிவபெரு மான், வலிமைமிக்க இடமென்று சொல்லப்படும் பெரிய முப்புரங்களை எல்லோரும் இகழப் புறம்புபண்ணி, கற்புக் கெடுவதற்கு முன்னே மூட் டப்படும் நெருப்பு மூண்டெரியக், கொடுமைமிக்க வாசுகியை நாணியாய்

(பா - ம்) 1. கிளைஞரு மார்ப்புற.

அதிலே கெட்டியாய்க் கொளுவி, ஒப்பற்ற, நீண்ட ஒளியுள்ள நெருப்புக் கணை பூட்டி யிழுத்த வில்லை ஒடித்துச் சனகமன்னன் மகளை மணம்புரிந்த பெருமாளே; பரத்தையர், கொடிபோல் துவளும் தம் இடையில் பொலியக் கட்டிய ஆடையை நடுவே நீக்குவர் ; போர்வைக்குள் ஒரு முன்தானையை ஒதுக்கி, மலைபோல் பருத்த தனங்களைக் காட்டுவர் ; மல்லிகை மலரைக் குழையில் அணிந்துகொண்டு தெருவில் திரிவார்கள்; கண் சுழலப்பார்க்கும் பார்வையில் காமம் விளையப்பண்ணி ஆண்களின் மேன்மையைக் கெடுத்து, இழிவாக்குவர்; இப்படிச் செய்து ஆசையை உண்டாக்கித் தங்கள் கையில் அகப்பட்டவர்களைத் தங்கள் மேலேற்றிக்கொண்டு, தங்கள் ஆற்றலினால் வியக்கத்தகும் கலவி மூட்டுவார்கள் ; பின்பு கைப்பொருள் ஒன்றையும் விடாமல் பறிப்பர் ; ஒருவரிடமும் அன்பின்றி ஓட்டுவர் ; இத்தகையோர் பால் பற்றும் மனதையுடைய எனது துன்பத்தை இனித் தீர்த்துக் கொடிய பரத்தையர் மாட்டுத்திரியும் எண்ணம்கெட என்னை யழைத்து நான் பிழைக்குமாறு உன் திருவடிகளைக் காட்டுவது எக்காலமோ? அருளிச் செய்வீராக.

தனன தத்தன தானன தந்தன
தனன தத்தன தானன தந்தன
தனன தத்தன தானன தந்தன தனதான

50. கனகசித்திர கூடம்வை குந்தவிண்
ணகரி புட்குழி நாகைபு ளிங்குடி
கடன்மலைப்பதி சீவர மங்கைவெள் ளறைமூழிக்

களம்வெளைக்குள மாதைகு றுங்குடி
உயர்கவித்தல மாலிக ணங்குடி
[1] கருது பத்தர்வி லோசன மென்றய முனைகோவத்

தனமிசைக்கள்வ னூர்வெளி யங்குடி
புருட வுத்தம னூர்கன கன்பதி
தடவ யற்பர மேசுர முந்திய பரிசாரந்

தகுதி ருப்பதி சேறைந ரன்பளி
இனிய முட்டமெ னுவல கந்தொழு
தலமனைத்தினும் நீயுறை யும்பகழ் பரவேனோ

அனுச ருத்தமர் மூவரு முந்திய
சனக னுக்கிளை யானருள் மங்கையர்
அதிகு ணத்தவர் மூவரை யுங்கனல் கரியாமுன்

---

(பி - ம்) 1. கருத லுற்றது வாரதை முந்துய.

அவர்த னித்தனி யாகம ணந்திட
ஒருவ கைக்கலி யாணமெ னும்படி
அடைவி னிற்றவ ருதுந டந்தபின் இளையோரோ
டினிய பத்தியி னுலயன் மைந்தனை
வரிசை யைத்தரு காதிதன் மைந்தனை
இறைவ னைப்பெறு தாயரை வந்தனை புரியாவந்
திசைபு லப்பட வானக துந்துபி
அதிர மெய்த்தவ ராசிமொ ழிந்திட
இலகு பொற்றிரு மாதுட னின்புறு பெருமாளே.

உரை :—சிறந்த நின் தம்பியரான பரத, லட்சுமண, சத்துருக்கின ரென்னும் மூவரும், சனகமன்னனுக் கிளைய குசத்துவசன் பெற்ற நல்லி லக்கணங்கள் அமைந்த பெண்கள் மூவரையும், அங்கியங்கடவுள் கரியாக முறைப்படித் தனித்தனியே மணக்க, ஒரே விதமாய்ச்செய்த மணமென்று கண்டவர் கூறுமாறு அரசநீதி தவருது நடந்தபின், இனிய அன்போடு நான்முகன் மைந்தராகிய வசிட்டரையும், வெற்றி, படைகள், திருமணம் முதலிய வரிசைகளைத் தந்த கவுசிகரையும், தயரதனையும், தாயர் மூவரை யும், வணங்கிப் பாடுவோர் புகழ்பாட, விண்ணில் துந்துபி ஒலிக்க, உண் மைத் தவஞ்செய்யும் முனிவர்கள் வாழ்த்த, பொலிவுமிக்க சீதாபிராட்டியா ரோடு இன்பம் நுகர்ந்த பெருமாளே; பொற்சபையாகிய சித்திர கூடம், வைகுந்த விண்ணகரம், புள்ளங்குழி, நாகப்பட்டினம், புளியங்குடி, கடன் மல்லையாகிய திருப்பதி, சீவரமங்கை, வெள்ளறை, மூழிக்களம், வெள்ளைக் குளம், ஆதனூர், திருக்குறுங்குடி, உயர்ந்த கவித்தலம், மாலிருஞ்சோலை, திருக்கண்ணங்குடி, உள்ளத்தால் உள்ளும் அடியார் கண்கள் என்னும் நீர் வற்ருத யமுனை, கோவர்த்தனகிரி, புகழ்பெற்ற கள்வனூர், வெள்ளியங் குடி, புருடோத்தமனூர், கனகன்பதி, அகன்ற வயல் சூழ்ந்த பரமேச்சுவர மங்கலம், முதன்மைபெற்ற பரிசாரம் என்னும் பெயருடைய திருப்பதி, திருச்சேறை, நரன்பள்ளி, இனிய திருமுட்டம் என்று உலகோர் வணங் கும் எல்லாத் திருப்பதிகளிலும் நீ எழுந்தருளி யிருக்கும் புகழைப் பரவு வேனே ? அருள்செய்க.

தனத்தனு தந்தனு தந்த
தனத்தனு தந்தனு தந்த
தனத்தனு தந்தனு தந்த தனதான

51. கொடுப்பரோ வஞ்சமே கொண்டு
துரப்பரோ என்செய்வோ மென்று
குறிப்பரோ தங்கள்பால் வந்த மிடைகூறிக்

கொதிப்பரோ வஞ்சியே முந்த
ஒளிப்பரோ நெஞ்சுபோ லங்கை
குறைப்பரோ வம்பராய் விஞ்சு கயவோர்தாம்
அடிப்பரோ வென்றுநீள் சிந்தை
இளைக்கவே சென்றகால் பிந்த
அடுத்தநா ளின்கணீ ரின்றி வறியேன்யான்
அருட்செய்வாய் கொண்டலே யென்கை
அயர்த்துநீ யண்டமே மூண்ட
அதிப்ரதா பங்களே கிஞ்சில் உணர்வேனே

தடக்கையா லன்பொடே யுன்கை
பிடித்தநாண் முந்தவே வந்து
தனித்துவாழ் கின்றபோ தின்கண் மகிழ்சீதை
தனக்குமோ கங்கொளா நின்று
கயற்கணே யென்கணே யண்டர்
தவத்தினல் வந்துபார் கொண்ட சனகேசன்
மடக்கொடி செம்பொனே யென்றன்
உயிர்க்குள்வாழ் வஞ்சியே யுன்றன்
மருட்டரு வின்பமே யன்றி இனிமேல்யான்
மறித்துமே கண்டுமால் கொண்டு
புறத்துமோர் மங்கைமார் கொங்கை
மனத்தினு லுங்தொடே னென்ற பெருமாளே.

உரை:—சீதாபிராட்டியாரும் நீயும் தனித்துப் பள்ளியறையில் இருந்த போது, சீதையின்மேல் தீராக் காதல்கொண்டு "சேல்போலுங் கண்களை யுடையவளே ; என் கண்ணே, இமையோர்செய்த தவப்பயனுய் இவ் வுருவுடன் வந்து பூமியைத் தாயாகக்கொண்டு சனகமன்னன் மகளாய்த் தோன்றி, அறிந்தும் அறியாமையாகிய நல்ல பண்புடைய பொற்கொடி போன்றவளே, சிறந்த பொன்போன்ற திருமேனி யுடையவளே, என் உயிர்க்குள் வாழ்பவளே, கேள்; என் நீண்ட கைகளால் அன்புடன் உன் கையை அங்கி சான்ருகப்பிடித்த நாள் முதல், மயங்கந்தீராத உன் இன்பமே யன்றி, நான் மீண்டும் கண்டு விருப்புற்று வேறொரு பெண்ணின் நகில்களை என் மனத்தாலுந் தொடேன்" என்று அவளுக்கு வரங்கொடுத்த பெருமாளே ; இரத்தல் தொழிலை மேற்கொண்டு சென்ருல், கொடுப்பார் களோ ? வஞ்சத்தை யுட்கொண்டு துரத்து வார்களோ? இரத்தற்கு வந்த இவனுக்கு என் செய்வோமென்று நினைப்பார்களோ? தங்கள்பால் சென்ற

வருத்தத்தைச் சொல்லிக் கோபிப்பார்களோ? இரவலனைக் காணுமுன் அஞ்சி ஒளிப்பார்களோ? உள்ளத்தில் குறைவாக நினைத்ததுபோலக் கையாலும் குறைத்துக் கொடுப்பார்களோ? பொய்யராய் இழிந்த கயவர் கள் அடிப்பார்களோ? என்று நினைத்து நினைத்து, மனம் இளைக்க, நடந்த கால் பின்வாங்க, என்றும் உரைபட்ட நா, நீரின்றி வற்ற, "நான் வறியன்; மேகம்போல் வண்மை யுடையவனே, என் வறுமை நீங்க அருள் செய்க" என்று கூறியிருப்பதை மறந்து, ஏழுலகங்களையும் உண்ட உன் வியக்கத் தக்க புகழிற் சிறிதேனும் அறிந்து போற்றுவேனோ? நின் திருவுளம் எப்படியோ?

(மிடை—வருத்தம். சங்க. அகராதி.)

தந்தா தனதன தனதன தானத்
தந்தா தனதன தனதன தானத்
தந்தா தனதன தனதன தானத் தனதான

52. அங்கா தரவொடு நினையவு மோகச்
சிந்தா குலமது தெளியவு மாதர்க்
கன்பா யுருகுதல் ஒழியவும் ஞானப் படையாலே

அஞ்சா துறுபகை களையவும் வேரிப்
பைந்தார் கொடுநனி புனையவும் வானத்
தண்டா திபர்தொழு திருவடி மீதிற் றலைசேர

இங்கா ரெதிரென மகிழவு ஞாலத்
தன்பே ரிசைசெவி பருகவு மேலைத்
தென்பா ருறவுகள் நெகிழவும் யானிப் படிமீதே

என்றோ பெறுவது பொழுதுகள் வீணிற்
சென்றே கழியுமுன் மதியுப தேசித்
திந்தா பிடிபர கதியென வாழ்வித் தருள்வாயே

சங்கார் மிதிலையி னுயர்கலி யாணச்
சிங்கா ரமுமதின் மகிமையு மாண்மைச்
சந்தோ டமுமினி மையுமுள ளுங்கிச் சனகேசன்

தன்பால் விடைகொடு கரிபரி தேர்முற்
றுந்தா னைகள்வர முரசொலி வீறத்
தண்சா மரையிரு புடையினும் வீசத் தமர்சூழக்

கொங்கார் பரிமள துளவணி மாலைத்
திண்டோள் பொலிதர மரகத மேருக்
குன்று மெனவருள் வடிவென வீரச் சிலையோடே
கொந்தார் புரிகுழல் வரிவிழி நீலச்
சந்த்ரா னனசன கியையொரு தேரிற்
கொண்டே வருமழ கியமண வாளப் பெருமாளே.

உரை :—சங்கு ஒலிக்கும் மிதிலையில் எல்லோரும் சிறப்பிக்கும் திரு மண அழகும், அதன் பெருமையும், ஆண்மையும், மகிழ்ச்சியும், இன்ப நுகர்ச்சியும் உள்ளவனுய்ச சனகனிடம் தங்கியிருந்து, நால்வகைப் படைகளும் உடன்வர, பெரிய முரசம் முதலிய இயங்கள் முழங்க, குளிர்ந்த வெண்சாமரம் இருபுறமும் வீச, உறவினர் சூழ, பூந்தாது மணக்கும் திருத்துழாயை நூலில் தொடுத்தமைத்த மாலை அணிந்து திண்ணிதாய் இருக்கும் தோள்கள் பொலிந்து விளங்க, மகாமேருவைப் போலவும், அருளே உருக்கொண்டது போலவும், பச்சை மலைபோலவும் திருமேனி விளங்க, வயிரம் பொருந்திய வில்லோடு கூடி, பூங்கொத்துக்களால் அமைந்த மாலைகளைத் தரித்துச் சீவி முடித்த குழலும், செவ்வரி பரந்த நீல மலர்போன்ற கண்களும் சந்திரன் போன்ற முகமும் கொண்ட சீதாபிராட்டியாரை ஒரு தேரில் எற்றிக்கொண்டு வரும் அழகிய மணக்கோலமுள்ள பெருமாளே ; உன்னை அன்புடன் நினைக்கவும், காமத்தால் வந்த துன்பந் தீர்ந்து தெளியவும், பெண்கள்பால் உருகும் மனம் அதினின்றும் நீங்கவும், உட்பகையாகிய ஆறையும் மெய்யறிவென்னுங் கருவியால் வேர்பிடுங்கி எறியவும், மணமும் குளிர்ச்சியு முள்ள திருத்துழாய் மாலையை உன் திருவடிகளில் சாத்தவும், இமையோர் வணங்கும் உன் பொன்னடிகளை என் தலையில் சேர்த்து வணங்கவும், எனக்கு நிகர் யாரென்று மகிழவும், பெரியோர்கள் உலகில் விளக்கமாகச் சொல்லும் உன் புகழைக் கேட்கவும், உன்னைப் பூசித்து வணங்கவும், இவைபோன்ற தொண்டுகளைச் செய்ய மேலைக்குத்தான் ஆகும் என்பார் உறவு நீங்கவும் நான் என்று பெறுவேனோ ; வீணில் என் பொழுதுகள் கழிவதற்கு முன், எனக்கு மெய்யறிவினைத் தந்து, "இந்தா, வா, பிடி இதோ பரமபதம்" என்று சொல்லிக் கொடுத்து, நான் அதினின்றும் நீங்கி வாழாமல் அருள் செய்ய வேண்டும்.

தனன தான தான தத்த
தனன தான தரன தத்த
தனன தான தான தத்த தனதான

53. இருகை யோதொ மூது பத்ரி
மலரெ டாதி டாது சித்தம்
இளகு முது நாவு மிக்க திருநாமம்

இசையொ டேசொ லாது கெட்ட
தலைசெ யாது தாள்வ ணக்கம்
இனிய நீரு காவி ணைக்கண் இதனாலே

உருகு நேய மேவு பத்தர்
அருகு சார்கி லேன வர்க்கும்
உரிய னாகி லேனெ டுத்த உடல்பாவம்

ஒருவ னான நீக்ரு பைக்கண்
உதவு பார்வை யால் விளக்கி
உறுதி கூறி வாழ்வ ளிப்ப தொருநாளோ

அரச னாவி யேப தைக்க
உலக மேழு மேப்ர மிக்க
அடிபெ யர்த்த ராநெ ளிக்க முடுகாவந்

தணுகி நான லாது மற்றும்
எவன டாவி ராம பத்ரன்
அவனை மோது வேனெ னத்தன் அதிரூபம்

பருதி கோடி போலெ றிக்க
மகுட வேணி தாழ ருத்ர
பரம யோகி போல தட்டி ரதமேறிப்

பழைய சாப நீவ ணக்கி
அறிவை யோவெ னாவெ திர்த்த
பரசு ராமன் வீற ழித்த பெருமாளே.

உரை:—நீ நடந்துசெல்லும் வழியில்(வரும் பரசுராமனைக்கண்டு)தயரத மன்னன் உயிர் பதைக்க, ஏழுலகமும் வியக்க, கால் பெயர்த்து வைப்பதனால் உண்டான அதிர்ச்சிபொறாமல் ஆதிசேடன் படங்கள் நெளிக்க, பரசுராமன், மிக விரைந்து "இராமன் என்பவன் நானேயன்றி அழகுள்ள வேறொரு இராம னென்றுள்ளவன் எவனடா? அவனைக் கொல்லுகிறேன்" என்று சொல்லி, தன் வியக்கும் உடலில் உள்ள ஒளி கோடி சூரியர்களைப்போல் ஒளிரவும் சடைமுடி யவிழ்ந்து விழவும், அழிக்கும் மூர்த்தியான உருத்திரனைப்போல் ஆரவாரம் செய்து அதட்டிக்கொண்டு தேரின் மேலேறி வந்து, "முன்னமே ஒடியாதிருந்த பழைய வில்லை நீ வளைக்கவும் அறிவாயோ?" என்று சொல்லி எதிர்த்தபோது அவன் பெருமைகளை அழித்த பெருமாளே; என் இரு கைகளும் உன்னை வணங்கா; மலர், இலைகளை எடா; உன் திருவடிகளில் அருச்சனை செய்யா; நெஞ்சு இளகியுருகாது; என் நா, உன் புகழை இசையுடன் பாடாது; கெட்ட தலை உன்

திருவடிகளை வணங்காது; என் இரு கண்களும் ஆநந்தத்தால் நீரை யுதிர்க்கா; மனம் உருகும் அன்புடைய நின் அடியார் பக்கலில் சேர்ந்து அவர்கட்குப் பணிவிடை செய்யும் உரிமையுடையவ னல்லேன் நான்; உனக்கும் உன் அடியார்க்கும் பயன்படாமல் எடுத்த என் உடல் பாவமான அழுக்கு; உன் அருட்கண் பார்வையால் இவ்வழுக்கற விளக்கி உறுதி யான மெய்யறிவு தந்து பரமபதத்தில் என்னை வாழ்விப்பது என்றோ? அறியேன்.

தனதனன தாத்தன தந்த
தனதனன தாத்தன தந்த
தனதனன தாத்தன தந்த தனதான

54. இருவினையை மூட்டிம யங்கு
மதியையதின் மாட்டிய லைந்த
எனைநெடிய கோட்டிகள் கொண்டு நரகூடே

இறுதியற வீழ்த்தி யிறந்து
பிறவியெழு காட்டினுள் வெம்ப
இவளவில் வேற்றுமை கண்ட தமையாதோ

அருமறைகள் தேட்டமி குந்த
திருவடிகள் காட்டிய மூங்கும்
அவலமுழு தோட்டிய னந்த வெகுமாயத்

தகிலவினை யாட்டொடு முந்த
இதுவுமொரு கூத்துநி னைந்துன்
அடியரொடு கூட்டிவை குந்தம் அருள்வாயே

பரசுதரன் நீட்டிவ ழங்க
நெடியசிலை கோட்டிமு னிந்து
பகழியது பூட்டிய வன்செய் தவம்வாரிப்

பரிபவம தாக்கிய பின்பு
விடையருளி நோக்கிய தந்தை
பழையவிடர் நீக்கி நடந்து வழியூடே

திருவடிகள் போற்றிவ ணங்கும்
பரதனையும் வாழ்த்தியு கந்து
செயமருவு பாட்டரி ருந்த நகர்காணத்

திரள்புயப ராக்ரம துங்க
இளவலொடு போக்கிவி ளங்கு
திருவொடும யோத்திபு குந்த பெருமாளே.

உரை :—பரசாகிய கண்ட கோடரியைக் கையில் தரித்த பரசுராமன் நீட்டிக் கொடுத்த பெரிய வில்லை வளைத்துக் கனன்று அதில் ஒருகணை யைத் தொடுத்து, அப் பரசுராமன் செய்த தவமெல்லாவற்றையுங் கவர்ந்து அவனைத் தாழ்ந்தவனுக்கிய பின், அவனை, அனுப்பியபோது, அச் செயல் களைக் கண்ட தசரதன், தன் மரபில் இருபத்தொரு தலைமுறையிலிருந்த அரசர்களைக் கொன்று, அவர்கள் குருதியால் ஐந்து மடுவுண்டாக்கிச் சமந்த பஞ்சகமென்று முன் பெயரிட்ட அப் பரசுராமனுல் விளைந்த பழைய துன் பம் நீங்கி மகிழ, நடந்து, வழிநடுவே உன் திருவடிகளைப் பரவும் தம்பி யரை வாழ்த்தி, வெற்றிபொருந்திய கேகயமன்னனுகிய பாட்டன் நகரைக் காண்டற்குத் திரண்ட தோள்களையுடைய பரத சத்துருக்கினர்களை அந் நகருக்கு அனுப்பிவிட்டு, விளங்கும் சீதாபிராட்டியாரோடு அயோத்திமா நகரம் சேர்ந்த பெருமாளே ; பாவ புண்ணியம் என்னும் இரு நெருப்பை யும் எரிய மூட்டி, மாயையால் மயங்கும் மனமாகிய விறகை அந்நெருப்பி லிட்டு இவைகளால் அலைந்த என்னை நீண்ட சேஷ்டைகளாகிய, சுடப் பட்டுப் பதைக்கும் மொய்க் கூத்துக்களைக் கொள்ளச் செய்து, நரகின் நடு வில் முடிவுன்றி வீழவைத்து, இறந்து பிறத்தலாகிய எழுபிறவிக் காட் டில் அகப்படுத்தித் துன்புறுத்தி, வேறுபடுத்தியது போதாதோ? முடிவு கண்டு ஓதவரிய வேதங்கள் தேடும் உன் திருவடிகளைக் காட்டி, துன்பங்க ளாகிய பொல்லாங்கனைத்தையும் ஓட்டி, அளவில்லாத மாயத்தால் விளை யும் உன் எல்லாத் திருவிளையாடல்களோடு, என்னைக்காக்கும் இதுவும் ஒரு விளையாடல் என்று நினைத்து, உன் அடியார்களோடு கூட்டி, திரு வைகுந்தத்தை யீந்தருள்வாய்.

இறந்து பிறவி எழுகாடு என்றது இறந்து பிறத்தலாகிய எழு காடு கள் என்னும் பொருளது. இறந்து என்னும் வினை எச்சம் பிறவி என்னும் தொழிற் பெயர் கொண்டது.

தனதன தத்த தானன
தனதன தத்த தானன
தனதன தத்த தானன தனதான

55. எறிபடை யெடுத்து [1] மோகர
மயிடமு முகைத்து மேவிடும்
எரியென விழித்து வீசிய கயிறேடே

(பி - ம்) 1. மோர்கர.

இடியென முழக்கி யேயெதிர்
கறுகறு கறுத்த காலனென்
இறுதிநி லேபற்றி யேவரு மொருபோது

முறுகுக னலொத்த தாடகை
வெருவுற வளைத்த சாபமு
முனிசொல விடுத்த பாணமும் இருதோளும்

முதுகிடை பிணித்த தூணியும்
அழகிய பசுத்த மேனியும்
முறுவலும் முகப்ர [1] காசமும் மறவேனே

அறநெறி விளக்கு கோசலை
மருமகள் வடித்த வோதியள்
அயில்விழி பிடித்த காதினள் இருபோதும்

அருமறை மணக்கு மேனியள்
வரகம ல[2]மொத்த பாணியள்
அமுதுகு சிவத்த வாயினள் அருள்மாறுப்

பொறையுல குபெற்ற பூரணி
பிரமனை யளித்த நாயகி
புணரியி லுதித்த காரிகை மறுநாடாப்

புதுமதி முகத்தி சானகி
[3] முகுளித விசித்ர பூரண
புளகித முலைக்குண் மூழ்கிய பெருமாளே.

உரை :—அறநெறியை விளங்கச்செய்யும் கோசலையின் மருமகள்; வார்ந்து சீவி முடித்த குழலள்; வேல்போல் அகன்று நீண்ட திருக்கண்கள் ஓடிப்பிடித்த காதுகளை யுடையவள்; இரவும் பகலும் ஓதுதற்கரிய வேதம் மணக்கும் திருமேனி யுடையவள்; அடியார்க்கு வரம் நல்கும் தாமரை மலர்போன்ற திருக் கைகளை யுடையவள்; அமுதமொழுகும் திருவாயள்; அருள் தவறுத பொறுமையை யுடைய நிலமடந்தைபெற்ற நிறைவுடையவள்; பிரமனைப் பெற்ற பெருமாட்டி; திருப்பாற்கடலில் தோன்றிய பெண்; களங்கம் இல்லாத புதுமையான மதியுண்டாயின் அதுபோலும் திருமுக முடையவள்; சனகமன்னன் மகள்; எனப்படும் சீதாபிராட்டியின், தாமரை யரும்புபோல் குவிந்து வியக்கத்தக்கதாய்ப் பேரழகு

(பி - ம்) 1. சாதமும். 2. முற்ற. 3. முகிழித.

படைத்து, நிறைவாகி, பருத்திருக்கும் கொங்கையில் திளைத்து மூழ்கிய பெருமாளே ; எமன், காலதண்டத்தை யெடுத்து, முழக்கஞ்செய்யும் கடா வாகிய தேரில் ஏறி, நெருப்புப்போல் கண்களை விழித்து, வீசும் பாசத் தோடு, இடி இடிப்பதுபோல் ஒலித்து என் எதிரில் கறு கறுவென்று சினந்து, என் இறத்தல் நிலையைப் பிடித்து வரும்போது, திருகிச் சுழலும் நெருப்புப்போன்ற தாடகை அஞ்சுமாறு வளைத்த கோதண்டமும், கவுசி கன் சொல்ல இழுத்துவிட்ட அம்பும், [1]முதுகில் கட்டிய அம்புக் கூடும், உன் அழகிய பச்சென்ற திருமேனியும், புன் சிரிப்பும், திருமுக வொளி யும் மறவேன்.

பால காண்டம் முற்றும்.

ஸ்ரீ:

# 2. அயோத்தியா காண்டம்.

தனஞ தந்தன தந்தன தந்தன
தனஞ தந்தன தந்தன தந்தன
தனஞ தந்தன தந்தன தந்தன தனதான

56. கனமே கொண்டவெ ழும்புறு சங்கிலி
மலநீர் நின்றுநி ரம்புபெ ரும்பொதி
கமலே சன்கைவ ரைந்திடு சம்புடம் நரிநாய்பேய்

கழுகே துந்தம தென்று விரும்புறு
தசைசே ருண்டிநெ டும்பசி யென்றொரு
கதமே வும்புலி தங்கிய கந்தரம் அலைவாகும்

மனநீள் வெம்புளி ருந்தபொ தும்பர்முன்
இடுவார் தங்களை யண்டியி ரந்திட
வாருவா ரஞ்சவ ளைந்திடு பொன்றிய கருவேலாம்

வடிவே கொண்டுநெ டும்புவி யின்சுவை
எனவே சந்தத மிங்குழல் கின்றவென்
மகபா பங்கடொ லைந்திட வென்றருள் புரிவாயே

சனகே சன்பெறு கொம்புட னின்புறு
சிலநா ளின்கண்ம கிழ்ந்தா சன்புவி
தனைநீ கொண்டிட நின்றுபெ ருந்தவ முயல்வேன்யான்

தனையா வென்றது மன்றுபொ ருந்தலின்
நகர்தா னெங்கும ணிந்திட முந்திய
தவரா சன்புனல் கும்பநி ரம்புபுல் லுடன்மேவ

முனிவோ ரந்தணர் மந்த்ரிக ளெண்டிசை
அரசோர் மண்டப மெங்குநி றைந்திட
முதலே மஞ்சன முங்கொண்ட லங்க்ருத அணிபூணு

முரசே மண்டிய திர்ந்திட வங்கொரு
ரதமேல் கொண்டுயர் தந்தைய கந்தனில்
முடிசூ டும்படி வந்துபு குந்தருள் பெருமாளே.

உரை :—சனகன் பெற்ற பூங்கொம்புபோல் அழகுசெய்யப் பெற்றுள்ள சீதாபிராட்டியாரோடு இன்புற்றிருக்கும் நாளில், ஒருநாள் தசரத மன்னர் மகிழ்ந்து, உனக்குச் சொல்கிறார்; "நீ, இவ்வுலகை ஆள, நான், பெருந்தவம் செய்ய எண்ணுகின்றேன்; மகனே, நீ இதற்கு உடன்பட வேண்டும்" என்று; நீ அப்படியே உடன்பட்டதனுல், நகர் முழுதும் அணி செய்ய, முதன்மைபெற்ற முனிக்கரசாகிய வசிஷ்டர் தூயநீர் நிறைந்த பூரண கும்பமும், தர்ப்பைப் புல்லுங் கொண்டுவர, முனிவர், அந்தணர், அமைச்சர், எட்டுத் திக்குகளிலுமுள்ள அரசர், ஆகியோர் வந்து முடிசூடும் மண்டபத்தில் எங்கும் நிறைந்திருக்க, அதற்குமுன் நீ, சிவஞானமும், தேவ பூசையும், அந்தணர் பூசையும் முடித்து, அழகிய கலன்களைப் பூண்டு, முரசம் முதலியன முழங்க, ஒருதேர்மேல் ஏறி, உயர்ந்த புகழுடைய (உன்) தந்தையாரின் திருமாளிகையில், முடி தரித்துக்கொள்ளும் காரணமாக வந்து புகுந்தருளிணுய்பெருமாளே; பருத்த எலும்புகளால் அமைக்கப்பெற்ற சங்கிலியும், மல மூத்திரங்கள் இருந்து நிறைந்துள்ள பெரும் பொதியும், பிரமன் தன் கையகத்து வைத்தெழுதும் சஞ்சிகையும், நரி, நாய், பேய், கழுகு முதலியன தங்களுடையது என்று விரும்பும் இறைச்சி நிறைந்த உணவும், நீண்ட பசியென்னும் ஒப்பற்ற கோபம் குடியிருக்கும் புலி வாழ்கின்ற முழையை யுடைய மலையும், தாவிச் செல்லும் மனமாகிய பறவை வாழும் மரம் நெருங்கிய சோலையும், இரக்கவரும் இரவலர் அஞ்சுமாறு வளைத்துள்ள அழிந்த கருவேலமரமும் போன்ற உருவைக் கொண்டு, நீண்ட உலகத்தில் உள்ளவற்றை இனிய சுவையென்று கருதி, தொடர்ந்து தொடர்ந்து இங்கேயே சுற்றி யலையும் என் பெரும் பாவங்கள் நீங்கிப்போக நீ அருள்புரிவது எந்நாளோ?

'பொன்றிய கருவேலாம்' என்பதற்குப் பொன்றுவிக்கும் எனப் பிறவினைப் பொருள் கூறுதலும் பொருந்தும்.

தனதன தனஞ தனந்த
தனதன தனஞ தனந்த
தனதன தனஞ தனந்த தனதான

57. கருமுகி லெனவோ விருண்ட
ஒருமணி யெனவொ குளிர்ந்த
கனைகட லெனவோ மலர்ந்த கமுநீரின்

கமழ்தட மெனவோ [1]விரிந்த
[2] அறுபத மெனவோ நிறைந்த
ககனம தெனவோ நெருங்கி யலர்பூவைத்

திருவன மெனவோ சிறந்த
உருவினை யடியே னறிந்து
தெளிவுற வுரையாட வொன்று முணரேனல்

செயசெய வரிரா மசந்த்ர
ரகுகுல ரகுநாத வென்று
சிதைவறு பெயரே புகழ்ந்து திரிவேனே

பரவிய வொருகூ னிசென்று
மதிசொல வதிலே மருண்டு
பரதன தொருதா யிரண்டு வரமேநீ

பரிவொடு தருவா யென்மைந்தன்
முடிபெற நெடியோன் வனங்கள்
பயிலுற வெனலோ டுழுந்தை மொழிமாறுன்

தரையிடை புரளா மயங்கி
மனைவியை நெடிதே யிரந்து
தகைவற வவளோ துவஞ்ச உரைகேளாத்

தனிமகன் வனமே வவுன்றன்
ஒருமக னரசா ளவென்ற
தயரதன் மகவாய் விளங்கு பெருமாளே.

உரை :—பரந்த வஞ்சனையுடைய ஒரு கூனி, கைகேயி யிடத்திற்குப் போய்ப் பலவகையில் அறிவுறுத்த அதனால் அறிவு கலங்கிய அவள், முன்னொரு காலத்தில் அரசன் சொன்னபடி இரண்டு வரங்களைக் கேட்டாள் ; அவ்வரங்களில் ஒன்றால் தன் மகன் பரதன் அரசாளவும், மற்றொன்றால், இராமன் காடுகளில் திரியவும் வேண்டுமென்று தசரதமன்னனைக் கேட்க, அரசன் உண்மை தவறாமல், மூர்ச்சித்துத் தரையில் விழுந்து புரண்டு, அறிவு கலங்கி, கைகேயியை மிகவும் வேண்டியும் அவள் மறுத்ததனால் மனு நீதிக்கு ஒவ்வாத அவள் சொல்லுக்குத் தான் உண்மை பிறழாதவனாதலால் உடன்பட்டு அவ்வரங்கள் இரண்டையும் தந்தேனென்று சொன்னான் ; அத்தகைய தசரத மன்னனுடைய திருமகனாய் விளங்கும் பெருமாளே ; உன் திருமேனியைக் கரிய முகில் என்னவோ ? இருண்ட நீல

(பி - ம்) 1. பரந்த. 2. யமுனைய.

மணியென்னவோ? குளிர்ச்சியும் ஓசையுமுடைய கடலென்னவோ? மலர்ந்த கருநெய்தற் பூக்கள் மலர்ந்த குளம் என்னவோ? விரிவாகக் கூடியுள்ள வண்டுக் கூட்டங்கள் என்னவோ? எங்கும் நிறைந்த ஆகாயம் என்று சொல்லவோ? நெருங்கி மலர்ந்த காயாம்பூக் காடு என்னவோ? சிறப்புமிக்க நின் திருவடிவை அடியேன் அறிந்து எல்லார்க்குந் தெளியச் சொல்லும் வகையறியேன்; அதனால், செய, செய, அரி, ராமசந்திர, ரகுவம்ச ரகுநாதா என்று கேடில்லாத உன் திருப்பெயர்களைச் சொல்லிக்கொண்டுதிரிவேன்.

தனத்தன தான தந்த
தனத்தன தான தந்த
தனத்தன தான தந்த தனதான

58. முகத்தினை மூடி யெங்கு
மறைத்தினி மேலு டைந்து
முழுப்பிண நாறு மென்று தமரானோர்
முறைப்படி யேசு மந்து
புறத்திடு காட ணைந்து
முரட்டும ராம மரங்கள் அணையாகப்
புகைக்கனல் மேல்கொ ளுந்த
எரித்தழு தோடு கின்ற
புனற்படி யாவெ ழுந்து வருமாறு
புறத்தொரு காலன் வந்து
பிடிக்குமு னீடு கங்கை
புறப்படு தாள்கள் கண்டு தெளிவேனோ
அகத்திடை யேயி ரண்டு
வரத்தினை யேவி ரும்பி
அடர்த்தொரு கோவை வென்று பதினாலாண்
டனைத்துல [1] காள வென்று
பகைத்தகை கேசி முந்தி
அழைத்தினி ராம சந்த்ர மதிகேளென்
மகற்கர சான தென்றும்
இனிப்பிடி சீர மென்றும்
மணிச்சடை மேவு கென்றும் இரவேநீ

(பி - ம்) 1. காள்வ மென்று.

வனத்திடை போதி யென்றும்
உரைத்திடு போது கந்து
மனப்ரிய மாகி நின்ற பெருமாளே.

உரை :—தன் மனதின் கண் இரு வரங்களைப் பெற விரும்பி, அவ் வரங்களால் அரசனைப் பொருது வென்று, பதினான்காண்டுகள் எல்லா வுலகங்களையும் செல்வங்களையும் ஆளவேண்டுமென்று பகைத்த கைகேயி, முன்னே உன்னை யழைத்து, “இராமசந்திரா, இனி என் அறிவுரையைக் கேள் ; அரசாள உரியன் என் மகன் ; நீ, இனி மரவுரியைப் பிடித்துக் கொள் ; பவளம்போற் சிவந்த சடையைக் கட்டிக்கொள்; இவ்விரவே, காட்டுக்குப்போ;” என்று சொல்லிய போழ்து மனமகிழ்ந்து விருப்பத் துடன் கேட்டு நின்ற பெருமாளே ; இறந்தபின் முகமெங்கும் மறைத்து, இனிமேல் வைத்திருப்பின் வெடித்துப் பிணநாற்றம் வீசுமென்று கருதி, உறவினர் குல முறைப்படி சுமந்து சென்று, ஊர்க்குப் புறத்தே சுடுகாட் டிற் சேர்த்து, கணுவும் வளைவுங்கொண்டு முரடாக வுள்ள மராமரங்களை யடுக்கி, அதன்மேற் கிடத்தி, புகைந்தெரியுமாறு சுட்டு, அழுது, ஓடும் நீரில் மூழ்கி, எழுந்து வருமாறு, புறம்பே, ஒப்பில்லாத எமன் வந்து என் னைப் பிடிக்கு முன், பெரிய கங்கையாறு தெரியுமாறு தோன்றிய நின் திருவடிகளை வணங்கித் தெளிவேனோ ?

தனதன தந்த தந்த
தனதன தந்த தந்த
தனதன தந்த தந்த தனதான

59. அரவுவி டங்கள் சிந்து
மதகரி வந்து முந்து
மரிபுலி யங்கி யங்கு நெறிதானோர்
அளறுபி ரம்பு நின்று
மழைசொரி கங்கு லந்த
அடவிக டந்து நொந்து வரலாமோ
இருளில ணங்கு முண்டு
வனநதி யும்ப்ர வஞ்சம்
இனிவிடு மிந்த வின்பம் வடிவேலிர்
இரவர லென்றி யம்பு
துறைமுதல் வஞ்சர் முன்சொல்
இழிவற நின்கு ணங்கள் புகழ்வேனோ

[1]மனுநெறி யின்க ணின்று
　சனகியு டன்பொ ருந்தி
　வருமொரு தம்பி நம்பி　　　துணைமேவ
வரிசிலை கொண்டு தந்தை
　யுரைமுழு தும்பு ரந்து
　வருடமொ ரஞ்சு மஞ்சு　　　மொருநாலும்
தனிநக ருங்க டந்து
　பரதனை யும்பி ரிந்து
　தவவடி வுங்க லந்து　　　மகிழ்வோடே
தரையர சுந்து றந்து
　மரவுரி யுஞ்செ றிந்து
　சடைமகு டம்பு னைந்த　　　பெருமாளே.

உரை :—தந்தை தாய் சொற்படி நடக்குமாறு சொல்லிய மனுதரும நூலின்படி நின்று, சனகன் மகளாகிய சீதாபிராட்டியாருடன், மனம் பொருந்தி வரும் ஒரு தம்பியாகிய நம்பி யென்று சிறப்பித்துச் சொல்லப் படும் இலக்குவன், துணையாக உடன்வர, கணுக்களை யுடைய வில்லைத் திருக்கரத்தில் தாங்கி, தந்தையின் சொற்களைக் காத்துப் பதினான்கு ஆண்டுகளும் தப்பாமற் செலுத்த, அழகிய அயோத்தி நகரையும் நாட்டை யும் கடந்து பரத சத்துருக்கினரைப் பிரிந்து, தவ வடிவும், படைதாங்க லால் அரச விலக்கணமும் கலக்கப்பெற்று, மகிழ்ச்சியுடன், முன் வைகுண் டத்தி லிருந்து எல்லாத் தேவர்களையும் ஆளும் அரசை வெறுத்துவிட்டது போல், நிலவுல காள்வதையும் விட்டு, மரவுரியும், மான்தோலும் நெருங்கத் தரித்துக் காட்டையாளச் சடையை முடியாகத் தரித்துநின்ற பெருமாளே; (கோவைத்துறையில், இருட்டில் காடு கடந்து தலைவியினிடம் வந்த தலைவ னுக்குச் சொல்வது. அஃதாவது, இரவுக்குறிவிலக்கல் என்னும் துறை யாகத் தலைவனை நோக்கித் தோழி கூறுகிறாள்) "நீ, வரும் வழியில் பாம்பு நஞ்சைக் கக்கும்; மதயானை எதிர்ப்படும்; ஆங்காங்குச் சிங்கமும் புலியும் திரியும்; வழி முழுதும் சேறுள்ளது ; பிரப்பங் காடாகவும் உளது ; கார் முகில்கள் மழை பெய்யும்இரவில் இத்தகைய காட்டைக் கடந்து வருதல் கூடாது ; அன்றியும் காடுறை மணங்குகளும், அவைகளின் படையான பூதம் முதலியனவும் வழியில் இருக்கின்றன ; எங்கும் காட்டாறுகளும் மடுக்களும் இடைவிடாமல் இருக்கின்றன ; இத்துணைய இடையூறுகளுக் கிடையில், அரத்தாற் கூர்மை செய்யப்பட்ட வேலைத் தரித்த தலைவனே;

(பி - ம்) 1. வருநெறி.

இரவில் வரும் இதனை விட்டுவிடுக" என்றும் வேறு வகையிலும் வஞ்சரைப் பாடும் குற்றம் நீங்க உன் திருவிளையாடல்களைப் புகழ்வேனோ?

தானன தான தந்த
தானன தான தந்த
தானன தான தந்த தனதான

60. மேகம தோசி றந்த
மாமணி யோவி ருண்ட
மேருவ தோப சந்த கடலேயோ

மேனியெ னுவ னந்த
வானவர் கூடி நின்று
வேதசொ ரூப மந்த்ர நெறியாலே

நாகணை மீது கண்டு
பூமழை யேபொ ழிந்து
நாரண வாழி யென்று களிகூரும்

நாமநன் னீர ரங்க
நீடுவி மான மென்று
நான்வல மாக வந்து தொழுவேனோ

போகவி டார றிந்த
போதிலெ ஞநி னைந்து
பூரண மான கங்குல் அதனாடே

[1] பூமிகொள் கான கங்கள்
சேருவ தாக வன்று
பேரினை யாத தம்பி யவனோடும்

ஓகையி னோடெ ழுந்த
சானகி யோடு [2] முந்தை
[3] ஊழ்வினை யோடு மந்த்ரி ரதமேல்கொண்

டோசைப டாது தந்தை
தாயுண ராது றங்கும்
ஊரறி யாது சென்ற பெருமாளே.

(பி - ம்) 1. பூமிகொள். 2. முந்தி. 3. ஓதிய தாக.

உரை:—தேரின்மேல் ஏறிச் சுமந்திரன் அதனை ஓட்ட, நீ காட்டுக்குப் போகப் புறப்பட்டபோது, நகரிலுள்ள மக்களும் உடன் செல்லப், பின் ஒருசோலையில் தங்கி, எல்லோரும் தூங்கும் சமயம் பார்த்து, நாம் காட்டுக் குப் போவதை யறிந்தபோதில் இவர்கள் நம்மைத் தனியே போகவிடார்க ளென்று நீ கருதி, நள்ளிரவில், தரையை மூடிக்கொள்ளும் காடுகளை அடை தற்காக, போர்செய்வதில் பின்வாங்காத தம்பியாகிய இலக்குவனோடும், மகிழ்ச்சியோடு உடன்வந்த சீதா பிராட்டியாரோடும், நீ திருவவதாரம் செய்வதற்கு முன் விதித்த செய்தியோடும், சுமந்திரன் ஓட்டும் தேரில் ஓசையுண்டாகாமலும் தாய் தந்தையார் அறியாமலும், தூங்கும் நகர மக்கள் அறியாமலும் சென்றாய் பெருமானே; உன் கரிய திருமேனியைக் கண்டு, இது கருமேகமோ? நீல மணியோ? மகாமேரு மலையோ? பரவிய கடலோ? என்று சொல்லி அளவற்ற இமையோர் கூடி நின்று, வேத வடிவான திரு மந்திர, தியான வழியாலே திருவரங்கத்தில் நாகணை மேற் கண்டு பூமழை பொழிந்து 'நாராயணா செய செய' வென்று மகிழ்வடையத் தக்கதாய், எங் கும் பரவிய புகழ் விளங்கியதாய்க் காவேரியாற்றின் இடை இருப்பதாய் உள்ள திருவரங்கத்தில் பெரிய விமானத்தை நான் என்று வணங்கு வேனோ?

தனதன தானன தந்தன தானன
தனதன தானன தந்தன தானன
தனதன தானன தந்தன தானன தனதான

61. சுருதிவி டாதேவி ளம்புவர் வேள்வியின்
முயலுவர் தீயைவ ணங்குவர் நீடிய
துறவினி லேவீழ்வர் சங்கர யோகியை மறவாதே

தொழுவர்வி தாதாவை யன்பொடு பேணுவர்
மதியொடு நாள்கோளி றைஞ்சுவர் வேதியர்
சுகமுற மாதான முஞ்செய்வர் நீள்புவி வலமாவர்

பருதியை மாறாது கும்பிடு வார்மக
பதிமுதல் வானோரை யன்புசெய் வார்கண
பதிகுக னோரை யுந்தொழு வார்பல முனிவோரைப்

பரவுவ ராலுமின் சரசீருக
சரணம லால்வேறு முண்டுகொ லோபுகல்
படிதொறு மேறுது மண்டப மேறுதல் வசமாமோ

வருமுடி வேருக மந்தரை வாசகம்
நிலைபெற நேரேசு மந்திர னனவன்
வழிவிட மாசேட னுண்டியொ டேயடு துயில்போக

வனமக லாவேடர் தம்பதி யாகிய
குகனெடு நாளாக முன்செய்த மாதவம்
வளமொடு பேருக விந்திரை யாலெதிர் விளைமூள

நிருபனும் வானுள விஞ்சிய கேகயன்
மகள்பழி யேபூண வங்கிளை யோர்களும்
நிரவிய பாராள வெந்திடு வானவர் குறைதீர

நெடுமுனி வோர்வாழ நின்றுதள் ளாடிய
தருமமு மீடேற வஞ்சக ராகிய
நிசிசரர்[1] பேர்மாள வெஞ்சுர மேவிய பெருமாளே.

உரை :—நீ, தரித்துக் கொள்ளுதற்கு வந்த அரசமுடி மாறுபட்டுச் சடையாக, மந்தரை யென்னும் கூனியின் சொல் நிலையாக, சுமந்திரன் செவ்வையாய் வழிகாட்டப் பெருமையுள்ள ஆதிசேடனுகிய இலக்குவ னுக்கு உணவோடு, அறிவை மறக்கச்செய்யும் தூக்கமும் போகக் காட்டை விட்டுப் போகாமல் அதிலேயே குடியிருக்கும் வேடர்கட் கரசனுகிய குகன் என்னும் பெயருடையவன், முன்னே நெடுநாட்களாகச் செய்த தவப் பயனை இப்போது வளப்பத்துடனே பெற, முன்னரே முடிவுசெய்த கட் டளை இனிச் சீதாபிராட்டியாராலே மூண்டு நடக்க, தயரதனும் மண் ணுலகை நீத்து வானுள, கணவன் இயல்புக்கு மீறிய கைகேயி பழியை யடைய, அயோத்தியில் பரத சத்துருக்கினர் உலகை ஆள, அரக்கரால் துன்புற்றிருக்கும் இமையவர் குறைதீர, பெரு முனிவர்கள் துன்பம் நீங்கி யிருக்க, நின்று விழுவதுபோல் நடுங்கும் அறக்கடவுள் நடுக்கம் நீங்கிப் பெருகி வளர, வஞ்சகர்களாகிய இரவில் திரியும் அரக்கர் கூட்டம் அழிய, நீரும் நிழலுமின்றி வெடித்துக் கொதிக்கும் கொடிய பாலைவனத்தில் நடந்து சென்ற பெருமாளே ; மக்கள், வேதத்தை யிடைவிடாமல் ஓது வார்கள்; வேள்விகளை முயன்று செய்வர்; வேள்வித் தீயை வணங்குவர் ; பெருந் தவத்தில் ஈடுபடுவார்கள் ; சிவபெருமானுகிய யோகீசுவரனை மற வாது தொழுவார்கள் ; பிரமனை அன்புடன் பூசிப்பார்கள் ; தென்புலத்தா ரோடு, திருவாதிரை, திருவோணம், கார்த்திகை, விசாகம் முதலிய நாட் கள், ஒன்பது கோள்கள் ஆகியவற்றை வணங்குவார்கள் ; நான் மறை யோர் இன்புற்றிருக்கப் பதினறு மகாதானங்களும் மற்றத் தானங்களும்

(பி - ம்) 1. போர்.

செய்வார்கள் ; நீண்ட உலகை வலம் வருவார்கள் ; நீங்காமல் கதிரோனைத் தொழுவார்கள்; வேள்விக்குத் தலைவனான இந்திரன் முதலியோர்க்கு அன்புண்டாகத் தக்கனவற்றைச் செய்வார்கள்; விநாயகன், முருகன் ஆகிய இருவரையும் வணங்குவார்கள் ; பல முனிவர்கட்குப் பூசை செய்வார்கள் ; வீடுபேற்றைக் கருதி இத்தகைய பலவற்றைச் செய்தாலும் அவர்கட்கு உன் தாமரையடிகளை யன்றி அச்சந்தீரப் புகுமிடம் பிறிதுண்டோ? இல்லை. கீழேயுள்ள படிமுதல் ஒவ்வொரு படியாக எல்லாப் படிகளையும் ஏறாமல், தரையில் நின்றபடியே மண்டபம் ஏறுதல் இயலுமா? ஆதலால், நீயே அடைக்கலப் பொருள் என்பதை அறிதல் கடனாம்.

தானதன தந்த தந்த
தானதன தந்த தந்த
தானதன தந்த தந்த தனதான

62. கோடுபொரு துங்க கொங்கை
மாமகளிர் தங்க ளங்கை
கூடுகினும் விஞ்சு கண்கள் துயில்போலும்
கோலமொடெ ழுந்தி ருந்து
போதுகினு மின்சொ லொன்று
கூறுகினு மங்க யர்ந்த கனவூடும்
ஈடழிய வந்தி ருண்ட
மாமயிட முந்து சண்டன்
ஈறுதனில் வெஞ்சி னங்கொ டெழுபோதும்
ராமசெய மென்ப தன்றி
யானறிவ திங்கொர் கிஞ்சில்
ஏதுமிலை யஞ்ச லென்று வருவாயே
வேடர்குழு வுந்தி ரண்டு
சூழ்வரந டந்து கங்குல்
மீதுகனி யுங்கி ழங்கு மிகுதேனும்
மேன்மையொடு தந்து மெங்கள்
கானிடையு றைந்தி டென்றும்
வேறுநினை வென்கொ லென்றும் அளியோடே
நீடுதிரை விஞ்சு கங்கை
ஓடமது கொண்டு வந்து
நீதியொ டிறைஞ்சி நின்று துணையாகி

நேயமொடி ரங்கு கின்ற
மாகுகனை யங்கு கந்து
நீயுமொரு தம்பி யென்ற பெருமாளே.

உரை :—குகன், வேடர் கூட்டங்களும், மற்றைய காட்டுவாழ்நரும் சுற்றிவர நடந்து, இரவில் உன்னைக் கண்டு வணங்கி, பழமும் கிழங்கும், மிக்க தேனும் தூய்மையோடு கொடுத்தும், 'எங்கள் காட்டில் இன்பமாகி இருந்துவிடுங்கள்' என்றும், 'உங்கள் திருவுள்ளக் கருத்து யாதோ?' என்றும் சொல்லியும், நீண்ட அலைகள் மிகவும் எழுகின்ற கங்கையாற்றில் பல ஓடங்களைக் கொணர்ந்து, ஒழுக்கத்துடனே வணங்கி நின்று, நானும் உடன் வருகிறேனென்று துணையாகி அன்புடன் இரக்கமாகச் செல்லுகின்ற அந்தக் குகனை மகிழ்ந்து, நீயும் நமக்கொரு தம்பியென்று திருவாய் மலர்ந்தருளிய பெருமாளே ; யானைக் கொம்புபோல் உயரமாய் எந்திநின்ற நகில் அழுந்துமாறு அழகிய பெண்கள் கையினால் அணைக்கக் கூடினாலும், காதளவு நீண்டு அப்பாலும் விஞ்சியிருக்கும் கண்கள் தூங்கும் போதும், அழகோடு எழும் போதும், இன்சொல் ஒன்று சொல்லுதலிலும், மெய் மறந்து தூங்கும்போது காணும் கனவிலும், என் பெருமை கெடுமாறு, மருண்ட எருமைக் கிடாவின் மீதேறி என் முடிவுக் காலத்தில் கோபங் கொண்டு எமன் வந்தபோதும் இராமசெயமென்று சொல்லுவதல்லாமல், நான் வேறே யறியத்தக்கது சிறிதளவும் வேறொன்றும் இல்லை ; ஆதலின் என்னை அஞ்சற்க என்று சொல்ல நீயே வரவேண்டும்.

தாத்தன தத்த தான
தாத்தன தத்த தான
தாத்தன தத்த தான தனதான

63. மூர்க்கரு லுத்தர் சூதர்
தூர்த்தர வத்தர் நீசர்
மோட்டர்பி ரட்ட ரீனர் வினைதானே
மூட்டுறு துட்டர் பாப
மீட்டுக ருத்தர் சோரர்
மோத்தைக ளொத்த மோடர் மயலாளர்
தீர்க்கமி ருப்பர் போல
வாய்த்தத னத்தின் மீது
தேற்றர வுற்று [1]வாழும் மதிகேடர்

(வி - ம்) 1. வாடும்.

சேர்த்திய றுத்து நேரின்
மோக்கநி ஊக்கு மாறு
தீக்கைய ளிக்கு நாளும் ஒருநாளோ

ஏற்கவி டுக்கு மோடம்
மாக்குகன் விட்ட போதில்
யாற்றின்மி குத்த பாகி ரதியேறி

யாத்திரை தெற்க தாக
நோக்கிம கிழ்ச்சி கூர
ராச்சியம் விட்டு வீறு சிலையோடும்

ஆர்க்குமி ரட்சை யான
சீர்க்கம லத்தி யோடும்
ஆட்சியு றக்க மாறும் அவனோடும்

ஆற்றல்ப டைத்த ஞான
மேற்றப ரத்து வாசன்
ஆச்சிர மத்தின் மேவு பெருமாளே.

உரை :—மனதிற்கியைய ஓடும் ஓடத்தைப் பெருமைவாய்ந்த குகன் விட்டபோதில், எல்லா ஆறுகட்கும் மேலான கங்கையைக் கடந்து அக் கரை யேறி, தெற்கே பிரயாணமாகப் பார்த்து மகிழ்ந்து, அரசபாரத்தைத் துறந்து உயர்ந்த வில்லுடனும், எல்லோரையும் ஆட்கொள்ளுந் தன்மை யுள்ள, தாமரையில் வாழ்கின்ற சீதாபிராட்டியாருடனும், நிலையான தூக்கத்தை விலக்கிய இலக்குவனுடனும், வல்லமைபெற்ற ஞானமுடைய பரத்துவாச முனிவரது ஆச்சிரமத்திலே சேர்ந்த பெருமாளே ; கோபிப் போர், உலோபிகள், சூதாடுவோர், காமத்தில் மிக்க இன்பம் வேண்டு வோர், பொய்பேசுவோர், சண்டாளர், முரடர், பேச்சுத்தவறிப் பேசு வோர், இயலாததைச் செய்வோர், போர்க்கலகத்தை மூட்டிவிடுவோர், தீவினை செய்தலையே எண்ணுவோர், கள்வர், ஆட்டுக்கிடாய்போல் வீணில் மூட்டிப் பாய்ந்து தலையை உடைத்துக் கொள்பவர், தூர்த்தர்கள், நீண்ட வாணாள் உடையார்போலக் கிடைத்த பொருளின்மேல் பற்றுக்கொண்டு கவலையின்றி வாழும் அறிவிலிகள், ஆகிய இத்தகையாரோடு நட்புக் கொண்டு திரிவதை விட்டு, ஒப்பற்ற வீடுபேற்றை நினைத்தற்கு உரிய நாள் எனக்கு வேருகவர இருக்கின்றதா ?

(பிராட்டி பேறு தருவிக்குமவள் ஆதலின் அவளை " ஆர்க்கும் இரட்சையான "வள் என்றார். உறக்கம் அறிவினை ஆட்கொள்ளும் இயல் பிற்றாதலின், " ஆட்சி யுறக்கம் " எனப்பட்டது).

தானத்த தான தனதன
தானத்த தான தனதன
தானத்த தான தனதன தனதான

64. தூணத்தி லோமுன் னிலகிய
ஆலத்தி லோநல் லடியவர்
சோமத்தி லோசொ லருமறை முடிமீதோ
தூரத்தி லோ[1] கை யணியவை
[2] யானத்தி லோவந் நிலையது
சோதிக்கொ ணாது பிரமமுன் அதிரூபம்

பேணத்த காது மதிகொடு
நாடப்பெ றாது தெளிவொடு
பேசப்ப டாது கடைவழி யுணர்வார்யார்
பேதித்தி டாது பரமமெய்ஞ்
ஞானப்ர காச முழுதுள
பேருக்க லாது வெளியிட வசமாமோ

கானுற்ற போதி லமுதுசெய்
ஆயத்த மான தெனமுனி
காதற்ப்ர கார முரைசெய இனிமீளுங்
காலத்தி லாகு மெனநனி
பாரத்து வாச னியல்பொடு
காகுத்த வாழி யெனவழி விடலோடு

மாணிக்க வேணி பொலிதர
ஆடுற்ற சீரை யொளிபெற
வாமத்து வீர வரிசிலை யழகாக
மாசற்ற தேவி மகிழ்வுற
வீசுற்ற தேவர் தொழுதெழ
மாசித்ர கூட மருவிய பெருமாளே.

உரை:—நீ, பாரத்துவாச முனிவரை வணங்கியவுடன் அவர் உன்னை வாழ்த்தி, முறைப்படி வரவேற்று, "உணவு சமைக்கப்பட்டு விட்டது, நீ உண்ணவேண்டு"மென்று கேட்க, 'இனித் திரும்புங்காலத்திற் செய்வேன்'

(பி - ம்) 1. அணிபருதி. 2. தானத்தி லோர்வு னிலையது.

என்று நீ சொல்ல, மிக்க அன்புடைய அம்முனிவர் அதற்கு உடன்பட்டு இயற்கைக் குணத்தோடு, 'காகுத்தன் மரபிற் பிறந்த இராமா, வாழ்க' என்று வாழ்த்தி உனக்கு வழிவிட நடந்தவனே ; மாணிக்கம்போற் சிவந்த சடை சுற்றிக் கவிந்து ஒளி வீசவும், அரையில் அசையும் மரவுரி விளங்கவும், இடக்கையில் வீரமும் கணுவும்பெற்ற வில் அழகாய் இருக்கவும், குற்றந் தீர்ந்த திருமனைவியார் மகிழவும், பூமாரி பொழிந்த தேவர்கள் வணங்கியெழவும், பெரிய சித்திரகூட மென்னும் திருமலையைச் சேர்ந்து பர்னசாலை கட்டிக்கொண் டிருந்த பெருமாளே ; உமது நிலை, நரசிங்க வடிவம் எடுத்த தூணின்கண் இருக்கிறதா? அன்றி, விளங்கிய ஊழி வெள்ளத்தில் பள்ளிகொண்ட இலையிலேயோ? நல்லடியார் செய்யும் வேள்வியிலேயோ? ஓதற்கரிய வேதங்களின் தலைமேலேயோ? தூரத்திலேயோ? கைக்கெட்டும் சமீபத்திலேயோ? உம் நிலை வேறெதிலே உளதென்று ஆராய முடியாதது; பிரமம் உன் அதிசயமான வடிவம் ; அஃது இத்தகைத் தென்று அறியவியலாதது ; அறிவுக்கும் எட்டாதது ; தெளிவோடு விளக்கமாய்ப் பேசுதற்கும் அடங்காதது ; பின் அதனை அறிவார் யார் ? என்னில், அதுவோ? இதுவோ ? என்று ஐயுறுது மேலான உண்மை யறிவான ஞானவொளி நிறைந்திருப்பவர்க்கே ஆகும் என்றறிக. மற்றவர்களால் உன்னை வெளிப்படுத்துதல் அவர்கள் வசமாகுமோ ? ஆகாது.

தந்த தானன தனதன
தந்த தானன தனதன
தந்த தானன தனதன தனதான

65. உந்தி மீதொரு பிரமனை யருளினை
அந்த வாயுவை யுயிரினி லுதவினை
உம்பர் மேவிய வுலகினை யொருசிர மதனாலே
உந்தி ஞய்முத விரவியை விழிகொடு
தந்து பேணினை மகபதி கனலவன்
ஒண்ச ரோருக முகம்வர நிறுவினை செவியாலே
நிந்தை தானறு திசைகளை முடுகினை
சிந்தை யூடொரு மதியெழ நடவினை
நின்ற தாண்மிசை புவிமகள் விரிவுற மகிழ்வானய்
நின்ப்ர தாபமும் மகிமையு முதன்மையும்
அன்றி யேயொரு பொருள்களு மிலையுனை
நெஞ்சி னலினி நினையவும் முணரவும் எளிதாமோ

மைந்த ஞேவன மருவுவ னெனவொரு
தந்தை யாகிய தயரதன் முடிதலும்
வந்து மாமுனி யரியரி யெனவழு துயிர்வாடி

வண்டு லாவிய தொடையணி பரதனை
நம்பி மாமுடி புனைகுவன் வருகென
வஞ்ச வோலையை விடுதலு மதுதனை நனிகாணுத்

தந்தி தேர்பரி படையொடு திருநகர்
சென்று தாயடி தொழுதலு மவளுரை
தந்த போதுள விளைவுக ளுணர்தலும் அயர்வாகித்

தந்தை [1]சாவினும் இறைவன முறுவது
கண்டி ரேனென வழுதழு தலமரு
தம்பி யாகிய பரதனை யுடையதோர் பெருமாளே.

உரை :—பின்னர், அயோத்தி நகரில், தசரதமன்னன், சுமந்திரன் சொற்கேட்டு, 'என் மகனே காடடைவான்' என்று சொல்லிக் கதறியழுது, தன் பிள்ளையின் பிரிவுத் துயரால் இறக்க, வசிட்டமுனிவர் அது தெரிந்து வந்து அரி, அரி, நாராயண வென்றுசொல்லி யழுது உயிர் வாட்ட முற்று, தைலத்தில் அரசனுடலை இட்டுவைத்துப் பின் தேனுக்காக வண்டுகள் திரியும் பூமாலை அணிந்த பரதனுக்கு, இராமபிரானது முடிசூட்டு விழாவிற்கு வரவேண்டுமென்று வஞ்சகமாக ஓலை போக்க, அதனைப் படித்தறிந்த பரதன், நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டு, அயோத்திக்கு வந்து சேர்ந்து, தன் தாயாகிய கைகேயியை வணங்க, அவள் சொல்லிய வாற்றால் விளைந்த நிகழ்ச்சிகளை யறிந்து, மயங்கி விழுந்து தெளிந்தபின், 'தந்தை யிறந்ததைவிடத் தமையன் காடடைந்தது தெரிந்தும் நான் உயிரோடிருப்பதில்லை' யென்று இடைவிடா தழுது, சுழன்று விழும் அத் தம்பியாகிய பரதனையுடைய ஒப்பில்லாத பெருமாளே; உன் திருவுந்தியில் நான்முகனைப் பெற்றாய்; அழகிய வாயுவை உன் மூச்சினின்று தந்தாய், இமையோர் இருக்கும் ஆகாயத்தை ஒப்பில்லாத உன் சென்னியால் எழும்பச் செய்தாய்; முதன்மை பெற்ற சூரியனை உன் திருக்கண் கொண்டு உண்டாக்கி எங்கும் விளங்கச்செய்தாய்; வேள்வித் தலைவனான இந்திரனையும், அங்கியங்கடவுளையும் உன் அழகிய தாமரைப் பூவை யொத்த திருமுகத்தினின்றும் வரச்செய்து நிறுத்தினாய்; திருக்காதினால், பழிப்பற்ற திசைகளை விரைவில் வெளிப்படுத்தினாய்; திருவுள்ளத்தாலே திங்கள் தோன்றச் செய்தாய்; நிற்கும் திருவடிமேல் பூமியாகிய பெண் விரிவாக வர மகிழ்ந்

1. சாவதும் இறைவன் முறுவதும்.

தாய்; இத்தகைய நின் புகழும் சிறப்பும், முதன்மையும் அன்றி ஒரு பொருளும் இல்லை. இவ்வாறுள்ள உன்னை என் நெஞ்சில் நான் இனி நினைக்கவும் அறியவும் எளிதிலாகுமோ? அரிதாதலின் நீயே அருள் செய்வாயாக.

தனதந் தத்தன தானத் தத்தன
தனதந் தத்தன தானத் தத்தன
தனதந் தத்தன தானத் தத்தன தனதான

66. விடைவெம் புட்கொடி தீபச் சைப்புயல்
உருவங் கைப்படை வேற்பொற் சக்கரம்
விரிகொன் றைத்தொடை வாசத் தைத்தரு துளவேதார்

வினைமுன் சுட்டிடல் வாழ்வித் துக்கொளல்
அரனங் கச்சுத நாமக் கட்டுரை
விசியும் தொக்குடை யேமப் பொற்றுகில் [1]மொழிவேதம்

இடமந் தக்கிரி யோதத் துக்கடல்
நடனம் பொற்றுயில் சாதித் திட்டவை
இலகுஞ் சத்திபொன் மோகத் தத்தையர் [2]ஒருகோலம்

இவை [3]வந் திப்பவர் வேறிட்டுச் சொல
அதுநம் பித்தடு மாறிப் பத்தர்முன்
இனிவின் றித்திரி வேனுக் குத்தெளி வருள்வாயே

முடியும் கர்த்தனே யீமத் திட்டபின்
அரசும் பெற்றுல காளப் புக்கருள்
முறையென் றுத்தம வேதத் துத்தவ முனியோதும்

மொழிமுந் திக்கனல் போலப் பட்டிரு
செவியுஞ் சுட்டிட மாழ்குற் றுச்சடை
முடியுஞ் சுற்றிய சீரைப் பக்கமும் உளனுதிப்

படையுஞ் சுற்றமு மூர்விட் டுச்செறி
புடைமண் டுற்றெழ ஞானக் கற்பினர்
[4]பலருஞ் சுற்றிட வோடித் தெற்கினில் நடவாமுன்

(பி - ம்) 1. தலைமேலே, இடைகங் கைச்சடை மூடித் துக்கமில். 2. ஒன்றுமோ. 3. சிந் திக்கிலு பாசித் துச்சிவன் உறுகின் றக்குறி காணச் சுத்தனி இறையென் றக்குறி யாமத் தத்துவம் அறிவேனோ 4. பலருந் துய்த்திட நாடித்.

பரிவின் கட்டிய வோடத் தைக்குகன்
விடகங் கைத்திரை யேறிச் சொற்பெறு
பரதன் சித்திர கூடத் திற்றொழு பெருமாளே.

உரை :—இறந்த மன்னனுக்கு ஈமக்கடன்கள் செய்தபின், "அரசையும் உலகையும் அடைந்து ஆளுதற்கு முடி சூட்டிக் கொள்க; இஃது அரசன் உனக்கு விடுத்த கட்டளை;" என்று சிறந்த வேதநெறிப்படி தவம் செய்த வசிட்டமுனிவர் சொல்ல, இச் சொற்கள் நெருப்பை நுழைத்தாற்போல் பரதன் இரு காதுகளிலும் புக, அழுது, சடைமுடியும், அரையிற் சுற்றிய மரவுரி யாடையும் உடையோனாகி, நால்வகைப் படைகளும் உறவினரும் நகரைவிட்டு நெருங்கிய இருபுறமும் ஒன்றுக்குமேலொன்றாக விரைந்துவர, நல்ல கற்புடைய மங்கையர் எல்லோரும் சுற்றிவரத் தெற்கு முகமாக ஓடி நடந்து கங்கைக்கரையைச் சேர்ந்து, முற்பட்ட அன்பால் கட்டப்பட்ட ஓடத்தைக் குகன் ஓட்ட, அதில் ஏறி, அலைகளையுடைய கங்கையைக் கடந்து அக்கரை யேறிச் (சிறந்தவனென்று சொல்லப்பெற்ற பரதன்) சித்திரகூட மலையில் சேர்ந்து வணங்கிய திருவடிகளையுடைய பெருமாளே; உன்னை வடிவிற்கொண்டு புகழ வேண்டினால், உனக்கு ஒருபுறம் விடைக்கொடி; ஒருபுறம் கொடிய கருடக்கொடி, ஒருபாதி நெருப்புரு; மற்றைப் பாதி பசிய முகில் நிறம்பெற்ற உரு; ஒரு திருக்கையில் சூலப்படை; மற்றொரு கையில் அழகிய சக்கரப்படை; ஒருபக்கத்து மாலை கொன்றை மாலை; வேறு ஒரு பக்கத்தில் மணங்கமழும் திருத்துழாய்; ஒரு பக்கத்துத் தொழில் முன்னே நெருப்பாய்ச் சுடுதல்; மற்றைப் பக்கத்துத் தொழில் காத்தல்; ஒரு பெயர் பரமசிவன்; மற்றொரு பெயர் நாராயணன்; ஆக, இரு பக்கங்களுக்கும் இரண்டு பெயர்கள்; ஒரு பக்கத்துத் திருவரையில் இறுகக்கட்டிய புலித்தோல்; ஒருபக்கத்துத் திருவரையில் பொன்னுடை; உங்கள்மொழி வேதமே யாகும்; வாழிடம் கயிலாய மலையும், ஒலிக்கும் திருப்பாற்கடலும்; ஒருபுறம் கூத்தாடும்; மற்றைப் புறம் அறிதுயில் கொள்ளும்; விளங்கும் மனைவியர் ஒருபால் மலைமகள்; மற்றொரு பால் திருமகள்; இவர்கள் இருவருக்கும் காதலையுண்டாக்கும் வண்ணம் கிளிபோல் கொஞ்சிப் பேசும் இருவகைப்பட்ட ஒரு திருமேனி; இந்த வடிவத்தில் ஒருபாதியைத் தொழும்போது, சிலர் அடுத்த மற்றப் பாதியை வேறுபடுத்திக் கூறினால், ஒரு திருமேனி இங்ஙனம் வேறுபடுமோவென்று கருதாது, பிறர் வேறாகச் சொல்லியதனை மெய்யென நம்பி, ஒரு பாதியைப் பூசித்து மற்றையதைப் பழித்து நிலைதடுமாறி, உன் அடியார் முன் நாணித் தலைகுனியாமல் திரியும் எனக்கு, இரண்டுருவும் ஒன்றென உறுதியாக அறியும் தெளிவை அருள்வாயாக.

("விடக் கங்கை" என மிகற்பாலது சந்தம் நோக்கி இயல்பாயிற்று).

தனதன தந்த தத்த
தனதன தந்த தத்த
தன்தன தந்த தத்த தனதான

97. பூடிவற நின்று கற்பம்
அளவுநெ டும்பு னற்குள்
முழுகினு நிந்தை யற்ற தவர்யாவும்
முயலினு மந்த ணர்க்கு
நெடுவட குன்ற மொத்த
முதிர்தன மங்கி றைத்து முசியாதே
இடர்கெடி னுந்தெ விட்ட
அனமிடி னும்ப ணிக்கி
ரவிசசி யெஞ்சு மக்ர கணமீதே
இனிதின நந்த மிக்க
நிரைவிடி னுந்து தித்தி
ரகுபதி யென்ப தற்கு நிகராமோ
அடிதொழு தம்பி வெற்றி
இறைவனி றந்த துக்கம்
அதனைமொ ழிந்த ரற்ற நிலமீதே
அலறியெ ழுந்த தற்பின்
முழுகியெ ழுந்து தக்க
அமரரு டன்பு குத்தி யவண்வீரக்
கடகநெ டுந்த டக்கை
விலகிவி டுந்த ருப்பை
கரமென மந்தி ரத்து நெறியாலே
கடிபுன லுஞ்ச மைத்த
சருவும்வ ழங்கி மிக்க
கடன்முழு துங்க ழித்த பெருமாளே.

உரை :—உன் திருவடிகளை வணங்கிய பரதன், வெற்றிமிக்க தந்தை யிறந்தமையைச் சொல்லி யழ, அது கேட்டவுடன் நீ அலறித் தரைமேல் விழுந்து அறிவு கெட்டுப் பின் தெளிந்து, நீரில் மூழ்கி யெழுந்து, நற்பண் புகளை யுடைய மன்னனை இமையோருடன் கலக்குமாறு சேர்த்து, அவ் விடத்து, வீரம் மிக்க கடகந்தரித்த நீண்ட திருக் கைகளினால், விலகிவிட்ட

தருப்பைப் புல்லை அரசன் கையாக்கி, அந்தக் கையில் மந்திர வழியால் மணமுள்ள எள்ளும் நீரும் கூடிய திலோதகமும், சமைக்கப்பட்டுப் பலி யாக்கிய பிண்டப் பிரதானமும் கொடுத்துப் பின்னும், மிகுந்து செய்யப் பட்ட குற்றம் நீங்கிய தவமெல்லாம் முயற்சியாற் செய்வதால் தென் புலத் தார் கடன் முழுதும் தீர்த்தனை பெருமாளே ; முடிவின்றி நின்று நான்முக னது ஆயுள்வரை அரியதாய் மிக்குள்ள நீரில் மூழ்கி யிருப்பினும், பழிக் கப்படாத தவம் எல்லாவற்றையும் செய்தாலும், மறையோர்க்கு நீண்ட மகாமேருவை யொத்த அளவு மாற்றுயர்ந்த பொன்னைக் கொடுத்து முகங் கோணாது அவர் வறுமையைப் போக்கினும், பசித்தவர் தெவிட்டுமாறு சோறிடினும், ராகு கேதுக்களாகிய பாம்புகளுக்குச் சூரிய சந்திரர்கள் இளைக்கும் அக் கிரகண காலத்தில், இனிமையோடு அளவற்ற பசுக் கூட் டங்களைத் தானம் செய்யினும், உன்னைத் தொழுது வாழ்த்தி 'ரகுகுலத்திற் குத் தலைவனே' என்று சொல்வதற்கு ஒப்பாகுமோ ? ஆகாது.

(இராமபிரான் தன் தந்தைக்கு இறுதிக் கடன்களைச் செய்ததை இது கூறுகின்றது). சரு - பிண்டம். கஞ்சி வடிக்காத சோறு.

தனன தத்த தனன தத்த
தனன தத்த தனன தத்த
தனன தத்த தனன தத்த தனதான

68. முதன்மை பெற்ற தவிசு மிக்க
கனக வெற்பு முறையு டுக்கள்
முறைதொ டுத்த தொடையல் சுற்று முழுவானீர்
முழுகு மப்பு மணம டுத்த
புகையு ரைக்கின் முகிலின் வர்க்க
முழுவி ளக்க மெழுமை பெற்று வருநீள்கோள்
மதுர மொத்த வமுது மற்றிவ்
உலக னைத்து மெனநி னைத்து
மருவி பத்தி யுடன்வ ழுத்தும் அடியார்தம்
மனமி ருக்கு முனது பொற்பு
நிலைச ரித்ர மளவு பற்று
வடிவு முற்று முணர வைப்ப தொருநாளே
பிதிரி னுக்கு முறைக ழித்த
அளவில் வெற்றி யரச ளித்தல்
பெறுதி யத்த வருகெ னப்பொன் அடிசூடிப்

பெருகு பத்தி யுடன ழைத்து
வருவ னெக்க வலது தக்க
பிரிவு துக்க மெனவி ரக்கம் உறலோடும்

பதியு ரைத்த படிவ னத்தின்
மருவு சிட்டர் பயிலு நிட்டை
பலவு முற்றி வருட முற்ற பதினாலின்

பதித னக்கு வருகை தப்பின்
அனல்கு ளித்தி டெனமி குத்த
பரத னுக்கு விடைகொ டுத்த பெருமாளே.

உரை:—தந்தைக்குச் செய்யவேண்டிய கடன்களை முறைப்படி செய்த பின் பரதன், "அண்ணலே வெற்றி பொருந்திய நாட்டை ஆளும் ஆட்சியைப் பெற வருக" என்று அழகிய நின் திருவடிகளை வணங்கி, "பெருகிய அன்பினால் நான் அழைப்பது தங்கட்கு உடன்பா டில்லையாயின், நான் தங்களுடன் வருவேன், இஃது எனக்குத் தக்கதே; உம்மை விட்டுப் பிரிதல் பெருந் துன்பம்;" என்று கூறி இரந்தான்; அப்போது, நீ, "நான் தந்தையின் கட்டளைப்படி, காட்டிலுள்ள பெரியோர்கள் செய்யும் நிட்டை முதலியவற்றை முடித்துக்கொண்டு பதினான்கு ஆண்டுகளும் கழிந்த பின் அயோத்திக்கு வருவேன்; அது தவறுமாயின் நெருப்பில் மூழ்கிவிடு" என்று அன்புமிக்க பரதனுக்கு விடைகொடுத்தருளிய பெருமாளே; உனக்கு, முதன்மையாகி எல்லாப் பொருள்களுக்கும் முந்திய பெருமைபெற்ற ஆசனம் எது வெனில், எல்லா மலைகளினும் பெருமை மிக்க பொன்மலையாகிய மகாமேரு; முறையாக நீதரித்துள்ள மாலை, ஒழுங்காய் இருக்கும் விண் மீன்கள்; மூழ்கும் நீர், தூய்மை மிக்க ஆகாயகங்கை; மணமுள்ள புகை, முகிலின் கூட்டம்; மிக்க ஒளியுடைய திருவிளக்கு, எழு பெயர்களைப் பெற்று முறையாக வரும் கிரகங்கள்; இனிய உணவு, உலகங்கள் முழுதும் ஆம், என நினைத்து அறிவில் தங்கிய அன்புடன் வணங்கும் உன் அடியார் உள்ளத்திலிருக்கும் நின் அழகு, நீ நின்ற நிலை; திருவிளையாடல் முடிந்த அளவு பிடித்தபடி நின் திருவடி; இவைகளை நான் முற்றும் உணரவேண்டு மானால், மகாமேருவுக்கு அதிகமான ஆசனமும், விண்மீன்களினும் மிக்க மாலையும், கங்கைக்கு மேற்பட்ட தூய நீரும், முகில்களுக்கு மேற்பட்ட மணப்புகையும், எழு கிரகங்களின் மேம்பட்ட திருவிளக்கும், உலகங்களுக்கு அதிகமான திருவமுதும், உண்டானால் அவற்றைக் கொண்டு உன்னைப் பூசித்து அறிவேன்; இவை கிடைக்காமையால் நானறிவ தில்லையாயிற்று; ஆதலின், இன்றே உன்னை நான் அறியச் செய்வாயாக.

தனத்தனன தானன தத்தன
தனத்தனன தானன தத்தன
தனத்தனன தானன தத்தன தனதான

69. சருக்கரையு ணுதவி டத்தினை
விருப்புறுவ ரோநிழல் விட்டெரி
தனிற்புகுவ ரோமலர் மெத்தையின் மருவாதே
தரைப்புரள்வ ரோநகர் கைத்தொரு
வனத்தடைவ ரோமுடி வைத்துமொய்
சடைப்படுவ ரோமரு நற்றொடை புனையாதே
எருக்கணிவ ரோ துகில் பற்றற
உடுத்திடுவ ரோவிடு தொக்கினை
இரப்புறுவ ரோதிரு வைத்தினி உயிர்போலே
இருக்குமுனை நாடுத லற்றினி
யிழுக்குடைய தேவர்த மைத்தொழு
திடர்ப்படுவ ரோவறி வுற்றவர் அருள்வாயே
உரைத்ததொரு வாய்மையி னிற்பது
நினைத்தழுக ணீரும டக்கமும்
உடுத்ததொரு சீரையு முற்றிறை நகர்சேரு
உரைத்தெளிவு நீடிய தெற்குறு
முகப்பொலிவு மீரெழு வற்சரம்
உறக்கமறு கோலமு நிட்டையும் உளணுகித்
திருச்சரண பாதுகை யைத்தினம்
முடித்தவபி டேகமெ னக்கொடு
சிறப்புடைய வேணித ரித்துயிர் விடுமாறு
செழித்தகனல் மூழ்கவொ ருப்படும்
அருட்பரத னுனவ னுக்கொரு
திருத்தமைய னுகவு தித்தருள் பெருமாளே.

உரை :—தந்தையார் சொல்லிய ஒப்பற்ற சொல்லின்படி ஒழுகும் நின் நிலையைக்கண்டு அழும் கண்ணீரும், ஒழுக்கமும், அரையிலுடுத்த ஒரு மரவுரியும், அயோத்தி நகரில் சேராத அறிவின் தெளிவும், நீண்ட தென் திசையை நோக்கியுள்ள முகச் சிறப்பும், பதினான்கு ஆண்டுகள் தூக்

கத்தை விட்டிருக்கும் திருமேனியும், தவத்தின் நிட்டையும் உள்ளவனுகி, உன்னுடைய திருவடிகளில் தொடுத்த திருப்பாதுகையை முடித்த திருவபிடேக மென்று கருதிச் சிறப்புடைய சடையில் என்றும் தரித்துப் பதினன் காண்டுகளும் கழிந்த பின் தன் உயிரை விடுதற்குச் செழி;்து எரிகின்ற நெருப்பிலே விழ ஒருப்பட்ட அருளுடைய பரதனுக்கு முன் பிறந்தருளிய பெருமாளே; உலகவர் சருக்கரையைத் தின்னுமல் நஞ்சினை நுகர ஆசைப் படுவார்களோ? நிழலை விட்டு நெருப்பிலே விழுவார்களோ? மெத்தையில் படுக்காமல் தரையில் புரள்வார்களோ? நகரை வெறுத்துக் காட்டில் திரிவார்களோ? மணிமுடியை வெறுத்து நெருங்கிய சடைமுடி புனைவார்களோ? நறுமணமுள்ள பூமாலையை அணியாமல் எருக்க மாலையை அணிவார்களோ? நல்ல துகில் உடுத்துதலைவிட்டுத் தோலை உடுப்பார்களோ? செல்வத்தை நுகராமல் வைத்துப் பிறரிடம் இரப்பார்களோ? இவர்களைப் போல், அறிவுள்ளவர்கள் உடலுக்கினிய உயிர்போலவும், அவ் வுயிருக் கினிய உடல்போலவும் இருக்கும் உன்னை நினைத்தலை விட்டுத் தங்களுக்கு இன்பமான தேவர்களை வணங்கி வருந்துவார்களோ? சொல்லுக.

தத்தனை தனத்த தந்த
தத்தனை தனத்த தந்த
தத்தனை தனத்த தந்த — தனதான

70\. விற்ெறழிலோ கிடைத்த தின்று
கைத்தழையோ தொடுத்த வம்பு
வெற்றிமதா சலத்தை யின்று — பொருதீரோ
மெய்ப்படவே துரத்தி வந்து
சுற்றுகிறீர் புனத்தை யெங்கும்
மெச்சுளதே யெனத்தி ரிந்து — மடவார்தாம்
மற்றவனை தரித்து நின்ற
அக்குறிதான் மனத்த றிந்து
மட்டறவே நகைத்தி யம்பல் — முதலாக
வைத்திடுகோ வைமுட்டர் வஞ்சர்
துட்டர்கண்மே லுரைத்தி ரந்து
மட்குதல்போ யுனைத்தெ ளிந்து — புகழ்வேனே
மற்றையதா யர்சுற்ற மந்த்ரி
வர்க்கமிரா சவர்க்க முந்து
பட்டணமீ தினிற்ச னங்கள் — துயர்கூரப்

பட்டுணேவோன் வசிட்டன் வெம்பு
மெய்ப்பரதா தியர்க்கு நின்று
பற்பலவாய் மைசெப்பி நண்பின் விடைகூறிச்

சிற்றிடையா ளொருத்தி பின்பு
முற்றிளேயா னொருத்தன் முன்பு
சித்தமொடே வரத்த வஞ்செய் வடிவாகித்

தெற்கினிநாம் நடக்க வென்று
பொற்றிருமே ருவொத்தி லங்கு
சித்திரகூ டம்விட்டெ ழுந்த பெருமாளே.

**உரை :**—அன்புமிக்க தாயர், உறவினர், அமைச்சர்குழு, அரசர்குழு, எல்லாத் திருப்பதிகளினும் முதன்மைபெற்ற நகரிலுள்ள மக்கள் ஆகிய எல்லோரும் வருந்த, இத் துன்பத்தில் ஈடுபட்டு வருந்தும் சுமந்திரன், வசிட்டர், வாடிய மேனியையுடைய பரத சத்துருக்கினர் ஆகியோருக்கு வணக்கம் செய்து அன்போடு சொல்ல வேண்டிய பல சொற்களேச் சொல்லி அனுப்பிவிட்டுச் சிற்றிடையவ ளாகிய சீதையாகிய ஒருத்தி பின்னும், முதிர்ந்த தம்பியாகிய இலக்குவ னென்னும் ஒருவன் முன்னும் நன் மனத்தோடு வர, தவ வடிவத்தோடு, இனித் தென்திசை நோக்கி நாம் நடக்க வேண்டுமென்று சொல்லி, பொன்மலேயாகிய மேருவை யொத்து விளங்கும் சித்திரகூட மலேயைவிட்டு எழுந்து நடந்து சென்ற பெருமாளே; தோழிமார் அறியாமல் தலேவியோடு கலந்து சென்ற தலேவன், தான் சொல்லியிருந்த அடையாளமாகிய தழை யுடையைப் பிடித்துக்கொண்டு மறுநாள் தோழியரோடு தலேவி நிற்குமிடத்தில் வந்து, "நான் ஒரு யானேயை அம்பால் எய்தேன், அந்த யானேயைக் கண்டீர்களோ?" என்று கேட்க அவனேப் பார்த்துத் தோழியர், "தலேவனே, அம்பெய்யுந் தொழிலுக்கு உமது கைக்கு வில் கிடைத்திலது; கையிலுள்ள இத் தழையோ நீர் தொடுத்துவிட்ட அம்பு? இத் தழையால் வெற்றிபொருந்திய மதநீரொழுகும் மலேபோன்ற யானேயொடு போராடினீரோ? நீர் செய்த செயல் பொய்யாய் இருக்கச் சொல்லால் மெய்ப்படச் சொல்லி அவ் யானேயைத் துரத்தி வந்தவரைப்போல் கொலேக்கள மெங்கும் சுற்றுகிறீர்; உம்முடைய சொற்களினல் உம்மை மெச்சும் நிலேமை உண்டாயிற்று" என்று சொல்லி, அத்தலேவன், தலேவியின்மேற் காதலால் நிற்கும் குறியை மனத்தால் குறிப்பாக வறிந்து அளவின்றிப் பெருகச் சிரித்துச் சொல்லுவது முதலிய துறைகளேயுடைய கோவையை மூடராகிய வஞ்சகச்செயலேயுடைய தீயோர்கள்மேற் பாடி இரந்து, அறிவு தடுமாறுதல் ஒழிந்து நீயே இறைவன் என்று தெளிந்து உன்னேப் பரவுவேனே? சொல்வாயாக.

இஃது, 'இறைவனே நகுதல்' என்னுந் துறை.

அயோத்தியா காண்டம் முற்றும்.

ஸ்ரீ:

# 3. ஆரணிய காண்டம்.

---

தத்தன தனதன தனந்த
தத்தன தனதன தனந்த
தத்தன தனதன தனந்த — தனதான

71. [1]சித்திர மெனவொரு சிலம்பி
மெத்தெனு நடையொடு திரிந்து
தெற்றிய பலபல விதங்கொள் — இழைசேர்நூல்

சிக்கற வடைவினில் விழுங்கு
மத்திற மெனமுடி விறந்த
திக்கொடு செகமுழு துமண்ட — வகையாவும்

பத்திசெ யயனொடு பயந்து
முற்றவு முடிவினி லுகந்து
பக்கண மெனவினி தருந்தி — விடுவாய்நீ

பற்றறு குறளென விரந்து
முற்றுல களவிட நிமிர்ந்த
பட்டிமை முதலம ரரன்றி — அறிவார்யார்

அத்திரு மலர்மகள் மருங்கில்
வற்கலை யழகுமி கையென்று
ரத்தின மணிகல னுமென்றும் — ஒளிமாறு

லக்கண முளதுகி லும்விஞ்சு
நற்றொடை பரிமள சுகந்தம்
எத்தனை வகையுமி னிமங்கை — அணிவாயென்

றத்திரி யெனுமுனி மகிழ்ந்த
பத்தினி யுதவுநல் விருந்தை
அச்சுத வமுதசெ யவென்று — பகிராமேல்

---

1. முண்டகோபநிடதம் 1 - 1 - 7. பார்க்க.

அப்புற நடவுமெ னவந்த
சொற்பயில் பரிவொடு விளம்பி
அத்தவன் வழிவிட நடந்த பெருமாளே.

உரை :—சித்திர கூடத்தைவிட்டுத் தெற்கே செல்லுகையில் அத்திரி முனிவரைக் கண்டு வணங்கி அவருடைய ஆசிரமத்திற் றங்கியிருக்கும் போது அவர் மனைவி, சீதையைப் பார்த்துத் தாமரைமலரில் இருக்கும் பெண்ணாகிய இவள் திருவரையில் மரவுரி அணிந்து கொண்டிருக்கும் அழகு குற்றமென்று சொல்லி, மணிகள் அழுத்திய பொற் பூண்களும், என்றும் ஒளி மழுங்காது ஒரே தன்மையாய் இருக்கும் புடைவையும், மிக்க மணமுள்ள பூமாலைகளும், சந்தனமும், கத்தூரி முதலியனவும் "சிறப்புள்ள பெண்ணே இனித் தரித்துக்கொள்" என்று சொல்லி அணிந்தவுடன், அத்திரிமுனிவர் உளமகிழ்ந்து, "அச்சுதனே, நல் விருந்தாய் வந்த நீ இங்கு உணவுகொள்க" என்று பகிர்ந்திடப் பெற்றதை உண்டவுடன், 'மேல் நடப்பாயாக' வென்று கூறி உடன்வந்து பல முகமனுரை யியம்பி அவர் வழிவிட நடந்த பெருமாளே ; ஒரு சிலந்தி மெத்தென்று நடந்து திரிந்து சித்திரம்போல் பின்னிய பல நிறங்கள்கொண்ட பல இழைகளால் அமைந்த நூலைச் சிக்கின்றிப் பின்னிய முறைப்படி, தானே விழுங்கும்; அதுபோல, எல்லையற்ற திசைகளோடு எல்லா அண்டங்களையும், நின்பால் பத்திகொண்ட நான்முகனுடன் பெற்று, முடிவுக்காலத்தில் அவைகள் எல்லாவற்றையும், இனிய தின்பண்டம் போல இன்பமாக உண்டு, பின் வெளியில் விடுவாய் ; இத்தகைய நீ ஆசையற்ற குறளனாய் வந்து, மூவடி மண்ணைத் தானமாகப் பெற்று, அப்போது மூலகங்களையும் அளத்தற்கு நிமிர்ந்தருளிய திருட்டுத்தனத்தையும் உன்னுடைய திருவிளையாடல்களையும் உன் அடியாராகிய தேவர்க என்றி அறிய வல்லார் யார்? ஒருவருமிலர்.

தனத்தனஞ தந்த தத்த
தனத்தனஞ தந்த தத்த
தனத்தனஞ தந்த தத்த தனதான

72. அடிக்கடிதான் வம்பு ரைக்கும்
இடக்கரெல்லாம் விண்டு செப்பும்
அளித்தவரே னும்ப ழிக்கும் நெறிபேண

அவத்தரையே னென்ற ழைக்கும்
மறைப்பொருள்வீ ணென்றி ழைக்கும்
அடிப்பவர்சீ லந்து திக்கும் மடவார்கண்

விடச்சுடர்வே லென்றி சைக்கும்
முலைக்கெதிர்கோ டென்ற லப்பும்
விரைக்குழல்கா டென்ற ரற்றும் எவரோடும்

வெடித்திடவே முன்பி தற்று
மெனக்கிதுநா வென்று வைத்த
விதிக்கடியேன் முன்செய் திட்ட குறையேதோ

வடித்தொருசூ லந்தி ருப்பி
எடுத்தவிரா தன்பி டித்து
வனத்தைவிடா வந்த ரத்தில் நிமிர்போதில்

மறைப்பொருளே வஞ்ச மற்ற
இலக்குவனே யென்ற ழைத்து
மனப்புகைமேல் மண்ட நிற்கும் உயிர்தானும்

நடுக்குறவா கம்ப தைப்ப
அடிக்கடிநீர் கண்டு ளிப்ப
நலக்கியவே டன்கை யுற்ற பிணைபோலே

நறைக்குழலாள் அங்க ரற்றல்
செவிப்படலோ டுந்தி கைத்து
நகைத்தொருசா பங்கு னித்த பெருமாளே.

உரை:—அரத்தாற் கூர்மைசெய்யப்பெற்ற சூலத்தைக் கையிலெடுத்த விராதன் திரும்பி வந்து சீதாபிராட்டியாரைப் பிடித்துக் தூக்கிக்கொண்டு விண்ணிற் கிளம்பியபோது, "வேதத்தின் உட்பொருளே, வஞ்சமற்ற இலக்குவரே," என்று கூப்பிட்டு, உள்ளத் தெழுந்தபுகை விண்ணில் விரைந்தோடவும், நிலையான உயிர் நடுங்கவும், உடல் பதைக்கவும், கண் களினின்றும் கடுகி நீர் துளிக்கவும், வேடன்கையில் அகப்பட்டுத் துவளும் பெண்மான்போல், மணமிக்க பூ முடித்த குழலையுடைய சீதை ஆகாயத் தில் அரற்றுங் குரல் நின்காதிற் பட்டவுடன், உடன் வந்தவள் விண்ணில் அரற்றுவானேன்? என்று ஆகாயத்தைப் பார்த்து இஃது அரக்கன் செய லென்று கருதி, நகைத்து ஒப்பற்ற கோதண்டத்தை வளைத்த பெருமாளே; என் நா, பயனற்ற சொற்களை அடிக்கடி சொல்லும்; மறைத்துச் சொல்ல வேண்டியவற்றை வெளிப்படுத்தும்; காத்தவரைப் பழிக்கும்; மறை முதல் நூல்களை ஆதரிக்காதவரை ஏன் என்று கூவி யழைக்கும். வேதநெறி கள் வீண் என்று சொல்லி வாதம் செய்யும்; அடிப்பவரை நல்லோர் என் னும்; பெண்களுடைய கண்களை நஞ்சு தீற்றப்பட்டு விளங்கும் வேலென்று

சொல்லும்; அவர்கள் தனத்திற்கு யானைக்கோடு ஒக்குமென்று ஓயாமற் சொல்லும்; மணமுள்ள குழலை மேகமென்று கதறும்; எவருடனும் வெடித்த சொற்களைப் பிதற்றும்; இத்தகைய தொன்றை நாவென்று எனக்குச் செய்துவைத்த பிரமனுக்கு நான் முன்செய்த குறை யாதோ? அறியேன்.

தனதன தனதன தான தானன
தனதன தனதன தான தானன
தனதன தனதன தான தானன தனதான

73\. அடிநடு முடிவறு மாயை யானவள்
சுருதியின் [1] உபநிட மான காரணி
அறுசம யமுமக லாத தேவதை அதிரூபி

அயனொடு பிரிவறு தேவி நாமகள்
கலைமகள் சுவடுவி டாத பாணியள் [வாள்
அமுதுகு குதலையள் மோகி வாணியென் உயிர்போல்

துடியிடை பிடிநடை சோம கேசிமொய்
படிகம தெனவொளிர் ஞான மேனியள்
சுலபைவெண் முளரிவி டாத பாரதி அருளாலே

தொலைவறு மறுபது நாலு மாகலை
உதவவு மதுகொடு ஞானி யாயடி
தொழுதுனை யறியவு மான பேறது பெறுவேனோ

விடுவிடு சனகியை மீளு மீளெமை
அறிகுவை அறிகுவை யார டாவென
விசைகொடு விசைகொடு கூடி யேசுடு கணையேவி

விழவிழ வமர்செய்து தோள்கள் வாள்கொடு
துணிதுணி யெனவடு போது சேவடி
விரலது கதுவவி ராத னூழ்வினை யுறுசாபம்

முடிதலு மிமையவ னாகி நாரண
செயசெய ரகுபதி வாழி வாழியுன்
முதன்மைய தறிகிலே யாதி மூலமுன் வடிவேகாண்

1\. இடமிட.

முனிவொழி முனிவொழி ராம னேயென
அவன்வெளி யிடவறி யாது போலிள
முகிணகை யொடுவரு தேவ தேவர்கள் பெருமாளே.

உரை :—நீ, வில்லை வளைத்து, "சீதையை விடு, விடு, திரும்பு, திரும்பு, கௌசிகர் வேள்வியில் அரக்கர்பட்ட துன்ப நிலையால் எங்களை நீ நன்கறிவாய், நீ யாரடா, நில், நில்," என்று மிக விரைந்து நடந்து விராதனை யடைந்து சுடும் இயல்புள்ள அம்பினை அவ்விராதன்மேல் விழ விழ எய்து போர்செய்ய, அவன் உங்கள் இருவரையும் தோளில் வைத்துச் சென்றபோது, நீவிர் இருவீரும் அவன் இரு தோள்களையும் வாளால் வெட்டித் துணித்தவுடன் உன் திருவடிகள் பட்டதனால், அவன் தன் பழ வினையால் அடைந்திருந்த சாபம் தீர்ந்து தேவனாகி, நாராயணா, ரகுநாயகா வாழ்க ; நின்கொற்றம் வாழ்க; எல்லா உயிர்க்கும் முன்னாகி அவை தோன்றக் காரணமாய் இருந்த நின் நிலையை நீ யறிகிலை; என்மேல் நீ கொண்ட சினம் தணிவாயாக, தணிவாயாக, வென்று (அத்தேவன்) உன் மறை நிலையை உனக்கு விளக்க, நீ, அறியாய்போன்று முல்லை யரும்பை ஒத்த முறுவல் சற்றுத் தெரியச் சிரித்துவந்தனை தேவர் பெருமாளே ; ஆதியும் நடுவும் முடிவுமற்ற மாயையானவள் ; ஆருகதம், பௌத்தம், மீமாங்கிசம், வைசேடிகம், நையாயிகம், உலகாயதம், ஆகிய புறச் சமயங்கள் ஆறினும் விலகாதிருக்கும் தெய்வம் ; (அல்லது, சைவம், பாசுபதம், காளாமுகம், மகாவிரதம், வாமம், வயிரவம் ஆகிய உட்சமயங்கள் ஆறினும் விலகாதிருக்கும் தெய்வம் எனலும் ஆம்.) வியக்கத்தகும் வடிவுடையவள் ; அமுதம் போல் இனிமையாய்க் கொஞ்சிப்பேசும் தன்மையள் ; வாணியென்னும் பெயர் பெற்றவள் ; என் உயிர்போன்றவள் ; துடிபோல் இடையும் பிடி போல் நடையும் உடையவள்; சந்திரனை முடியில் தரித்தவள்; ஒளியுள்ள படிகம்போல் வெண்ணிற முடைய ஞான வடிவினள் ; அடியார்கட்கு வருத்தமின்றிக் கைகூடும் வரம் ஈபவள் ; வெண்டாமரையை விட்டு நீங்காதிருக்கும் பாரதி ; எனும் இத்தகு சிறப்புள்ள கலைமகள் தன்அருளால் முடிவில்லாத பெருமைமிக்க அறுபத்துநான்கு கலைகளின் அறிவினை எனக்கு நல்கவும், அது கொண்டு நான் ஞான முள்ளவனாகவும், உன் திருவடிகளை வணங்கி உன்னை யறியவும் உரிய பேற்றினை நான் பெறுவேனோ ?

(விராதன், முற்பிறப்பில், அளகைப் பதியில், தும்புரு என்னும் இயக்கனாய் இருந்து, அரம்பை என்னும் விண்ணுலகத்து நாடகமகளைக் கண்டு காம மயக்கத்தால் அவளோடு கூடி முயங்கினன். அக் குற்றத்திற்காகக் குபேரன், அவனை அரக்கனாகப் பிறக்குமாறு சபித்து, இராம

னது திருவடி படுதலால் அச்சாபம் நீங்குமாறு சாப விடையும் நல்கினன். அதனல்; தும்புரு கிஞ்சிலி என்னும் அரக்கன் மகனகிய விராதனனன்).

தனதந்தன தானன தந்தன
தனதந்தன தானன தந்தன
தனதந்தன தானன தந்தன தனதான

74. நயனந்தெரி யாதுக லங்கினும்
விரவுஞ்செவி [1] தாரைம யங்கினும்
நவிலுந்தனி நாவத டங்கினும் இருபாதம்
நடையின்றிவி டாதுமு டங்கினும்
இருசெங்கைக ளோடிம டங்கினும்
நடுவுந்தலை கூனியொ டுங்கினும் மனநாணர்

கயல்கெண்டைகள் போல்விழி மங்கையர்
சுழியுந்தியி லேபெரி தின்பொடு
கவல்கின்றவி டாய்கொடு மண்டுவர் அதனல்வேள்
கலகந்தனை யாவர்க டந்தவர்
அவனம்பில்வி ழாதுவ னம்புகு
கமலந்தனி லேவிழு சிந்தனை அருள்வாயே

அயிலங்கைவி ராதன்ம டிந்தபின்
இளவெஞ்சிலை நாயகன் முன்செல
அரிதங்கிய கானக முன்செய்த தவமேபோல்
அரவிந்தச மூகம லர்ந்தொரு
முகில்மின்கொடி யோடுந டந்தென
அருள்வந்துரு வாய்நடை தந்தென அழகாகி

மயில்வந்தவை சாயல்க வர்ந்திட
உழைநின்றவை பார்வைந லங்கொள
வருமிந்திரை யாகிய கொம்பொடு நெடிதேகி
வரபங்கய மாமுனி யின்புறு
சரபங்கர்வி டாதுத வம்புரி
மலர்வண்டுறை சோலைபு குந்தருள் பெருமாளே.

1. தாரை - கேட்கும் ஒழுங்கு, அல்லது வழி.

உரை :—சூலாயுதம் பிடித்த கையையுடைய விராதன் இறந்தபின், கொடிய வில்லைத் தரித்த இளவலாகிய இலக்குவன் முன்னேபோக, சிங்கம் வாழ்கின்ற காடு, முன்னால் செய்த தவத்தைப்போலவும், தாமரை மலர்கள் மலர்ந்துள்ள ஒரு முகில் மின்னுக் கொடியுடனே நடந்துவருதல் போலவும், கருணையே ஒரு வடிவுகொண்டு நடந்து காட்டினாற் போலவும் அழகுபெற்று, மயில்கள் சாயலைக் கவரவும், மான்கள் பார்வையின் நன்மையைக் கொள்ளவும் நடந்துவரும் திருமகளாகிய சீதாபிராட்டியாருடன் நீண்டதூரம் போய், வரம் அளிக்கும் தன்மை யுள்ளவனாய்த் தாமரைப் பூவில் வாழ்கின்ற பிரமனுக்கு ஈடாகச் சரபங்கரென்று பெயர்பெற்ற சிறந்த முனிவர் விடாமல் தவம்செய்வதும் தேனுக்காக வண்டுகள் தங்கியுள்ள துமான சோலைக்குள் புகுந்தருளிய பெருமானே ; கண்கள் தெரியாமல் கலங்கினாலும், ஓசைகலந்து கேட்கும் காது கேளாது மயங்கினாலும், பேசும் நா பேசா தடங்கினாலும், இரண்டு கால்களும் நடவாது முடங்கினாலும், இரண்டு சிவந்த கைகளும் ஓடி மடங்கினாலும், முதுகின் நடுவிடம் கூனி யொடுங்கினாலும், மக்கள் வெட்கமில்லாமல், இரு கயல்கள்போன்ற கண்களையுடைய பெண்களின் உந்திச்சுழியில் மிக்க அன்புகொண்டு விடாய்ப்பட்டு ஓடி விழுவார்கள்; அவரால் வரும் மனக் கலக்கத்தை உலகில் கடந்தவர் யார்? ஒருவருமிலர். மன்மதன் அம்பினால் பெண்களின் உந்திச்சுழியில் விழாமல், நீர்க்குள் புகுந்து எழும் தாமரை மலர்போன்ற நின் திருவடிகளை வணங்கும் நினைவை அடியேற் கருள்வாய்.

(பெண்களால் வரும் மயக்கத்தை முற்றுந் துறந்த முனிவரும் கடத்தல் அரிதாகலின், 'வேள்கல கந்தனை யாவர் கடந்தவர்' என்றார்.)

தனதந்தன தத்தன தத்தன
தனதந்தன தத்தன தத்தன
தனதந்தன தத்தன தத்தன — தனதான

75. பரவுஞ்சொலெ ழுத்துமு ழுத்தனை
இசைகொண்டவி னத்தொடை கட்டளை
பயிலுங்கவி தைத்துறை நற்கவி — நடையார்சீர்

பயில்வஞ்சிந டப்பது முற்படு
குறள்சிந்தடி யிப்படி யொப்பறு
பலவுந்தெளி யக்கொடு சித்திர — கவிபாடி

அருமந்தக வித்வம னைத்தையும்
முழுவுஞ்சக ரைப்புனைந்திப்பது
மவர்தங்களை மைப்புயல் கைத்தரு — மணியேயென்

றழிகின் றமி டிக்குறை செப்பியெ
னுயிர்நின் றுத விப்பது மற்றுநின்
அடியின்புகழ் செப்பிநி லைப்பெற அருள்வாயே

வரபங்கய முற்றவொ ருத்தனின்
நிலைகண்டுப்ரி யத்தொடு னைக்கொடு
வருகென்றெனை யிக்கண்வி டுத்தன னவனேடே

மகிழும்படி சத்யபு ரத்திடை
உறையுங்கரு மத்தை நினைத்தருள்
மருவுந்தவ முற்றுமி யற்றினை முனியேநீ

தரையின்கணி ருப்பது கற்பல
இனிவந்தருள் ஒக்கவெ னக்ருபை
தனிலிந்த்ரன ழைக்கவ னற்புகு தறுவாயின்

சனகன்பெறு தத்தையொ டுத்தம
வடிவுந்தரி சித்திட வுற்றொரு
சரபங்கர்பி றப்பைய றுத்தருள் பெருமாளே.

உரை:—அப்போது சரபங்க மகாமுனிவரிடத்திற்கு இந்திரன் வந்து சொல்கிறான். 'ஒப்பற்ற தாமரை மலரில்வாழும் வரமளிக்கும் பிரமன், உமது தவநிலையை அறிந்து அன்போடு உம்மை அழைத்து வருமாறு என்னை இங்கு அனுப்பியுள்ளார். அவரோடு கூடி மகிழச் சத்தியலோகத்தில் இருக்கும் செயலை நினைத்தருள்க. நிட்டை கூடிய தவமெல்லாம் செய்து முடித்தீர், சரபங்க மாமுனிவரே, நீர் இவ் வுலகில் இருப்பது உறுதியன்று; இனி, என்னுடன் வந்தருள்வீராக' என்று அருள்மிகுதியால் இந்திரன் அழைக்க அதற்கு உடன்பட்டுத் தீயிற் குளிக்கும்வேளையில், சனகமன்னன் பெற்ற-கிளிமொழிபோல் இன்சொல்லுடைய சீதாபிராட்டியாருடன் வந்த உன் சிறந்த திருவடிகளை வணங்கிய ஒப்பற்ற சரபங்கரது பிறப்பை நீக்கிப் பிறவா வீடுபேறருளிய பெருமாளே; உலகில் பரவியுள்ள எழுத்திரண்டு கொண்டது சொல்; சொல் இரண்டு கொண்டது சீர்; சீர் இரண்டு கொண்டது தளை; தளை இரண்டு கொண்டது அடி; அடி யிரண்டு இயையக்கொண்டு இன்பமாகத் தொடுத்தது தொடை; தொடை யிரண்டு கொண்டது ஒரு பாட்டு; இப்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்னும் எழுறுப்புக்களையுங் கொண்டு பாடப்பட்டது பாட்டு. (மற்றொரு விதம்:—எழுத்தாலுண்டாகிய அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்னும் ஆறுறுப்புக்களையுங் கொண்டு பாடப்படுவது பாட்டு). கட்டளைக் கலித்துறை யாவது, நேரி

சைக் கலித்துறைக்கு ஓரடிக் கெழுத்துப் பதினாறு ; நிரையசைக் கலித்துறைக்கு ஓரடிக் கெழுத்துப் பதினேழு ; என்று கட்டளையாக வழக்கத்திலிருக்கும் பாட்டுத்துறை கட்டளைத்துறை; இவை நல்ல கலித்தளையாக நடக்கும்; சீர்பழகிய வஞ்சியாவது, கலிவஞ்சி ; (மற்றொரு முறை :—நல்ல கலிப்பாச் சொல் நடந்து நிறைந்து பழகிய வஞ்சிப்பா;) இவை முதலாகப் பயின்றுவரும் குறளடி, சிந்தடிகளாகிய இத்தகைய பல பாவினங்களைத் தெளிவாக நன்கறிந்து, சித்திரக் கவிகளைப் பாடி அரிய என் புலமை முழுதையும் முழு வஞ்சகர்களைப் புகழ்வதில் செலவிட்டும், அவர்களைக் கார் முகிலே, கையையுடைய கற்பகமே, சிந்தாமணியே என்று புகழ்ந்து பல அழிவுகளைத் தரும் வறுமைநிலையைச் சொல்லி, என் உயிர் நின்று தடுமாறும் நிலையைப்போக்கி நின் திருவடிகளைப் புகழ்ந்து பாடி நான் அழியாத வீடுபேறடைய அருள் செய்வாயாக.

தந்ததன தந்த தந்த
தந்ததன தந்த தந்த
தந்ததன தந்த தந்த — தனதான

76, துங்கமொடு வந்து முந்தி
அண்டர்பதி மைந்தன் முன்பு
தொந்தமுற மிண்டி மண்டி — அமராடித்
துந்துபிதொ லைந்த பின்பு
வந்துவிழும் மொய்ம்பி னென்பு
துன்றுமொரு குன்று நின்ற — தெனலாகி
அங்கதுபொ ருந்தல் கண்ட
செங்கதிரின் மைந்த னிங்கி
தந்தரமெ ழுந்து சிந்த — விடுவாயென்
றன்பினில்வி ளம்ப வங்க
தும்பருற வுந்து மந்த
அம்பொனடி சிந்தை கொண்டு — தெளிவேனோ
பங்கயனில் விஞ்சு கின்ற
அந்தணர்தி ரண்டெ ழுந்து
பண்பொடெதிர் கொண்டு தங்கள் — இடமீதே
பைங்கனிகி ழங்க ருந்த
எம்பெரும வந்தி டென்று
பண்பொடுவி ருந்தி யம்ப — மகிழ்வாகிச்

சங்குசெறி செங்கை மங்கை
எங்கள்சன கன்ப யந்த
சந்த்ர நுதல் வஞ்சி கொஞ்சி யுழைபோதத்

தம்பியொரு வன்தொ டர்ந்து
பின்படர மன்றல் துன்று
தண்டகவ னம்பு குந்த பெருமாளே.

உரை :—தாமரைப் பூவில் இருக்கும் பிரமதேவனைப் போலப் பெருமையால் மிக்குள்ள முனிவர்கள் கூடி யெழுந்து, உன்னை நற்குணங்களோடு எதிர்கொண்டு, தங்கள் பர்னசாலையாகிய இருப்பிடங்களில், "புதிய சாறொழுகும் பழம், கிழங்கு ஆகியவற்றை அருந்துதற்கு எங்கள் தலைவனே வந்தருள்க" என்று சொல்லி அழைத்துவந்து இன்பமாக விருந்துண்ணச் சொல்ல, மகிழ்ந்து, வளையல்கள் நெருங்கிய செங்கைகளை யுடைய பெண்ணும், எங்கள் தெய்வமும், சனகன் மகளும், சந்திரனைப்போன்ற நெற்றி யுடையவளும், வஞ்சிக்கொடிக்கு நிகரானவளும் ஆகிய சீதாபிராட்டி உன் பக்கத்திற் சேர்ந்துவரவும், ஒப்பற்ற தம்பியாகிய இலக்குவன் உன் பின்தொடர்ந்து வரவும், மணம்மிகுந்த பூக்களையுடைய தண்டகமென்னும் காட்டுக்குள் நடந்துசேர்ந்த பெருமாளே ; முன்னே, தேவர்க்கரசனை இந்திரன் மகனாகிய வாலிக்கெதிராகத் துந்துபி என்னும் பெயர் பெற்ற அரக்கன், உயர்ந்த உருவத்தோடு வந்து போராடி இறந்த பின்னர் வாலி எறிந்ததனால் வீழ்ந்துகிடந்த வலிமைமிக்க அவன் எலும்பு, நெருங்கிய மலைபோல் அங்கு ஒன்றுகூடிக் கிடக்க, அதனைக் கண்ட செங்கதிரோன் மைந்தனை சுக்கிரீவன், 'இங்கேயுள்ள இவ் வெலும்பை வானுலகத்தில் எற்றி விழுமாறு செய்க' வென்று அன்பினால் வேண்டிக் கொள்ள, அங்ஙனமே அவ் வெலும்பை யுதைத்து வீழ்த்திய அழகிய நின் திருவடிகளை என் மனதில் அமைத்துக்கொண்டு எக்காலத்தில் நான் தெளிவடைவேனே?

(சங்கு - வளையல். தொந்தம் - பகைமை.)

தந்த தானன தத்தன
தந்த தானன தத்தன
தந்த தானன தத்தன தனதான

77. கும்ப மீதினு தித்தவர்
நெஞ்சி னுளள விட்டுரா
கொண்டி டாதத மிழ்த்துறை வகைசேரக்

குன்றி லேறுவி ளக்கென
நின்று காணவு மற்றது
குன்றி டாதுத ரிக்கவும் எளிதாமோ
வம்ப னேனென்ம னத்தினில்
வந்த வாறிவை செப்பினேன்
வன்சொ லாளர்ப ழிப்பதும் அறியேன்யான்
வஞ்ச மேயறு பத்தியி
தென்று நீகரு தித்தரு
மந்த பாடலெ னக்கொடு புனைவாயே
நம்பி வேள்வி நடப்பில
முந்து வேதமு ழக்கில
நந்தி யானமு நிட்டையும் நெறியாவும்
நந்தி னேமவ ரக்கர்கள்
கொண்ட கோரணி சற்றல
நம்பி னோமென நற்றவர் அனைவோரும்
தம்பி ரானுன டைக்கல
மென்று கூறவ வர்க்கருள்
சங்கை தீரவி ருட்பகல் துணையாகித்
தம்பி யேவல்செ யத்திரு
மங்கை யோடுசி றப்புறு
தண்ட காரணி யத்துறை பெருமாளே.

உரை :—இவ்வாறு சரபங்கமுனிவர் இருக்கையை விட்டுத் தண்ட காரணியத்திற்குப் போகும்போது அங்கிருந்த முனிவர்கள் எதிர்கொண் டழைத்துக் கொண்டுபோய்ப் பழங் கிழங்கு ஆகியவற்றை உண்ணுமாறு வேண்டினார்கள். பின்னர், "நம்பியே, எங்கள் வேள்விகள் முறைப்படி நடப்பதில்லை ; எல்லாப் பொருள்கட்கும் முற்பட்ட மறை முழங்குவ தில்லை ; எங்கள் தியானம், நிட்டை, தவம் ஆகியவெல்லாம் கெட்டன ; இங்ஙனம் கேடுசெய்த அரக்கர்கள் எங்கட்குச் செய்யும் கூத்தாட்டுக் களுக்கு அளவில்லை ; எங்களைக் காப்பதற்கு உன்னை நம்பினோம் ; நாங்கள் உன் அடைக்கலம்" என்று தவம்செய்யும் அம்முனிவர்கள் வேண்ட, அவர்கள் ஐயந்தீர இரவும் பகலும் அவர்கட்குத் துணையாகி, தம்பியாகிய இலக்குவன் பணிசெய்ய, சீதாபிராட்டியாரோடு சிறப்பாகத் தண்டகாரணி யத்தில் வாழ்ந்திருந்த பெருமாளே ; கும்பத்தில் பிறந்த அகத்தியமாமுனி

வர் தம் மனதால் நினைத்து அளவிட்டுச் சொல்லிக்கொள்ளவும் அடங்காத தமிழ்மொழியில், இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளும் சேர்ந் திருக்க, மலைமீதிட்ட விளக்குப்போல் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் தன்மைத்தாய் உள்ள அம்மொழி, குறைந்து சுருங்காமல் இயலுமாறு மேற்கொள்ளுதல் எளிதான செயலாகுமோ? ஆகாது. ஆதலின், பொய்ய னுகிய நான் என் மனதில் தோன்றியபடியே பாடல்களைச் சொன்னேன்; இலக்கணமறிந்த புலவர்கள் இந்தப் பாட்டுக்களைப் பழித்தலையும் நானறி யேன்; என் பக்தி வஞ்சமற்றதென்று நீ நினைவிற்கொண்டு, என் பாடலை அருமந்த பாடலென உடன்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(அந்த பாடல் என்பதற்கு அருமந்த பாடல் எனவும், அழகிய பாடல் எனவும், நீ தந்த திருவாய்மொழியாகிய அப்பாடல் எனவும் பொருள் கொள்ளலாம்).

தனத்ததந் தனத்தன தனத்த
தனத்ததந் தனத்தன தனத்த
தனத்ததந் தனத்தன தனத்த தனதான

78. யனத்துமுன் குறித்தவை யிருக்க
நயத்திலொன் றுரைத்தது கணத்து
வசத்திலிங் கிதத்தினை விளைத்து விழியாலே
மருட்டியங் கிதப்பட வழைத்துள்
இருட்டிடந் தனிற்சுருள் மடித்து
மருத்துவஞ் சகப்பொடி யுமிட்டு மணிமார்பில்
தனக்குடங் களைப்புக வழுத்தி
எயிற்றிலிங் கிதச்சுவை மிகுத்த
சமத்துடன் புலப்பட வருத்தி யுகிராலே
தனித்துடம் பனைத்தையு மழுத்தி
நிறத்தபொன் பறிப்பவ ரடுத்த
சரித்திரங் கள்விட்டுநின் வசத்தில் உருகேனே
எனக்குவந் தடைக்கல முரைக்கு
நினைப்பருங் குணத்துள தவத்திர்
இனித்தினந் தவிப்பது துறத்திர் சலியாதே
இருத்திர்செந் தழல்பொறி வளர்த்திர்
மறைப்பெரும் பொருட்டுறை நினைத்திர்
எனப்புகுந் தளித்துள மகிழ்ச்சி யதனாலே

முனைப்பெருந் திறற்படை யரக்கர்
குலத்தைவெங் களத்திடை குவித்து
முடுக்குமென் பெயர்க்கணை தொடுத்து விளையாடி

முடிப்பனென் றடிக்கடி யுரப்பி
நெருக்குதண் டகப்பெரு வனத்து
முனிக்கணம் ப்ரியப்பட வுரைத்த பெருமாளே.

உரை:—வருத்தங்களைக் கூறித் தன்னை அடைக்கலம் புகுந்த முனிவர்களைப் பார்த்து இராமன் கூறுவது: "அடைக்கலமென்று எவர் வந்து என்னிடம் சேர்ந்தாலும், நினைப்பதற்கு அருமையான நற்குணம் வாய்ந்த உளம்படைத்த முனிவர்களே, அவர்கள் துன்பம் இன்றி அமைதியாக வாழ்வர்; இனி, நீங்கள் நாடோறும் அரக்கர்கட்கு அஞ்சித் தவித்தலை யொழியுங்கள்; உள்ளம் கலங்காமல் இருத்திர்; செந்நிறமுள்ள நெருப்புப் பொறியாகிய வேள்விக்கனலை வளர்த்திர்; சிறந்த வேதத்தில் உண்டான உபநிடதங்களில் உள்ள பொருளான முப்பத்திரண்டு துறைகளையும் நினைத்துச் செய்திர்; நான் செய்வதையும் கேட்டிர்; என்னைச் சேர்ந்து நீங்கள் அருள்செய்த மகிழ்ச்சியினால், போர்செய்யும் திறமைபெற்றுப் படைகளைத் தரித்துள்ள அரக்கர் குலத்தைக் கொடிய போர்க்களத்தில் அறுத்துக் குவித்துத் துரத்துகின்ற என் பெயர் பொறிக்கப்பட்டுள்ள அம்புகளைத் தொடுத்து விளையாடிக் கொல்வேன்" என்று அடிக்கடி மிடுக்காகச் சொல்லி, மரங்கள் நெருங்கியுள்ள தண்டக வனத்திலிருந்த முனிவர் கூட்டங்கள் மகிழுமாறு அருளிய பெருமாளே; பரத்தையர், தம் மனதில் முன்னே யெண்ணிய திருக்க, நயமான மையலில் நினைத்ததை விட்டு வேறொன்றைச் சொல்லி, அந்தக் கணத்திலே ஆடவர் தம் வயமானதால் எண்ணக் குறிப்பை யுண்டாக்கி, கண்ணால் மயக்கி, உடனே இன்பந் தோன்ற வீட்டுக்குள் கொண்டுசென்று இருட்டறையில் வெற்றிலைச்சுருளை மடித்து வஞ்சமாக மருந்துப்பொடியையும் அதில் தடவித் தின்னக் கொடுத்து, அழகிய மார்பில் குடம்போன்ற தனங்கள் புதைய அணைத்து அழுத்தி, பற்கள் விளங்கும் உதட்டின் சாரத்தைத் திறமையோடு கடித் துண்ணச்செய்து, நகத்தாற் பல விடங்களிற் குறியுண்டாக்கிச் செந்நிறமுள்ள பொன்னைப் பறிக்கும் தன்மையர்; அத்தகைய பெண்களை யடுத்துத் திரியும் வரலாற்றை விட்டு, நின்பால் அன்புவைத்து மனம் உருகும் தன்மையை நான் பெறுவேனோ?

(விலைமகளிர் ஆடவரைத் தம்வயப்படுத்தித் துன்புறுத்தி அவர் தம் கைப்பொருளைப் பறிக்க அவாவுவரே யன்றி அவ் வாடவர்மேற் சிறிதளவும் அன்பிலராவர் என்பதை,

"பூரியர் புணர்மாதர் பொதுமன மெனமன்னும்
ஈரமு மூாதில்லென் றறிவரும்"

எனக் கம்பன் கூறிய வாற்றால் உணர்க.)

தந்தன தத்தன தந்தன
தந்தன தத்தன தந்தன
தந்தன தத்தன தந்தன தனதான

79. பாந்தள லக்கடு குங்குக
வேந்தன லக்கவி யின்பதி
பாங்கன லப்புவி யிந்திரை யலவேநீள்

பாண்டவர் மற்றல வண்டர்கு
ழாங்கள லக்குல வுந்ததி
பாண்டன லப்பொரு துந்துபி யுடலாகி

ஏய்ந்தபொ ருப்பல விண்புனல்
பாய்ந்தபெ ருக்கல மந்தரை
ஈய்ந்தசு ரத்திறெ ழுங்கல மறைநாலின்

ஈன்றகு ருத்தல நன்பொருள்
ஆன்றசு ருக்கல நின்பத
மியான்றெரி சித்திட விங்கினி எளிதாமோ

வாய்ந்தத வத்தினு யர்ந்தவர்
தாங்கள ழைத்தவி ருந்தென
வாழ்ந்துமி குத்தவர் தங்களின் நெறிபோயும்

வார்ந்திடு வற்கலை செஞ்சடை
தாங்கியு மத்திவ சந்தொறு
மாண்டவ ருக்குவ ழங்கியும் மறையாவும்

ஆய்ந்தும்வி யப்புள தண்புனல்
தோய்ந்துந லத்தப லங்கனி
ஆய்ந்துநெ றித்துறை சந்ததம் வழுவாதே

ஆண்டுத வத்தொடு தண்டக
நீண்டவ னத்துவ ளம்பெற
ஆண்டொரு பத்தும மர்ந்துள பெருமாளே.

உரை:—கைவரப்பெற்ற தவத்தா லுயர்ந்த பெரியோர்கள் அழைத்த விருந்தாக வாழ்ந்தும், மிக்க விரதநெறிகளை மேற்கொண்டு செய்தும், படையினுல் வார்ந்து செய்யப்பட்ட மரவுரியும் சிவந்த சடையும் தரித்தும், அந்த நாட்களில் எல்லாம் தென்புலத்தார் கடன்கழித்தும், மறைப்பொருள் களை யாராய்ந்தும், வியப்பை யுண்டாக்கும் குளிர்ந்த நீரில் முழுகியும் கனிந்த நல்ல பழங்களை அருந்தியும், மறைநெறி வழுவாமல், தவ ஒழுக்கத் தோடு தண்டக மென்னும் நீண்ட காட்டில் வளமுடன் பத்தாண்டுகள் அமர்ந்தருளிய பெருமானே ; நின் திருவடிகளை நான் வணங்குதற்கு, ஆதி சேடன், காளிங்கன் என்னும் பாம்புகளல்லன் ; விரைந்துவரும் குகனுகிய வேடனல்லன் ; குரக்கரசான சுக்ரீவ னல்லன் ; சிறிய பிராட்டியாரும் பெரிய பிராட்டியாரு மல்லன்; புகழ்மிக்க பாண்டவ ரல்லன்; தேவர் கூட் டங்க ளல்லன் ; இடையர்கூட்ட மல்லன் ; நின்குலவிய திருவடிகள்பட விருந்த ததிபாண்ட னல்லன் ; போர்செய்த துந்துபியின் எலும்புமலையல் லன்; விண்ணினின்று பாய்ந்த நீர்ப்பெருக்காகிய கங்கை யல்லன்; மந்தரை யென்னும் கூனி கொடுத்த நீண்ட பாலேவன மல்லன்; வேதங்கள் நான்கும் பெற்ற குருத்தல்லன்; அஃதாவது வேதமுடி வல்லன்; அம் மறைப்பொரு ளடுத்த உபநிடதங்களுக் குள்ளே ய மர்ந்த சுருக்க மல்லன்; இவற்றுள் ஒன்றுமல்லாத நான் நினது திருவடிகளை வணங்கல் எளிதாமோ ?

தனதந்தன தத்தன தந்தன
தனதந்தன தத்தன தந்தன
தனதந்தன தத்தன தந்தன தனதான

80. உலகந்தனை முற்றும்வி ழுங்கினை
உலகந்தனை முற்றுமு மிழ்ந்தனை
உலகந்தனை முற்றுமி டந்தனை குறளாகி

உலகந்தனை யெட்டிவ ளர்ந்தனை
உலகந்தனை யத்தபு ரந்தனை
உலகந்தனை யொக்கவொ ழுங்கினை நெடுமாயங்

குலவுந்தொழி லிப்படி கொண்டனை
அளவின்றிவி தப்பட நின்றனை
குறைகின்றம திப்பிறர் நின்செயல் அறிவாரோ

குளிர்பங்கய பொற்சர ணங்களை
இனியெந்தவ கைக்கொடு கண்டறி
குவனந்தவ ரத்தினை யிங்கருள் புரிவாயே

மலர்மங்கைத னக்குவ னங்களின்
மிருகமும்பல புட்குல முஞ்செறி
வளமெங்குமு ரைத்துந டந்திடு துயரதீர

மதுரம்பெறு சொற்ப்ரிய ரஞ்சித
முழுதுஞ்சர சத்தொடி யம்பியுள்
மகிழும்படி மெத்தென வுங்கொடு நெடிதேசென்

றிலகுந்தவ முற்றியு யர்ந்திடும்
அருமந்தசு திட்டனெ னுந்தவன்
இயல்கின்றத வப்பளி கண்டுபின் அயலேகி

எவருந்தெளி யப்படு செந்தமி
ழுரைதந்தவ கத்திய னென்பவன்
எதிர்கொண்டுது திக்கந டந்தருள் பெருமாளே.

உரை :—நீ, தமிழ்முனிவரிடம் போக வேண்டுமென்று தண்டகாரணிய முனிவர் பால் விடைபெற்று நடக்கும்போது, தாமரைப் பூவில் வாழும் பெண்ணாகிய சிதாபிராட்டியாருக்குக் காட்டிலுள்ள விலங்குகள், பறவைகள், பல வகைப்பட்ட இடங்கள் ஆகிய எல்லாவற்றையும் காட்டி, நடையினால் உண்டாகும் வருத்தந் தீர இனிமை, அன்பு, அழகு முதலிய பண்புகளையுடைய சொற்களைச் சொல்லி, மனம் மகிழுமாறு மெத்தென நடக்கச்செய்து நீண்டதொலைவு சென்று, விளங்கும் தவத்தால் முதிர்ந்து, உயர்புகழ்பெற்ற அழகிய சுதிட்டர் என்னும் மாமுனிவர் வாழும் இருப்பிடத்தைக் கண்டு, பின் அப்பாற் சென்று, எவரும் அறிவு விளக்கம்பெற உண்டான செம்மையான தமிழை விளங்கச் சொல்லிய தமிழ்முனியாகிய அகத்தியர் எதிர்கொண்டு போற்ற நடந்தருளினாய் பெருமாளே; நீ எல்லா உலகங்களையும் விழுங்கினாய்; அவைகளை உமிழ்ந்தாய்; காலால் அளந்தாய்; சித்துருவமாகி உலகமுடியை எட்ட முட்டி வளர்ந்தாய்; தந்தைபோல உலகினை நடப்பித்தாய் ; உடன்நின்று முறை செய்தாய் ; இவ்வாறு நெடிய மாயையால் நடக்கும் தொழிலைக் கைக்கொண்ட நீ, அளவின்றிப் பல வகையாக நின்றாய் ; குறைந்த அறிவுடைய அயலார் நின் திருவிளையாடல்களை அறிவார்களோ? அறியார்கள் ; குளிர்ந்த தாமரை மலர்போல் விளங்கும் நினது திருவடிகளை எவ்வழியைப் பின்பற்றி நான் வணங்கி யறிவேன். உன்பால் இயல்பாக உள்ள அருளை எனக்குப் புரிந்தருள வேண்டுகின்றேன்.

('அத்த' என்பதனை விளியாகவும் கொள்ளலாம். ஒழுங்கினை - ஒழுங்கு செய்தனை).

தனதனன தத்தன தந்த
தனதனன தத்தன தந்த
தனதனன தத்தன தந்த தனதான

81. கமலமது பற்றியி ருந்த
மறைமுனிசெ யற்கையு முந்து
கயிலைமலை யத்தனு மிந்த்ரன் முதலானோர்

கதிர்மதியு டுக்களும் விஞ்சு
திசையவரு மற்றவர் தங்கள்
கருமமும டுக்குல கங்கள் பதினாலும்

திமிரதம ரக்கட னும்பொன்
நெடுவரையு முற்றும்வ ளர்ந்த
திகிரிநெடு வெற்புநி றைந்த உயர்யாவும்

திரிவனவு நிற்பவு மெங்கும்
அடையவுனி டத்தில்வி ளங்கு
செயலல்து மற்றொரு கிஞ்சி துளதாமோ

தமிழுரைசெ கத்தில்வ ழங்கு
குறுமுனியி ருக்கைய மர்ந்து
தகைபெறுப டைக்கல மந்த்ர விதியாலே

தகைமையொடு பெற்றுவி யந்து
செபமருவு நிட்டைய டைந்து
தவநெறியொ ழுக்கம மைந்து தினமானம்

இமையவரி டத்திலும் வந்த
கனியொடும துக்கள்கி ழங்கு
இளவல்தர நட்பினு கந்து திருவோடே

இனியநக ரத்தினுள் முன்பு
தயரதனி டத்திலி ருந்த
தெனமனம கிழ்ச்சிபு ரிந்த பெருமாளே.

உரை :—தமிழ்மொழி யிலக்கணத்தை உலகத்தில் வழங்கத் தோன்றிய அகத்திய முனிவர், நின்னை அழைத்துக் கொண்டுபோய் ஆசனத்தில் அமர்த்திக் கொடுத்த படைக்கலங்களை அவர் அறிவுறுத்திய மந்திரமுறையாலே இலக்கணத்தோடு பெற்று வியப்புற்று, செபம்பொருந்திய நிட்டை

யின்கண் இருந்து, தவ வொழுக்கத்தைக் கடைப்பிடித்து, நாடோறும் இமையவர்களிட மிருந்து வந்த பழங்களோடு தேன், கிழங்குகள் ஆகிய எல்லாவற்றையும் இலக்குவன் அன்பினுல் கொடுக்க உண்டு, சீதாபிராட்டி யாருடன் அயோத்தியில் முன்னே தசரத மன்னனிடத்தில் இருந்தது போல மகிழ்ந்து, முனிவரது ஆசிரமம் நகரம்போலவும் அகத்தியமுனிவர் தந்தைபோலவும் இருக்குமாறு கூடியிருந்த பெருமாளே ; தாமரை மலரை இருக்கையாகப் பெற்று மறைவடிவினனை நான்முகனின் படைக்குந் தொழிலும், முதன்மைபெற்ற கயிலையிலிருக்கும் கடவுளாகிய சிவபெருமானும், இந்திரன் முதலிய இமையவர்களும், சூரிய சந்திரர்களும், உடுக்கணங்களும், திசைக் காவலர்களும், அவர்கள்தம் செயல்களும், ஒன்றன்மே லொன்ருக அடுக்கியுள்ள உலகங்கள் பதினுன்கும், கருமையும் ஓசையு முடைய கடல்களும், மகாமேருமலையும், இவைகளைச் சுற்றி வளைத்துள்ள எல்லா உயிர்களும், இயங்காது நிற்பனவும், எல்லாவிடங்களும், பொருளும், நின்னிடத்திலிருந்து விளங்குந் தொழிலான திருவிளையாடலே யன்றிச் சிறிதளவேனும் வேறுண்டாகுமோ? உண்டாகா. ஆதலின், அடியேனும் அத் திருவிளையாட்டால் உண்டானவனே யன்றி வேறில்லை.

(" உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டு டையார் "

எனக் கம்பன் கூறியது காண்க.)

தந்த தத்தன தத்தன தானன
தந்த தத்தன தத்தன தானன
தந்த தத்தன தத்தன தானன தனதான

82. அந்தி யம்பொழு தத்தொரு தூணிடை
இங்கு முண்டுகொல் மெய்த்திரு மாலென
அங்க றைந்திடு மக்கொடி யானெதிர் விரைவோடே

அன்பு கொண்டம திச்சிறு வோன்மொழி
வஞ்ச மன்றிநி லைப்பெற வேபகி
ரண்ட ரண்டந டுக்குற வேநர வரியானைய்

நிந்தை கொண்டவ னெத்தைவி னுவுவ
னெங்க றைந்திடு மெப்படி யோவென
நின்ற கண்டமு மப்படி யாளரி உருவாயே

நின்பெ ருஞ்சினை பற்றிய தேயது
கண்ட றிந்தும றித்தொரு தேவரை
நெஞ்சு கொண்டுநி னைத்தடி யேனினி உழல்வேனோ

முந்தி வந்தவ னத்திடை யேயொரு
குன்றி டந்தனி லுற்றச டாயுவை
முன்பு கண்டிட மற்றவ னீரெவர் எனவோடும்

மொய்ம்பு தங்கிய கொற்றவன் மாமகர்
என்றி யம்பவெ னக்கொரு தோழனென்
முன்பி றந்தவன் மற்றவ னுகையின் இனிநீரும்

மைந்தர் தந்தையு மக்கினி நானென
இன்சொல் தந்தும லர்க்கம லாசன
மங்கை யும்பரி வுற்றிடு மாமரு மகளேயாம்

மங்க லங்களொ டித்தல மீதினில்
இங்கு றைந்திடு மெய்ப்புதல் வீரென
வந்து தன்சிறை யிற்கொடு போகிய பெருமாளே.

உரை :—பிறகு, அகத்திய மாமுனிவரிடம் விடை பெற்றுக்கொண்டு முன்னால் வரும்போது அக் காட்டில் ஒரு மலையினிடத்தில் தங்கியிருந்த சடாயுவை எதிரில் காண, அந்தச் சடாயு 'நீங்கள் யார்?' என்று வினவ, வலிமைமிக்க தசரதமன்னனுடைய மக்கள் என்று நீங்கள் சொல்லிய உடன், சடாயுகேட்டு, 'அத் தசரதமன்னன் என் உற்ற தோழன், என் தமையன், ஆதலால் நீங்களும் என் மக்களே ; நான் உங்கட்கு இனிய தந்தை;' என இன்சொற் கூறி, 'தாமரையில் வாழும் இப்பெண்ணும் என் அன்புதங்கிய பெரு மருகியே யாவள் ; இவ்விடத்தில் மங்கலத்தோடு தங்கி யிருப்பீர்களாக, உண்மையான பிள்ளைகளே' என்று சொல்லி, விண்ணிடையே பறந்துவந்து தன் சிறகின் நிழலிலே கொண்டுபோக நடந்து சென்ற பெருமாளே ; அந்தியம் பொழுதில் ஒரு தூணைக்காட்டி உண்மையாய் இருக்கும் திருமால் இத் தூணிலும் உளனோ ? என்று சொல்லி, ஒரு கையால் அறைந்த கொடியனை இரணியனுக் கெதிரே மிக விரைந்து, உன்பால் உறுதியான அன்பைக்கொண்ட அறிவுள்ள சிறுபிள்ளையாகிய பிரகலாதனுடைய சொல் பொய்யாகாமல் நிலைபெற எல்லா அண்டங்களும் நடுங்க அத் தூணிலிருந்து நரசிங்க வடிவமாய் வந்தாய் ; கடவுள் இல்லையென்று பழித்த இரணியன் எதனைக் கேட்பானோ? எங்கே கையால் அறைவானோ ? எப்படிச் செய்வானோ ? என்று எங்கும் மறைந்து நிறைந் திருக்கும் நீ, எல்லா விடங்களிலும் நரசிங்க வடிவமாகி நின்றாய் ; உன்

பெரிய தோற்றம் எங்கும் பிடித்தது ; அதனைக் கண்டறிந்தும் உன்னை விட்டு வேறு தேவர்களைக் கடவுளென்று மனங்கொண்டு நினைத்து அடியேன் இனியும் உழல்வேனோ? அவ்வாறு உழலாமல் நின்னையே நினைக்க அருள்செய்க.

தானதன தானன தானன
தானதன தானன தானன
தானதன தானன தானன தனதான

83. ஆருனது நாடுமுந் நீரினை
ஓர்பானுவை நாடுறு மாமலர்
ஆனமழை நாடுறும் வாடுறு பயிர்யாவும்

ஆராய்வுறு தாயினை யேதின
நேராகிய பாலனு நாடுறும்
ஆாருயி ரானது நாடுறு நமனுரை

வீருமதி யூழ்வினை நாடுறும்
நேரேயளி பூவினை நாடுறும்
வேளேபிரி வார்தமை நாடுறும் இவைபோல

வேதாமுத லாகிய வானவர்
தேருமகிழ் பேரரு ளாகிய
மேலாமுனை யேதின நாடுவ தொழியேனோ

மாருவர சானம கீபதி
தானேதுசெய் தானென வேயவன்
வானோரொடு கூடினன் வீடின னெனலோடும்

வாழ்வேயர சேதுணை யேயினி
நானேவுயிர் வாழ்வதெ னவழு
மாசோபித மானச டாயுவை உயிர்தேறக்

கூறுவுற வேபுரி நாளினில்
மாமாதவ மேபுரி வீர்நிலை
கோடாததொர் காவலும் யானென உறுசார்பிற்

கோலாகல மானனை யாளொடு
வீருமினை யானொடு நீடிய
கோதாவரி மாநதி யாடிய பெருமாளே.

உரை :—இங்ஙனம் அழைத்துச்சென்ற சடாயு நீங்கள் காட்டுக்கு வந்ததென்ன வென்று கேட்க, நீங்கள் நடந்தவை யெல்லாவற்றையும் சொல்ல, அதற்குச் சடாயு, " என்றும் கெடாத அரசினை மேற்கொண்ட தசரதன் நீங்கள் காட்டுக்கு வந்தது கேட்டு என்ன செய்தான் " என்று கேட்க, அதற்கு நீ, அவர் அப்போதே இறந்து தேவர்களோடு கூடினர் " என்று சொல்ல, 'என்னரசே, என் செல்வமே, என்னுயிர்த் துணையே, நீ, போனபிறகு நானே உயிர் வாழ்வேன்' என்றழுது மிக்க துயரடைந்த சடாயு தேறத்தக்க சொற்களைச் சொல்லி, உறவுகொண்டிருக்கும் போதில் சடாயு " நீங்கள் பெருமைமிக்க தவம் செய்யுங்கள் ; நான் நிலைதவறாது ஒப்பற்ற காவலாக நின்று உங்களைக் காக்கின்றேன்;" என்று சொல்ல, அவர் சார்பில் நடந்து, களிப்புடன் விளையாடும் மான்போலச் சிறந்த சீதாபிராட்டியாருடனும், வலிமைமிக்க இலக்குவனுடனும், நீண்ட கோதாவரி யாற்றில் மூழ்கிய பெருமாளே ; ஆறு கடலிற்சேரும் ; கதிரவனை நோக்கித் தாமரை மலரும் ; மழையை எதிர்நோக்கி நிற்கும் நாட்டிலுள்ள பயிரெல்லாம்; நோய்வராது பார்த்துக்கொண்டிருக்கும் தாயைக் குழந்தை நாடோறும் தேடி யடையும் ; உடலில் நிறைந்துள்ள எல்லா அரிய உயிர் களும் எமனை அடையும் ; வரம்பின்றி நிறைந்த அறிவு, பண்டை வினையைத் தேடி அதன் வழி நிற்கும் ; வண்டு பூவைத் தேடிச் செவ்வையாய் அடையும் ; மன்மதன், துணையிற் பிரிந்தாரை நாடித் தன் வினையை அவர்களிடம் செய்வான் ; இவற்றைப்போல், நான்முகன் முதலிய இமையோர் கண்டு தெளிந்து மகிழ்ச்சியடைந்த அருளை மேற்கொண்ட உன்னை நாடோறும் தேடுதலை நானும் விடேன்.

தந்ததன தான தானன
தந்ததன தான தானன
தந்ததன தான தானன — தனதான

84. [1] மண்டுதிரை மோது வாருதி
சண்டவெளி மேரு மாதிரம்
மண்குலவு பூத ராதிகள் — அடைவாக

1. " பாலன் தனதுருவாய் ஏழுலகுண் டாலிலையின்
மேலன்று நீவளர்ந்தாய் மெய்யென்ப - ஆலன்று
வேலைநீ ருள்ளதோ ? விண்ணதோ ? மண்ணதோ ?
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல் "

(பொய்கை. இயற்பா 69.)

என்றதன் பொருளை யுட்கொண்டது இது.

வந்தபதி னுலோகமும்
உண்டுசிறு பால னையரு
மந்தவட மீது மேவினை திடமாமோ

மிண்டிவள ரால மாமரம்
அந்தநெடு வான தோகடல்
விஞ்சுபெரு நீர தோபுவி யதன்மீதோ

விண்படர மூடி யேயது
நின்றவிட மோர்கி லேனினி
விண்டுரைசெய் தால லாதுபின் உணர்வார்யார்

கண்டகனி மூல மானவை
தந்துபிரி யாம லேயிரு
கண்டுயிலு மாறி வீறிய துணையாகிக்

கண்டகரு லாவு கானிது
சண்டைவரு மேயெ னவுறு
கங்குல்பகல் வேறு சோர்வற இளவீரன்

பண்டுமறி வார்கள் போலொளி
கொண்டவுடை வாள்கொ டேகொடி
பைம்பொன்மர மோடு தேடிநன் நிழல்கோலும்

பண்புபடு சாலை மீதினில்
நண்புதவ ருத மாதொடு
பஞ்சவடி மீது மேவிய பெருமாளே.

உரை :—கோதாவரியாற்றின் கரையில் ஒரு மலைமேலிருந்து சடாயு காத்துக் கொண்டுவர, இலக்குவன் தன் கண்ணிற் கண்ட பழம் கிழங்கு முதலியவற்றைக் கொணர்ந்து கொடுத்து, கண் துயிலும், உணவும் தவிர்த்து மிகுந்த துணையாகி, கொடுமைசெய்யும் அரக்கர் உலவும் இக்காட்டில் சண்டை நேரும் என்று கருதி இரவும் பகலும் வேறுபட்ட இளைப் பின்றி, முன் கற்றறிந்தவர்களைப் போல், ஒளிவிளங்கும் உடைவாளாகிய சமுதாடு கொண்டு கொடியையும் பசும்புற்களையும் மரங்களோடு வெட்டிக் கொண்டுவந்து, நன்னிழல் சுற்றியிருக்குமாறு கட்டிய இலக்கண மமைந்த பர்ணசாலையில் அன்பு வழுவாத சீதாபிராட்டியாருடன் பஞ்சவடி யென்னும் பெயரமைந்த சோலையில் வாழ்ந்துவந்த பெருமாளே; விரைந்தெழுந்து அலை வீசுங்கடல், கொடிய சூறைக் காற்று, மகாமேரு, திக்குகள், நிலம் முதலிய இவைகள் யாவும் விளங்கிவரும் பதினான்கு உலகங்களாகிய

எல்லாவற்றையும் உண்டு, சிறு குழந்தை வடிவாகி, அரிய அழகிய ஆலிலையில் பள்ளி கொண்டாய் என்னுமிது மெய்யாகுமோ? பதினுன்குலகங்களையும் நீ, வயிற்றினுட் கொண்டால், நீண்டு வளர்ந்த அவ் வாலமரம் இருந்த விடம், நெடிய அவ் வானமோ? கடல் பொங்கி யெழுந்து மூடிய ஊழி வெள்ளமோ? பூமியோ? விண்முழுதும் படர்ந்து மூடிக்கொண்டு அது நின்றவிடத்தை நானறியேன்; அதனை, நீ அறிவித்தாலன்றி அறிய வல்லார் வேறிலர்; ஆதலின் நீ, அருள்செய்க.

(திருமால் எல்லா உலகங்களையும் உண்டு சிறிய ஆலிலையில் துயில் கொள்ளும் தன்மை அவரது அகடிதகடின சக்தி எனப்படும். அக்காலத்தில் உயிர்கள் யாவும் திருமாலின் வயிற்றில் தங்கி இளைப்பாறும். அப்போது அவர் நிலையைப் பிறர் காண வியலாது. ஆதலின் 'உணர்வார் யார்' என்றார்.)

தானத் தானன தந்தன தந்தன
தானத் தானன தந்தன தந்தன
தானத் தானன தந்தன தந்தன தனதான

85. மேகத் தோடுபு லம்பிநெ டுங்கடல்
நாகத் தோடுவி ளம்பியு றுங்கழி
மீனத் தோடுமி யம்பிவ ருங்கல மதனோடும்
வேடைக் காதன்மொ ழிந்தும ருங்குறும்
ஓதத் தோடுமி ரங்கியி டந்தொறும்
வீணிற் கூறிம யங்கியி டுங்கழி படராகுஞ்
சோகப் பாடலும் வண்டுறை வன்பொருள்
தேடப் போனது மங்கொரு பெண்கொடி
சோர்வுற் றேதனி நின்றதும் வண்டமிழ் கொடுபாடிச்
சோடித் தேமுழு வஞ்சகர் தங்குடி
பேரைச் சாரமு டைந்துதி ரிந்துயிர்
சோபித் தேனினி யுன்பத பங்கய முணர்வேனோ
மாகத் தூடுப றந்துசெ ழுந்திரு
நாமப் பாணம டர்ந்துதொ டர்ந்திட
மால்வெற் பூடுசு ழன்றுபி லந்தனில் நெடிதோடி
வாடுற் றுயிர வன்கண னெண்கணன்
ஊரிற் போயவர் முன்சொலி யங்குயிர்
வாழ்கைக் கேபுக லன்றிய றிந்தபின் உடன்மீள

காகக் காவென வந்தல றுங்குரல்
மேலிட் டேயெதிர் இங்கிலை யென்பிழை
காரொத் தாயொரு செந்திரு மங்கையின் மணவாளா

காகுத் தாசர ணஞ்சர ணங்கதி
காகுத் தாசர ணஞ்சர ணென்றிடு
காகத் தாவிபு ரந்துசி னந்தவிர் பெருமாளே.

உரை :—இவ்வாறு கோதாவரிக் கரையில் பஞ்சவடிச்சோலையில் பர்ணசாலை கட்டிக் கொண்டிருக்கும்போது, ஓர் அசுரன் காக்கை வடிவமாக வந்து, குறும்புகள் விளைக்கக்கண்ட நீ, சினங்கொண்டு ஒரு தருப்பைப்புல்லை அக் காக்கையின் மேல்விட, அது செழுமைமிக்க நின் திருப்பேர் எழுதப்பட்ட அம்பாகி அக் காக்கையை நெருங்கித் தொடர, அது அஞ்சி விண்ணூடு பறந்துசென்று பெருமைமிக்க சக்கரவாளமலைக்குள் அதன் ஓரமாகப் பல வகையாய் ஓடி அதன்மேல் ஓடமாட்டாது அயர்ந்து, வலிமைமிக்க ஆயிரங் கண்ணுடைய இந்திரனிடம் சொல்ல, அவன், இராம பாணத்திற்கு எதிர் நான் நில்லேன் என்று சொல்லப் பின் எட்டுக் கண்களையுடைய நான்முகனிடம் சொல்ல, அவனும் இந்திரன் சொன்னதையே சொல்ல, எங்குப் போனாலும் தன் உயிரைக் காப்பவ ரில்லாமையால் அவ் வம்பின் திறமையை அறிந்து உடனே உன்னிடம் வந்து, கா கா வென்ற அரும் குரல் எழுப்பி, "உன் அம்புக் கெதிர் எவ்வுலகிலுமில்லை ; கார்முகில்போலும் மேனியுடையவனே, சிவந்த வடிவுடைய திருமாமகள் மணவாளா, ககுமன்னன் மரபிற்பிறந்த காகுத்தா, என்பிழை பொறுப்பீர், நான் உம் அடைக்கலம், அடைக்கலம்" என்று கதறிக் கதறி முறையிட்டுவந்து விழ அக்காக்கையின் உயிரைக் காத்துச் சினந்தவிர்ந்த பெருமாளே ; கோவைத் துறையாகப் பொருள்மேற் பிரிந்த தலைவனை நினைத்துத் தலைவி, தனித்துக் கழிக்கரையில் நின்று இரங்குவதாய்ச் சொல்லும் பாடலும், 'கார்காலத்தில் வருவேனென்று போனார், மேகமே, நீ வந்தனை, அவர் வரவில்லையே' யென்று பலவாறு புலம்புவதும், நெடிய கடற்கரையில் நின்று புன்னை மரத்தோடும், கழியில் உகளும் மீனோடும், கரைநோக்கி வரும் கப்பலோடும் தன் காமத்துன்பத்தைச் சொல்லிவருவதும், அலைகளோடு கூறியும் (இவைகளால்) ஒரு பயனுமின்றி யிருந்து பல விடங்களில் தலைவி தன் காமக்கவலையை அறிவித்து மயங்கியிருப்பதாய்க் கூறுவதும் வருமாறு அமைத்துப் பாடப்படும் கழிக்கரையில் புலம்பல் என்னும் அகப்பொருட் டுறைப் பாடலையும், வளப்பமிக்க நாட்டுக்கு அரசனான தலைவன் பொருள்தேடச் சென்றதும், அவனைக் காணாமையால் அங்கொரு பூங்கொடிபோல் அழகுள்ள பெண் சோர்ந்து தனிநின்றதும்,

ஆகிய பொருள்கள்தோன்ற வளமிக்க தமிழ்மொழியிற் கொண்டு, அணி செய்து பாடும்பாடலேயும், அதில் மூழ்கிக்கிடக்கும் வஞ்சகர் தம் குடியும் பேரும் சேரும் உறுப்பாக அமையப் பாடித்திரிந்து உயிர்சோரப் பெற்றேன் ; இனியேனும் நின் திருவடிகளை யறிவேனே? அன்றி யிப் படியே திரிவேனே?

தனத்தன தான தந்த தந்த
தனத்தன தான தந்த தந்த
தனத்தன தான தந்த தந்த தனதான

86. பெருத்திடு வார நண்பு கொண்டு
நமக்கிவ ஞன தொண்ட னென்று
ப்ரியத்தொடு நீவி ரும்பி லென்றன் வினைதானும்

பிதற்றிய வீணு நிந்தை வம்பும்
உரைத்தது நாளு மைம்பு லன்கள்
பிழைத்தவை யாவும் வந்து வந்து திதியாகி

அருச்சனை யாகி நெஞ்சி னின்ற
உருக்கமு மாகி யங்கி றைஞ்சும்
அடக்கமு மாகி விஞ்சு கின்ற தவமாகி

அருத்தியு மாகி முந்தி யங்கை
குவித்தலு மாகி யொன்று கின்ற
அயிக்கமு மாகி யன்பு நண்பு முழுதாமே

உரைத்திடு நீதி விஞ்சு பஞ்ச
வடித்தல மீது கஞ்ச மங்கை
உவப்பொடு சாலை யின்பொ ருந்த இளவீரன்

உயிர்த்துணை காவ லென்று செங்கை
அடற்சிலே நாணெ றிந்து கிஞ்சில்
உறக்கமி லான்வி ளங்க வங்கொர் தலமேவிப்

பறித்திடு வேணி யுந்து லங்க
உடுத்திடு சீரை யுங்க டிந்த
பகைப்புலன் யாவும் வென்ற நெஞ்சும் எழில்கூரப்

பரத்தினை யேய றிந்து கொண்டு
தனிப்பெற வேபு குந்தி ருந்து
பழிப்பறு மாத வம்பு ரிந்த பெருமாளே.

உரை :—பஞ்சவடிச் சோலையில் பர்ணசாலையில் முற்பட்ட மறை முதற் கலைகளைக் கற்றதால் நீதிமிக்க சீதாபிராட்டியார் இருக்க, இளவலாகிய இலக்குவன், உயிர்க்குத் துணையான அப் பிராட்டிக்குக் காவலென்று, சிவந்த கையில் சண்டைசெய்யும் வில்லின் நாணியை இழுத்துவிட்டுத் தட்டி ஓசை யுண்டாக்கி, சிறிதும் தூக்கமின்றி நிற்க, நீ அங்கோரிடத்தில் போய் இருந்து, கட்டிய சடையும், உடுத்த மரவுரியும் விளங்க, எல்லா அறிவையும் வென்று பகைத்த அஞ்சு புலன்களையும் அகத்தடக்கிய உள்ளத்தின் அழகு விஞ்ச, அவ் வுள்ளத்தின்கண் பரப்பிரமமான நின்னையே அறிந்து, தனித்துக் குற்றமற்ற தவம்செய்தனை பெருமாளே ; நின் அன்புமிக்க அடியார்கள் போன்று என்னை அவர்கட்குத் தோழனாக்கிக் கொண்டு, இவன் நமக்கு அன்புள்ள அடியவன் என்று நின் அருளினால் விரும்பினால் அப்போது என் தீவினைகளும், பயனற்ற சொற்களும், நிந்தையும், பொய்யும், நாடோறும் ஐம்புலன்களாற் செய்த குற்றங்களும், ஒன்றுபட்டு வந்து உன்னைப் புகழ்வனவாகி, பூசைசெய்யும் அருச்சனையாகி, உள்ளத்தில் நிறைந்து நிற்கும் உருக்கமுமாகி, வணங்கும் அடக்கமுமாகி, மிக்குச்செய்யும் தவமுமாகி, விருப்பமுமாகி, கைகுவித்துச் செய்யும் வணக்கமுமாகி, நீ யென்றும் நானென்றும் இரண்டா யிராமல், நானென்பது கெட்டு, நீரும் உப்பும் கலந்ததுபோல், நான் உனக்குள் கலந்து ஒன்றாகும் சாயுச்சிய பதவியுமாகி அன்பு, தோழமை எல்லாமு மாகும். நீ விரும்பாவிடில், பிறப்பு, இறப்பு, நரகம், சுவர்க்கம் ஆகியவற்றுட்பட்டு அலைவேன்; ஆகையால், நீ என்னை விரும்பி அடிமைகொள்ள வேண்டும்.

தந்த தனதன தான தத்தன
தந்த தனதன தான தத்தன
தந்த தனதன தான தத்தன — தனதான

87. நஞ்சு மிழுமிரு நாலு கட்செவி
மண்டு கிரணப ணாம ணிச்சுடர்
நந்து மிளவெயில் வீசு நற்பரபை — வடமேரு

நன்கு படவொரு கோடி மெய்க்கதிர்
நின்று பொலிதரு மாகி லொப்பென
நம்ப னெனவரு வீர கெற்சித — அதிரூப

செஞ்ச ரணரண தீர சித்திர
துங்க ககமிசை நீபு றப்படு
திண்டி ற லுமதி ராச தத்திரு — மலர்மாதும்

செம்பொ னுரமும்வி சால விக்ரம
திண்பு யமுமணி வாயு முத்தொளி
சிந்து நகைமுக மான பற்பமும் மறவேனே

விஞ்சு மொருமுத லேக ருத்துற
வந்த னைகள்புரி போதி னிற்கனல்
வெங்க ணிருதகு லேச னுக்கிளை யவள்காண

வெம்பி யுருகிவி கார சித்தசன்
அம்பு படவத னுலி ளைத்துடல்
வெந்து நிசிசர வேடம் விட்டுநல் வடிவாகி

வஞ்சி யெனமயி லாமெ னத்தனி
கொஞ்சு கிளியென மோகி னிப்பெயர்
மங்கை யெனவழ காகி நற்றுள வணிதோளின்

மண்டி விழவெ ணு மாத ரத்தொடு
பஞ்ச வடிமிசை யேவெ ளிப்பட
வஞ்ச வடிவென வேநி னைத்தருள் பெருமாளே.

உரை :—எல்லாருக்கும் மேற்பட்ட ஒப்பில்லாத முதலாகிய பரப்பிரமம் உளத்திலிருக்க நீ பூசனைகள் செய்துகொண் டிருக்கும்போது, நீயைப்போற் சுடும் இயல்பையுடைய கண்களைப்பெற்ற அரக்கர் குலத்துக்கு அரசனுன இராவணனுக்குத் தங்கையாகிய சூர்ப்பநகை, நின்னைக் கண்டு விருப்புற்றுக் காம வெங்கனலால் மனம் வெண்ணெயா யுருகி, மையலை விளைக்கும் மன்மதன் ஏவிய மலரம்பு பட்டதனுல் உடல்இளைத்து வெந்து, அந்த விகட வடிவத்தைக் கண்டால் நீ அவள் கருத்துக்கு உடன்படமாட்டா யென்று கருதி, அரக்கிவடிவை விட்டு, பொன்போன்ற நிறமும், பூங்கொடி போலும், சாயலில் மயிலைப் போலும் உள்ள வடிவு பெற்று, நல்ல துழாய்மாலை யணிந்த நினது திருத்தோளில் விழவேண்டுமென்று கடுக ஓடிப் பஞ்சவடிச் சோலையில் வெளிப்பட்டு நிற்க, அவளைக் கண்டு இது வஞ்சக வடிவென்று நினைத்தருளின, பெருமாளே; நஞ்சைக் கக்குவனவும் எட்டுத் திக்குகளிலும் இருப்பனவும் ஆகிய தெய்வப் பாம்புகளின் படங்களினின்று மிக்கெழும் ஒளியையுடைய மாணிக்கங்களின் ஒளி கெடச் செய்யும் இளவெயிலை வீசும் நல்ல சோதியையுடைய மகாமேரு, நலம் உண்டாக, ஒருகோடி யென்னும் தொகைப்பட்ட உண்மையான சூரியர்கள் நின்று எங்கும் மூடிக்கொள்ளும் சோதியாய் விளங்குமானுல், ஒப்பென்று கூறத்தகும் திருமேனி யுடையவர்; எல்லா வுலகங்களையும் அழிக்கும் உருத்திரனைப் போன்ற பேராற்றலும், விளங்கும் பேரோசையு

முள்ள வியக்கத்தக்க கோபமுள்ளவர் ; செந்நிறமான திருவடிகளை யுடையவர் ; போர்செய்யும் துணிவு மிக்கவர்; அழகுள்ளவர் ; நீண்ட வடிவுடையவர்; என்னும் இத்தகைய பறவை வடிவான பெரிய திருவடியின் கழுத்தில், நீ புறப்படும் உறுதியான திறலையும், வியக்கத்தக்க இராசத இலக்கணமுடைய தாமரைமலரில் வாழும் பெரிய பிராட்டியாரையும், செவ்வையாய் அழகிய திருமார்பையும், பரப்பும் வலிமையும், திண்மையுமுள்ள திருத் தோள்களையும், பவளம்போற் சிவந்த திருவாயையும், முத்துப்போல் வெண்மையாய் ஒளி வீசும் பற்களையும், தாமரைபோன்ற திருமுகத்தையும் என்றும் நான் மறவேன்.

தந்த தானத் தனதன தனத்தன
தந்த தானத் தனதன தனத்தன
தந்த தானத் தனதன தனத்தன தனதான

88\. கொங்கு சேர்பொற் றிருமுடி குடக்குற
வங்கை யானித் தழும்வரு டிகைக்கிரு
கொம்ப ஞர்பற் றியவடி குணக்குற முகமோமின்
கொண்ட தோர்தெற் குறவெரிங் வடக்குற
ரங்க மீதிற் கணபணி பணத்திடை
கொண்டல் போலத் திருமர கதப்பெரு மலைபோலத்
திங்கள் வாவிக் கரையரு கினிற்றுயில்
பங்க சாதத் திருவழ கினைத்தெளி
சிந்தை மீதிற் கொடுபர வுகிட்டையொ டுருகாதே
செங்கண் வேல்விட் டெரிமக ளிர்சித்திர
கொங்கை மேருக் கிரியிடை நெருக்குற
சிங்கி மேளத் தினிலுரு குபொய்ப்ரமை யொழியாதோ
சங்கு சேர்பொற் குழையிறை யைவெற்பொடு
செங்கை மீதிற் கொளுநிரு தனுக்கொரு
தங்கை யாய்நிற் பவள்பயில் வனத்திடை அருகாகித்
தந்த மாலைத் தணியிரு புயத்திடை
கொண்டு வாழ்வித் தருள்முடி மிலைச்சிய
தண்டு ழாயைப் புனையுனை யணைத்தபின் அகலேன்யான்
எங்கள் மாசுற் றயொடுற வுகட்டுவன்
உம்ப ராரைக் கொடுபணி நடத்துவன்
எந்த வேலைக் குமுனுற வுபற்றுவன் எனைமேவி

இன்ப மேதுய்ப் பதுமதி யுனக்கென
நின்று கூறித் தொழுபொழு துன்மித்தைகள்
எம்பி காணிற் பிழையென முடுக்கிய பெருமாளே.

உரை:—சங்கினுற் செய்யப்பட்டுக் காதிற்சேர்ந்த குண்டலத்தை யுடைய இறையாகிய சிவபெருமானைக் கயிலைமலையோடு சிவந்த கைகளால் மேலே தூக்கிய அரக்கனுகிய இராவணனுக்குத் தங்கையாகிய சூர்ப் பநகை, நீ சேர்ந்துள்ள காட்டில், நின்பக்கமாக வந்து, உன்னை நோக்கி, "நீ எனக்குத் தந்த ஆசையை என்னைக் கூடுவதனுல் தணிப்பாயாக; நின் தோளில் இரு கைகளாலும் என்னை அணைத்துக்கொண்டு வாழ்விப்பாயாக; நின் சடைமுடியில் உள்ள துழாய் மாலையை எனக்குக் கொடுப்பாயாக; நின்னைக் கூடியபின் அப்பாற் செல்லேன்; எங்கள் பெரிய உறவினர்க ளோடு உனக்கு உறவு பூட்டுவேன்; விண்ணுலகத்துள்ள தேவர்களைக் கொண்டு நினக்குக் குற்றேவல் புரிவிப்பேன்; என்றும் உன் உறவை விடேன்; என்னைக் கூடுவதால் நினக்கு மதிப்புள்ள பெருமை உண் டாகும்" என்று சொல்லி வணங்கி நின்றபோது, 'உன் பொய்களை என் தம்பி கண்டால் உனக்குக் கேடுவரும் ஓடிப்போ' வென்று முடுக்கிய பெருமாளே; தாது என்னும் தூள்சேர்ந்த திருத்துழாயை யணிந்துள்ள திருமுடி மேற்கிலும், தம் திருக் கைகளினுல் நாடோறும் தடவுதற்குப் பூங்கொம்பைப் போன்ற (சீதேவி, பூதேவி) திருமகள் நிலமகள் என்னும் இரு பிராட்டிமாரும் பிடித்த திருவடிகள் இரண்டும் கிழக்கிலும், முன்னே பார்வையைக் கொண்ட திருமுகம் தெற்கிலும், முதுகு வடக்கிலும் தங்க, திருக்காவிரியின் இருநடுவான திருவரங்கமென்னும் திருப்பதியில், கூட்ட மான தலைகளையுடைய ஆதிசேடனது படத்தில், கரிய மேகம்போன்றும், அழகும் பெருமையும் உள்ள மரகதமலை போன்றும், சந்திரபுஷ்கரணிக் கரையின் பக்கத்தில் கண்வளர்ந்தருளிய தாமரை மலர்போன்ற நின் திரு முகத்தின் சிறந்த அழகை என் மனத்தில்வைத்துத் தொழும் மூர்த்தியாக வைத்து நிட்டையுடன் உருகாமல், சிவந்த கண்ணுகிய வேலை விட் டெறிந்து நெஞ்சைப் பிளக்கும் பெண்களின் அழகாகிய முலையென்னும் மகாமேருவின்கண், நெருங்கிய பாவை யாடுவதுபோல் ஆட்டுவிக்கும் கலவியிலே உருகும் பொய்ம்மை மயக்கம் ஒழியாதோ ?

("குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவு ளெந்தை அரவணைத் துயிலு மாகண்(டு)
உடலெனக் குருகு மாலோ என்செய்கேன் உலகத் தீரே'

எனத் தொண்டரடிப்பொடி யாழ்வார் கூறியிருத்தல் காண்க.)

தனன தத்தன தந்தன தந்தன
தனன் தத்தன தந்தன தந்தன
தனன தத்தன தந்தன் தந்தன தனதான

89. கவலை யற்றவ ரைம்புலன் வென்றவர்
குணமி குத்தவர் பண்புநி றைந்தவர்
கருது பத்தியர் தொண்டுபு ரிந்தவர் பகையாவும்
கழிய விட்டவர் இன்பம டைந்தவர்
ஒருமை யுற்றவர் நெஞ்சுதெ ளிந்தவர்
கலைகள் கற்றவர் அன்பர் நெருங்கிய பழிபாவங்
குவல யத்தினி லொன்றற நின்றவர்
உபநி டப்பொரு ளங்கமு ணர்ந்தவர்
குவிய நிற்பவ ரிங்கிவர் தங்களை யிருபோதும்
குறுகல் முற்படல் கண்டிடல் வந்தனை
புரித னட்புற வின்சொல்வி ளம்புதல்
குழைத வித்தனை யும்பெற வென்றினி தருள்வாயே
இவளொ ருத்தியி ருந்தது கண்டெனை
அவனி னைக்கில னென்றலர் மங்கையை
இனியெ டுத்தகல் வன்கடி தென்றுயர் பனசாலை
இடமி சைத்தனி வந்தது கண்டுகை
உருவு கட்கமு டன்கொடு சென்றுமண்
இடைகி டத்திநெ டுஞ்செவி துண்டமும் முலைதானும்
தவனி லக்குவன் முந்திய ரிந்திட
அடல ரக்கிம றிந்துவி ழுந்துமெய்
தவர யித்தமொ டங்கில ழுங்குரல் கடலோதந்
தனைநி கர்த்திட நின்றுபு லம்பனும்
அதிப யத்துடன் வந்துக லந்திடும்
சனக புத்ரியை யஞ்சலை யென்றருள் பெருமாளே.

உரை :—நீ, அச்சுறுத்திப் போ போவென முடுக்கியவுடனே சூர்ப்பநகை இப்புறம் வந்துநின்று வருந்தி நின்றாளாக, சீதாபிராட்டி அருகே யிருத்தலைப் பின்னே அவள் கண்டு, இரண்டு பெண்கள் சேர்ந்திரார்க ளென்று கருதியே யிவன் என்னை நினைத்திலன் என்று கொண்டு, தாமரையில் இருக்கும் பெண்ணாகிய சீதாபிராட்டியை எடுத்துக்கொண்டு அப்

புறம் போவேன் என்று நினைத்து, உயர்ந்த பர்ணசாலையினிடம் தனித்து வரும் அச் சூர்ப்பநகையைக் கண்டு, கையில் உருவிய வாளோடு ஓடிவந்து, அவள் தலைமயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டு அப்பாற்போய், மண்ணில் மிதித்துக்கொண்டு, நெடிய காதும், மூக்கும், முலையும் தவம்செய்யும் இலக்குவன் முந்தி யரிய, வலிமைமிக்க அவள் திரும்பிவந்து விழுந்து உடலெங்கும் ஒடும் குருதியுடன் அலறிய குரல், கடல்முழக்கம்போல் எழக் கேட்டு, மிக்க அச்சத்தோடு ஓடிவந்து உன்னை அணைத்துக்கொண்ட சனகன் மகளை அஞ்சற்க வென்றருளினை பெருமானே; கவலையற்றவர்கள், ஐம்புலன்களையும் வென்றவர்கள், அருள் மிகுந்தவர்கள், அறிவு நிறைந்தவர்கள், உன்னை நினைக்கும் அன்புடையவர்கள், உன்னிடம் அடிமை செய்பவர்கள், பகைவர்களை ஒழிய நின்றவர்கள், நலம் பெற்றவர்கள், ஒருமைப்பட்டவர்கள், உள்ளந் தெளிந்தவர்கள், கலைகள் யாவுங் கற்றவர்கள், அன்புடையவர்கள், உலகில் நிலைத்திருக்கும் பழி பாவங்கள் சிறிதும் இல்லாதவர்கள், உபநிடதப் பொருள்களின் முப்பத்திரண்டு உறுப்புக்களையும் அறிந்து தெளிந்தவர்கள், அதுவோ இதுவோவென்று பறந்து அலையாமல் தனிப்பொருளாகிய நின்னை உறுதியாகக் கொண்டு ஒருமையுள்ளம் பெற்றவர்கள், இத்தகையவர்களை இரவு பகல் ஆகிய இருகாலங்களிலும் சேர்ந்திருத்தல், எதிர்கொள்ளுதல், காணுதல், வணங்குதல், ஆகியவற்றைச் செய்து, நட்புடனிருத்தல், இன்சொல் இயம்பல், உள்ளம் குழைதல், ஆகியவற்றை நான்பெற இன்பமாக எனக்கு என்று அருள் செய்வாயோ?

(ரத்தம் என்பது சந்த வின்பம் நோக்கி ரயித்தம் என்றாயிற்று.)

தாத்தனன தாத்தனன
தாத்தனன தாத்தனன
தாத்தனன தாத்தனன — தனதான

90. ஆக்கமிலை யூக்கமிலை
நாட்டமிலை வீட்டமிலை
ஆற்றலிலை யேற்றமிலை — நெறிநீதி

ஆட்சியிலை நீட்சியிலை
யேச்சுடைய பேய்ப்பிறவி
யாற்பயனெ ராற்புமிலை — யினிநீயுன்

மாக்கருணை தேக்கியக
டாக்கமுறு நோக்கமுழு
வாழ்க்கையெனு மோட்சவழி — வெளியாகி

மாற்றரிய தேற்றவெளி
காட்டியிரு காற்கடையில்
வாய்க்குமொரு பாக்கியம தருள்வாயே

மூக்கறவி ராக்கதிப
ராக்கறவி ராக்கதறி
மூத்தகர ஞர்க்குமுழு துரையாட

மூர்க்கன து கேட்டுநரன்
மேற்கடிது தாக்குமென
மூட்டுபடை மாத்தலைவர் பதினல்வர்

சீக்ரமொடு போர்க்குவர
ஏற்றகுறை தீர்க்கவுயிர்
சீற்றமுறு கூற்றமுண வவள்காணச்

சேர்த்தவுட லீர்த்துமுது
காக்கைகழு கார்க்கவொரு
தீக்கணையை நூக்கிவிடு பெருமாளே.

உரை :—மூக்கறுக்கப்பட்ட அரக்கி வேறு நினைவின்றி யிராமல் கதறிக்கொண்டு போய்த் தன் அண்ணனாகிய கரனுக்குத் தன் செய்தி முழுதுஞ் சொல்ல, அந்த மூர்க்கன், அதுகேட்டு, அந் நரன்மேல் விரைந்து சென்று போரிடுக வென்று ஏவிய பெரிய படைத்தலைவர் பதினல்வர் சண்டைக்குவர, மாமுனிவர்கட்குச் சொல்லிய உறுதிமொழியின் குறையைத்தீர்க்க, அரக்கர் உயிரைச் சினம்மிக்க கூற்றுவன் உண்ண, அந்தச் சூர்ப்பநகை காண ஒன்றன்மே லொன்ருக விழுந்த அரக்கர் உடலங்களைக் கிழக் காக்கைகளும், கழுகுகளும் இழுத்துக் கொத்தி யுண்ண, ஒரு அக்கினி யம்பினைத்தொடுத்து விசைத்துவிட்ட பெருமாளே ; பிறந்ததனுற் செல்வமில்லை ; ஊக்கமும் இல்லை ; வேருேர் எண்ணமும் இல்லை ; சேர்த்துவைத்த நற்பொருளும் இல்லை ; வல்லமையும் இல்லை ; உயர்வும் இல்லை ; உலகாளும் நலனுமில்லை ; நீதிதவருது வாழ்வு நடத்துவதுமில்லை ; வாணுள் நீண்டிருப்பதுமில்லை ; இவற்ருல் நிந்தைமிக்க மயக்கம் நிறைந்த பிறப்பினுல் ஒரு நன்மையும் இல்லை ; இனி யுன் பெருமைபெற்ற அருள்நிறைந்த கடைக்கண் பார்வையால், முழுச்செல்வம் என்னும் வீட்டினை யடையும் வழியாகிய விலக்கரிதாகிய தெளிந்த, மலமற்ற வெளியைக் காட்டி, உன் இரண்டு திருவடிகளில் இருக்க எனக்கு வாய்க்கும் ஒப்பற்ற பேற்றினை அருள்வாய்,

தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன தனதான

91. ஆர ணப்பொரு ளேக்ரு பைக்கட
லேத னிச்சுட ரேம லர்க்கொடி
ஆத ரித்தவ னேய ஊத்துல குடையோனே
ஆதி தற்பர னேய ளிப்பவ
னேபு ரப்பவ னேய ழிப்பவ
ஞன சிற்குண னேயெ னத்தினம் உருகாதே

கோர ரைக்கொலே கார ரைப்பழி
கார ரைக்குடி கேட ரைப்பல
சூத ரைப்படு கோள ரைப்புகழ் வகைபாடிச்
சோக முற்றிடு பாவி யைக்குளிர்
பார்வை வைத்தடி யார்க ணத்தொடு
சூழ வைத்திட வேகி னேப்பது மொருநாளே

வீரர் பட்டது மாக ரற்கிளே
யாளு ரைத்திட வேக கைத்துடன்
மேரு வெற்பையும் வேர்ப றித்திடும் இளேயோரை
மேல்வி டுத்திடு போது மற்றவர்
வாசி நற்கரி தேர்ப டைத்திரள்
வேலே யொப்பென வேப டைக்கொடு வரலோடும்

வார ணத்திரள் சாய முற்பெரு
சேனே கெட்டிட வேறு ணிப்பட
வாள றுப்பட நீள்பி ணக்குவை நிரையாக
மான முத்தலே வீர னேப்பொரு
தீட ழித்தொரு வாளி யைக்கொடு
வான கத்தினி வேற விட்டருள் பெருமாளே.

உரை :—பதினுன்கு படைத்தலேவரான வீ ர ர் க ளு ம், இறந்ததைப் பெரியகரன் த ங் கை யா கி ய சூர்ப்பநகை சொல்லக்கேட்டுக் கரன் வெகுண்டு சிரித்து, வலிமைமிக்க மகாமேருவையும் வேருடன் பறிக்க வல்ல தம்பியாராகிய தூடணன், திரிசரன் என்னும் இருவரையும் நின்

மேல் ஏவியபோது, அவர் தம் நால்வகைச் சேனைகளும் கடல்போல் நாற் புறங்களிலும் சூழவந்து போர்செய்ய, நீ அவ் யானைப் படைமுதலியவை அழியவும், அரக்கர்கள் விட்ட வேற்படைகள் துண்டுபடவும், வாள்கள் அறுபடவும், நீண்ட பிணக் கூட்டங்கள் வரிசையாய்க் கிடக்கவும், வலிமை மிக்க முத்தலைகளையுடைய திரிசரனைப்பொருது அவன் ஆற்றலை யழித்து, ஓரம்பு தொடுத்து அவனைக் கொன்று விண்ணுலகுக்கு அனுப் பினை, பெருமாளே; 'நான்மறைப் பொருளே, ஈகைக்கடலே; ஒப்பற்ற சோதியே, மலர்மகளைத் திருமார்பில் ஆதரவுடன் வைத்திருப்பவனே, எல்லாத் தெய்வங்கட்கும் முன்தோன்றிய ஆதியே, தனக்குத்தானே தெய்வமானவனே, பிறப்பிப்பவனே, காப்பவனே, அழிப்பவனே,' என்று நின்னைப் புகழ்ந்து நாடோறும் உள்ளம் உருகாமல், திருடரையும், கொல் லுந் தொழிலையுடைய கொலைகாரரையும், பழிகாரரையும், குடிகேடரை யும், எப்போதும் சூதாடுவோரையும், எவரையும் கெடுக்கும் கோள்சொல்ப வரையும் புகழும் வகையிற் புகழ்ந்து அறிவுகலங்கிய பாவியாகிய என்னை உன் குளிர்ந்த பார்வையில் வைத்து, உன் அடியார் கூட்டத்தைச் சுற்றி யிருக்குமாறு நினைப்பது எந்நாளிலோ? சொல்லுக.

தானன தத்தன தானன தத்தன
தானன தத்தன தானன தத்தன
தானன தத்தன தானன தத்தன தனதான

92. பாரள விட்டது வானள விட்டது
தாகம றுப்பது தாமரை யொப்பது
பாசிலை யுற்றது வானதி பெற்றது மறைநாலும்

பாடிமு டிப்பத ராவின டிப்பது
வேழம ழைத்திட வோடிமு னிற்பது
பாரம ணிக்கழ லோடுற நிற்பது நெறியாளர்

ஈரம னத்திலெ நாளுமு திப்பது
தேவர்மு டித்தலை யேபட வுற்றதி
ராணிகள் பொற்கைக ளால்வரு டுற்றது மலரோனும்

ஈசனு முற்றவி டாதுது திப்பது
மாகரு டப்பரி யேறியு கைப்பது
யானுமி னித்தொழ நேரிடு மெய்ப்பொழு தருள்வாயே

போரிலி லைத்திலை யானுயிர் விட்டபின்
மாவித னத்தொடு தானு முருக்கனல்
போலவி ழிக்கடை காயர தத்தொடு மதமூறும்

போதக வெற்பொடு மாவொடு மெத்திய
வீரரி னத்தொடும் வேலொடு மிப்படி
போதவ லைத்தெதி ரேயவன் வெற்றிகொ டெதிர்போதில்

சோரிபி ணக்குவை சேரம யக்குற
நீடல கைக்குல மாடந ரித்திரள்
சூழநெ ருக்கிய கூகைக ளித்தெழ அமராடித்
தாவுக ணைத்திரள் சேரவி லக்கியொர்
தோளைய றுத்துயர் மார்புது ளைத்தொரு
தூடண னுக்குமவ் வானம ளித்தருள் பெருமாளே.

உரை :—கரன் தம்பியாகிய திரிசரன் நின்னொடு பொருதிளைத்து உயிர்விட்டபின், மிக்க துயருடன் சுடும் நெருப்புப்போல் இரண்டு கண்களிலும் பொறிபறக்கக் கரனும், தேர்களோடும், மதமூர்ந்த யானைகளாகிய மலைகளோடும், குதிரைகளோடும் மோதிப்பொரும் வீரர் கூட்டத்தோடும், படைக்கலங்களோடும், மிகுந்துபோய் முன்பெற்ற வெற்றியைக் கொண்டு எதிர்த்தபோதில், குருதியும் பிணக்குவியல்களும் ஒன்றோடொன்று சேர்ந்து கிடக்கவும், நீண்ட பேய்க்கூட்டங்கள் கூத்தாடவும், நரிக்கூட்டங்கள் சுற்றிவரவும், நெருங்கிய கோட்டான்கள் எழும்பிக் களித்துக் குதிக்கவும் போர்செய்து, கரன்பொழிந்த அம்புக் கூட்டங்கள் அடங்கலும் அறுத்து விலக்கி அவன் ஒருகையை யறுத்து, உயர்ந்த மார்பைப் பிளந்து வீரரான தூடணன் திரிசிரன் ஆகிய இருவர்க்கும் ஈந்த அவ் விண்ணுலகை யளித்த பெருமாளே ; நின் திருவடிகள், உலகத்தை அளவிட்டன ; விண்ணையும் அளந்தன , பிறந்து இறந்து அலையும் விடாயை யறுப்பன ; தாமரைமலருக்கு ஒப்பாவன ; அடியார்கள் இட்டு வணங்கும் பச்சிலையாகிய திருத்துழாய் தங்கப்பெற்றன ; விண்ணில் உள்ள கங்கையாற்றைத் தோற்றுவித்தன ; நான்மறைகளும் பாடி முடிப்பன ; காளிங்கனாகிய பாம்பின்மேல் கூத்தாடின ; கஜேந்திரன் ஆதிமூலமே யென்றழைக்க ஓடிப்போய் முன்னின்றன ; பருத்த மணிகள் அழுத்திப் பொன்னாற் செய்யப்பட்ட வீரக்கழல் தரித்தன ; அம் மணியோடு கலந்து ஒளிவிடுவன ; உன்னைக் கூடும் வழியையுடைய அடியார்களின் அன்புள்ளத்தில் எக்காலமும் தோன்றி நிற்பன ; இமையவர் வணங்கும்போது மணிமுடிகள் படுமா றிருப்பன; திருமகள் மண்மகள் ஆகிய அரசிகள் அழகிய கைகளால் தடவப்பெற்றன ; மலர்வாழ் நான்முகனும் சிவபெருமானும் முடித்து விட்டுவிடாமல் புகழ்ந்து போற்றப்படுவன ; பெரிய கருடனாகிய குதிரையேறி நடத்துவன ; இத்தகு திருவடிகளை அடியேனும் வணங்கும் காலம் என்று வாய்க்குமோ ?

தனதன தனத்த தனதன தனத்த
தனதன தனத்த தனதன தனத்த
தனதன தனத்த தனதன தனத்த தனதான

93. அணையினி விருத்தி யுரமிசை கிடத்தி
இருகைகொ டணைத்து முகமுக மழுத்தி
அதரமு மதுக்கி யுறுசுவை யருத்தி நகரேகை
அடைவுப டவைத்து விடுதுகி லகற்றி
மிடறதி ரவெட்டு நிறைகுர லெழுப்பி
அவசமு றவிட்டு வெகுவித மருத்து வகைசேரத்

துணிவினு டனிட்டு மடிசுரு ளளித்து
மருவிய முயக்கின் மொழிபல மிழற்று
சுகமென வுரைத்து மதனிர தியொத்து விளையாடித்
துணைமுலை பதைப்ப மயிர்முக மறைப்ப
உபரிசு ரதத்தி னுயிரினை யுருக்கு
துறைமக ளிர்நட்பை யிதமென நினைப்ப தொழியாதோ

இணையற வெதிர்த்த விளையவர் கள்பட்ட
பொழுதுக ரனுக்ர மொடுகொடி யருத்ர
னெனவெதி ருருத்து நெடிதமர் விளைப்ப அவனேவும்
எரிகணை விலக்கி யிரதமு மழித்து
மருமமி சையுற்ற கவசமு மறுத்து
ரணமிசை வெளுத்த ககனமி சைவிட்டு விரைவோடே

மணிமுடி யறுப்ப னினியென வெடுத்த
ஒருகணை யடுத்த செவியள வினிற்க
மதியென வளைத்த பழையசி லையற்று விழலோடும்
வருணனை நினைத்து முதிர்கர மெடுத்து
நனியவன் அளித்த வரிசிலை குனித்து
மழையென மிகுத்த சரவகை தொடுத்த பெருமாளே.

உரை :—எதிரில்லாமல் எதிர்த்த தம்பியராகிய தூடணனும் திரிசிராவும் பட்டபொழுது கரன் கடுஞ்சினத்துடன், கொல்லுந் தொழிலைச் செய்யும் கொடிய ஊழிக்கால உருத்திரனைப்போல் நெங்கிப் பெரும் போர் செய்ய, அக் கரன்விடுத்த நெருப்புப்போன்ற அம்புகளை விலக்கி,

அவன் ஏறிய தேரையழித்து, அவன் மார்பிற்கட்டிய கவசத்தைப் பிளந்து 'இனி இப் போர்க்களத்தில் வெளுத்த ஆகாயத்தின் வழியாகக் கணைகளைச் சொரிந்து, விரைவுடன் மணிமுடிதரித்த அவன் தலையை அறுக்கின்றே'னென்று சொல்லி, ஓர் அம்பினைத்தொடுத்து வில்நாணியைக் காதளவு நிற்க இழுத்து முழுமதிபோல வில்லின் இரு நுனிகளும் வட்டமாகக் கூடும்படி சேர்த்து வளைத்தபோது, அப் பழையவில் ஒடிந்துவிட்ட வுடன், முன் பரசுராமர் கையினின்றும் வாங்கிய வில்லை வருணனிடம் கொடுத்திருந்தமையால், அதனைத் தரச்சொல்லி வருணனை நினைத்து, போர்செய்து முற்றிய கையைப் பின்னே நீட்ட, அப்போது வருணன் மகிழ்ந்தளித்த கணுக்களையுடைய வில்லை வளைத்து, மழைபொழிவதுபோல் மிக்க அம்பு வகைகளைத் தொடுத்துவிட்ட பெருமாளே ; விலைமாதர் தங்கள்பால் வந்தவர்களை மெத்தைமேல் இருக்கச்செய்து, மார்பின்மேல் சாய்ந்துகிடக்கச் சார்த்தி, இரு கைகளாலும் கட்டி, முகத்தொடு முகமழுத்தி, உதட்டோடு தட்டையதுக்கி, உமிழ்நீரைக் குடிப்பித்து, நகத்தால் காமநூலிற் கூறிய படி குறிகளை ஆங்காங்கு உண்டாக்கி, தாழ உடுத்திய புடைவையை விலக்கி, கழுத்தில், காடை, புறா, குயில், அன்றில், வண்டு, கிளி, கவுதாரி, செம்போத்து என்னும் எட்டுப் பறவைகளின் நிறைந்த குரல்போல் ஓசை உண்டாமாறு கூவித் தம் வசமறும் மெய் மயங்கச்செய்து, பல மருந்து வகைகளைச் சேர்த்துக் கூட்டித் துணிவோடு அவை உள்ளே அமையுமாறு வெற்றிலைச் சுருளை மடித்துக்கொடுத்து, (மற்ரொரு பொருள் அநேகவகையான மருந்துகளைக் கூட்டித் துணிவுடனே சுண்ணும்பி லிட்டுக் கலந்து வெற்றிலையிலே தடவி மடித்த வெற்றிலைச்சுருளைக் கொடுத்து என்றும் சொல்லலாம்) இருவருங் கூடிய புணர்ச்சியில் பல இன்சொற்களைக் கொஞ்சிப் பேசும் இது இன்பமென்று கூறி, மன்மதனும் இரதியும்போல் ஒருமித்து விளையாடி, இரு தனங்களும் பதைக்க, தலைமயிர் குலைந்து விழுந்து முகத்தை மறைக்க, கரண விளையாட்டுக்கள் செய்யும் உபரிசுரத லீலையில் உயிரை உருகச்செய்கின்ற துறையை யுடையவர்கள்; அப் பெண்களின் நட்பை இன்பமென நினைக்கும் கருத்து ஒழியாதோ ?

(மிழற்று—மிழற்றுதல் ; முதனிலைத் தொழிற்பெயர்.)

தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன தனதான

94. உத்தம சித்தமு முப்பது முப்பது
பத்திரு பத்தறு தத்வவி ளக்கமும்
உட்பகை யெட்டுமொ ழித்திடு சத்தியும் உயிர்யாவும்

ஒக்குமெ னக்கரு தப்படு ப்ரக்ஞையும்
அக்கர மெட்டையு முட்படு நிட்டையும்
உற்றவி ருட்பக லற்றச ரித்ரமும் அடையாதே

கைத்தல்பு ளித்தல்க ரித்தல்து வர்ப்பொடு
மெத்திர தித்தனு வர்த்தலெ னப்பல
கட்டுரை பெற்றசு வைக்குள்வி ருப்பமும் மடவார்தம்

கைப்படு துக்கசு கத்துளு ருக்கமும்
மைத்துனர் மக்கள்ம றப்பென நத்திடு
கட்டமு மிப்படி பட்டும னத்துயர் உறுவேனே

தத்துத லைக்குறை யெத்தியெ டுத்தல
கைக்குல மொக்கந டிக்கந ரித்திரள்
தப்புதி ரத்தின்மி குத்தநி ணத்தசை கழுகாரத்

தக்கவ ரக்கரி றக்கமு ளிற்கொடி
யுட்குடர் பற்றியி ழுக்கவி ழித்திடு
சக்குவி னைப்பல பட்சிகள் கொத்தவொர் சிலைகோலி

மெத்துப டைக்கரன் முற்றுயிர் செற்றுடன்
மற்றும ரக்கர்கு லத்தொட றுத்துடன்
வெற்றிப டைத்துமு னிற்கும ரக்கியும் அழுதோட

விற்கொடி லக்குவ னப்புற நிற்கவு
நற்சர ணத்தையி லக்குமி பற்றவு
மிக்கவ னத்துளி ருப்பைவி ருப்புறு பெருமாளே.

**உரை :**—வருணன் கொடுத்த வில்லினல் பொழிந்த அம்புகள் அறுக்கத், தத்திக் குதிக்கும் தலைக்குறையைப் பேய்க் கூட்டங்கள் காலால் எற்றியெடுத்து அக் குறைத் தலையோடு ஒக்கக் கூத்தாட, நரிக் கூட்டங்கள் குருதிவெள்ளத்தில் மூழ்கிப் போகாமல் தப்ப, அவ் வெள்ளத்தில் மிகுந்திருக்கும் நிணம் தசை ஆகியவற்றைக் கழுகுகள் தின்ன, வலிமையில் தக்கவரான அரக்கர் இறக்க, அவர் தம் பிணங்களின் வயிற்றுள்ள குடல்களைக் காக்கைகள் கொத்திப்பிடித்து முட்களிலே அவை அகப்பட்டுக் கொள்ளுவதனல் அவற்றை இழுக்க, திறந்துபார்க்கும் கண்களைப் பல பறவைகள் கொத்த, இங்ஙனம் முடிவில்லாதிருக்குமாறு ஒப்பற்ற வில்லை வளைத்து, பொரும் படைகளையுடைய கரனுடைய உயிர் போகச்செய்து வெற்றிபெற்றும், மற்றைய அரக்கர் ஒருவரையும் விடாமல் அவர் தம் மரபோடு வேரறுத்துப் போர்செய்து வெற்றிபெற்றும், எதிர்நின்ற சூர்ப்ப

நகை யாகிய அரக்கி அழுதுகொண்டே ஓட, அந்த வில்லைக் கையிலே வாங்கிப் பிடித்துக்கொண்டு, இலக்குவன் பர்ணசாலைக்கு அப்பால்நிற்க, நின் திருவடிகளைத் திருமகள் பற்ற, மிகுந்த மரங்களையுடைய காட்டில் பர்ணசாலை இருக்கும் இடத்தை விரும்பி நலத்தோடிருந்த பெருமாளே ; சிறந்த உள்ளமும், ஐம்பெரும் பூதங்களும், ஐம்புலன்களும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், அந்தக் கரணங்கள் நான்கும், ஆகிய ஆத்மதத்துவம் 24-ம், கலை, காலம், நியதி, வித்தை, தாரகம், புருடன், மாயை என்னும் வித்தியாதத்துவங்கள் ஏழும், சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்ததத்துவம் ஐந்தும், ஆக உடற் கருவி முப்பத்தாறும், இவற்றினின்றும் உண்டாகும் புறக்கருவி அறுபதும், ஆகத் தொண்ணூற்ருறு தத்துவங்களின் விளக்கமும், காமம், குரோதம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பு, அகங்கார மென்னும் உட்பகை எட்டும், ஆகிய இத்தனையுந் தொலைத்து விடப்படும் ஞானசத்தியும், இவைகள் எல்லாவற்றிலும் வேருகவுள்ள எல்லா உயிர்களும் ஒக்கத் தூய்மை செய்யப்படுமென்று நினைக்கும் சத்திய ஞானமும், அந்த ஞானத்தில் தியானம் செய்யும் பிரணவத்தோடு கூடிய நமோநாராயணய என்னும் நின் திருமந்திரமாகிய எட்டெழுத்தும், அத் திருமந்திரத்தை யுள்ளே நிறுத்திக் கொண்டு செய்யும் அசையாத நிட்டையும், அந் நிட்டையினலே வந்த இருளாகிய வெறுப்பும், பகலாகிய விருப்பும், மற்றைய சரித்திரமும் அடையாமல், கைப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு இவற்றுடன் கூடிய இனிப்பு, உவர்ப்பு என்று பெயர்பெற்ற அறுசுவைகட்குள்ளே விருப்பமும், பெண்கள் கையில் அகப்பட்டு நுகரும் இன்ப துன்பங்களில் மன உருக்கமும், மைத்துனர், பிள்ளைகள், மனைவி, தமையன், தந்தை, தாய் என்று அன்பு கொள்ளும் துயரமும், ஆகிய இவற்றில் மனதைச் செலுத்தித் துன்பம் அடைவேனே ? அப்படித் துன்பப்படாது அடியேனைக் காத்தருள வேண்டும். இப் பாட்டில் தொண்ணூற்ருறு வகைத் தத்துவங்கள் விளங்கக் கூறப்பட்டுள்ளன.

தனத்தன தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன தனத்தன தனதான

95. பொறிக்கன லெறித்திடு விழிக்கடை
படைத்தொரு புறத்தினி லெதிர்த்தடல் எமதூதர்
புறப்படு புறப்படு கெனப்பல
உரைத்துயிர் புதுக்கவொர் சடத்தினி லடையாமுன்
வெறித்திடு பகைப்புல னடக்கியு
மொடுக்கியு மிடர்ப்பெரு வினைக்கடல் கரையேறி

விருப்பொடு சடக்கென மனத்தினை
எடுத்துநின் வியப்புள பதத்தினில் அடையேனே

உறைத்திடு பருக்கைகொள் வனத்துறை
மலர்க்கொடி யொருத்திநி கரற்றவள் தனைநாடி

உனக்கென வெடுத்தபின் எனைக்குழல்
பிடித்தன ருதைத்தன ரடித்தனர் செவிநாசி

அறுத்தன ருனக்கிளை யவர்க்கிவை[1]
யுரைத்தலு மரக்கர்வ ரவர்க்கொள யமனூரில்

அகற்றினர் மனித்தர்கள் எனத்தம
யன்முறச்சொல வரக்கியை முடுக்கிய பெருமாளே.

உரை :—கரன் முதலியோர் இறக்கக் கண்ட சூர்ப்பநகை இராவண னிடம் போய், அவனை நோக்கி, காலில் விழுந்து, 'உறைக்கும் பருக்கை யாகிய கற்களைக் கொண்ட வனத்தில் பூங்கொடிக்கு ஒப்பானவளும் தனக் குப் பிற பெண்களை நிகராகச் சொல்ல வரியவளும் ஆகிய ஒரு பெண் ணைக் கண்டு அவளை எடுத்துக் கொண்டு வந்து உனக்குக் கொடுத்தல் வேண்டுமென்று கருதித் தூக்கச் சென்ற போது அவளோடிருக்கிறவர் கள், என் கூந்தலைப் பிடித்து என்னை உதைத்துக் காது, மூக்கு, கொங்கை களை அறுத்தார்கள் ; அதனை உன் தம்பியரான கர தூடண திரிசரர்கட்கு நான் சொன்னவுடன் அவர்களே போர்க்கு வர அவர்கள் உயிரை எம னுலகுக்கு அனுப்பினர் ; அவர்கள் மனிதர்கள்' என்று சொல்லுமாறு அவ்வரக்கியை முடுக்கி விட்ட பெருமாளே ; என் உயிரைப் பற்ற நெருப் புப் பொறி பறக்கும் கண்களையுடைய வலிமை மிக்க எம தூதர்கள் ஒரு பால் வந்து என்னை எதிர்த்து, புறப்படு, புறப்படு என்று முடுகிக் கூறி, என் உயிரைப் புதிதான வேறோருடம்பில் அடைப்பதற்கு முன்னே, என்னை வெறுத்துப் பகைக்கும் ஐம்புலன்களையும் அடக்கியும் ஒடுக்கியும் வலிமை மிக்க பெரிய பாவமாகிய கடலைக் கடந்து கரை யேறியும், விருப்பமுடன் மிக விரைவில் என் மனதைத் தீய நிலையிலிருந்து எடுத்து வியக்கத்தக்க நின் சீர் பாதங்களில் வைத்து அவற்றை அடையச் செய்ய வும் மாட்டேனே ?

(உயிரை வேறொரு உடலில் அடைத்தால் அவ்வுயிர், பண்டை நினைவுகளை மறந்து புதிய நிலை பெறுதல்பற்றி, 'உயிர் புதுக்க' என்றார். 'அரக்கர் வர அவர்க்கொள' என்னுமிடத்தில் அகரம் தொக்கது செய் யுள் விகாரம்.)

---

பி - ம். 1. வத்திரள் நமனூரில்.

தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன தனதான

96. முனைக்குறையாய் நடுக்குவதாய்
உளப்பகையாய் நிலைப்பிழையாய்
முயற்சியதா யயர்ச்சியுமாய் ஒழியாத
முழுப்பழியாய் வழக்கிழவா
யொழுக்கிலதாய் உறுப்பிலதாய்
முறைப்பழுதா யறக்கொடிதா மிடியேயாய்
எனக்கெனவே யுரைத்தடியேன்
அகத்துறைவார் தலைக்கடைபோய்
இருட்பகலா மிதித்துழலா இசைபாடி
எதிர்ப்படுபோ திருப்பவலா
யிருக்கலுமே அதைக்கருதா
விரக்கமெடே யிரப்பதுதான் ஒழியாதோ
தனக்கிளையாள் குறைப்படுநா
சியைக்கருதான் வனத்திளைஞோர்
தரைப்படுபூ சலுக்குருகான் அவளோதுந்
தனித்திருவோ வெனக்கதிரே
விழிக்குமுனே புலப்படவே
தலைப்படுவா ளெனப்ரமியா ஒருமாமன்
மனைக்குறுகா மனத்துறநோ
யுரைத்தளவே உனக்கெளிதோ
மலர்க்கொடிகாண் மனித்தர்களோ இறையோர்காண்
வழக்கலநீ குறிப்பதென
மறுத்திடவே வெறுத்திடுவோன்
வழிப்பகையே வழுத்திமையோர் பெருமாளே.

உரை :—இவ்வாறு சூர்ப்பநகை சொல்லிய சொல்லால் மயங்கிய இராவணன், தங்கை மூக்கறுபட்டதையும் நினையான்; தண்டக வனத்தில் தன் சுற்றத்தார் போரிட்டுத் தரையில் மாய்ந்ததை எண்ணியும் மனம் மாழ்கான்; சூர்ப்பநகை சொல்லிய அத் திருமகளோ என் எதிரில் கண்ணுக் தோன்றுமாறு இப்படித் தலைப் பட்டவள்? என்று அறிவு கலங்கப்பெற்று,

வஞ்சித்து அவளைக் கொண்டுவர வேண்டுமென்று கருதி, அவ் வஞ்சித் தலைச் செய்ய வல்லவன் மாரீசனே யாகுமென்று உறுதி கொண்டு, தனக்கு ஒப்பு எவருமில்லாத அம் மாரீசனாகிய மாமன் வீட்டிற்குச்சென்று, தன் உள்ளத்தில் உள்ள நோயை அவனிடம் சொன்ன போழ்து, அம் மாரீசன், 'அஃது உனக்கு எளிய செயலோ? அவள் திருமகள் கண்டாய்; அவர்கள் மனிதர்களோ? பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூ விறைவர்கள் கண்டாய்; நீ அவளை மனத்தில் எண்ணிக் குறிப்பு வைத்தல் நீதியன்று; உனக்கு உடனே கேடுவரு' மென்று மறுத்துரைக்க, அவன் மேற் பிணங்கிய இராவணனுக்கு முற் பிறப்பில் தொடர்ந்துவரும் பகை வனே, பரவித்தொழும் இமையவர்க்குப் பெருமாளே; (வறுமையின் இலக்கணம் கூறுகின்றது) முன்னைய பற்றின் குறையாய், உடலை நடுங் கச் செய்வதாய், மனத்திற்குப் பகையாய், உயர் நிலைக்கு இடையூறாய், முயற்சியாய், இளைத்துச் சோம்புவதாய், தீராத முழுநிந்தையாய், நீதித் தாழ்வாய், நல்லொழுக்க மற்றதாய், உறுப்பில்லாததாய், முறைக்குக் குற்றமாய், மிக்க கொடுமை செய்வதாய் உள்ள வறுமையும் எனக்காகவே உண்டாயிற் றென்று கருதி, பல பேறுகளுடன் வீட்டில் இருக்கின்றவர் களின் தலைவாயிலில் அடியேன் போய், இரவு பகலாய் மிதித்து உழன்று பண்ணோடு கூடிய பாடல்களைப் பாடி (அல்லது அவர்கள் புகழைப்பாடி) அவர்கள் முன் செல்லும் போது, அவர்கள் இரும்பினு லியன்ற அவலைப் போல் பயனின்றி இருப்பதைக் கண்டு, அவர்கள் தம் அழுத்தமான மனதையும் என்னுடைய வறுமையையும் நினைந்து வருந்தி வாடமலிருக்க இரக்கும் தொழில் என்னை விட்டுப் போகாதோ? சொல்லுவாயாக.

தனத்தனனா தனத்தனனா
தனத்தனனா தனத்தனனா
தனத்தனனா தனத்தனனா தனதான

97. உறைப்பிலையே மதிப்பிலையே
வியப்பிலையே கயப்பிலையே
யொழுக்கிலையே வழக்கிலையே யநுபூதி
உறுப்பிலையே விருப்பிலையே
தெருட்டிலையே குறிப்பிலையே
உகப்பிலையே சிறப்பிலையே வறிதேயென்
பிறப்பினையே தெனச்சொலுவேன்
எனக்கினநீ தயைச்செய்வையே
பிரட்டடியேன் நடித்துளநாள் அமையாதோ

பிடித்தினிநான் அடித்துணையே
அடிக்கடிதான் வழுத்திடநீ
ப்ரியத்துடனே க்ருபைக்கணினல் அழையாயோ

வெறுப்பதுநீ பொறுத்திடுவாய்
தனித்தொருமா னுருக்கொளுவேன்
வெளிப்படுவேன் வடக்குமுனே விளையாடி

வியப்புடனே குதித்திடுவேன்
அடற்றிருமால் பிடித்திடுவான்
விசைக்கொளவே வழிக்கொளுவேன் நிருதேசா

மறித்தினிநான் வாத்திலைகாண்
நினைத்ததுநீ முடித்திடவே
வரக்கடவாய் எனப்புகலா மடமானின்

வனப்பொடுமா ரிசப்பெயரோன்
எதிர்ப்படவே குறிப்பறியாள்
மருட்டுறுமா மலர்க்கொடிசேர் பெருமாளே.

உரை :—தான் சொன்னதற்றாக வெகுண்ட இராவணனைப் பார்த்து, மாரீசன், "நீ என்னைப் பொறுத்துக் கொள், நான் பொன் நிறமான ஒரு மான் வடிவெடுத்து, அப் பெண்ணுக்கு முன்னல் விளையாடி அவள் வியக்குமாறு துள்ளுவேன்; வலிமை மிக்க திருமால் என்னைப் பிடித்தற்காக விரைந்து வருமாறு அவரை என்வழி கொண்டு போவேன்; அசுரர்க் கரசனே, இனி நான் திரும்பிவரப் போவதில்லை; நின் கருத்தை நிறைவேற்ற வேறொரு பக்கமாக வருக" என்று கூறிப் பிராட்டியின் கண்ணுக்குத் தோன்ற, இஃது அரக்கர் வஞ்சகம் என்று அறியாளாய், மயங்கிய அம் மலர்மங்கை சேர்ந்திருந்த பெருமாளே; நான் பிறந்ததனல் அபிமானம் ஒன்றுமில்லை, பகுத்தறியும் அறிவில்லை: வியப்பில்லை; வெறுப்பில்லை; நல்லொழுக்கமில்லை; நீதியில்லை; உன் அருளென்னும் அநுபூதியாகிய உறுப்பில்லை; பற்றில்லை; தெளிவில்லை; துணிந்து கொள்ளும் குறிப்பில்லை; மகிழ்ச்சியில்லை; சிறப்பில்லை; இவைகள் இன்மையால் வீணுகிய என் பிறப்பை என்னென்று சொல்வேன்; இத்தகைய எனக்கு நீ முன் நின்று என்னைத் தலைமை யாக்குவாயோ? அடியேன் புரட்டாகக் கூத்தாடிய நாள் போதாதோ? இனி உன் திருவடிகள் இரண்டையும நான் பிடித்து அடிக்கடி புகழ்ந்து போற்ற அருளோடு கூடிய நின் கண்ணுல் என்னை அழையாயோ? கூறுவாயாக.

(கயப்பு - வெறுப்பு.)

தான தத்தன தானன தந்தன
தான தத்தன தானன தந்தன
தான தத்தன தானன தந்தன தனதான

98\. காலே சுற்றியு லாவுவெ றுங்குடம்
மாபூ தத்தடை வாயநெ டுங்குடில்
காமா திக்கம தேவிளை யும்புவி நிணமூளை
காழே யெற்புரு வாகிய சங்கிலி
நேரே பெற்றதெ லாமடை யுங்கடல்
காடா கியபிணி மூடுநெ டுங்குழி வெகுரோமத்

தோலே முச்சிய கூடுதி ரங்களி
ஞாலே மெய்ப்பசை மேவுநெ டுஞ்சுவர்
சோறே புக்குவி டாதுத தும்பிய மலசாலை
தோடார் பொற்குழை மாதரெ னுங்கன
லாலே நெக்கிடு மாமெழு கின்குகை
சூதா னத்தொடு பேணுமு டம்பென மெலிவேனோ

வேலே யொத்தகண் மாமயி லெம்பெரு
மானே யித்தனி மானையென் முன்றிலின்
மீதே கட்டுதி யாடிட வென்றலும் எதிர்போதின்
மேலே தத்தியு மீளவொ துங்கியும்
நேர்போய் வெற்பிடை யேறியி றங்கியும்
மீளா வொத்தரு காகியும் விஞ்சியும் வருமாபோல்

வாலே சுற்றியு மோடியு நின்றுமெய்
யூடே கிட்டியு மூடுதி ரும்பியும்
வாய்நீர் விட்டுமு லாவுதல் கண்டபின் நிருதேசன்
மாமா யத்தடை வாகுமி தென்றொரு
சீரா மப்பொறி வாளிது ரந்தடல்
மாரீ சப்பெய ரோனைமு னிந்தருள் பெருமாளே.

உரை:—பொன்மானைக் கண்டு அறிவு கலங்கிய, வேற்படைபோன்ற கண்களையும் கறுத்த மயில்போன்ற சாயலையுமுடைய சீதாபிராட்டி, நின்னைப் பார்த்து, 'என் தலைவரே, இந்த ஒப்பற்ற மானைப்பிடித்து என் முற்றத்திற் கட்டுக; நான் விளையாடவேண்டும்' என்று சொன்ன வுடன், நீ அம் மானுக் கெதிரே போகும்போது அஃது உன்மேலெழும்பிக், குதித்

துத் திரும்பி, அப்பாலே விலகியும், நின் கண்பார்வைக்குச் செவ்வை யாய்ப் போய் மலைமேல் ஏறியும் கீழே இறங்கியும், நின் கைக்கு அகப் படுவது போல நின் பக்கத்தில் நின்றும், அகப்படாமல் விஞ்சிச் சென்றும், வருவதுபோல வாலைச் சுற்றியும், ஓடியும், நின்மேனியிற் படக் கிட்டியும், உடனே திரும்பி நடந்தும், வாயினின்றும் நீரைச் சொரிந்தும் நின்னை நெடுந்தூரம் கொண்டுபோய்த் திரிந்த வதனைக் கண்டு, இஃது அரக்கர் தலைவனான இராவணனது மாயத்தின் விளைவென்று துணிந்து, நின் திருப்பேர் எழுதிய ஓர் அம்பினைச் செலுத்தி வலிமைமிக்க மாரீசனாகிய மானைக் கொன்ற சிறப்புடையை, பெருமாளே ; இவ்வுடல், காற்றுச் சுழன்று திரியும் வெறுங்குடம் ; ஐம்பூதங்களின் சேர்க்கையான நீண்ட குடிசை ; (ஐம்பூதத்தின் அடைவாவது ; மண்ணின் பகுதியாகிய தோல், என்பு, நரம்பு, இறைச்சி, மயிர் என்னும் ஐந்தும், நீரின் கூறாகிய, நீர், குருதி, மூளை, பசை, சுக்கிலம் என்னும் ஐந்தும், தீயின் கூறாகிய உணவு, தூக்கம், அச்சம், புணர்ச்சி, மடி என்னும் ஐந்தும், காற்றின் கூறா கிய ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், தத்தல் ஆகிய ஐந்தும், ஆகா யத்தின் கூறாகிய சினம், இவறன்மை, பற்று, தருக்கு, பொறாமை ஆகிய ஐந்தும், ஆம். இவை கூடி அடைவாய்ச் செய்யப்பட்ட குடிசை;) காமப் பயிர் ஓங்கிவளரும் வயல் ; நிணம், மூளை, வயிரங்கொண்ட எலும்பு இவை களின் வடிவமான சங்கிலி ; எதிர்ப்படும் நல்லன தீயனவெல்லாம் சேரும் கடல் ; காடாகிய நோய் மூடப்பட்ட ஆழ்ந்த குழி ; மிக்க மயிராற் பின்னப்பட்டுள்ள கூடு ; குருதியால் பசை உண்டாகுமாறு செய்யப்பட்ட நெடுஞ் சுவர் ; சோறு உள்ளே புகுந்ததனால் உளவாகும் மலம் மூத்திரங் கள் ஆகியன விடாதிருக்கும் மலசாலை; பொன்னாற் செய்யப்பட்ட காதணி களை யணிந்த பெண்களென்னும் நெருப்பால் உருகும் பெரிய மெழுகினாற் சமைத்த குகை ; இத்தகையதாய், இழிவான பொருள்களைப் பேணுவதாய் உள்ள இதனை உடலென்று நம்பி மெலிந்து தடுமாறுவேனோ ?

தனந்தன தான தனன
தனந்தன தான தனன
தனந்தன தான தனன தனதான

99. கழிந்தநாள் போது மயலை
யொழிந்திடாய் ஞான நிலைமை
கலந்திடாய் நேய மருவி மனநேரே
கரைந்திடாய் நீர்கண் மலர்கள்
சொரிந்திடாய் கால னுறவு
கடிந்திடாய் வாடி யழுது விழிமாரி

பொழிந்திடாய் தாளி லினிது
பணிந்திடாய் நேரி லடிமை
புரிந்திடாய் பாவி யெனநன் மதிசேரப்

பொருந்திநீ கூறி லலது
தெளிந்திடேன் வேறு மொருவர்
புகன்றுளா ரேனு முறுதி கருதேனே

விழுந்தமா ரீசன் விரகு
மொழிந்ததோர் வாய்மை கருதி
விளைந்ததோ ராத சனகி யிளவீரா

விளங்குவா யேகு கடுக
நடந்துதீ பாய்வ னலது
விளம்பவோ வேறு வசன மெனலோடும்

எழுந்துதான் வீர விளவல்
நடந்துபோய் நீடு விசையில்
எதிர்ந்ததோர் பாதி வழியி னிருதாளின்

இறைஞ்சவே மாது கொடுமை
புரிந்தவா ருகு மெனவுள்
இரங்கிமார் பூடு தழுவு பெருமாளே.

உரை :—நீ தொடுத்த அம்புபட்டு வீழ்ந்த மாரீசன், வஞ்சகமாக உன் குரல்போல, 'இலக்குவா' வென்று சொன்ன சொல்லைக் கேட்டு, அரக்கரால் உனக்குத் தீங்கு வந்ததனால் நீ, அங்ஙனம் கூப்பிட்டாய் என்று துணிந்து, உண்மை விளைவினை யறியாத சீதாபிராட்டி, 'இள வீரனாகிய இலட்சுமணா, நீ விரைந்துசென்று அவ்வோசை யின்னதென்று விளக்கமாக அறிவாய்; நீ, போகாவிடின் நான் நடந்துபோய் நெருப்பில் விழுவேன்; அன்றி வேறு கொடிய சொற்களை உனக்குச் சொல்லவா?' என்றவுடன், இலக்குவன் அப்போதே விரைந்து செல்கையில் பாதி வழியில் எதிரேவரும் நினது திருவடிகளில் வீழ்ந்து வணங்க, தம்பியாகிய இவன் வந்தது சீதையின் கொடுஞ் சொல்லாலே யாகும் என்று மனம் வருந்தி, அவனை மார்போடு சேர்த்துத் தழுவிக்கொண்ட பெருமாளே; (நீ, எனக்கு அருளிச்செய்ய வேண்டுவது) 'காமத்தினால் வீணிற் கழிந்த நாட்கள் போதும்; அக் காமத்தை யொழித்து விடுக; ஞானத்தில் அசையாது நிற்கும் நிலையைக் கூடுக; அந்த ஞானத்தோடு கூடிய அன்பையுடைய மனம் செவ்வையாய் உருகுக; மலர்போன்ற கண்களினின்றும் ஆநந்த நீர்

பொழிக; எமனுக்கு உறவாகும் தீச்செயல்களைச் செய்யாதொழிக; மகிழ்ச்சியால் ஆடியும், அன்பினால் அழுதும், மழைபோற் கண்ணீர் சொரிந்தும் இருக்க; எனது திருவடிகளில் இனிதாக வணங்குக; ஒப்பற்ற அடிமைத் தொழில் புரிக; பாவி, நான் சொல்லியபடி கேள்" என்று என் மனம் பொருந்துமாறு நீ, கூறினாலன்றி நான்தெளிய மாட்டேன்; நின்னை யன்றி இவற்றைச் சொல்வார் வேறு ஒருவர் உளராயினும் அவற்றை உறுதியென்று கொள்ளேன்.

தனதனன தந்த தான
தனதனன தந்த தான
தனதனன தந்த தான தனதான

100. அறுகரவு தும்பை சூடு
மிறையவர்தெ ளிந்து நாளும்
அகமகிழ்ம டந்தை வாழ உபதேசம்

அருளுமொரு மந்த்ர மான
உனதுபெயர் சிந்தை மீதில்
அனுதினநி னைந்து பாரி லனைவோரும்

உறுதியொட கன்றி டாத
திருவொடுபொ ருந்தி மீள
உயரியவை குந்த மேவ வினையேன்யான்

உனதுபெரு வஞ்ச மாயை
யதனிடையி ருந்தி யோனி
யொழிவருத மும்ப னாகி மெலிவேனோ

இறுகுதறி ரங்கி நூறு
வயதுபுகு மந்த னுளன்
எனவுறையுள் வந்து தேவி பசியானேன்

இடுகவமு தென்ற போது
நடுநடுந டுங்கு வாள்முன்
இருபதுகை கொண்ட வேட முடனேயாய்

மறுகுறவி டந்து சாலே
யதனெடுமு யர்ந்த தேரில்
வலிமையொடு கொண்டு போகும் நிருதேசன்

மனமதுந டுங்க மோதி
முடுகியெதி ருஞ்ச டாயு
மகனெனவு கந்த தேவர் பெருமாளே.

உரை :—இவ்வாறு இலக்குவன் சென்றவுடன், இராவணன், அழுத்தமான உடலின் தசைவற்றித் தோல் திரைந்து, நூறு வயதுடைய முனிவன்போல வுருக்கொண்டு, பன்னக சாலையினுள் வந்து, 'மிகவும் பசித்தேன், உணவிடுக' என்று பிராட்டியைக் கேட்க, மிக நடுங்கிய அவள் முன், இருபதுகைகளும் பத்துத்தலையும் உடைய வடிவத்தை உடனே கொண்டு பிராட்டி 'என்னசெய்வே னெ'ன்று தவிக்குமாறு, பன்னசாலையோடு மண்ணைப் பேர்த்தெடுத்து உயர்ந்த தேரினில் ஏற்றிவைத்து, விரைந்து வலிமையோடு கொண்டுபோக, அவ் வரக்கர் தலைவன் மனம் நடுங்க, சிறகைக் கடுக அடித்தடித்துப் பறந்துவந்து எதிர்த்த சடாயுவுக்கு மகனென்று மகிழ்ந்த தேவர்தம் பெருமாளே ; அறுகையும், பாம்பையும், தும்பைப்பூவையும் தரித்த அழித்தற்*கடவுளான சிவபெருமான், இதுவே உறுதி யென்று தெளிந்து, நாள் தோறும், மகிழ்ச்சியுள்ள உமா தேவியாருக்குச் செல்வம் உண்டாமாறு அறிவுறுத்தருளிய ஒப்பில்லாத நின் பேராகிய ராம வென்னும் இரண்டெழுத்துக்களை யுடைய திரு மந்திரத்தை உலகோர், மனதில் எந்நாளும் கொண்டு இடைவிடாது நினைத்து, நம்பிக்கையுடன், அழியாத செல்வத்தோடு கூடி வாழ்ந்து, மீண்டும் எல்லாப் பதவிகட்கும் மேலான திரு வைகுந்தத்தைச் சேர்ந்திருக்க, பாவியாகிய நான் நின்னால் உண்டாக்கப்படும் பெரிய வஞ்சகமுடைய மாயையினின்றும் நீங்காமல் பிறந்து பிறந்து யோனி வாயில் நெருக்குண்டு காயத்தைப் போன்ற தழும்பை யுடையவனாகி வருத்த மடைவேனோ ?

'மாயை யதனிடை யழுந்தி' என்றும் பாடம்.

தந்தன தான தந்த
தந்தன தான தந்த
தந்தன தான தந்த தனதான

101. செஞ்சுருப மேது விஞ்சு
நின்குணம தேது கொண்ட
திண்புகழ்க ளேது நின்று விளையாடும்
சிந்தைநிலை யேது பண்டுன்
மந்திரம தேது வந்து
செங்கைதொழு தேவ ணங்கும் வகையேது

வஞ்சகமி லாது கொண்டு
முன்புரிவ தேது கந்த
வந்தனைக ளேது பின்பு க்ருபையாய்நீ
வந்திடுவ தேது கண்டு
தந்திடுவ தேதெ தென்று
வம்பநெறி யேன்ம யங்கி விடலாமோ

வெஞ்சிறையி னாலறைந்து
மண்டுமொரு நாசி கொண்டு
மிண்டுகன தோள்பி ளந்தும் உகிராலே
வென்றுமிகு காது கொண்ட
குண்டலம றுவெ றிந்தும்
விஞ்சிரத நூறி யுங்கல் ஒளிவீசும்

அஞ்சிருகி ரீட முந்தி
யுங்கவச மார்பி டந்தும்
அங்கவச மாய ழிந்து நிருதேசன்
அஞ்சிவிட வேம லைந்த
வெஞ்சினச டாயு நெஞ்சில்
அன்புதவ றுத வெங்கள் பெருமாளே.

உரை :—இவ்வாறு 'நில்' என்றெதிர்த்த சடாயு, இராவணனைத் தன் கொடிய சிறகினால் அறைந்தும், மிக விரைவாகத் தன் ஒப்பற்ற அலகினால் பீறியும், திரண்ட தோள்களைப் பிளந்தும், கால் நகங்களினால் உடல் முழுவதையும் கிழித்தும் வென்று, அவன்றன் இருபது காதுகளிலும் இருந்த குண்டலங்கள் அறுந்து விழ எறிந்தும், உயர்ந்த தேரைப் பொடியாக்கியும், மணிகள் ஒளி வீசும் பத்து முடிகளையும் கீழே தள்ளியும், கவசந் தரித்த மார்பைப் பிளந்தும், துன்பப் படுத்துகின்ற போழ்து இராவணன் மெய் மறந்து மயங்கி வீழ்ந்து எழுந்து துணிவு கெட்டு, இனிப் பிழைக்கும் வழியில்லை யென்று அஞ்சுமாறு போர் புரிந்த, கொடுமையான கோபத்தையுடைய அச் சடாயுவின் உள்ளத்தில் அன்பு தவறாதிருந்த எங்கள் பெருமாளே ; நினது செவ்வையான வடிவ மெது ? எல்லாவற்றுக்கும் மேற்பட்ட நின்குண மெது? நீ செய்து கொண்ட உறுதியான புகழ் எது? நீ, நின்று விளையாடும் திருவுள்ளத்தின் நிலை யென்ன? அநாதியாய் உள்ள திருமந்திரம் என்ன ? நின் திருமுன் வந்து சிவந்த கைகளைக் குவித்து வணங்கும் முறை யென்ன ? வஞ்சமிலா அன்புடன் முன் செய்யும் பணி

விடைகள் என்ன ? நினக்கு மகிழ்ச்சிதரும் பூசைகள் எவை ? பின்னர், நீ கருணையோடு வருவது எவ்வாறு? நீ தருவது எது? இவற்றை யெல்லாம் பொய்யனாகிய நான் அறியேனாய் எந்நாளும் இப்படி மயங்கிவிடுவது ஆகுமோ ? இவற்றை நான் அறியுமாறு அருளவேண்டும்.

தானதன தனந்த தான
தானதன தனந்த தான
தானதன தனந்த தான தனதான

102. காசளவே யிருந்த போக
நாரியர்பால் மலர்ந்த காதல்
காயமென விரும்பு பாசம் இடமாகும்

காணியிலே கலந்த வாசம்
ஊணினிலே பொருந்து மாசை
காதலர்பால் நெருங்கு வாரம் அவமேபோம்

நேசமெலா மடங்க வேயுன்
மேனியிலே விளங்கு கோடு
நேமியிலே பரம்பி வீசு புகழ்மீதே

நீடுலகே ழளந்த தூய
தாள்மிசையே தினங்கு லாவி
நேரிலதோர் வைகுந்த மீதில் அடைவேனோ

தேசுடையாள் புலம்பல் தீர
வாளமரே புரிந்த போது
சேவகரா வணன்ற ளாடி உடல்சோரி

சேர்வுறவே மறிந்து காதல்
வார்குழைபா லடங்க வீறு
சீர்குலையா விசிந்த தூணி கணைவேறாய்

மாசிலைதான் முறிந்து நீடு
தேர்விடுவோன் மரிந்து வேறு
வாய்திறவா தமர்ந்து வீர விடையீசன்

வாளினைமே லெறிந்து போக
ஊழ்வினையால் விழுஞ்ச டாயு
மாமகவா ழியென்று கூறு பெருமாளே.

உரை :—ஒளியுள்ள வடிவ முடைய சீதா பிராட்டியார் அழுதலைத் தவிர்க்கச் சடாயு, எந்நாளும் விளங்கும் போரினைச் செய்த போது, வீர முள்ள இராவணன் தள்ளாடி உடம்பினின்றும் குருதி யொழுகத் தலை கீழாய் விழுந்து, காதில் குழையை யணிந்த சீதையின் மேல் வைத்த காதல் போய் ஒடுங்க விஞ்சிய பெருமை குலைந்து, முதுகில் இறுகக் கட்டிய அம்புக் கூடும் அம்புகளும் வேருகி, பெரிய விலலும் முறிந்து நீண்ட தேரை யோட்டும் பாகனும் இறக்க, வேறு பட்டு வாய் திறவாமல் மயங்கி உயிர்த்துப் பிறகு தெளிந்து, வீரமுள்ள விடை யேறும் சிவபெருமான் கொடுத்த வாளினைச் சடாயுவின் மேல் எறிந்து போக, முன்னை வினையால் சிறகு அறுபட்டுக் கீழே விழுந்த அச் சடாயுவின் பெருமை மிக்க மைந்தனே, சீராமசெயம் என்று வாழ்த்துக் கூறும் பெருமாளே ; காசின் கண் உள்ள இன்பமாகிய பற்றும், பெண்களிடம் தோன்றும் காதற்பற்றும், உடலின்கண் தோன்றும்பற்றும், இடமாகிய காணியிலே பொருந்தும் பற்றும், உணவில்சேரும் சுவைப்பற்றும், மைந்தர்பால் மிகுந்து தோன்றும் அன்பெனும்பற்றும், வீணிற் கெட்டுப் போகும். அப் பற்றுக்கள் அனைத்தையும் ஒருங்கு சேர்த்து, நின் திருமேனியில் விளங்கும் சங்கு சக்கரம், பரவும் ஒளி வீசும் நின் புகழ், நீண்ட எழுலுலகங்களையும் அளந்த தூய திருவடிகள் என்னும் இவற்றின் மேலும், எந்நாளும் நின் அடியார்களுடன் கூடிக் குலாவி யிருக்கும் வைகுந்தத்தின் மேலும் திரும்பாமல் வைத்து நிற்கப் பெறுவேனே ?

(காதில் வார்குழைபோ யடங்க என்றும் பாடம்).

தனத்தன தான தந்த
தனத்தன தான தந்த
தனத்தன தான தந்த தனதான

103. நடுத்தள ராது வண்டை
யகற்றுத லூரெ தென்றல்
நகைத்துரை யாடல் விஞ்சு சுனையாடி

நயத்தசொ லேவி ரும்பல்
களிற்றுறைவி ளுவ லந்தண்
நடைப்புன மீத ழுங்கல் வரையாய்தல்

இடத்தினி லூடல் பின்பு
புறத்தவ ளுதல் வண்டல்
இழைத்தலெ ளுவி ளங்கு துறைசேர

எடுத்துவ்ரு தாவில் வஞ்சர்
தமக்குயர் பாவ டங்க
இறைக்குமெ ஞவி லென்று வருவாயே

சடக்கென வோடி வந்து
ரதத்தின்மு னேயெ திர்ந்து
தசக்கிரி பாவ ணங்கை விடுபாரென்

சமர்த்தென வேம லைந்து
பிடித்தச டாயு நொந்து
தனித்தச டாயி ருந்த படியாலே

மடக்கொடி சீதை நின்று
தவித்திடும் போது முந்த
வளைத்திடு சாப முங்கொ டகலாதே

வழித்துணை போயி ரண்டு
விழித்துணை யாகி யந்த
மனத்துட னேந டந்த பெருமாளே.

உரை :—சீதா பிராட்டியாரின் குரலைக் கேட்டவுடன் விரைவாக ஓடி வந்து தேரின் முன்னே யெதிர்த்து, 'அடே, தசக்கிரீவா, தெய்வப்பெண்ணாகிய என் மருகியை விடாவிடில் என் திறமையைப் பார்' என்று கூறிப் போர்செய்து போகவொட்டால் அவனைப் பிடித்து, சிறகொடிந்து நொந்து யாருந் துணையில்லாமல் தனித்து அசடாய் இருந்ததனுல், மடம் என்னும் நல்லியல்பையுடைய பெண்ணாகிய பிராட்டி நின்று தவிக்கும்போது, முன்னேசென்ற மாய மானின் பின்னே போகும்போது வளைத்த வில்லும் அம்புங் கொண்டு விலகாமல் அவளுடைய வழிக்குத் துணையாகச் சென்று (அவளுடைய) இரு கண்களுக்கும் துணையாகி அழகிய மனத்துடன் உரு வெளித் தோற்றமாக நடந்த பெருமாளே; தலைவியின் இடை, குழலி விருக்கும் வண்டின் கனத்தால் தளர்ந்து ஒடியாதிருக்க வேண்டி அவ் வண்டினை யோட்டுதல், (வண்டோச்சி மருங்கணைதல்) உன் ஊர் எது என வினவுதல் (ஊர் வினுதல்) சிரித்துப் பேசுதல் (நகைத்துரையாடல்) நீர் நிறைந்த சுனையில் ஆடுதல் (சுனையாடல்) நற்சொல்லைக் கேட்க விரும்புதல் (நற்சொற் கேட்டல்) நான் எய்த யானையைக் கண்டீர்களோ வென வினுதல் (கெடுதி வினுதல்) தினைப்புனத்தில் முன்கண்ட பெண்ணைக் காணுது வருந்துதல் (வறுங்களம் நாடி மயங்கல்) மலையைச் சோதித்தல் (மலை நலத்தை ஆராய்தல்) கூடியவிடத்தில் பேசியவற்றை யெல்லாம் குற்றமாகக் கருதிக் கோபங்கொள்ளுதல், பொருளீட்டச் செல்லுதல், போன

வர் வருவாரோ வென்று கூடற்சுழி யிழைத்தல் (கூடலிழைத்தல்) குறி பார்த்தல் என்னும் அகப்பொருட் டுறைகள் எல்லாம் ஒன்றுசேர வரிசை யாய் வைத்துப் பயனற்ற பாட்டுகளைப் பாடி வஞ்சகர்மேல் இறைக்கும் சொற்களையுடைய என் நாவில் நீ என்று வருவாயோ?

தனதன தான தந்த
தனதன தான தந்த
தனதன தான தந்த தனதான

104. அடிபடி மேவி யங்கும்
விழியிமை யோபொ ருந்தும்
அணிமலர் வாடும் விஞ்சு கொடிதோள்மேல்
அடகுட னேவி ளங்கும்
இனிமன னேக லங்கல்
அமரர்த மாத ரன்று புவிமாதே
திடமென நாடி யன்பின்
மொழிகொள வேவி ரும்பு
தெளிவிமு ளைக முந்து பொருள்யாவும்
சிதைவற வேபு கன்று
கயவரை யேபு கழ்ந்து
திரியுமெ னுவி லென்று வருவாயோ
கடல்புடை சூழி லங்கை
நகருள சோகு கொண்ட
கடிபொழில் நீழ லின்கண் வினைமாதர்
கடுகிய காவ லுந்தன்
எளிமையும் ராவ ணன்செய்
கலகமு மாய்வ ருந்தி யுறைவாள்முன்
உடனக லாது வந்த
இளவலு நேய நெஞ்சும்
ஒளிமுக மூர லும்பொன் உடைவாளும்
ஒருதிரு நாம வம்பும்
வரிவிலு மாய்வி ளங்கும்
உருவெளி யாக நின்ற பெருமாளே.

உரை :—சடாயு போர்செய்து விழுந்த பின்னர், படை யில்லாதவ ளாய்ப் பிராட்டியைப் பன்னசாலை யுடனே தோ ளின் மேல் வைத்துக் கொண்டு விண்ணின் வழியாக இராவணன் போய், கடல் சூழ்ந்த இலங்கை நகருக்குள்ளே அசோக மரங்களால் இடங்கொள்ளப்பட்ட காவலையுடைய நிழலின்கண் வைக்க, பாவத்தின் வடிவமான அரக்கியரின் கொடிய காவலும் தன் எளிமையும் இராவணன் செய்யும் கலகமும் கொண்டுள்ள சீதையின் முன்னே, நின்னைவிட்டுப் பிரியாமல் வந்த தம் பியும், அன்புள்ள மனமும், விளங்கும் நின்முகமும், அழகிய திருவரையில் தரித்துள்ள வாளாகிய சமுதாடும், நின் திருப்பேரெழுதிய ஒப்பற்ற அம் பும், கணுவுடைய வில்லும் ஆகியவை விளங்க உருவெளியாக நின்ற பெரு மாள் ஆகிய நீ, ஒரு பெண்ணை ஒரு தலைவன் பொழிலிடத்தே கண்டு தெய்வ மகளென்று ஐயுற்று, பின்னர் உற்றுப்பார்த்து, இப் பெண்ணின் கால்கள் நிலத்தில் தோய்கின்றன ; கண்ணிமைகள் மூடிப் பொருந்து கின்றன ; மிக்கு வளர்ந்த பூங்கொடி போன்ற இவள் தோளிற் சூட்டி விளங்கும் பூமாலை வாடுகின்றது ; இம்மூன்று இலக்கணங்களும் தேவமக ளிர்க்கு இல்லை; இவை மக்களுக்குரியவள்; ஆதலின், நெஞ்சமே, இனிக் கவலாதே ; இவள் மானுட மகளே ; என்று தெளிந்து விருப்புற்று அவ ளோடு பேச விரும்பும் தெளிதல் என்னும் துறைமுதலாகிய பொருள்கள் அமையக் குற்றமற்ற மங்கலமொழியாற் பாடித் தாழ்ந்த மக்களை உயர்ந்த வர்களாகப் புகழ்ந்து கொண்டாடித் திரியும் என் நாவில் எப்போது வருவாயோ ?

தானன தனதன தந்த
தானன தனதன தந்த
தானன தனதன தந்த தனதான

105. ஆயிழை மகளிர்நெ ருங்கு
நேயமு மலரின்வி ளங்கும்
ஆயமும் மதுமலர்சிந்து பொழிலூடே
ஆடனு மவர்விழி யம்பும்
வாணகை நிலவும ணிந்த
ஆடையு மிடையுந டந்த நடைதானும்
வேயினு மழகுசி றந்த
தோள்களு மிளகியகொங்கை
மேருவு மிவையிவை நண்ப இனிநீபோய்

மீளுக குறிவழி யென்று
கூறிடு பொருள்முதல் வஞ்சர்
மேலுரை கொளுவொ டியம்பி யுழல்வேனே

சேயெனு மிளவல்பு ரிந்த
சாலையி னெடுமுனில் வந்த
தேரொடு மினிது துலங்கி அநியாயத்

தீயவ னிடுசிறை கண்டு
சாயலு மழகுமி ழுந்து
சீரையு மிடையும ருங்கு மெழில்கூரத்

தாயென மதியினு ணர்ந்து
வீடண னுதவும டந்தை
தானடி தொழுதுமி குந்த துணையாகித்

தாதளை யளிகள்பு லம்பு
சோலையி னடுவண மர்ந்த
சானகி நினைவிலி ருந்த பெருமாளே.

உரை :—மைந்தனென்று சொல்லத்தகும் தம்பியாகிய இலக்குவன் கட்டிய பன்னசாலையுடன், கண்முன் வந்த தேரோடும் அணியோடும் மகிழ்ந்து விளங்கி முறையல்லாதவற்றைச் செய்யும் இராவணன் இட்ட சிறையைக் கண்டு, சாயலும் அழகும் கைவிட்டு, மரவுரியும் அநுசூயை கொடுத்த ஆடையும் இறுகக் கட்டிய திருவரையும், திருமேனியும் அழகு மிகுதலால், இவள் உலகத் தாய் என்று தன் அறிவினால் தெளிந்து, விபீடணன் மகளாகிய திரிசடை, சீதாபிராட்டியாரின் திருவடிகளை வணங்கி, அன்புமிக்க துணையாகி யிருக்க, பூவினுள் இருக்கும் தாதுக்களில் அணையும் வண்டுகள் ஒலிக்கும் சோலையின் நடுவில் இருந்த சானகியின் நினைவில் தங்கி இருந்த பெருமாளே; (பாங்கனுக்குத் தலைவன், இயல் இடம் கூறல்) ஒரு தலைவன் தன் பாங்கனைக் கண்டு, 'நான் கூடிய பெண், மாற்றுயர்ந்த பொன்னாலும் மணிகளாலும் செய்யப்பட்ட அணிகலன்களை யணிந்தவள்; இடைவிடாமல் நெருங்க வைத்த அன்பும், அவளைப் போல் அழகும் குணமும் விளங்கும் தோழியர் கூட்டமும், தேன் ஒழுகும் பூக்களை யுடைய சோலைக்குள் அவள் விளையாடுவதும், அவளுடைய கண்ணாகிய அம்பும், ஒளி வீசும் பற்களின் சோதியும், அரையிற் கட்டிய நல்லாடையும், மூங்கிலினும் விஞ்சிய அழகுள்ள தோள்களும், இளைய நகில்கள் என்னும் மேருவும் ஆகிய இவைகள் இத்தகைய நல் இலக்கணங்களாக விருக்கும்; தோழா, இக் குறிவழியே நீ போய்ப் பார்த்து வா' என்று சொல்லப்பட்ட

பொருள்களையுடைய துறைகளை யெல்லாம், பொய்யர் மேல், இவ் வுரை யொடு பொருந்திய வகையோடு பாடிச் சுழன்று சுற்றுவேனோ?

(கொளு—கருத்துக்களை யறிவிக்கும் சொற்றொடர். 'இனிது துலங்கி' என்றதனால் அணியோடும் மகிழ்ந்து என்று உரை கூறப் பட்டது).

தனதன தனத்த
தனதன தனத்த
தனதன தனத்த தனதான

106. பகைஞரென நிற்கும்
அவர்களை மிகுத்த
படைகொடு துணித்துன் அடிசேரும்
பதவிபெ றவைப்பை
அடியரை யுமிக்க
பரகதி யினுய்ப்பை அதனாலுன்
மிகுபுகழ் துதித்தென்
அவமதி நினைத்து
விடவிட வுரைத்தென் அடியேனும்
வினையமொ டுபத்தி
புரியினு மவத்தில்
விழுகினு நன்முத்தி யருள்வாயே
மூகமது மறுத்து
மதிபல வுரைத்து
மூதலென் விலக்கி யதுகேளா
முதன்மையை நினைத்து
மனமது சலித்து
முறைமைவ ழிநிற்கு நெறிபோய்நீ
இகல்நிரு தர்துட்ட
விரகைய றிவுற்றும்
இளமயி லைவைத்து வரலாமோ
எனநனி யுரைத்து
நடைகொள்வ ழிமுற்ற
இளவலை வெறுத்த பெருமாளே*

உரை:-(இராமன் உயிர்ப்பால் இலக்குவனுக்குச் சொல்வது) 'மானைப் பிடிக்கப் போகையில், இது மாய மான்; உண்மையான மானன்று என்று என் முகத்தையும் மறுத்துத் தடுத்துப் பல அறிவுரைகளைக் கூறி, மாயங்களுக் கெல்லாம் இது முற்பட்ட தென்று நீ விலக்கவும் கேளாமல் மானைப் பிடிக்கப் போன என் குறிப்பு, முன் தேவர்களுக்கு நான் கூறியுள்ள பழைய முறையை நினைத்துச் செய்த தாகும்; இது தள்ளத் தக்க தன்று என்று மனம் சலித்துச் செய்யப்பட்டது; அதனால், தமையன் தம்பி யென்னும் முறை வழி நடக்கும் நெறியில் நீங்கி, நீ, அரக்கர் வஞ்சகத்தை நன்கறிந்திருந்தும், இளமை வாய்ந்த மயில் போன்ற சாயலுள்ள சீதையைத் தனியாக வைத்து வந்தது உன் அறிவுக்கு அடுக்குமோ?' என்று மிகுத்துச் சொல்லி, வரும் வழி முழுதும் தம்பியை வெறுத்த பெருமாளே; எதிரிகள் என்று பகைத்து நிற்பவர்களைப் பொல்லாத படைக்கலங்களால் அறுத்து நின் திருவடிகளை யடையும் சாயுச்சிய பதவியைப் பெற வைப்பாய்; நின் பால் அன்புள்ள அடியார்களையும், புகழ் மிக்க பரம பதத்தில் வைப்பாய்; அதனால் உன் புகழைப் போற்றித் துதிப்பதனு லென்ன? மிகக் கெட்ட அறிவோடு நினைத்து மனம் வெறுத்துப் பழித்துரைத்தா லென்ன? நினக்கு ஒரு தாழ்வுமில்லை; இவ்விரண்டும் உனக்கு ஒன்றே; ஆதலின், அடியேனும் வணக்கத்தோடு அன்பு செய்தாலும், அன்றிப் பாவச் செயல்களில் விழுந்தாலும் நல்ல வீடு பேற்றினை அருள்வாயாக.

தானன தனந்தன தந்தன தந்தன
தானன தனந்தன தந்தன தந்தன
தானன தனந்தன தந்தன தந்தன தனதான

107. தூதுகள் நடந்தது தொண்டுபு ரிந்தது
மாதரில் விழுந்தது கண்டது கொண்டது
சூதுகள் பயின்றது கெஞ்சியி ரந்தது பொருள்தேடத்
தூரவ ழிசென்றது நின்றறி ருந்தது
காமமு தல்வெம்புகை யின்கணை லேந்தது
சூழ்கிளை யமர்ந்தது கண்டுயில் மண்டிய தருநூல்கள்
ஓதியு யுணர்ந்தது நெஞ்சில்ம றந்தது
நோயொடு தளர்ந்தது வெம்பசி விஞ்சிய
தோலைகள் வரைந்தது மூன்றுமு யன்றது தவிராத
ஊழ்வினை வசங்களில் வெம்பிய லேந்தது
போதுமி னியுன்பர்வி ளங்குபெ ருங்குழு
ஊடும ருவும்படி சிந்தனை தந்திடில் அமையாதோ

காதலொ டுதம்பியி ரங்கிவ ருப்படி
வேகமொ டுசென் றுவ னங்கள்க டந்தெழு
கால்விசை யின்மூழ்ந்திமு னம்பயி லுந்தல மதுமேவிக்

காணரி யதுன்பம்வி ளைந்தமை கண்டுயிர்
வேறினி திருந்துபின் வந்துத னின்புறு
காயம துகண்டிடல் அன்றிவ ருந்துதல் எனமாழ்கி

மேதினி யிடந்ததும்வண்டலை தண்டலை
சாலையொ டுசென்றது மங்கிர தஞ்செல
வீதிப டுமண்சுவ டுந்தனி கண்டொரு தெளிவாகி

வேள்வியில் வருந்திரு மங்கையை முன்கொடு
போனதொ ருகண்டக னங்கவள் செங்கதிர்
மேனிதொ டவஞ்சின னென்பது ணர்ந்தருள் பெருமாளே.

உரை :—நீ, தம்பியை வெறுத்துக் கொண்டு வர, ஆசையுள்ள இலக்குவன் வருந்த, மிக்க வேகத்துடன் காடுகளைக் கடந்து, காலின் விசையால் பன்ன சாலையை அடைந்து, சீதா பிராட்டியாரைக் காண வரிதாகிய துன்பம் நேர்ந்ததை யறிந்து உயிர் வேருகுமாறு மூர்ச்சை யடைந்து, தம்பி தேற்றப் பின் தெளிந்து, 'என் திருமேனியைக் காண்பதன்றி உயிரைக் காணுமல் வருந்துதல் ஆயிற்'றென்று துன்பப் பட்டுப் பிறகு அவ்விடமெங்கும் பார்க்கும் போது, நிலத்தைப் பெயர்த் துள்ளதையும், வண்டுகள் அலைந்து தேனை யுண்ணும் பூக்களை யுடைய பஞ்சவடிச் சோலையிலிருந்த பன்னசாலை யோடு பிராட்டியார் சென்றதையும், தேர் சென்றதனுல் உண்டாகிய பள்ளம் நெடுகக் காணடலையும் ஓர்ந்து, ஒப்பற்ற திருவுள்ளத்தில் தெளிவு உண்டாகி, சனகன் வேள்வியிற் பிறந்த அப் பெண்ணைக் கொண்டு போனவன் ஒரு பாவி; அவன், அவளுடைய செஞ்ஞாயிறு போன்ற உடலைத் தொட அஞ்சினுன் என்பதை யறிந்தருளின பெருமாளே; என் உயிர், தூதுகள் நடந்ததும், அடிமைத் தொழில் செய்ததும், பெண்கள் மேல் காதலால் விழுந்ததும், கண்ணுற் கண்டவற்றைக் கையால் வாங்கியதும், சூதுகள் ஆடினதும், இரந்ததும், பொருள் தேடுவதற்குத் தொலைவில் சென்றதும், நின்றதும், இருந்ததும், காமம் முதலிய உட் பகைகள் ஆறினுலும் அலைந்ததும், சுற்றிய உறவினர்களோடு கூடி யிருந்ததும், மிகுதியாய்த் தூங்கினதும், அரிய கலைகளைக் கற்றதும், அவற்றை ஆய்ந்து தெளிந்ததும், அவற்றின் பொருள்களை மனதில் அமைத்து வைத்ததும், நோயால் மெலிந்ததும், கொடிய பசி விஞ்சியதும், நூல்களை ஓலைகளில் எழுதியதும், கவலையின்றி முயன்றதும், இவை

போன்ற பிறவும் செய்து பழைய வினைகளை நுகர்ந்தது போக எஞ்சி யுள்ளவற்றில் அகப்பட்டுத் தவித்துப் புழுங்கியது போதும், போதும்; இனி, நின் அடியார்கள் விளங்கும் கூட்டத்தினுள் நான் கூடியிருக்குமாறு வைத்தால் ஆகாதோ? சொல்லுக.

தனன தனதன தந்த தந்தன
தனன தனதன தந்த தந்தன
தனன தனதன தந்த தந்தன தனதான

108. வரிசை யறிகிலர் நண்பு பண்பிலர்
உரிமை செறிகிலர் முந்து தங்குடி
மரபை யுணர்கிலர் நன்றி யொன்றிலர் மனுநீதி

வழியில் வருகிலர் கண்டு பண்டுள
முறைமை நினைகிலர் நெஞ்சி ரங்கலர்
மதுர மொழியலர் இந்த வஞ்சரை நெகிழாதே

விரவு மருமகன் மைந்தன் முந்திய
தமைய னிளையவன் நம்பு நன்கிளை
வினவு சகலன்ம டந்தை தந்தையன் புறுபேரன்

விகட முறைமைக ளந்த முஞ்சொலி
உறவு புரியும சங்க தந்தனை
விடுவன் நினதருள் கொண்டு தொண்டரை அகலேனே

நெடிய படைகள ழிந்த ழுந்திய
சுவடு முழுதுந டந்து சென்றிடு
நெறியி லிடுகவ சந்து ணிந்ததும் அவனேவும்

நெடிய படைகள ழிந்த துண்டமும்
இலகு கொடியும ணிந்தி டுங்கலன்
நிரையும் அடுசிலை யுஞ்ச ரங்களும் அவண்யாவும்

இரவி யொளியில்வி ளங்கல் கண்டெதிர்
பொருத சதுரனெ வன்கொ லங்கினி
எளிது குறுகுத லென்று தென்றிசை கடிதேகி

எருவை யரசனை வந்த டைந்தபின்
அவன துயிர்விட வெந்தை யென்றழு
தினிய கடன்முழு தும்பு ரிந்தருள் பெருமாளே.

உரை :—அரக்கனது தேர் அழுந்திய இடம் முதல் அது நேரே ஓடிய சுவுட்டின் வழியே நடக்கும் போது, வழியில், மார்பில் அணியும் கவசம் துண்டிக்கப்பட்டுக் கிடந்ததும், அவன் செலுத்தும் வில் முதற் படைகள் அழிந்து கிடந்த துண்டங்களும், விளங்கும் கொடியும், அணிகலன்களும், அவ்விடத்தெல்லாம் விழுந்து பகலவன் ஒளி விளங்குவதுபோல் கிடக்கக் கண்டு, இப்படி அரக்கரோடு எதிர்த்துப் போராடிய சமர்த்தன் எவனோ? அவ்விடம் அண்மையில் இருத்தலால் எளிதிற் சேரலாமென்று தம்பிக்குச் சொல்லி, தென் திசைக்கு விரைந்து போய்க் கழுகரசான சடாயுவினிடம் வந்து சேர்ந்தபோது அஃது இறக்க, அழுது, தந்தைக்குச் செய்யும் ஈமக் கடன் முதலியவற்றை முறைப்படி செய்து முடித்தருளிய பெருமாளே; நட்பில்லாதவர்; குணமற்றவர்; உரிமையோடு நெருங்கி யிராதவர்; பழய தங்கள் குலத்தியல்பை அறியாதவர்; இரக்கமற்றவர்; இன்சொற் பேசாதவர்; (பொருந்தாத வரிசைகளை யறிந்து, பகைத்துக் குணங் கெட்டு, ஒருவர்க்கொருவர் வேறு பட்டுக் குலத்தின் நெறி கெட்டு, கொடுமை மிக்க சொற்களைப் பேசும் இயல்புடையர்) ஆகிய வஞ்சகரைத் தள்ளிவிடாமல், அவர்களை உறவு கலந்த மருமகன், மகன், முன் பிறந்தோன், இளைய தம்பி, நம்பன், நல்லுறவினன், ஒரு குடியிலே பெண்ணைமணந்த சகலன், மனைவியைப் பெற்ற மாமன், அன்பு மிக்க பேரன், என்னும் வேறு வேறான அளவில்லாத முறைகளைச் சொல்லி, உறவு செய்யும் அகங்காரத்தை நின் அருளைக் கொண்டு இனி விட்டு விடுவேன்; நின் அடியாரோடு உறவு கொண்டு விலகாமல் இருப்பேன்.

('நெடிய படைகள்' வில்லும் அம்பும் நீங்கலாக உள்ள பிற என்க).

தனதனன தந்த தந்த
தனதனன தந்த தந்த
தனதனன தந்த தந்த தனதான

109. கரகமல முங்கு விந்து
விழிபுனல ரும்பி நின்று
கசிவுறும னங்நெ ளிந்து புனலோடே
கடிமலர்க ளுஞ்சொ ரிந்து
செயசெயவ ரங்க ரங்க
கருணைசெய்மு குந்த வென்று புகழ்பாடித்
தெரிவரிய நண்பி னன்பர்
பணிவிடையு கந்து கொண்டு
திரளிவிடி யுண்டு மண்டி யுயர்கோலத்

திடமுளபு யங்க துங்க
அணையருக டைந்து வந்து
திருவடிவ ணங்க வென்று பெறுவேனே

அரியதொரு தந்தை பொன்ற
விதனமொட கன்று கங்குல்
அதனிடைவி ரும்பு கின்ற புனருவென்

றருள்செயந டந்து சென்ற
வனமிசைதொ டர்ந்து வஞ்ச
அயமுகியை வென்று பின்பு வருபோதில்

எரியெனவெ குண்டெ திர்ந்த
விரகியுயிர் உண்ப தன்றி
இனியநெறி நின்று துண்ட மொருவாளால்

வசைபடவ ரிந்து வந்த
முதன்மைய து கண்டு வென்றி
இளவலைவி யந்து நின்ற பெருமாளே.

உரை :—உரிமை யுள்ள ஒப்பற்ற தந்தை யாகிய சடாயு இறந்ததால் உண்டாகிய துன்பத்தோடு தெற்கே நடந்து போகையில், இருள் மிக்க ஓரிரவில் உனக்கு நீர் வேட்கை யுண்டாக, 'அது தணித்தற்கு நீர்கொணர்க' வென்று இலக்குவற்கு நீ அருளிச் செய்ய, அதற்கு இலக்குவன் சென்ற காட்டில், அவனைத் தொடர்ந்து வந்த வஞ்சகியாகிய அயோமுகி என்னும் அரக்கியை வெறுத்துத் தள்ளி வரும் போது, நெய்யால் வளர்க்கப்பட்ட நெருப்பைப் போல் அவள் உருத்து வர, இவளைக் கொன்றால் நூல்களிற் சொல்லப்பட்ட பெண் பழியாகு மென்று அவன் கருதி, ஒப்பற்ற தன் வாளினால், தனக்குப் புகழ் உண்டாக அவ் வரக்கியின் மூக்கை யறுத்து எறிந்து வந்த தலைமையைக் கண்டு அவன் வீரத்திற்கு வியந்து மகிழ்ந்தனை, பெருமாளே; தாமரை மலர் போன்ற என்னிரு கைகளையும் குவித்து வணங்கி, அதுவோ ? இதுவோ ? பரம் பொருள் என்று ஐயப் படாமல் நீயே முதல்வ னென்று என் மனத்தை ஒருமிக்கச் செய்து, மகிழ்ச்சியால் கண்ணீர் பெருக நின்று, கவலை நிறைந்த மனந் தெளிந்து, திருமஞ்சன நீரோடு மண மிக்க பூக்களையுஞ் சொரிந்து, திருவரங்கத்தில் அமர்ந்த அரங்கா, முகுந்தா, வாழ்க, எனக்கருள் செய்ய வேண்டும் என்று நின் புகழைப் பாடி, தெரிய அருமையான நின் அடியார்களுடன் கூடி அவர்கட்குத் தொண்டுகள் செய்து, நின்னை வணங்க வந்த திரளிலே நெருக்கி மிடிபட்டு ஓடி வந்து, உயர்ந்த திருக் கோயிலில், உண்மையான ஆதி

சேடனது திருமேனி யாகிய படுக்கையின் அருகில் நின்று நின் திருவடி களை என்று வணங்கப் பெறுவேனோ?

தனதன தான தான தந்த
தனதன தான தான தந்த
தனதன தான தான தந்த தனதான

110. அமரர்க ளாவ ரோவு யர்ந்த
முனிவர்க ளாவ ரோவி ளங்கும்
அரசர்க ளாவ ரோபொ ருந்து திசைகாவல்

அநுபவ ராவ ரோப்ர சண்ட
ரவிசசி யாவ ரோக்ர கங்கள்
அவரவ ராவ ரோவ தன்றி மலைவாழும்

உமையிறை யாவ ரோம லர்ந்த
சதுமுக னாவ ரோவு கந்த
உன துரு வாவ ரோக டந்த விடமாகும்

ஒளிமய மாவ ரோநி னைந்து
ரகுகுல ராம ராம வென்றுள்
உருகவ லார்கள் பேரி யம்ப எளிதாமோ

கமையறு மாய ரூப வஞ்சி
மருவுறு காடு தான கன்ற
கடைவழி யாக மாக வந்த னுயிர்யாவும்

கரமது கோலி யேவ ளைந்த
அளவினி லோடி யேபு குந்து
கழியவொ ணாது நேர றிந்து பிலமேவும்

யமபுர வாச லோவி தென்கொல்
நெடுமதிள் வாயி லோவி தென்கொல்
இவளவி லான தோச கங்கள் முடிவோவென்

றெமதுயிர் பார மோம்ரு கங்கள்
மடிவது பாரெ னாவி ரங்கி
இளவலொ டேவி னாவி நின்ற பெருமாளே.

உரை :—பொறுமை யில்லாத மாய வடிவமான அயோமுகி யிருக்கும் காட்டைக் கடந்து முடிந்த வழியில், பெரிய உடலும் வயிற்றில் தலையும்

கொண்ட கவந்த னென்னும் அரக்கன், அங்குள்ள எல்லா உயிர்களையும் தன் கையை வளைத்துச் சுற்றி, அவை தப்பிப் போகாதவாறு அகப்படுத்திய அவ் வியல்பினை நீ பார்த்து, இது, 'பாதாளத்தி லிருக்கும் யமன் நகரத்துக் கோட்டை வாயிலோ ? எல்லா உலகங்களும் இவ் வளவில் ஆயினவோ ? அன்றி உலகங்க ளழியும் ஊழிக் காலமோ ?' என்றும், 'நம்முயிர் உலகுக்குப் பாரமோ ? இந்தச் சுற்றுக்குள் அகப்பட்ட விலங்குகள் இறக்குலைப் பார்' என்றும் மன வருத்தம் கொண்டு தம்பியினோடு கேட்டு நின்ற பெருமையுடையை பெருமானே ; நின்னை நினைப்பவர்கள், தேவர்கள் ஆவார்களோ? எல்லாரும் புகழும் முனிவர்கள் ஆவார்களோ ? புகழால் விளங்கும் அரசர்க ளாவார்களோ ? கீழ்த் திசையிலிருக்கும் இந்திரனாவார்களோ ? மற்றைய திசைக் காவலர் ஆவார்களோ ? ஒளி மிக்க கதிரவனும் மதியும் ஆவார்களோ ? கயிலை வாழும் உமையின் நாயகராகிய சிவபெருமா னாவார்களோ ? தாமரையில் விளங்கும் நான்முக னாவார்களோ ? ஆநந்தமான நின் திருவுரு வாவார்களோ ? இவற்றைக் கடந்த இடமாகிற சோதிமய மாவார்களோ ? ரகுகுல நாயகா, ராமா, ராமா வென்று அன்பினால் மனங் களித்து உருகவல்ல நின் அடியார் பெறும் பேற்றினை இன்ன தென்று சொல்லல் எளிதாமோ ? ஆகாது.

தனதன தந்த தந்த
தனதன தந்த தந்த
தனதன தந்த தந்த தனதான

111\. மதியொரு துண்ட னென்றும்
நிலமகன் மிண்ட னென்றும்
வருபுதன் வஞ்ச னென்றும் வினையாவான்

மகபதி மந்த்ரி யென்றும்
உயர்கவி வம்ப னென்றும்
மருவலன் மைந்த னென்றும் மிகுநாகம்

விதனமுன்வ ழுங்கு மென்றும்
இரவி[1]த ளம்ப னென்றும்
விரவுதி னங்கண் முந்தி வருராசி

விபரித மென்று மிந்த
விதியினை நொந்த ழுந்தி
மெலிவுறி லெங்கள் தொண்டர் நகையாரோ

(பி - ம்) 1. தளும்ப.

கதறிய தந்தி சிங்கம்
இனையவி லங்கி னங்கள்
கடலின்மு ழுங்க வெங்கை யதனாலே

கடுகவ ளைந்து நுங்கும்
ஒருசெயல் கண்டு நின்று
கருதியி தென்கொ லென்று நினைபோதில்

உதறியெ ழுந்து முந்தி
அறிகுவ னென்ற தம்பி
ஒருவனை யும்பி ணங்கி உடைவாளால்

உபயபு யங்க ளைந்து
முடுகிவ ருங்க வந்தன்
உயிர்பரு குந்தெய் வங்கள் பெருமானே.

உரை :—கவந்தன், தன் கைகளுக்குள் அகப்பட்டுக் கதறும் யானை, சிங்கம் ஆகிய விலங்குகளின் கூட்டங்கள் கடல்போல் ஒலிக்குமாறு கைகளால் வளைத்து விழுங்கும் ஒப்பில்லாத கொலைத்தொழிலைக் கண்டு, மதித்து இஃதென்னவோ வென்று நீ, நினைத்து நின்ற போழ்து, இலக்குவன், இஃதோர் எண்ணமாமோ? நான் முன்னர்ச் சென்றறிவேன் என்று சொல்ல, அவனோடு பிணங்கி, உடைவாளினாலே, அக் கவந்தனது இரண்டு தோள்களையும் வெட்டிய போது, நின்னை யெதிர்த்த அவன் உயிரை மாய்த்து நின்றனை, தேவர் பெருமானே ; துன்பம் வந்தபோது, சந்திரன் ஒரு கொடியன் என்றும், நிலத்தின் மகனாகிய செவ்வாய் மிடுக்குடைய னென்றும், வரும் புதன் வஞ்சனென்றும், வேள்வித் தலைவனான இந்திரனுக்கு அமைச்சாகிய வியாழன் பாவியென்றும், புகழ்பெற்ற சுக்கிரன் பொல்லாதவனென்றும், சனி பகைவ னென்றும், இராகு கேதுக்களாகிய பாம்புகள் இரண்டும் கவலையைத் தருவன வென்றும், சூரியன் கொடுமை செய்பவ னென்றும், இக் கோள்கள் கூடிக் கலந்துவரும் நாள் முதலாக வரும் இராசிகள் விபரீத முடையன வென்றும், இங்ஙனம் சோதிட நூலில் கூறப்பட்ட கோள்கள் நாள்கள், இராசிகள் என்னும் விதியை நினைத்து நினைத்து, நெஞ்சம் புண்ணாகி, நொந்து, அழுது மெலிந்திருந்தால், எங்களைப்போன்ற நின் அடியார்கள் நகைக்கமாட்டார்களோ? எவையும் நின் செயலென் றெண்ணாமல், கோளின் இயக்கத்தால் விளையும் செயலென்று கொள்ளும் எங்களைக் கண்டு நகைக்காமல் வேறென் செய்வர்?

தளம்பன்—கொடுமை செய்பவன்.

தனத னத்தன தந்தன தந்தன
தனத னதத்ன தந்தன தந்தன
தனத னதத்ன தந்தன தந்தன தனதான

112. தெனத னத்தென தெந்தன தெந்தன
வெனா டாத்துப்ர பந்தமு மின்புறு
செழுமை யேற்றபெ ருங்கவி யுங்கொடு புகழோதித்
தினமி ராப்பகல் வந்திரு பங்கய
சரண மேத்தவ ரம்பல தந்தனை [னும்
சிறுமை போக்கினை தொண்டது கொண்டனை இனிமே
புனித நாட்டினு யர்ந்தவை குந்தமும்
அடிய னேற்குவ ழங்குவை யிங்கொரு
புலவ னுக்கினை யிந்தவ ரந்தனை அறியாதே
புலமை வாழ்க்கைநி னைந்திடு சிந்தையை
இனிது மாற்றியு னன்பரொ டன்பொடு
பொழுது நாட்கள்க ழிந்திட நின்பதம் அருள்வாயே
வனமு லாத்துக வந்தன்ம டிந்தபின்
அமரர் போற்சொரு பங்கொடு நின்றெதிர்
மலர்கள் தூற்றிவ ணங்கிம கிழ்ந்துநல் இசைபாடி
மனித வாழ்க்கையு கந்தனை சுந்தர
ரகுகு லோத்தம வென்றுபு கழ்ந்தபின்
வழிகள் காட்டிய கன்றிட வெஞ்சுரம் நெடிதேகித்
தனுவு மேற்றச ரங்களும் வண்கையும்
இளவல் போற்றுப தங்களு முன்பிரி
சனகி யாற்றளர் சிந்தையு முந்திய நெடுமாலும்
தரும மூர்த்தமெ னும்படி யஞ்சன
வடிவ மாக்ருபை கொண்டுந டந்தொரு
சபரி யாச்சிர மந்தனில் வந்துறை பெருமாளே.

உரை :—காட்டில் திரியும் கவந்தன், இறந்தபின் தேவவடிவம் பெற்று நின் எதிரில் நின்று பூக்களைச் சிதறி வணங்கி மிக்க மகிழ்ச்சி யடைந்து நல்ல உன் புகழ்களைப் பாடி 'மானிடவடித்தை மகிழ்ந்தேற்றரு ளிய அழகனே, ரகுவம்சத்திற் பிறந்து சிறந்தவனே,' என்று போற்றிய பின், சபரியிருக்கும் இடத்திற்குப் போகுமாறு உனக்குச் சொல்லி, வழி

காட்டிச் சென்றபின், அவன் காட்டிய வழியைப்பற்றி வெப்பம் மிகுந்த பாலை நிலத்தில் நெடுந்தூரம் சென்று, சிலையும், அதற்கேற்ற அம்புகளும், சேர்ந்துள்ள வளம்பெற்ற திருக்கைகளும், தம்பியாற் றொழப்படும் திரு வடிகளும், முன் பிரிந்த சீதாபிராட்டியார் காரணமாகத் தைரியம் நீங்கித் தளர்ந்த மனமும், எழுந்து வளரும் மையலும், அறத்தின் வடிவென்னும் நீல நிறமும் பெற்று அருள்கொண்டு நடந்து ஒப்பற் றிருக்கும் சபரியின் ஆச்சிரமத்தில் வந்து தங்கியிருந்தனை, பெருமாளே; தென தெனத் தென தெந்தென தெந்தென வென்னும் சந்தத்துடன் இயலும் பிரபந்தமும், அதற்கு இன்பமாகச் செழித்து இயைந்த பெரிய பாட்டுக்களும் கொண்டு, நின் புகழைப் பாடி நாடோறும் இரவும் பகலும் நின் இரு தாமரைமலர் களைப் போன்ற திருவடிகளைத் தொழுது வணங்க எனக்கு வரம் தந்தனை; என் தீ யொழுக்கத்தைப் போக்கினை; என்னை அடிமையாகக் கொண் டாய்; இம் மட்டில் நில்லாமல் வேறு என்ன தரவேண்டும்? என்னில், இமையவர் உலகங்களுக் கெல்லாம் உயர்ந்த வைகுந்தத்தையும் அடிய னேற்கு அருள்வாய்; இவற்றின் காரணமாக என்னைப் புலவனுக்கினை; அவ் வரத்தை அடியேன் இதுவரை அறியாமல் இருந்தேன்; ஐம்புலன் களால் நுகரும் வாழ்க்கையை யின்பமெனக் கொள்ளும் என் நெஞ்சம், இனி அவைகளின் வழியிற் போக வொட்டாமல் விலக்கி, நின் அடியா ரோடு கூட்டி, இன்பத்தோடு நாட்களைக் கழிப்பித்து, முடிவில் நின் திருவடிகளை அடியேன் அடையச் செய்வாய்.

தனதத்த தானன தத்தன தானந்
தனதத்த தானன தத்தன தானந்
தனதத்த தானன தத்தன தானத் தனதான

113. பருமுத்து மாலையு றைக்கவு மார்பங்
குழியப்ப டாமுலை தைக்கவு மாரன்
படையொத்த பார்வைசி வக்கவு மீரந் தருகோவைப்

பழமொத்த வாய்முன்வி ளர்க்கவு மானந்
தலைகெட்டு மேனிது வட்சிய தாய்வெண்
பளிதத்து வாசம ணக்கவு நீடுந் துகில்வேறய்

உரமொக்க வேதழு விக்கொடு மாமங்
கையர்சித்ர மாகல விக்கட லூடங்
கொருமித்த பாவிம னத்துவி காரங் கெடவேயுன்

உபயச்ச ரோருக பொற்பத மீதென்
தலைவைக்கு மாறுதி ருத்திமு னேநின்
றெருபுத்தி நீயரு ளிச்செய நானும் பெறுவேனோ

கருமத்து வாசவ னிற்பெறு சாபந்
தனையுற்று மோகினி யொப்பென லாகுங்
கவினிற்கு லாவிவ னடத்திடை யேவந் திருபோதும்

கருதுற்று நாடிர தித்ததெ லாமெங்
குரிசிற்கெ னுமுனம் வைத்தவை யாவும்
கமலக்க ணுகொளெ னத்தரு போதின் பரிவாகித்

தருமத்தை நாடுமி லக்குவ னுகும்
ப்ரமையுற்று வேறுநி னைத்திட வேவெண்
டரளத்தின் வீறிய பற்குறி யேகொண் டமுதூறுந்

தனியெச்சி லானக னித்திர ளேதும்
பிரியத்தி னேடுபு சித்துட னேவண்
சபரிக்கு வீடுகொ டுத்தவ னேநம் பெருமாளே.

உரை :—முன்காலத்தில் ஒரு செயலினுல் தேவேந்திரனுற் பெற்ற சாபமடைந்து, அமிர்தம் பங்கிட்ட மோகினிக்கு ஒப்பென்று சொல்லத் தக்க அழகோடு ஆச்சிரமத்தில் குலவியிருந்து இரவு பகல் ஆகிய இரு வேளைகளிலும் காட்டில் வந்து இனிமையுடைய பொருள் எதுவோ அத னைத்தேடி, அகப்பட்டதைக் கடித்துப்பார்த்து இனிமையுடைய தெல்லாம் எங்கள் பெருமானுக் கென்று சேர்த்து வைத்திருந்து அவைகளை யெல்லாம் நின் திருமுன் வைத்து, 'தாமரை மலர்போன்ற கண்களை யுடைய பெரு மாளே; உட்கொளல் வேண்டு'மென்று சபரி எடுத்துக்கொடுக்கும் போதில் அருள் மிகுந்து, நீ உன் குலதர்மத்தை நினைத்து இருக்க, இலக்குவன் உன் னைப்போல நினையாமல் எச்சிலென்று மயங்கி நிற்க, வெண்ணிறமான முத்துப்போன்ற நிறமுள்ள அவள் பற்கள் அழுந்திய குறியையுடைய ஒப் பற்ற எச்சிலான பழக்குவியல்களை அன்புடன் அருந்தி, உடனே அவ ளுக்கு வீடுபே றளித்த அரங்கநாதப் பெருமாளே; (பெண்களின் கலவியில் பருத்த முத்துமாலை யுறுத்தவும், மார்புகுழையப் போர்வை போர்த்த தனங் கள் தைக்கவும், மதவேளின் அம்பாகிய நீலோற்பல மலரையொத்த கண்கள் சிவக்கவும், குளிர்ந்த கொவ்வைப் பழம்போற் சிவந்த வாய் வெளுக்கவும், வெட்கம் இன்றி உடம்பு துவளவும், வெண்ணிறமுடைய கருப்பூரத்தின் மணம் வீசவும், அரையிற் கட்டிய புடைவை நெகிழ்ந்து வேருகவும், மார்போடு மார்பு அழுந்தப் புல்லும், பெரிய பெண்களின்

அழகிய இன்பமான கலவிக் கடலில் ஒருமைப்பட்ட பாவியாகிய அடியேன் மனத்தி லுண்டான மையல் போக, மலர்போன்ற நின் இரு திருவடிகளின் மேல் என் தலையை வைக்குமாறு, என் மனக்கோட்டத்தைத் திருத்திச் செவ்வையாக்கி, என் முன்னே நின்று நீ, எனக்கு ஒப்பற்ற மெய்யறிவை அருளும் பேற்றினைப் பெறுவேனோ?

தந்தான தந்த தந்த
தந்தான தந்த தந்த
தந்தான தந்த தந்த தனதான

114. நம்பால்வா வென்று பெண்கள்
தம்பாழ்வீ டும்பு குந்து
நஞ்சேயார் கண்கள் கொண்டு சமராடி
நந்தாமோ கம்பு ரிந்து
பொன்காசே துங்க வர்ந்து
நண்பாய்வீழ் கின்ற பின்பு மதியாதே
வம்பாமா யங்கள் கண்ட
துண்டாலோ பம்பொ ருந்து
வன்கூளா வென்றி கழ்ந்து விடநாளும்
மங்காதே கண்ட றிந்தும்
அங்கேபோ கின்ற சிந்தை
வந்தேதா னின்ப தங்கள் அடையதோ
வெம்பாதே யன்பு கொண்ட
நம்பிநீ யிந்த வெந்த
வெங்கானே வின்ற லைந்து திரிவாயுன்
மிண்டாலே வந்த தென்றும்
என்கூர்பா வங்க ளென்றும்
விஞ்சாநீ ணெஞ்சு நொந்து நெடிதேகிப்
பம்பாமே கந்த வழ்ந்த
கொங்காரா மங்கள் கண்டு
பண்போடே நின்று கந்து அருளோதிப்
பைந்தார்மா மங்கை சென்ற
திங்கேயோ வென்ற கன்ற
பம்பாதீ ரம்பு குந்த பெருமாளே.

உரை :—சபரி யாச்சிரமத்தை விட்டுப் போகிற போது இலக்குவனை நோக்கி, 'கன்றுது அன்புகொண்ட தம்பி, நெருப்பால் வெந்து உள்ளே வெப்பம் நிறைந்த இக் கொடிய காட்டிலா நீ யலைந்து திரிவது? இத் துன்பம் உன் செருக்கினுல் வந்த தென்றும், என் பாவ விளைவென்றும்,' அறிவால் மேம்பட்ட மனம் நொந்து சொல்லிக்கொண்டு நெடுந்தொலைவு சென்று, நெருங்கிப் பரந்த மேகந் தவழப்பட்டு, பூந்துகள் நிறைந்து மலர்ந்த சோலைகளைக் கண்டு, நல்லியல்போடு நின்று, மகிழ்ந்து பம்பை யாற்றினையும், அதனருகில் உள்ள சோலையையும் கண்டு, நீ முன் இருந்த கோதாவரி யாற்றையும், பஞ்சவடிச் சோலையையும் நினைவு கூர்ந்து, "சுருண்டு மடிந்த கூந்தலை யுடையவளும் பச்சென்ற பூமாலை யணிந்தவளும் சிறப்புள்ளவளும் ஆகிய சீதை போனது ஈங்கேயோ"? (மற்றொரு பொருள் : ஆறும் சோலையும் கண்டு இங்கிருக்க வேண்டுமென்று முகில் கிட்ட வந்ததோ வென்று மகிழ்ந்து நின்று 'சீதைபோன திங்கேயோ') என்று அகன்ற பம்பை நதிக் கரையிலே வந்து சேர்ந்த பெருமாளே; விலைமாதர்கள், காமுகரைத் தம்பால் அழைத்துக்கொண்டு, தங்கள் பாழ்வீட்டிற் புகுந்து, நஞ்சூட்டிய வேல், வாள் என்னும் கண்களாற் போர்செய்து, அழிவைத் தரும் காதலை யுண்டாக்கிப் பொன், மணிகள் எல்லாவற்றையும் கவர்ந்துகொண்டு, நட்பாகி வீழ்ந்து, பொருளைப் பறித்தபின், அவர்களை முன்போல் மதியாமல், பொய்யர் என்றும், மாயமுள்ள வஞ்சகம் செய்து கைவந்தவர்கள் என்றும், கயவர் என்றும், உலோபிகள் என்றும் இகழ்ந்து தள்ளிவிடும் இயல்புள்ளவர்கள்; ஒளி மழுங்கும் அவர்கள் தன்மை யறிந்து வைத்தும், மீண்டும் அங்குச் செல்லும் என் மனம் திரும்பிவந்து நின் திருவடிகளை யடையாதோ?

ஆரணிய காண்டம் முற்றும்.

ஸ்ரீ:

# 4. கிட்கிந்தா காண்டம்.

தந்த தாத்தன தானன தந்தன
தந்த தாத்தன தானன தந்தன
தந்த தாத்தன தனான தந்தன தனதான

115. தந்தி மேற்கொடு சாமரை யின்சிறு
தென்றல் மேற்பட மோகம டந்தையர்
தங்க ணூற்பொர நீழலி டுங்குடை நீலவினச்
சங்க மார்த்தெழ மாரனெ னும்படி
வன்ப ராக்ரம மாநகை யின்சொல்க
டந்து லாத்திய ராசத சம்ப்ரம முடையோர்தாம்

கந்தை போர்த்துமெய் வாடிந டந்தடி
நொந்து தேய்ப்புற வோடுக ரங்கொடு
கஞ்சி வார்ப்பவ ராரென நின்றிடு அநியாயம்
கண்டு கேட்டுமொ ரோர்தெளி வின்றிய
வஞ்ச மூர்க்கவ்ரு தாமன மன்பொடு
கங்கை தேக்கிய சேவடி சந்ததம் நினையாதே

எந்தை காட்டினின் மேவிய கன்றனை
நெஞ்சு வாட்டிய சானகி கண்களை
இன்று காட்டினை சேல்கொடு மென்களம் வளையாலி
தென்று காட்டினை வார்சுழி யுந்தியும்
இன்று காட்டினை பாவித னங்களி
ரண்டு காட்டினை வாண்முகை யின்புது மலரோதிப்

பந்தி காட்டினை பாசிபொ லிந்திரு
கொங்கை காட்டினை தாமரை கொண்டுப
தங்கள் காட்டினை யாமைகொ டிங்கினி இவைபோலே

பண்பு காட்டிய ரூபம படங்களும்
என்று காட்டுவை நீயினி யென்றொரு
பம்பை யாற்றொடு கூறியி ரங்கிய பெருமாளே.

உரை :—எங்கள் தந்தை யனுப்பிய காட்டில் தானும் வந்திருந்து (எங்கள் தந்தையாகிய சடாயு இருக்கும் காட்டில் என்னுடன் வந்திருந்து,) பிறகு என்னைப் பிரிந்து, என் உள்ளத்தை வாடச்செய்த சனகன் மகளுடைய கண்களை இரண்டு சேல்களைக் கொண்டு காட்டினாய்; அவள் மெல்லிய கழுத்தைச் சங்கினாற் காட்டினாய்; அவள் திருவுந்தியை ஓடிச் சுழிந்த சுழியாற் காட்டினாய்; எனக்குப் பிரிவுத் துன்பத்தைத் தந்த அப் பாவியின் தனங்கள் இரண்டையும் சிவந்த தாமரை யரும்புகளாற் காட்டினாய்; பொலிவுள்ள அவள் இரு கைகளையும் தாமரை மலர்களைக் கொண்டு காட்டினாய்; அவள் கூந்தலைப் பாசியாற் காட்டினாய்; அவள் கால்களை ஆமையாற் காட்டினாய்; இவ்வாறு அவள் உறுப்புக்களைத் தனித் தனியாகக் காட்டிய நீ, அவள் வடிவ மெல்லாவற்றையும் ஒரு சேர என்று காட்டுவாயோ? என்று பம்பை யாற்றொடு கூடிப் புலம்பிய பெருமாளே; யானைமே லேறிக்கொண்டு இரண்டு வெண் சாமரைகளால் வரும் தென்றல் காற்று மேற்படவும், காதற் பெண்களின் கண்களாகிய அம்பு மார்பைத் துளைக்கவும், மேல் நிழலிடுமாறு பிடிக்கப்பட்ட வெண்குடை முழு மதிபோல் ஒளிவிடவும், வலம்புரிச் சங்குகள் ஒலித்தெழவும், மன்மதனைப் போல வளமை மிக்க வீரத்துடன் சிரித்து இன்பமான சொற்களைப் பேசி உலாவரும் அரசப் பெருமிதத்தை யுடைய பேர்கள், இவை யெல்லாம் இழந்து, கந்தையைப் போர்த்து உடல் வாடியும், கால்கள் நடந்து நடந்து தேய்ந்தும், கையில் ஓடெடுத்துக் கொண்டு கஞ்சியேனும் வார்ப்பவர் உளரோ? வென்று நிற்கும் முறையில்லா நிலையைக் கண்ணுற் கண்டும், கேட்டும், ஒரு தெளிவு மற்றிருக்கும் கடுஞ்சினமுடைய என் பயனற்ற மனம், கங்கையாறு நிறைந்து பெருகிய நின் செந்நிறமுடைய திருவடிகளை எந்நாளும் அன்புடன் நினையாதோ? சொல்லுக.

தத்தனன தத்தந்த தனதாத்த தாதத்த
தத்தனன தத்தந்த தனதாத்த தாதத்த
தத்தனன தத்தந்த தனதாத்த தாதாத்த தனதான

116. மைப்படுகு முற்கொண்டை மலர்சூட்ட வோவட்ட
மிட்டநுத லிற்கொண்ட வெயர்வாற்ற வோகட்டு
வச்ரமணி யைக்கொங்கை மிசைபூட்ட வோரந்து
மிருதோளின்

மட்டுகொடி யைப்பந்தி யொடுதீட்ட வோவெய்த்த
சிற்றிடைத னக்கின்று கலைசாத்த வோசுற்று
மைக்கொடுவ ளைத்தங்கண் எழில்பார்க்க வோசித்த
முருகாதே

துப்புறழ்க னித்தொண்டை யிதழூற்றி லேசற்று
ரட்சியுமெ னப்பெண்க ளொடுதாழ்ச்சி யாய்மிக்க
சொற்பலவு ரைத்துந்தி மடுநீச்சி லேபுக்கு
நிலையாதே

துக்கமுறு பொய்த்தொண்ட னெடுமூர்க்கன் மாதுட்டன்
அற்பனவ லப்பண்ட னொருமோட்டன் வாயற்ற
துப்பிலியி னிச்சிந்தை மயல்போக்கு மாதிக்க
முறுவேனோ

மெய்ப்படுமு ருக்கண்டு தெளிவாய்ப்ப ராவிப்பின்
நட்பொடனு மச்சிங்க முறவாக்க வேயத்தி
வெற்பையடி யிட்டுந்தி வலிகாட்டி யேமற்று
மரமேழும்

விற்படுச ரத்தன்று துளையாக்கி வாலிக்கு
நற்கணைதொ டுத்தண்ட ரொடுகூட்டி யேயிட்டு
வெற்றியொடு கிட்கிந்தை மலைமேற்ப்ர தாபித்து
வருபோதின்

இப்படியு யக்கொண்ட புருடோத்த மாரட்சை
மற்றிலென நக்கஞ்ச வடிபோற்றி மேலைக்கு
மெத்தொழிலு ரித்துன்ற னடியேற்கு நீகற்பி
எனவோதி

இச்சையொடு சுற்றங்க ளினிதேத்த வூர்புக்க
சுக்கிரிவ னுக்கந்த வரசாட்சி யாள்கைக்கு
லட்சுமண னைக்கொண்டு முடிசூட்டி வாழ்வித்த
பெருமாளே.

உரை:—இது கிட்கிந்தா காண்டத்தைப் பாயிரமாகச் சொல்லுகிறது.

பம்பைநதிக் கரையில் உண்மையாகத் தோன்றிய வடிவத்தைக் கண்டு மனந்தெளிந்து போற்றியபின், நட்போடு அநுமானாகிய சிங்கம், சுக்ரீவனுக்கும் உனக்கும் நட்பையுண்டாக்க, அப்போது துந்துபியின்

எனும்பாகிய மலையை நின் திருவடியால் உந்தி, அஃது ஆகாயத்தில் எழுந்து விழச்செய்து மெய்வலிகாட்டியும், மீண்டும் மராமரங்கள் ஏழையும் நின் வில்லினின்றும் தூரந்த ஓரம்பினால் துளைத்து அம்பின் வலியைப் புலப்படுத்தியும், அப்பால் வாலிக்கும் அவ்வம்பினைச் செலுத்திக் கொன்று அவனை இமையோரிற் கூட்டியும், வெற்றியோடும் புகழோடும் கிட்கிந்தை மலையின்மேல் வரும்போது, சிறந்த சுக்கிரீவன் சொல்லுவான் ; "ஆண்களிற் சிறந்தவரே, இங்ஙனம் என்னைப் பிழைக்கச் செய்தவரே, என்னைக் காப்பீராக; நும்மையன்றி எனக்கு வேறு புகலில்லை"; என்று நின் சிறந்த செந்தாமரை மலரடிகளை வணங்கி, 'மேல் நுமக்குரிய தொழிலாக அடியேன் செய்ய வேண்டுவனவற்றை எனக்குக் கட்டளை யிடவேண்டும்' என்று சொல்லி, நின் அருளால், தன் உறவினர்கள் இன்பமாகப் போற்றி மகிழ்ந்து சிறப்பிக்க, கிட்கிந்தை நகருக்குள் அவன் சொல்ல, அவன் அரசாள்வதற்காக இலக்குவனைக் கொண்டு அவனுக்கு முடிசூட்டுவித்து வாழச்செய்த பெருமானே; நான் பெண்கள்பாற் சென்று, 'உங்கள் மேகம் போன்ற கரிய கூந்தலில் மலர் சூட்டவோ? வட்டமான நெற்றியில் உண்டாகி யுள்ள வியர்வை போகுமாறு காற்றை வீசவோ? பொன்னில் பதித்த வயிரக் கற்களையுடைய பதக்கத்தைத் தனங்களின் மேல் பூட்டவோ? விருப்பத்தைத் தரும் இரு கைகளிலும் அளவாயுள்ள கடகங்களை ஒழுங்காகத் திருத்தவோ? தன பாரம் பொறுதிளைத்த இடையில் புடைவையைக் கட்டவோ? அழகிய கண்களில் மையைத் தீட்டி அவ் வழகினைக் காணவோ? உங்கள் மனம் உருகாதோ? பவளம்போலும் கொவ்வைப் பழம்போலும் சிவந்துள்ள உங்கள் உதட்டில் ஊறுகின்ற நீரிற் சிறிது கொடுத்து என்னைக் காப்பாற்றுங்கள்' என்று தாழ்ந்து மிக்க சொற்களைப் பேசி, அவர்தம் உந்தியின் கீழுள்ள மடுவில், நீந்தும் நீருக்குள் புகுந்து நிலையாமல் அழுந்தி வருந்தும் பொய்யடிமையேனாகிய நான், நிலைத்த வயிரங் கொண்ட உளத்தினன், மிகத் தீயவன், மிகுந்த சினமுள்ளவன், பயனற்ற இழிந்த பொருள் போன்றவன், ஒப்பற்ற முரட்டுத் தன்மையன், வாயில்லாதவன், துப்பற்றவன் ; இத்தகைய நான், இனி, என் காம மயக்கத்தைப் போக்குதற் குரிய மெய்யறிவினைப் பெறுவேனோ? சொல்லுக.

தனதான தந்த தந்த
தனதான தந்த தந்த
தனதான தந்த தந்த — தனதான

117. மலையேசு மூன்றி லங்க
முதுகூடு கொண்ட சண்ட
வடிவாமை யென்ற மர்ந்த — திருகோலம்

மகரால யங்க டைந்த
தொருகோல மண்டர் தங்கள்
வயிறுர வந்தெ ழுந்த வழுதூடே

நிலையாகி முன்ப கிர்ந்த
தொருகோலம் வஞ்சர் நெஞ்சில்
நிறைமோக னம்பொ ருந்த மகடூஉவாய்

நிழல்போல வந்து நின்ற
தொருகோல நின்ப்ர பஞ்ச
நெடுமாய மொன்று மென்றும் உணரேனே

சிலையாளர் நம்பி தம்பி
துணையாளர் விஞ்சு கின்ற
செயலாள ரங்க ழிந்த பொருள்நாடித்

திரிவாார்த வம்பொ ருந்து
சடையாளர் நெஞ்சு கொண்ட
திருவாளர் பம்பை யின்க ணிவராரென்

றலையாவு ளங்க னிந்து
வசமேய ழிந்து முந்தை
அனுபோக முந்தொ லைந்து தொலையாத

அருளேபொ ருந்தி நின்ற
வடிவாகு மென்று வென்றி
அனுமான்வ ணங்கி நின்ற பெருமாளே.

உரை :—அனுமான் இராம இலக்குவர்களைக் காண்டல்.

'இவர், வில்லை யுடையவர், சிறந்த ஆண்மையுடைய தம்பியைத் துணை யாக உடையவர்; அளவை மீறிய செய்கைகளைச் செய்பவர்; தாம் இழந்த ஒரு பொருளைத் தேடிவருபவர்; தவ வேடத்துக்குப் பொருந்திய சடையை யுடையவர்; மனம் நிறையக்கொண்ட அழகுடையவர்; (மார்பில் வைத் துள்ள திருமகளை யுடையவர்) பம்பை யாற்றங்கரையில் திரியும் இவர் யார்? தேவர், மக்கள், முனிவர்களில் இவர் எவரோ?' என்று மனம் அலைந்து கரையத் தன் சொற்கள் கெட்டுத் தன்வச மிழந்து, முன்னர் முனிவர்களாற் பெற்ற சாபம் தொலைந்து, என்றும் நீங்காத அருள் வடிவ மாகிய திருவடிவம் இதுவென்று அறிவில் விளங்கப்பெற்று, வெளியே வந்து, வெற்றிபெற்ற அனுமான் வணங்குமாறு நின்றருளிய பெருமாளே; அமுதத்துக்காகத் திருப்பாற்கடலைக் கடைந்தபோது நிறுத்திய மந்தரமலை

சுழன்றலைய, அஃது அசையவொட்டாது முதுகின் மேல் நிறுத்திக் கொண்ட மிகப் பெரிய உடலுடைய ஆமை வடிவெடுத்தது ஒரு கோலம்; இமையவரோடு நின்று, மகர மீன்கள் நிறைந்த கடலைக் கடைந்தது ஒரு கோலம்; அப்போது தோன்றிய அமுதத்துடன் தன்வந்திரி யென்னும் உருவாகி முன் நின்று அமுதத்தைப் பகிர்ந்தளித்தது ஒரு கோலம்; வஞ்சகம் மிக்க அசுரர் மனதில் நிறைந்த மோகம் பொருந்த மோகினி யென்னும் பெண்ணாகிச் சிறப்பாக வந்தது ஒரு கோலம்; இத்தகைய நின் உலக மாயையில் ஒன்றையும் நான் என்றும் அறியவல்லேன் அல்லேன்.

தனதன தானன தந்த
தனதன தானன தந்த
தனதன தானன தந்த தனதான

118. பரவரி டாதுதெ ளிந்த
உணர்வுகொ டாதுமி குந்த
பழிகழு வாதுநின் மந்த்ர நெறிநீதி
படியினி லாதுபி றந்த
குடியையெ ணாதுவ ளர்ந்த
பழுதொழி யாதும றந்து மதிகூறும்
குருவையு றாதுப ரந்த
திரிகைகெ டாதுநெ ருங்கு
குறைதவி ராதுத னங்கள் உடையார்முன்
குறுகியி லாமைவி ளம்ப
விடுமுத ரானல கும்பி
கொடுபடு பாடுகள் கிஞ்சில் ஒழியாதோ
உருகிய நீயெவ னென்று
திருவருள் கூரவ ணங்கி
உனதடி யேனுயிர் மைந்தன் நெடுவாலி
யுடன்வரு காதல னன்பன்
எனவுரை யாடிய வன்ற
னெடுபகை யாகிம லைந்து தரியானாய்
அரிகுல வீரனு மஞ்சி
ஒருகிரி மீதிலொ துங்கி
அரிதினி லாருயிர் கொண்டு திரிவானின்

அருள்பெறில் வாழ்குவ னென்று
ரகுபதி கேளென நொந்த
அடலனு மானையு கந்த பெருமாளே.

உரை :—நின்னை வணங்கி நின்ற அனுமானை நீ பார்த்து "மனமுருகும் நீ யார்?" என்று அருள் மிகுந்து கேட்டருள, அனுமான் வணங்கிச் சொல்வான் ; "நான் நமக்கு அடிமை ; வாயு மைந்தன், நீண்ட வாலியுடன் பிறந்த நமது நண்பனான சுக்ரீவனுக்குத் தோழன் ; குரங்குகளின் மரபிற் சிறந்தவனாகிய அச் சுக்கிரீவன் ,அவ் வாலியுடன் பகைத்துப் போர் செய்து அவனுக் காற்றாமல், அஞ்சி ஒரு மலையின்மேல் ஒளித்து, அச்சத்தால் உடலில் உயிரின்றி அரிதிலே உயிர்தாங்கி யிருக்கிறான் ; அவன் உமது அருளைப் பெற்றால், ரகுநாயகா, வாழ்வா னென்று மனம் நொந்து சொல்லிய வலிமை மிக்க அனுமானை மகிழ்ச்சியுடன் விரும்பிய பெருமாளே ; (பசியின் கொடுமை கூறுகின்றது) பசி, உன்னை வணங்கிப் போற்ற விடாது ; நன்றாய் ஆராயத் தெளிந்த அறிவைத் தாராது ; மிக்க பழியைப் போக்கித் தூய்மைபெறக் கழுவாது ; நின் திருமந்திரமாகிய நன்னெறியிலே படிந்து நில்லாது ; பிறந்த நல்ல குலத்தை யெண்ணாது ; வளரும் குற்றத்தைப் போக்காது ; உலகை மறக்கத் தக்க மெய்யறிவினை நல்கும் ஆசிரியரைச் சார்ந்திருக்க வொட்டாது ; பரந்து திரிதலைக் கெடுக்காது ; நெருங்கியிருக்கும் கவலையைத் தீர்க்காது ; பெருஞ் செல்வர்கள் முன்னே தன் வறுமையைச் சொல்லச்செய்யும் ; இவ்வகையில் உணவை உட்கொள்ளும் பசித்தழலை யுடையதும், வயிறாகிய சேற்றை யுடையதும், மலம் நிறைந்ததுமான இவ்வுடலைக் கொண்டு படும் துன்பங்கள் எளிதில் நீங்காவோ ?

உயிர்—உயிர்ப்பு, அஃதாவது வாயு.

தானனா தனன தத்த
தானனா தனன தத்த
தானனா தனன தத்த தனதான

119\. வாடினேன் மகளிர் கட்பில்
ஓடினேன் முறைமை முற்றும்
மாறினேன் அவர்ச ரித்ர மதனாலே

மாழ்கினே னிடர்த னக்குள்
மூழ்கினே னெனையொ ருத்தர்
வாவெனா வகைய வத்த வடிவானேன்

கோடினே னினியெ னக்கு
ஞானமா னவையி னிற்கை
கூடுமோ வருகு பற்றி வருமோநின்

கோயிலே தொழுவி ருப்பம்
ஆகுமோ பரவு நிட்டை
கூடுமோ வுனது சித்த மறியேனே

நாடுதா னிளவல் பற்ற
நீடுகான் மருவி யிட்ட
நானிரா கவனெ ருத்தி பிரிவாளை

நாடினே னுனது நட்பை
மேவினே னுறவு பற்றி
நாமெலா மினிதி ருக்கை திடமேகாண்

ஓடியே யினியொ ளிக்க
வேணுமோ வினைமு டிப்பன்
ஊரிலே யிடுவன் வெற்பின் முதுசாரல்

ஊடுபோ யநும சுக்கி
ரீவனுர் மகிழ வித்தை
ஓதுவா யெனவி டுத்த பெருமாளே.

உரை :—நீர் யாரெனக் கேட்ட அனுமானுக்கு இராமன் சொல்லியது.

"என் தந்தையின் சொற்படி கோசலநாட் டரசைத் தம்பி மேற் கொள்ள நீண்ட காட்டில் தங்கிய நான் இராமன்; என் மனைவியாகிய ஒருத்தி என்னைப் பிரிய அவளைத் தேட உன் நட்பைக் கொண்டேன், நாம் இனி யுறவுகொண்டு மகிழ்ச்சியாய் இருத்தல் உறுதிகண்டாய்; இனி மேல் வாலிக்கு அஞ்சி ஓடி யொளிக்க வேண்டுமோ? உங்கள் பகையை அறுத்து முடிப்பேன்; உங்களைக் கிட்கிந்தையில் சேர்த்து விடுவேன்; அனுமானே, மலையில் பழைய சாரலில் நீ போய்ச் சுக்கிரீவன் மகிழ இச் செய்தியைச் சொல்லுவாய்" என்றனுப்பிய பெருமாளே; பெண்களோடு கூடுதற்கு வாடினேன்; அவர் தம் நட்பினால் ஓடினேன்; மறை நூல்களிற் சொல்லிய முறைகளை வேறாக விட்டேன்; அந்த நிலைமையில் துன்பப் பட்டேன்; துயர்க்கடலில் மூழ்கினேன்; ஒருவரும் என்னை வாவென்று அழைக்கவொட்டாமல் பயன்ற உடலைக் கொண்டேன்; செந்நெறி மாறி நடந்தேன். இத்தகைய எனக்கு, இனி, மெய்ஞ்ஞானமுடைய பிறவிகளில் நிற்றல் கூடுமோ? நின்பால் அன்புசெய்ய வருமோ? நின் கோயிலை

வணங்க விருப்பம் உண்டாகுமோ? நின்னை உள்ளத்துட் கொள்ளும் நிட்டை கூடுமோ? நின் திருவுள்ளக் கருத்தெதுவோ? அறியேன்.

தத்தன தனன தான
தத்தன தனன தான
தத்தன தனன தான தனதான

120. சிற்றிடை மடந வார்கள்
பற்றிய கலவி யூடு
சிக்கிய கொடிய பாவி பெரியோரைத்

தெட்டுறு கபடன் மோடன்
வெட்கமில் சகவி ரோதி
சிற்சில வறிவு போல உரையாடிக்

கற்றதொர் படிநி லாத
கொச்சையன் விதியி னீடு
கற்பனை வழியி னூடு பிறவாதே

கட்டுள பரம ஞான
சற்குண மருவு மாறு
கற்புட னடிமை யாவ தொருநாளே

நற்றய ரதகு மாரன்
ஒப்பறு பெயரி ராமன்
நட்புட னிளைய கோவை யகலாதான்

நச்சுறு திருவை நாடும்
இச்சைய னருளி னுதன்
நத்தொடு திகிரி பாணி தரியாமல்

விற்றனை யுடைய வீரன்
மற்றவ னடிகள் சேரில்
வெற்றியு மரசு மாகும் எனவேமுன்

மெய்க்கவி யரச னோடு
முற்றவு மனும னேது
வித்தக மகிமை மேவு பெருமாளே.

உரை :—அனுமான் சுக்கிரீவனிடம் சொல்லல்.

“நன்மைமிக்க தசரத மன்னனுடைய மைந்தரும், ஒப்பற்ற இராமனென்னும் பெயருடையவரும், நட்போடு இளைய தம்பியைப் பிரியாதவரும், அன்புமிக்க மனைவியைப் பிரிந்து தேடும் விருப்புடையவரும், சங்கு சக்கரங்களைத் திருக்கையில் தரிக்காமல் வில்லைத் தரித்த வீரரும், ஆகிய இத்தகையவர் திருவடிகளில் நீர் அடைக்கலம் புகுந்தால், வாலியைக் கொல்லும் வெற்றியும், குரக்கரசும் கிடைக்கு”மென்று உண்மையுள்ள சுக்கிரீவ மன்னனோடு எல்லாச் செய்திகளையும் அனுமான் கூறுமாறு திறமையும் பெருமையும் பொருந்தியுள்ள பெருமாளே; நான், சிறிய இடையும் அறியாமையு முள்ள பெண்கள் கொள்ளும் புணர்ச்சியில் அகப்பட் டழுந்திக் கொடுமை செய்யும் பாவி; பெரியோர்களை எமாற்றும் வஞ்சகன்; அறிவு என்று சொல்லவும் தெரியாத மூடன், நாணமற்ற உலகப் பகைவன், சிறிது சிறிது அறிவுள்ளவன் போலப் பேசிக், கற்ற கல்வியில் ஒரு விதத்திலும் நில்லாது எவர்க்கும் பயன்படாத நாகரிக மற்ற பேச்சைப் பேசும் கொச்சையன்; இத்தகைய நான், விதியால் உண்டாகிப் பெருகிய கற்பனை வழியாகிய நால்வகைப் பிறப்புக்களில், எழு வகையான பிறப்பு வகைகளில் எண்பத்து நான்கு லட்சம் யோனி வகையில் பிறந்திறந்து அலையாமல், கட்டப்படும் மேலான உண்மை யறிவும், நல்லியல்பும் அடையுமாறு, தொடர்ந்து ஒருமைப்பட்ட அன்போடு என்னை உனக்கு அடிமையாக்கிக் கொள்வது ஒரு நாளிலேனும் கிடைக்குமா?

தனத்தனன தனதனன தந்த
தனத்தனன தனதனன தந்த
தனத்தனன தனதனன தந்த தனதான

121. ஒருத்தரொடு முறவிலை நடந்த
நடப்பினிலு முறுதியிலை முன்பின்
உரைத்ததிலு மனமிலையு கந்த கலைதேரும்
உணர்ச்சியிலு முணர்விலைமி குந்த
அருச்சனைக ளடைவுமிலை சிந்தை
யுடைத்தெனவொர் கவலையிலை நெஞ்சில் ஒருதேவர்
பொருத்தமிலை யிதுகரும மென்று
நினைப்பதிலை யளவளவ நிந்த
புகழ்ச்சியிலை யறநெறியி னின்ற பெருஞானப்
பொறைக்குரிய பெரியவர்நி றைந்த
அருட்குணமு மெனதுபழி விஞ்சு
புலைக்குணமு நிகரெனவி ருந்த பிழைபாராய்

திருக்கறநல் லறிவினொடு சந்து
பொருத்தியுட னடலனுமன் வந்து
திருக்கமல பதயுகம்வ ணங்க அவனோடே
செழித்தபுனல் பெருகுமொரு பம்பை
நதிக்கரையை விடவினிதெ ழுந்து
திருத்துகணை சிலையொடுவி ளங்க இமையோர்கள்
அருத்தியொடு தொழுதுமலர் சிந்த
முடித்தசடை மவுலியுமி லங்க
அடிப்பிறகி ளிளவலுந டந்து நிழல்போலே
அடுத்துவர மகிழ்வொடும தங்க
குலக்கிரியி னொருதனியி ருந்த
அருக்கன்மக னெதிர்கொளம கிழ்ந்த பெருமாளே.

உரை :—மாறுபாடற்ற நல்லறிவோடு சுக்ரீவன் மகிழ்ந்து உடன்பட, அவனோடு பொருத்திய அனுமான், உடனே திரும்பி வந்து அழகிய இரண்டு செந்தாமரை மலர்களையொத்த நின் திருவடிகளில் வணங்க, அவ் வனுமனோடு, மிக்க நீர்பெருகும் பம்பையாற்றங் கரையை விட்டு நீ, மகிழ்ந்தெழுந்து, அராவிக் கூர்மை செய்யப்பட்ட அம்புகளும் வில்லுங் கொண்டு, இமையோர் ஆர்வத்தொடு வணங்கிப் பூமாரி பொழியவும், முடிக்கப்பெற்ற சடையும் மரவுரியும் விளங்கவும், நின் திருவடிகளின் பின்னுல் தம்பி நடந்து நின் நிழல்போல் அடுத்து வரவும், மதங்க மென்னும் குலமலைக்கு ஒப்பான மலையில் தனக்கு ஒப்பில்லாமல் தனியே யிருந்த கதிரவன் மகனை சுக்கிரீவன் மகிழ்ச்சியோடு எதிர்கொள்ளவும், நடந்து சென்றனே ; பெருமாளே, எனக்கு எவரோடும் உறவில்லை ; என் செயலிலும் உறுதி யில்லை ; முன்னும் பின்னும் பேசிய வற்றில் நெஞ்சம் ஒருமைப் பட்டுப் பேசினேனில்லை ; மகிழ்ந்து ஆராயும் கலைகளிலும் தெளிவில்லேன் ; மிக்க பூசனைகளிலும் அடைவில்லேன் ; மனதில் ஒருகவலையுமில்லை; ஒரு தெய்வத்தை யேனும் உளங்கொண்டே னல்லேன்; துணிந்த செயல் இதுவென்று எதனையும் மனங்கொள்வே னல்லேன் ; நூல்களிற் கூறப்பட்ட அளவறிந்து பெற்ற புகழ்ச்சியுமில்லை ; இத்தகைய நான், அறநெறியில் நிலைத்து நிற்கும் ஞானமாகிய பொறுமைக்கு உரியவர்களான பெரியோர்கள்பால் நிறைந்துள்ள அருட்குணமும், எனது விஞ்சிய பழிக் குணமும் ஒக்குமென் றிருந்தேன் ; ஆகவே, நீ என் குற்றத்தைக் கடக் கணித்தருள வேண்டும்.

(பெரியவர் நிறைந்த என்புழி ஆறனுருபு தொக்கது. சந்து பொருத்துதல்—நட்பாக்குதல்).

தனத்த தத்தன தனத்த தத்தன
தனத்த தத்தன தனத்த தத்தன
தனத்த தத்தன தனதத் தத்தன தனதான

122. இனித்து வக்கிலை யினிக்க ருத்திலை
இனிப்ப ழிப்பிலை யினித்து திப்பிலை
இனித்த விப்பிலை இனிக்க ளிப்பிலை வருசாவோ

டினிப்பி றப்பிலை யினித்தி றப்பிலை
இனிச்செ ழிப்பிலை யினித்த ழைப்பிலை
இனிச்செ ருக்கிலை யினிப்பெ ருக்கிலை எனவேபோய்த்

தனித்தி ருப்பது ளயிர்த்து நிற்பது
பரத்தொ டுற்றுள தவத்தை கெட்டது
தவத்தின் மிக்கதொ ருணர்ச்சி மற்றுள திருரூபம்

தலைப்பு லப்பட வெளிப்ப டுத்திமெய்
விளக்கு பத்தர்க ணெருக்கி யுற்றிடு [ளாய்
சபைக்குள் வைத்திட வருட்கண் வைத்தினி எனையா

சினத்த [1] சுக்ரிவன் மறக்கொ ளித்துமுன்
இருக்கும் வெற்பிடை நடக்க லுற்றிடு
தினத்தி லுத்தம விருந்து நற்கனி நறைமூலம்

திருத்தி யிட்டவை புசித்து நற்குடி
யொருத்தி யற்றனை சலித்து விட்டனை
செகத்தெ மக்கினி சிரத்தி னிற்பொறி உரவோய்கேள்

உனைப்ப கைத்தத ரெனைப்ப கைத்தவர்
உனக்க டுத்தவ ரெனக்க டுத்தவர்
உனைப்ப ழித்தவ ரெனைப்ப ழித்தவர் இருவோரும்

ஒருத்தி பெற்றவர் ப்ரதிக்ஞை சத்தியம்
எனக்கு ரக்கர சனுக்கு நட்புடன்
உரைத்தி ருப்பிட மளித்து வப்புறு பெருமாளே,

உரை :—வாலியின் மேற் சினந்த சுக்கிரீவன், அவன் போருக்கு அஞ்சி ஒளித்துள்ள மலையின்மேல் நீ நடக்கையில், சுக்கிரீவன் எதிர்கொண் டழைத்துப் போய்ச் சிறந்த விருந்தாக இன்கனிகள், மணமுள்ள கிழங்கு

(பி - ம்) 1. சக்கரன் மகற்கொ ளித்து.

கள், ஆகியவற்றினை மேற்றேலும், உள் நரம்புகளும் போக்கித் திருத்தி இலயிற் படைக்க அவற்றை நீ உண்டபின், சுக்ரீவனை நோக்கி, 'நீ, நல்ல குடி முறைமைக்குரிய ஒருத்தியின்றி யிருக்கின்றாய்; மனம் சலித்து உள் ளத் துணிவை யிழந்தாய்; இவ்வுலகில் இவை நங்கள் தலை விதி; வலிமை மிக்கவனே கேள், இனி, உன்னைப் பகைத்தவர்கள் என்னைப் பகைத்தவர் கள்; உனக் கடுத்தவர்கள் எனக் கடுத்தவர்கள்; உன்னை நிந்தித்தவர்கள் என்னை நிந்தித்தவர்கள்; நாமிருவரும் ஒருத்தி பெற்ற துணைவர்கள்: இவ் வுறுதிமொழி உண்மையானது;' எனக் குரக்கரசாகிய சுக்கிரீவனுக்கு நட் புடன் சொல்லி, அவனிருக்க இடங்கொடுத்து மகிழ்ச்சியடைந்தனை, பெரு மாளே; நின் திருவுருவம், இனி, வடிவுகொள்ளத் தோல் (இயைபு) இல் லாதது; வேறு எண்ணமற்றது; பழியற்றது; வாழ்த்துதலற்றது; வருத்தமற்றது; மகிழ்ச்சியற்றது; வரும் இறப்போடு பிறப்பற்றது; விடு தல் அற்றது; செழித்தல் அற்றது; பரந்து தழைப்ப தற்றது; செருக் கில்லாதது; பெருக்காதது என்னும் இவற்றை கடந்துபோய்த் தனியாக வுள்ளது; உள்ளிற் கலந்துள்ளது; மேலான தொன்றே டுள்ளது; உள்ளே நின்ற சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், அதீதம் என்னும் ஐந்தும் தீர்ந்தது; தவத்தால் மிக்கது என்னும் இத்தகைய ஞான வடி வாக வுள்ளது. ஆகவே, அவ் வடிவத்தை அறிவால் தெளிவாக வெளிப் படுத்தி உண்மை விளங்கச் செய்யும் நின் அடியார்கள் நெருங்கியுள்ள குழாத்தின் நடுவே என்னை வைக்கக் கருணை செய்து அடிமையாக்கி ஆள்வாயாக.

தனதந் தந்தன தானன தந்தன
தனதந் தந்தன தானன தந்தன
தனதந் தந்தன தானன தந்தன தனதான

123. உரையுஞ் சென்றது நாவுமு லர்ந்தது
விழியும் பஞ்சென லாயது கண்டமொ
டுழலுஞ் சிந்துறு பால்கடை நின்றது கடைவாயால்

ஒழுகுஞ் சஞ்சல மேனிகு ளிர்ந்தது
குறிமுன் கண்கள்கை கால்கணி மிர்ந்தது
உடலுந் தொந்தியு மோடிவ ளைந்தது முகம்வேறாய்

மரணங் கண்டசு வாசந டந்தது
பொறியஞ் சுந்தடு மாறிய டங்கின
மனநின் றுந்தியை மேலிடு கின்றது பரிகார

வகையொன் றும்பலி யாதினி யென்றெதிர்
தமரும் பெண்டிரு மோதிவி ழுந்தழ
மலகும் பந்தனை யாவிவி டுந்தினம் வருவாயே

அரிமைந் தன்புகழ் மாருதி யென்றுள
கவியின் சங்கமி ராகவ புங்கவ
அறிவின் கண்டருள் வாயென அன்பொடு தரவேயன்

றசடன் கண்டக ராவண னந்தர
மிசையின் கொண்டெழு போதுபு லம்பியும்
அழுதும் பைந்தொடி சீதையெ றிந்திட வழிதோறும்

மருவுங் குண்டல மாழிசி லப்புகள்
கடகந் தண்டைபொ னூல்பவ ளஞ்சரி
வயிறின் பந்தன மாலைகள் சங்கிலி முதலான

மணியின் பந்திகு லாவும ருங்கலன்
முழுதுங் கண்டபின் மானுட னங்கவள்
வடிவங் கண்டது போலம கிழ்ந்தருள் பெருமாளே.

உரை :—இங்ஙனம், சுக்கிரீவனுடன் நீ இருக்கும்போது, கதிரோன் மகனாகிய சுக்கிரீவனது புகழாய் மிக்க வாயுமைந்தனாகிய அனுமானும் வலியோர் என்றுள்ள குரங்குக் கூட்டங்களும் "ரகுகுலத்தில் தோன்றிய வனே, தூய்மை மிக்கவனே ; நின் அறிவினாற் கண்டருள்க" வென்று அன்புடன் கொணர்ந்து கொடுக்க, அசடனும், கொல்லுந் தொழிலையுடைய முள் போன்றவனுமாகிய இராவணன், முன்னர், சீதையை எடுத்து விண் ணூறு சென்றபோது, பசும்பொற் கடகமணிந்த, அச் சீதை புலம்பியும் அழுதும் எறிய, வழியெங்கும் கிடந்தவைகளாய் எடுத்து வைக்கப்பட்ட குண்டலம், மோதிரம், சிலம்புகள், கடகங்கள், தண்டைகள், பொற் சரடு கள், பவள வடம், வளைகள், உதரபந்தனம், முத்துமாலை, கொலுசுகள் முதலிய மணிகள் பதிக்கப்பெற்று விளங்கும் அணிகலன்களை யெல்லாம் கண்ட பின்னர், விருப்பமுற்று அவள் திருமேனியைக் கண்டாற்போல் மகிழ்ந்திருந்தனை, பெருமாளே ; (இறத்தலின் குறி) பேச்சு நீங்கிற்று, நா உலர்ந்தது, கண் பஞ்சடைந்தது, வாயில் ஊற்றும் பால் கழுத்துக்குள் சுழலும் ; பாலடையினின்று வாயில் ஊற்றும் பால் கடைவாயால் ஒழுகு கின்றது ; இனி நம்பிக்கை யில்லை ; உடல் குளிர்ந்தது என்று சொல்லும் குறிகள் முதலிற் காணப்பட்டன; பின்னர், கை, கால்கள் நிமிர்ந்தன, மார் பும் வாயிறும் நீண்டு வளைந்தன; முகம் வேறுபட்டு இறத்தற்குறி கண்டது; மேல் சுவாசம் வாங்குகிறது ; ஐம்பொறிகளும் தத்தம் புலன்களை யிழந்

தன ; நெஞ்சில் கோழை மேலிட்டது ; இனி மருந்துகள் பயன்படா, என்று சொல்லி, உறவின் முறையாரும் மனைவியும் மேல் விழுந் தழ, மல மழுந்திய இவ் வுடலைவிட்டு உயிர் போகும்போது நீ, வந்து காப்பாயாக.

தனனு தந்தன தனனத் தனதன
தனனு தந்தன தனனத் தனதன
தனனு தந்தன தனனத் தனதன தனதான

124. முலையே யென்பது தசைகட் டியதிரு
விழியே யென்பது புனல்கட் டியசுழி
முகமே யென்பது தெளியிற் பலகுழி தலையோடு
[1]முதுகே யென்பது வயிறுற் றதுமல
நகையே யென்பது விழுபற் றிரளினி
முதுதோ லெங்கணு மரையிற் கதைசொல அதிபாவம்
கலையே கொண்டது தலைமுச் சியுமருக
மதநீள் சந்தகில் பளிதத் தொடுபல
கலவா மஞ்சளொ டளவிப் பரிமள வகைசேரக்
கவினு கும்படி மறையப் பலமணி
அணியா வந்திடு மிதனைப் ப்ரமையொடு
கருதா வைம்புல வகைபட் டுழலுகை தவிராதோ
சிலையே கொண்டிவர் பொருவிக் ரமவலி
நிலையே கண்டிந னறியப் பெறினல
தெளியே னென்றவர் தெளியக் கடிதொரு கணையேவிச்
செகமே மூங்கிடு கிடெனப் பொலிவுற
க்ரகமே மூம்பர பரெனக் கரையற
திரையே மூஞ்சுறு சுறெனத் திசைதொறும் நிலைமாறு
மலையே மூம்பொடு பொடெனக் குமரியர்
உருவே மூம்பொகு பொகெனத் தவமுனி
வகையே மூங்குணு குணெனப் பசுநிற வயமாவின்
வடிவே மூங்கட கடெனப் புரள்வுற
முகிலே மூங்கொளு கொளெனக் கொதியெழ
மரமே மூந்திடு திடெனத் தனைவிடு பெருமாளே.

(பி - ம்). 1. முதுகோ வென்பது வயிருற் றதுமிழு.

உரை :—வில்லைக்கொண்டு இவர்கள் போர்செய்யும் ஆற்றலைக் காணப்பெற்றால் அல்லது தெளியேன் என்ற சுக்கிரீவன், அனுமான் ஆகியோர் தெளிவடையுமாறு, வில்லினின்றும் ஓரம்பினை விரைந்து மராமரங்கள் எழின்மேலும் செலுத்த, ஏழென்னும் தொகைப்பட்ட உலகங்களேழும் கிடுகிடென நடுங்கவும், கோள்கள் ஏழும் பரபரவெனத் திக்கில் கெட்டோடவும், கரையில் மோதும் அலைகளையுடைய கடல்கள் ஏழும் சுறுசுறென வற்றவும், எல்லாத் திசைகளிலும் நின்ற நிலைமாறாத குலமலைகள் ஏழும் பொடுபொடென வெடிக்கவும், மாதர்கள் எழுவருடைய உடல்களும் பொகுபொகெனப் பதைக்கவும், தவம்செய்யும் முனிவர்கள் எழுவரும் குணுகுணென்று குளறவும், பச்சை நிறமும் வலிமையுமுள்ள குதிரைகளேழும் கடகடெனப் புரளவும், முகில்கள் ஏழும் கொளுகொளெனக் கொதிக்கவும், அம் மராமரங்களேழும் திடுதிடென விழுமாறு துளைத்து விட்ட பெருமாளே ; (பெண்கள் இயல்பை வெறுத்துரைப்பது) பெண்களின் தனங்களென்பது தசையின் கட்டு ; கண்ணென்பது நீரைக் கட்டியுள்ள நீர்ச்சுழி ; தெளிந்து பார்த்தால் முகமென்பது பல குழிகளையுடையது ; தலையென்பது ஓடு ; முதுகென்பது என்பு ; வயிறென்பது மல மூத்திரக் குழி ; சிரிப்பென்பது விழும் பற்களின் கூட்டம் ; இனி உடலெங்கும் முற்றிய தோல் ; அரையின் வரலாற்றைச் சொன்னால் மிக்க பாவமாகும் ; நினைக்கின் தலை நடுங்கும், இத்தகைய நாறும் உடலைப் புடைவை கொண்டு மூடியும், கத்தூரி, மிக்க சந்தனம், அகில் ஆகியவற்றைக் கருப்பூரத்தோடும் வேறு பல பொருள்களோடும் கலந்து மஞ்சளொடு குழப்பி ஒருசேர உடலுக்கு அழகாகப் பூசியும், பல மணிக்கலன்களை யணிந்தும் வரும் இழிந்த அதனை அறிவு மயக்கத்தால் அழகென்று கருதி ஐம்புல இன்பமான கலவிக் கூட்டத்தில் நான் அகப்பட்டு உழன்று அலைவது தீராதோ ? சொல்வாயாக.

தனத்தன தனத்த தந்தன
தனத்தன தனத்த தந்தன
தனத்தன தனத்த தந்தன தனதான

125. துளக்குறு செகத்த டங்கலும்
அநித்திய மெனத்தெ ளிந்தொரு
சுகத்தினு மிடர்க்கு ளுந்தனி புகுதாதே

தொலைப்படு வினைக்க ளுங்கலை
மடக்கொடி யுருப்பெ றும்படி
துகட்சிறி தளித்தி டுந்துணை யடிதானே

விளக்கென விருட்டி லெங்கணும்
நடக்கினு மிருக்கி னுந்துயில்
விளைப்பினும் விழிப்பி னும்பல செயலூடே

வியப்பினு நயப்பி னுங்கிளர்
அவத்தைகள் கலக்கி னுஞ்சடம்
விடுப்பினு முனைப்பொ ருந்துதல் தவிரேனே

உளத்தெளி வுபெற்று நண்பொடு
குரக்கர சுமுற்ப ணிந்திட
உரத்தைய றிவித்தி டும்படி நினைவாகி

ஒருத்தர்க டலிற்பு குந்திட
நிருத்தர்ம லையுச்சி தங்குற
உழக்கிமுன் முடுக்கி யிந்திரன் முதல்வானோர்

இளைத்துமு துகிட்டு நொந்துபின்
வரத்தினு யர்வச்ரன் மைந்தனொ
டெதிர்த்தமர் விளைத்த துந்துபி யுடலாகும்

எடுப்பரி யவெற்பை விண்புக
அடிச்சுவ டுபற்றி யுந்திய
இலக்குவர் தமக்கு முந்திய பெருமாளே.

உரை :—மராமரத்தை நீ துளைத்தபின், இவர் வாலியைக் கொல்லும் ஆற்றல் படைத்தவரென்று சுக்கிரீவன் தெளிந்து, நட்புக்கொண்டு, நின்னை வணங்க, மீண்டும் நின் ஆற்றலை அறிவிக்கக் கருதி, முன்னொரு காலத்தில் திருமால் அஞ்சிப் பாற்கடலிற் புக்கு ஒளிக்கவும், கூத்தாடும் இயல்புள்ள சிவபெருமான் அச்சத்தாற் கயிலைமலைச் சிகரத்தின் நடுவே தங்கவும் அவர்களைக் கலக்கித் துரத்தி, இந்திரன் முதலிய இமையவர் போரில் இளைத்து முதுகுகாட்டி யோடச் செய்தபின், வரத்தால் மேம்பட்ட வச்சிரப்படையைத் தரித்த இந்திரன் மகனாகிய வாலியோ டெதிர்த்துப் போர்செய்த துந்துபியின் உடலாகிய எடுத்தற்கரிய மலையைத் திருவடிகளின் அடையாளந் தெரியுமாறு மிதித்து விண்ணில் உதைத்து எழச் செய்தான் இலக்குவன் ; அவ் இலக்குவனுக்குத் தமையனாகிய பெருமாளே ; மயக்கம் நிறைந்த உலகம் யாவும் அழியத்தக்கன வென்று தெளிந்து, ஒப்பற்ற இன்ப துன்பங்களிற் புகுதாது, கழிந்த பாவச்செயலையுடைய கரிய கல்லைப் பெண்ணுரு வாக்குதற்குத் துகளைத்தந்த நின் திருவடிகளே விளக்கென்று நினைத்து இருளில் எவ்விடத்தில் நடந்தாலும்,

தூங்கினுலும், விழித்தாலும், பல செயல்களின் நடுவே வியப்புக் கொண்டாலும், ஊதியங் கிடைத்தாலும், மேலெழும் பல நிலைகள் கலந்தாலும், உடலினின்றும் உயிர் நீங்கினுலும், நின்னேடு கலந்திருத்தலை விடேன்.

தத்த தானத் தனன தத்த
தத்த தானத் தனன தத்த
தத்த தானத் தனன தத்த — தனதான

126. மக்க ளாகப் பிறவி பெற்றும்
உற்ற கால்கைத் துணைப டைத்தும்
மற்று மேகற் றறிவ னைத்தும் — உளவாயும்

மட்ட ருவட் டமலர் கட்டி
அர்ச்சி யாமற் புனலெ டுத்து
வைத்தி டாமற் புகழு ரைத்துன் — அதிரூபம்

கைக்கொ ளாமற் கவலை மெத்த
இச்சை மாதர்க் குருகி நத்து
கட்ட ணுகச் சுரத சித்ர — வலையூடே

கட்டு மாயத் தினுமெ டுத்து
முட்டு காலக் கலிந டத்தை
கற்கி யாகைக் குமுன கற்றி — எனையாளாய்

நெக்கு வாலிக் கமரி னைத்து
மைக்க ணுளைப் பிடிகொ டுத்து
நித்த மோடிப் புடவி சுற்றி — முனிசாபம்

நிற்கை யான்மற் றவனெ ருத்தன்
எட்டொ ணுவெற் பைநிலை பற்றி
நிட்பி ராணக் களைபி டித்து — நெடுநாளாய்த்

துக்க மேபட் டறவி னைத்து
முற்ற வேகெட் டுடல்மி குத்த
சுட்க மாய்மற் றவனு நிட்டை — யுறவாலே

சுத்த னேரட் சியென மிக்க
பத்ம பாதத் துணைபி டித்த
சுக்கி ரீவற் கரச ளித்த — பெருமாளே.

உரை :—திண்மை மிக்க வாலியொடு பொருது இளைத்து உடல் நொறுங்கப்பெற்று, மைதீட்டிய கண்ணையுடைய மனைவியை வாலியின் கையிற் பிடிகொடுத்து, நாடோறும் ஓடி உலகெங்கும் சுற்றி, அவ் வாலி துரத்துவதனால் நிற்கவும் இடம்பெருது, முன்னர் மதங்கமுனிவர் தவம் செய்திருந்தபோது, துந்துபியை வாலி கொன்று தூக்கி யெறிந்ததால், அவ்வுடல் முனிவருடைய பன்னகசாலையில் விழ, அவர் சினந்து, 'இச் செயலைச் செய்தவன் இங்கேவரின் அவன் தலை வெடித்து இறக்கக் கடவன்' என்று கூறிய சாபமொழி இம்மலையில் நிலைத்து நின்றுள்ள தாதலின், ஒப்பற்ற அவ்வாலிக்கு எட்ட வியலாத இம்மதங்கர் மலையை நிலயான இடமாகப் பெற்றுக் கழியும் நிலையிலுள்ள உயிர்கழியாமற் பிடித்து, நீண்ட காலமாகத் துன்பத்துள் ஆழ்ந்து மிக விளைத்தும், தோல் தொங்குமாறு உடலம் காய்ந்து வற்றிப்போகவும் உள்ள நிலையில் இருக்கின்றேனென்று (சுகிரீவன்) புகன்று நம்பிக்கையுடன் உறுதியாகப் பிடித்த உறவினல், "தூயோனே, என்னைக் காப்பாயாக" என்று மிக்க செந்நிறமுள்ள தாமரைபோன்ற நின் திருவடிகள் இரண்டையும் பிடித்த சுக்கிரீவனுக்கு அரசு கொடுத்தருளிய பெருமாளே ; மக்கட் பிறவி கிடைத்தும், அப் பிறப்பில் கைகால்களைத் துணையாகப் பெற்றும், எல்லாக் கலைகளையும் கற்றும், அறிவெல்லாம் உண்டாகப் பெற்றும், தேன் நீங்காத வட்டவடிவமான பூமாலைகளை நினக்கு அணியாமலும், திருமஞ்சனத்திற்குத் தூநீர் எடுத்து வைக்காமலும், நின் புகழ்பாடி நினது வியக்கத்தக்க வடிவத்தை மனத்திற் கொள்ளாமலும், காம மயக்கம் மேலிட்டு விருப்பத்தையுடைய பெண்கள் காரணமாக உள்ளம் உருகிக் காமியாகியும், குற்றமுடையவ னுகியும், கலவியென்று கூறும் மயக்க வலையில் கட்டுண்டு மோதப் பெற்றும் உள்ள என் கலிகாலச் செயலை, நீ கற்கியாக வருவதற்குள் விலக்கி, என்னை அடிமை கொண்டு என்னை ஆட்கொள்வாயாக,

('முற்ற வேனெற் றெனமி குத்த' என்றும் பாடம்.)

தனனு தனத்த தனதான தத்த
தனனு தனத்த தனதான

127. திருமார் பிருக்க ஒருபாக மிக்க
சிவனு ரிருக்க மலர்வேதன்
செழுநா பியுற்று மறையோத நத்து
செகமா துபற்று மிருபாதம்
விரிவா னகத்து நதிதான்வி ளக்க
விறலா மிநத்து முதலாக

மிளிரா யுதத்து வகைசூழ மற்றென்
விழிகா ணநிற்ப தொருநாளே

ஒருவா ளிதொட்டு வினைதான்மு டிப்பன்
ஒளிவா யிருப்பன் இனியுநீன்

உயர்தோள் புடைத்து மனமீதி லிட்டுன்
உரமே யெழுப்பு கடிதேகென்

றருள்சே ரருக்கன் மகனுரை மிக்க
அமரா டுகைக்கு மதிகூறி

அடல்வா லியுற்ற நகர்வீதி [1]முற்ற
அறைகூ வவிட்ட பெருமாளே.

உரை :—சுக்கிரீவனுக்கு இராமன் சொல்வது :

"நான் ஓரம்பு தொடுத்து இச் செயலை முடிப்பேன்; மறைந்து மிருப்பேன்; இனி, நீ, உன் உயர்ந்த தோள்களைத் தட்டிக்கொண்டு, மனதிலுள்ள அச்சத்தை யகற்றி, உன் வலிமையை விரைவில் எழுப்புக; விரைந்து செல்க" என்று நின் அருள்பெற்ற கதிரவன் மகனாகிய சுக்கிரீவன் போர் செய்தற்கு அறிவுரை கூறி, வலிமை மிக்க வாலி யிருக்கும் நகரத்துத் தெருவெல்லாம் போர்க் கழைக்கச் சொல்லி அவனை அனுப்பின, பெருமாளே; நின் திருமார்பில் பெரிய பிராட்டியார் இருக்கவும், பாதி உடலாக மேன்மை பெற்ற சிவபிரான் இருக்கவும், தாமரை மலரில் வாழும் நான்முகன் நின் செழித்த உந்தியிலிருந்து நான்மறைகள் பாடவும், விரும்புதலை யுடைய நிலமகள் வருடும் இரண்டு திருவடிகளையும் வான்நதி விளக்கிக் காட்டவும், வெற்றிமிக்க சக்கரம், சங்கு முதலிய ஐம்படைகளும் கைகளை அழகு செய்யவும் என் கண்கள் காணுமாறு நீ, நிற்கும் ஒருநாள் என்று வாய்க்குமோ? இன்றே அவ் வாய்ப்பினை அருள்வாயாக.

தனதான தான தத்த
தனதான தான தத்த
தனதான தான தத்த தனதான

128. மறையோதி னாலு முற்ற
பொருள்கூறி னாலு மெத்த
மதிதேறி னாலு மற்ற தொருவாழ்வோ

(பி - ம்) 1. முட்ட.

மனமாள வேணு மெட்டு
வினைமாள வேணு மற்றும்
வதமாக வேணும் விட்ட புலன்யாவும்

நெறிகூட வேணு மற்றுன்
வயமாக வேணு முத்தி
நினைவாக வேணு மிக்க திருஞானம்

நிறைவாக வேணும் வட்ட
உலகேழு தாவு பத்ம
நிழல்சேர வேணு மித்தை யறிவார்யார்

இறையான வாலி சுற்றி
அறைகூவு வோனை முட்டி
எதிராடு போதி லொத்த வடிவாலே

இருவோரை நேர்பி ரித்து
அறியாமை யாலி ருக்க
இளையோனை யேசு முற்றி முதலோனங்

கறைபோது வேறு பட்டு
ரகுவீர வேது சித்தம்
அருள்வாயெ னுவி ளைத்து விடுவோனை

அடையாள மாலை கட்டி
நெடுவாலி மேல்ம றித்தும்
அமராட வேவி டுத்த பெருமாளே.

உரை :—அரசனான வாலி, சுற்றிலும் நின்று போர்க்கழைக்கும் தம்பியை மோதி எதிர்த்துப் போரிடும் போது, இருவரும் ஒருடல் போல் இருந்ததனால், வேற்றுமை தெரிதற்கு இயலாமல், நீ வாளாவிருக்க, தமையனான வாலி, தம்பியைப் பிடித்துச் சுற்றி யடிக்கும்போது சுக்ரீவன் உடல் நொந்து ஒருவாறு அவன் பிடியினின்றும் விடுபட்டு ஓடிவந்து, "ரகுவீரா, நீ வாளா விருந்ததென்? நின் கருத்தை யறிவித்தருள்க" என்று கூறி மனம்நொந்து வணங்கியபோது, அவனை அடையாளந் தெரிய ஒரு மாலை சூட்டிக்கொள்ளச் செய்து மீண்டும் போர்செய்ய அனுப்பினாய், பெருமாளே ; மறைகளை ஓதினாலும், அவற்றின் பொருளைக் கூறினாலும், மயங்கும் அறிவு தெளிந்து தேறினாலும், இவை செல்வமாகா ; ஆனால், எவை செல்வ மென்னில், ஒருவன் தன் மனதை ஆளவேண்டும் ; இராசத தத்துவத்தின் காரியமாகிய காமம் முதலிய எட்டும் கெடுதல் வேண்டும் ;

மற்றைய தத்துவங்களும் அவற்றின் செயல்களும் இழிவுகளும் அழிதல் வேண்டும்.; பல வழிகளிலும் செல்லும் ஐம்புலன்களும் ஒரு நெறிப்படல் வேண்டும்; ஒரு நெறிப்பட்ட அவை நின் வயப்படுதல் வேண்டும்; வீடு பேற்றில் நினைவு உண்டாதல் வேண்டும்; இம்மெய்யறிவு நிரம்பவும் உண்டாதல் வேண்டும்; வட்டமான ஏழுலகங்களையும் தாவிய தாமரை மலர் போன்ற நின் திருவடி நிழலிலே சேரல் வேண்டும்; இவையே செல்வமாம். இவற்றை யறியத்தக்கார் யாருளர்?

தனன தானன தந்தன தானன
தனன தானன தந்தன தானன
தனன தானன தந்தன தானன — தனதான

129. மகர நீரைமோ துங்கந் வேகியை
அகில மேழுமூ டுஞ்சிறை யாளியை
மவுலி வானகூ டந்தொட வேநிமிர் — நெடியோனை

மகுட நாகரா சன்குல காலனை
வினதை யானவோர் மங்கைகு மாரனை
வடவி யாளமா கங்கண வாகுவை — அமுதேகொண்

டிகலும் வானுளோ ரஞ்சவு லாவிய
வடபொன் மேருநேர் சம்ப்ரம ரூபனை
ரணவி நோதமா துண்டவி லாசனை — நுதன்மீதே

இலகு லோசன லங்க்ருத தேவனை
இரத மாகமேல் கொண்டெதிர் நீர்வரும்
இனிய கோலமே கண்டடி யேன்மனம் — உருகாதோ

விகட வாலியோ டங்கிளை யானிவன்
முடுகி யேபொரா நின்றவி காரமென்
விபுத ஞானமோர் கிஞ்சிலி லாதவன் — இவனேநம்

வினைகள் சேரவே வென்றிடு வானிவன்
உரிய னுகவே நம்புமதோவென
வினவி யேபினே னின்றிடு போதினின் — ம்ருகநீதி

பகர லாகுமோ வின்றுணை வாநம
துறவு போலவே சிந்தைசெ யாதுகொள்
படியின் மீதிலே தம்பிய ரானவர் — அனைவோரும்

பதியு ருமலே நங்குளிர் பாதுகை
மவுலி சூடியே யின்பமெ லாம்விடு
பரத னுவரோ வென் றுரை யாடிய பெருமாளே.

உரை :—'வேறுபட்டுப் பகைத்த வாலிக்குத் தம்பியாகிய இவன் தன் அண்ணனுடன் முடுகிச் சண்டைசெய்ய நின்ற அழகற்ற தன்மையை என்னென்றியம்புவது ? சிறந்த மெய்யறிவு சிறிதுமில்லாத இச் சுக்ரீவனே நம்செயல்கள் நிறைவேறத்தக்க வெற்றியை உண்டாக்குவான் ? இவனை நமக்கு உரியனென்று நம்புதல் ஆகுமோ?' என்று இலக்குவன் வினவி நின்றபோதில், 'இன்பத் துணையான தம்பி, நீ விலங்குகளின் ஒழுக்கத்தை மனுநெறிக்கு ஒப்பாகச் சொல்லுதல் பொருந்துமோ ? இதனை நம் உறவு போற் கொள்ளாமல் விலங்கினத்தின் நீதியென்று நினைத்துக்கொள் ; உலகில் உள்ள தம்பியர் அனைவரும், நகருக்குள் செல்லாமல், நம் குளிர்ந்த பாதுகைகளை மணிமுடியாகச் சூடி இன்பம் அனைத்தையும் விட்ட பரதனைப் போல் ஆவர்களோ?' என்று மறுமொழி யளித்த பெருமாளே ; சிறை வேகத்திற் பிறந்த காற்றினால் மகரமீன்களை யுடைய கடலை மோதச் செய்யும் கடிய விரைவுள்ளவரும், ஏழுலகையும் மூடும் அகன்ற சிறகுகளை யுடையவரும், முடி, விண்ணைத் தொடுமாறு உயர்ந்த திருவுரு வுடையவரும், முடி சூடிய பாம்பரசன் மரபுக்கெல்லாம் எமன் போன்றவரும், வினதைபெற்ற மகனும், வட திசைக்கண் உள்ள தெய்வப் பாம்பான கார்க்கோடகனைப் பெரிய தோள்வளையாகத் தரித்துள்ளவரும், அமுதத்தை எடுத்து வரும் வழியில் மறித்து எதிர்த்த இமையோர் அஞ்சியோடுமாறு திரிந்தவரும், வடக்கில் உள்ள பொன்மலை போலப் பெரிய திருவுரு வுடையவரும், போரில் வியக்குமாறு பயன்கொள்ளும் பெரிய மூக்கை யுடையவரும், நெற்றியின் கண் அழகிய கண்ணை யுடையவரும் ஆகிய கருடாழ்வாரைத் தேராக, நீ ஏறிக்கொண்டு என் எதிரில் வரும் போது நினது இன்பமான வடிவழகைக் கண்டு அடியேன் உள்ளம் உருகாதோ ? உருகும் என்க.

தானன தத்தன தான தந்தன
தானன தத்தன தான தந்தன
தானன தத்தன தான தந்தன தனதான

130. ஓலைகி றுக்கியு மாளாய் நின்றும
ராவையெ டுத்துமு சாவா யுந்துறை
ஓடம்வி டுத்துநி ருதே கொண்டும துடன்மாறி

ஊர்பல சுற்றியு நீரே றும்புல
மீதுப யிர்ச்செய்து மேதே னுஞ்சில
ஒதல்ப யிற்றியு நேரே நேர்ந்திடு நெறிபோயும்
தோலைம றித்துமெய் யூறு கும்படி
ஆயுத சிட்சையின் மேலா யுஞ்சுமை
தாரமெ டுத்தும நேகா ரம்பமும் வினையாலே
சோர்வைய றச்செய்து பேறு கும்பொருள்
சேரம றுக்கள்ப டாதே வஞ்சக
தோகைய ருக்கிடு லோகீ கந்தனில் விழுவேனோ
காலின்மி திப்பர்கை யாலே புண்பட
மோதியு டற்றுவர் கீழ்மேல் கொண்டுயர்
காலையு றைப்பர்வி டாதே யொன்றுவர் அனல்போலே
காயவ றுக்குவர் போகார் செம்புன
லாடுவர் கட்டுவர் வாவா வென்றுபல்
காலும டிப்பர்பின் வேறாய் நின்றுடன் எதிர்பாய்வர்
வாலிடை சுற்றுவர் மேலே யுந்துவர்
தாவுவர் கிட்டுவர் தோளான் மண்டுவர்
வாசவ னொப்பறு தேரோன் மைந்தர்கள் இருவோரின்
வாலியு ரத்திடை யேபோய் அங்கவன்
ஆவிப றித்துட னேவா வென்றொரு
வாளிதொ டுத்தவி ராமா வண்டர்கள் பெருமாளே.

உரை :—எதிர்த்துப் பொரும் வாலி சுக்கிரீவர்க ளிருவரும், ஒருவர் காலை யொருவர் மிதிப்பர்; கையால் உடலைக் கிழித்துப் புண்ணாக்கி அடித்துப் போர்செய்வர்; கீழ் மேலாகக் கட்டிப் புரண்டு உயர்ந்த காலாற் பின்னிக்கொண்டு குறுக்குவர்; விட்டு விலகாமல் நெருக்குவர்; நெருப்புப் போல் சினங் கொள்வர்; அதட்டுவர்; தொலைவிற் போகார்; புண்ணி னின்றும் ஒழுகும் குருதியில் மூழ்குவர்; கட்டுவர்; வாவா என்றழைத்துப் பல தடவைகள் அடிப்பர்; வேறாக விலகி நின்று உடனே எதிரில் பாய் வர்; வாலாற் சுற்றுவர்; மேலே உதைத்துத் தள்ளுவர்; தாண்டுவர்; கிட்டுவர்; தோளால் விரைந்து இடிப்பர்; இவ்வாறு மற்போர் புரியும் இந்திரன், ஒப்பற்ற தேரையுடைய கதிரவன் ஆகியோர் மக்களாகிய வாலி சுக்கிரீவர்கள் என்னும் இருவரில் வாலியின் மார்பிற் புக்கு அவன் உயிரைக் கவர்ந்து விரைந்து வாவென்று ஓரம்பினைத் தொடுத்து விட்ட பெரு

மாளே ; (பொருள் தேடும் வழிகள்) ஓலையை எழுத்தாணியாற் கிறுக்கியும், ஏவலாளாய் நின்றும், பாம்பை ஆட்டியும், ஆலோசனை செய்தும், நீர்த்துறையில் ஓடம்விட்டும், பொன் வெள்ளி முதலியவற்றை நிறுக்காமல் கொண்டும், அவற்றை உடனே மாற்றிப் பல ஊர்கள் சுற்றியும், நீர் பெருகும் வயல்களிற் பயிர்செய்தும், சில நூல்களைக் கற்பித்தும், உடம்பு நோவும்படி வழி நடந்தும், தோலாற் கட்டிய தண்ணுமை, முரசு முதலியன செய்தும், வருத்தந் தரும் படைக்கலங்களைப் பயிற்றியும், மிக்க சுமைகளைத் தூக்கியும், இவைபோன்ற பலவற்றை முன்னை வினைப்பயனால் இளைக்காமற் செய்தும், இவற்றாற் கிடைக்கும் செல்வங்களைத் தள்ளுதல் வட்டங் கொடுத்தல் ஆகிய குற்றங்கள் உளவாகாமற் சேர்த்து, வஞ்சக வடிவமான பெண்களுக்கீயும் உலக வின்பத்தில் நான் விழுவேனோ? விழேன்.

தனதனத் தனந்த
தனதனத் தனந்த
தனதனத் தனந்த தனதான

131. கடலெனக் கிளர்ந்து
தறியிடைப் பிறந்து
ககனமுட் டிவிஞ்சு பலகோடி
கரமெடுத் துமண்டி
யரியுருக் கொடண்ட
கடகபித் திகண்டும் உகிராலே
திடமிகுத் துநின்ற
கனகனைப் பிளந்து
செறிகுடர்ப் பிடுங்கு பொருகோலச்
செகமனைத் துமுன்றன்
வடிவெனப் பகர்ந்த
சிறுவனுக் கிரங்கி யலவோதான்
உடனடுத் ததம்பி
தனையடர்த் ததுங்கன்
உரமிசைப் புகுந்த உடனேகண்(டு)
உரனுறப் பிடுங்கி
மனைவிசொற் றெளிந்துள்
உருகிநெக் கழிந்து திருநாம

அடலெழுத் திரண்டும்
எழுதியிட் டவம்பை
அணிதடக் கைகொண்டு வருபோதின்
அவன்மிடுக் கறிந்து
தலையசைத் துநெஞ்சில்
அதிசயித் துநின்ற பெருமாளே.

உரை:—தன்னோடு அடுத்துப் பிறந்த தம்பியை அடித்துத் துன்புறுத்திய உயர்ந்த வாலியின் மார்பில் நீ செலுத்திய அம்பு புகுந்தவுடன், வாலி கண்டு தன் ஆற்றலினால் அதனைப் பிடுங்கி, தன் மனைவி சொன்னது மெய்யென்று தெளிந்து, நெஞ்சம் உருகித் துணிவுகெட்டு, நின் திருப்பெயராகிய வல்லமை யுள்ள 'ராம' வென்னும் இரண்டெழுத்துக்களை யுடைய அவ் வம்பினை, அழகும் நீளமும் அமைந்த தன் கையாற் பற்றி வரும் போது, அவ் வாலியின் ஆற்றலை யறிந்து தலையசைத்து வியந்து நின்றனை, பெருமாளே; முற்காலத்தில் நீ, கடல்போல் எழுந்து தூணினின்றும் பிறந்து, விண்ணை முட்டிச் சென்று பல கைகளை எடுத்து, விரைவிற் சிங்க வடிவெடுத்து அண்ட பித்தியைப் பிளக்கும் நகத்தால், திண்மை மிக்குத் துணிவுடன் நின்ற இரணியனைப் பிளந்து, நெருங்கிய குடலைப் பிடுங்கிய ஒப்பற்ற அக்கோலம் கொண்டது, எல்லா வுலகங்களும் நின் வடிவென்று கூறிய பிள்ளையாகிய பிரகலாதனுக் கிரங்கியதால் அன்றோ? ஆதலின் அடியேனையும் காப்பாயாக.

தனத்தனன தந்த தான
தனத்தனன தந்த தான
தனத்தனன தந்த தான தனதான

132. திரைக்கடல டங்க வீசு
பனித்திவலை யொன்று போலொர்
செலுத்தனில டங்கு மாறு நெடுமீனச்
சிறப்புருவு கொண்டு மீள
மதுக்கயிட வன்கொ டேகு
திருத்தமறை வந்து கூட அவரோடே
நெருக்கியமர் மண்டி யாடல்
விளைத்தளவி றந்த காலம்
நிலைப்படம லைந்து பாய வகையாலே

நிலத்துவிழ வென்று லோக
சிருட்டிவகை கண்ட மேன்மை
நினைத்துனைய றிந்து பாவி தெளிவேனோ

அரக்கனுயிர் கொண்டு வாழ
எனைக்கொலுவ தெந்த நீதி
அருக்கன்மக னெந்த நேயன் வினையேன்மேல்

அடுத்தபிழை கண்ட தேது
புறத்தினொளி நின்று வாளி
அழுத்தியது வென்றி யோவுன் மனுநீதி

விருப்பமது நன்று தேவி
கருத்துணர்வு கொண்டு போக
மிடித்தனைகொ லென்ற வாலி அவன்மேலே

வினைப்பழுத டங்க நீதி
இலக்குவன்வி ளம்பு மாறு
விழிக்கடையெ றிந்த தேவர் பெருமாளே.

உரை :—இங்ஙனம் நீ, வியந்து வெளிப்பட்டு நிற்கக் கண்ட வாலி, நின்னைக் கண்டு, "இராமா, இராவணனாகிய அரக்கன், சீதாபிராட்டியாராகிய நின் உயிரைக் கொண்டுபோய் நன்மையோடிருக்க அவனுக் கீடாக என்னைக் கொல்லுதல் என்ன நீதி? இராவணனை வெல்லுதற்கு என்னை விடக் கதிரோன் மைந்தனாகிய சுக்கிரீவன் எம்மட்டான நண்பனாவன்? தீயோரை யொறுப்பதற்குரிய நீ, பாவியான என்மேல் என்ன குற்றம் கண்டாய்? வெற்றிபெற வேண்டினாயாயின், என்னை அழைத்து முன் நின்று போர்புரியாமல், புறம்பில் ஒளித்து அம்பினை மார்பில் அழுத்துதல் தகுமோ? நின் மனுவின் மரபுக்குரிய நீதி நன்று? நின் மனைவி, நின் கருத்தறிவைக் கொண்டுபோக நீ, அறிவில் வறிய னானாயோ?" என்று கேட்க வாலிக்கு, அவன் இழைத்த குற்றங்களை இளையவன் சொல்லுமாறு கடைக் கண் பார்வை செலுத்தினை, பெருமாளே; அலைகளை யுடைய கடல்களெல்லாம், ஒரு பனித் துளிபோல் ஒரு செலுவில் அடங்குமாறு பெரிய மீனின் சிறப்புள்ள வடிவம் எடுத்து, மீண்டும் மதுகயிடவர்கள் கொண்டுபோன வாகிய உயிர்களைத் திருத்தும் வேதங்கள் நான்முகனை யடையுமாறு அவர் களோடு நெருங்கிப் பொருது நீண்ட காலம் அவர்கள் போரில் இறவாமையால், அவர்களைச் சூழ்ச்சியால் கொல்லுதல் வேண்டுமென்று, அவர்களைச் சிறந்த திறலுடையோர் களென்று பாராட்டி, 'உங்கட்கு வரந்தருவோம், கேளுங்கள்' என்று சொல்ல, அவர்கள், 'எங்களை வெல்லமாட்டாமல்

ஒடும் நிலையிலுள்ள நீயோ எங்கட்கு வரங் கொடுப்பவன் ; உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்; நாங்கள் தருகின்றோம்' என்ன, உடனே நீ, 'என் கையால் நீங்கள் மாள்வதற்கு எனக்கு வரம் தருக' என்றபோது, அவர்கள் அதற்கு உடன்பட்டு, 'எங்களைத் தண்ணீர் இல்லாத இடத்தில் நீ கொல்க' என்றனர். அப்போது நீ, அவர்களை நின் துடையின் மேற் கிடத்திக் கொன்று வெற்றியுடன் நான்மறைகளை நான்முகனுக்குக் கொடுத்த பின், மதுவின் தோலை யுரித்து நிலமாக்கி, பிரமனுக்கு உயிர்களை ஆக்குந் தொழிலைக் கற்பித்த பெருமையை நினைத்து, நின்னை யறிந்து பாவி யாகிய அடியேன் தெளிவேனோ ? நீ யருள் செய்வாயாக.

தானன தத்தன தானன
தானன தத்தன தானன
தானன தத்தன தானன தனதான

133. வேதமொ ழிப்பொரு ளானதும்
ஓதிநி றுத்தபு ராணமும்
வேறுதொ குத்தசொல் யாவையும் அழியாதே

விறிய:வக்கர சாலமும்
நாடிவி ரித்திடு நூல்களும்
மேயசு ருக்கம தாகிநின் வடிவான

நீதியெ ழுத்திரு நாலையும்
நாளுமு ரைத்துரு காதவர்
நேயமு நட்புமு சாவுநல் உறவான

நீர்மையும் விட்டுனை யேதொழும்
மேதகு பத்தர்கு ழாமுற
நேரில்சு கத்தினை யேயினி அருள்வாயே

ஆதிவெ ளிப்பட வேவரின்
நீயும டைக்கல மாகுவை
யாகிலு னைக்கொளு வாரிலே இனையானே

டாடிய சொற்பழு தாமிவை
நாடியொ ளித்தனம்[1] யாமுனை
ஆரிலு ரைப்பது பாதகம் உணர்வாலி

(பி - ம்.) 1. தீதறம்.

நீதில்கு ணத்திள வீரனை
வீணில கற்றினை மாதிவள்
சீதமு லைத்தலை மேவினை உனைவானம்

சேரவி டுப்பது காரணம்
ஆமென விட்டுரை யாடிய
சேடனு யிர்த்துணை யேசுரர் பெருமாளே.

உரை :—வாலிக்கு இலக்குவன் சொல்வது :—

'முதல்வனாகிய பெருமான் வெளிப்பட்டு வந்தால் உன் தம்பியைப் போல் நீயும் அடைக்கல மாவாய்; ஆனால் உன்னைக் கொல்வாரிலர்; ஆதலின், சுக்கிரீவனுக்குச் சொன்ன சொல் குற்றமாம்; நாங்கள் இதனை எண்ணியே ஒளித்திருந்தோம்; நீ, குற்றமற்ற னென்று சொன்னாயே! உன்னைக் குற்றம் செய்தவர்களுள் யாரோடு சேர்த்துக் கூறுவது? பாவச் செயலை நன்கறிந்த வாலி, குற்றமற்ற குணத்தையுடைய வீரனை சுக்கிரீவனைக் காரணமின்றி வீணில் தள்ளிவிட்டாய்; அவன் மனைவியைப் பிடித்து அவளோடு கூடி இன்பம் நுகர்ந்தாய்; இக் குற்றத்தால் உன்னைக் கொன்று விண்ணுகில் சேர்ப்பது தக்கது' என்று அவன் குற்றத்தை வெளியிட்ட ஆதிசேடனாகிய இலக்குவனுக்கு உயிர்த்துணையே, தேவர் பெருமாளே; மறைப்பொருள்களையும், அவற்றின் பொருள்களைப் பதினெட்டு வகையாக்கி நிறுத்தியுள்ள புராணங்களையும், வேறுவேறாகத் தொகுக்கப் பட்ட எல்லாச் சொற்களையும், ஒருகாலத்தும் அழியாது விஞ்சிய எழுத்தின் தொகைகளையும், அவற்றை ஆராய்தற்குரிய இலக்கணங்களையும், அவற்றால் ஆய்ந்து வரிவாகச் சொல்லப்பட்ட இதிகாசங்களையும் ஒன்று கூட்டிச் சுருக்கி வைக்கப்பட்டுள்ள நின் வடிவமாகிய நீதிகள் அமைந்த மூல மந்திரமான எட்டெழுத்தையும் என்றும் சொல்லி மனம் உருகாதாரிடம் கொள்ளும் அன்பையும், நட்பையும், சூழ்தலையும், உறவையும் விட்டு, வேறொரு தெய்வத்தை வணங்காமல், உன்னையே வணங்கும் மனமுள்ள நின் அடியார் குழாத்தினுள் அடியேனுங் கூடி யிருக்கும் ஒப்பற்ற இன்பத்தை இனி அருள்வாயாக.

தனனா தனதன தத்த
தனனா தனதன தத்த
தனனா தனதன தத்த தனதான

134. கொலையார் விழிகள்ப ரப்பி
எதிரே பொருதுவி ளர்த்த
குறுவா ணகைகொடு ருக்கி நடையாலே

கொடுநா லிடையைய னுக்கி
வடபூ தாகுவ டொத்த
குளிர்மா முலைகள சைத்து மறுகூடே

அலையா தவரைய லைத்து
நலமே விலையென விற்கும்
அதிமோ கனமக ளிர்க்கு வசமாகி

அறிவா னதுபறி பட்டு
விடுமோ முடிவினு னக்கும்
அழகோ வடிமையி ழப்ப தருள்வாயே

முலைமே லிருகைபு டைத்து
மலர்சே ரளகம் விரித்து
முறையோ வெனவல றற்று வருதாரை

முதிரா குலமொடு நிற்க
அனுமான் முதலியர் சுற்ற
முதல்வா னவர்கள முற்ற இளையாயென்

றுளையா திரவிம கற்கு
மனைவாழ் வுதவிவ ரத்தின்
உயர்வா லியுமெதிர் நிற்க உடனேயங்

கொருமா மகனைய ழைத்து
நெடிதே தலைதட விப்பொன்
உடைவா ளினிதுகொ டுத்த பெருமாளே.

உரை :—வாலியின் நிலையைத் தாரை கேட்டு, தனங்களின் மேற்கை யால் புடைத்து, பூ முடித்த கூந்தலை விரித்து, முறையோவென் றலறிக் கொண்டுவந்து நிறைந்த வருத்தத்தோடு நிற்க, அனுமான் முதலியோர் சுற்றிலும் நிற்க, முதன்மைபெற்ற இமையோர் போற்ற, கதிரோன் மைந்த னாகிய சுக்கிரீவனுக்கு, நீ இளைக்க வேண்டாமென்று சொல்லி இனி யென்றும் துன்பப்படா திருக்குமாறு மனைவியோடு கூடி யிருக்கும் வாழ் வினை அவனுக்குத் தந்து, பகைவன் வலிமையிற் பாதி தனக்கு வருமாறு பெற்ற வரத்தினால் மேம்பட்ட வாலியும் எதிரே இருக்க, அங்கே நின்ற வாலியின் மைந்தனான அங்கதனை அழைத்து, அவன் தலையை நினது திருக் கைகளாற் றடவி அழகிய உடைவாளை இன்பமாக அவன் கையில் கொடுத்தருளினை பெருமாளே ; கொலைத்தொழிலைப் புரியும் தம் கண்க ளைப் பரக்க வீசி, எதிரே காமுகரைக் குத்தி, வெண்ணிறமான பற்கள்

விளங்கச் சிரித்த சிரிப்பினைத் தாங்கி, மனத்தை யுருக்கி நடையால் துவண்டுள்ள நூல் போன்ற இடையை நெளித்து, மகாமேருவைப் போன்ற பெரிய நகில்களை யசைத்து, தெரு நடுவில் அலையாத பேர்களை அலையச் செய்து, தம் நலத்தையே விலையாக விற்கும் பெரு மயக்கத்தைத் தரும் பெண்களுக்கு வயப்பட்டு என் அறிவு பறிபட்டுப் போய் விடுமோ? அழிவற்ற வுன் அடிமையை நான் இழத்தல் அழகோ? இதனை அருளிச் செய்க.

தான தானன தானன தத்தன
தான தானன தானன தத்தன
தான தானன தானன தத்தன தனதான

135. காய மோகிலை யாதுக ருத்திலுன்
மாய மோதெளி யாதுபெ ருத்திடு
காம மோவொழி யாதும தப்படு பொறியாவும்

காவ லூடுநி லாதுநெ ருக்கிய
பாவ மோதொலை யாதுவி தித்துள
கால மோதவ ருதுக டக்கவும் வழிகாணேன்

நீய லாதினி வேறொரு வர்க்கிவை
பார மோவினை யோடவி டுப்பது
நீதி யோதிரு ஞானவி ளக்கினில் ஒளியாலே

நீடு பேரருள் யாவும கற்றியுன்
நாம மாயிர மோதிய டிக்கடி
நேய மூறிட வாழும்வ ரத்தினை அருள்வாயே

தூய பேரடை யாளவ டிக்கணை
மார்பு மூழ்கவி டாதுப றித்துடல்
சோரி சோரமண் மீதல றித்திரு வடிசேரச்

சோதி ஞானமெ லாமறி வுற்றிது
கால மாமென வேகரு திப்பெறு
சூனு வோடினை யானுன டைக்கலம் அடியேன்முன்

வாயி னூலறி யாதுபி தற்றிய
தீமை சேர்பிழை கோடிபொ றுத்தருள்
மாய மானுட னாகியெ னக்குமுன் வருமாலே

வாழி வாழியி ராகவ உத்தம
ராம ராமவெ னுவுரு கித்தொழ
வாலி வாழ்வுற நாடுகொ டுத்தருள் பெருமாளே.

உரை :—தூய நின் திருப்பேர் எழுதிய அடையாள முடையதும், அரத்தால் அராவி வடிக்கப்பட்டதுமான அம்பினை நீ, வாலியின் மார்பிற் புகுத்த, அது புகவொட்டாது அவன் தன் கையால் பற்றிக் கொள்ள, மார் பினின்றும் குருதி சோர, அலறிக்கொண்டு நின் திருவடிகளின் மேல் விழுந்தபோது, ஒளி வடிவான மெய்யறிவனைத்தையும் பெற்று, தனக்கு இது நல்லகாலமென்று கருதி, நின்னைப் பார்த்து, 'ஐயனே, நான் பெற்ற மகனாகிய அங்கதனோடு என் தம்பியும் நுனதடைக்கலம்; என் அறியாமை யால் உரைத்த பொல்லாங்குகள் கோடிக் கணக்கானவை ; அவற்றைப் பொறுத்தருள்க ; மாய மக்கள் வடிவமாகி என் கண்முன் வந்தருளிய திரு மாலே, இராமா, நாராயணா, இராகவா, உத்தமா வாழ்க, வாழ்க' என்று மனமுருகி நின்று வணங்கும் வாலி வாழ்வுபெற வீடுபே றளித்தருளிய பெருமாளே : இவ்வுடல் நிலையாது அழியும் ; நினைத்துப் பார்க்கின் நின் மாயம் என்னைத் தெளிவியாது மயக்கும் ; வளரும் அவா ஒழியாது மேன் மேலும் பெருகும்; ஐம்பொறிகளும் என் காவலில் நில்லாமல் தம் வழியிற் சென்று விழும் ; இன்பம் சேராமற் செய்யும் பாவம் தொலையாது வருத் தும் ; இன்ப துன்பங்களுக் கறுதியிட்ட காலங்கள் தவறாது தம் பயன் தரும்; இத்தகைய உடல், அதன் தொடர்புள்ள மாயம், அவா, ஐம்பொறி, பாவம், காலம், ஆகிய ஆறையும் கடக்கும் வழி காணேன் ; இவ்வாறினை யும் போக்குதல் நின்னையன்றிப் பிற தெய்வங்களால் செய்யத்தக்க கடமை யாமோ? ஆகாது. ஆதலின், நீயே இவற்றைப் போக்கா திருத்தல் நீதியோ? நினக்குரிய கடமையாவது, அழகிய ஞான விளக்கின் ஒளியால் நீண்ட பேரிருளாகிய அஞ்ஞானத்தைத் தொலைத்து, அளவற்ற நின் திருப் பேர்களைப் புகலச்செய்து, அடிக்கடி நின்பால் என் அன்பு ஊன்றுமாறு செய்தற்குரிய வரத்தை யருளிச் செய்வதாம். அதனை அருள வேண்டும்.

தனதனன தனதத்த
தனதனன தனதத்த
தனதனன தனதத்த தனதான

136. விதனமொடு திரிவிக்கும்
நெறிமுறைமை தவிர்விக்கும்
விரகுபல புரிவிக்கும் இழிவானோர்

விரவுமனை புகுவிக்கும்
வழுவுதொழில் தருவிக்கும்
வெகுளிதனை வருவிக்கும் அநியாய

உதரமிது நிறைவற்ற
பெரியகட லிதனுக்குள்
உறுகனலை யவிகைக்கு வகைநாட

உரியபொழு தலதற்ப
நினது திரு வடிபற்ற
ஒருபொழுது மறநிற்கை தவிரேனே

முதலவனை யனலிட்டு
மருவுகடன் வகைமுற்றி
முறைமையனு மனுமிக்க கிளையாவும்

முதன்மைமர பொடுசுற்ற
உலகமுழு தளவிட்ட
முளரிதொழு பொழுதத்து மகிழ்வாகி

மதிகொள்கவி யரசற்கு
விடையருளி வழிவிட்டு
மதுரமொழி பலசெப்பி யவன்வாழும்

வளநகரி யதனுக்குன்
இளையவனை வரவிட்டு
மணிமவுலி புனைவித்த பெருமாளே.

உரை :—வாலியை நெருப்பிலிட்டு உரிய கடன்களை முடித்தபின், அனுமான் முதலிய அன்புமிக்க உறவினர்கள் முறைப்படி சூழ்ந்து நிற்க, சுக்கிரீவன் வந்து, உலகளந்த நின் முளரித்தாள்களை வணங்கியபோது, மகிழ்ந்து, அறிவு மிகப்பெற்ற குரக்கரசான அவனுக்கு இன் மொழிகள் கூறி விடையீந்து வழியனுப்பியதோடு, அவன் வாழும் வளப்பமுடைய நகருக்கு இளையோனை இலக்குவனை அனுப்பி, அவனைக் கொண்டு, மணிகள் அழுத்திய முடியைச் சுக்கிரீவனுக்குச் சூட்டிய பெருமாளே : என் வயிறு, கவலையோடு என்னைத் திரியச்செய்யும்; குலத்திற் கேற்ற ஒழுக்கத்தைவிடச் செய்யும்; பல சூழ்ச்சிகளைச் செய்விக்கும்; இழிந்தோர் வீடுகளிற் புகுத்தும்; குற்றமான செயல்களை உண்டாக்கும்; சினத்தை வரவழைக்கும்; இத்தகைய நீதியற்ற வயிறாகிய இது என்றும் நிறையாத பெருங்கடல்; இதனுள் அமைந்துள்ள நெருப்பை அவித்தற்குரிய வகை

தேடத் தக்க காலம் இருக்கின்றதே யன்றி நின் திருவடிகளிற் சிறிதேனும் மனம் பற்றுதற்கு ஒரு பொழுதேனும் கிடைக்கவில்லை. இங்ஙனம் நிற்றலை விட்டு விடுவேனோ? சொல்வாயாக.

தனதனன தந்த தந்த
தனதனன தந்த தந்த
தனதனன தந்த தந்த தனதான

137. முனையுடைய கொம்பு கொண்டு
தரணியையி டந்தெ ழுந்து
முதுதிரைய டங்க வங்கொர் மயிலூடே

முறைமுறையொ துங்க வம்பொன்
நெடுவரைகு ளம்பி னின்ற
முதலினர்க ளங்கொ டுங்க மிடல்சேரும்

இனையதொரு பன்றி யொன்றின்
வடிவமது கொண்ட வுன்றன்
எழிலளவு கண்டி யம்ப அறிவார்யார்

இமயமகள் பங்க னந்த
மலர்மருவு மைந்த னிந்த
இருவருமறிந்து நின்ற விடமேதோ

தனியிளவல் சென்று வென்றி
மணிமுடிபு னைந்த பின்பு
சடுதியிலெ ழுந்து முந்த இளவீரன்

சரணகம லம்ப ணிந்து
வளநகர கன்று துன்று
தனிவிருது மங்க லங்கள் பொலிவாக

அனுமனொடு மைந்த னெங்கள்
சதவலிம யிந்த னெண்கின்
அரசுகுமு தன்று மிந்தன் முதல்வீரர்

அனைவரொடும் வந்து கண்டு
கவியரசு கந்தி றைஞ்சி
அடிதொழும கிழ்ந்தி ருந்த பெருமாளே.

உரை :—ஒப்பற்ற இளைய பெருமாள் கிட்கிந்தைக்குப் போய் வெற்றி பொருந்திய மணிமுடியைத் தரிப்பித்தபின், சுக்கிரீவன் விரைந்து இலக்கு வன் திருவடிகளாகிய தாமரைகட்கு வணக்கம் செய்து, அந்நகரை விட்டு வெளியில் வந்து, நெருங்கிய ஒப்பற்ற அரச விருதுகளும், சாமரை, பூரண கும்பம், நிலைக் கண்ணடி, அங்குசம், பேரிகை, தீவர்த்தி, கொடிச்சீலை, இருமகர தோரணம் என்னும் அட்ட மங்கலங்களும் எங்கும் விளங்க எங் கள் தலைவனான அனுமானோடும், அங்கதன், சதவலி, மயிந்தன், கரடிக் கரசாகிய சாம்பவன், குமுதன், துமிந்தன் முதலிய வீரர்களோடும், நின் பால் வந்து நின்னைக் கண்டு மகிழ்ந்து வணங்க மிக மகிழ்ந்திருந்தருளிய பெருமானே ; நுனியை யுடைய கொம்பைக் கொண்டு, நிலத்தைக் கீண்டு, எழுந்து, அலைகளை யுடைய கடல்கள் அடங்கவும் ஒரு மயிருக்குள் வரிசை வரிசையா யிருக்கவும், அழகிய நீண்ட பொன்மலையாகிய மகாமேரு, குளம் பில் நிற்கவும், அம் மலையிலுள்ள பிரமன், சிவன், இந்திரன் முதலிய தலை வர்கள் அக் குளம்பில் அடங்கி யிருக்கவும், தகுதிவாய்ந்து, வலிமை மிக்க ஒப்பற்ற பன்றியின் வடிவமான நின் அழகிய அளவைக்கண்டு சொல்ல வல்லவர் யார் ? ஒருவரு மிலர். ஆதலின், மலைமகளை ஒருபாற் கொண்ட சிவபெருமானும், நின் உந்தியிற் பிறந்த நான்முகனும் நின்னை யறிந்து நின்றவிடம் எதுவோ ? அதனைச் சொல்வாயாக.

தனத்த தனன தத்த
தனத்த தனன தத்த
தனத்த தனன தத்த தனதான

138. உடுத்த துகில்வி டுக்க
மணிக்கை யிறுக மூத்தம்
உறுத்த முலையு ரத்தின் மிசைசூழ்க
உடற்கு ளுடல ழுத்தி
முகத்தின் முகமி ருத்தி
உதட்டின் முறைகு தட்டி வருபானம்
குடித்து மனம யக்கின்
மிகுத்த நகமு றைத்த
[1] குறிப்பி லஙன்வி ழித்து மடவார்தம்
கொழுத்த சுரத சித்ர
நலத்தி லுருக லுற்ற
குணத்தை யினிய கற்றி யெனையாளாய்

(பி - ம்) 1. குறிப்பு பலவி ழைத்து.

எடுத்த குடைநி ழற்ற
முடித்த முடிசி றக்க
இனத்தி னவர்கள் சுற்ற நகரூடே
இருக்கு மரசி ருப்பில்
மகிழ்ச்சி மருவி மற்று
மிதத்த சுகம னைத்தும் உறநீபோய்
அடைத்து மழைது ளித்தல்
விடுத்த பொழுதெ னக்கும் வருவாயென்
அடுத்த வினைமு டிக்க
றருக்கன் மகனை மிக்க
க்ருபைக்க ணெடுவி ருப்பின்
அழைத்து விடைகொ டுத்த பெருமாளே.

உரை:—தன்னை வணங்கிய சுக்கிரீவனுக்கு இராமன் சொல்லியது :

"மேற்கவித்த வெண்குடை நிழல் செய்யவும், தலையிற் சூடிய மணி முடி விளங்கவும், உறவினர் சூழவும் நகரிலுள்ள அரச மனையில் நீ, மகிழ்ச்சியோடு இன்பங்கள் எல்லாவற்றையும் நுகர்ந்து, விண்ணை மறைத்து முகில்கள் மழைபொழியும் கார்காலம் கழிந்த பின்னர், எனக்கும் அடுத்த செயலை நிறைவேற்ற வருக" என்று அருளொடு மகிழ்ந்து சுக்கிரீவனை அழைத்து விடைகொடுத் தனுப்பிய பெருமாளே; பெண்கள் தம் அரையிற் கட்டிய புடைவையை யவிழ்த்து விட்டு, அழகிய கச்சு விம்மி யிருக்கவும், முத்துமாலை மார்பில் உறுத்துமாறு தனங்கள் அழுந்தி யடங்கவும், உடலோடு உடலை அழுத்தியும், முகத்தோடு முகத்தை யிருத்தியும், உதட்டை முறைப்படி குதட்டி அதினின்றும் வரும் ஊறலைக் குடித்தும், மன மயக்கத்தால் நகங்களால் மிக்கழுத்தி யடையாளம் செய்தும், கண்களைச் சுழல்வித்தும், செய்யும் கொழுமையான இன்ப நுகர்ச்சியில் மனமுருகும் என் இயல்பினை நீக்கி, உனக்கு அடிமையாக்கி ஆள்வாய்.

தனன தானன தந்தன தானன
தனன தானன தந்தன தானன
தனன தானன தந்தன தானன தனதான

139. சமர வேல்பொரு மஞ்சன லோசன
வலையை வீசிவ ளைந்தப யோதர
தரள பூடண குஞ்சர மேகொடு விழமோதித்

தனிவி லாசநி தம்பம காரதம்
எதிர்க டாவிம ருங்கினி லோர்சுழி
தனிலெ ழாமல ழுந்திட வேவிடு மடவார்தம்

ப்ரமையி லேதிரி வஞ்சக பாதகன்
அசடன் மோடனி டும்பன டாதுசெய்
பிழைய ஞகுல சிந்தைய வாவினன் வினையேனுன்

பெருமை யோதியு மன்பர்கு லாவிய
சபையை நாடியு மிம்பரின் மேவிய
பிறவி யால்வினை யும்பல ஞைது பெறுவேனே

ஞிமிறு பாடநெ ருங்கிய கோடலும்
இனிய பாணிவி ரிந்திட வார்சடை
நிமலர் சூடிய கொன்றைகு லாவுபொன் எதிர்தூவ

நெடிய வேலையை மொண்டெழு மேகமும்
வெயிலை மூடியி ருண்டடர் தாரையின்
நிரைக ளாரம தங்ககு லாசல மதனூடே

விமலை சானகி யிந்திரை பூமகள்
கமலை சீதைத னங்களு மோதியும்
விழியும் யாவுநி னைந்துள நீள்புகை எழுவேவெண்

விரைய ருமலர் சிந்திட வாடையும்
உடலு லாவவ ழுந்திடு மோகன
விரக தாபநெ டுங்கட லாடிய பெருமாளே.

உரை :—கார்காலம் வந்தவுடன், வண்டுகள் பாடுமாறு நெருங்கிய காந்தள் மலர்கள் இனிய கைகளைப்போல் ஐந்து இதழ்களோடு மலரவும், நீண்ட சடையில் தூய்மையுள்ள சிவபெருமான் சூடிய கொன்றைப் பூக்கள் மலர்ந்து, விளங்குகின்ற பொன்போன்ற பூந்துகள்களைச் சொரியவும், (கொன்றை மலர்கள் வள்ளி யோரைப்போலப் பொன் சொரியவும், காந்தள் மலர்கள் வறியவன் அன்புடன் அப்பொன்னைத் தன் கையில் ஏற்பது போலப் பெற்றுக்கொள்ளவும்) இத்தகைய இயற்கை யழகுகள் பல தோன்றவும், நீண்ட கடலினின்றும் நீரை மொண்டெழுந்த முகில்கள், வெயிலை மறைத்து மூடிக்கொண்டு இருண்டு மழைத் தாரைகளை நிரம்பச் சொரியவும், வந்த அக் காலத்தில் மதங்கப் பெயருடைய குல மலையைப் போன்ற அம் மலையில், மறுவில்லாத சனகன் மகளும், திருமகளும், நிலமகள் பெற்ற மகளும், தாமரையில் வாழத்தக்கவளும் ஆகிய சீதாபிராட்

டியா ருடைய தனங்களும், கூந்தலும், திருக் கண்களும் நின்னால் நினைக் கப் பெற்றதால் உண்டாக்கிய மயக்கமாகிய நெருப்பு மூண்டெழுவதற்கு முன், நின் உள்ளத்தில் நீண்ட புகை யெழும்புமாறு, வெள்ளிய மணமுறு பூக்கள் நின்மேல் விழுந்துகொண்டே யிருக்க, அதனோடு வாடைக் காற் றும் பரந்து உடலின் கண் வீச, மயக்கத்தைத் தரும் காம நெடுங்கடலில் மூழ்கிய பெருமாளே ; போர்க்கு வேண்டிய வேல்போல், அடி யகன்று நுனி நீண்டு மைதீட்டப்பெற்ற கண்களென்னும் வலையைச் சுற்றி வீசி என்னை அகப்படுத்தி, முத்துமாலையைத் தரித்த தனங்களாகிய யானை யைச் செலுத்தி, நான் விழுமாறு என் மார்பிற் பாயச்செய்து என்னைத் தள்ளி, ஒப்பற்றுப் பரந்த அல்குலென்னும் குதிரையை என் னெதிரில் நடத்தி, அவ் வல்குலில் உள்ள ஒரு சுழியினின்றும் எழுந்து வரவொட்டா மல் மூழ்கிய யழுந்திக் கிடக்கச் செய்துவிடும் பெண்கள் மயக்கில் மயங் கித் திரியும் வஞ்சகமுள்ள பாவி, நான்; அசடன்; முரடன்; இடும்பன்; பெரியோர்க்கு அடாத குற்றம் செய்யும் பிழையன் ; தேடிக்கொள்ளும் கவலையை யுடைய மனதில் நிறைந்த அவா வுள்ளவன் ; இத்தகைய பாவி யேன், நின் பெருமைகளைப் புகழ்ந்தும், நின் அடியார்கள் குலாவிய அவையை நாடிச் சென்றும், இவ்வுலகிற் பிறந்த பிறவிப் பயனைப் பெறு வேனோ? அதனைப் பெறுமாறு அருள்வாயாக.

தனத்தன தந்தன தத்த
தனத்தன தந்தன தத்த
தனத்தன தந்தன தத்த தனதான

140. பயத்தினை லின்சொல்செ ருக்கு
மறப்புமோ கம்புரி விச்சை
பசித்தல்வா ரம்பகை நட்பு நிறைமானம்

பழிப்புநே யம்பொறை யச்சம்
மகிழ்ச்சிகோ பம்பொயி லச்சை
பரத்தலா னந்தம்வி ருப்பம் மதிகீழ்மை

நயப்புலோ பங்குரை தர்க்கம்
முயற்சிஞா னந்துயர் பித்தம்
நடுக்கநோ யன்புவெ றுத்தல் அவதாரம்

நகைக்குரோ தந்தெருள் சத்யம்
அனைத்துமே கொண்டவு யிர்க்கு
நலக்கமே வந்திடின் முத்தி யருள்வாயே

முயக்குரு மங்கையை யுற்று
நினைத்தவா றன்றுமு டித்து
முடிக்கிரீ டந்தலை பெற்று மரசாளும்
முழுப்ரதா பங்கள்ப டைத்து
மமைச்சரோ டும்பதி புக்கு
முதற்பெரு வின்பமி குத்த சிறியோர்போல்
அயர்த்துவாழ் கின்றம யக்கம்
உனக்கிதே னுங்கள்வ ரத்தை
அழிக்குமோ ரம்புமி ருப்ப தறிவாயென்(று)
அருக்கன்மா மைந்தனை வெற்றி
இலக்குவா சென்றெரி மைப்பில்
அழைத்துவா வென்று விடுத்த பெருமாளே.

உரை :—இராமன், சுக்கிரீவனை அழைத்து வருமாறு இலக்குவனுக்குச் சொல்வது.

'இன்ப நுகர்ச்சி பெறுமற் பிரிந்திருந்த மனைவியோடு இன்பம் நுகர்ந்தும், தமையனைக் கொல்லவேண்டு மென்று கருதிய கருத்தினை முடித்தும், முடியைத் தலைமேல் தரித்தும், அரசாளும் பிற சிறப்புக்களைப் பெற்றும், அமைச்சரோடு நகருக்குள் சேர்ந்திருந்தும், முன்னர் இன்பம் பெறுமல் வறுமையில் மூழ்கி யிருந்து பின்னர் மிக்க இன்பம்பெற்ற கீழோர் போல, மறந்து வாழும் இம் மயக்கம் உனக்கேன்; நான்முகன் முதலியோர்பால் நீங்கள் பெற்ற வரத்தை யழித்தற்கு ஒப்பற்ற அம்பு எங்களிடம் உள்ளது;' என்று கதிரோன் மைந்தனாகிய சுக்ரீவனுக்குச் சொல்லி, ஒரு நொடியில் அவனை அழைத்து வாவென்று வெற்றியுள்ள இலக்குவனை அனுப்பிய பெருமாளே; அச்சத்தாற் கூறும் இன் சொல், தருக்கு, மறதி, பரிவு, இச்சை, பசி, அன்பு, வாரம், பகை, நட்பு, நிறை, அபிமானம், பழி, நேயம், பொறுமை, அச்சம், மகிழ்ச்சி, சினம், பொய், நாணம், விரைவு, மிக்க மகிழ்ச்சி, பற்று, பெருமை, சிறுமை, நயப்பு, உலோபம், அருள், சொற்போர், உற்சாகம், ஞானம், துன்பம், மயக்கம், நடுக்கம், நோய், அவா, வெறுப்பு, தானம், சிரிப்பு, வயிரம், தெளிவு, உண்மை முதலியவற்றை உடைமையாகக் கொண்ட என் உயிருக்கு இவற்றாற் கேடுவருங் காலத்துக் கெடாமற் செய்து வீடுபேற்றை யருள்வாயாக.

(" அஞ்சி லம்பதி லொன்றறி யாதவன்
நெஞ்சி னின்றுநி லாவநி றுத்துவாய் "
எனக் கம்பன் கூறியது காண்க.)

தனதன தானன தந்த தந்தன
தனதன தானன தந்த தந்தன
தனதன தானன தந்த தந்தன தனதான

141. நிறைபொருள் போகவ னம்ப டர்ந்தது
வனிதையர் மாகட லின்ப டிந்தது
நெடுகும ஞசையெ னும்பெ ருங்கிரி மிசையேறி
நிலையென வேயழி வின்றி நின்றது
மணியணி யாடைசு கந்த மென்றிடு
நெறிபல வோடியு லந்த தலைந்தது தவிராதே
செறியன பானவி லங்க டைந்தது
துயிலெனு நீடிரு ளின்பு குந்தது
சிறுமக வாதர வின்கொ டுஞ்சிறை யதனூடே
தினமக லாமனு ழைந்தி ருந்தது
வெகுவித மாகிய சிந்தை முந்திய
தெளிவெனு ஞானப தம்பொ ருந்துவ தொருநாளே
உறையுளின் மீதுபு குந்து னின்பமும்
வரிசையும் வாழ்வுமி குந்த தஞ்சமும்
உயிருடன் யாவும்வி ரும்பி லென்புற கினில்வாவென்
றுணர்வுட ஞதர வுந்த விர்ந்தெழும்
இளையபி ராஞெடு மந்தி ரஞ்செறி
உரன னு மாஞெடு மங்க ணைந்துயிர் தடுமாறி
பறையறை யாமன நின்ற லைந்திட
உரைகுள ருவியர் வுங்க லந்துமெய்
பசையற நீடுசெ யம்பு கழ்ந்திரு பதமீதே
பலபிழை கோடியு முண்டு சிந்தையில்
அதுநினை யாதுகொ ளென்று வென்றிகொள்
பருதிகு மாரன்வ ணங்க நின்றருள் பெருமாளே.

உரை :—இலக்குவன் கிட்கிந்தையில் அரசன் மனைவயிற் புகுந்து, சுக்கிரீவனைக் கண்டு, நீ, உன் இன்பமும், அரச வரிசைகளும், செல்வமும், மிக்க காவலும், உயிரும் நிலைத்திருக்க வேண்டுமென்று நினைத்தால் என் பின்னே வாவென்று சொல்லி அறிவும் ஆதரவும் விட்டு எழுந்திருக்க, அப்போது (குரக்கரசான சுக்கிரீவன்,) சூழ்ச்சித் துணைவரான

அமைச்சரோடும், அவர்களிற் சிறந்த அனுமானேடும், இளைய பெருமாளோடும் மதங்கமலையில் இருந்த நின் திருமுன் வந்து, உயிர்தடுமாறவும், உள்ளம் பறையடிப்பதுபோல் நின்று அலையவும், நாக் குளறவும், உடல் பசையறவும், வியர்வை ஒழுகவும் அஞ்சி நின்று நின் வெற்றியைப் புகழ்ந்து, நான் செய்த பிழைகள் பல கோடிக்கு மேலும் உண்டு ; அவற்றைத் தங்கள் திருவுள்ளத்திற் கொள்ளாமல், கருணைபுரிய வேண்டுமென்று வெற்றிபெற்ற கதிரவன் மைந்தன் நின் இரண்டு திருவடிகளிலும் வணங்குமாறு நின்ற பெருமாளே ; என் மனம் பெருஞ் செல்வத்தா லுண்டாகும் இன்பமென்னும் காட்டிலே திரிந்தது; பெண்களின் கலவிக் கடலில் மூழ்கிற்று ; நெடிய மண்ணாசை யென்னும் மலை மீதேறி அதுவே நிலைத்த விடமென்று நினைத்து அழிவின்றி நின்றது; மாணிக்கக் கலன்கள், ஆடைகள், நறுமணமிக்க பொருள்கள் என்னும் வழிகளில் ஓடி வருந்திற்று ; இடைவிடாமல் உணவு, நீர் என்னும் விலங்குகளைச் சேர்ந்தது. தூக்கமென்னும் நீண்ட இருளிற் புகுந்தது ; சிறுபிள்ளைகளிடம் கொள்ளும் பற்றென்னும் கொடிய சிறையிற் புகுந்து ஒருநாளும் ஒழியாதிருந்தது ; இங்ஙனம் பல வகைகளிற் சென்று வருந்திய என் சிந்தை, தெளிவென்று சொல்லப்படும் மெய்யறிவா லடையும் வீடுபேறடைவ தெந்நாளோ ? அதனை இன்றே அருளவேண்டும்.

தனதனன தந்தனன
தனதனன தந்தனன
தனதனன தந்தனன தனதான

142. கடகரிப கர்ந்தமொழி
யுபநிடமு டிந்தவுரை
கரைபலக டந்திடுசொல் ப்ரகலாதன்

கனகனெ டியம்பியது
தழல்முடிவி னின்றுசுரர்
கமையொடுவி ளப்பியது தெளியாதே

குடிலமுழு வஞ்சகர்கள்
அவரவர றிந்தபடி
குணுகுணெனு மந்த்ரமொடு சிலதேவர்

குரைகழல்ப ணிந்துதொழு
தவமிசையின் மங்கிவிடு
கொடுமையது கண்டுமன முருகேனே

முடிபுனையெ மும்பருதி
மகனனுமனங்கதர்கள்
முதன்மைகளறிந்துசொனு நெடுநீலன்
முடுகுதிறலெண்கரசு
ததிமுகனெடும்பனசன்
முடுகுகுமுதன்சமரில் இளையாத
இடபனெடு சங்கனளன்
அடுதிறன்மயிந்தனடல்
இணையிலிதுமிந்தனிவர் முதலானோர்
எழுபதுவெளம்புடையும்
வகைவகைநடந்துவர
இனிமையொடு கண்டுமகிழ் பெருமாளே.

உரை :—வானர வீரர்கள் வருதல் :

முடிதரித்து விளங்கும் சுக்கிரீவன், அனுமான், அங்கதன் ஆகியோர், இவன் இப் பெயருடையன், இன்ன சேனையை யுடையன், இத்தகைய ஆற்றலுள்ளவன் என்று வானர வீரர்களின் பெருமையை யறிந்து சொல்லிய பெரிய நீலன், மிக்க வலிமை யுடைய கரடிகட் கரசான சாம்பவன், ததிமுகன், நீண்ட பனசன், விசையுள்ள குமுதன், போரில் இளைத்துப் பின்வாங்காத இடபன், அவனோடு வரும் சங்கன், நளன், போர்த் திறமைபெற்ற மயிந்தன், ஒப்பற்ற வலிமையுள்ள துமிந்தன், முதலிய படைத் தலைவர்களையும் அவர்கள் சேனைகளையும் தனித்தனி காட்டி யறிவிக்க, எழுபது வெள்ளம் சேனைகளும், தலைவர்களின் பின் வகை வகையாக நடந்துவர நன்மையோடு கண்டு மகிழ்ந்தருளிய பெருமாளே : முற்காலத்தில், முதலை வாயிலகப்பட்ட மதயானை கூப்பிட்ட சொல்லும், நான்மறையின் உட்பொருளாகிய உபநிடதத்தின் முப்பத்திரண்டு உறுப்புக்களும் முடித்த சொல்லும், கல்விக் கடலின் கரைகளைக் கடந்து நின்ற சொல்லும், பிரகலாதன் இரணியனோடு சொல்லிய சொல்லும், நெருப்பின் முடியில் நின்று இமையவர் பொறுமையோடு சொல்லிய சொல்லும் உறுதிப் பொருளென்று உறுதிகொள்ளாமல், கோணிச் செல்லும் நிறைந்த வஞ்சகர்கள் அவரவர் அறிந்தபடி வாய்விட்டுச் சொல்லாமல், நெஞ்சுக்குள்ளே முணுமுணுத்துச் சொல்லும் மந்திரத்தோடு, சிறிய தெய்வங்களின் கழலடிகளை வணங்கிப் பயனின்று மயங்கி விழும் கொடுமையைக் கண்டு மனம் கரைந்து உருகேனோ ? உருகுவேன்.

(நின் திருமந்திரமாகிய எட்டெழுத்தையும் சொல்லுவேன் என்க.)

தானதன தான தந்த
தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான

143. வாயுவுமொ டாது முந்தி
தீயுமுறை யாது மண்டு
வாரியலை யாத னந்த முகமாகும்

மாமறையு நாடி வந்து
காணவறி யாது விஞ்சு
மாயையணு காது யர்ந்த சுடராகி

நீயொருவ னேவி ளங்கி
நாளுமழி யாது நின்ற
நீர்மைதனை யேயு ணர்ந்து தெளியாதே

நீலவிழி மாத ருந்தி
யானசுழி யூட ழுந்தி
நீணரகி லேபு குந்து மெலிவேனோ

மேயகதி ராளி மைந்தன்
ஆதியுனை நான டைந்து
வேதனைகள் போய்மி குந்த வரசாளும்

வீறுடைய னாகி மங்கை
வாழ்வுடைய னாகி யின்ப
மேமருவி னேன்மு குந்த வெனவோதித்

தூயவிரு தாள்ப ணிந்து
நாயடிய னேடு முன்சொல்
சோதியுன தேவ லென்கொல் எனவோடும்

சூழுமெழு தீவு மெங்கும்
மாமயிலை நாட வின்று
தூதுவிட வேணு மென்ற பெருமாளே.

உரை :—சேனைகள் யாவும் வந்தபின் கதிரோன் மகனான சுக்கிரீவன், எழுந்து நின்று, நின்னை நோக்கி, "இறைவனே, நின்னை நான் அடைக்கலம் அடைந்து துன்பங்கள் முற்றும் நீங்கப்பெற்று, செல்வம் மிக்க அரசாளும் பெருமை யுடையனாகியும், மனைவியோடு கூடி வாழும் வாழ்

வுடைய னுகியும், இன்பம் பெற்றேன்;" என்று சொல்லி நின் தூய திரு வடி மலர்களை வணங்கி, "நாயடியேனேடு முன் சொல்லிய மேலான ஒளி வடிவுடையோய், இனித் தங்கள் கட்டளை எதுவோ? சொல்லுக" வென்று சொல்லிய வுடன், 'கடல்புடை சூழ்ந்த ஏழு தீவுகள் எங்கும் பெருமை மிக்க மயில்போலும் சாயலையுடைய சீதையைத் தேடிவரத் தூது விடுக' என்று அவனுக்கு அருளிச்செய்த பெருமானே; 'காற்று வீசாத இடமில்லை; ஆயினும், அக் காற்றும் அங்கு ஓடாது; எல்லாப் பொருள் களையும் சுடும் நெருப்பும் எட்டிச் சுடாது; விரைந்து பெருகும் அலைகளை யுடைய கடல் வந்து அலைக்காது; அளவற்ற பிரிவு (சாகை)களை யுடைய மறை நூல்கள் தேடிக் காண்ட லியலாது; எல்லாவற்றையும் ஆட்டுவித்து அவற்றிற்கு மேற்பட்டு நிற்கும் மாயை கிட்டிச் சேராது; இங்ஙனம் ஒன் றுக்கும் எட்டாமல் மேலான ஒளியாகி, நீ யொருவனேயாகி விளங்கி எந் நாளும் அழியாமல் நின்ற நின் இலக்கணத்தையே ஆராய்ந்து உறுதியாகத் தெளியாமல், நீல நிறக் கண்களை யுடைய பெண்களின் உந்திச் சுழியில் அழுந்தி நீண்ட நரகிற் புக்கு நான் வருந்துவேனே? அவ்வாறு வருந்தாது நின்னையே தெளிவேன்.

தனத்தத்தன தான தானன
தனத்தத்தன தான தானன
தனத்தத்தன தான தானன — தனதான

144. உடுக்கத்துகில் வேணு நீள்பசி
அவிக்கைக்கன பானம் வேணுநெய்
ஒழுக்கப்புன லாட வேணுமுள் — உறுநோயை
ஒழிக்கப்பரி காரம் வேணுமொர்
படுக்கத்தனி வீடு வேணுமுள்
உவக்கச்சிறு நாரி வேணுமிவ் — வகைசேரக்

கிடைத்துக்ரக வாசி யாகினும்
மயக்கக்கட லாடி நீடிய
கிளைக்குப்பரி வாள னுயுயிர் — அவமேபோம்
க்ருபைச்சித்தமு ஞான போதமும்
அழைத்துத்தர வேணு நீயது
க்ரகித்துக்கொள வேணு நாளல — திடர்போமோ

குடக்குச்சில தூதர் தேடுக
வடக்குச்சில தூதர் நாடுக
குணக்குச்சில தூதர் தேடுக — சனவேவி

குறிப்பிற்குறி காணு மாருதி
இனித்தெற்கொரு தூது போவது
குனிப்பிற்பிறர் போன போதினும் வசமாமோ

அடற்குத்திர காத ராகிய
அரக்கர்க்கிளை யாத தீரனும்
அலைக்கப்புற மேகு வீரனும் இனிநீயென்(று)

அழைத்துத்திரு வாழி மோதிரம்
அளித்துத்தன தேவி யாரவ
யவத்துக்கடை யாள மோதிய பெருமாளே.

உரை :—மேற்கே சில தூதுவர் தேடவும், கிழக்கே சில தூதர் தேடவும், வடக்கே சில தூதுவர் தேடவும் போகவேண்டு மென்று ஒவ்வொரு திசைக்கும் இவ்விரண்டு வெள்ளம் சேனைகளையும் தலைவர்களையும் அனுப்பி, முகப்பொலிவு, சொல், செய்தொழில் ஆகிய குறிப்புக்களால், தவறுமற் குறிப்புக்களை யுணரவல்ல அனுமானை நோக்கி, 'இனி, தெற்குத் திசைக்குப் போகவுரிய தூதரை விதிக்கவேண்டு மானால், உன்னைவிட வேறு யார் செல்லினும் சீதையைக் காணும் வசம் உளதாமோ? ஆகாது; ஆதலின், வலிமையோடு வஞ்சகமும் மிக்கவராகிய அரக்கர்க்குத் தோலாத மன வுறுதி யுடையவனும், அலையை யுடைய கடலுக் கப்பாற் செல்லவல்ல வீரனும் நீயே' யென்று கூறி, அவனைத் தனியே அழைத்துத் திருவாழியை நல்கி, பிராட்டியின் உறுப்புக்கட்கு அடையாளமும் சொல்லியருளிய பெருமாளே; எனக்கு அரையில் உடுக்கத் துணி வேண்டும்; மிக்க பசியைத் தணிக்க உணவும் நீரும் வேண்டும்; எள்ளின் நெய்யை ஒழுகுமாறு தேய்த்து நீரிலே மூழ்குதல் வேண்டும்; உடலினுள் இருக்கும் நோயைப் போக்க மருந்து வேண்டும்; படுக்க வொரு தனி வீடு வேண்டும்; மனங்களிக்கச் சிறுபெண் வேண்டும்; இவை முழுதுங் கிடைத்து நான் இல்லறத்தான் ஆனாலும், மயக்கமாகிய கடலில் மூழ்கி, மரபாகத் தொடர்ந்து நீண்டு வரும் சுற்றத்தாருக்குப் பரிவுள்ளவனாகிய எனது உயிர் வீணிற் கழிந்து போகும்; உனது அருள் நெஞ்சமும், மெய்யறிவின் தெளிவும், எனக்குக் கிடைக்குமாறு என்னை அழைத்திடுதல் வேண்டும். மேற்சொல்லிய துகில், உணவு முதலியவற்றை, நீ எடுத்துக் கொள்ளும் அந்நாளன்றி மற்றைய நாட்களில் என் துன்பம் போகுமோ? போகாது.

(நீ தரவேண்டுவன அருள் நெஞ்சம், மெய்யறிவின் தெளிவு என்பன. நீ கொள்ள வேணடுவன, துகில் முதலிய உடலுக்கு வேண்டிய இன்பப் பொருள்கள். இவ் விரண்டும் நின்னாலன்றி அடியேனால் செய்துகொள்ள முடியாதவை என்பது கருத்து.)

தனதானத் தானன தத்தன
தனதானத் தானன தத்தன
தனதானத் தானன தத்தன தனதான

145. முகநாலெட் டானம லர்க்கர
மதிலேபுற் சேர்கர கப்புனல்
முதுநூல்பத் மாசன மிப்படி நினைவாரும்
முடிவேணித் தோளுடை நற்கரம்
மழுமான்முப் பார்வைவ ளைக்குழை
முனைவேல்வெற் பாசன மிக்குறி தெளிவாரும்

புகழ்சேர்பொற் பூமுடி பொற்றிரு
வனைநீள்சக் ராயுத நற்றுகில்
புயன்மேனிக் காமர்ச துர்ப்புயம் மகிழ்வாரும்
புறமேசுற் றேடியு மெய்த்தகு
புகுவாயிற் சார்வதெ னத்தெளி
பொருளுடிற் கூடுவ தொப்பறு நினையேகாண்

மகமீதிற் பூவினு தித்தவள்
பொறையாலிப் பூமியை யொத்துளள்
மதியேயொப் பானமு கத்தவள் முனிவோர்கள்
மடவாரிற் றேசுப டைத்தவள்
சனகேசர்க் கோர்மக ளுத்தமி
வரநாடித் தேடியி னிக்கொடு வருவாயென்(று)

அகல்வானத் தேவர்ப்ரி யப்பட
நெடிதேசுக் ரீவனு வப்புற
அடையார்நெட் டூரில வக்குறி யுளதாக
அவரூருட் பானுவெ ளிப்பட
நமனேவத் தூதரு முற்செல
அனுமானைத் தூதுவி டுத்தருள் பெருமாளே.

உரை :—பின்னும் அனுமானுக்கு இராமன் சொல்லி விடுப்பது :

'சனகன் வேள்விக்காக உழுத நிலத்தில் பிறந்தவளும், பொறுமை யால் நிலத்தை யொத்தவளும், நிறைமதி போன்ற முக முடையவளும்,

மாமுனிவர் மனைவியர் போல ஒளி யுள்ளவளும், (முனிவர் மனைவியருள் அருந்ததி போன்று புகழ் படைத்தவளும்) சனக மன்னனுடைய ஒப்பற்ற மகளும், மேன்மை யுடையவளுமாகிய சீதை என்னிடம் சேருமாறு, அவள் எங்குள்ளா ளென்று விரைவில் தேடிச் செய்தியைக் கொணர்வாய்' என்று சொல்லி, அகன்ற விண்ணாட்டி லுள்ளவர்கள் தங்கள் துன்பம் நீங்கும் காலம் வந்ததென்று மகிழவும், சுக்கிரீவன் உவகைமீக் கூரவும், அரக்கர் ஊரில் தீக் குறிக்கள் உண்டாகவும், அவர்கள் ஊராகிய இலங்கையில் கதிரவன் செல்லவும், எம தூதர்கள் முன்னுற் செல்லவும், அனுமானைத் தூதுவிட்டருளிய பெருமாளே ; நான்கு முகமும் தாமரைமலர் போன்ற எட்டுக் கைகளும், அக் கைகள் ஒன்றில் தருப்பைப் புல் உள்ள கரகமும், அதில் நீரும், மார்பிலணிந்த பழைய முந்நூலும், தாமரையின் மணமும் கொண்ட நான்முகனை உன்னைத் தொழுவோரும், முடிக்கப்பெற்ற சடையும், புலித்தோ லுடையும், நல்ல கைகளில் மழு மானும், முக்கண்களும், காதில் சங்கக் குழையும் தோடும், கூரிய சூலமும், கயிலை மலையாகிய இருப்பிடமும் கொண்ட குறியாகிய சிவபெருமானைத் தெளிந்தவர்களும், புகழ்பரந்த பொன் முடியும், திருமகள் வீற்றிருக்கும் மார்பும், கைகளிற் சங்கு சக்கரப் படைகளும், அழகிய பொன்னுடையும், கருமேகம் போன்ற திருவுருவும், அழகிய நான்கு தோள்களும் கொண்ட குறியாக நினைத்து மகிழ்வோரும் கூடும் பதவி எது? வென்னில், புறம்பே சுற்றிச் சுற்றி ஓடினும் மெய்யாகத் தகுந்த வாயிலாலே உள்ளிடத்தை யுடையதுவே முறையென அறியுமாறு போலத் தெளிந்து ஆராய்ந்தால், முடிவில் ஒப்பற்ற உன்னை யன்றி வேறு கூடும் இடம் இல்லை கண்டாய்.

தந்தன தந்தன தனன
தந்தன தந்தன தனன
தந்தன தந்தன தனன தனதான

146. சிந்தடி யந்தடி யராகம்
வெண்டளை வெண்டுறை யுலாவல்
சிந்தைகொள் வஞ்சிக லியாசி ரியமாலை
திண்குறள் மண்டில சொரூபம்
வெண்கலி பைந்தர வுநேர்மை
செந்தொடை சந்தழி வுதாழி சையினீதி
இந்தநெ டுஞ்செயு ளநேகம்
வண்டொடை யின்பகு திமோனை
இன்பமு ரண்கவொ டுபாதம் இணைகூழை

என்பன நின்றக துவாய்கள்
நின்றுவ ழங்குத மிழ்மாலே
என்றுமுன் வண்சர ணமீது புனேவோனே

வந்துசெ ழுந்துணே வரான
அங்கத னெண்கர சினேடு
மண்டுமி ரண்டுவெ ளமான கவியோடும்

மஞ்சுறை குன்றுதொ றுமேறி
விஞ்சுத டந்தொறு முலாவி
வண்சுர முந்துறை யுமாறு நெடுதேகி

அந்தியு நண்பக லுநாளும்
எங்குமி ளங்கொடி யைநாடி
அந்தமில் வெம்பில மதூடு வறிதேபோய்

அங்கொரு பெண்கொடி நலாள்முன்
நின்றுவி ளங்கனு மதேவன்
அன்புள நெஞ்சில கலாத பெருமாளே.

உரை :—பிராட்டியாரைத் தேடத் தெற்கு நோக்கி வந்த செழித்த நண்பர்களாகிய அங்கதன், கரடிக் கரசனை சாம்பவன், இவர்களோடு வந்த இரண்டு வெள்ளம் சேனைகள் ஆகியவர்களோடும்(அனுமான்)முகில்கள் தங்கும் மலேகளெங்கும் ஏறியும், நீர் நிறைந்த குளங்களெங்கும் திரிந்தும், (மிக்க வழி யிடங்களெங்கும் திரிந்தும்) நிழலும் நீருமின்றிச் சுடும் வன்மை மிக்க பாலே நிலமும், அழகிய நீர்த்துறையும், ஆறும் கடந்து நெடுந் தொலேவு சென்று, இரவு நண்பக லென்னும் வேற்றுமையைக் கருதாமல் நாள்தோறும், இளமையான பூங்கொடி போன்ற பிராட்டியாரை எங்கெங்கும் தேடிய பின், முடிவில்லாத கொடுமையை யுடைய ஒரு பிலத்தினுள் வீணுகச் சென்று, அங்கே யிருந்த அழகிய பூங்கொடிபோன்ற சுயம்பிரபை என்னும் பெண்ணின் முன் நின்று, அவளுடைய பழைய நிகழ்ச்சிகளே விளங்குமா றறிந்த அனுமானுகிய தேவனின் அன்புள்ள மனதிற் பிரியால் இருந்தருளிய பெருமாளே ; மூன்று சீர் ஓரடியாக வரும் சிந்து, அந்தாதி, வண்ணம், வெண்பா, விருத்தம், உலா, மனங்கொள்ளும் வஞ்சிப்பா, கலிப்பா, அகவல், மாலே, திண்மையான குறள், சக்கரமாகிய சித்திரக் கவிகள், கலிவெண்பா, பசுமையான தரவு, நுண்ணிய செந்தொடை, மருட்பா, தாழிசை என்னும் பிரிவுகளே யுடைய நீண்ட பல பாக்களே, வளமாகத் தொடுத்த வரிசையினுல் கூடிய தொடைகளின் தொகுதியோடும் இனிய முரண்களோடும், மேலேயின் பகுதியாகிய

முற்று, இணை, கூழை, பொழிப்பு, ஒரூஉ, கீழ்க்கதுவாய், மேற்கதுவாய்க ளெல்லாம் நிற்குமாறு உலகில் விளங்கும் மாலையாகப் பாடி வளம் மிக்க நின் திருவடிகளில் என்றும் சாத்தி மகிழ்வேனோ?

(அப்படி மகிழும் நாளே நான் கடைத்தேறும் நாளாம்.)

தனனா தனந்த தனனா தனந்த
தனனா தனந்த தனனா தனந்த
தனனா தனந்த தனனா தந்தன தனதான

147. அலையா துநின்ற வுயிரோ டுடம்பு
குறிலே வளர்ந்த நெடிலே கிளர்ந்த
அளவே வலிந்த வலியோ டுமென்சொல் இடைசார்வே
அணிமூ வினங்கள் குறையே யிதன்றி
நிரைநே ரிரண்டு மிருநா லுகொண்ட
அசையே யிதன்றி யியலே விளங்கு முருவோடே

உலையா துநின்ற பொதுவே யியம்பு
தளையே முபின்பு குறளோ டுசிந்து
மொழியா தமைந்த வளவோ டுயர்ந்த நெடில்கூடி
உடனே கழிந்த நெடிலா கவைந்து
மடியா கவந்த தமிழ்மாலை கொண்டு
முருவே புனைந்து பெறுவாழ் வையன்றி நினையேனே

பிலமீ துகண்டு செயரா மசந்த்ரன்
விடுதா தனென்று தலைநா ளின்முன்பு
பெறுசா பமென்று தொழுதே நடந்து தவிராத
பெருவாழ் வுவந்த தெனவே வெழுந்த
மடமா னிரங்கி வழிமா றிவந்த
பிழைதா னுணர்ந்து தரைமேல் பிளந்து வரவேணும்

வலியே தொடங்கு மெனவே விளம்பி
அவள்போ னபின்பு சலியா துநின்று
வளமா மிரண்டு வெளமா னமொய்ம்பர் அனைவோரும்
வளர்தோ ளிரண்டின் இடைநா லவண்ட
முடிபோ யுரிஞ்ச விமையோ ரிறைஞ்ச
மலைபோ னிமிர்ந்த வனுமான் வணங்கு பெருமாளே.

உரை :—பிலத்தின் ஓரிடத்தில் சுயம்பிரபை யென்னும் பெண்ணைக் கண்டு 'வெற்றி மிக்க இராமசந்திரன் விட்ட தூதன் நான்; இங்குள்ள நீ யார்?' என்ற அனுமானுக்கு அவள் முன்னாளில் பெற்ற தவிர்க்க முடியாத சாபம் இதுவென்று சொல்லிப் பரிந்து வணங்கி நடந்து வந்து, அழியாத செல்வம் கிடைத்ததுபோல் மகிழ்ந்து, மடப்பத்தை யுடைய அச்சுயம் பிரபை மனமிரங்கி, வழிதவறி வந்த அவ் வானரர்களின் பிழையை யுணர்ந்து, நீங்கள் பூமியை மேலே பிளந்து போகவேண்டும்; வலிமை மிக்கவர்கள் பூமியைப் பிளக்கத் தொடங்குங்கள் என்று சொல்லி விட்டுப் போனாள். அதன் பின், வளமுடைய இரண்டு வெள்ளம் வானர வீரர் களும், மனச் சோர்வின்றி உறுதியாக நிற்க, வளர்ந்த இரு தோள்களி னிடத்தும் பிலத்தின் மேல் பூமி தொங்குமாறு, தேவர்கள் வணங்கத் தலை மேலே சென்று ஆகாயத்தில் உறைப்பட மலைபோல் எழும்பிய அனு மான் வணங்கிய பெருமாளே : காரிகை யுதாரணம் அழிந்து பிறந்து அலை யாமல் நிற்கும் உயிரெழுத்து, மெய்யெழுத்து, அவற்றோடு சேர்ந்த குறில், நெடில், ஆகார அசைவில் அகரமும், ஈகார அசைவிலும் ஐகார அசைவி லும் இகரமும், ஊகார ஔகார அசைவுகளில் உகரமும் சேர்ந்தெழும் அளபெடையும், திண்மையான வல்லினம் ஆறும், மெல்லினம் ஆறும், இவற்றின் இடை நிகரவாய் ஒலிக்கும் இடையினம் ஆறும், ஆகிய அழகிய மூவினத் தெழுத்தும், மூவகைக் குறுக்கங்களான குற்றிய லிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் என்னும் மூவினங்களும், இவையன்றி, நிரை நேர் என் னும் இரண்டசையுங் கூடி உண்டாகும் அசைவிகற்பங்க ளாகிய எட்டுச் சீர்களும், இயலென்று விளங்கும் உறுப்பும், பொதுச் சீர்களும், உறுப் பியல், செய்யுளியல், ஒழிபியல் என்று காரிகை வகுத்த மூன்றியல்களின் படி யமைந்த எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்னும் எழும் கூடியபின், இருசீர் ஓரடியாகிய குறளடி, முற்சீ ரோரடி யாகிய சிந்தடி, கெடாத நாற்சீர் ஓரடியாகிய அளவடி, அதனோடு ஒருசீர் உயர்ந்த நெடிலடி, அறுசீர் ஓரடி முதலாக வரும் கழிநெடிலடிகளும் சேர இவற்றால் அமைந்த தமிழ் மாலையைக் கொண்டும், என் அறிவைக் கொண்டும், நின் திருவடியிற் புனைந்து பெறும் செல்வத்தை யன்றி நான் பிறிதொரு செல் வத்தையும் நினையேன்.

தனதந்த தானன தனன தானன
தனதந்த தானன தனன தானன
தனதந்த தானன தனன தானன தனதான

148. இருகும்ப மாகிய கனப யோதர
முழுவஞ்ச லோசன மதுர வாசக
இருள்கொந்த ளாடவி யிளநி லாநகை மடவார்தம்

இடைகண்டு நூபுர மலற வேவரு
நடைகண்டு நாடக மயிலே யேநிகர்
எழில்கண்டு நாபியு மினிய ரோமமும் உடனேகண்

டுருகுந்து ராகத விரக பாவியை
முழுவஞ்ச காரனை வெகுளி யாளனை
உளமுங்க லாகிய வசட மூடனை வினையேனை

உனதொண்ச ரோருக சரண மீதினில்
மருவும்ப்ர காரமு மருளி யூழ்வினை
உளநொந்த மாயையு மகல வேக்ருபை புரிவாயே

வரைமண்டு காடுக் ணெடிது போய்விரி
திரைமண்டு சாகர மளவி லாயபின்
மகமந்த்ர பூதர சிகர மேவிமெய் தளிர்வாகி

வருநண்பர் கள்ளிறை யவதி கூறிய
தொருதிங்க ளாகியுந் திருவை நாடவும்
வகைகண்டி லோமிவை புகல நாயகன் உழைபோனல்

அரசன்கொ லாதினி விடுவ னேநமை
மலர்மங்கை காரண மொருச டாயுவும்
அருமந்த வானவர் பதவி யேறினன் வினையோமும்

அரிமந்த்ர மேசொலி யுயிரை யேவிடில்
இடரின்று போமென நெடிது நோவுறும்
அனுமன்ப ராவிய ரகுகு லாதிப பெருமாளே.

உரை :—பிலத்தைத் தகர்த்துப் பூமியில் வந்து, மலைகள் மிக்க காடுகளை நீண்ட வழிசென்று கடந்து, விரிந்த அலைகள் கரையின் கண் மோதுகின்ற கடல்வரையில் தேடியபின், மகேந்திர மலையின் உச்சியில் ஏறி வானரர் எல்லாரும் உடல் சோர்ந்து இருந்தபோது (அனுமான்) அவ் வானரர்களைப் பார்த்து, " என் தோழர்களே, நம் அரசன் குறிப்பிட்ட ஒருமாத கால அளவு கழிந்தும், பிராட்டியாரைக் காணும் வகை கண்டோமல்லோம்; இச் செய்தியைச் சொல்ல அரசனிடம் நாம் போனல், ' நீங்கள் ஒருமாத காலத்துக்குள் வராமல், அதைக் கடந்துவந்தால் கொல்லுவேனெ 'ன்று சொல்லிய அவன், இனி நம்மைக் கொல்லாது விடான் ; மலர்மகளாகிய சீதாபிராட்டியார் காரணமாக ஒப்பற்ற சடாயுவும், எவர்க்கும் கிடைத்தற்கரிய உயர்ந்த வீட்டுலகை அடைந்தான் ; ஆதலின், பாவிகளாகிய நாமும், 'இராமா' வென்னும் திருமந்திரத்தைச் சொல்லித் துணிவுடன் உயிரை

விட்டால் நின்று நம் வருத்தம் நீங்கும்;" என்று பலவகையாகச் சொல்லி மனம் நொந்த அனுமனால் போற்றிப் பரவப்பட்ட ரகுகுல அரசர்களின் பெருமாளே ; இரு பொற்குடம் நிகர்த்த கனத்த தனங்களும், நிறைந்த வஞ்சகமுடைய கண்களும், இன் சொற்களும், இருண்ட குழற்காடும், இள மதி போன்ற ஒளியுடைய பற்களும் கொண்ட பெண்களின் இடையைக் கண்டு, காலிலுள்ள சதங்கை, கிண்கிணி, தண்டை முதலிய அணிகள் ஒன்றோடொன்று பட்டு இருத்தலால் அவ்விடை யொடிந்து விடுமோ வென்று அஞ்சி, அவை கதறி ஒலிக்கக் கண்டு மகிழ்ந்தும், நடையைக் கண்டு, ஆடும் மயில்கள்போன்ற அழகை வியந்தும், உந்திச் சுழியிலும் அதன்மேல் நெஞ்சை யுருக்கும் மயிரொழுங்கிலும் மயங்கியும், மனமுருகும் நான் துராக்ருதமான காம விகாரன்; நிறைந்த வஞ்சகம் செய்பவன்; சின முடையவன் ; கல்போல் உருகாத மனமுடைய நடைப்பிணம் போன்ற வன் ; அறிவற்றவன் ; தீவினை யுடையவன் ; இத்தகைய நான், நினது தாமரை மலர்போற் சிவந்த திருவடிகளிற் சேர்தற் குரியவாறு அருள் புரிவாயாக.

தனதனன தந்தனன
தனதனன தந்தனன
தனதனன தந்தனன தனதான

149. விடுவிடுபெ ருந்துயரை
ஒழியொழிய கந்தைதனை
விழிவிழியு கந்தெமது வடிவேநீ

விவரமிது மந்த்ரமிது
நிலைமையிது யர்ந்ததிது
வெளியிலொ ளிர்கின்றதிது தெளிவாயென்

றிடர்வினைக ளைந்துபெரு
நெறியுதவி யின்பமுடன்
இகபரமி ரண்டுமொரு சமனுக

இனியநிலை நின்றுவிட
எனதுமுனெ ழுந்தருளி
எனையடிமை கொண்டருள நினைவாயே

நெடியமக மந்த்ரகிரி
யதனிடையி ருந்தளவில்
நிகரிலொரு தம்பிபடு புகழ்கேளா

நிறைசிறகு வெந்துருகும்
எருவையர சன்கதறி
நிலையறவு ருண்டுவர இவனறென்

றடிபிடியெ றிந்துபொரு
நிருதர்கப டம்புரியும்
அடைவெனவெ குண்டிடலும் வரலாறங்(கு)

அவனினிதி யம்பியவர்
உறுதுயர்க ளைந்துதவும்
அனுமனைய கத்துடைய பெருமாளே.

உரை :—மேற் கண்டவாறு அனுமான் சொல்ல, முன்னரே, அந்த நீண்ட மகேந்திரமலையின் ஓரிடத்தில் சடாயுவின் தமையனை சம்பாதி யிருந்தளவில், ஒப்பற்ற சிறந்த தன் தம்பி பெற்ற புகழைக் கேட்டு, நிறைந்த சிறகுகள் வெந்ததால் மனம் உருகியிருந்த அக் கழுகரசன், வாய்விட்டலறி நிலைபெற்ற மனத்துணிவு கெட்டு, உருண்டு வர, அதனைக் கண்ட வானர வீரர்கள், 'அடி, பிடி யென்று சொல்லி வாளா விருந்தால் பயனில்லை; படைக் கலங்களை வீசிப் போர்செய்யும் அரக்கர்கள், வஞ்சனை செய்யும் முறை யிதுவாகும்' என்று நினைத்து, எல்லோரும் சினங் கொள்கையில், சம்பாதி அவர்களை நோக்கி, "நான் சடாயுவின் தமையன்; என் பெயர் சம்பாதி; நாங்கள் இருவரும் அருணன் மக்கள்; நாங்கள் கதிர் மண்டலத்தைக் காண்டற்கு ஒரு தடவை சென்றோமாக, என் தம்பி வெப்பம் பொறாமல், தவிப்பதை நான் கண்டு, அவனுக்குமேல் எழும்பி, என் சிறகால் அவனுக்கு நிழல் செய்ய, சடாயு கீழிறங்கிப் போனான்; என் சிறகுகள் வெந்து போனதால் நான் இம்மலையின் கண் விழுந்தேன்; என் பிள்ளை எனக்கு இரை கொடுத்து வந்தான்; பல நாட்கள் கழிந்தபின், நாரதமுனிவர் இங்குவந்து, இராமா வென்னும் திருமந்திரத்தை அவர் அடியவர் சொல்ல நான் கேட்டபோது என் சிறகுகள் வளருமென்று சொன்னார்; இஃதென் வரலா"றென்று அச் சம்பாதி யினிமையாகச் சொல்ல, அவன் துன்பத்தை இராம மந்திரத்தால் போக்கிச் சிறகுண்டாமாறு உதவிசெய்த அனுமானை மனத்தில் மகிழ்ந்து கொண்டருளிய பெருமாளே; "உலக வாழ்வில் வரும் பெருந் துன்பத்தை விடு விடு; அகந்தையை யொழித்து விடு; நம் திருவடியை மனதில் பார்த்துக்கொண்டிரு; இது விவரம்; இது மந்திரம்; இது அழியாமல் நிற்பது; இது எல்லாப் பொருள்கட்கும் மேலாகி யுயர்ந்தது; ஒன்றுமில்லாத வெட்ட வெளியில் ஒளிர்வது; என்று கூறும் இத்தகைய என் திருவடியை ஆராய்ந்து தெளி" என்று நீ எனக்குச் சொல்லி, துன்பந்தரும் பழவினைகளை வேரறுத்

துப் பெருமையுள்ள ஞானநெறியை அறிவித்து, மிக்க மகிழ்ச்சியோடு நில உலக இன்பமும், வீட்டுலக இன்பமும் ஒரு சமனுக்கி இன்பம் நிலைத்த பரமபதமான அழியாத நிலையிலே சலியாது நிறுத்தி, மீண்டும் பிறத்தலைத் தொலைக்குமாறு அடியேன் முன் எழுந்தருளி அடிமையாக்கி என்னை யாளத் திருவுள்ளத்தில் நினைக்க வேண்டும்.

தான தானதன தாந்தன தானந்
தான தானதன தாந்தன தானந்
தான தானதன தாந்தன தானந் தனதான

150. பாகு போலினிய தேன்கனி யூறுங்
கோவை போலமுது தேங்கித மூறும்
பான மேபருகி வாஞ்சையி னன்மங் கையராசைப்
பாச மீதுபடு மூங்கைவ்ரு தாவன்
சோரன் மாவிரகன் வீம்புகள் பேசும்
பாவ சாதகன்ம தாந்தனி ராவும் பகல்தானும்
தாகன் மோகனபி ராந்தியில் வீழும்
தீமை யானவையெ லாங்கெட வேயுன்
தாள்க ளேபரவி வேங்கட மாகுங் கிரிமேலே
சாதி வானவர்க டாந்தொழ நீவண்
காள மேகமென வேவளர் கோலஞ்
சால வேகருதி யீங்கொரு காலம் பெறுவேனோ
ஏகி ஞ்ஞதகட முண்டுமு னேசிங்
கார மாகியம கேந்திர மாகுன்
றேறி யேயெருவை வேந்தனை யேகண் டவன்வாழ
ராம ராமவென மேம்படு நாமங்
கூறு போதுகதி ரோன்சுட வேயங்
கீறி லாதசிறை தீய்ந்தவெ லாம்வந் திடலோடும்
சோக மாறியவ னேந்திழை யாண்முன்
போன வாறுசொலி நீங்கிட வேசந்
தோட மாயினிய சாம்பவ னோடங் கதனோடும்
சூழ மேவியுயிர் வாழ்ந்தன மேயென்
றோடி யாடுமனு மான்றனை நாளும்
தூத னாகவினி தாண்டவ னேநம் பெருமானே.

உரை :—கடக்க வியலாத கடலைத் தாண்டுவதற்கு முன், அழகிய பெரிய மகேந்திரமலையில் ஏறிக் கழுகரசான சம்பாதியைக் கண்டு, அவன் வாழுமாறு இராமா, இராமா என்னும் மேன்மைபெற்ற பெயராகிய திரு மந்திரத்தைச் சொல்லியபோழ்து: முன் கதிரவன் சுட்டதால் தீய்ந்து போன சிறகுகள் (இரண்டும்) எல்லாம் வர, அச்சம்பாதி தன் துன்பந் துடைத்து நின்று, "வானரர்களே, முன்னொரு நாள், பொன்னாலும் மணிகளாலும் செய்யப் பெற்ற அணிகலன்களை யணிந்த பிராட்டியாரை, இராவணன், கொண்டு போம்போது அவள் அழுது முறையிட்ட குரலை எனக்கு இரை கொணர்ந்து கொடுக்கும் என் மகன் கேட்டு, அவனை யெதிர்த்து அடிக்கப்போகும் சமயத்தில், அவன் காலில் அவ்விராவணன் விழுந்து வேண்டிக்கொண்டதனால் அவனை என் மகன் போகவிட்டு வந்தான்" என்று சொல்லிவிட்டு அம் மலையைவிட்டுப் போக, மிக மகிழ்ந்து நன்மை மிக்க சாம்பவனோடு அங்கதன் சுற்றி யிருக்க, இனி உயிர் பிழைத்தோ மென்று ஓடியாடிய அனுமானை எந்நாளும் இன்பமுள்ள தூதனாக ஆளும் அரங்கப் பெருமாளே ; கருப்பஞ்சாறு போல இனிமை யூறும் சாற்றினை யுடையதும், கொவ்வைப் பழம்போல் சிவந்து இனிய அமுத நீர் நிறைந்ததுமான உதட்டிற் குடிக்கும் நீரைச் சுவைத்ததனால் பெண்கள் பால் உள்ள மயக்கமாகிய வலையில் அகப்பட்ட நான் ஊமை; வீணன் ; கள்வன்; பெருஞ் சூழ்ச்சியாளன்; வீம்புகள் பேசும் பிறப்பினன்; தருக்குள்ளவன்; இரவும் பகலும் பெண்களையே நினைப்பவன்; காமமுள்ளவன்; மயக்கமாகிய காமக் குழியில் விழுபவன்; இத்தகைய என் தீமைகள் எல்லாம் கெட, நின் திருவடிகளை போற்றிப் புகழ்ந்து, திருவேங்கடமாகிய திருமலையில் உயர்ந்த தேவர்கள் வணங்கி நிற்க, நீருண்டு கறுத்த முகில் போல ஓங்கி வளர்ந்த நின் திருவுருவை மிகவும் நான் நினைத்து இவ் வுலகில் வாழும் ஒரு நற்காலத்தை இனிப் பெறுவேனோ ?

தானன தானன தந்த தானன
தானன தானன தந்த தானன
தானன தானன தந்த தானன தனதான

151. நீராடு வார்திரு மந்த்ர மேசொலி
தூநாம மேனிய ணிந்து ளார்சுசி
நேரேவி டாதுபொ ருந்து வார்குரு உபதேசம்
நேர்பேணு வார்நெறி நின்று நீள்குறி
சார்வாகு வார்மலர் கொண்டு நீர்கொடு
நீமேவு கோயில்வ ணங்கு வார்நி னதடியாரை

ஆராதி யாவுன தெண்பு ராணமும்
மாருத ரூபமும் நின்ப்ர காசமும்
ஆலோப மேயற முந்து கேள்வியின் உணர்வார்முன்
ஆபாவி யேன்மிகு துன்ப மானதில்
நாடோறும் வீழ்வது கண்டு மீரமொ
டாளாது நீவிடி லிங்கு வேறெனே அறிவார்யார்

மாராவ ணேசனி ருந்த வூர்மிசை
காவூடு தேவிய மர்ந்து ளாளென
வாயார வேசொனெ டும்பு ளேகனும் அடல்வீரர்
வாராழி பாதிக டந்து மீளுவன்
நேர்போவன் மீள்கல னென்று கால்வழி
வானூடு தாவுவன் என்று தாமுறு குறைகூறி

யாராலி தாகுமி லங்கை போய்வர
நாராய ணாரகு நந்த னாவலி
ராமாக்ரு பாகர செங்க ணாவென அயர்போதில்
ஈதேது பாரமி ருந்து பாருமின்
ஸ்ரீதேவி யாரருள் உண்டெடா னார்புரம்
யானேகி மீளுவ னென்ற மாருதி பெருமாளே.

உரை :—பெரிய இராவண னாகிய அரக்கர்க் கரசனிருந்த இலங்கையில் சோலைக்குள் பிராட்டி யமர்ந்திருக்கிறா ளென்று வாயாரச் சொல்லிப் பெரிய சம்பாதிப் பறவை போனபின், வலிமை மிக்க வானர வீரர்களிற் சிலர், மிக்க நீரையுடைய கடலிற் பாதி கடந்து திரும்புவோமென்றும், கடலைச் செம்மையாய்க் கடப்போம்; மீளும் வலியில்லோமென்றும், வாயு மண்டலத்தின் வழியே விண்ணின் நடுவே கடந்துபோவோமென்றும், தங்கள் குறையைச் சொல்லி, இலங்கைக்குப் போய் வருதல் எவரால் ஆகும்? ஒருவராலு மாகாது; நாராயணா; ரகுமரபிற் பிறந்தோனே; அழகிய இராமா; அருள் வடிவே; செந்தாமரைக் கண்ணா; என்று தொழுது அயர்ந்தபோது, 'இஃது எம்மாத்திரம், நீங்கள் இங்கேயேயிருந்து பாருங்கள், எனக்கு உலகத் தாயாகிய பிராட்டியாரின் திருவருள் உண்டு; ஆதலின், பகைவர் தம் நகருக்குப் போய் வருவே' னென்று சொல்லிய அனுமானை யுடைய பெருமாளே; நின் அடியார்கள், தூய நீரில் மூழ்குவர்; அச்சுதா, அநந்தா, கோவிந்தா வென்று சொல்லி ஆசமனம் செய்வர்; பின், ஒழுக்க நெறியைத் தொடங்குவர்; தூய்மையை விடாமல் அதில்

செம்மையாகப் பொருந்துவர்; குரு உபதேசத்தை மறவாமல் அதனைப் பெருமையாக மதிப்பர்; இந் நெறிகளில் தவறாது திருமண்ணை அடியாரடையாளந் தோன்ற அணிவர்; பூவும் நீரும் கொண்டு, நீ எழுந்தருளியுள்ள திருக்கோயிலை வணங்குவர்; நின் அடியவரைப் பூசிப்பர்; நின் புராணங்க ளாகிய வைஷ்ணவம், பாகவதம் முதலிய எட்டையும், அழியாத நின் வடிவத்தையும், நினது ஒளியையும், வியப்புப் பொருந்திய ஒப்பற்ற முறையில் கற்றுத் தெளிந்த கேள்வியால் தெளிகின்றார்கள்; அவர்கட்கு முன்னே, வெறுக்கத் தக்க பாவியாகிய அடியேன், மிக்க துன்பப் படுகுழியில் எந்நாளும் விழுவதைப் பார்த்து, அன்போடு என்னை யாளாமற் போனால் என்னை யறிவார் இங்கே யாருளர்? நின்னை யன்றி ஆளவல்லார் பிறரிலர். ஆதலின் நீயே எனக்குத் துணை.

## கிட்கிந்தா காண்டம் முற்றும்.

ஸ்ரீ

# 5. சுந்தர காண்டம்.

தனனு தந்தன தந்தன தத்தன
தனனு தந்தன தந்தன தத்தன
தனனு தந்தன தந்தன தத்தன தனதான

152. தனியே வந்தனை மங்கையி னைத்தனள்
இனிநீ யெங்கள்கு றுங்குடி லிற்புகு
தளர்வா றென்றுவி ருந்து விளக்குதல் எனவேசெந்

தமிழே கொண்டுவி ளங்கும கப்பொருள்
அடைவே வம்பில்வி ளம்பியு ழுத்தர்கள்
தமையே விஞ்சுபெ ருந்தலை மைப்பெயர் அதுகூறித்

தினமா னம்புவி யெங்குமி ரப்பொடு
புலவோ ரென்றுதி ரிந்துக ருத்துறு
தெளிவே யின்றிம யங்குமெ னக்கொரு நெறியோதிச்

செயமூ தண்டம ளந்தம லர்ப்பதம்
இருபோ துந்தலை கொண்டுதி ருப்புகழ்
திருநா மஞ்சொலி யின்புற வைப்பதும் ஒருநாளோ

வன்மே சென்றுநெ டுங்கிரி மற்றுள
திசைபோய் வெங்கடல் அங்கொரு தத்தென
மதியா நின்றுக டந்தொர ரக்கிதன் உடல்பீறு

மருவார் வெஞ்சிறை யின்கணி ருப்பவள்
இருபா தந்தொழு தந்தவி லச்சினை
மயிலே கொண்டரு ளென்றுகொ டுத்தொரு
மணியேகொண்

டனைவோ ரும்பட வன்றலை பத்துள
நிருதே சன்குல மைந்தனை ரைப்புண
அவனூர் செந்தழல் மண்டியி டப்பொரு துடன்மீளா

அரசே கண்டனன் வஞ்சியை மற்றென
திருதோ ளின்கணெ ழுந்தருள் தெற்கென
அனுமான் வந்தது கண்டுப்ரி யப்படு பெருமாளே.

உரை:—இக் காண்டத்தின் கதையைப் பாயிரமாக இஃது உணர்த்து கின்றது.

பிராட்டியாரைத் தேடுதற்குக் காட்டிற் போய் மலை முதலிய பல் வேறிடங்க ளெங்கும் சென்று தேடிய பின், விருப்பந் தருங் கடலைக் கண்டு இங்கே யிது நமக்கொரு தடை யெனக் கருதி அதனைக் கடந்து ஓர் அரக் கியின் உடலைக் கிழித்து இலங்கையிற் போய், பகைவராற் கொடிய சிறையில் வைக்கப்பட்ட பிராட்டியாரின் இரு மலரடிகளையும் தொழுது, தாம் கொண்டு சென்ற அடையாளமாகிய இராமனது ஆழியை, மயில் போன்ற சாயலை யுடைய பிராட்டியாரே பெற்றுக் கொள்ளக் கொடுத்து, அவள் அளித்த ஒப்பற்ற சூளாமணியை வாங்கிக்கொண்டு, அசோக வனத் தையும் அழித்து, தன்னை விலக்க வந்த அரக்கர் எல்லோரும் அழியுமாறு செய்து, பத்துத் தலைகளை யுடைய அரக்கர் கோனாகிய இராவணன் மைந்தனாகிய அட்சயனைத் தரையில் தேய்த்து அரைத்து, இலங்கை யெங் கும் செந்நிறமான நெருப்புப் பற்றி யெரியும் வண்ணம் போர் செய்து, மீண்டும் கிட்கிந்தையின் பக்கத்தில் மதங்கமலைக்கு வந்து, “எங்கள் தலை வனே, கண்டேன் பிராட்டியாரை; வேறு சொல்லுதற்கு யாதுளது; என் தோளினிடத்தில் ஏறித் தெற்கே எழுந்தருள்க” என்று அனுமார் சொல்ல அவர் வந்ததைக் கண்டு மகிழ்ந்த பெருமாளே; கோவைத் துறைகளில் ஒன்றாகிய விருந்தோம்பல் என்னும் துறையாகப் பாடும் செய்யுளாக, “தனியே வந்தனை, உன் மனைவி யிளைத்தனள்; இனி எங்கள் சிறு குடி லிற் சேர்ந்திரு; இளைப்பாறு;” என்று முகமன் கூறி இன்புறச் செய்யும் விருந்து விளக்குதல் என்னும் துறையை யிசைத்துச் செவ்விய தமிழைக் கொண்டு, அகப் பொருள்களை முறையாகவும் வீணாகவும் பாடி உலோபிக ளின் விஞ்சிய பெருமையை யுடைய தலைமைப் பெயரைச் சொல்லி, என் றும் உலகெங்கும் இரக்கும் தொழிலை மேற்கொண்ட புலவனென்று பெயர்படைத்துத் திரிந்து, உள்ளத்தில் தெளிவின்றி மயங்கும் எனக்கு, ஒப்பற்ற ஞான நெறியை அறிவித்து, வெற்றியோடு உலகத்தை ஓரடியால் அளந்து விண்ணுலகை மற்றோரடியால் அளந்த செந்தாமரை மலரைப் போன்ற நின் திருவடிகளை இரவு பகலாகிய இரு காலங்களிலும் நான் என் தலைமேற் கொண்டு நின் அழகிய புகழையும் திருப்பெயரையும் சொல்லி மகிழ்வோ டிருக்குமாறு செய்வது ஒரு நாளோ? அதனை இன்றே செய்தருள வேண்டும்.

(‘ அமலா கண்டனன் வஞ்சியை,’ எனவும் பாடம்.)

தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன தனதான

153. தொடைநெ கிழ்ந்தது மாமுர ஞானது
வழுவி ருந்தது பாரமி லாதது
துறையு டன்பொருள் கோள்விர வாதது தெளியாதே
துணிபி றந்தது சோர்வுவி டாதது
நெருடு கின்றது சீருட னேதனை
சுலப மன்றிவ்ரு தாவழி போனது பலநூலின்
படிமு டிந்தது சேர்வையு ருதது
கொழுகொ ழென்றது கோவைபெ ருதது
பழுது கொண்டது நாடகி லாதது மொழிதானும்
பசைவ றந்தது வேறொரு நீள்கவி
அடிய டங்கிமு னேடுபி ஞானது
பதரி தென்கினு நாமமி தாகையின் நலமாமே
முடிநி மிர்ந்திட வால்விசை யோடெழ
உடல்சு ருங்கமு னேயிரு பாணியும்
முடுகி விஞ்சிய ரூபமு மேலிட உயர்வான்மேல்
முதுகு ரிஞ்சவி டாதிரு கால்களும்
நடுமு டங்கமெய் மார்புகி ரீவமும்
முறையொ டுங்கிட நீள்விசை யானெடு மலையாவும்
அடிப றிந்திட மாமயி நாகமும்
வெளிதெ ரிந்திட நீர்கிழி யாவரி
அரவு தங்கிய பாதல மீதுறை பவர்காண
அலைக லங்கிய சீகர மோகர
கடல்க டந்திடு வாயுகு மாரனை
அடிமை கொண்டவ னேயடல் வானவர் பெருமாளே.

உரை :—கடலைத் தாண்டுதற்கு முயலும் அனுமான், தன் முடி மேலே நிமிரவும், தலைக்கு மேல் வால் விசையோ டெழவும், உடல் சுருங்கவும், அதற்கு முன் இரு கைகளும் வாலை முறுக்கி விசை கொடுக்கவும், மிகவும் உடல் வளரவும், உயரமான அண்டச் சுவரின்மேல் முதுகு உறைபடவும், தளர்ச்சி யில்லாமல் இரண்டு அடிகளும் அழுந்தவும், நகங்கள் முடங்கவும்,

திருமேனியும், மார்பும், கழுத்தும் தாவும் விசைக் கேற்றவாறு ஒடுங்கவும், அழுத்தி யெழுந்த நீண்ட விசையால் நெடிய மலைகளெல்லாம் வேர் பறிந் தெழவும், கடலில் மூழ்கிக் கிடக்கும் மைந்நாகமலை, இந்திரனுக்கு அஞ் சாது மேலே வந்து தெரிய நின்று முகமன் செய்யவும், விசைக் காற்றால் நீர்கிழியப் பெற்றுக் கீழே பாம்புகள் வாழும் பாதலத்தி லுள்ளவர்கள் (பாம்புக் கரசர்கள்) காணவும், கலங்கிய அலைகளையுடைய ஒலிக்கும் கடலி லுள்ள நீர்த்துளிகள் ஓசையோடு துளிக்கும் கடலைக் கடந்து செல்லும் வாயுவின் மகனாகிய அனுமானை அடிமையாகப் பெற்றவனே; வலிமை மிக்க தேவர்கட்குப் பெருமாளே; இவ் விராமசெய மென்னும் சிந்து செய்யுட் டொடைகள் தளர்ந்தது; பெரிய மூரா ணுடையது; பொருத்த மற்றது; பெருமையற்றது; நெருடானது; தளையும் சீரும் எளிமை யின்றி நிற்பது; ஒன்று சொல்லு மிடத்துப் பல நூற்களின் வரிசைப்படி முடிந்து துறையோடு பொருள் கோள் இராதது; தெளிவின்றி மயக்கந் தருவது; பொருட் கோவை யில்லாதது; இனிமை யற்றது; செவ்வை யின்றி ஏறித் தாழ்ந்து சேரவேண்டும் கருத்துக்கள் சேராதது; குழகுழ வென்றிருப் பது; இசையற்றது; குற்ற முடையது; ஆராயத் தகாதது; சொற்களும் பயனின்றி வறண்டுள்ளது; நீண்ட வேறோர் பாட்டின் அடியை முன்னும் பின்னும் பெற்றுள்ளது; இத்தகைய பல குற்றகளும் பொருந்தி யுள்ளமை யால், இது பாட்டுக்களிற் பதர் என்று உலகோர் கூறினும் நினது திருப் பேரை யுடைய தாகையால் எல்லாக் குற்றங்களுந் தீர்ந்த நற்பாடலாகும்.

(இப் பாட்டில் செய்யுளுக்கு அமைந்திருக்க வேண்டிய இலக்கணங் கள் கூறப்பட்டுள்ளன. அவை இந்நூலில் இல்லை எனினும் சிறந்தது என்கிறார்.)

தான தனத்தன தத்தன
தான தனத்தன தத்தன
தான தனத்தன தத்தன தனதான

154. தேனேர் குறிப்புவெ ளிப்படை
வேறே விரித்திடு கட்டுரை
சீரா ரெழுத்தொடி லக்கிய முதலாகத்
தேர்கோள் களெட்டுமு னெட்டுரு
நாலாய் வகுத்துநி வத்தசொல்
சேரே மூதப்பினு முத்தொகை வருமாலை
ஈனோர் மதித்திடு மெச்சமும்
நேரா னபத்துமொ ழிக்கினும்
ஏரா னமுத்தல மும்பொழு திருஞானத்

தேரார் திணைப்பொருள் முற்செயுள்
பாரோர் வழக்கிவை தப்பினும்
ராமா வென்ச்சொல லக்கண கவியாமே
மீனே கதித்துக ளித்திடு
காரா ழியைச்சிறு தத்தினில்
வீரு டுசித்ரமெ னத்தனி கடவாவின்
மீதே நடக்குந டப்பினில்
மாமே ருவொத்துந டுப்பட
மேல்கீ ழுடைத்தவ ணிற்கையில் வழிநாடித்
தானே யரக்கியு டற்குடற்
பீறு வெடுத்துவி சைக்கொடு
சார்வா னிடைக்கத லிக்கொடி எழுமாபோற்
தாரா கணத்தள வுற்றெழு
மாமா ருதிக்குவி யப்பொடு
சாகா வரத்தைய ளித்தருள் பெருமாளே.

உரை :—மீன்கள் கொழுத்து மகிழும் கருங்கடலைச் சிறிதளவு தாவுத லால், மிகப் பெருமையுடன் ஆடும் ஓவியம்போல் காணப்பட்டுத் துணை யின்றி அனுமான் கடக்கும்போது, விண்ணின்மேல் செல்லும் நெறியில், மகாமேரு போன்ற வடிவுடைய ஓரரக்கி தன் வாயின் நடுவிற் செல்ல வேண்டிய வழி யுண்டாக்கி அந்த வழியில் மேலோர் உதட்டையும் கீழோர் உதட்டையும் வைத்து வாய் பிளந்து நிற்கையில், வேறு வழி யுளதோ வென நாற்புறமும் பார்த்தும் பயனின்மையால், அவள் வாயி னுட் புகுந்து வயிற்றிற் சென்று குடலைப் பீறி யெடுத்து விரைந்து சென்று பொருந்திய வானில் வாழைக் கொடி யெழுவதுபோல் உடுமண் டலம் வரை கிளம்பிய பெருமை பெற்றமையால் அவனுக்கு வியப்போடு இறவா வரமளித்த பெருமாளே ; இவ் விராமசெய மென்னும் நூல் தேன் போல் இனிமையாகச் சொல்லப்படும் குறிப்புச் சொல்லும், வெளிப் படைச் சொல்லும், வேறாக விரித்துச் சொல்லப்படும் பொருள் பொதிந்த சொல்லும், சிறப்பு மிக்க எழுத்துடன் இலக்கியம் முதலாகத் தெளிந்து ஆராய்ந்து கொள்ளப்படும் பொருள்கோ ளெட்டும், சொற்களுக்கு முதன் மையான நிலம், நீர், தீ, காற்று, விண், கதிர், மதி, உயிர் என்னும் எட்டுரு வாகிய கணங்களும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்று நான்காக உயர்த்திச் சொல்லப்படும் கவிகளும், இவை சேர்ந்து வரும் எழுத்து முதல் பாவினம் ஈறாகச் சொல்லப்படும் செய்யு ளிலக்கணமாகிய எழு

வகையும் தவறினும், இயல், இசை, நாடகம் என்று சொல்லப்படும் முறைகளும், தாழ்வுடையோர் பெருமையாகக் கருதும் வினை யெச்சம் முதலிய பல் எச்சங்களும், பிறவி நாட்கள், பெயர் நாட்களென நேராய்ப் பொருந்தும் பத்துப் பொருத்தமும் இல்லா தொழியினும், அழகிய தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடமும், இறப்பு நிகழ்வு, எதிர் வென்னும் முக் காலங்களும், அறிவின் அழகு சேர்ந்த உயர்தி ணைப் பொருள், அஃறிணைப் பொருள்களும் ஆகிய இவைகளாற் பெருமை யோடு பாடப்படும் உலக வழக்குத் தவறினும், இராமா வென்னும் சொல்லை யுடைய தாதலின் இலக்கண அமைதி யுடையதாகும்.

தனந்தனு தானதன தத்த
தனந்தனு தானதன தத்த
தனந்தனு தானதன தத்த தனதான

155. திரண்டதோர் சூலைகடி வெப்பு
முகங்கொளா தேபரப ரத்தல்
சிலந்திகா மாலையுள்வ றட்சி கயரோகம்

சிரங்குபேய் நீரிழிவு குட்டம்
உடம்புதே ருவகையி ளைப்பு
திரங்குநோய் சோகைவிதிர் விப்பு ருதியீளை

மருண்டதோர் வாதமொடு பித்தம்
முடங்கல்கால் ஊனம்வெறி பித்து
வடிந்திடா மோகரமு ளைப்பு முதலாக

வரம்பிலா நீள்பிணிய னைத்தும்
நிரம்புமா பாதகவு டற்கு
மருந்துநீ யேயலது மற்று நினையேனே

புரண்டுமே லாடுமுர கத்தி
தனங்களா மேருசிக ரத்தி
புகைந்துதீ யேயெழுவி ழிச்சி நிழல்வாரிப்

புறங்கள்போ வாருயிர்கு டிக்க
வரங்கொண்மா பூதமடல் வெற்றி
பொருந்துமோர் சூலமதெ டுத்து வருநீலி

இரண்டுநா லாகியக ரத்தி
திரண்டுநா லாகியமு கத்தி
இருண்டதோ ராலமென நிற்கும் வெகுரூபி

இலங்கைமா தேவியைய டர்த்த
மடங்கல்போல் மாருதிக ருத்தில்
இருந்தரா மாரகுகு லத்தர் பெருமாளே.

உரை :—அனுமான், அப்பால் இலங்கைக்குப் போகும்போது, அவ் விலங்கையைக் காப்பவளும், மேலே புரண்டசையும் பாம்பைத் தரித்த உடலுடையவளும், தனங்களாகிய மேருமலையை யுடையவளும், புகைந்து நெருப்பைக் காலும் கண்களை யுடையவளும், கோட்டைப் புறத்திற் போவோருடைய நிழலை வாரிப் பிடித்து அவர்களை யிழுத்து அவர் தம் உயிரைக் குடிக்கும் வரம் பெற்றவளும், பெரிய பூதமாகியவளும், வலிமை மிக்க ஒப்பற்ற சூலத்தை எடுத்து வருபவளும், நீலியாகி அடங்காமல் எட்டுக் கைகளை யுடையவளும், திரண்ட நான்கு முகங்களை யுடையவளும், கரிய ஒப்பில்லாத நஞ்சினைப்போல் நிற்கும் வெறுக்கத்தக்க வடிவுடையவளு மாகிய இலங்கை மாதேவி, அனுமானைப் போகவொட்டாது மறிக்க, அவளை அடித்துத் தூரத்திய சிங்கம்போன்ற அவ் வனுமானுடைய நினைவிலிருக்கும் இராமபிரானே; ரகுகுலத்தவர்களுடைய பெருமாளே; திரண்டு கட்டிய ஒப்பற்ற சூலையும், விஷக்கடி சுரமும், முகங்கொள்ளாமல் பருத்துப் பரபரென்று உலர்வதும், சிலந்தியும் காமாலையும், நெஞ்சு வறட்சியும் க்ஷயரோகமு(என்புருக்கியு)ம், சிரங்கும்,பேய் பிடித்தலும், நீரிழிவும், குட்டமும், உடல் தேருதிளைத்தலும், கிழமாய்த் தோல் பசையற்றுத் திரங்குதலாகிய நோயும், சோகையும், குமரகண்ட வலிப்பும், விப்புருதியும், ஈளையும், மயக்கும் ஒப்பற்ற வாதமும், பித்தமும், கைகால்கள் முடங்கலும், கால் குறைதலும், வெறியும், அதனால் அழுதலும், நீர் வடியாமல் நிறைந்துள்ள பெருவயிறும் (மகோதரமும்) இளைத்தலும், சோர்வும் முதலாக நீண்ட நோயெல்லாம் நிறைந்துள்ள பெரும் பாவம்செய்த இவ் வுடலுக்கு நீயே மருந்து ; வேறு மருந்தறியேன்.

தனதன தனந்த தந்த
தனதன தனந்த தந்த
தனதன தனந்த தந்த தனதான

156. கவலையு மிருண்ட நெஞ்சு
விரகும தமுங்க வர்ந்த
களவுமெ னதென்று தொந்த மிடுகூதுங்
கவடமு மிடும்பு வஞ்ச
வெகுளியு மிரங்க லும்பொய்
கழறலு முயங்கு கின்ற மதிதானும்

அவலகு ணமுந்து லங்கு
பயமும ருளுங்கு றும்பும்
அலையும டியுங்க டுங்கை மறம்யாவும்
அத்டுமு ழுதுங்க லந்த
என துநி லைகண்டி ரங்கி
அடிமைகொ ளவென்று கந்து வருவாயே

தவமரு விவந்த மங்கை
சிறையிடம் விளங்க வென்று
தட மதி ளிலங்கை யின்கண் இரவூடே
தனியொர ணுவின்க ரந்து
தெருவுள துசென்ற பின்பு
சயனம தணைந்து வஞ்ச நிருதேசர்

அவரவர் கிடந்த பண்பும்
உடனினி துறங்கு பெண்கள்
அடைவுவ டிவெண் குணங்கள் குறியாவும்
அகமுழு துமெங்கு மெங்கும்
இருளிடைபுகுந்து ணர்ந்த
அனுமனை யுகந்த வெங்கள் பெருமாளே.

உரை :—தவ வேடத்தோடு காட்டிற்கு வந்த பிராட்டியார் சிறையி விருக்கும் இடம் தனக்கு விளங்கித் தோன்றவேண்டு மென்று கருதி, புரந்த மதில்களை யுடைய இலங்கையில் இரவின் கண் தனியாக, ஒப்பற்ற தன் உடலை அணு உருவாக்கி மறைந்து, ஒருவரும் அறியாதவாறு தெருக் களைக் கடந்து, பிறகு படுக்கை யிடங்களில் அரக்கர் படுத்திருக்கும் இலக்க ணத்தையும், அவர்களோடு இன்பமாகத் தூங்கும் பெண்களின் முறையான இலக்கணம், வடிவம், நினைக்கத் தக்க குணங்கள் முதலிய வற்றையும், அடையாளங் களையும் வீடுதோறுங் கண்டு மற்றைய இடங்களிலும் இருளின் கண் புகுந்தறிந்த அனுமானை மகிழ்ந்த எங்கள் பெருமாளே; மண், பெண், பொன் என்னும் மூன்றையும் பெறவேண்டிக் கவலைகொண்டு அறிவின்றி யிருண்ட மனத்தில் உண்டாகும் சூழ்ச்சியும், தருக்கும், பிறர் பொருளைக் கவரும் திருட்டும், என்னுடைய தென்று தொடர்ந்து வரும் சூதும், கபட மும், இடும்பும், மிக்க சினமும், தூக்கமும், பொய்யும் ஆகிய இவை யனைத் துங் கூடிய அறிவும், வருந்தும் குணமும், உடல் நடுங்கும் அச்சமும், மயக்கமும், கொடுமையும், அலைகின்ற சோம்பலும், கொடுஞ் செயலும்,

பிணக்கும் ஆகிய இவை முதலாகிய அசடுகள் எல்லாம் கலந்த என் நிலையைக் கண்டிரங்கி என்னை அடிமையாக ஆட்கொள்ள எப்போது மகிழ்ந்து வருவாய்?

(தவ வேடத்தோடு காட்டிற்குத் தன் கணவனோடு வந்த சீதாபிராட்டி, இலங்கையிலும் மேலான தவ வடிவத்தோடும், தவம் முயலும் உள்ளத்தோடும், இருந்த இடம் செல்லெரித்திடவும் ஆண்டு எழாதிருந்தமை தோன்றப் பொதுவாக, "தவமருவி வந்த மங்கை" என்று கூறினர் என்க).

தந்தன தான தந்த
தந்தன தான தந்த
தந்தன தான தந்த — தன தான

157. வெம்புறு பாழு டம்பு
மங்கைவி டாத சிங்கி
விஞ்சிய கோல மைந்தர் — தமரானோர்

வெந்தபி ராண னம்பொன்
அன்பக லாத தொண்டர்
மிண்டிய பூமி யிந்த — வகையான

சம்ப்ரம நீள்வி லங்கல்
இங்கடி யேன்வி ழுந்து
தஞ்சமி லாது நொந்து — விடலாமோ

தண்டுள வோடு கங்கை
கொண்டுள பாத மென்று
தந்தெனை யாளு மன்பு — புரிவாயோ

வம்பர்கள் வாழி லங்கை
விஞ்சிய கோபு ரங்கள்
மன்றொடு வீடு சந்தி — புனல்வாவி

மண்டப வாசல் குன்ற
ரம்பைய ராட ரங்கு
மந்திர சாலை முன்பின் — முகசாலை

அம்பொனின் மேடை முன்றில்
எங்கும்வி டாது கங்குல்
அம்புய மேவு கொம்பை — நனிதேடும்

அஞ்சனை சேயை யெங்கள்
நெஞ்சிலு ளானை யென்றும்
அன்புட னாளு கின்ற பெருமாளே.

உரை :—பொய்யர்களாகிய அரக்கர்கள் வாழும் இலங்கையில் உள்ள மிக உயர்ந்த கோபுரங்கள், அம்பலங்கள், அவற்றோடு கூடிய வீடுகள், முச்சந்திகள், நாற்சந்திகள், ஐஞ்சந்திகள், நீருள்ள குளங்கள், மண்டபம், வாயில்கள், தெய்வமகளிராடும் அரங்குகள், மறைவாகச் சூழ்ச்சிகளை ஆராயும் இடங்கள், முன்னும் பின்னும் உள்ள முகசாலைகள், பொன்னின் இயன்ற மேடைகள், முற்றங்கள் ஆகிய இடங்கள் எல்லாவற்றையும் விடாமல், அவ்விருளில், தாமரைமலரில் வாழும் பூங்கொம்பு போன்றவராகிய பிராட்டியாரை மிகவும் தேடிய அஞ்சனை மைந்தனாகிய எங்கள் உள்ளத்திலிருக்கும் அனுமானை, அழிவின்றி என்றும் அருளோடு ஆட்கொள்ளும் பெருமாளே ; உதாரக்கினி, காமாக்கினி, கோபாக்கினி என்னும் மூவகை நெருப்பினாலும் சுடப்பட்டு வெதும்பும் பாழாகிய உடல், மனைவி யென்னும் பெண்ணால் ஆட்டுவிக்கும் பாவை ; மிக்க அழகுள்ள பிள்ளைகள், உறவினர், விரும்புகின்ற உயிர், அழகிய பொன், நீங்காத அன்புடைய ஏவலர், நிறைந்த நிலங்கள், என்னும் பெருமையுள்ள நீண்ட மலையில் இங்கு நான் விழுந்து, தாங்குநரின்றித் தளர்ந்து நோதலாமோ ? நான் கெடாமல், குளிர்ந்த துழாயுடன் கங்கை தோன்றிய நின் திருவடிகளை என்று காட்டி என்னை ஆட்கொண்டு அருள் செய்வாயோ ?

தந்தன தத்தன தந்த தந்தன
தந்தன தத்தன தந்த தந்தன
தந்தன தத்தன தந்த தந்தன தனதான

158. சந்த்ரமு கத்தியர் தங்கள் கொங்கையில்
ஒன்றியி ருப்பினும் விஞ்சு பஞ்சணை
தங்கிம யக்கமொ டங்கு றங்கினும் எழுபோதும்

தண்புன லுக்குள்வி ழுந்த ழுங்கினும்
ஒண்டுகில் சுற்றினு மந்தி ரங்கொடு
சந்திக ழிப்பினும் வந்தி டுங்கலை தெரிகாலும்

கொந்தலர் கட்டினு மின்ப மூந்திய
சந்தக ளப்பினு முண்டு தின்றிதழ்
கொண்டுசு வைத்துவி ழுங்கி யன்பொடு பருகாநீள்

கும்பிறி ரப்பினு மொன்றி யம்பினும்
எந்தவி டத்துமென் னெஞ்ச முன்கழல்
கொண்டித முற்றுநி னைந்தி டும்பதம் அடைவேனோ

இந்த்ரசெ யித்தையி லங்கை யின்படு
வஞ்சனை யிற்றனி கண்டு றங்கலில்
எந்தையி லக்குவ னென்று ணர்ந்துமவ் உடல்பீறி

எங்குமி ழுக்கவு மங்கை கொண்டிரு
கண்கள்ப றிக்கவு மங்க ணைந்துமெய்
என்பைமு றிக்கவு நுங்கு வெங்குரு தியைவாரிச்

சிந்தவு மெத்தவு முந்த வும்பொரு
தங்கம ழிக்கவு மொன்று மென்றுறு
சிந்தைப தைக்கமொ ழிந்து மந்திர வகைநாடிச்

செந்திரு வைத்தனி கண்டு பின்பொர
வென்றுமி கத்தெளி கின்ற வஞ்சனை
சிங்கமி கத்தெளி நெஞ்சி னின்றருள் பெருமாளே.

உரை :—இவ்வாறு எங்கும் பார்த்து வருகையில், இந்திரசித்தை—இலங்கையிலுள்ள வஞ்சகனை, அவன் வீட்டில் தனியே கண்டு, இவன், நம் இலக்குவனுர் அம்புக் கிலக்காவனென்று துணிவாய் அறிந்தும், அவன் உடம்பைக் கிழித்து இலங்கை முழுதும் இழுக்கவும், அழகிய கைகளைக் கொண்டு அவன் இரண்டு கண்களையும் பிடுங்கவும், அவனிடம் நெருங்கி, அவன் உடலிலுள்ள எலும்பை முறிக்கவும், விழுங்கும் கொடிய குருதியை வாரி யிறைக்கவும், கைகளாற் குத்தவும், கால்களால் உதைக்கவும், போர் புரிந்து அவன் உடலை யழிக்கவும் செய்தல் பொருந்து மென்று நினைக்கும் மனம் பதைக்கக் கூறிப் பின்னர், தன் செயலை நன்கு ஆராய்ந்து, செந்திருவாகிய பிராட்டியாரைத் தனியாகக் கண்டு பிறகு போர் செய்தல் வேண்டுமென்று தெளிந்து நின்ற அஞ்சனையின் மகனுகிய சிங்கத்தின் மிகவும் தெளிந்த சிந்தையில் நின்றருளும் பெருமாளே ; அடியேன் மதிமுக மடவார்தம் கொங்கைகளி லழுந்தி ஒருமைப்பட் டிருந்தாலும், மயிலிறகு, இலவம்பஞ்சு, வெண்பருத்தி, அன்னச்சிறகு என்னும் மெத்தையிலிருந்து மயங்கி யுறங்கினுலும், உறங்கி யெழுந்தாலும், தண்ணீருக்குள் மூழ்கினுலும், அழகிய உடையை அணிந்தாலும், காயத்திரியைக் கொண்டு சந்திவந்தனைகள் செய்து கடன் கழித்தாலும், வீட்டுக்கு வந்து சிறந்த கலைகளைக் கற்றுப் பொருள் ஆராய்ந்தாலும், பூங்கொத்துக்களை மாலை கட்டினுலும், இன்பந்தரும் சந்தனத்தைப் பூசினுலும், உண்டல், தின்றல்,

உதட்டாற் சுவைத்தல், விழுங்கல், குடித்தல் என்னும் ஐவகை உணவால் இழிந்த வயிற்றை நிரப்பினும், ஏதேனும் ஒன்றைப் பேசினும், நடத்தல், இருத்தல், கிடத்தல், பார்த்தல், கேட்டல், நினைத்தல் ஆகியவற்றைச் செய்தாலும், எந்த விடங்களிலும், எப்போதும், நின் திருவடிகளை மனத்திற் கொண்டு, சிறு தெய்வங்களை நினையாமல் நின்னையே நினைக்கும் ஞானப் பதவியைப் பெறுவேனோ?

"இந்திர சித்தையி லங்கை யின்படு பஞ்சணை யிற்றனி கண்டு" எனவும் பாடம்.

தந்த தனதன தானன தானதன
தந்த தனதன தானன தானதன
தந்த தனதன தானன தானதன — தனதான

159. உம்பர் தொழவரு நாராய ணாயநம
எம்பெ ருமவரி யேகேச வாயநம
உண்ட வுலகுமிழ் சீர்மாத வாயநம — பிரமாவை
உந்தி தருமொரு வாரீச நாபநம
முந்து முரகர னேவாம நாயநம
ஒண்ப ரமகுரு வேசீத ராயநம — ப்ரகலாதன்
நம்பு நரவரி யேவாசு தேவநம
கம்ப மதகரி யோதாதி மூலநம
நந்தில் கணபண நாகேச சாயிநம — செகமாகும்
நங்கை மகிழர சேபாவ நாசநம
என்று சொலியுரு காதேவ்ரு தாமகளிர்
நண்பி னுருகுமெ னாபாத மோகமிது — தெளியாதோ
வெம்பு கதிர்மதி போகாத வூரின்மிசை
கஞ்ச மயிலினை யேதேடு போதிலொலி
விஞ்சு கடலென மாமேரு வாகுமென — வடிவாகி
மிண்டு கணபணி வாயூடு நாசிசெவி
மண்டி யையுறதர நேரேசு வாதமிசை
வெங்க ணிருதரை நூறுறு காதவிசை — கொடுபோகக்
கும்ப கருணனி ராவோடு நீடுபகல்
என்று மமளிவி டாதேய முததுயில்
கொண்ட படியது காணுமுன் வாலிபடு — கணையாசே

குன்று மிவனென வேறேயோர் கோயில்புகு
வென்றி யனுமனை வீருக வேயடிமை
கொண்ட ரகுகுல பூபால னேபெரிய பெருமாளே.

உரை :—இந்திரசித்தன் வீட்டைவிட்டு, கதிரும் மதியும் போகாத அவ் விலங்கை நகரில், தாமரையில் உள்ள மயில் போன்ற சாயலையுடைய பிராட்டியாரைத் (அனுமான்) தேடும்போது மிக ஒலிக்கும் கடல் போலவும், மகாமேரு போலவும் உள்ளதென்று சொல்லத்தகும் வடிவுடையவனுகி வாய், மூக்கு, காது ஆகியவற்றுள் பிறரைத் தடுத்துத் தருக்கி, பாம்புக் கூட்டங்கள் வாழப்பெற்று, மூச்சுக் காற்றுக்கு முன் நேர்வரும் கொடிய அரக்கர்களை நூறு ஆறுகாதம் மேலே விரைந்து கொண்டுபோகத் தக்கவாறுள்ள இலக்கணத்தோடு கும்பகருணன், இரவோடு தொடர்ந்து நீண்ட பகலும் ஆகிய எல்லாக் காலங்களிலும், விடாமல் தூங்குகின்ற தன்மையைக் கண்டு, முன் வாலி யிறப்பதற்குக் காரணமான அம்பினுலே இவன் இறப்பானென்று கருதி வேறோர் அரச மாளிகையிற் புகுந்து வெற்றி பெற்ற அவ் அனுமானை அடிமையாகக் கொண்ட இரகுகுலத்துத் தோன்றலே, அரசனே, எல்லாத் தெய்வங்கட்கும் பெரியவனுன பெருமாளே ; தேவர்கள் தொழுது வணங்கிவரும் பிரணவங் கலந்த நாராயணுயநம ; எங்கள் தெய்வமான பெருமாளே, அரி, கேசவாய நம ; முன் உண்டவுலகத்தைப் பின்னுமிழும் திருவுடைய மாதவாய நம; பிரமனைப் பெற்ற ஒப்பற்ற உந்தியை யுடைய பற்பநாபா நம; போர்க்கு முந்தி வந்த நரகாசுரனுடைய பகைவனே, வாமனுய நம; அழகிய மேலான குருவே, சீதராய நம; பிரகலாதன் தெய்வமெங்கு முண்டென்று நம்புமாறு செய்த நரசிங்காய நம; வாசுதேவாய நம; கம்பத்தில் அணைக்கும் மதயானை கூப்பிட்ட ஆதிமூலாய நம; கொடாது கூட்டமாயுள்ள ஆயிரம் படங்களை யுடைய பாம்புக் கரசனுன சேஷசாயி நம ; நிலமகள் மகிழும் கணவனே, பாவநாசாய நம என்று நின்னைப் புகழ்ந்து வணங்கி மனமுருகாமல், வீணுன பெண்களிடம் உருகும் என் இழிந்த மயக்கம் தெளியாதோ ?

தனதத்தன தானன தானன
தனதத்தன தானன தானன
தனதத்தன தானன தானன தனதான

160. நடையுற்றது மூதுரை யானது
பொருள்பெற்றது கோவைகெ டாதது
நலமிக்கது சீர்குலை யாதது வெளிருதே

நசைபற்றிய வோசையின் மேயது
பிறர்சொற்றிரு டாதது மேலது
நழுவுற்றிள காதிறு காதது துறைதோறும்

நடவுற்றது மாசுப டாதது
தெளியப்படு நேரது யானவர்
நலமுற்றுத லாகிய பாவது பலநாவும்

நடுபட்டது சாரமெ லாமுள
குவிலக்கண மாயினு நாரண
ரகுவித்தக ராமவெ ளுவிடின் நலமாமோ

கடல்சுற்றிய வூரிர வோடொரு
திருவைத்தனி தேடுறு போதெதிர்
கனமொத்தவி ராவண ளுர்துயில் வகைகாணுக்

கறுவிக்கர மேபிசை யாவிழி
அனல்கக்கிட மேல்விழு வேன்முது
கழுகுக்கிடு வேனிவ னீருடல் உயிர்நாடி

அடியிற்கொடு சாடுவென் மாமுடி
ஒருபத்தற மோதுவன் வீசுவன்
அகலத்திடை பாய்வனெ ளுவெழு சினமாறு

அமலக்கணை யால்விளை யாடவும்
இசைநிற்கவும் வேணுமெ ளுவரு
அனுமப்ரிய ராகவ வானவர் பெருமாளே.

உரை :—கடல் சூழ்ந்த இலங்கையில் நள்ளிரவில் தனியே பிராட்டியாரைத் தேடும்பொழுது, எதிரில் முகில்போற் கருநிற முடைய இராவணன் தூங்குவது கண்டு, சினந்து மனத்திற் கறுவுகொண்டு, கைகளை முறுக்கிப் பிசைந்து, கண்கள் நெருப்பினைக் கக்க, 'இவன்மேல் விழுவேன்; கிழக் கழுகுகளுக்கு இரையாக இவனை யிடுவேன்; இவனது பசையுள்ள உடலிலிருக்கும் உயிரைத் தேடிக் காலாற்பற்றி கிறுகிறு வெனச் சுற்றுவேன் ; ஒப்பற்ற தலைகள் பத்தும் அறுமாறு மோதுவேன் ; வீசுவேன்; மார்பின் நடுவிற் பாய்வேன்;' என்றெழுந்த சினத்தினைத் தன் அறிவால் அடக்கி, நம் பெருமானது தூய அம்பினால் வேடிக்கையாக விளையாடும் புகழ் நிற்றலும் வேண்டுமென்று நினைத்து வந்த அனுமானை மகிழ்ந்தவனே ; ரகுகுலத்திற் பிறந்தோனே, இமையோர் பெருமாளே ; பாட்டு, தளை கெடாமல் செவ்விய நடையாயுள்ளது; பழைய சொல்லால் ஆகியது;

சிறந்த பொருளை யுடையது ; பொழிப்புக் கெடாம லுள்ளது ; நன்மை மிக்கது ; சீர்குலையாதது ; வெளிறின்றி விருப்பந் தரும் செப்பலோசை முதலிய வோசைக ளுடையது ; பிறர் சொற்களைத் திருடி அமைக்காதது; எல்லோருடைய பாட்டுக்களுக்கும் மேலானது ; பொருளின் முறை வழுவாமலும், இளகாமலும், இறுகாமலும் இனியாக வமைந்துள்ளது; கோவைத் துறைகள் தவறின்றி நடப்பது; வழுவற்றது; அறிஞர் தெளியு மாறு செவ்வை யானது; மக்களின் நன்மைக்காகப் பாடப்பட்டுப் பல சமயத்தாருடைய நாவிலும் நாடப்பட்டது; சிறந்த கருத்துக்கள் உடையது; என்னும் இலக்கணங்கள் எல்லாம் உடையதாயினும், நாராயணா, இரகு வம்சத்தில் தோன்றிய சதுரப்பாடுடையவனே, இராமா என்றமைத்துப் பாடப்படாவிடில் அப் பாட்டு நல்லதாமோ ? ஆகாது.

தானன தனனன தனந்த
தானன தனனன தனந்த
தானன தனனன தனந்த தனதான

161. நீடிய கலைகளோ வநந்தம்
யாவையு முணரவோ விரும்பின்
நீதிகொள் வயதுநா றதென்பர் அதிலேதாய்

நீர்புகு முதாமீ திருந்து
மேலொரு மதலையா கிவந்து
நேரிழை மகளிர்பா லுழன்றும் அறிவேபோய்

ஊடிர வணையிலே துயின்று
நோயொடு பசியுமாய் மெலிந்தும்
ஓடிய நரையிலே தளர்ந்தும் உடல்போமென்

ஊதிய மிதுவென நினைந்து
நாமமு மிசையுமே விளம்பி
ஊழ்வினை தொடர்கிலா வைகுந்த மடைவேனே

ஏடவிழ் குழலைநா டுகின்ற
பாயிரு ளதனிலே யிலங்கை
இராவணன் முதலினோர் குணங்கள் மருவாதே

யாகம துசெயுமோ மகுண்ட
சாலையு நெறியுமூ றுமன்பும்
ஏசறு தவமுநா லுகொண்ட அறனோடும்

வீடண னொருவன்வாழ் தல்கண்டு
சானகி வருடுதா ளில்வந்து
மேவுவ னிவனெனு வுகந்து விடியாமுன்

வேறொரு மனையிலே புகுந்து
தூதுவ னனுமன்வீ தலின்றி
வேதமு ளளவும்வாழ் கவென்ற பெருமாளே.

உரை :—இதழ்கள் விரிந்து மலர்ந்த பூமாலையை முடித்த கூந்தலை யுடைய பிராட்டியாரை, மிகப் பரந்த நள்ளிருளில் தேடும்போது இலங்கை யில், இராவணன் முதலியோருடைய குணங்கள் சேராமல் வேள்வி செய் யும் சாலையும், நல்ல வேத நெறியும், ஊறிய அன்பும், குற்றமற்ற தவமும் அருள், உண்மை, தூய்மை, தத்துவ மென்று நான்காகச் சொல்லப்படும் அறமும் கொண்ட விபீடணன் என்பவன் ஒருவன் வாழ்தலைக் கண்டு, இவன் சானகி தன் கைகளாற் பிடிக்கப்படும் இராம பிரானுடைய திரு வடிகளில் சேருவானென்று மகிழ்ந்து, பொழுது புலர்வதற்குள் ஒரு வீட் டிற் புகுந்த தூதுவனாகிய அனுமனை, இறப்பின்றி என்றும் வாழுமாறு அருள் செய்த பெருமாளே ; நீண்ட கலைகள் அளவற்றனவாக வுள்ளன ; அவை முழுதையும் அறிய விரும்பினால், மக்களுக்கு வரையறை செய்யப் பட்ட வயது நூறென்று யாவரும் புகல்வர் ; அந் நூறாண்டுகளில், நீர் நிறைந்து இழிந்த தாய் வயிற்றில் தங்கிப் பத்துத் திங்கள் கழிந்த பின் பிறந்தும், மணிகள் அழுத்திப் பொன்னாற் செய்யப்பட்ட பூண்களை யணிந்த பெண்களின் காதலில் உழன்றும், அறிவுகெட்டு நள்ளிரவில் மெத்தையில் துயின்றும், நோயோடு பசியும் கொண்டு வருந்தி யிளைத்தும், வயது முதிர்ந்த பின் உண்டாகும் நரையினால் தளர்ந்தும், உடல் விழும்; இதுவே இவற்றின் பயன் என்று நினைத்து, அவற்றை விட்டு, நின் திருப்பேரை யும் புகழ்பெற்ற நின் திருவிளையாட்டையும் பல காலும் சொல்லிப் பழ வினை தொடரமாட்டாத வைகுந்தத்தை நான் அடைவேனோ? சொல்லுக.

தனன தந்தன தானன தந்தன
தனன தந்தன தானன தந்தன
தனன தந்தன தானன தந்தன தனதான

162. பூதக ணங்கள்வே தாளமொ டந்தர
வாசிக ளண்டரே தானவர் விஞ்சுத
போதனர் வென்றிகூர் சாலக டங்கடர் முதலானோர்

பூமிபொ ருந்திவாழ் மானுடர் மங்கையர்
கானல்வி லங்குவா னூடுப றந்தெழு
போதரு வெம்புளே யூர்வன நந்துகள் புனம்வாழும்

சாதிம ரங்களே தூறுப டும்புதல்
நீள்கொடி மென்புல்பே ராதுயர் குன்றுச
ராசர மெங்குமே யாவிபி றந்திரு வினையாலே

சாகினு மிந்தநோய் போதுமெ லிந்தனன்
ஓநம ரங்கநா ராயண வென்றிரு
தாளில டைந்துமே லாகுவை குந்தமும் உறுவேனே

பாதிந டந்ததோர் கூரிரு ளின்கடல்
சூழுமி லங்கைமீ தேயுள மங்கையர்
பார்வைமு கங்கள்வாய் நாசிநெ டுங்குழை நுதலோதி

பாதம ருங்குதோள் மாமுலை யுந்தியு
ரோமம டங்கவே வேறுதெ ளிந்துயர்
பார்மக ளன்றெனு நாடியு டம்புடன் உயிர்போல

மாதெரு வொன்றுநூ றுயிர மென்பத
னேடுமி ரண்டுநூ றுயிர முஞ்சிறு
மாவடி வங்கொடே தேடிய ணங்கினை வெளிகாணுன்

வாடிமெ லிந்துசீ ராமசெ யந்திரு
வேதுணை யென்றசோ காடவி யின்புகு
மாருதி தம்பிரா னேயுல கந்தொழு பெருமாளே.

உரை :—பாதி சென்ற விரவின் மூன்றும் யாமத்தில் மிக்க இருளின் கண், கடலாற் சூழப்பட்ட இலங்கையினுள்ளே யுள்ள பெண்களின் கண்கள், முகங்கள், வாய்கள், மூக்குகள், நீண்ட காதுகள், நெற்றிகள், குழல்கள், கால்கள், இடைகள், தோள்கள், பெரிய நகில்கள், கொப்பூழ்கள், மயிர்கள் முதலிய உறுப்புக்கள் எல்லாம் தன் பார்வைக்குள் அடங்குமாறு வேறு வேருகப் பார்த்துத் தெளிந்து ஒவ்வொருரையும் நிலமகளாகிய சீதாபிராட்டியார் அல்லவென்று ஆராய்ந்து தேறி, உடம்போடு கலந்து தெரியாதிருக்கும் உயிர்போல, பெருந் தெருக்கள் நூறுயிர மென்று சொல்லப்படும் அத் தெருக்களினுள்ளும், இரண்டு நூறுயிரம் தெருக்களுள்ளும் சிறிய வண்டின் வடிவுகொண்டு தேடிப் பிராட்டியாரை வெளியிற் காணுதவனுகி வாடி, மெய்யிளைத்து, 'சீராமசெயம் திருவேதுணை' யென்று மனதில் நினைத்து, மேல் அசோக வனத்தில் புகுந்து பார்த்த

அனுமானுடைய தலைவனே, உலகிலுள்ள எல்லா உயிர்களும் வணங்கத் தக்க பெருமாளே ; (நான் பிறந்த பிறப்புக்கள்) பூத கூட்டங்கள், பிசாசுக ளோடு ஆகாய வாசிகள், இமையவர்கள், அசுரர்கள், பெருமை மிகுந்து தவம்செய்யும் முனிவர்கள், வெற்றிமிக்க அரக்கர்கள், முதலிய மேலுலகத் தார்களிலும், நிலவுலகிற் கலந்து வாழும் மக்கள், மங்கையர், காட்டு விலங்கு கள், விண்ணிடையே பறந்து செல்லுவனவும் கண்டார்க்கு விருப்பந் தரு வனவு மாகிய பறவைகள், ஊர்வன, சங்குகள், கொல்லையில் இருக்கும் பல பெயர்களை யுடைய பல மரங்கள், தூ ஈகவுள்ள புதராகிய பெரும்புற்கள், நீண்ட கொடிகள், மெல்லிய புற்கள், அசையாமல் உயர்ந்து வளர்ந்த மலை கள், ஆகிய இயங்கியற் பொருள் நிலையியற் பொருள்கள் என்று சொல்லப் படும் பொருள்களிலுமெல்லாம் என் உயிர் உடலெடுத்துப் பிறந்து செய்த நல்வினை தீவினைகளினால் இறந்து அலையும் இந் நோய் போதும்; இதனால் மிக விளைத்தேன்; ஓம் நமோ, அரங்கா, நாராயணா என்னும் திருமந்தி ரத்தை நெஞ்சில் நினைத்து நின் இரண்டு திருவடிகளிலும் சேர்ந்து, இனி யெல்லாப் பதவிக்கும் மேலான திருவைகுந்தமும் அடைவேனோ?

தனந்தன தந்தன தந்த
தனந்தன தந்தன தந்த
தனந்தன தந்தன தந்த தனதான

163. ஒழுங்கொரு கிஞ்சிது மின்றி
இணங்கிகள் மண்டைகள் வம்பில்
உறங்கிகள் தொண்டிக ளன்பு புரிவார்போல்
ஒடுங்கிகள் சண்டைகள் கொண்டு
பிணங்கிகள் வெங்கிழி கொண்ட
உடம்பிகள் கொஞ்சிகள் நெஞ்சின் முனைசேர
மழுங்கிகள் பின்செல வந்து
தடங்கிகள் செம்பொனி லின்கண்
மயங்கிகள் தங்களொ டொன்றி வசமாகி
மருண்டுபு ரண்டுதி ரிந்து
துவண்டிடு சிந்தைதி ரும்பி
வரம்பெறு மன்பரொ டென்று பயில்வேனோ
மொழிந்தவி லங்கைய டங்க
அலைந்துநி னைந்தவை யொன்று
முடிந்திட லின்றிழெ லிந்து தளர்போதின்

முகம்பெற வந்தொரு தந்தை
புகுந்திடு பண்பென மன்றன்
முகந்துவ ழுங்கியொ ருங்கு மறுகூடே

எழுந்தொரு தென்றலசைந்து
நடந்தது கண்டுதெ ளிந்தோர்
இரும்பொழி லுண்டென வந்து வழியேபோய்

இளங்கொடி தன்செயல் முந்த
அறிந்திட வென்றொரு கொம்பில்
இருந்தவ னெஞ்சிலி ருந்த பெருமாளே.

உரை :—சம்பாதி சொன்ன இலங்கை யெங்கும் திரிந்தலைந்தும், கருதிய செயல் ஒன்றும் முடியாமையால் உளஞ் சோர்ந்து, அனுமான் தளர்ச்சி யடையும் பொழுதில் ஒப்பற்ற தந்தையாகிய வாயுதேவன் வந்து தன் மைந்தனது வருத்தத்தைத் தீர்த்து முகம்பெற வேண்டிப் புகுந்த தன்மைபோல, மணத்தை வாரி முகந்து அனுமானுடைய மூக்கினுட் செலுத்தி ஒழுங்காகிய தெருவழியே எழுந்த தென்றல் தவழ்ந்த வழியே (அவ் வனுமான்) சென்று, தன் அறிவால், ஓர் இளஞ்சோலை இங்குண் டென்று தெளிந்து, அக் காற்றினைப் பற்றிச் சென்று அங்கே யிருந்த இளங்கொடி போன்ற ஒரு பெண்ணைக் கண்டு, 'இவள் செய்தியை முன்னதாக அறிந்து பின் இவளோடு பேசுவோம்' என்று கருதி ஒரு கொம்பின் கண் தங்கியிருந்த அவ் அனுமான் உளத்தில் தங்கியிருந்த பெருமாளே; ஓர் அணுவளவேனும் செம்மை யில்லாமல் வஞ்சகமே கூட்டுறவு கொண்டுள்ளவர்களும், புளியம் பழத்தின் ஓடுபோலப் பசையற்று வறண்டவர்களும், பொய்யால் தூங்குபவர்களும், அடிமைப் பட்டவர்களும், அன்பு செய்வார்போல் ஒடுங்கியுள்ளவர்களும், பொருள் உள்ளவரையில் பொய்யாகக் கூடி, அது நீங்கிய பின் வலிச்சண்டைகளை யுண்டாக்கிக் கொண்டு பிணங்குபவர்களும், கொடிய நகத்தாற் கிழிபட்ட உடம்பை யுடையவர்களும், கொஞ்சிப் பேசுபவர்களும், சிவந்த பொன்னின்மேல் விருப்பங் கொண்டு மயங்குபவர்களும் ஆகிய பரத்தைய ரிடத்து ஒருமித்துக் கூடி அவர் தம் வயப்பட்டு மயங்கிப் புரண்டு அலைந்து துவளும் மனம், அந் நிலையை விட்டு நின்பால் திரும்பி, நின்னிடம் வரம்பெறும் அடியார்கள் கூட்டத்தில் சேர்ந்து குலாவியிருக்கும் தன்மையை என்று பெறுவேனோ?

(மண்டைகள் - பசையற்று வறண்டவர்கள். தொண்டிகள் - அடிமைப் பட்டவர்கள், வெம்கிழி - கொடிய நகத்தாற் கிழித்துக் கொண்ட. 'செம்பொனில் இன்கண்' என்னுமிடத்தில் இல்சாரியை சந்தம் நோக்கி வந்தது.)

தானன தத்தனன தான தானன
தானன தத்தனன தான தானன
தானன தத்தனன தான தானன — தனதான

164. கோதைய ருக்குமுழு மோக மாகியும்
வேலைகள் புக்குமணி யாழி மேகலை
கூறைகொ டுத்துமினி தான தூதுகள் — நெடுதேவிக்

கூடிய ணைத்துமுயி ரேக மாகியும்
வேறுப டுத்தலற மேவு நாண்மிசை
கோலமி குத்தபொருள் வேணு மேயென — நெறிபோயும்

ஆதா வுற்றபிரி வான வேதனை
சாலமி குத்ததளர் வான சோகமும்
ஆரொரு வற்குமன நாண மேயற — விடுநாயேன்

ஆசைவ லைக்குள்விழு பாவி யாய்விழு
பாழிலு ழக்குமடி யேனை நீயினி
ஆளநி னைத்துனிரு பாத மேதர — அருள்கூராய்

மாதரெ டுத்தவொளி தீப மாலைக
ளாசிய டைப்பையுடை யாடை சாமரை
வாள்கொடு சுற்றிவர வீணை வார்குழல் — இசைபாட

மாமது ரப்பெணமு தாரு நீள்பொழில்
பாதியி ருட்குணிரு தேசன் மேவியுன்
வாழ்வும திப்புமதி ரூப ரேகையும் — வளமாகச்

சாதுமி குத்தகன மூல சாகம்
தாரும்வ யிற்றின்வன வர்சி வேறொரு
சார்பிலி யிச்சைவிடு போர்து வாபிழை — எனவேயுஞ்

சானகி கற்புநிலை பேதி யாநெறி
தானறி வுற்றுமகிழ் வாகு மாருதி
சாவற வைத்தவபி ராம னேசுரர் — பெருமானே.

உரை :—இங்ஙனம் அனுமான் இருக்கையில், பல்லாயிர மங்கையர் கையிலெடுத்த தீவர்த்திகளை நிரைநிரையாகப் பிடித்து வரவும், பல மாதர்கள் மங்கலப் பாடல்கள் பாடிவரவும், சில பெண்கள் அடைப்பையை எடுத்து வரவும், அரையில் உடுத்த ஆடை தரையில் இழுக்கப்படாமல்,

தூக்கிவரவும், சில மங்கையர் வெண்சாமரைகளை இரு புறமும் வீசி வரவும், சிலர் வாளையெடுத்து வரவும், சிலர் வீணையுங் குழலுங் கொண்டு இனிய வரிப் பாடல்களை இருபது காதுகளிலும் பொருந்தப் பாடிவரவும், நீண்ட சோலையில் நள்ளிரவின் கண் அரக்கர்க் கரசான இராவணன் வந்து பிராட்டியாரைப் பார்த்து, 'உன் செல்வமும், பெருமையும், வியக்கத் தக்க அழகிய வடிவத்திலுள்ள சிறப்பும், வளம்பெற வேண்டினல், துறவுக் கோல முடையவனும், பழம், கிழங்கு, இலை ஆகியவற்றைத் தின்னும் வயிற்றை யுடையவனும், காட்டில் வாழ்பவனும், வேருெரு நற்சார்பும் இல்லாதவனும் ஆகிய அவன் ஆசையை விட்டுவிடு ; அரண்மனைக்குள் வந்து என்னேடு தங்கிப் பிழைத்துவிடு ;' என்று சொல்லியும், சனகன் மகளாகிய பிராட்டியின் கற்பு நிலை மாறுபடாதிருந்த நிலையை அறிந்து மகிழ்ந்த வாயு மைந்தனை இறவாதிருக்க வைத்த அழகிய இராமபிரானே; இமையோர் பெருமாளே ; பெண்களிடம் முழு மோகமாகியும், பேசத்தக்க வேளைகளில் அங்கே போய்ச் சேர்ந்தும், மணிகள் பதித்த மோதிரம், மணி மாலைகள், மேகலை, நல்ல ஆடை முதலியவற்றைக் கொடுத்தும், இருவருக்கும் இன்பமான தூதுகளை மிக அனுப்பியும், பின், இருவருங் கூடித் தழுவியும், ஈருடல் ஒருயிராகியும், இருவரும் வேறுபட்டுப் பிரிதலின்றிக் கலந்திருக்கும் நாளில், அழகுசெய்யும் பொருள் வேண்டுமென்று கருதி வழியிற் போகியும், ஆசையை வளர்க்கும் பரிவாகிய வருத்தம், மிகவும் உளத்தைத் தளர்ச்சியடையச் செய்வதால் உடலை மறந்து நிற்கும் அறிவு கலங்கியும், யாரேனும் ஒருவரிடம் நாணமில்லாமற் போகும் செயல்களைச் செய்யும் நாய் போன்றவன் நான், காதல் வலைக்குள் விழும் பாவியாகிப் பாழிலே வீழ்ந்து உழன்று வருந்துகின்றேன். அடியேனை உன்னுடைய அடிமையாக ஆளக் கருதி நின் இரண்டு திருவடிகளையும் எனக்குத் தந்து காக்க நினைத்தருள்வாயாக.

தானதன தான தந்த
தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான

165. ஆனையதின் மேலி ருந்து
பேரியமெ லாமு ழங்க
ஆபரண மேலி லங்க மடவார்நின்
ருடல்புரி யாவி ளங்க
வீணையொடு கீத முந்த
ஆரமுது போல முந்து செவிமூழ்கத்

தானைபுடை சூழ வின்ப
மானகுடை நீழல் மண்டு
சாமரைகள் வீச விந்த்ர னெனுமாறு

சானுமொரு வாழ்வு மிங்கு
மேவநினை யேன ரங்க
தாமமக லாத வின்பம் உறுவேனோ

மானமற வோது கின்ற
ராவணனை வீர சிந்தை
வாடவெதி ரோது மென்ப தெதிர்பாரா

மானவனி ராம னம்பை
நீயறிகி லாயுன் வஞ்ச
வாழ்வுநிலை போயி லங்கை பொடியாகிச்

சேனையொடு நீது ணிந்து
போவைகெடு வாய்பு ரிந்த
தீமையிது போது மென்ற உரைகேளாச்

சீதையிவ ளாகு மென்று
தேறுமனு மானை நின்றன்
சேவடியி லாளு கின்ற பெருமாளே.

உரை :—மேற் கூறியவாறு சிறிதளவும் நாணமின்றிச் சீதையிடம் கூறிய இராவணன் வீரமுள்ள சிந்தை வாடுமாறு சொல்லி யதற்கு, மறு மொழி கூற வேண்டுமென்று கருதிய பிராட்டியார், அவனைப் பாராமல் நிலத்தை நோக்கியவாறு, (மானவன் என்றது மனுகுலத்தவன் என்றும், மனிதன் என்றும், எவர்க்கும் மேம்பட்ட வலிமையுடையவ னென்றும் பொருள்படுவதோர் சொல் ;) "முப்பொருள்களுக்கும் தானே உரியவனான அவ் விராமன் அம்பினை நீ அறிந்ததில்லை ; நீ, இதுவரை செய்துள்ள தீமைகளால் உன் பொய்யாகிய செல்வம், தன் நிலைகெட, இவ் விலங்கை பொடியாக, நீயும் உன் படைகளோடு துண்டமாகி அவர் தம் அம்பினால் அழிவாய் ; கெட்டவனே, இதுவரை நீ செய்த தீமை போதும் ;" என்று சொல்லியதைக் (அனுமான்) கேட்டு, இவள் சீதாபிராட்டியாகும் என உறுதியாகத் தெளிந்த மனமுடைய அவ்வனுமனை, உன்னுடைய திருவடிக ளுக்கு அடிமையாக்கி யாளுகின்ற பெருமாளே ; யானையின் மேலிருந்து பெரிய இயங்களெல்லாம் மிக வொலிக்கவும், உடலில் அணிந்த அணி கலன்கள் விளங்கவும், பெண்கள் நின்று ஆடவும், வீணையொடு இனிய பாடல்களும் அமுதம் ஒழுகுவதுபோல் காதில் முழுகவும், படைகள் பக்

கங்களிற் சூழவும், முழுமதிபோலும் வெண்குடையின் நீழலில், வெண் சாமரையை இரு புறமும் இரட்டவும், இந்திரனைப்போல ஒப்பற்ற செல்வமுள்ள பதவியை இங்கே அடைய நினையேன்; திருவரங்கமாகிய பரமபதத்தை விட்டு நீங்காதிருக்கும் இன்பத்தைப் பெற்றிருப்பேன்.

தனன தனன தனதான தத்த
தனன தனன தனதான தத்த
தனன தனன தனதான தத்த தனதான

166. நிபுணி தவள கமலா சனத்தி
கருணை வடிவி யதிராச தத்தி
நிகரி லறுப தொருநாலு வித்தை தருநாரி

நிமலை விமலை யுலகேழு பெற்ற
புலவி யிறைவி வெகுவேத மிட்ட
நிழலி குழலி னுயர்வாச கத்தி கலைவாணி

விபுதர் பரவு மொருசார தைப்பொன்
உரிய பிரமர் திருநாவ கத்தி
வெளியி லொளியி லொளிர்மூல சத்தி அபிராமை

விரவு பரம சுகிர்தோத யத்தி
அறிவு நிறையு மொருபார திப்பெண்
விழியி னருள்கொ டெனையேது திப்ப தொழிவேனோ

அபய னிளவ விடுசாலை வைப்பும்
நிருதர் மகளிர் புடைசூழ்வ ளைப்பும்
அருகு த்ரிசடை யுயிர்வாடு நட்பும் இடையேநொந்

தழியு மனமு மிடைபோலி ளைத்த
வடிவு மடியி லொருசீரை சுற்றும்
அரையு முரையு மகலாவு யிர்ப்பும் நிறைபீரும்

உபய தனமும் அதன்மேல மூக்கும்
நயன புனலும் அசையாதி ருப்பும்
ஒளியு மழகு முடல்சேர மூக்கும் இரவேகண்

டுறுதி சனகி யிவளேயெ னத்தன்
அறிவி லறியு மனுமானை முற்றும்
உரிய வடிமை யெனவேப டைத்த பெருமாளே.

உரை:—அஞ்சுவோர் அச்சந் தீர்ப்பவனும், தான் அஞ்சாதிருப்பவனு மாகிய இளைய பெருமாள் கட்டிய பன்னசாலை யிடமும், பக்கத்தில் அரக்கர் மகளிர் சூழ்ந்து வளைத்து இருத்தலும், திரிசடை அருகிருந்து உயிர்வாடும் நட்பும், நடுவிலிருந்து நொந்து உருகும் மனமும், இடைபோலிளைத்த உட லும், உடுத்திய புடைவையின் மேல் மரவுரி தரித்த திருவரையும், மொழி யும், கணவனைக் காணலாமென்ற விருப்பத்தால் நீங்காத உயிர்ப்பும், உல கத் தாயாதலின், தனக்குக் கவலையை யுண்டாக்கும் இராவணனையும், காவ லாக விருந்து கொடுமை செய்யும் அரக்கிகளையும் தன் மக்களாகக் கருதி யதனாற் பெருகி நிறைந்த தனங்களிற் பாலும், இருதனங்களும், அவற்றின் மேல் அழுக்கும், திருக்கண்களில் நீரும், சிறைவைத்த நாள்முதல் அசையா திருந்த இருப்பும், வடிவத்தின் ஒளியழகும், உடலிற் சேர்ந்த அழுக்கும், ஆகிய வற்றை இராவணனுடன் வந்த கை விளக்குகளின் ஒளியால் அவ் விரவில் பார்த்து, இவள் பிராட்டியே என்று தன் அறிவினால் துணிந் தறிந்த அனுமானை எல்லாச் செயல்களுக்கும் உரிய அடிமையாகப் பெற்ற பெருமாளே; எல்லாவற்றையும் கற்றறிந்தவளும், வெண்டாமரையை இருக்கும் இடமாகக் கொண்டவளும், அருள் வடிவும், மிக்க இராசத குண மும் உடையவளும், ஒப்பற்ற அறுபத்து நான்கு கலைகளையும் பெற்ற பெண்ணும், தூய வெண்ணிற முள்ளவளும், குற்றமற்றவளும், குழலினு மினிய சொற்களை யுடையவளும், பாட்டுக்களுக்குத் தலைவியும், வாணி யென்னும் பேருடையவளும், சிறந்த வலிமை யுடைய பெரியோர்கள் தொழும் (தேவர்கள் தொழும்) சாரதை யென்னும் பெண்ணும், தனக் குரிய நான்முகன் நாவினைத் தனக்கு வீடாகக் கொண்டவளும், சுத்தாதீத மான பெருவெளியில் - சோதியில் ஒளி வீசுகின்ற முதன்மையான மூல சத்தியும், அழகிற் கலந்த மேலான அறத்திற் பிறந்தவளும், அறிவினால் நிறைந்து ஒப்பற்ற பாரதி யென்னும் பெயருடையவளும், அப் பெயரோடு பாட்டுக்குள் ளிருக்கும் இனிமை யுள்ளவளும் ஆகிய கலைமகளின் விழியின் அருள்பெற்று நின்னையே புகழ்ந்து போற்றுவதை விட்டு விடேன்.

(அபயன் என்றது இலக்குவனை, அவன் தான் அச்சமின்றி இருத்த லோடு பிறர் அச்சத்தையும் நீக்குவன் என்பது கருத்து.)

தந்த தந்தன தனதன தனதன
தந்த தந்தன தனதன தனதன
தந்த தந்தன தனதன தனதன தனதான

167. நெஞ்சு தந்தன னுனதடி நினைவுற
அங்கை தந்தனன் மலர்கொடு புனல்விட
நின்பெ ரும்புகழ் பரவிட வுதவின ஞெருநாவு

நிந்தை யொன்றற வுடலினை யருளினன்
வந்தி றைஞ்சியு னறிகுறி செறிவுற
நின்று சந்ததம் வலம்வர நிறுவினன் இருகாலும்

அஞ்ச னந்திகழ் வடிவது தெரியவும்
விஞ்சு நின்பெயர் இசையது பரகவும்
அன்று கண்டனன் விழியொடு செவிகளும் மலர்மேலாம்

அந்த ணன்செயு முதவியை யெவர்செய்வர்
எங்கள் தஞ்சம துளவெனி லெழுமையும்
அங்கை கண்பத மொழிசெவி நிலைபெற அருள்வாயே

வஞ்சி யிங்கொரு கனவுள ததிசயம்
அங்க தன்பய னறிகுறி லுனைமகிழ்
மங்க லம்புனை யிறைவனு மிளவலும் விடுதூதன்

வந்தி றைஞ்சுவ னவர்நிலை புகலுவன்
இங்கி லங்கையு மனல்பட முடுகுவன்
மைந்தர் திங்களின் மருவுவர் சிறைவிடும் எனவோதிக்

கஞ்ச மங்கையி னிலகிய சனகியை
அஞ்ச லென்றிரு திரிசடை தொழுதிரு
கண்டு யின்றருளெனவவ ணிருவரும் உறுநேயம்

கங்கு லின்சிறு வடிவினில் நெடிதொரு
பொங்க ரின்புடை மருவினன் மதியொடு
கண்டி ருந்துள அனுமனை யுடையதொர் பெருமாளே.

உரை :—பிராட்டியாரைத் திரிசடை வஞ்சியே என விளித்து, "நான் இப்போது வியக்கத்தக்க கனவு கண்டதுண்டு; அக் கனவின் பயனை அறிய வேண்டின், சொல்லுகிறேன்; உனக்குத் திருக்கடிநாண் சூட்டிய உன் தலைவனும், இளையவனும் உன்பால் அனுப்பிய தூதன் வந்து உன்னை வணங்குவான்; இன்பமுடன் அவர்கள் இருக்கையைச் சொல்லுவான்; இங்கே இலங்கையை நெருப்பாற் சுட்டு அழியுமாறு விரைவு காட்டுவான்; அம் மனிதர்களும் ஒரு திங்களுக்குள் இங்கே வருவர்; நின் சிறை விடுபடும்" என்று சொல்லித் தாமரையிலுள்ள திருமகள் போன்ற பிராட்டியாயை அஞ்சற்க வென்று தேற்றி அவளுடைய இரண்டு திருவடிகளையும் வணங்கித் துயில்க என்று மொழிந்ததையும், அவர்கள் இருவருடைய நட்பையும், அவ்விரவில் சிறிய வடிவத்தோடு பெரிய ஒரு மரக்கிளையில் இருந்து அறிவோடு பார்த்திருந்த—என்றும் அழியாத அனுமானை அடிமையாகக்

கொண்ட ஒப்பற்ற பெருமாளே; பிரமன், நின் திருவடிகளை நினைத்தற்கு மனத்தைத் தந்தான்; பூவினால் அருச்சிக்கவும் நீரால் திருமஞ்சனம் செய்யவும் கைகளைத் தந்தான்; உன் பெரிய திருவிளையாடலைப் புகழ நாவை யருளினன்; குற்றமற்ற திருமண் காப்பணிந்து பணிந்து உன் அடிமை யென்னும் குறி தோன்ற உடலையருளினன்; நின் திருக்கோயிலை வலம் வர இரு கால்களையும் நல்கினன்; மைபோற் கருமையுள்ள நின் திருவடியினைக் காணக் கண்களையும், நின் புகழை மிகவும் பருகக் காதுகளையும் ஈந்தனன்; இவ்வாறு தாமரை மலர்மீது பொருந்தியுள்ள பிரமன், நான் இவ்வுடலைப் பெற்ற அன்றே இந் நன்மைகளைப் பெறுமாறு படைத்தனன்; இவ் வுதவியை வேறு எவராற் செய்ய இயலும்; என் தாழ்வினால் இன்னமும் பிறவி யுண்டாயின் மக்கள், தேவர், விலங்கு முதலியவற்றுள் ஏதேனும் ஒருப் பிறவியையடைய நேரின், மேற் கூறிய கை, கால், கண், காது, உடல் முதலிய சிறப்புறுப்புக்களைப் பெற்று உனது தொண்டில் நிலைத்திருக்குமாறு அருள் செய்வாயாக.

தானதன தான தந்த
தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான

168. மூவுலகெ லாம ளந்து
வேதமுடி வாகி நின்று
மோதுதிரை வீசு கங்கை இடமாகி

மூலதர மாகி விஞ்சு
பார்மகள்வி டாது கொண்டு
மூதறிவி னால்வ ணங்கி அகலாத

சேவடிக ளேநி னைந்து
நீடுபுகழ் பாடி யன்பர்
சேவை பிரியாது நின்ற அடியேனைத்

தீயவர்கள் வாயி லின்கண்
மாவறுமை பேசி நின்று
தேகியென நீது ரந்து விடலாமோ

காவினிடை யேயி ருண்ட
பாயிருளி லேந டந்த
காதகனி ராவ ணன்சொல் அனல்போலே

காயவுடல் போத வெம்பி
நாயகிபொ ருத லைந்து
காவல்புரி மாதர் கொண்ட துயில்நாடி

ஆவிவிட வேணு மென்று
தீரநினை யாவெ ழுந்த
ஆகுலமெ லாம றிந்து வெளியாதற்

கானவிது கால மென்ப
தோருமனு மானை யன்பின்
ஆர்வமொடு தூது கொண்ட பெருமாளே.

உரை:—கனவின் பயனை உரைத்த திரிசடையும் மற்ற அரக்கியரும் துயில் கொண்ட போது, அவ் வசோக வனத்தின் நடுவில் மிக்க இருளில் நடந்து வந்து, கொல்லுந் தொழிலையுடைய இராவணன் சொல்லிய சொல் நெருப்புப் போல் தன் காதுகளிற் சுட, அதனால் உடல் மிக வெதும்பப் பெற்றுப் பொறாமல், பிராட்டி தன் மனத்திற் பலவகையான எண்ணங்கள் தோன்றியதால் அலைப்புண்டு, காவற் பெண்டிர் தூங்குதலை யறிந்து உறுதியாகத் தெளிந்து, இப்போது நம் உயிரை விடல் வேண்டுமென்று துணிந்து எழுந்த அவள் வருத்தமெல்லாமற்றையும் அறிந்து, நம்மை வெளிப்படுத்துவதற் குரிய காலம் இதுவென்று தெளிந்த மனமுடைய அனுமானை, அருள் சேர்ந்த அன்பினால் தூதனாகக் கொண்ட பெருமாளே; நின் திருவடிகள் மூவுலகையும் ஈரடியால் அளந்து, வேதமுடிவில் அழியாது நின்று, கரையை மோதும் அலைகளையுடைய கங்கையாறு தோன்றும் இடமாகி, எல்லாப் பொருள்களும் தோன்றுதற்கு மூல காரணமாகிய ஆதாரமாகி, எல்லாவற்றையும் தன்னுள் அடங்கச் செய்து, மேம்பட்ட நிலமகள் மறவாமல் ஒருத்தியாக நினைந்து தன் முதிர்ந்த அறிவினால் வணங்கி விலகாமல் இருக்கும் பெருமை யுடையன; அவைகளையே நினைத்து நின் பெருந் திருவிளையாடல்களைப் போற்றிப் புகழ்ந்து, நின் அடியார் சேவையை விட்டுப் பிரியாமல் நிற்கும் அடியேனைக் கொடியவர் களின் வாயிலின் கண் நிற்கச் செய்தும், என் வறுமையை இடைவிடாமல் சொல்லச் செய்தும், 'எனக்குப் பொருள் ஈ' என்று கேட்கச் செய்தும் வருந்துமாறு துரத்திவிடலாமோ?

(இதில் திருமாலின் திருவடிகளின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. வறுமையின் இன்னாததும் பெரியதும் உலகில் பிறிதில்லாமைபற்றி அது, மா வறுமை எனப்பட்டது. நான் தேகி என்னுமாறு நீ என்னைத் துரந்து விட்டமோ என விரித்துரைக்க).

தானன தானன தானன
தானன தானன தானன
தானன தானன தானன தனதான

169. நீதானே மாமயல் மூடுவை
ஊடேயோர் ஞானமும் வீசுவை
நேர்போலே லீலைக ளானவை வெகுவாக
நேடாதே யோடுவை யாகையின்
நாயேனல் ஓர்செயல் வேறிலை
நேரேநீ டேறினும் வீழினும் நினைதேகாண்
தாதார்பூ மாலைக ளேகொடு
வேதாவே தான்முத லாகிய
தார்வானோர் நாடொறு மேதொழு மிருதாளில்
சார்வேயாய் வேறுப டாதினி
நானீபோய் ஞானம தாகிய
தாளேதா னாகிய பேறது பெறுவேனோ
போதாதோ வாருயிர் வாழ்வது
ராமாநீ வாழியெ னாநனி
போதாவோர் நீள்கொடி மாமிட றொடுசாரப்
பூமேலாள் கீழுற நாடுறு
நேர்காண மாமயி லேபொறு
பூரேபா ராழியி தோதிரு அடையாளம்
மாதாவே யாவிவி டாதொழி
தூதாயே ராமபி ரானெனை
வாநீபோய் மீளென வேவினன் எனநாமம்
வாய்மாறு தோதிமு னேவரு
சீமானார் மாருதி யார்பெறு
வாழ்வேசீ ராகவ னேசுரர் பெருமாளே.

உரை :—பிராட்டியார், "இதுவரை உயிரை விடாது நான் வாழ்ந்தது போதாதோ; இராமபிரானே, நீர் வாழ்வீராக;" என்று நினைத்து விரைந்து போய் நீண்ட வொரு கொடியை, என்றும் மங்கலமா யுள்ள கழுத்தோடு சேரச் சுருக்கிட்டு, (தாமரைப் பூவின்கண் வாழ்பவளாகிய சீதாபிராட்டி) மரத்தின் கீழே தொங்க நினைத்த கருத்தினை அனுமான் உணர்ந்து, "பெரிய

மயில்போலும் சாயலை யுடையவரே, பொறுத்திர் ; இது போதும் (பூரே என்றது போதும் என்றவாறு) அடையாளமாக நான் கொணர்ந்த இவ் வாழியை யிதோ பாருங்கள்; உலகத் தாயே, உயிர் விடவேண்டா; இராம பிரான் என்னை வாவென் றழைத்து, ' நீ என்னுடைய தூதாகப் போய் மீளுக ' என்று சொல்லி யனுப்பினார்" என்று சொல்லி இராம நாமத்தை ஒயாது சொல்லிக்கொண்டு பிராட்டியின் முன்வரும் பேறடைய அவ் அனுமானுக்குப் பெருஞ் செல்வமாக உள்ளவனே; இராகவனே; இமையோர் பெருமாளே ; நீ, அடியேனை மாயையால் மறைப்பாய் ; அம் மாயையின் நடுவில் ஒப்பற்ற ஞானத்தையும் கொடுப்பாய் ; செவ்வையாய் இருத்தல் போன்ற திருவிளையாடல்களை மிகத் தேடி, நினைக்காமல் ஓடச் செய்வாய்; ஆதலின், எல்லாம் நின் செயலே யன்றி நாய்போல் இழிந்த என் செயலென்று ஒன்றுமில்லை; எனக்குச் செவ்வையான அனுபவம் என்ன விருக்கிறது? பரமபதத்தி லேறினும், நரகில் வீழ்ந்தாலும், அந் நுகர்ச்சிகளும் உன்னுடையனவே; பூந் தாதுகள் நிறைந்த பூமாலையைக் கையிலெடுத்துக் கொண்டு, பிரமன் முதலாகத் திரண்ட இமையவர் படைகள் என்றும் போற்றி வணங்கும் நின் திருவடிகளை அடியேன் சார்ந்து அவையே தஞ்சம் எனக் கொண்டு, வேறுபடாது, நான் என்றும் நீ என்றும் சொல்லப்படுகின்ற இரண்டுபட்ட அறிவு கெட்டு, ஞானமாகிய மெய்யறிவு தானே யுண்டாகப் பெற்று, வேறு நினைவு உண்டாகாமல், எல்லாம் நீயே யென நினைத்தற்கும் நானென்று ஒருவன் தனியாக விருந்து வேறாக எண்ண வேண்டுமாகையால், அந் நினைவுங் கெட்டு, அசைவற்று அதுவே அது வென்னும் சாயுச்சியமாகிய திரும்பாத பேற்றினைப் பெறுவேனோ? சொல்வாயாக.

தந்தன தான தந்த
 தந்தன தான தந்த
 தந்தன தான தந்த — தனதான

170. மந்தர மார துங்க
 குங்கும ராக விம்ப
 மங்கள கோம ளங்கொள் — முலையானார்

வஞ்சக லீலை யென்கண்
 நெஞ்சுற வேவி ழுந்து
 மங்கிவி டாது செம்பொன் — அடிமீதே

சிந்தையு லாவு கொண்டு
 பண்புட னேபு ரிந்து
 செந்தமிழ் பாடி யன்பு — தவறுதே

தென்புலம் யாவும் வென்று
பின்பிற வாது யர்ந்த
செந்திரு வாழ்வை குந்தம் அடைவேனே

சந்தய மாகி நின்று
கங்குலின் மீது வந்து
தஞ்சமி லாது வெம்பி உரவோய்நீ

தந்திடு வாய்மை நம்ப
நின்பெய ரேது தங்கு
தண்பதி யேது விஞ்சு கடல்தாவி

வந்திடு கோல மென்கொல்
என்றனு மானை யன்று
வஞ்சமெ ஞறி னைந்து தனியூடே

வண்டுறை சோலை யின்கண்
நின்றுத ளாடு கஞ்ச
மங்கையை மார்பு கொண்ட பெருமாளே.

உரை :—தன்னை வணங்கிய அனுமானைப் பார்த்துச் சீதாபிராட்டியார் ஐயுற்று, இரவில் தன்னிடம் விட்டுவந்து, ஆதரவின்றி உளம் நொந்து, "அறிவுள்ளவனே, நீ கூறியவற்றை நம்பவேண்டு மானால், நின் பெயர் யாது? இருப்பிடம் எது? பெரிய கடலைத் தாவி இங்கே வருமாறமைந்த நின் வடிவின் தன்மை எத்தகைத்து? என்பதை அறிவிக்க வேண்டு" மென்று சொல்லி அவ்வனுமானை, மீண்டும் கண்டு இஃது அரக்கர் சூழ்ச்சியோ? என்று தனித்து மயங்கி, வண்டுகள் மொய்க்கப் பெற்ற அச் சோலையின் கண்நின்று தடுமாறு முள்ளத்தை யடைய அம்மலர் மங்கையை மார்பிற் கொண்டருளிய பெருமாளே; பெண்களின் நகில்கள் மந்தரமலை போன்றவை; காம மயக்கந் தருபவை; உயர்ந்தவை; குங்குமக் குழம்பு பூசப் பெற்றவை; சிவந்த உருவுடையவை; மங்கலமானவை; இளமையும் அழகும் ஒருங்கே பெற்றவை; இத்தகைய தனங்களை யுடைய பெண்களின் வஞ்சகமான கலவி யின்பத்தில் என் மனம் விழுந்தழுந்தி மழுங்கி விடாமல், சிவந்த பொற்பணிகள் அணிந்த நின் திருவடிகளின் மேல் உலா வருமாறு நற்பேரோடும் நல்லியல் போடும் இருக்கச் செய்து, செந்தமிழாற் பாடி நின்மேல் வைத்த அன்பு தவறாமல், தென்புலமான எமலோகம், நரகலோகம், பிதுர்லோகம் முதலிய உலகங்களை வென்று, மீண்டும் பிறவாமல், உயர்ந்த திருமகள் வாழும் வைகுந்தத்தை நான் அடைவேனே?

தானன தானன தந்த
தானன தானன தந்த
தானன தானன தந்த தனதான

171. வாழ்வறு தேவரு மிந்த்ரன்
நான்முக னீசனும் வந்து
வானெடு பூமிய டங்க அசுரேசர்

வாதைக ளானது பண்டை
நான்மறை வேள்விகு லைந்து
மாதவம் யாவும ழிந்து மெலிவானோம்

ஆழிய னேசர ணென்ற
போதொரு ரூபம டைந்திவ்
வார்கலி சூழ்புவி யின்கண் விளையாடி

ஆரண மாதரு மங்கள்
நீணிலை காணும்வ ரம்பை
ஆரறி வாரத றிந்து தெளிவேனோ

தாழ்வற வேயுயி ரின்று
தான்விட வேநி னைகின்ற
சானகி கூறிய செஞ்சொல் அதுகேளாத்

தாயினி நீதெளி பண்டை
ராசிய மோவுள தெந்தை
சாமள மேனிகு ணங்கள் புகல்வேன்முன்

சூழ்கட லுவிந டந்த
கோலமும் வேறிது கண்டு
சோதிகை யாழியும் வந்த திவையாவும்

சூதல காணெனை நம்பு
நானனு மானென நின்ற
தூதனை நாளுமு கந்த பெருமானே.

உரை :—சிறையிலிருக்கும் தாழ்வு நீங்குதற்கு உயிரை விடவேண்டு மென்று எண்ணும் சனகன் மகள் சொல்லிய செவ்வையாகிய சொற்களைக் கேட்டு, " தாயே, இனி ஐயங்கொள்ளாமல் உண்மை யென்று தெளிக ; இஃது எவரும் அறியாத பழைய மறையோ? எல்லாரும் நன்கறிந்த எமது பெருமான் வடிவம் பச்சை நிறமுடையது ; அவர் தம் குணங்கள் சொல்ல

முடியாதவை ; முன்னே, இலங்கையைச் சூழ்ந்துள்ள கடலைத் தாண்டிய என் வடிவும் வேறு'' என்று சொல்லி அவ்வடிவைக் காட்டி, "பரம்பொருளாகிய என் தலைவர் தந்தருளிய இம் மோதிரம் இங்கு வந்துளதாகையால் இவை யாவும் சூழ்ச்சி யல்ல; என்னை நம்புக; நான் அனுமான்'' என்று தன் பேரைச் சொல்லி நின்ற அத் தூதனை என்றும் மகிழும் பெருமாளே; விண்ணுலகோடு மண்ணுலகும் அரக்கர்களால் துன்பப்பட்டதைப் பார்த்து, தங்கள் செல்வத்தை அரக்கர் கையிற் கொடுத்த இமையோர்களும், இந்திரனும், நான்முகனும், உருத்திரனும் நின்பால் வந்து 'நான்மறை போதலும் வேள்விகளும் கெட்டுப் பெரிய தவமெல்லாம் அழிந்து போயினமையால் நாங்கள் இளைத்து விட்டோம் ; ஆழி தரித்த மாயனே, நின் அடைக்கல' மென்று சொல்லி முறையிட்டபோது, நீ ஒரு வடிவெடுத்து, இக் கடல் சூழ்ந்த உலகில் விளையாடி, நான்மறைகளையும், பேரறங்களையும் நிலை நிறுத்திப் பார்க்கும் நின் திருவிளையாடலின் முடிவை அறியத் தக்கார் யார் ?

தான தனந்த தனதான தந்த
தான தனந்த தனதான தந்த
தான தனந்த தனதான தந்த தனதான

172. சோக மிகுந்து வருவார்கு ளிர்ந்து
வாழ விருந்து பகிராது மண்டு
சூது மிடும்பு மகலாது விஞ்சு புகழாகும்
சோதி யலங்கல் புனையாது வந்து
கோயி லரங்க மொருநாள்ம றந்து
தூய தவங்கள் புரியாது வஞ்ச வடிவாயென்
ஆக மிருந்து பயனேது கண்கள்
வாய்செ விதுண்ட முதலான விந்த்ரி
யாதி கடங்க ளதிகார மின்றி அடியேனல்
ஆன சுதந்த்ர மிலைகாணி றந்து
மீள வும்வந்து முதலேப யின்ற
ஆடல் புரிந்து புறமேயு ழன்று திரிவேனோ
வாகை புனைந்த வொருநீகு ரங்கு
பாவி யிலங்கை நகர்மீது வந்து
மாத வனும்பர் பெருமா னரங்கன் அடையாள
வாய்மை மொழிந்தெ னுயிரேபு ரந்த
சாது ரியங்க ளிவையேது முந்த
மாய மதென்று நினையாது சிந்தை தெளிவாகச்

சாக ரமெங்கு நெடிதேத ரங்க
ஓசை யடங்க விசையோடெ ழுந்து
தார கையண்ட முதுகூடு ரிஞ்ச அனுமான்நீ
தாவி நடந்த வெழில்காண வின்று
வேணு மெனுஞ்சொ லுறையாக நின்ற
சான கிநெஞ்சி லகலாது நின்ற பெருமாளே.

உரை :—அனுமான் கூறியவற்றைக் கேட்ட பிராட்டி, அவனைப் பார்த்து, "வெற்றி மாலையைத் தரித்த நீ, ஒப்பற்ற குரங்கு; பாவியான இராவண னிருக்கும் இவ் விலங்கை நகரில் வந்து, மாதவ னென்றும், நம் இமையோர் தெய்வமென்றும், திருவரங்கநாத னென்றும், சொல்லப்படும் இராமபிரானுடைய திருவடையாளத்தின் உண்மைகளைச் சொல்லி என் உயிரைக் காத்து நின்றாய்; நின் திறமைகளை இராவணனுடைய வஞ்சகச் செயல் என்று முன்னே நினையாது மனந் தெளிவடைதற்காக, கடலில் நீண்ட அலையோசை யடங்க விசையோ டெழுந்து உடுக்களின் மண்டலம் முதுகில் உறைபட, அனுமானே, நீ தாவி நடந்த அழகைக் காண வேண்டு" மென்னும் சொற்களைச் சொல்லி நின்ற அச் சானகியின் திருவுள்ளத்தில் பிரியாமல் நிலைத்துள்ள பெருமாளே; என்னுடல், பசியினால் சோர்வடைந்து வருவோர் உடல் குளிர்ந்து, வருத்தம் தீர்ந்து இன்புற விருந்துக் கேற்ற என் உணவுகளைப் பகிர்ந்தளிக்காமல் மிக்க சூதாடும் தன்மையது; தருக்கிப் பேசுவது நீங்காதது; மிக்க புகழுள்ள ஒளி பெற்ற பாமாலையைத் தரியாதது; பெரிய கோயிலாகிய திருவரங்கத்தில் வந்து ஒரு நாளேனும் அலையாம விருந்து தூய தவங்கள் செய்யாதது; இத்தகைய வஞ்சகமான என் உடல் இருப்பதனால் வரும் பயன் யாது? உடலின் தன்மை இங்ஙன மாயினும், மற்றைய கண், காது, மூக்கு, வாய் முதலிய ஞானேந்திரியங்கள் முதலிய தத்துவங்களின் ஆட்சி யுரிமையன்றி அடியேனால் உண்டாகும் உரிமை அதற்கு ஒன்றுமில்லை; பூதம், பொறி, புலன், வாக்கு முதலியனவும் வசனம் முதலியனவும், மனம் முதலியனவும், கலை முதலியனவும், சுத்தவித்தை முதலியனவும், ஆகியவை சேர்ந்த தத்துவங்களின் ஆட்சியி னுள்ளே அடியேன் குடியாய், அவைகளா லேவப்பட்டு இறந்தும் பிறந்தும் முற் பிறப்புக்களிற் பழகிய தத்துவச் செயல்களின் ஏவல் வழியே ஆடித் திரிந்து நின் திருவடிகளை யடைய மாட்டாமல், புறத்தே தள்ளப்பட்டு, ஒன்றுந் தெரியாமல் உழன்று அலைவேனோ? சொல்லுக.

(என் ஆகம், சோகம் மிகுந்து வருவார் குளிர்ந்து வாழ விருந்து பகிராது என இயைக்க).

35.

தாந்தனன தான தான தானன
தாந்தனன தான தான தானன
தாந்தனன தான தான தானன — தனதான

173. வாங்குகட லோத மோதி மேலிட
ஓங்குநெடு மேரு நேரு லாவர
மாண்டகயி ருகு நாகம் வாய்விட — நடுவேநீ
வாய்ந்தவவ தார வாமை யானது
தாங்கவுள மீது சாத மாகிய
வான்குலவு சோம னுன தோர்தறி — நிலேயாக
ஏங்கியினே யாது மாசு ராசுரர்
தாங்கடையு நாளில் வான கூடமும்
ஏந்துகிரி யாவு மேக வேகம — துடனேவந்
தீண்டியதொர் ஆல கால மாமென
நீண்டகுழை யோடி யாடும் வேல்விழி
ஏந்திழைந லார்கள் மோக லீலேயி — லுழல்வேனே
பூங்கமலே யேவை தேகி யேயுல
கீன்றதிரு வேய மோகி யேமயில்
போன்றுசிறை யூடு காவி லேயொளிர் — மணியேபார்
போந்தவென தாடல் வேட மீதென
ஆன்றபுவி தாவு சோதி போல்விறல்
பூண்டவடி பூமி நாட மேலெழில் — தெரியாவா
ருங்கமல வேத னுடு மோர்முடி
தாங்கவொளி மேவு தார காகணம்
ஆழ்ந்ததலே மாலே போல நாலவிண் — வெளிமூட
ஆங்கொர்கயி லாய மேரு வாமென
நீண்டவனு மானே வானு ளோர்தொழ
ஆண்டரகு வீர கோயில் மேவிய — பெருமாளே.

உரை :—பிராட்டியாரைப் பார்த்து அனுமான் சொல்லுவது : “ அழகிய தாமரைப்பூவில் உள்ளவளே, விதேகமன்னன் மரபிற் பிறந்தவளே, உலகை யீன்ற பிராட்டியே, உள்ளத்தால் நினேத்தற்கு எட்டாத மோகமற்றவளே, சாயலால் மயிலேப்போன்று காவலுக்குட்பட்டுச் சோலேயில் தங்கியுள்ள ஒளி வீசும் மணி போன்றவளே; கடலேத் தாண்டிவந்த என் வடிவி

மையின் சிறப்பைப் பார்ப்பாயாக" என்று சொல்லி அசையாமற் கிடந்த நிலத்தினின்றும் மேலெழுந்து, அகன்ற உலகைத் தாண்டிய பரஞ்சோதி போல, வீரத்தை அணிகலனாகக் கொண்டிருக்கும் அடிகள் உலகெங்கும் பரந்து நிற்கவும், மேலுயர்ந்த அழகு தெரியாதவாறு, திருவுந்தித் தாமரையி லுள்ள நான்முகனது நாடாகிய சத்திய லோகத்தைப் பெரிய தலையில் தாங்கவும், ஒளியுள்ள உடுமண்டலம், நிறைந்த தலைமாலை போல் தொங்கவும், விண் வெளியைத் திருவுரு மறைத்து மூடவும், அச் சோலையின்கண் ஒப்பற்ற கயிலை மலைபோல் வெண்ணிறமும், மகாமேருவைப் போல் பருமையும் உயரமும் உளவென்று சொல்லவும், நீண்டு வளர்ந்த அனுமானை விண்ணவர்கள் வணங்குமாறு அடிமை கொண்டருளிய ரகு மரபிற் றோன்றிய வீர சிங்கமே, திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமாளே ; வளைந்த திருப்பாற்கடல் அலைமோதி மேலெழும்பவும், நெடிய மகாமேருமலை செவ்வையாய்ச் சுற்றி வரவும், பெருமை மிக்க தாம்பாகச் சுற்றிய வாசுகி யென்னும் பாம்பு வாய்விட்டலறவும், விண்ணவர் நடுவில் நின்ற திருவவதாரமாகிய ஆமை, அம்மலை சாய்ந்து விழாமல் அதன் கீழ்க் கிடந்து தாங்கவும், நின் மனத்தின் கண் பிறந்து மிகப் பழக்க முடைய விண்ணிற் குலாவித் திரியும் சந்திரன், மேருமலையாகிய மத்துச் சாயாமல் நிலைத்து நிற்குமாறு தறியாக நிற்கவும், இவைகளால் அஞ்சி மனம் இளைக்காமல் பெரிய தேவர்களும் அசுரர்களும் அக் கடலைக் கடையும்போது விண்மேற் சுவரும், முகடும், தரையிலுள்ள மலைகளும் வெந்து போதற்குரிய கடுமையோடு வந்து விண், மண் எங்கும் நிறைந்த ஒப்பற்ற ஆலகாலமென்று சொல்லத் தக்கனவாய் நீண்டு, காதிலுள்ள குழையின் அளவு ஓடி மூக்குவரை திரும்பிச் சுழலும் வேல்போன்ற கண்களை யுடையவர்களும், மணியாலும் பொன்னாலும் செய்யப்பட்ட கலன்களை யணிந்தவர்களு மாகிய பெண்களினுடைய விருப்பந்தரும் கலவி யின்பத்தில் அகப்பட்டு இன்னும் உழல்வேனோ? அருளிச் செய்வாயாக.

தனன தனன தனதான தந்த
 தனன தனன தனதான தந்த
 தனன தனன தனதான தந்த தனதான

174. அடிமை யுரிமை பெரியோர்க ளிங்கு
 வருக வருக வெனவேவி ளம்பும்
 அரிய தரும நெடிதேபு கந்து துணையாகி
அவல மகல மரபாகி வந்த
 குலமு மொழிய மறைநூல்மொ ழிந்த
 அடைவின் வடிவி லுளதாளி ரண்டு நெறிநாடி

நெடிது திகழ வரிராம சந்த்ர
பரம புருட க்ருபையாள வஞ்ச
நிருதர் தமது குலகால வென்று புகழ்பாடி
நிறைய நறைகொண் மலர்நீர்பொ ழிந்து
சுருதி பரவு முயர்கோயி லின்கண்
நினது கரிய திருமேனி கண்டு தெளிவேனே

கொடிது கொடிது நெடுவாயு மைந்த
அமையு மமையு மதிரூபம் வந்து
குறுகு குறுகு னெழில்காண லின்று வசமோவென்
குறைக டவிர வினிநீயொ டுங்கு
பிரம பதவி பெறுவாய்பி ரிந்த
குரிசில் குணமு மடையாள முஞ்சொல் எனவோதிக்

கடின புளக முலைபீரி றங்க
விழியி லொழுகு புனல்மாற நின்ற
கருணை முதல்வி யொருபேதை மங்கை மருவாரூர்
கனலின் முடுக விடுபேரி ளம்பெண்
அரிவை தெரிவை யழகார்பெ தும்பை
கமலை சனகி யலர்மேல்ம டந்தை பெருமாளே.

உரை:—கடல்கடந்த பேருருக் காட்டிய அனுமானுக்குப் பிராட்டியார் சொல்வது; "நீண்ட வாயு மைந்த, உன் வடிவு மிகவும் கொடிது; போதும் போதும்; பெரு வடிவம் சிறிதாகக் குறுகு குறுகு; உன் அழகைக் காண இப்போது வசமாகுமா? இனி யென் குறைகள் தீர இவ் வுருவத்தை ஒடுக்கு; என் உயிரை நீ காத்தமையால், பிரம பட்டம் பெறக் கடவை;" என்று வரம் நல்கி, 'என்னைப் பிரிந்த என் தலைவருடைய குணமும் அடையாளமும் சொல்லுக' எனப் புகன்று, கடினமாகிப் பருத்த நகில்களி னின்றும் பால் பீறிட்டு வந்திறங்கவும், கண்களின் நீர் எல்லாம் வற்றிப் போகுமாறு அழுகை நீரைச் சொரிந்தும் வருந்தி நின்ற அருள் மிக்க பிராட்டியும், ஒப்பற்ற பேதையும், மங்கையும், பகைவருரைச் சுடச் செய்த பேரிளம் பெண்ணும், அரிவையும், தெரிவையும், அழகு நிறைந்த பெதும்பையும், தாமரையி லுள்ளவளு மாகிய சானகியின் பெருமாளே; நினக்கு அடிமையும் உரிமையு முள்ள பெரியோர்களின் துணையாகி, அவர்களால் என் எளிமை நீங்க, மரயாக வந்த இக் குலமும் போதும்; அடியேனை யிங்கு வருக வருக என்று கூறுமாறு அரிய அறத்தை மிக மகிழ்ந்து செய்து, அவர்களின் துணையால் இத் துன்பப் பிறவியினைப்

போக்க வைத்த மறை முதற் கலைகள் சொல்லிய முறைப்படி நின் திருவடிகளிற் சேரும் வழியாகிய மெய்யறிவினைத் தேடி மிகவும் அலைந்து, அம் மெய்யறிவே சிறந்ததாகக் கருதி நடக்கவும், 'அரி ராமசந்திரா, மேலான புருஷனே, அருளாளா, வஞ்சகமுள்ள அரக்கர்குல காலா,' என்று சொல்லி நின் திருவிளையாடல்களைப் புகழ்ந்து கூறவும், தேன் நிறைந்த பூக்களையும் தூய நீரையுங் கொண்டு நின் திருவடிகளிற் சொரிந்து போற்றவும், உயர்ந்த திருவரங்கத்தில் நின் கரிய திருவடிவைக் கண்டு மகிழவும் பெறுவேனே?

தனதான தானதந் தனத்தன
தனதான தானதந் தனத்த
தனதான தானதந் தனத்த தனதான

175. சதுராக வாழவும் கயற்கண்
மடவாரை மேவவும் களித்த
தருபாலர் பேருடன் அழைத்து வரவேயும்

தனபால னாகவுஞ் சிறக்க
மணிகோடி பூணவும் ப்ரபுக்கள்
தலைவாயின் மீதுவந் திருக்க இசைவாணர்

துதிகேள்வி கூறவுங் களித்து
நறைமாலை சூடவுந் திருத்து
சுவையோடு போனகம் புசித்து நலமாகத்

துயில்பாயல் சேரவும் பருத்த
நினைவான பாழ்மனம் பசித்த
துளவேறு பாதபங் கயத்தை நினையாதோ

எதிரேகி லாதுடம் பொடுக்கி
யொருபாணி யால்முகம் புதைப்ப
இருபாத மேவணங் கியச்ச மொடுசீதை

இனிவாழி வாழியென் றுமற்று
மலர்நாபி மார்புகண் டம்வச்ர
இணைவாகு தூணிவெஞ் சிலைக்கை யுடனேதான்

அதிரேகை யானசந் த்ரவட்ட
வதனுபி ராமமஞ் சையொத்த
அழகான மேனிசெங் கண்முற்றும் உளதான

அடையாளம் யாவுநின் றுசெப்பி
மணியாழி தானுகந் தெடுத்த
அனுமானை யாளவந் துதித்த பெருமாளே.

உரை :—நின் பேருருவைச் சுருக்கித் தலைவரின் அடையாளங்களைச் சொல்லென்ற பிராட்டியின் எதிரில் நில்லாமற் பக்கத்தில் நின்று, உடலை யொடுக்கி, ஒரு கையால் வாயிடத்தைப் புதைத்து, இரண்டு திருவடிகளி லும் வணங்கி, அச்சத்தோடு, "பிராட்டியே, இனி வாழ்க வாழ்க" வெனப் போற்றி, அதன் பின்னர், பெருமானுடைய தாமரை மலர்போன்ற திரு வுந்தியையும், திருமார்பு, திருக் கழுத்துக்களையும், வயிரம் போன்ற இரு திருத்தோள்களையும், அவற்றில் அமைந்துள்ள அம்புக் கூட்டையும், ஆற் றல் மிக்க வில்லையேந்திய கைகளையும், இவ் வுறுப்புக்களோடு வியக்கத்தகு வடிவமுடைய இரேகைகளையும், முழுமதிபோல் வட்டமான திருமுக அழ கையும், இருண்ட மேகம் போன்ற அழகிய திருமேனியையும் செந்தாமரை மலர்போன்ற திருக் கண்களையும் சிறப்பித்து மற்றைய வுறுப்புக்களின் அடையாளங்களையும் தெளிவாகச் சொல்லி நின்று, மணிக ளழுத்தப் பெற்ற திருவாழியையும் மகிழ்ந்து கொடுத்த அனுமானை அடிமையாக ஆள வேண்டி வைகுந்தத்தி லிருந்து நில வுலகில் அவதாரம் செய்தருளிய பெருமாளே ; திறமையாக வாழவும், சேல் போலும் கண்களையுடைய பெண்களோடு கலந்து மகிழவும், மகிழ்வூட்டும் குழந்தை யென்னும் பெய ரோடு அழைக்கப்பட்டு வளரவும், செல்வ முள்ளவனுகவும், சிறந்த மணி களையும் உடைகளையும் அணியவும், செல்வம் மிக்கு உயர்ந்தோர் என் தலை வாயிலின்கண் வந்து கிடக்கவும், அவர்கள் முன், வீணை வாசிப்போர் இருந்து, என் புகழை அவர்கள் காதிற் புகுமாறு பாடுவிக்கவும், மகிழ்ந்து மணமுள்ள மலர்மாலைகளைச் சூடவும், பழுதுபோக்கித் திருத்திய பழங் கள், பால் முதலியவற்றை உண்டு நன்றாய்த் துங்குவதற்குப் பாயிற் படுக் கவும், (இங்குப் பாய் என்றது மெத்தையை) மற்றும் பலவும் மிக நினைக் கும் என் பாழ்த்தமனம், இந் நினைவுகளை மறந்து, நின் பசிய துழாய்மாலை பொருந்தி யுள்ள திருவடித் தாமரைகளை நினையாதோ ?

தானன தந்தன தானன தந்தன
தானன தந்தன தானன தந்தன
தானன தந்தன தானன தந்தன தனதான

176. பூவில்வி ரிஞ்சனு மானுய் வெண்கபி
லாயப ரம்பர னேயாய் நின்றனை
போகபு ரந்தர மாரூ பங்கொடு தருநீழல்

போதவ மர்ந்தனை மூவா வண்டர்கள்
ஆகிவி ளங்கினை நேரே பண்புடு
பூதமொ ரைந்தென வூடே தங்கினை    உயிர்யாவும்

மேவிய மர்ந்தனை யீவோ னும்பெறு
வோனுமி டம்பொரு ளேதே னுந்தனி
வேறுப கர்ந்திடு பேருய் நின்றனை    வெகுமாயம்

விறிய நின்செய லாரே கண்டவர்
நானறி யுந்தர மாமோ ரங்கவி
மானமு றைந்திடு நீயே யென்குறை    களைவாயே

காவிடை கங்குலின் மீதே வந்தது
நீடிய சந்தய மாயே நின்றவள்
காதலு டன்றெளி வாயே விண்டற    இருள்கீறிக்

காரிகை கண்களி கூரா மென்புனல்
சோரவு ளங்குளி ராநா யென்பிழை
காணலை யென்றனு மானே நன்குரை    பலகூறி

ஆவிகு ளிர்ந்திட வானோ ருந்தொழ
நாயகி கண்டருள் தாயே கண்டருள்
ஆயிழை கண்டருள் சீதா கண்டருள்    எனவேபொன்

ஆழிவ ழங்கிய மாதூ தன்கவி
ராசன்வி ளங்கிய போர்வீ ரன்றனை
ஆளுடை யெம்பெரு மானே யண்டர்கள்    பெருமாளே.

உரை :—அசோக வனத்தில் இருளிலே கடலைத் தாவிவந்ததை அரக்
கர் மாயமோ வென மிகவும் ஐயுற்று நின்ற பிராட்டி; இராமபிரான் அன்
புடன் தூதாக அனுப்பியவன் இவன் என்று தெளிந்து, ஐயந் தீர்ந்து
இருக்குமாறு இருளைக் கிழித்து, மணியொளி பரந்து சீதாபிராட்டியின்
திருக் கண்கள் களிப்புமிக்கு மெல்லிய நீரை உதிர்க்கவும், திருவுள்ளங்
குளிரவும், 'நாய்போல் இழிந்த என் பிழையை ஒரு பொருளாகத் திரு
வுளங் கொள்ளற்க' என்று நன் சொற்கள் பலவற்றைச்(அனுமான்)சொல்
லிப் பிராட்டியின் உயிர் குளிரவும், இமையவர் வணங்கவும், 'பிராட்டியாரே
கண்டருள்க ; தாயே கண்டருள்க ; நல்ல மணிக்கலன் அணிந்தவரே கண்
டருள்க ; சீதை யென்னும் பெயருடையவரே கண்டருள்க' என்றும் கூறி
மணிப் பொன்னாழியைக் கொடுத்த பெருந் தூதனும், குரங்குகளுக் கரசும்
எல்லா வுலகங்களிலும் போரில் வெற்றி பெற்ற வீரனுமாகிய அனுமானை

அடிமையாக வுடைய மேலாகிய தலைவனே, விண்ணவர் பெருமாளே; நீ, தாமரையி லிருக்கும் பிரமனாய்; வெள்ளிய கயிலையி லுள்ள - மேலான வர்களுக்கும் மேலான சிவ பெருமானாய்; போகமுள்ள இந்திரன் வடி வுடன் கற்பக நீழலில் வருத்தமற இருந்தாய்; எல்லாத் தேவர்களுமாகி விளங்கினை; ஒன்றன்மே லொன்றாய்ச் செவ்விய இலக்கண முடைய ஐம் பெரும் பூதங்களென அவற்றின் நடுவே யிருந்தாய்; எல்லா வுயிர்களோ டும் கூடி வருத்தமின்றி யிருந்தாய்; ஈவோனும், ஈயும் பயனைப் பெறுவோ னாகி ஏற்போனும், இவ் விருவரும் நின்ற இடங்களும், ஒருவன் கொடுக்க மற்றொருவன் வாங்கும் பொருளும் ஆகி, வேறாகப் பிரித்துச் சொல்லப் படும் மற்றைய பொருள்களின் பெயர்களைத் தாங்கி நின்றாய்; இங்ஙனம் பல வகையாக வுள்ள நின் மாயங்கள் ஒன்றை யொன்று விஞ்சியிருக்கச் செய்யும் உன் திருவுளச் செயலைக் கண்டறிந்தோர் யாவர்? பிரமன் முதலி யோரும் காணமாட்டார்கள் என்றால் நானறியும் தரமோ? திருவரங்க விமா னத்தி லெழுந்தருளிய நீயே யென் குறையைப் போக்குதல் வேண்டும்.

தந்ததன தந்தன தந்த
தந்ததன தந்தன தந்த
தந்ததன தந்தன தந்த — தனதான

177. என்றுமுள செங்கதி ரிந்து
நம்பனருள் மங்கலர் புந்தி
இந்திரன்ம கிழ்ந்திடு மந்த்ரி — அசுரேசர்

இன்புறவி ளங்கிய மந்த்ரி
மைந்தனொடி ரண்டுபு யங்கர்
எண்கொளுடு வின்கண முந்து — தவவானோர்

ஒன்றியவி டங்கள டங்க
நன்றியிலை யென்கினு மந்த
ஒன்பதுக்ர கங்களு மஞ்சி — டானாரும்

ஒண்டிறலி டந்தனில் வந்து
நின்றுதவு கின்றதொ ரின்பம்
உன்பதநி னைந்திட வென்று — முளதாமே

துன்றுவிட மெங்கும்வ ளைந்த
திந்தவினை தங்குமி லங்கை
துங்கமதி வண்டமு ரிஞ்சு — முதுகாவல்

தொந்தமும னந்தம டங்க
இன்ஞெருகு ரங்குக டந்து
தொண்டுசெயல் வஞ்சனை யென்று மலர்மாது

நின்றுதளர் கின்றது கண்டு
வென்றியனு மன்கைகு விந்து
நின்கைபிடி யென்றுவ ழுங்க திருவாழி

நிந்தையறு நண்பொடு கண்டு
பின்பவளு வந்துதெ ளிந்த
நெஞ்சுமுழு துந்திறை கொண்ட பெருமாளே.

உரை:—நெருங்கிய இடங்கள் எங்கும் வளைந்து சுற்றி யுள்ளதும் வஞ்சகம் தங்கி யுள்ளதுமான இவ் விலங்கையின் உயர்ந்த மதில் அண்டச் சுவரை உராய்ந்து நிற்கும்; முற்றுப்பெற்ற கொடிய காவலின் தொடர்ச்சியையுடைய அளவில்லாதனவாகிய இடங்கள் முழுது மடங்குமாறு இன்ஞெரு குரங்கு கடலைக்கடந்து வந்து அடிமைத் தொழில் செய்தல் அவ்வரக்கர் தம் சூழ்ச்சி யென்று திருமகளாகிய சீதாபிராட்டியார் திருவுள்ளம் தடுமாறி நிற்பதைப் பார்த்து வெற்றி மிக்க அனுமான், கைகளைக் குவித்து, தங்களுடைய கைகளிற் பிடியுங்களென்று கொடுத்த ஆழியினைக் குற்ற மற்ற அன்புடனே அப்பிராட்டியார் பார்த்து மகிழ்ந்து தெளிய அவ் உள்ள முழுதையும் உரிமையாகக் கவர்ந்து கொண்ட பெருமாளே; என்று முள்ள செங்கதிரவனும், மதியும், சிவபெருமா னுடைய சுக்கிலம் வீழ்ந்ததால் தரையில் பிள்ளையாகப் பிறந்து, பூமகனென்னும் பெயர்பெற்ற மங்கல ஞகிய செவ்வாயும், புதனும், விண்ணவர் கோன் மகிழும் அமைச்சாகிய வியாழனும், அசுர மன்னரை இன்பமுடன் வாழச்செய்து விளங்கும் அழகுள்ள அமைச்சாகிய சுக்கிரனும், சனியும், இவர்களோ டெண்ணப்படும் இராகு கேதுக்களாகிய இரு பாம்புகளும், இருபத்தேழென்று எண்ணப்படும் நாட் கூட்டமும், எவருக்கும் முற்பட்டுத் தவம்செய்யும் இமையவர் உள்ளம் ஒருமைப்பட்டுள்ள இடங்களும், நன்மையில்லை என்ருலும், அவ்வொன்பான் கோள்களும் அழகுந் திறமுமுள்ள பதினோரா மிடத்தில் வந்து நின்ருல் கொடுக்கும் ஒப்பற்ற இன்பம் சில நாட்களில் அழிந்து போகும். நின் திருவடிகளை என்றும் நினைத்தால் அவ்வின்பம் என்றும் அழியாமல் உளதாகும்.

(பதினோராமிடத்தில் நன்மையற்றுத் தங்கியுள்ள தீக்கோள்களும் நன்மை செய்யும் என்பதனை "ஏகாதசந் தன்னில் எக்கோளும் நிகரென்ன" எனவரும் வில்லி பாரதச் செய்யுளிற் காண்க. (வில்லிபா பா. கன்ன பருவம்).

36.

தனத்தன தனத்தன தந்த
தனத்தன தனத்தன தந்த
தனத்தன தனத்தன தந்த தனதான

178. நினைத்ததே நினைத்தும யங்கி
உரைத்ததே யுரைத்துமி ரண்டு
நிலைத்ததே நிலைத்தெரி கும்பி பசிதீர

நிறைத்ததே நிறைத்தும ருங்கில்
உடுத்ததே யுடுத்துமு யன்று
நிகழ்த்ததே நிகழ்த்துபி றந்து செகமீதே

செனித்ததே செனித்துவி ரிஞ்சன்
விதித்தநா ளகற்றியு முன்று
செயற்கையா லியற்கையி லொன்றும் நிலைகாணன்

திருத்திநீ யழைத்துநின் மந்த்ர
வசத்திலே நிறுத்தியு யர்ந்த
திருச்சரோ ருகப்பத மென்று தருவாயே

தனித்திரா வினிற்கவி வந்து
கொடுத்தமோ திரத்தினை யங்கை
தரித்துலோ சனத்திடை கொண்டு துயராறித்

தனத்திலே யணைத்தும லர்ந்த
முகத்திலே யழுத்திவி ளங்கு
தலைக்குமே லிருத்தியு வந்து திசைநாடி

வனத்திலே விடுத்துந டந்த
பதத்தைமார் பகத்தையி ரண்டு
மணிப்புயா சலத்தையொ ரம்பை மதியார்மேல்

வணக்குவார் தனுத்தனை மஞ்சு
நிகர்த்தமே னியைத்தொழு கின்ற
மனத்துமோ கனத்திரு மங்கை பெருமாளே.

உரை :—இரவில் ஒப்பற்ற 'குரங்காகிய' அனுமான் கொடுத்த மணி யாழியை அழகிய திருக்கைகளில் அணிந்தும், திருக்கண்களில் வைத்து ஒற்றியும், துன்பம் மாறித் திருமுலைகளிலே யணைத்தும், மகிழ்ச்சியால் மலர்ந்த திருமுகத்திலே யழுத்தியும், விளங்கும் தலைமேல் வைத்து மகிழ்ந்தும், அணிகலன்களைக் கட்டிப் பொதிந்து எறிந்த மதங்கமலையுள்ள இசை

நோக்கி நினைத்தும், தண்டகவனத்தில் பஞ்சவடிச் சோலையில் தன்னை விட்டு மானின் பின் சென்ற திருவடிகளையும், திருமார் பிடத்தையும், அழகிய திருத்தோள்களையும், பகைவர்மேல் அம்புவிட வளைக்கும் நீண்ட வில்லையும், கருமுகில் போன்ற திருமேனியையும் நினைத்தும் வணங்கும் திருவுள்ளத்தை யுடைய செகமோகன மாகிய திருமாமகளின் பெருமாளே; வாழ்நாள் உள்ளமட்டும் நினைத்ததையே நினைத்தும், மயக்கத்தால் மறந்தும், சொல்லியதையே சொல்லி அறிவு கலங்கியும், நிலையான வற்றையே செய்து நிலையாகியும், எரியும் வயிற்றுப்பசி தீர முன் உண்டதையே நிறைய உண்டும், அரையில் உடுத்ததையே யுடுத்தும், கிளர்ச்சியோடு செய்ததையே செய்தும், வீணிற் காலத்தைக் கழித்து, இறந்து உலகிற் பிறந்த பிறப்பே பிறந்தும், நான்முகன் விதித்த காலத்தைத் தள்ளி யுழன்று அலைந்தும் செய்யும் செயற்கைகளுள் ஒன்றிலும் இயற்கையாகிய அழகு நிலைத் திருப்பத்தைக் காணேன்; இத்தகைய வீணான விகாரமுள்ள செயல்கள் எல்லாவற்றையும் தள்ளி, நீயே என்னை நன்கு திருத்தி, என்னை யழைத்து உன் திருமந்திர வயத்தில் என் வயமற நிறுத்தி மேலான நின் திருவடித் தாமரைகளை என்று தருவாயோ ?

தானா தனனத் தனத்தன தந்தன
தானா தனனத் தனத்தன தந்தன
தானா தனனத் தனத்தன தந்தன — தனதான

179. தாரா ணத்துகட் டிமுற்றுநி ரம்பிய
நீரா ணதுபற் றியர்ச்சனை யுஞ்செய்து
சாரா வடிமைத் தொழிற்படு கின்றன — ரனைவோரும்
சாகா வரமுற் றதொத்தவி நிம்புடன்
மாமா தரைநத் தியத்திய வஞ்சனை
தானே யுலகத் தியற்றியு லைந்தனன் — வினையேன்யான்
ஆராய் வுறிலிப் படிக்கிவை கண்டவர்
வேறா ருனைவிட் டதிப்பொழு தோன்றிலை
ஆமே யினிமற் றெனக்கொரு சிந்தனை — உள்தாமோ
ஆகா நெறியிற் செலுத்திது மங்கது
போகா வழியிற் புகுத்திய வந்தெனை
ஆளா கெனவுட் படுத்திநு நின்திரு — வருளோகாண்
நேரா பதியிற் கிறைக்குளி ருந்தது
தீரா தல்வெற் பையொத்தபு யங்கொடு
நீயே வதையிட் டகற்றுவை யென்கிலு — மதுவீரா

நேரோ கரனைத் துணித்தச ரங்கொடு
மாரா வணனைப் புயத்தொடு வெஞ்சிரம்
நீறுய் விழவிட் டறுத்தபி னிங்கினும் வருவேன்யான்

தோரா விறைவர்க் குரைத்தொரு திங்களின்
ஏகா வுயிர்வைத் திருப்பன்வி ளம்பிய [தித்
சூளா னதுதப் பின்முற்றுயிர் பொன்றுவன் எனவோ

தூதா பரதற் களித்தவ லங்க்ருத
தாளார் கமலத் தில்வைத்தரு ளென்றொரு
சூளா மணியைக் கொடுத்தவ ளின்புறு பெருமாளே.

உரை :—'பன்னசாலையுடன் உன்னை எடுத்துக்கொண்டு போகின்றேன்; நீ சிறையிலிருப்பது தாழ்'வென்று சொல்லிய அனுமானைப் பார்த்துப் பிராட்டி சொல்லுகிறாள். "பகைவர் ஊரில் நான் சிறைக்குள் இருப்பது உலகத்துக்கு ஏற்பதன்று; உன் மலைபோன்ற தோள்களைக் கொண்டு, சூழ்ச்சியால் நீயே இந்நகரை விட்டு என்னை வெளியிற் கொண்டு போவாய் என்னிலும், நல்ல வீரனே, அது செவ்விய நெறியாமோ? ஆகாது; தண்டக வனத்தில் கரனை யறுத்த அம்பைக் கொண்டு இராவணனுடைய பெரிய தோள்களோடு கொடிய தலைகளையும் பொடியாய் விழத் தொடுத்து அறுத்த பின்னர், நான் இங்கிருந்து வருவேன்; இச் செய்தியை யாரும் அறியாமல் என் தலைவர்க்குச் சொல், 'ஒரு திங்களில் அவர் வரல் வேண்டும்; நான் அதுவரை உயிர்வைத் திருப்பேன்; இக்கால எல்லைக்குள் அவர் வாராது தவறினால் என் முற்றிய உயிரைவிட்டு இறப்பேன்;" என்று சொல்லிப் பின்னர், 'ஓ தூதுவனே, பரதனுக்குப் பாதுகையை யளித்தருளிய அழகிய திருவடிகளில் வைப்பாயாக' வென்று ஒப்பற்ற சூளாமணியை அடையாளமாகக் கொடுத்த பிராட்டியார் இன்பமடைய நின்ற பெருமாளே; உலகில் எல்லோரும் உனக்குப் பூமாலைகளைக் கட்டியும் குடத்தில் நிறைந்த நீரைக் கையிற் பிடித்தும், திருமஞ்சனம் செய்தும் அருச்சனை புரிந்தும் உன்னைச் சார்ந்து அடிமைத் தொழிலுக் குட்பட்டிருக்கிறார்கள்; பாவியாகிய நான் அழியா வரம் பெற்றவன் போல் தருக்குக் கொண்டு, சிறப்புள்ள பெண்களை விரும்பி அவர்களால் உண்டாகிய வஞ்சனையால் ஏவப்பட்டு, பெரிய தீச் செயல்களைச் செய்து வருந்தி அலைந்தேன்; நின் தொண்டர்கள் உனக்கடிமை செய்ய, நான் பெண்களுக் கடிமைசெய்தேன்; இவ் விரு அடிமைகளையும் செய்விப்பது யார் என்று ஆராயின், உன்னையல்லாது இவற்றைச் செய்து கைவந்தவர் எவருமிலர்; நீ இயக்க மற்றவர்கள் இயங்குகின்றார்கள்; வேறு எவ் வழியாக எண்ணிப் பார்க்கினும் உன்னை விட்ட பொருள் எதுவுமில்லை என்பது வெளிப்

படை; எச்செயலும் உன்னால் உளதாகுமே யன்றி எனக்கு உன்னை யொழித்து வேறு நினைவு தனியாக உண்டாகாது; எனக்கொரு உரிமையு மின்மையால், எவருக்கும் ஏற்காத நரகில் என்னை நீ தள்ளுகினும், வீட்டின்ப வழியை யடையச்செய்து அடிமையாக்கி நின் திருவடிகளில் இன்புறச் செய்யினும் எல்லாம் நினது திருவருள் கண்டாய்; என்னால் ஆவது ஒன்றுமில்லை.

தான தத்தன தந்தன தந்தன
தான தத்தன தந்தன தந்தன
தான தத்தன தந்தன தந்தன தனதான

180. சேர்வ னத்திலி யங்கினு மொண்புன
லூடு நித்தம்வ ளைந்துப டிந்துயர்
தேக சுத்திபு ரிந்திடி னுந்தலை யதுகீழாய்த்
தீந டுப்பட நின்றிடி னுங்குகை
யூடி ருப்பினு முண்டிவி ரும்புதல்
தீதெ னத்தவிர் சிந்தைபொ ருந்தினும் உடைதானும்
நேர்வி டுப்பினு மிங்கித மொன்றற
மோன முற்றுறு பண்புதொ டங்கினும்
நீடு ருப்பல கொண்டு வழங்கினும் உளமீதே
நீணி லத்தைய ளந்தசெ ழும்பத
மேது தித்திடி னங்கது நன்றுநி
ராசை யுற்றவ ரென்செயி னும்பழு தடையாவே
சார்வு பெற்றசெ ழுந்திரு வின்க்ருபை
யால்வி டைக்கொடு மந்திர சிந்தனை
தான்மி குத்துந டந்துந றும்பொழில் பொடியாகத்
தாளி லெற்றியெ திர்ந்திடு கண்டகர்
ஆவி செற்றுவெ ருண்டவர் சென்றிவை
தாமு ரைக்கவ றிந்தர சின்படை எதிர்போதில்
தேர்வி யற்றவி லங்கையில் வஞ்சகர்
வீர முற்றும்வி ளங்கவும் வந்துள
தூது ரைக்கவும் வென்றிபொ ருந்தவும் நினைவாகித்
தோள்பு டைத்துநெ ருங்கிவ் ருங்கொலை
வாள ரக்கர்ப யங்கர னென்றொரு
தோர ணத்திலி ருந்தவ னின்புறு பெருமாளே.

உரை :—பிராட்டியிட மிருந்து சூளாமணியைப் பெற்றுக்கொண்டு, அவர் தம் சார்பு நிறைந்த அருளால் விடைபெற்ற அனுமான் மனத்தில் நன்றாக ஆராய்ந்து, விரைந்து சென்று, பூமணம் வீசும் அச் சோலை பொடியாகுமாறு காலால் மோதி யழித்து, அப்போது தன்னை யெதிர்த்த பாவிகளாகிய அரக்கர் உயிரை மாய்த்து, அவர்களுள் அஞ்சிய எஞ்சிய பேர்கள், இச் செய்தியை இராவணனிடம் சொல்லவும், எதிர்த்தவர்களைக் கொல்லவும், வெற்றி பெறவும் நினைவு கொண்டு, தோளைத் தட்டி, கொல் லுந் தொழிலைச் செய்யும் கருவிகளைத் தாங்கிப் பொரவரும் அரக்கனை அச்சுறுத்தி, ஒரு கோணத்தில் இருந்த அனுமானை அழியா இன்பம் பெற வைத்தருளிய பெருமாளே ; நரகடையா திருப்பதற்காக மலை, மரம், விலங்கு, பறவைகள் ஆகியவை சேர்ந்துள்ள காட்டை யடையினும், தெளிந்து அழகாய்க் காணப்படும் நீரில் என்றும் மூழ்கி உயர்ந்த உடலைத் தூய்மை செய்யினும், தலை கீழாகப் பஞ்சாக்கினி நடுவே நிற்பினும், மலைக் குகைகளுக்குள் இருப்பினும், உணவை விரும்புதல் தீமையென்று விட்டு மனம் பொருந்தினும், உடுக்கும் உடையைச் செவ்வையாய் விட்டு நிர்வாணி யாயினும், உலக வின்பத்தை முழுதும் நீக்கி மௌனியாகும் தன்மை பெறினும், வானப் பிரத்தம், சந்நியாசம், ஆகிய நிலைகளைக் கொள்ளினும், பரந்த உலகை ஓரடியாக அளந்த திருவடியை யிருத்தி வைக்காமல், தான தருமங்கள் செய்யினும், வருத்தமே யன்றி அவை பயன் விளைக்கா ; அத் திருவடிகளையே பற்றுக் கோடாகக் கருதி வேறுபற்றில்லாத நின்னடியார் கள் நன்மை செய்யினும் தீமை செய்யினும் பழுதடையாமல் நற்பயனையே விளைக்கும்.

தத்த தத்தன தத்தன தந்தன
தத்த தத்தன தத்தன தந்தன
தத்த தத்தன தத்தன தந்தன தனதான

181. முட்ட முட்டவ ருக்கிகள் கண்கொடு
மெத்த மெத்தவு ருக்கிகள் வஞ்சனை
மூற்ப டித்தச மர்த்திகள் விஞ்சிய நககரேகை
மொய்த்தி ருக்குமு லைச்சியர் குங்குமப்
பொட்டு நெற்றியர் கெட்டவு சங்கிகள்
முத்தெ னத்தெரி பற்கள ரங்கொடு கடையாமேல்
இட்ட பற்கலை கட்டுமி டும்பிகள்
அத்த லைக்கடை பற்றிநி ரந்தரம்
லச்சை யற்றவர் நிற்பவ ரங்கொரு கதவூடே

எட்டி யெட்டிமு கக்குறி தந்தபின்
அக்க ணத்தின்ம றைப்பவர் செம்பொருள்
இச்சை யுற்றப ரத்தையர் சிங்கியில் உழல்வேனே

வட்ட மிட்டம திற்குளி லங்கையும்
அச்ச முற்றுநெ ளிக்கவ ணங்கினை
மைப்பு றச்சிறை வைத்த வனுந்தலை தடுமாறி

மற்க டத்தைமு டுக்குமி னென்றெதிர்
விட்ட விட்டப டைத்திரள் வந்தவர்
மட்டி லக்கற வுற்றக ளந்தனில் நிருதேசர்

பட்டி டக்கரி பொட்டெழ வஞ்சகர்
துட்டர் பட்டுவெ ருக்கொள வெண்கடல்
பச்சி ரத்தந திக்குண்ம டங்குற அனைவோரும்

பற்று விட்டுவெ ருக்கொடு சிந்துற
எற்றி விட்டவொ ருத்தனை யன்புசெய்
பத்த ருக்குள்முன் வைத்துவ ழங்கிய பெருமாளே.

உரை:—அநுமான் சோலையை யழித்து, எதிர்த்த காவலர்களைச் சிதற வடித்துத் துரத்த, அவர்கள் சென்று இச் செய்தியை இலங்கைக் குள்ளே யிருந்தவர்கட்குச் சொன்னபோது அவர்கள் அலறி நடுங்கவும், பிராட்டியாரை அழுக்கடையுமாறு சிறையில் வைத்த இராவணனுந் தலை மயங்கி நெஞ்சு தடுமாறி அக் குரங்கை அடித்துத் துரத்துங்கள் என்று சொல்லி அடிக்கடி அனுப்பிய - படைக் கூட்டங்களாக வந்தவர்களாகிய அரக்கர்கள் எண்ண வியலாத அளவில் போர்க்களத்தில் வந்து பொரு திறக்கவும், யானைகள் இறந்து துகளாய் மேலெழவும், வஞ்சகமுடைய தீயோர் அடிபட்டு வெருவவும், வெண்ணிறமான உப்புக் கடல், போர்க் களத்தினின்றும் பெருகி யோடும் குருதி ஆற்றினுள் அகப்பட்டுச் செங் கடலாய் மாறவும், அரக்கர் அனைவரும் வீரங்கெட்டு அஞ்சிச் சிதறி யோடவும் உதைத்த ஒப்பற்ற அநுமானை, உன்னிடம் அடிமைசெய்யும் அடியார் களுள் முதன்மையாக வைத்து, அநுமான் முதலிய பரம பாகவதர்கள் என்று உலகோரை வழங்கச் செய்தருளிய பெருமாளே; பரத்தையர், மணலில் சிறிது சிறிதாக ஊறுகின்ற நீர் ஒரு துளியாயினும், காத்திருந்து இறைத் தெடுக்குங் கால் மணலும் உடன்வர அந் நீரை யெடுப்பவர்கள் போல், தங்களைக் கூடும் ஆடவர் கைப்பொரு ளெல்லாம் சிறிதும் எஞ்சுவ தற்கு இடங்கொடாமல் அவர்களை ஆராய்ந்து இருப்பதைப் பறிப்பவர்கள்; கண்களைச் சுழல விழித்து, மிகக் கல் மனதையும் நீராய் உருக்குகிறவர்

கள்; வஞ்சத்தை முற்பட்ட கல்வியாகக் கற்ற திறமை யுள்ளவர்கள்; மிக்க நகக்குறிகள் பொருந்திய நகில்களை யுடையவர்கள் ; சிவந்த திலதமணிந்த நெற்றியை யுடையவர்கள் ; கெட்ட அசங்கதமானவர்கள் ; முத்தென்று சொல்லும்படி தெரியும் பற்களை, அரத்தால் நீளம், குறுகல், கோணல், பள்ளம் ஆகியவை இல்லாமற் கடைந்து, அவற்றின் மேல் பலவகைப் பட்ட கறை கட்டியுள்ள தருக்குள்ளவர்கள் ; நாடோறும் தலை வாயிலைப் பிடித்துக்கொண்டு கூச்சமின்றி நிற்பவர்கள் ; ஆடவரைக் கண்டவுடன், அங்கொரு கதவின் புறத்தே நின்று தலையை நீட்டி எட்டிப்பார்த்து, இத் தகையவர் எனத் தெரியுமாறு முகக்குறி காட்டி உடனே முகத்தைக் கத வில் மறைப்பவர்கள்; பொன்னின்மேல் ஆசையுள்ளவர்கள் ; இத்தகைய பரத்தையரின் சுழலாட்டத்தில் அகப்பட்டு நான் உழலுவேனோ ? இனி யேனும் அருள் செயலாகாதோ ?

தந்த தானனன தந்தன தந்தன
தந்த தானனன தந்தன தந்தன
தந்த தானனன தந்தன தந்தன தனதான

182\. கொண்டை யானது சரிந்துகு லைந்திட
அம்பொ னுடையும கன்றிட மந்தர
கொங்கை யானைகள முந்தியு ரம்பெற முழுநீலங்
கொண்ட வேல்விழிசி வந்துநெ டுங்குழை
சென்று லாவவுட லெங்குநி ரம்பிய
குங்கு மாருணவ லங்க்ருத சந்தன மழிவாகத்
தொண்டை வாய்வெளிற வங்குவ ளைந்திரு
செங்கை தானிறுக வண்டுசி லம்புகள்
தொந்த மானவொலி பம்பநி தம்பமும் வெளிகாண
துங்க மாமதன விங்கித ரஞ்சன
நண்பி னோடுபுணர் வஞ்சியர் தஞ்சிறு [தோ
தொண்ட னேனினியுன் வண்சர ணந்தொழ அமையா
மண்டு தோரணமி ருந்துபெ யர்ந்துமுன்
இந்த்ர சாலமென முந்தியெ ழுந்துயர்
மஞ்சு கிரிடவ ளர்ந்து கரங்கொடு பரிதேர்மேல்
வந்து மாகரிபி சைந்து நடந்திர
தங்கள் போய்விழுவெ றிந்துது ரந்தரு
மந்த வாலிடை நெருங்கியி லங்கையில் அடல்வீரர்

தண்டி யேயெதிர்ந டந்தவர் கண்கெட
மிண்டு தோளெரிய வங்கமி ழுந்தொரு
சந்த மார்குடல்கு ழும்பிவ ழும்பிற முடிவீழச்

சந்து போகவுடல் புண்பட வண்பட
அங்கை காலொடிய வுந்தியெ றிந்தொரு
சம்பு மாலியுயி ருண்டவர் தொண்டுசெய் பெருமாளே.

உரை :—கிங்கிரர்கள் இறந்ததை இராவணன் கேட்டுச் சம்பு மாலியைப் படைகளோ டனுப்ப, அது கண்டு மிக நெருங்கிய தோரணத்தி லிருந்த அனுமான் எழுந்து, அப் படைகளின் எதிரில், இந்திரசால மென்னுமாறு தன் உருவத்தை நெடிதாக்கி மேக மண்டலத்தைக் கிழிக்குமாறு வளர்ந்து, குதிரை தேர் முதலிய படைகளின் மேல்வந்தும், கையாற் பெரிய யானைகளைப் பிசைந்தும், உருண்டு வந்த தேர்கள் தொலைவிற் போய்விழ வெறிந்தும், அரக்கர்களைத் துரத்தி, இலங்கையிலிருந்த வலிமை மிக்க அரக்க வீரர்களைத் தன் அருமந்த வாலினாற் சுற்றி நெருக்கி, போர் செய்ய அடுத்து எதிராக நடந்தவர்களின் கண்கள் பிதுங்கிக் கெடவும், கொழுத்த தோள்கள் நொறுங்கி, எலும்புகள் ஒடியவும், ஒரு வண்ணமான குடல் குழம்பி வழும்புகள் அறுந்து விடவும், தலை தெறித்து விழவும், சந்துகள் நெறிந்து உடல் கிழிந்து புண்ணாகவும், வண்மையான வலிமை கெடவும், அழகிய கைளும் கால்களும் ஒடியவும், வாலினால் இறுக்கிக் கட்டி விரைந்தெடுத்துப் போய் எறிந்து, ஒப்பற்ற சம்பு மாலியின் உயிரைக் கவர்ந்தவனாகிய அவ் அனுமானை அடிமையாக ஆண்டருளிய பெருமாளே; பெண்கள், தங்கள் கொண்டைகள் சொருகுதல் குலைந்து சரிந்து தொங்கவும், அழகிய பொற்புடைவையும், மணிகள் அழுத்திய மேகலையும் அரையைவிட்டு விலகவும், மந்தரமலை போன்ற தனங்களாகிய யானைக் கோடுகள் மார்பில் அழுந்திக் குத்தவும், நன்றாய் மலர்ந்த நீல மலர் போன்ற நிறமும், அகலம், நீளம், கூர்மை, கொல்லுந் தொழில் ஆகியவற்றில் வேற்படை போன்ற ஒப்புங்கொண்ட கண்கள் சிவந்து, நீண்ட காதுவரை சென்று மீளவும், உடல் முழுதும் பூசிய குங்குமம் போற் சிவந்து, அழகுள்ள சந்தனக் குழம்பு அழிந்து வேறாகவும், (குங்குமம் கலந்த சிவந்த சந்தன மென்பதும் உண்டு) கொவ்வைக் கனிபோற் சிவந்த வாய் கலவியால் வெளுக்கவும், சிவந்த கைகள் இரண்டும் இறுகத் தழுவவும், பூமாலைகளில் தேனுண்ண வந்த வண்டுகளும் கால்களில் அணிந்த சிலம்புகளும் ஒன்றை யொன்று தொடர்ந்து உண்டாக்கும் ஓசை பரவவும், அல்குல் வெளியாகத் தோன்றவும், வேட்கையால் எல்லோரினும் உயர்ந்த காமனால் உண்டாகும் குறிப்பினையுடைய காதலால் அன்புடன் கூடும் பண்பும்

செயலும் உடையவர்கள்; அவர்கள் பால் சிற்றடிமை கொண்ட நான், இனி, நினது வளப்பம் மிக்க திருவடிகளை வணங்கி நிற்றல் ஆகாதோ? சொல்லுவாயாக.

("பரிதோராள் வந்தமாகரி" எனவும், "சந்த மாயுடல் குழம்பிவ ழும்பற" எனவும், "உடல் புண்பட விண்பட" எனவும் பாடம்).

தந்தன தானன தனதன
தந்தன தானன தனதன
தந்தன தானன தனதன — தனதான

183. வந்துசூழ் தீவினை பொடிபட
அங்கமே தேசொடு பொலிவுற
வண்டுசேர் மாலையு முடியுந — லெழில்கூர

மண்டியே பாளித ம்ருகமத
சந்துமே லேபரி மளமெழ
மன்றல்கூர் மார்புறு துகிலுடன் — அணியாவும்

தந்துசீர் பேணுவை நறுநெயு
மந்தரா சானமொ டறுசுவை
தங்கவே பாலுண வுதவுவை — சுகம்யாவும்

தஞ்சமா யேயினி தருளுவை
அன்பரீ டேறுகை நினைவுறு
தம்பிரா னீயல தொருவர்பின் — உளராமோ

முந்தவே தோரண மிசையொரு
சிங்கமே போலெதிர் அதிரதர்
முண்டமா யேவிழ முடுகியும் — ஒருவாலால்

முன்பினோ டாவகை படையணி
எங்குமே கோலியு முடிதொறும்
மொய்ம்பினால் வானிடி நிகரென — எதிர்தாவிப்

பந்திசேர் தேர்விழ வெழுவினை
அங்கைமீ தேகொடு நிசிசரர்
பங்கமாய் நீறெழ அதிவித — அமராடிப்

பஞ்சசே னைபதி யவர்களை
நெஞ்சினால் மோதுயிர் பருகிய
பண்புசேர் மாருதி தொழவரு — பெருமாளே.

உரை :—சம்புமாலி இறந்தது கேட்ட இராவணன், பஞ்ச சேனுபதிகளை அனுப்ப, அவர்கள் தங்கள் படைகளுடன் வந்து நின்றபோழ்து, அவர்கட்கு முன், ஒப்பற்ற தோரணத்தில் இருக்கும் சிங்கம்போல் ஆரவாரம் செய்து, அவர்களுடன் வந்த படைகள் தலையற்று விழுமாறு நெருக்கியதால், அஞ்சியவர்கள் முன்னும் பின்னும் ஓடாதவாறு அவர்களின் அணிவகுப் பெங்கும் தன் ஒப்பற்ற வாலினுல் வளைத்துக்கொண்டு முகிலில் தோன்றும் இடி விழுவதுபோல அரக்கர் தலைகளி லெல்லாம் அவர்களின் கண்முன்னே வலிமையோடு தாவிக் குதித்து, வரிசை வரிசையாகச் சேர்ந்துள்ள தேர்கள் சிதறி விழும்படி, அழகிய கையில் ஓர் இருப்புலக்கையை எடுத்து அடித்து, அவ் வடியால் இறந்து விழுந்த அரக்கர் உடல் சேருகிப் பின் காலால் மிதிபட்டுத் துகளாகி மேலெழும்ப, கண்டவர் வியக்கும் வண்ணம் போர்செய்து, பஞ்ச சேனுபதிகளின் மார்பில் அறைந்து அவர் தம் உயிரைப் போக்கி யுண்ட குணமுள்ள அவ் வாயு மைந்தன் வணங்க வந்தருளிய பெருமானே ; மிகப் பழைமையான காலந் தொட்டு என்னைத் தொடர்ந்து வரும் பாவம் நீறு படவும், உடல் ஒளியோடு விளங்கவும், வண்டு சேர்ந்த மாலைகளும், மணிமுடியும், நல்லழகும் மிகுதியாகவும், கருப்பூர, கஸ்தூரி, சந்தனங்கள் என்மேல் மிகுந்து பரந்து மணங் கமழவும், மணமுடைய மார்பில் தரித்த மேலாடையோடு பல அழகிய கலன்கள் விளங்கவும் இவற்றை எனக்களித்து, மதிக்கும் மணமுள்ள நெய்யும் அந்த ராசான்னத்தோடு கூடிய அறுசுவைகளும் அமைந்துள்ள உணவும் பாலும் தருவாய் ; அடியார்கள் ஈடேறும் வழியை நினைத்திருக்கும் தெய்வம் நீயல்லாமல் வேறுளதோ ? இல்லை.

தான தந்தனன தானன தந்தன
தான தந்தனன தானன தந்தன
தான தந்தனன தானன தநதன தனதான

184. கோளர் வஞ்சகரு பாயநி ரம்பிய
சூதர் கண்டகர்வி ரோதரி டும்பினர்
கூளர் துண்டர்கொலை காரர்க டுங்கையர் நெடுமோகங்
கூடு கின்றவர்வி யாகுல சிந்தையர்
மோடர் நன்றியறி யாதவர் வெம்பழி
கூறு மிண்டர்கையெ ழாதவ ழுங்கலர் தமைநாளும்
வேளு மிந்திரனு நீயுன தங்கரம்
நீடு மைந்தருவு மாமணி யுங்குளிர்
மேக முஞ்சமமெ னைமுது வண்டமிழ் கொடுபாடி

வீணி லென்பொழுது போனது கண்டனை
ஓது நின்கமல பாதநி னைந்திட
வேணு மிங்குன து மாயையெ ளிந்திட அருள்வாயே

தாளொ டுங்கொடிய வாலொடு நின்றொரு
தோர ணந்தனினு மோடியி றங்கிமெய்
தானி மிர்ந்துவட மேருவெ னும்படி வடிவாகிச்

சாக ரம்புடைகு லாவுமி லங்கையும்
நேர் குலுங்கநிரு தேசர்ம டிந்துயிர்
சால வுண்டுநம னார்பசி யுங்கெட எதிர்மோதித்

தாளொ டும்பெரிய வாளொடு தண்டொடும்
ஏறி வந்தகன தேரோடும் விஞ்சிய
சூதொ டும்படைஞ ரோடும்வ ளைந்திடு சிலையோடும்

தூவு கின்றமழை போல்விடு மம்பொடும்
ஏழு மந்த்ரிகளும் வீழம லைந்திடு
தூத னென்றுமொரு வாதுபு ரிந்தருள் பெருமாளே.

உரை :—பஞ்ச சேனாபதிகள் இறந்த செய்தியைக் கேட்ட இராவணன், ஏழு அமைச்சர்களையும், அவர் சேனைகளையும் அனுப்ப, அவர்களைக் கண்டு, தன் அடிகளோடும் வளைந்த கோலோடும் நின்று, (கொடுமையான வாலோடும்) தோரணத்தி னின்றும் ஓடிவந்து இறங்கி, உடல் பருத்து வளர, வடமேரு போலப் பேருருக் கொண்டு, கடலாற் சூழப்பெற்ற இலங்கையும் செவ்வையாய் அசையவும், போருக்கு வந்த அரக்கர் இறந்ததனால் அவர்கள் உயிரைக் குடித்து எமன் தன் பசி யடங்கவும், (முன் காலத்தில் அரக்கர்களால் அடிபட்டுத் தோற்றதனால் தன் சினங் கெடவும் எமன் பசி யொழியவும் என்றும், அரக்கர்களை யொழித்து மற்றைய உயிர்களை எமன் அவ்வப்போது உண்டும் பசி தணியாமையாலும், தாடகை, சுபாகு, கரதூஷணர், முதலியோரையும், கிங்கரர், சம்புமாலி பஞ்ச சேனாபதிகள் முதலியோரையும் உண்டும் அப் பசி நீங்காமையாலும், அவ் வேழமைச்சர்களையும் அவர் தம் படைகளோடு உண்ட பின்னரே பசி தீர்ந்தது என்றும் விரித்துரைக்கலாம்; பசியுங் கெட என்று கூறியதனால், முன் தீராத பசி சிறிது தீர்ந்தது என்றும் உரைத்துக் கொள்ளலாம்) எதிர்த்து அடித்துப் போரெனிற் பருக்கும் தோளோடும், இருப்புத் தடிகளோடும், அவரவர் ஏறிவந்த கனத்த தேரோடும், மிக்க வஞ்சகத்தோடும், படைத் தலைவர்களோடும், மதிபோல் வட்டமாக வளைத்த விற்களோடும், மழைபோற் சொரியும் அம்புகளோடும், அமைச்சர் எழுவரும் இறக்கப் போர் செய்த தூதனாகிய

அனுமான் என்றும் பிரியாதிருக்க அருளிய பெருமானே ; கோள் சொல்ப வர்களும், வஞ்சிப்போரும், சூழ்ச்சி நிறைந்து சூதாடுவோரும், கொடுமை யிழைப்போரும், ஒருவர்க் கொருவர் பகைக்கத் தக்கன வற்றைச் செய்பவ ரும், தருக்குள்ளவர்களும், மறைந்துள்ள கள்வனை ஒளித்திருந்து பிடித்து அடிப்பவர்களும், துணிந்த தீமை புரிவோர்களும், கொலை செய்பவர்களும், மிகத் தாழ்ந்தவர்களும், மையல் நோயை மிக விரும்புபவர்களும், கவலை கொள்ளும் மனம் உடையவர்களும், ஒன்று மறியாத மூடர்களும், செய்ந் நன்றியை மறந்தவர்களும், கொடும்பழி மிக்கவர்களும், ஈதற்குக் கையெழா உலோபிகளும், ஆகியவர்களை, அழகில் மதவேளென்றும், போகத்தில் இந்திர னென்றும், உங்கள் கைகள் கற்பதருவும், சிந்தாமணியும், தண் முகி லும் போன்றவை யென்றும், என்றும் முற்றிய வளம்பெற்ற தமிழாற் பாடி வீணில் என் பொழுது கழிந்ததனைக் கண்டனே ; இனி, எவரும் போற்றுகின்ற நின் திருவடிகளை நான் நினைத்துப் பரவுதல் வேண்டும் ; என் மாயை தெளியுமாறு அருள் புரிவாயாக.

தான தத்தன தத்தன தானன
தான தத்தன தத்தன தானன
தான தத்தன தத்தன தானன தனதான

185. நேர முற்றுந திப்புன லாடவும்
வார முற்றிடு தர்ப்பணம் யாவையும்
நீதி யிற்செய நிட்டைதி யானமும் வலம்யாவும்

நீரெ டுத்தும லர்த்தொடை யேகொடு
கோயில் புக்குவ ழிப்படு சேவையும்
நேய பத்தியு முற்படு தானமும் நெறிமாறு

ஈர மிக்கக ருத்துட னேவ்ரத
மேபி டித்துந டப்பது போலவர்
ஏணி கட்டிய தெத்தனை கோடியும் அறியேன்யான்

ராச லக்கண லக்குமி நாயக
ஆதி தற்பர லக்கும ணுதர
ராம ரட்சியெ னப்புகழ் வேன்வினை யுணரேனே

தோர ணத்திடை தத்திநி ராசரர்
வாய டித்துமு டித்திரு காவிரு
தோளொ டித்தும டற்பரி தேர்கரி எழுவீசிச்

சோரி கக்ககு றைத்தலை நாடக
மாட லுற்றபி ணக்குவை பேய்நரி
தோலி றைச்சிக டித்திட வேகமொ டமராடி

யாரு னைப்பொர விட்டனர் நீயெதி
ரோவெ னப்பொரு தக்கண மேசிலை
ஆண்மை முற்றும டக்கிவி டாதுடல் அளறுக

ஆக வத்திடை யக்கரு மாரனை
மாநி லத்தில றைத்திடு வீரனை
ஆளு முத்தம வித்தக வானவர் பெருமாளே.

உரை :—ஏழமைச்சர்களும் இறந்ததை இராணவணன் கேட்டுத் தன் மகன் அட்சயனையும் படைகளையும் பொர வனுப்ப, தோரணத்தினின்றும் அவர்கள்மேல் குதித்து, அரக்கர் படைகளின் வாயிலடித்தும், தலையைத் திருகியும், இரு தோள்களிலும் அடித்தும், வலிமையுள்ள குதிரை, தேர், யானை ஆகியவற்றை எடுத்து விண்ணி லெறிந்தும், தலையற்ற உடல்கள் குருதிகக்கிக் கூத்தாடவும், பிணமெல்லாம் குவிந்த திடலின் மேல் பேயும் நரியும் தோலையும் இறைச்சியையும் கடித்துத் தின்னவும், விரைவாய் முடுகிப் போர்செய்தும், 'உன்னைப் போர்செய்ய அனுப்பியவர் எவர்? நீ, எனக்கு நிகராவாயோ?' என்று அட்சய குமாரனிடம் சொல்லி, அக்கணமே, அவன் வில்லாண்மை முழுதையும் அடக்கி, அவனை அப்பால் விடாமல் அவன் உடல் போக்களத்தில் குழம்பாகுமாறு காலால் தரையில் தேய்த்தும் பொருத வீரனாகிய அனுமானை ஆட்கொண்ட உத்தமனே, சதுரப் பாடுடையவனே, இமையவர் பெருமாளே; காலை நண்பகல் முதலிய காலங்களில் புண்ணிய நதிகளை யடைந்து நீராடவும், பெற்றோர்பால் அன்பு மிகும் எள்ளும் நீரும் இறைத்தல், தேவர்கட்கு நீரிறைத்தல் முதலிய வற்றை மறைநூல்களிற் கூறியவாறு செய்யவும், செபித்தல், நிட்டை கூடுதல், கருதுதல் முதலியவற்றையும், வலம் வருதல் ஆகிய எவற்றையும் செய்து, திருமஞ்சனம், எடுத்தல் மாலை புனைதல் முதலிய சேவை செய்யவும், அன்பு மேலீட்டாற் செய்யும் தானமும், உறுதி தவறாத கொள்கையும் கொண்டு வீட்டுலகிற்குச் செல்லுவோர் போற்கருதி நடக்கவும் வேண்டிய வினைகளை மேற்கொண்டவர்கள் வீட்டுலகத்திற்குக் கட்டிய ஏணிகள் எத்தனை? கோடிக்கு மேலும் உண்டு; அவற்றில் ஒன்றையும் நானறியேன்; நானறிந்தது, அரச இலக்கணம் உள்ளவனே, திருமகள் கேள்வனே, முதன்மையாகித் தனக்குத் தானே பெருமை யுள்ளவனே, இலக்குவன் நெஞ்சிற்கு ஆதாரமா யுள்ளவனே, இராமா, என்னைக் காப்பாயாக என்று கூறுவதே; பிறிதில்லை.

தான தானன தந்தன தந்தன
தான தானன தந்தன தந்தன
தான தானன தந்தன தந்தன தனதான

186. நாக ரீகமு மின்சொலும் விஞ்சிய
ரூப ரேகையு முந்துகு ணங்களும்
ஞான போதமு மிந்த்ரப தந்தனை நிகரான
ஞால வாழ்வுநி ரம்பபெ ரும்புகழ்
மான மேன்மைகு லம்பொறை பண்புமெய்
நாத கீதப்ர பந்தமி குந்தமிழ் வடநூலென்
ருகு மாகலை யுந்தவ முங்கிளர்
த்யாக போகமு நன்றியு மன்பும
ரோக காயமும் வென்றியு மின்றிய உடலோடே
ஆன பூமிசு மந்துமெ லிந்திட
நானு மானுட னென்றுதி ரிந்தது
ஆணை யேநகை யிந்தவ சங்கத மொழியாதோ
நாக பாசமெ னும்படை கொண்டொரு
மேக நாதனெ ழுந்தும லைந்திட
நானு நாழிகை சென்றபி னங்கது விடநூறி
நாத ராவணன் முன்புந டந்தபின்
ராம தூதனு முன்குல சண்டனும்
நான டாவிடு பங்கய மங்கையை இனிநீயுன்
ஏக போகவி லங்கையு மின்பமும்
மாய வாழ்வுமு ரங்கொள்வ ரங்களும்
யாவு நீறெழு கின்றனை பொன்றினை மதிகேடா
ராவ ணாவென நின்றுவி ளம்பிய
தூத ஞமனு மன்பர வும்பத
ராக ராகவ அண்டர்கு லந்தொழும் பெருமாளே.

உரை:—அட்சய குமரனைத் தரையில் தேய்த்ததை இராவணன் அறிந்து இந்திரசித்தை அனுப்ப, மேகநாதனாகிய அவன் நாகபாச மென்னும் படையைக் கையிற் கொண்டுவந்து பொருது அப் படையினால் கட்ட நான்கு நாழிகை போனபின், அப் பாசத்தின் கட்டு விடுமாறு பொடியாக்கி, அரக்கர் தலைவனான இராவணனிடம் நடந்து சென்று, "அடே;

இராமதூதனும் உன் குலத்துக்குக் காலனும் நானடா ; (யமனுக்குக் காறு பாருகிய மருத்புவும் நான் என்பதும் ஒருரை) மலர்மகளைச் சிறைவிடு ; இல்லையாயின், இனி, நல்ல போக மிக்க ஒப்பற்ற இவ் விலங்கையும் இன்ப முங் கெட்டுப் பொய்யாகிய செல்வங்களும், ஆற்றல்கொண்ட வரங்களும் மற்றையவும் அழியத் தூளாகி மேற் செல்லுகின்றாய் ; இறந்தாய், என்று கொள்ளடா, அறிவற்ற இராவணா" என்று நின்று சொல்லிய அனுமான் பூசனை புரியும் திருவடிகளை யுடைய இராமா, இராகவா, இமையோர் குலந் தொழும் பெருமாளே ; திறமையும், எவர்க்கும் இன்பம் பயக்கும் இன் சொல்லும், எல்லாவற்றையும் விஞ்சிய வடிவங்களுக்குள்ள நல்ல இரேகை யும், இராசத தாமதமென்னும் இரு குணங்களுக்கும் முற்பட்ட சத்துவ குணமும், ஞானத்தை அறிவுறுத்தலும், இந்திர பதவியை நிகர்த்த உலகச் செல்வங்களும், உலகெங்கும் நிறைந்த புகழ், பற்று, பெருமை, நற்குலம், பொறுமை, நல்லிலக்கணம், உண்மை ஆகியனவும், ஓசை நன் கமைந்த - பண்ணுள்ள - பல நூல்களுள் மிக்க தமிழென்றும் விரும்பும் கலைகளும், வடமொழிக் கலைகளும், தவமும், பிறர்க்கீயும் இன்பமும், நன்மையும், அன்பும், நோயற்ற வுடலும், வெற்றியும் ஆகியவற்றில் ஒன்றுமில்லாத உடலையுடையஎன்னை இந்நன்னிலம் பொறுத்து இளைக்குமாறு நானும் ஒரு மனிதனென்று திரிந்தது உன் கட்டளையே; இது நகைப்பிற்கிடமானது; இழிந்தது; இத்தன்மை யினியேனும் ஒழியாதோ? சொல்லுவாயாக.

தனன தந்தன தனன தந்த
தானா தானா தானா தானா — தனதான

187. கடைசி வந்திடு விழிகள் வஞ்ச
வேலோ வாளோ சேலோ கோலோ — எமதூதோ
கரிய கொந்தள மதிசு மந்திடு
காரோ பாகோ பாலோ தேனோ — மொழிதானென்
றிடைநு டங்கிமுன் வருமடந்தையர்
மேலே மாலே பூணா வாணாள் — கெடலாமோ
இனியி ரங்கியு னருண பங்கய
தாளா லாளாய் கேளாய் வாளா — விடுவேனோ
முடுகு மிந்திர பகைஞன் வந்தம
ராடா வாடா மேலா னேபோல் — எதிராடி
முதல்வன் முன்கொடு விடுத லுந்தனி
யேபோ யோகோ நீயோ டாரா — வணவீரன்

கெடநி னைந்தனை யறிவ ழிந்தனை
வாரா யோராய் மாதா வோநீள் சிறைசேர்வாள்
கிளைமு ரண்களை விடுவி டென்றிடு
மாதா தானேன் வாழ்வே வானோர் பெருமாளே.

உரை :—இந்திரசித்து விரைந்து மேலானவனைப் போல் சண்டை செய்து பிடித்துக்கொண்டு, அரசனாகிய இராவணன் முன்னே கொண்டு போய் விட்டவுடன், தனியே சென்று, "நீயோ பெருமைதங்கிய இராவணனாகிய வீரன்? நீயோ கெடவேண்டுமென்று நினைத்தாய்? அறிவு கெட்டாய்; இராமனை வணங்கிப் பிழைக்க என் பின்னே வருவாய்; தெளிந்து பார்ப்பாய்; உலகத் தாயோ சிறையில் நெடுநாள் சேர்ந்திருப்பாள்? உன் சுற்றத்தாரின் வலிமைகளை விட்டுவிடு;" என்று கழறிய அனுமானுடைய செல்வமே, இமையோர் பெருமாளே; கடைசிவந்த கண்கள் வஞ்சமிக்க வேற்படையோ? வாட்படையோ? கெண்டை மீனோ? அம்போ? எமனுடைய தூதோ? கரிய குழல், முகமாகிய சந்திரனைச் சுமந்துவரும் முகிலோ? சொல், வெல்லப் பாகோ, பாலோ? தேனோ? என நினைத்து, இடைதுவண்டு எதிரேவரும் பெண்களைக் கண்டு காமுற்றுத் திரிந்து என் வாழ்நாள் அழிதல் ஆகுமோ? இனி, நீ யிரங்கி நின் தாமரைத் தாள்களை என் தலையில் வைத்து என்னை அடிமையாக ஆள்வாய்; என் குறைகளைக் கேளாய்; நீ கேளாவிடின் உன்னை வானா விடமாட்டேன்.

தான தந்தன தான தந்தன
தானா தானா தானா தானா தனதான

188. நாவி னுன்புக ழேப டிந்திட
நேரே காரே மாகா யாவே நிகர்கோல
ஞான சிந்தையி லேய மர்ந்திட
ஆளாய் வாழ்வா ரானா தேசூழ் வரவேநின்
கோயில் சந்தத மேவி யன்புசெ
யாதே தீதே சேர்வார் சார்வார் அணைவோரும்
கூள னென்றிட நாளு மங்கையர்
பாலாய் மாலாய் வீணே நாள்போய் விடலாமோ
பூவின் மங்கையை யோடி முன்கொடு
போயே தீயோன் மேலே மாலே யுளகோபம்

போது மென்றுரை யாடி நின்றடி
தாழ்வா யானல் வாழ்வாய் மோடா — எனவீறும்
ராவ ணன்செவி தீகொ ளுந்திட
வேதான் மீள்வோன் மாளா வாழு — ளுறவாளும்
ராச புங்கவ ராம சந்திர
தேவே கோவே வானோ ரானோர் — பெருமாளே.

உரை :—"பூமகளாகிய சீதாபிராட்டியை அழைத்துக் கொண்டோடி, இராமபிரான் முன்னே விட்டு, திருமாலே, பாவியாகிய என்மேல் தாங்கள் கொண்ட சினத்தை இப்பொழுது நீக்கி, அருள் செய்கவென்று சொல்லி அவர் திருவடிகளில் வணங்கி நிற்பாயானல் நலமுடன் வாழ்வாயடா, மூடா ;" என்று பெருமைமிக்க இராவணனுடைய காதுகளில் நெருப்புப் போற் புகச்சொல்லித் திரும்பிய அனுமானை இறவாதிருக்கும்படி செய்து அடிமையாக்கி ஆண்ட அரசகுலத்திற் பிறந்த தூயோனே, முழுமதி போன்ற திருமுகமுடைய இராமபிரானே, தேவனே, தலைவனே, விண்ணவர் பெருமாளே ; நாவில் நின் புகழ் படிந்திருக்கவும், செவ்விய முகிலையும், நீலமான காயாமலரையும், ஒத்த திருவடிவத்தின் அழகு அறிவுள்ள மனத்திற் படிந்திருக்கவும், உன் அடிமையாக வாழ விரும்பி, நின் சிறந்த கோயிலை அடைந்து வலஞ்செய்து அன்புகொள்ளாமல் தீ நெறியிற் கூடிச் சேர்வோரும், உன்னை அடைந்திருப்போரும் ஆகிய எல்லாரும் இவன் ஒரு துரும்பன் என்று சொல்லுமாறு, என்றும் பெண்களிடம் மயங்கி என் வாழுள் முழுதையும் நான் வீணிற் கழித்து விடலாமோ ? சொல்லுக.

தான தானன தத்தன தானன
தான தானன தத்தன தானன
தான தானன தத்தன தானன — தனதான

189. காலு நீருமு னற்புவி வானமும்
ஆகி யேதசை சுக்கிலம் வார்குடர்
காணெ ணாதும றைத்திடு தோலினுள் — வருவாயில்
காது சேர்செவி கட்புலம் வாயொடு
நாசி நீடுநி கழ்த்திரு வாயிவை
காலு மூழல டிக்கடி நாறிட — இதுபேணிக்
கோல மானசெ யற்கையி னேடுழல்
பாவி யேனைம யக்கிவி டாதனு
கூல மானக்ரு பைக்கணி னுலடி — யவரோடே

கூடி வாழ்வுற வைத்தும னேயை
சோதி ஞானம ளித்துன தாகிய
கோவில் கோவிலெ னப்பெறு பேறினை அருள்வாயே

சோலை சேரமு றிக்கவு நீடிய
காவ லோரைமு டிக்கவு மாநகர்
சூறை யாடவு முற்படு தோரண மிசையேறிச்

சூழ்ப தாதியு ழக்கவும் வாளம
ரூடு சேயைய ரைக்கவு மேவல்செய்
தூத ரானவ ருக்கடை வோவென இறைசீறி

வாலி லேமுதல் வைத்திடு தீயினை
ஊரில் வீசிய ரக்கரு மாதரும்
மாலை தாழவு டைத்துகில் சோர்வுற உடல்வேவ

வாசி தேர்கரி பொட்டெழ வாய்விடும்
ஓத வேலைமு ழக்கொலி போலெழ
வானி லேறமு டுக்கிய மாருதி பெருமாளே.

உரை :—அனுமானோடு இராவணன் சொல்வது: "நீ, சோலை முழுதையும் முறிக்கவும், அச் சோலையை நீண்டநாள் காத்து வந்தவர்களைக் கொல்லவும், இலங்கையாகிய பெரிய நகரைச் சுழல் காற்றிலகப்பட்டது போல் உழலச் செய்யவும், அச் சோலையின் முன்னே யிருந்த தோரணத்திலிருந்து கொண்டு, உன்னை வளைந்த சேனைகளைத் துவைக்கவும், போரில் என் மகனை அரைக்கவும் ஒருவனுடைய தூதனுக்கு முறையோ ?" என்று சொல்லி இராவணன் சின மீதூர்ந்து, அனுமானின் வாலில் துணியைச் சுற்றி வைத்த நெருப்பை இலங்கை நகரில் எங்கும் வீசி, அரக்கர்களும் அவர் தம் மனைவியரும் அணிந்த மாலை அவிழ்ந்து தொங்கவும், உடுத்த ஆடைகள் சோர்ந்து விழவும், உடல் வேவவும், குதிரை, தேர், யானை ஆகியவை சாம்பலாய் மேற் கிளம்பவும், அரக்கர் மகளிர் வாய்விட்டலறிய ஓசை கடலொலி போலெழவும், எல்லோரும் விண்ணில் ஏறும் வண்ணம் நெருக்கித் துரத்திய அனுமானுடைய பெருமாளே ; ஐம்பெரும் பூதங்களாகிய காற்று, நீர், நெருப்பு, நிலம், ஆகாயம், என்பவற்றின் வடிவமாகி, தசை, சுக்கிலம், நீண்ட குடல்கள் ஆகியவை கண்ணுக்குத் தோன்றாதவாறு தோலுக்குள் மறைத்து, காதிற் சேர்ந்த செவித்துளை, கண், வாயொடு, மூக்கு, தூயன வல்லாதவற்றை நெடுநாள் வெளிப்படுக்கும் இரு வாயில்கள், ஆகியவை கக்குகின்ற இழி பொருள்களால் நாறுகின்றதாக வமைக்கப்பட்டு, பல நாற்றங்களை இயல்பிற் பெற்றுள்ள இவ் வுடலை

நற்பொருளெனத் துணிந்து, அணிசெய்து இயற்கை யிலதாகிய செயற்கை யோடு உழலும் பாவியாகிய என்னை, இவற்றில் மயக்கிவிடாமல் நன்மை செய்யும் நின் அருட்கண்ணால், உன் அடியாரோடு நான் கூடி வாழ்ந்திருக்கச் செய்து, உள்ளம் ஒருமைப் பாடடையும்படி செய்யும் ஒளியாகிய மெய்யறிவைத் தந்து, உன் திருக்கோயில் சீரங்கம், சீரங்கம் என்று பன்முறை சொல்லும் நன்மையான பேற்றினை அருள்வாயாக.

(பேற்றினை என ஒற்று விரிந்து வரற்பாலது சந்தம் நோக்கிப் பேறினை என நின்றது).

தனந்த தந்தன தனதன தனதன
தனந்த தந்தன தனதன தனதன
தனந்த தந்தன தனதன தனதன தனதான

190. அழிந்தெ ழுப்பசி கனலெழ முடுகுதல்
பெரும்பு னற்குறு தவனமொ டலம்வரல்
அரும்ப யத்தொடு வெகுளியு முவகையும் நரைநோயும்
அடங்கு றக்கமு மதிசய மிகுதியும்
இரந்து நிற்பது முதயமு மரணமும்
அழுங்கு துக்கமொ டுறுசுகம் வெயர்வது முதலாக
மொழிந்த குற்றமும் வருவகை விரவிய
உடம்பெ டுத்ததில் ஒருபய னிலையினி
முடங்கி விட்டபி னறிவினில் விளைவுகள் உளவாமோ
முகுந்த வுத்தம ரகுகுல செயதர
அரங்க சிற்பர சரணென வருமறை
முயங்கு பொற்றிரு வடிதொழு மதியினை அருள்வாயே
அழிந்த ரக்கர்க டிசைதொறு மிரிதர
நெடுங்க டற்படி முகமென யுகமுடி
மயங்க முற்பட வருகடை யனலென மடவார்தம்
மருங்கி னிற்றுகில் கலைவது நினைவற
அகங்கை பொத்திமுன் வெளியுற வெதிரெழ
மறிந்து பித்திகை கொடுமுடி சுவரடி யுடன்வீழ
எழுந்து சுற்றிய புகைகது வுறவளர்
கொழுந்து பற்றிய அடுகனல் முடுகுதல்
இறந்து முப்புர மெரியுறு திறமென அடைவேவெங்

தெரிந்து பொட்டெழ முகடுகள் சிதறிட
ஒழுங்க ரக்கென வொழுகின வழிதர [ளே.
இலங்கை சுட்டதொ ரனுமனை யடிமைகொள் பெருமா

உரை :—நெருப்பு மூண்டதனுல், அரக்கர்கள் பொறுக்க வியலாமல் நாற்புறங்களிலும் அழிந்த சிந்தையராய் ஓடவும், நெடுங் கடலில் மூழ்கியிருக்கும் முகமென்ன, ஊழி வருங்காலத்தை யறிவிக்க அதன் முன்னே வரும் வடவைக் கனல் இதுவோ வென்று ஐயுறுமாறு, அந் நெருப்பு மிகவும் சுட்டபோது, பெண்கள் தங்கள் அரையிலுள்ள புடைவை சோர்ந்ததையும் அறியாமல் தம் அகங்கைகளால் அல்குலைப் பொத்தி, முன்னர் வெளியான விடத்தில் அனற் பிழம்பு மூண்டு வருதலால் திரும்பிவரவும், சுவரின் கொடு முடி அடிச்சுவரோ டிடிந்து விழவும், நெருப்பினின்றும் மேற்கிளம்பிச் சுற்றிவரும் புகை எங்குஞ் சுற்றி வளைத்துக் கொள்ளவும், கொழுந்து விட்டெரியும் சுடுதீ விரைந்து பரவுதல், திரிபுரத்திலிருந்த அரக்கர்கள் இறந்து போனபின், பொன்னுலும், வெள்ளியாலும், இரும்பாலும் இயன்ற அம் முப்புரங்களும் எரிந்த திறம்போன்ற தென்று சொல்லுமாறு, முறையாக இலங்கையும் வெந்து எரிந்து சாம்பலாய் மேலெழவும், முகடுகளெல்லாம் வெடித்துச் சிதறவும், நீளமாக உருக்கிய அரக்குப்போல உருகி யோடியவை மீண்டும் அழியவும் இலங்கையைச் சுட்ட அனுமானை ஒப்பற்ற அடிமை கொண்டருளிய பெருமாளே ; மிக்கெழும் பசி நெருப்புப் போல் முடுக்கவும், நீர் வேட்கை யுண்டாக அதனுடு உள்ளம் சுழலவும், தீர்த்தற்கரிய அச்சமும், அதனுடன் சோர்வும், மகிழ்வும், நரையும், நோயும் தம் இயல்பாகிய செயல்கள் அடங்கவும், மிக வருந் தூக்கமும், வியப்பும், இரந்து நிற்றலும், பிறப்பும், இறப்பும், வருந்துந் துன்பமும், அதனுடு இன்பமும், வியர்வையும் ஆகிய இவை முதலாக நினைப்பு மறப்பு என்னும் இரண்டுடன் கூடிய குற்றங்கள் பதினெட்டுங் கலந்த உடலைப் பெற்றதனுல் ஒரு பயனுமில்லை; இனி, இத் தீய வுடல் முடங்கிப் பாய்க்கிடை கிடந்தபின் அதில் அறிவின் விளைவுண் டாகுமோ? உரம் பெற்றிருக்கும்போது பயனளிக்காமல், பாய்க்கிடையான பின் அறிவாலாகிய பயன் உண்டாதலில்லை என்க.

தானன தந்த தத்த
தானன தந்த தத்த
தானன தந்த தத்த தனதான

191. நேரிய நெஞ்சு புச்சம்
நாபியொ டெங்கு முற்றி
நேர்பெறு கந்த ரத்தின் உடனுடி

நீடன்மு டங்க லுற்ற
ரோமமெ ழுந்தி மைத்து
நீடுசி னந்து யிற்கு வசமாகி

ஆரவி யந்து கிட்டி
ஆவிவி டுந்தி னத்து
மாகமி ருந்து மிக்க தலைகீறி

ஆடியெ ழுந்து பத்து
வாய்வுடன் நின்றி யற்றல்
ஆனவு டம்பெ டுத்தல் அமையாதோ

வாரியி லங்கை யுற்ற
வீரரை நெஞ்சி விட்டு
வாயில றைந்து சுற்றி எதிரோட

வார்சிலை யம்பு மற்றை
ஆயுத மும்ப றித்து
வாதொடு பின்பி டித்து விழமோதித்

தேரைய றைந்து மற்ற
மாவையெ றிந்து கற்கி
சேரமு னிந்து வெற்றி அமராடும்

சேவக மிண்ட னைத்து
நீடெரி மண்ட விட்ட
தீரனை யன்பு வைத்த பெருமாளே.

உரை :—நெருப்புக் கடல் சூழ்ந்த இலங்கையில் உள்ள வீரர்கள் தம்முடைய நெஞ்சிலும் வாயிலும் அறைந்து சுற்றி ஓடியபோது, நீண்ட வில்லையும், அம்பையும், மற்றைய படைக்கலங்களையும் துரத்திப் பற்றியும் பின்னால் ஓடிப் பிடித்தும், தரையில் விழ உதைத்தும், தேர் பொடியாக அடித்தும், மதயானைகளை அடித்தெறிந்தும், குதிரைகளைச் சீறி யெரித்தும், வெற்றிபெற்றுப் பொருத வீரனும், தனக்குத் தானே ஒப்பாக நீண்டு வளர்ந்த நெருப்பை, மிக விரைவிற் சுடவிட்ட உள்ளத் துணிவுடையவனுமாகிய அனுமானை அன்புடன் தூதனாகக் கொண்ட பெருமாளே; செவ்வையாய் நெஞ்சில் நின்ற உயிர்ப்பென்னும் வாயு, உடற் காவலாக என்றும் அசைந்து, விருப்பத்தைக் கழித்துக் கொண்டிருப்பது; நின்ற அபான னென்னும் வாயு உண்டவற்றைப் பகுத்து மூலக் கனலுக்கு உணவாக்கி மலம், மூத்திரம், குருதி யென்னும் மூவகைப் படுத்திக் கொண்

டிருக்கிறது ; உடலெங்கும் நின்ற விமானன் என்னும் வாயு, வகைப்படுத் தப்பட்ட குருதியை உடலெங்கும் கலக்கச் செய்து, மல மூத்திரங்கள் கட்டுப்பாட்டாலும், மூக்கின் மணத்தாலும், காதின் ஓசையாலும், கண் பார்வையாலும், உடலின் ஊற்றுணர்வாலும், உண்டாகும் தட்ப வெப்பங் களைக் கலக்கச் செய்துகொண் டிருக்கிறது; திண்மையாகித் தலைக்கும் உட லுக்கும் செவ்வை பாகப் பெற்ற கழுத்து, சந்தெலும்புகள், ஆகிய விடங் களில் நின்ற சமானன் என்னும் வாயு, குருதியின் தட்ப வெப்பங்களை எல்லா விடங்களிலும் ஒரே தன்மையாக்கி, அவை ஒவ்வோ ரிடத்திலும் வேறுபட்டு நோயை உண்டாக்காதபடி செய்து, உடல் முழுதையும் ஒரே நிலையில் வைத்துக் கொண்டிருக்கிறது ; உடலில் விளங்கும், கால். கை, வாய் என்னும் மூன்றிடங்களிலும் நின்ற நாகனன் என்னும் வாயு, முடக் கல், நீட்டல், கொட்டாவி இவைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது ; முகத்தில் நின்ற கிரிகளான் என்னும் வாயு, மிக்க சினத்தை உண்டாக்கிக் கொண் டிருக்கிறது; உயிர் நீங்கும் அன்றும் உடலை விடாதிருக்கும் தனஞ் செயன் என்னும் வாயு, உடலைவிடப் பெருமைமிக்க தலையைக் கிழித்து ஓடிப்போகும் ; இங்ஙனம், பத்து வாயுக்களும் அசைந்தெழுந்து நின்று நடிக்கும் கூத்தையுடைய இவ் வுடலை யெடுத்தது இம்மட்டும் போதும் ; இன்னும் வேறெடுக்க வேண்டுமோ ?

தனன தந்த தனன தந்த
தனன தந்த தனன தந்த
தனன தந்த தனன தந்த தனதான

192. விரகொ ழிந்து மயல ழிந்து
மதம டங்கி யெனதொ டுங்கி
வெகுளி பொன்றி பெருமை யின்றி வளர்காமம்

மிகம ழுங்கி நிலையொ ழுங்கின்
மருவி நின்று தவமு யன்று
விளிவி றந்து துயின்ம றந்து தனிமேவி

உரையு மின்றி யுணர்வு குன்றி
உறவ யர்ந்து நிறையு மந்த
உருவ கன்ற வருவ மென்று தெளிவேயாய்

ஒளிய மர்ந்த வெளிவி ரும்பி
இருள்து ரந்து கரைக டந்த
உணர்வு தங்கி யுனைய டைந்து விடுவேனோ

நிருதர் தங்க ளுடல்வெ தும்பி
விழிபி துங்கி மிடறு டைந்து
நிலைகு லைந்து மனமு லைந்து முகம்வேருய்

நெறிம யங்கி முதுகு வெந்து
செவிது ணிந்து மனது கன்றி
நிறைய நொந்து குறைபி றந்து களைமூடி

அரைது மிந்து முடியி ழந்து
தசைக ழன்று மயிர்பொ சுங்கி
அடிமு றிந்து தலைதி றந்து விழவேநின்

றட லி லங்கை நகர்ந டுங்க
எரிவி ரிந்து கொளவ ழங்கு
அனும துங்க னறிய நின்ற பெருமாளே.

உரை :—அரக்கர்களுடல் நெருப்பால் வெதும்பிக் கண்கள் பிதுங்கிக் கழுத்துடைந்து, நிலைகெட்டு மனம்சோர்ந்து, முகம் வேறுபட்டு, வழி தவறி, முதுகு வெந்து, காதறுந்து, நெஞ்சம் புண்ணுகி, மிக வருந்தி, குறை உண்டாகி, சோர்வினுல் அறிவு மயங்கி, இடையொடிந்து, தலைமயி ராகிய முடி யிழந்து, தசைதோல்கள் கழன்று, மயிர் பொசுங்கி, அடிகள் முறிந்து, தலை பிளந்து இறந்து விழுமாறு எங்கும் கலந்து நின்று வலிமை மிக்க இலங்கை நகர் முழுதும் நெருப்புக்கு விருந்தாகும் வண்ணம் செய்த அனுமானென்னும் பெயருடைய பெரியோன், தன் அறிவினுல் இறைவ னென்று அறிந்த பெருமாளே ; வஞ்சகம் ஒழிந்து மயக்கங் கெட்டு, தருக் கடங்கியும், எனது என்னும் உரிமை ஒடுங்கியும், சினம் அழிந்து, பெருமை யில்லாமல் வளர்கின்ற காமத்தால் உள்ளம் மிக அழிந்தும், அழியாத நிலையையுடைய ஒழுக்கமாகிய மெய்யறிவிலே தங்கி விலகாமல் நின்றும், மகிழ்ச்சியோடு தவம் செய்தும், இறப்புக் கெட்டும், தூக்கத்தை மறந்தும், துணையின்றித் தனியே திரிந்தும், சொல்லும் பொருளும் அற்றும், சிற் றறிவு தேய்ந்தும், உறவை மறந்தும், எங்கும் முற்ற நிறைந்த அழகிய திருவுருவங் கடந்த அருபமே துணிந்த பொருளெனத் தெளிந்தும், நீ சோதியாக அமர்ந்தருளிய வெளியை விரும்பியும், அறியாமையாகிய இருளைத் தூரத்தி ஞானக் கதிரவனேடு கலந்தும், கரையற்றிருக்கும் மெய் யறிவாகிய தெளிவில் தங்கியும், உன்னை யடைந்து, திரும்பிப் பிறக் காமல் உன்னேடு ஒன்றி விடுவேனே ? சொல்லுக.

(இதனுள் இறைவனை யடைதற்குரிய சிறந்த வழிகள் கூறப்பட் டுள்ளன.)

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தனதன தந்த தனதான

193. சலமல நின்று குழுறுகு ரம்பை
விதனவ ரங்கு வெகுளிமு ழைஞ்சு
தருபிணி மண்டு சுமையுறு பண்டி அனபானம்
சளசள வென்று விழுமொரு வங்கு
கிருமிநெ ளிந்து குடியுறு கும்பி
தகைபொறை யன்பு செறிதுயி லங்கம் நெடுவாயு
குலவியெ ழுந்து நடமிடு யந்த்ரம்
இறுகந ரம்பு வரியவி ரிந்த
குடிலுடை கும்பம் விழுசுவ ரெங்கும் வெகுரோமக்
குழுவளர் கின்ற வடவிதொ டர்ந்த
இருவினை தொந்த மிடுகுளிர் சிங்கி
குழையு முடம்பு நிலையென வம்பின் உழல்வேனோ
முலையில ணைந்து விழியில ழுந்தி
வளைசெறி செங்கை தனிலடி யுண்டு
முகிலள கங்கள் குலையமு யங்கி இருதாளான்
முனியவ ணங்கி யுடலுட னொன்றி
மிடறுகு ரந்து குரலுமு கந்து
முகமலர் கொண்ட வுளமது கண்டு வெயர்வேறக்
கலைகளு ரிந்து புளகநி தம்ப
நலமுழு துண்டு சுழியில்வி ழுந்து
கவரிதழ் தங்கு மமுதையு றிஞ்சி மடவார்மேல்
கலவிய டர்ந்த கொழுநரின் மண்டி
அனலுமி லங்கை யடையவ ளைந்து
கதுவமு னிந்த வனுமன்வ ணங்கு பெருமாளே.

உரை :—நெருப்பு, பெண்களின் முலைகளிற் றழுவியும், கண்களில் அழுந்தியும், கடகஞ் செறிந்த சிவந்த கைகளால் அடிபட்டும், கருமேகம் போன்ற குழல் சரியப் புணர்ந்தும், சினத்துடன் இரு கால்களினாலும் உதைக்கத் தலைவணங்கியும், அவர் தம் உடலில் தன் உடல் அழுந்திப் பொருந்தக் கட்டியும், கழுத்தினின்றும் வெளிப்படுகின்ற கிளி, குயில்,

அன்றில்களின் குரல்போன்ற ஒலி கேட்டு மகிழ்ந்தும், முக மலர்ந்ததனால் மகிழ்ச்சி யுள்ள உளமறிந்தும், உடலெங்கும் வியர்வை உண்டாகப் புடைவையை யுரிந்து அல்குலின்ப மெல்லாவற்றையும் நுகர்ந்தும், அச் சுழிக்குள் விழுந்தும், முருக்க மலர்போற் சிவந்த உதட்டின் இனிய நீரை யுறிஞ்சியும், கூடி மகிழ்ந்த கணவனைப்போல், கடிது விரைந்து கலந்து இலங்கை யடங்கலும் வளைந்து சுடுமாறு சினந்த அனுமான் வணங்கும் பெருமாளே : என் உடல், மூத்திரமும் மலமும் நின்று முழங்கும் கூடு ; துன்பம் நின்று ஆடும் நாடக வரங்கு ; சினமாகிய சிங்கம் வாழும் மலைக் குகை; பழவினைக் கேற்ப நோய் மிகுந்தேறியுள்ள வண்டி; சோறும் நீரும் உள்ளே யிருந்து சளசளவென விழும் ஒப்பற்ற வளை ; புழுகு நெளிந்து குடியிருக்கும் நாற்றக் குழம்பின் கும்பி; நற்குணமும், பொறுமையும், அன்பும், நெருங்கித் தூங்கும் உறுப்பு ; நிறைந்து நீண்ட வாயு திரிந்து எழுந்து கூத்தாடும் பொறி ; அமைத்திறுக்கி நரம்பைக் கலந்து வரிந்த விரிவான குடில் ; உடைந்த குடம் ; விழும் சுவர் ; எங்கும் மிக்க மயிர்க் கூட்டம் வாழும் காடு ; பழைமையாகத் தொடர்ந்த நல்வினை தீவினை யிரண்டும் நடமிடும் குளிர்ந்த பாவை ; இவ்வாறுள்ளே தளர்ந்து குழையும் உடல் ; இதனை அழியா நிலைமைத் தென்று கருதி, பொய்யாற் பிறந்திறந்து உழன்று அலைவேனோ ? சொல்லுக.

தானன தந்தனன தான தந்த
தானன தந்தனன தான தந்த
தானன தந்தனன தான தந்த — தனதான

184. நாடிந ரம்புதசை மூளை யென்பு
சோரிவ ழும்புகுடர் கோழை கும்பி
நாறும லங்கள்செறி சேர்கு ரும்பி — சரிபீளை

நாளும றைந்துகுடி யாகி விஞ்சு
தோலின்ம றைந்துதெளி யாது நின்று
நாறுகு ரம்பைதனை யேசு மந்து — நிலையாமென்(று)

ஓடிம யங்கியிரை தேட வெம்பி
ஈனமி குந்ததொழி லேதொ டங்கி
ஊழ்வினை சென்றவழி யேந டந்து — திரிவேனை

ஓதியு ணர்ந்துனடி யேப ணிந்து
வாழ்வுறு மன்பர்தம ராகு மின்ப
யோகம டைந்துபெறு ஞான மென்று — தருவாயே

மாடமி டிந்துமதிள் சூழி லங்கை
கோயில டங்கிவிடு நீறெ ழுந்து
வாயில்கு லைந்துபுகை மூடி விஞ்சு பொறிவீதி
மாளிகை யெங்குமிடு காடு மண்டி
ஆரல்வி ழுந்துகரி சாலை வெந்து
மாவுறு பந்திகரி யாயி றந்து பலதேரும்
கூடவெ ரிந்துகொடி தூள்பி றந்து
மேலிடு கந்துள்வெளி யேப றந்து
கோபுர நின்றநிலை யேச ரிந்து மறுகூடே
கூளிநெ ருங்கிநரி நாய்தி ரண்டு
பூதக ணங்கள்குடி யேற நின்று
கோரணி கண்டவனு மான்வ ணங்கு பெருமாளே.

உரை :—நெருப்புப் பற்றி எரியும்போது, வீடுகள் இடிந்து மதில் வளைந்த இலங்கையிலுள்ள கோயில்கள் எல்லாம் எரிந்துவிட்ட சாம்பல் எழுந்து கிளம்பவும், வாசல் நிலைகுலைந்து விழுந்து கட்டுக் குலையவும், உள் எங்கும் புகை மூடிக்கொண்டு, அதனால் விஞ்சிய நெருப்புப் பொறி பறக்கும் தெருக்களிலுள்ள அரண்மனைகளெல்லாம், சுடுகாடாகப் பிணமும் சாம்பலும் எலும்புமாக நிறையவும், பொறி வீதியாய (செல்வமுள்ள தெருக்கள்) நெருப்புப் பொறி பறக்கும் தெருக்களில் மதில் விழுந்தும், யானைகள் கட்டும் சாலைகள் வெந்தும், குதிரைப் பந்திகள் கரிந்தும் அழியவும், தேர்களும் நின்ற விடத்திலே எரிந்தும், கொடிச் சீலைகள் புழுதி படிந்து மேல் எரிந்தும் பொன் உப்பரிகைகள் வெந்து கருகும் வேளையில் பரந்த கோபுரங்கள் நின்ற நிலையிற் சரிந்தும், தெருக்களெங்கும் பேய்கள் நெருங்கி நாய்நரிகளோடு கூடிய கூட்டம் இலங்கையில் குடியேறவும், நின்று வேடிக்கைக் கூத்தினைக் கொண்ட அனுமான் வணங்கும் பெருமாளே; நாடி, அசையும் நரம்பு, இறைச்சி, மூளை, எலும்பு, குருதி, வழும்பு, குடல், கோழை, கும்பி நாறும் மலங்கள், காதிற் சேர்ந்த குறும்பி, கண்ணில் தோன்றும் பீளை, முதலிய இழிந்த பொருள்களெல்லாம் என்றும் அமர்ந்திருந்து, மேலுள்ள தோலினுள் மறைந்து, உள்ளே நாற்றம் உள தென்று தெளியாமையால் மிக நன்மையுடைய தென்று நினைக்கும், நாறும் தோற்பையாகிய கூட்டைச் சுமந்து, இஃது அழியாதிருக்கும் நிலைமைய தென்று நம்பி, உணவு எங்குக் கிடைக்குமோ வென அலைந்து, நினைத்த விடமெங்கும் ஓடிப் பலபல நினைத்து, தாழ்வு மிகுதியான பல தொழில்களையும் தொடங்கி, பழவினை இழுத்துக்கொண்டு போகும் வழியே நடந்து திரியும் நான், நின் புகழ்ச் செயல்களைப் படித்து, நீயே

தெய்வமென்று மனத் தெளிவடைந்து, நின் திருவடிகளையே வணங்கி, அழியாச் செல்வம் பெற்றிருக்கும் நின் அடியார்க்கு உறவாகும் மகிழ்ச்சி யான கூட்டுறவை யடைந்து, அதற்கு மேற் பெறும் ஞானத்தை என்று பெறுவேனோ? அவற்றை நீ தருவது என்றோ? சொல்வாயாக.

தந்த தனதனன தான தான
தந்த தனதனன தான தான
தந்த தனதனன தான தான தனதான

195. பண்கொள் சுருதிகரு மேக ராக
பஞ்ச கெவுளைதவிர் தேவ ராடி
பஞ்சு ரவகைமிகு தேவ தாளி நடைபாடை

பஞ்ச மலகிரிசொல் பாடி னேவ
சந்தை வனிதையுட னேத ஞசி
பந்தி யுதயகிரி யேமு காரி சிரிராகம்

எண்கொள் சனகிகொலி சோம ராகம்
முந்து பயிரவியி னோடு கீதம்
என்று விளரியுடை தார மான இசையோடே

இன்சொ லடைதவ ருது பாடி
நம்ப விமலவரி ராம ராம
ரங்க வெனவுளரு காது வீணில் உழல்வேனோ

வண்கை பிரியமல ரோதி தாழ
நெஞ்சு புகையவழு மோதை வீற
மண்ட வுதடுபத ருழ னேக மடவாரும்

மைந்தர் குழுவுமுட னேகவீரர்
வெந்து கருகியரு காக வோட
மந்த்ரி களுநவிலை னோரும் நீடு புடைசூழக்

கண்கள் புகையவனல் மேல்க லாவ
வெம்பி யுடலமுயிர் வேடை யோடு
கன்ற வரையிலடை போன வாறும் அறியாதே

கந்துள் கதுவநிரு தேச னோடி
அண்ட ருலகுகுடி யேறு மாறு
தண்ட வனுமனினி தேப ராவு பெருமானே.

உரை :—நெருப்புச் சுடுதலினால், இலங்கைக் கோட்டை மதிள்கள் வெடித்து விழவும், மண்டோதரியின் பூமாலை முடித்த கொண்டை குலைந்து தொங்கவும், நெஞ்சு புகைய அவள் அழுங்குரலோசையால் மிக நெருங்கிய உதடு பதறி முன்னே போகவும், மற்றைய பெண்களும் பிள்ளைகளும் கூட்டமாக அவளுடன் போகவும், அரக்க வீரர்களின் உடல் வெந்து கருகி அவர்கள் பக்கம் ஓடவும், அமைச்சர்களும் நல்ல இளமையுடைய ஆடவர்களும் தன் பக்கத்தில் சுற்றிவரவும், சினத்தால் கண்கள் சிவக்கவும், அனற்கொழுந்து மேலே தாவி வீச உடல் வெதும்பி, உயிர் துன்பத்தாற் கொதிக்கவும், அரையில் உடுத்திய ஆடைகள் வெந்துபோன வழியையும் அறியாமல் கரி மூடிக்கொள்ளவும், அரக்கர் தலைவனான இராவணன் ஓடி, விண்ணுட்டிற் குடியேறும்படி செய்து கண்ட அனுமான் மகிழ்ச்சியோடு தொழும் பெருமாளே ; பண்ணைத் தன்பாற் கொண்ட வீணையின் நரம்பி லெழும் சுருதியாகிய இன்னேசையிற் பிறக்கும் மேகராகம் (பண்கொள் சுருதி—பண்ணின் வடிவுகொண்ட சாமவேதம் என்பதும் பொருந்தும்) என்றும், கவுளை யென்றும், தவிர் என்றும், வராளி யென்றும், அஞ்சு சுர வகை மிகுந்த தேவதாளி யென்றும், நட்ட பாடை யென்றும், பஞ்ச மென்றும், மலகிரி யென்றும், பாமசனே வென்றும், வசந்த மென்றும், வனிதை யென்றும், தன்யாசி யென்றும், முறையாக ஓதும் உதயகிரி யாகிய பூபாள மென்றும், முகாரி யென்றும், சரிகம பதநி யென்ற பண்ணின் எழுத்து ஏழுங் கொண்ட ஸ்ரீராக மென்றும், கொல்லி யென்றும், சோமார்ச்சிக மென்றும், முதன்மைபெற்ற பயிரவி யென்றும் இவற்றேடு பாடப்பட்ட இசை யென்று பெயர் கூறும் உழை, விளரி, தாரம் ஆகிய இசையின் அடைவு தவறாமல் பாடி, எல்லா வுயிர்களும் உறுதியாய் நம்பின தெய்வமே, குற்றமற்றவனே, அரியே, ராமராமா, திருவரங்கா என்று சொல்லி மனமுருகாமல், வீணிலுழன்று திரிவேனே ?

தனந்த தந்தன தனதன தத்தன
தனந்த தந்தன தனதன தத்தன
தனந்த தந்தன தனதன தத்தன தனதான

196. நலந்தெ ரிந்திடு குரலொடு கைக்கிளை
மனங்கு ழைத்திடு விளரியு ழைத்திறம்
நயம்பொ ருந்திய விளியொடு துத்தமு முதுதாரம்

நவின்ற பண்களொ ரெழுவகை யைக்கொடு
பயின்ற செந்தமி ழுடைவுபு லப்பட
நரம்பு தங்கிய சுருதிம யக்கமு மிருதாளம்

துலங்க வன்பொடு துதிகளு ரைத்துனை
நினைந்து சந்தத முருகுக ருத்தொடு
வணங்கி நின்றிடு சுகமது பெற்றுளம் மகிழாதே

துணிந்தி டும்பல வுரைகள்பெ ருக்கிமு
னினைந்து வஞ்சகர் தமதுகு டிப்பெயர்
சுமந்தி ரந்திடு மவலமொ ழிப்பது மொருநாளோ

இலங்கை வெந்தது கனல்பசி கெட்டது
கலங்கு நெஞ்சொடு நிருதர்ஒ ளித்தனர்
இருந்த செந்திரு வருளின னுக்ரக மதனாலே

இலங்கு சந்தன மிமசல மொத்தழல்
குளிர்ந்து வஞ்சர்முன் அடிமையி ழைத்தனென்
எழுந்து சென்றினி நமதுகு ழுக்களை அடைவேனென்(று)

அலங்கல் வன்புய மயிர்கள்பொ டிக்கவும்
உவந்த சிந்தையொ டுடல்புள கிக்கவும்
அனந்த வண்டர்க ளலரையி றைக்கவும் முனிவாறி

அலம்பி றந்திடு மனுமனை நித்தமும்
மகிழ்ந்து தொண்டுகொள் வரிசிலை வித்தக
அரங்க சங்கரர் பிரமர்து தித்தருள் பெருமாளே.

உரை :—அதற்கு மேல் அனுமான் நினைப்பது: "இலங்கை வெந்தது; அனற் கடவுள் பசியாறிற்று; அஞ்சும் நெஞ்சுடன் அரக்கர் ஒளித்தனர்; அசோகவனத்தி லிருக்கும் செந்திருவின் மிக்க அருளினால் ஒளி விளங்கும் சந்தனத்தைப் பனி நீரிற் கரைத்ததுபோல வாலிலிருந்த நெருப்புக் குளிர்ந்தது; வஞ்சக மிக்க அரக்கர்களுக்கு முன் அடியேன் நெருப்பில் வெந்து இறவாமற் பிழைத்தேன்; இனி, எழுந்துபோய் என் கூட்டங்களை அடைவேன்;" என்று கருதி, மகிழ்ச்சியினால், மாலை தங்கிய தோள்களில் உள்ள மயிர்கள் செறியவும், மகிழ்ச்சியுள்ள மனத்தோடு, உடல் பருக்கவும், அளவற்ற விண்ணவர் பூக்களை யிறைக்கவும், கோபம் தணிந்து அமைதிகொண்ட அனுமானை மகிழ்ந்து அடிமைகொண்ட, கட்டமைந்த வில்லின் திறமையுள்ளவனே, அரங்கத்தில் உள்ள பெருமாளே, சிவபிரானும் பிரமனும் தொழும் பெருமாளே; பண்ணின் நலனைத் தெரிந்த குரலென்னும் இசையோடு கைக்கிளையும், கேட்டவுடன் மனமுருகும் விளரியும், திறமுள்ள உழையும், குறிப்புப் பொருந்திய இளியோடு துத்தமும், முதிர்த்த தாரமும் ஆகிய எழு வகையான இசைகளைக் கொண்டு சரிகம

பதநி யென்னும் ஏழெழுத்துக்களும், சங்கு, குயில், மயில், யானை, குதிரை அன்னம், காடை யென்னும் ஏழின் குரலோசைபோற் பழகிய செம்மையு முடைய தமிழின் இலக்கண முறைமை தெயுரிமாறு, முறுக்காணியால் இறுக்கப்பட்ட வீணையின் நரம்பைத் தெறிக்க, அதனினின்றும் வரும் இசைக்கேற்பத் தாள வொத்து மயக்கமுற்று விளங்க அன்புடன் உன் புகழ்களைப் பாடி உன்னை நினைத்து நாள்தோறும் மறவாமல் போற்றும் நினைவினோடு வணங்கி எழுந்து நின்று, பெறும் மகிழ்ச்சியால் மனம் மகிழாமல், பொய்யை மெய்யென்று துணிந்த பல கருத்துக்களைப் பொறுக்கி ஒன்றாக்கி, முதல் நினைப்பை யிழந்து வஞ்சகர் குடிப்பெயரைப் பாடியும் எழுதியும், அவற்றைச் சுமந்தும் இரக்கும் என் எளிமையை ஒழித்து அருள்புரிவதும் ஒருநாளில் உண்டாகுமோ? இப்போதே அருள்செய்தல் வேண்டும்.

தனனா தந்தன தானன தனதன
தனனா தந்தன தானன தனதன
தனனா தந்தன தானன தனதன தனதான

197. தொடையார் செந்தமிழ் மூவகை கருதியும்
அழியா வஞ்சதி காரமு மறிவொடு
துறைசே ரும்படி யோதியு முனதடி யுணராதே
சுகமா மங்கையர் மோகன சரிதமும்
அதியா னென்பது மேலிரு நெறியது
தொலையா வஞ்சமு மேல்வரு வெகுளியும் முதல்யாவும்
அடையா விங்கவை போம்வழி மிசைசெலும்
வினையோர் தங்களின் ஊழ்வகை விரகுகள்
அறியா வென்செய லேயிது பெருநவம் இனிநீதான்
அருளே கொண்டெனை யாளவு நினைவது
உளதோ சந்தய மோகினி வருகென
அனுகூ லஞ்செய்து ஞானம துறுநிலை அருள்வாயே
கொடியே செந்திரு வேமிதி லையில்வரு
மயிலே யிந்திரை யேபிர மனையருள் [லே
குயிலே லங்கையெ லாமிகு பொடிசெய்த பொறையா
குளிர்வா சங்கமழ் ஆயிர மடல்விழி
மலர்மா பண்டப மேவிய அதிவித
குணஞா னங்களி னுயர் தவவடி வுடையாளே

மிடல்சே ருங்கனல் வாலிடை வருமுனம்
அதிசீ தம்பட வேயரு ளியகடல்
விழியே சிந்தனை யாவையு மொழியொழி அடியேன்முன்

வினைமா ளும்படி நாயக னெடுகடி
தினியோர் திங்களின் மீள்வது திடமென
விடையே கொண்டொரு மாருதி தொழவரு
பெருமாளே.

உரை :—அனுமான், உள்ளக் கிளர்ச்சியோடு பிராட்டியிடம் வந்து, வணங்கி நின்று, "பொன்னாற் செய்யப்பட்ட கொடி போன்ற திருவுருவ முடையவளே, திருமா மகளே, மிதிலையில் தோன்றிய மயில்போலும் சாயலை யுடையவளே, இந்திரையே, பிரமனை யீன்ற குயில் மொழியாளே, இலங்கையை எல்லாம் மிக்க பொடியாகச் செய்த பொறுமையுடையவளே, குளிர்ந்த ஆயிரம் இதழ்கள் மலர்ந்த செந்தாமரை மண்டபத்தில் எழுந்தருளி, பலவகையான குணஞானங்களில் எல்லாச் சமயத்தாரும் உயர்வாகப் போற்றுகின்ற தவக்கோலமுடையவளே ; வலிமைமிக்க நெருப்பு என் வாலின்கண் வருவதற்கு முன், மிக்க குளிர்ச்சியுண்டாகுமாறு அருள்செய்த இரு சேல்களைப் போன்ற திருக் கண்களையுடையவளே, கவலையை நெஞ்சி னின்றும் விடுக ; விடுக. பழவினை அழியுமாறு, நம்மிறைவனோடு அடியேன், ஒருதிங்களில் விரைந்து திரும்பிவருதல் உண்மை" என்று சொல்லி, விடை பெற்றுக் கொண்டு எழுந்து வந்து வணங்க வந்தருளிய பெருமாளே; எழுத்து, அசை, சீர், தளை, அடி, இவ்வைந்தும் தொடுக்கப்பட்டு நடைபெறும் தொடை முதலியவை நிறைந்த செவ்விய தமிழால், இயலிசை நாடக மென்னும் மூவகையும் நினைத்து, அழியாத எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்னும் ஐந்ததிகாரங்களோடு, அகப் பொருட்டுறைகள் சேருமாறு பாடியும் வணங்கியும், நின் திருவடிகளை யறியாமல், உலக வின்பமாகிய பெண்களின் கலவி வரலாறும், எனது என்னும் உரிமையும், நானென்னும் அகங்காரமும், மிகவும் மேலிடும் வழி நீங்காத வஞ்சனையும், அதனால் எழுகின்ற சினமும் ஆகியவை செல்லும் அவ்வவ் வழியிற் செல்லுகின்ற பாவிகளைப்போல், பழவினையின் காரணமாகிய வஞ்சகச் சூழ்ச்சிகளை அறியாத என் ஒழுக்கம், மிக்க புதுமை யுடைத்து; நீ அருள் கொண்டு என்னை யாள்வது உளதோ? இலதோ? இஃது ஐயமாகவுள்ளது ; அங்ஙனமின்றி என்னை வாவென்றழைத்துத் திருவாக்கருளி, நன்மை செய்து ஞானத்தின் உறுதியான நிலையை அளிப்பாயாக.

" ......... ......... ஆளவு மருவவு
மெளிதோ சந்தய மேனினி வருகென " எனவும் பாடம்.

தனன தத்தன தனதன தந்தன
தனன தத்தன தனதன தந்தன
தனன தத்தன தனதன தந்தன தனதான

198. முதிர்பொ ருப்பினி லுறையு நெடுந்தடி
வெருச லத்திடை செருகுசெ ழுங்கனல்
முளையெ யிற்றிடை யரவம ருந்துறு நறைசேர்பால்
முழுநி லத்திடை யெறிவதொர் கந்துகம்
நதியொ ழுக்கிடை கரையவி டும்புளி
முறுகு மட்டுளி விரவுசு கந்தமிவ் வகையேபோன்
மதியு ரைக்கினு மவமதி விஞ்சிடு
மெனது சித்தமு முருகநி ரந்தரம்
மதுநி றைத்திடு துளவொடு கங்கையும் அகலாநின்
மலர டித்துணை பரவிவ ணங்கவு
நினைவு பற்றவு மதவெறி ரண்டற
மருவி நிற்கவு முறுகதி என்றினி அருள்வாயே
அதிச யப்பட விரவிடை வந்தனை
பரித விக்குமெ னுயிரைவ ழங்கினை
அடல ரக்கரை யொருவன்ம லைந்தனை வினைமூதூர்
அனல்ப டுத்தினை முழுதுமு ணர்ந்தனை
இனியு னக்கெதி ரொருவரு மிங்கிலை
அழிவில் கற்பமுள் ளளவுமி ருந்துபின் அநுமானே
விதிப தத்தினை மருவுதி யென்றொரு
வரம ளித்துநன் மொழிபல வுஞ்சொலி
விழிது ளிக்கொள நினைவொடு நின்றுல குடையோனை
விரைவி னிற்கொடு வருகந டந்தென
நயகு ணத்தொடு முயவொடு பண்பொடும்
விடைகொ டுத்தொரு தனியிலி ருந்தவள் பெருமாளே.

உரை :—அநுமானுக்குப் பிராட்டி சொல்வது: "வியக்கத்தக்க முறையில் நீ இரவில் வந்தனை ; சிறையில் துன்புற்றிருந்த வென் உயிரை வழங்கினை ; ஆற்றல் மிக்க அரக்கரை யொருவனாக நின்று கொன்றனை ; மிகுந்து பாவம் குடியிருக்கும் இலங்கையை நெருப்பில் அகப்படச் செய்து எரித்தனை ; இலங்கையிலுள்ள எல்லாவற்றையும் நன்கறிந்தனை ; இனி

உன் எதிரில் நின்று பொரும் ஆற்றல் பெற்றவர் இவ் விலங்கையில் ஒருவருமிலர்; அழிவில்லாத இந்தப் பேரூழியுள்ளவரை, நீ இறவாமல் இருந்து பின் பிரம பட்டத்தை அடைக;" என்று ஒப்பற்ற வரத்தை அனுமானுக்கு நல்கிச் சிறந்த சொற்கள் பலவற்றையுஞ் சொல்லி, கண்களில் நீர் துளிக்கும் நினைவோடு நின்று, எல்லா வுலகங்களையும் அடிமையாகவுடைய நம் இறைவனை விரைவில் அழைத்து வருதற்காகச் செல்க வென்று நயமான குணத்தோடும் உறவோடும் இயற்கையோடும் (அனுமானுக்கு) விடை கொடுத்து, ஒருத்தியாகத் தனித்திருந் துருகிய பிராட்டியின் கணவனுகிய பெருமாளே; முதிர்ந்த திண்மையான மலையில் ஓங்கி அடிக்கப்பட்ட தடியும், மிகப் பெருகிய நீருள் சொருகிய நெருப்பும், கூரிய பல்லினிடத்துப் பாம்பு குடித்த மணம் சேர்ந்த பாலும், அழுந்தும் நிலத்தில் எறியப்பட்ட பந்தும், ஓடும் ஆற்றில் கரைத்த புளியும், முறுகக் காய்ச்சிய கள்ளினிடம் சேர்ந்த மணமும், தம் குணம் கெட்டுப் போதல் போல, நல்லறிவு புகட்டிஞல் தீயறிவு மிகும் கல்லான என் மனம் உருகுமாறு, எங்கும் வெற்றிடம் இன்றித் தேன் நிறைந்திருக்கும் திருத்துழாய் மாலையோடு கங்கையாகிய தெய்வ நதியும் பிரியாதிருக்கும் நின் திருவடித் தாமரைகள் இரண்டையும் பூசனை செய்து வணங்கவும், உள்ளத்தில் அழியாது நினைக்கவும், இவற்றைச் செய்யும் நான், நீ என்னும் இரு வகைப்பட்டு நிற்கும் தன்மை அற்று, ஒன்றுபட்டு அத் திருவடிகளோடு கூடி நிற்கவும் அமைந்துள்ள சாயுச்சிய பதவியை இனி என்று அருள்வாயோ?

('மட்டுள் விரவிய' எனற்பாலது 'மட்டுளி' என இகரச்சாரியை பெற்று நின்றது).

தனதன தனந்த தனதான தந்த
தனதன தனந்த தனதான தந்த
தனதன தனந்த தனதான தந்த தனதான

199. நறவினை யருந்த லயலோர்பு ரிந்த
தனமது கவர்ந்த மிகுபாபம் விஞ்சு
நவையற விளங்கு மறையோரை மங்க விடுதீமை

நணுகுகு ருநிந்தை தனியோகி நிந்தை
எனவினை யுமஞ்சு மகபாத கங்கள்
நனியிர விகண்ட பனிபோல ழிந்து விடநாடும்

உறுதவ முமன்பு மிகுதான பண்பும்
நினையிலி னியொன்று மறியேன்வி ளங்கும்
உலகினை யளந்த விருபாத கஞ்ச மறவாதே

ஒளிபெறு முகுந்த க்ருபையாள வெங்கள்
அரிதிரு வரங்க செயராம சந்த்ர
உயிரென வுறைந்த ரகுநாத வென்ப தொழியேனே

முறுகுக ரிகந்தில் படவேயி லங்கை
நகரடை யவெந்து விறகாகி யங்கி
முதல்வனு மடங்கி நிலைநாட விந்த்ரன் முதல்வானோர்

முறைமுறை சொரிந்த மலர்மாரி வந்து
வளர்புய மும‌ந்த நெடுமார்பு மம்பொன்
முடியது நிறைந்து வழியூடு சிந்த மிடலேகொண்

டெறிகடல் கடந்து விசையோடெ ழுந்து
வடதிசை திரும்பு கதிர்போல்வி ளங்கி
இமயகி ரிமைந்த னெதிரேவி ருந்து தரநேர்கண்

டிளவர சுகொண்ட திறலோனு மெண்கின்
அதிபதி யுமுந்தி யெழவான ரங்கள்
எதிர்கொள நடந்த வனுமான்வ ணங்கு பெருமாளே.

உரை :—முறுகிய கரி எங்கெங்கும் கோட்டை போற் குவியவும், இலங்கை நகர் முழுதும் வெந்து கரிக் கட்டையாகவும், அனற் கடவுளும் அடங்கித் தன் உலகை யடையவும், இந்திரன் முதலிய வானவர்கள் வரிசை வரிசையாகச் சொரிந்த பூ மழை வந்து பொருந்தி, வளர்ந்த தோளிலும், அழகும் அகலமும் கொண்ட மார்பிலும், பொற்பணி தரித்த முடியிலும் நிறைந்து வழி முழுதும் சிந்தவும், அலை வீசும் கடலைக் கடந்து, தெற்கில் விரைவாகத் தோன்றி வடக்கு நோக்கி வரும் கதிரவனைப் போன்று விளங்கி, மலையரையன் மகனான மைந்நாகம் எதிர் கொண்டு விருந்தாகக் காய் கனிகளைத் தர அவற்றை உண்டதாகக் கொண்டு முகமன் கூறிக் கடற் கரைக்கு வரும்போது, கிட்கிந்தையின் இளவரசான திறமைமிக்க அங்கதனும், கரடிகட் கரசான சாம்பவனும், முற்பட்டு எழுந்து நிற்கவும், குரங்குப் படைகள் இரண்டு வெள்ளமும் எதிர்கொண்டு வரவும் அவர்கட்கு எதிராக நடந்து வந்த அனுமான் வணங்கும் பெருமாளே; கள்ளுண்டலும், அயலவர் தேடிய செல்வத்தை வெளவுதலும் ஆகிய மிக்க குற்றமுடைய பாவங்களையும், குற்றமின்றி விளங்குகின்ற நான்மறை அந்தணாளரைப் பழித்தலும், குருவை நிந்தித்தலும், ஒப்பற்ற யோகியரை யிகழ்தலும் ஆகிய ஐம்பாவங்களையும் செய்த தீமைகள், பகலவனைக் கண்ட பனி போல் அழியுமாறு ஆராய்ந்து செய்யும் தவமும், அருள் மிகுந்து கொடுக்கும் தானமும், நினைத்துப் பார்க்கின், நான் அறியேன்; ஆனால், விளங்

கும் நிலவுலகை ஓரடியாலும், விண்ணுலகை மற்றோரடியாலும் அளந்தருளிய நின் இரண்டு திருவடித் தாமரைகளையும் மறவாமல், ஒளி வடிவமுள்ள முகுந்தா, அருளாளா, எங்கள் தெய்வமாகிய அரியே, திருவரங்கா, வெற்றி பொருந்திய இராமசந்திரா, எல்லா உயிர்க்கும் உயிராயிருக்கும் இரகுநாதா, என்று சொல்லிப் போற்றுவதைத் தவிரமாட்டேன்.

தனதன தத்த தந்த
தனதன தத்த தந்த
தனதன தத்த தந்த தனதான

200. தொழுதுப தத்தி றைஞ்சி
மதுமல ரைச்சொ ரிந்து
துதிகளு ரைத்தி ரங்கி விழிநீரைத்
துளிகொள நிற்கு மன்பர்
அவரவ ரைப்ப ணிந்து
தொடர்வினை யைக்க டந்து பிழையாதே
அழிபொரு ளிற்பு குந்து
மனமுமி ளைத்து நொந்துள்
அறிவொரு சற்று மின்றி வினையேன்முன்
அயர்வது செப்பின் முந்த
உனதரு ளுக்கு நின்ற
அடிமையி ழுப்ப தன்றி யுளதாமோ
எழுகவெ னத்தி ரும்பி
மருவுக விக்கு லங்கள்
இருபுடை சுற்ற வன்று கடலோதத்
திடமது விட்ட கன்று
பசியுமி ளைப்பு முந்த
ரவிமகன் வைப்பி தென்று கருதாமல்
வழியின்ம றித்து நின்ற
ததிமுக னைத்து ரந்து
மகபதி புத்ரன் மைந்த னுடனேநீள்
மதுவன முற்ற டைந்த
அடலனு மப்ர சண்டன்
வரவுகு றித்தி ருந்த பெருமாளே.

உரை :—அனுமான், மகேந்திர மலையில் குதித்துக் கண்டேன், எழுக என்று சொல்ல, வடக்கு முகமாகத் திருப்பிய வானரக் கூட்டங்கள் இரு புறமும் சூழ, கடற் கரையை விட்டு வடக்கே போகும் போது, எல்லோருக்கும் பசியும் இளைப்பும் மேலிட, கதிரோன் மைந்தனன சுக்கிரீவனுடைய சோலை யென்றும் கருதாமல், அச்சோலையினுள் நுழைகையில் அதன் காவலனான ததிமுகன் தடுக்க அவனை யடித்துத் துரத்தி, இந்திரன் மகனாகிய வாலிக்கு மைந்தனன அங்கதனோடும் நீண்ட மதுவனத்தில் காய், கனி, இலை, தேன் முதலியவற்றை யருந்தி யிருந்த ஆற்றமிக்க அனுமானாகிய பெரு வீரனுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெருமாளே; நின் திருவடிகளை வணங்கி, தேனொழுகும் மலர்களைச் சொரிந்து அருச்சனை செய்து நின் புகழைப் பாடி மனமுருகிக் கண்ணீர் துளிக்க நின்ற நின் அடியார்களை வணங்கி, தொடர்ந்து வரும் பழவினையை யறுத்துப் பிழைக்காமல், அழியும் செல்வத்திற் புகுந்து மனம் இளைக்காமல் திரும்பியும், இளைத்துப் புண்ணாகி நொந்தும், அறிவு சிறிதுமில்லாமல், பாவியாகிய நான் நின் திருமுன் செய்ததைச் சொல்லுமிடத்து, உன் அருளுக் கிலக்காகிய அடிமையை இழப்பதல்லாது, என் வருத்தத்தால் உனக்கு ஒரு நன்மையுமில்லை ; அடிமையை இழக்கும் இழப்புத் தவிர வேறொன்றுமில்லை.

தந்தா தந்தன தத்தன
தந்தா தந்தன தத்தன
தந்தா தந்தன தத்தன தனதான

201\. எந்தா யென்றுகை யேற்பினும்
நொந்தே னென்றுபல் காட்டினும்
இந்தா வென்றுகொ டாக்கொடி யவர்மேலே

எண்சே ருங்கவி பாட்டினை
வம்பாய் நின்றுசொல் வேற்கினி
எங்கே னுஞ்சில போக்கிலை இனிநீதான்

நந்தா வென்குறை தீர்க்கவும்
நின்பா தந்தலை சேர்க்கவும்
நன்று குந்துறை காட்டவும் அடியார்பால்

நண்பா கும்படி யாக்கவும்
அன்பே நெஞ்சிடை நோக்கவும்
நன்கூ ருங்க்ருபை கூர்க்கும தொருநாளே

பைந்தார் வென்றியி ராக்கதர்
குன்ரு குந்தலை பேய்த்திரள்
பந்தா டும்படி வீட்டிய முழுவீரன்

பண்பா ளன்பகை காட்டிய
லங்கே சன்படை வீட்டொடு
பண்டா ரங்கனல் மூட்டிய ஒருதூதன்

கந்தா லங்க்ருத மாத்துள
வஞ்சூ டும்புரு டோத்தம
கம்பீ ரங்கொள்ப ராக்ரம ரகுவீரா

கண்டே னெம்பெரு மாட்டியை
என்றே நின்றுகை கூப்புதல்
கண்டே தென்றிசை நோக்கிய பெருமாளே.

உரை :—மது வனத்தை விட்டு வருகையில், உடன் வந்தவரை விட்டு முன்னே வந்த அனுமானும், பசிய மாலையைத் தரித்த வெற்றியுள்ள அரக்கர் தம் மலைபோன்ற தலைகளைப் பேய்க் கூட்டங்கள் பந்துபோல் எறிந்து ஆடச் செய்து கொன்ற வீரனும், உயர்ந்த இயல்புகளை யுடையவனும், மூன்றுலகத்தாரோடும் பகை கொண்ட இலங்கை யரசன் படைகள் தங்கிய இடத்தையும் வீடுகளையும், பலபொருள்கள் நிறைந்த சாலைகளையும், மற்றெல்லாப் பொருள்களையும் நெருப்பாற் சுட்ட ஒப்பற்ற தூதனும் ஆகிய அவன், 'மணமும் அழகும் பெருமையுமுள்ள திருத்துழாய் மாலையை அணிந்த ஆண்களிற் சிறந்தவரே, பெருமிதங் கொண்ட வலிமை மிக்கவரே, இரகு வீரரே,' என்று பல படியாக விளித்து, கண்டேன் எங்கள் தெய்வமாகிய உலகத் தாயான பிராட்டியாரை யென்று சொல்லி, கருதிய செயல் முற்றுப் பெற்ற பெரு மகிழ்வால் உன்னை வணங்கவும் மறந்து, தென் திசையை நோக்கிக் கைகூப்புதலை நோக்கி அத்திசையைப் பார்த்தருளிய பெருமாளே; என் தந்தையே என்று கையை விரித்து ஏந்தினும், வறுமையால் மிக நொந்தேனென்று பல்லைக் காட்டினும், இந்தா வென்று கொடாத கொடிய பாவிகளின் மேல் இலக்கண முறைப்படி கருத்துக்கள் அமைந்த பாட்டுக்களைப் பாடிப் பொய்யாகப் புகழ்ந்து பேசும் எனக்கு எங்கேனும் சிறிதளவேனும் போக்கிடமில்லை ; உன் அருளைப் பெறவும் எனக்கு வழி தெரியாது ; ஆதலின், நீ தான் என் கெடாத குறையைக் கெடுக்கவும், நின் திருவடிகளை என் தலைமேல் சேர்க்கவும், நன்மையுள்ள ஞானக் கடலிலுள்ள துறையைக் காட்டவும், நின் அடியார்பால் நட்புண்டாக்கவும், உன் அன்பு நெஞ்சில் பெருகி நிறைந்து கண்களால் வழியச் செய்யவும், உரிய

இவற்றிற்கு வேண்டிய நன்மை மிகுதியாகுமாறு நீ நின் அருளைப் புரிதற்கு ஒரு நாள் உண்டென்று நீட்டிக்க வேண்டுமோ? இன்றே அருள்வாயாக.

தனதா தத்தா தானன தந்தன
தனதா தத்தா தானன தந்தன
தனதா தத்தா தானன தந்தன தனதான

202. பனிதா னைத்தே யோனிமு கங்கொடு
தினையா கிப்பே ராதுதி ரண்டொரு
பயறா கிச்சூ லாகியொர் கந்துக மெனவாகிப்

பனையா கிக்கா லாகிம ருங்கொடு
வயிறா கித்தோள் மார்பொடு சந்துகள்
பலவா கிப்போய் வாயொடு கண்செவி நுதலாகிச்

செனியா கித்தோ லோடுதி ரங்குடல்
உடல்பூ ரித்தே யூடுபெ யர்ந்திடு
சினைதா முற்றா மாதமொ ரொன்பது கடவாமேல்

திருகா வுற்றே பூமிக்கு தஞ்செய்து
மகவா கித்தாய் பான்முலை யுண்டமு
சிறையா கிப்பா ழாகிய வென்துயர் களையாயோ

வினையார் மட்டூர் மீதொரு மைம்பொழில்
இடையே பொற்பூ மாதுறை கின்றதும்
விடமே யொப்பார் காவன்ம டந்தையர் குணம்யாவும்

விழிநீர் விட்டே வாடிமெ லிந்ததும்
இளையான் முற்றோர் சாலைய மர்ந்ததும்
விரலா ழிக்கே தூதுதெ ளிந்ததும் உரைநேரும்

அனையாள் கற்பால் வீறுபு னைந்ததும்
உயிர்தா னைத்தே வீடணன் மென்கொடி
அனுகூ லத்தா லாருயிர் நின்றதும் ஒழியாதே

அனுமா னைக்கே ளாநனி யங்கவள்
மனமா சற்றே தேறவ ழங்கிய
அடையா ளச்சூ டாமணி கண்டருள் பெருமாளே.

உரை :—பாவிகளாகிய அரக்கர் மட்டும் இருக்கிற ஊரில், இராவணன் அந்தப்புரத்தில் அசோகவனத்தில் ஒப்பற்ற அழகுள்ள திருமக

ளாகிய சீதாபிராட்டியார் தங்கி யிருப்பதையும், நஞ்சு போன்ற கொடிய அரக்கியர் காவலிருப்பதையும், அவர்தம் குணங்கள் முதலிய எல்லாவற்றை யும் கண்டு திருக் கண்களில் நீர் ஒழுக நெஞ்சம் வாடித் திருமேனி யிளைத் திருப்பதையும், இளைய பெருமாள் முற்றுப்பெற வமைத்த பன்ன சாலை யில் அமர்ந்திருந்ததையும், தங்கள் திருவாழியினால் தன்னை அரக்கர் மாயத்தால் வந்தவனல்ல னென்றும், பெருமானின் தூதனென்றும் அறிந் ததையும், ஒரு திங்களில் இலங்கைக்கு வராவிடில் உயிர் விடுவேனெனச் சொல்லியதையும், பின்னும் கூறிய பல செவ்வையான சொற்களையும், அவர் கற்பின் பெருமையால் இராவணன் தொடாமல் புகழ் பெற்றிருந்த தையும், அவர் தம் உயிர் போன்றவளும் விபீஷணன் பெற்ற மெல்லிய கொடி போன்றவளும் ஆகிய திரிசடை யென்னும் பெண்ணால் உண்டாகிய உதவியால் அவர் உயிரை விடாமல் நின்றதையும், ஒருமுறை இருமுறையே யன்றிப் பலமுறை கேட்டு, பிராட்டியாரின் திருவுள்ளம் அரக்கர் மாயை யாயிற் றென்று நினைத்த எண்ணம் அற்றுத் தெளிய அவன் வழங்கிய அடையாளமாகிய சூடாமணியைக் கண்டருளிய பெருமாளே; (கருத்தரிக் கும் தன்மை;) ஆண் மகனின் சுக்கிலம் பனித் துளிபோல, ஒப்பற்ற யோனி முகங் கொண்டு வயிற்றிற் சேர்ந்து, தினையரிசி யளவாகி, அசை யாமல் திரண்டு ஒரு பயறளவாகிக் கரு உண்மையாகிப் பனையின் கிழங்கு போல் நீண்டு, பின் கால் உண்டாகி, அரையுடனே வயிறுண்டாகி, தோள் மார்புகளோடு சந்துகள் என்னும் பலவகையும் உண்டாகி, வாயுடன் கண், காது, நெற்றிகளும் அமைந்து ஒரு வடிவமாகித் தோலுடன் குருதி குடல் களும் நிறைந்து வயிற்றிற் புரண்டு முதிர்ந்து ஒன்பது திங்களும் கடந்த பத்தாவது திங்களில் மேல் நின்ற தலை கீழாகத் திருகி உலகில் வந்து சேர்ந்து குழந்தையாகித் தாயின் பாலருந்தி அழுகின்ற சிறைப்பட்டதாகிப் பாழாகி வரும் என் துன்பத்தை வேரறப் பிடுங்கி அருளாயோ? சொல்லுக.

தனத்தன தான தந்த தத்த
தனத்தன தான தந்த தத்த
தனத்தன தான தந்த தத்த தனதான

203. அளித்திடு கோல மொன்று மற்று
முதற்றரு கோல மொன்று முற்றும்
அழித்திடு கோல மொன்றி தற்குள் ஒருகோலம்

அருத்திசெய் தானு மன்பு வைத்து
நறைப்புகை தாமம் நின்றி யற்றி
அருச்சனை யாலி றைஞ்சி நற்கை தொழுதானும்

உளத்தினி லேயு வந்தி ருத்தி
நினைத்தழு தானு மிங்கி தத்தை
உடற்கொடு நாடொ றுந்து தித்தும் மறுகேள்வி
ஒழித்தல்செய் தானு மெங்கும் உற்று
வழிப்படு மேபு ரந்த ளிக்கை
உனக்கல வோக டன்பி றர்க்கு முடியாதே
வளப்படு தூத னின்று ரைத்த
உரைப்படி தானெ ழுந்து வெற்றி
வரைத்திரள் தோள்கொ டங்கி ருப்ப மயனுர்தம்
மடக்கொடி தோள்வ லந்து டிக்க
அரக்கன தோளு டன்சி றைக்குள்
மலர்க்கொடி தோளி டந்து டிக்க நெடிதேகிக்
களிப்புட னேயு வந்த ழைக்க
வருத்திமை யோர்வ ணங்க வுச்சி
கனத்தொரு சேட னும்ப ரமிக்க வருசேனைக்
கவிக்கடல் சூழ வின்ப மிக்க
வருட்கடல் போல வங்க மெற்று
கடற்கரை மீது வந்து தித்த பெருமாளே.

உரை :—உலகமெல்லாம் துதிக்கும் வளம்பெற்ற தூதனாகிய அனுமான் நின்று சொல்லிய சொல்லின்படி, அப்போதே யெழுந்து, வெற்றி பெற்ற மலையைத் திரட்டியது போன்ற அனுமான் தோளில் நீயும், அங்க தன் தோளில் இளைய பெருமாளும் ஏறி அங்கே யிருக்க, இங்கே இலங்கையின் மயன் பெற்ற மகளாகிய மடப்பமுடைய பூங்கொடி போன்ற மண்டோதரியின் வலத்தோள் துடிக்கவும், அரக்கர் தலைவனான இராவணனுக்கும், சிறையிருந்த பூங்கொடியாகிய பிராட்டிக்கும் இடத்தோள் துடிக்கவும், நெடிது தூரம் சென்று, மகிழ்ச்சியோடு அறம் தழைத்து வளரவும், தேவர்கள் வந்து வணங்கவும், ஆதிசேடன் தலையின் உச்சி மிகவும் கனமாகி மயங்கவும், வருகின்ற வானரப் படைக் கடல் சுற்றி வரவும், இன்பத்தை மிகவும் விளைக்கும் அருளாகிய கடல் வருதல் போல, கப்பல்களை எடுத்தெறியும் அலைகளையுடைய கடற்கரையின்மேல் வந்து தங்கினாய் பெருமாளே ; உலகைக் காக்கும் திருமால் வடிவம் ஒன்று ; உலகை முதலிற் படைக்கும் நான்முகன் வடிவம் ஒன்று ; அவற்றை முடிவில் அழிக்கும் உருத்திரன் வடிவம் ஒன்று ; இவற்றுள் எவர் எந்த வடிவத்தை விரும்பினாலும், அதனைத் தங்கள் முன் வைத்து அன்பினால், அகில் முதலிய மணப்

புகையும் விளக்கும் வைத்து அருச்சனை செய்து வணங்கி நல்ல கைகளால் தொழுதாலும், அல்லது நெஞ்சில் அவ்வடிவை மகிழ்வோடிருக்கச் செய்து பலகால் அதனையே நினைத்து அழுதாலும், அவ்வக் கடவுளுக்கேற்ற இன்பக் குறிகளை உடலில் தரித்து நாடோறும் புகழ்ந்து மற்றைய கேள்விகளைக் காதில் கேட்காமல் நீக்கிவிட்டாலும், எல்லா விடங்களிலும் பொருந்த வெளிப்பட்டு அவர்களை அன்பு தோன்றுமாறு காத்தளித்தல் உனக்கே கடமையாவதன்றி மற்றைய தேவர்கட்கு இயலுமோ? இயலாது.

சுந்தர காண்டம் முற்றும்.

# தனியன்கள்.

---

### வெண்பா.

காலன் குறுகான் கடியவினை போயொழியும்
மாலின் திருவருளும் வாய்க்குமறை—நூலுணரும்
நம்பால பாரதியார் நன்களித்த ராமசயம்
இன்டார ஓதுபவர்க் கிங்கு.

வேண்டா மரையாளும் வேணவா வோடருள்வள்
தண்டா மரைத்திருவும் தானருள்வள்—கொண்டாடி
ஆரா தனமேற்றி அன்பளைந்து ராமசயம்
ஆரா தனம்புரிவார்க் காங்கு.

இராமசய மென்றொருகால் எண்ணுவார் மாண்பார்
இராமசய மென்றே இசைப்பார்—இராமசயம்
என்னுமொலி கேட்டார் இறைவைகுந் தம்பெறுவர்
என்னுந்தொல் வேதத் தினம்.

—:o:—

ஸ்ரீ:

# பாட்டின் முதற்குறிப்பு அகர வரிசை.


| | |
|---|---|
| அகத்தினு மிருப்பை | 69 |
| அகப்பொருள் மார்க்கம் | 12 |
| அங்கா தரவொடு | 85 |
| அடிக்கடிதான் | 116 |
| அடிநடு முடிவறு | 118 |
| அடிபடி மேவியங்கும் | 167 |
| அடிமை யுரிமை | 275 |
| அடியவரோ | 46 |
| அணையினிலிருத்தி | 150 |
| அந்தியம் பொழுதத்து | 132 |
| அமரர்களாவரோ | 176 |
| அரவு விடங்கள் | 96 |
| அலையாது நின்ற | 232 |
| அழிந்தெழப் பசி | 300 |
| அளித்திடு கோலம் | 320 |
| அறுகரவு தும்பை | 161 |
| ஆக்கமிலை | 145 |
| ஆசனமென வடங்கி | 47 |
| ஆயிழை மகளிர் | 168 |
| ஆரணப் பொருளே | 147 |
| ஆரூனது | 134 |
| ஆனையதின் | 261 |
| ஆனையது மூலமென | 68 |
| இருகும்பமாகிய | 283 |
| இருகையோ தொழாது | 86 |
| இருவினையை | 88 |
| இனித் துவக்கிலை | 195 |
| உடுக்கத் துகில் வேணும் | 227 |
| உடுத்த துகில் விடுக்க | 218 |
| உத்தம சித்தமும் | 151 |
| உந்தி மீதொரு பிரமனை | 105 |
| உம்பர் தொழவரு | 252 |
| உரையறியாதே | 43 |
| உரையுஞ் சென்றது | 196 |
| உலகத்தனை முற்றும் | 129 |
| உலகமொரு மூன்றும் | 7 |
| உறைப்பிலையே | 156 |
| எந்தா யென்றுகை | 317 |
| எறிபடை யெடுத்து | 89 |
| என்றுமுள செங்கதிர் | 280 |
| ஒருத்தரொடும் | 193 |
| ஒழுங்கொரு கிஞ்சிலும் | 258 |
| ஓடு நதி | 33 |
| ஓடு முருகும் | 52 |
| ஓலை கிறுக்கியும் | 206 |
| கடகரி பகர்ந்த | 224 |
| கடலெனக் கிளர்ந்து | 208 |
| கடை சிவந்திடு | 296 |
| கதிர்த்த குடைக்கீழ் | 36 |
| கமலமதுபற்றி | 131 |
| கமலமுற்றவள் | 15 |
| கயலைக் கறுவு | 63 |
| கரகமலமும் | 174 |
| கருமுகிலெனவோ | 93 |
| கருவடைந்து | 20 |
| கவலையற்றவர் | 144 |
| கவலையு மிருண்ட | 247 |
| கழிந்த நாள் | 159 |
| கனக சித்ரகூடம் | 82 |
| கனமே கொண்ட | 92 |
| காசளவே யிருந்த | 164 |
| காயமோ நிலையாது | 214 |
| காலு நீரும் | 298 |
| காலே சுற்றி | 158 |
| கும்பமீதில் | 124 |
| கொங்குசேர் | 142 |
| கொடுப்பரோ வஞ்சமே | 83 |
| கொண்டையானது | 288 |
| கொலையார் விழிகள் | 212 |
| கொழுந்தமை ரிணைத்துடன் | 9 |

| | |
|---|---|
| கோடு பொருதுங்க | 101 |
| கோதையருக்கு | 260 |
| கோயிலெனவுரை | 41 |
| கோழையானவர் | 5 |
| கோளர் வஞ்சகர் | 291 |
| சதுராக வாழவும் | 277 |
| சந்த்ரமுகத்தியர் | 250 |
| சமரவேல் பொரு | 219 |
| சருக்கரையுணுது | 112 |
| சலமல நின்று | 305 |
| சித்திரமென வொரு சிலம்பி | 115 |
| சிந்தடி யந்தடி | 230 |
| சிற்றிடை மடநலார்கள் | 192 |
| சுருதிவிடாதே | 99 |
| செஞ்சுருபமேது | 162 |
| சேர்வனத்தில் | 285 |
| சோகமிகுந்து வருவார் | 272 |
| தந்திமேற் கொடு | 184 |
| தனியே வந்தனே | 241 |
| தாதையெனு முந்தி | 30 |
| தாரானது கட்டி | 283 |
| திரண்டதோர் சூலே | 246 |
| திருமார்பிருக்க | 202 |
| திரைக்கட லடங்க | 209 |
| துங்கமொடு வந்து | 123 |
| துளக்குறு செகத்தடங்கலும் | 199 |
| தூணத்திலோ முன் | 104 |
| தூதுகள் நடந்தது | 171 |
| தெனதனுத்தென | 179 |
| தேனேர் குறிப்பு | 244 |
| தொடை நெகிழ்ந்தது | 243 |
| தொடையார் செந்தமிழ் | 311 |
| தொந்தி சரிய | 35 |
| தொழுது பதத்திறைஞ்சி | 316 |
| நகுமுத்து மாலே | 79 |
| நஞ்சுமிழும் | 140 |
| நடுத்தளராது | 165 |
| நடையுற்றது | 253 |
| நம்பால்வா | 182 |
| நயனந் தெரியாது | 120 |
| நலந் தெரிந்திடு | 309 |
| நளிர்கடல் பூதம் | 22 |
| நறவினை யருந்தல் | 314 |
| நாசரிகமு மின்சொலும் | 295 |
| நாடி நரம்புதசை | 306 |
| நாவிலுன் புகழே | 297 |
| நிபுணிதவள | 263 |
| நிறைபொருள் | 223 |
| நினைத்ததே | 282 |
| நினைவிலே யெவரொடு | 72 |
| நீடிய கலேகளோ | 255 |
| நீதானே மாமயல் | 268 |
| நீராடுவார் திரு | 238 |
| நெஞ்சு தந்தனன் | 264 |
| நேரமுற்று நதி | 293 |
| நேரிய நெஞ்சு | 301 |
| பகைஞரென | 170 |
| பசையற்ற வுடல் | 53 |
| படாப்ரவாள | 23 |
| படிகட்டிய வேதன் | 59 |
| பணிமேலே | 1 |
| பண்கொள் சுருதி | 308 |
| பயத்தினு லின்சொல் | 221 |
| பரணி யுலாவொரு | 60 |
| பரவ விடாது | 189 |
| பரவுஞ் சொல் | 121 |
| பருமுத்து மாலே | 180 |
| பவளத் துவர்வாய் | 74 |
| பனிதானெனுத்தே | 319 |
| பனிமலரெடுக்கில | 44 |
| பாகுபோலினிய | 237 |
| பாதித்ரியம்பகன் | 17 |
| பாந்தளல | 128 |
| பாரதி நெஞ்சால் | 3 |
| பாரளவிட்டது | 148 |
| பூதகணங்கள் | 256 |
| பூவில் விரிஞ்சனும் | 278 |
| பெருத்திடு வாரநண்பு | 139 |
| பொறிக்கன லெரித்திடு | 153 |
| மகபதியே தாணுவே | 28 |
| மகர நீரை | 205 |
| மக்களாகப் பிறவி | 201 |
| மடமகளிர் மாட்டில் | 57 |
| மடுவிலே கரிக்கு | 10 |
| மண்டுதிரை மோது | 135 |
| மதியுநெடும் பிரபை | 62 |
| மதியொரு துண்டன் | 177 |
| மந்தர மாரதுங்க | 269 |

| | | | |
|---|---|---|---|
| மலையே சுழற்றிலங்க | 187 | மைப்படு குழல் | 185 |
| மறையோதினும் | 203 | வந்துசூழ் தீவினை | 290 |
| மனத்துமுன் குறித்தவை | 126 | வரிசை யறிகிலர் | 173 |
| மனையொடு வாசல் | 66 | வள்ளியிடை | 80 |
| மாலை கொந்தள | 38 | வனிதை மருவு புதுவை | 65 |
| மாலையை முடித்து | 19 | வாங்குகட லோதமோ | 274 |
| மிடியர் வாலிபம் | 56 | வாடினேன் மகளிர் | 190 |
| மின்னைப் போல | 50 | வாணிமலரோனை | 76 |
| மீனென வுதித்து | 49 | வாயுவு மொடாது | 226 |
| முகத்தினை மூடி | 95 | வாரமதியீர நண்பு | 77 |
| முகநா லெட்டான | 229 | வாழ்வறு தேவரும் | 271 |
| முடிவற நின்று கற்பம் | 109 | விடுவிடு பெருந் துயரை | 235 |
| முட்ட முட்ட வருக்கிகள் | 286 | விடை வெம்புட்கொடி | 107 |
| முதன்மை பெற்ற தவிசு | 110 | விதனமொடு திரிவிக்கும் | 215 |
| முதிர் பொருப்பினில் | 313 | விதியென் றுருக்கொடிந்த | 73 |
| முலையே யென்பது | 198 | விரகொழிந்து | 303 |
| முனைக் குறையாய் | 155 | விற்றொழிலோ | 113 |
| முனை யழிந்தது | 14 | வீதியில் நின்று | 54 |
| முனையுடைய கொம்பு | 217 | வீழுடம்பு தானெடுத்து | 25 |
| மூர்க்கருலுத்தர் | 102 | வெம்புறு பாழுடம்பு | 249 |
| மூவுலகெலா மளந்து | 266 | வேதமெலா மிறந்து | 40 |
| மேகத்தோடு புலம்பி | 137 | வேத மொழிப்பொருள் | 211 |
| மேகநிறம் வாழி | 70 | வேதனை முற்றும் | 32 |
| மேகமதோ சிறந்த | 98 | வேலியடையாப் பயிர் | 26 |

# பிழை திருத்தம்

| பக். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 14 | 26 | கரத்து | காத்து |
| 10 | 23 | மறிந்து | மறந்து |
| 24 | 8 | க்ருபகார | க்ருபாகர |
| ,, | 15 | நராப்ரவ.. க | நராப்ரவாகி |
| ,, | 27 | "உலத்து சிரத்தை விட்டு மனிதப் பிறவியாக்கிவிடும்" | உலாத்துகிரத்தைவிட்டு மனிதப்பிறவி யாகிவிடும் |
| 26 | 24 | கோவையற்ற | கோவையுற்ற |
| 35 | 6 | மயிரே வொளிற | மயிரே வெளிற |
| 41 | 27 | உறையூர் பேர் | உறையூர் பேர்க் |
| 57 | 34 | அடியரோடு | அடியரொடு |
| 58 | 6 | மார்த்தொழு | மார்த்தெழு |
| 60 | 8 | வென்று | வென்ன |
| 61 | 5 | திசையப் | திசையைப் |
| 61 | 20 | நிறை | நிறைவேற் |
| 62 | 1 | யறியும் | யறியவும் |
| 69 | 31 | கடுப்பணி | நடுப்பனி |
| 80 | 23 | சொல் குறில் யாவையும் | சொல்குறிப்பையும் |
| 97 | 30 | மணங்குகளும் | அணங்குகளும் |
| 107 | 8 | வேற் பொற் | வேல் பொற் |
| 112 | 13 | நகர் சேரு | நகர் சேரா |
| 130 | 33 | அதத | அத்த |
| 131 | 12 | உயர்யாவும் | உயிர்யாவும் |
| 139 | 27 | பறித்திடு | பரித்திடு |
| 151 | 10 | வாத்திலேகாண் | வரத்திலேகாண் |
| 227 | 21 | பானம | பானம் |
| 248 | 4 | அகடு | அசடு |
| 248 | 8 | சிறியிடம் | சிறையிடம் |
| 264 | 29 | நோக்குவன் | போக்குவன் |
| 267 | 31 | விடமோ | விடலாமோ |
| 295 | 6 | இர்த்ரபதந்தனே | யிந்த்ர பதந்தனே |